Regd. No. M. 2748
Supplement to Kalaimag d 1-11-

கலைமகள்

தீபாவளி மலர் 1983



என் விருப்பம்
கோஆப்டெக்ஸ்
பட்டுச் சேலைகளே!
நூற்றுக்கணக்கான நூதன
ரகங்கள் என்முன்னே! எதை
நான் தேர்ந்தெடுப்பேன்?
எல்லாமே எழிலின் வார்ப்புகள்!
எப்படியோ ஒன்றை எடுத்து
விட்டேன் அப்பப்பா...
எனக்குள்ளே எத்தனை ஆனந்தம்
தெரியுமா?
கோ-ஆப்டெக்ஸ்
சைத்தரி
தீபாவளி வாழ்த்துக்கள்

இத் தீபாவளித் திருநாளில் 'ஆனந்தா'வின்
ஜவுளிகளை வாங்கி அணிந்து மகிழும்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**விழாக்காலங்களிலும் மற்றும் அன்றாடம்
அணிவதற்கும் ஏற்ற துணிகள் எல்லாவற்றையும்
ஒரே இடத்தில் வாங்கச் சிறந்த இடம்**



★ பட்டுப் புடைவைகளுக்கு என்றே தனிப் பிரிவு

★ பல வண்ணப் புடைவைகள்,
டிரஸ் மெட்டீரியல்ஸ்
இவைகளுக்கு என்றே தனிப் பிரிவு

★ ஆடவர்களுக்கான சூட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ்
இவைகளுக்கு என்றே ஒரு தனிப் பிரிவு

(ஏர்-கண்டிஷன்)

ஆனந்தா
சில்க்ஸ் பாரடைஸ்

ஜவுளிகளின் சங்கமம், ஆனந்தா பில்டிங்ஸ்
N. S. B. ரோடு,
திருச்சிராப்பள்ளி - 2.
போன்: 27711

தீபாவளித் திருநாளை திக்கெட்டும் கொண்டாடும் விவசாயப் பெருமக்களுக்கு எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்கள்

உத்தமராய் நீராடி
புத்தாடை பல் அணிந்து
சத்தான உணவருந்தி
புத்துயிர் பெற்று வந்து
களங்க மில்லாப் புன்னகையின்
பிரகாசப் பொறி சிதறி
தீப ஒளிப்பிழம்புகளாய்
திக்கெங்கும் உருவெடுத்து
வாழ்வின் இருள் நீங்கி
அருள் சேர்ந்திட வாழ்த்துகிறோம்.

SPIC

சதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்பொரேஷன் லிமிடெட்

97, மவுண்ட் ரோடு, சென்னை-600 032.

PADA-151-83

தீபாவளித் திருநாளுக்கு ஸ்ரீராம் அளிக்கும் நல்வாழ்த்துக்கள்!

- ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
- ஸ்ரீராம் பைனான்ஸ்
- ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
- ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
- ஸ்ரீராம் டிரேடிங் & டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்
- ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி)
- ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமைப் பதிவு அலுவலகம்:
123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001.
போன்: 37890, 28545

ADWAVE/SCI/2196

தீபாவளித் திருநாளில் கீதா உங்களை
மகிழ்விக்கிறது
மதி மயங்கும் மாலையிலே மயங்க வைக்கும்
வேளையிலே மனம் கவரும் சேலையிலே
வலம் வருமே உள்ளமது – அது நினைத்திடுமே
கீதாவை, இனிய நினைவுகளுடன்
உறவாடும் கீதாவின் புதிய ரக
பட்டு ஜவுளிகள் விசேஷ காலங்கள்
மங்கல நாட்கள் கல்யாண விசேஷங்களில்
உடுத்தி மகிழ கீதாவிற்கு
விஜயம் செய்யுங்கள்.
கீதா சில்க் &
சாரி பஜார்
31, N.S.B. ரோடு,
திருச்சி 620 002.

FOR HEALTH & STRENGTH
KEEP HABIT WITH OUR
SWEETS & SAVOURIES

RK

RAMAKRISHNA
Lunch Home

Y. M. C. A. BUILDING.
223 N. S. C. BOSE ROAD.
MADRAS-600 001. PHONE : 22154

போன்
5331
5448
சாலினி
கொழும்பு
தேங்காய் எண்ணெய்
S.P.R.J. மபத்லால் ஆயில் மில்ஸ்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002.
சாலினி
COMPOUNDED ASAFOETIDA
கூட்டு
பெருங்காயம்.
சாலினி
தூள் காயம்
தந்தி:
தவம்
கிங் இண்டஸ்ட்ரீஸ்.
பாளையங்கோட்டை. 627002.

பண்டிகைகள் கொண்டாட...
பந்தியில் பரிமாறிட...
நண்பர்கள் அன்பர்களுக்கு நல்விருந்து அளித்திட
இன்ப நினைவூட்டிட இனிய சுவை சேர்த்திட
அகர்வால் பவன் இனிப்புகளே!
அகர்வால் பவன்
128, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-600 001.
போன் : 21219, 31349.

DISPLAY/DESIGN
VALUE — SHELF LIFE
increasingly important.
Neat execution, Prompt
deliveries, reliability, all
necessary factors for fresh
and repeat jobs in Colour
printed folding-box
Carton manufacture

Our complete and
combined resources
for all aspects of
designing, printing,
surfacing and
manufacture, amounts
to a new Dimension
in packaging.

(ESTD. 1969)

C & C

FOR BRIGHT & COLOURFUL PACKAGING

CARTONS &
CONTAINERS

Office: 87, M.K. AMMAN KOIL ST., Madras-4 (76011)
Works: F.A/1, Industrial Estate, Madras-58 (632799)

இல்லங்களில் தீப ஒளி
இன்பம் பொங்கும் தீபாவளி!



செல்வச் செழிப்பின் சுடரொளி
இந்தியன் பாங்கின் புத்தொளி!!

MLS/118/83

இந்தியன் பாங்க்
உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
31, இராஜாஜி சாலை, சென்னை-600 001.

டிவிஎஸ்:
உங்கள் விலை மதிப்பற்ற உடைமைக்கு நம்பகமானதோர் காப்பாளர்

ஆம், உங்கள் வண்டியின் தகுதிக்கேற்ற தலை சிறந்த பராமரிப்புப் பணியை டிவிஎஸ்ஸால் தான் அளிக்க முடியும். ஏனெனில், அது சீரிய, திறன்மிக்க இயந்திரங்களையும், திறமை வாய்ந்த தொழில் நுணுக்க வல்லுனர்களையும் பெற்றுள்ளது. மற்றும், தரம் மிக்க, நம்பகமான மோட்டார் உறுப்புக்களை நியாயமான, நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் அளிக்கிறது. எந்த விதமானதொரு வேலையாயிருந்தாலும் டிவிஎஸ்ஸில் அதற்கிணையானதொரு பணி காத்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் டிவிஎஸ்ஸிற்கு பல வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் தொடர்ந்து வருவதில் வியப்பொன்றுமில்லை.

நினைவிருக்கட்டும்; முழுமையான நம்பகத் தன்மை மற்றும் குறையற்றத்தரம் — இவற்றின் அடிப்படையில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலான சேவை மரபினைப் பெற்றது டிவிஎஸ்.

TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி வி சுந்தரம் அய்யங்கார் அண்ட சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்

சுந்தரம் மோட்டார்ஸ்
சென்னை மற்றும் கிளைகள்

SAA/TVS/3389/Tam

கோத்ரெஜ் ஸ்டோர்வெல் — ஆயுட்கால அன்பளிப்பு !



கோத்ரெஜ் ஸ்டோர்வெல், எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற அருமையான அன்பளிப்பு. ஆயுட்காலம் முழுவதும் நினைவில் நிற்கும் அன்பு பரிசு. வழக்கமான மற்ற ஸ்டீல் அல்லது மர அலமாரிகளோடு ஒப்பிடும்போது, இந்தப் பயன்மிக்க, கவர்ச்சியான ஸ்டீல் அலமாரி தனக்கே உரிய, நீடித்த உழைப்பாற்றல் மற்றும் கூடுதல் பாதுகாப்பு போன்ற, நல நயங்களைக் கொண்டது. கோத்ரேஜிடம் மட்டுமே உள்ள வண்ணப் பூச்சு முறை காரணமாக, கீறல் விழாத மேம்பட்ட மெருகு, இதன் அழகிற்கு மேலும் பொலிவூட்டுகிறது.

தவிரவும், முழுநீள 137 செ.மீ. வெளிநாட்டு 'ப்ளேட்' கண்ணாடி. தகர்க்க முடியாத பூட்டுகள், மறைவான கீல்கள், இறுக மூடிக்கொள்ளும் மும்முனைப் பூட்டு மற்றும் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்ப்புகள்.

இத்தனைச் சிறப்புகளாலும் கோத்ரெஜ் ஸ்டோர்வெல் மறக்கமுடியாத, பல தலைமுறைகளுக்கு உழைக்கும் அன்பளிப்பாக அமைகிறது.

கோத்ரெஜ் Godrej®

மேம்பட்ட தொழில் நுட்பம் மற்றும் மதிப்பு.

ULKA-GS-2-82 TAM



Imageads M-1815

TOUGH TIMES. TOUGHER DIESELS.

How Simpsons plan to cut handling costs right through the 80's.

A large majority of diesel forklifts in service today are powered by Simpsons diesels ... which means Simpsons know the handling business. With fuel and labour costs escalating and requirements changing, Simpsons diesels ensure that you remain in the forefront in the handling business.

Tougher performance

Simpsons diesels for forklifts set economy standards that are hard to beat. As a result Simpsons diesels give tougher performance to meet tougher operating conditions throughout the 80's.

Saving on downtime

Since Simpsons diesels for forklifts are renowned for their durability there's less of downtime and less spending on downtime.

Adding up to a total power value

Whether you are a forklift manufacturer or user you'll find Simpsons technical back-up and service tough to beat — ranging from design and technical consultancy to sale of genuine diesel parts — the most sophisticated in the diesel business.

Also you get more from Simpsons than diesel engines ... you get a complete power package from the nation's leaders in diesel power.

So if you're buying diesel power — Simpsons is the best engine you can buy.



SIMPSONS engines

The tougher diesels.

Simpson & Co. Ltd

861/862, Anna Salai, Madras-600 002

MAC/S/821

இவ்விளக்கு எரியும் வரை
இருள் என்பதென்றும் இல்லை.
UNITED INDIA
யுனைடெட் இந்தியா
இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடெட்
24, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014.
CM/UIC/3/83-TAM

sf
இனிய உணர்வுகள் அளிக்கும்
இன்பத் திருநாளில்
வளமைச் சிறப்புப்பெற
வாழ்த்துக்கள்!
தீபாவளித் திருநாளாம் இன்று உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொண்டு, வாழ்த்துவதில் பெருமை கொள்கிறது சுந்தரம் பைனான்ஸ். சுமார் 29 ஆண்டுகளுக்கும் மேலாகச் சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்கு சுந்தரம் பைனான்ஸ் தவணை முறைப் பண உதவித் திட்டத்தின் மூலம் பணி அளித்து வருகிறது. இன்று தொழிற்சாலைகளுக்குத் தேவையான பலவகை இயந்திரச் சாதனங்களைக் குத்தகை முறைப் பண உதவித் திட்டத்தின் மூலம் வழங்குகிறது.
சுமார் 60,000க்கும் மேற்பட்ட டெபாசிட்தாரர்களின் நம்பிக்கையைப் பெற்ற இந்நிறுவனம் இன்று 9,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைப் பெற்றுள்ளது. இன்று, இது இந்தியாவிலேயே மிகப் பெரிய தவணை முறைப் பண உதவி நிறுவனமாகத் திகழ்கிறது.
sf
சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
தவணை முறை மற்றும் குத்தகை முறைப் பண உதவிக்கு நம்பகமானவர்கள்
மத்திய அலுவலகம்: 190, மவுண்ட் ரோடு,
'ஹமீத் பில்டிங்' (3வது மாடி), சென்னை 600 006
SAA/SFI/3804

AGFAMATIC 508
The pocket camera that took the world by storm.

Agfamatic 508 is so easy to use. No focussing, no exposure settings. Simply no adjustments. All you do is click!

Take a look at its "firsts".

1st in India with whisper-soft sensor shutter-release. No camera shake. Ever. Just sharp, clear pictures.

1st in India with automatic film advance using the unique Repeatomatic system.

1st in India with automatic lens protection when not in use.

• Can be used with COLOUR or B/W films.
• To be used with 110 film-cartridge.

Marketed by:
AGFA-GEVAERT INDIA LIMITED
• Bombay • New Delhi • Calcutta • Madras

SIMOES/AGIL/SI/83


இன்றைய வளமையும் மகிழ்ச்சியும்
என்றும் நிலவ எங்கள் வாழ்த்துக்கள்!
தீபாவளி
வாழ்த்துக்கள்
KCUB
கும்பகோணம் ஸிடி யூனியன் பாங்க் லிட்
பதிவு அலுவலகம்: கும்பகோணம்-612001
APRC/K/4


May this
Deepavali
illuminate your
Joy & Prosperity
as strongly as...
DURGA
CEMENT
BUILDS YOUR CONFIDENCE
Greetings from
THE ANDHRA CEMENT
CO. LTD.
III, Sarojini Devi Road,
Secunderabad 500 003.
Phone: 821601 (3 lines).
Telex: 0155-630

காலங்காலமாக பயன்பட்டுவரும் கிராம்புத்
தைலத்தின் நன்மைகளை மீண்டும் கண்டுணர்ந்த
ஆயிரக்கணக்கான குடும்பங்கள்

கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட்

ப்ராமிஸ்

உபயோகிக்கிறார்கள்

நீங்கள் இன்னுமா கண்டுணரவில்லை?

ப்ராமிஸ்

பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.

3 பல்லாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.

CHAITRA-BLS-453 R TAM

புதிய **காமெட்** சூப்பர்

"சாலைகளின் சக்ரவர்த்தி"

மிகவும் அதிக அளவு பளுவை ஏற்றிச்செல்லக் கூடிய, பிரஸ் செய்யப்பட்ட பின்பக்க ஆக்ஸில் அமைந்த 15.8 டன் (RLW) வண்டி.

இந்தியாவின் சாலைகளில் காமெட்டின் ஆட்சி நடந்து வந்தது பழைய சிறப்பு. காரணம், அதனுடைய திறன் மற்றும் உறுதித்தன்மை. இப்பொழுதோ, அசோக் லேலண்ட் இன்னும் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு காமெட்டின் வகையை அளிக்கிறது. ஆம், அதுதான் புதிய காமெட் சூப்பர்.

இந்த, புதிய வண்டியின் ஒரு குறிப்பிடத்தக்கக் கண்டுபிடிப்பு பிரஸ் செய்யப்பட்ட பின்பக்க ஆக்ஸில். அத்துடன் பிரஸ் செய்யப்பட்ட ஆக்ஸில், பளுவைத் தூக்கும் திறனிற்கு உறுதி அளிப்பதோடு சராசரியாக 800,000 கி.மீ. ஓட்டத்திற்கான உழைக்கும் திறனையும் அளிக்க வல்லது.

குறுகிய வீல் பேஸ் (166''), அகலமான, முன் மற்றும் பின் பக்க ஆக்ஸில்களைக் கொண்ட காமெட் சூப்பரை எளிதாக ஓட்டிச் செல்லலாம். மலைகளில் உள்ள மிகவும் வளைவான சாலைகளில் வண்டியை ஓட்டுவதற்கு இது ஒரு சிறப்பான அமைப்பு.

இருந்த போதிலும் பளு ஏற்றக்கூடிய அளவு ஒரு 176'' WB வண்டியைப் போலவேதான் உள்ளது.

காமெட் சூப்பரில் பளுவை ஏற்றிச் செல்லும் அளவு மிக அதிகம்: அதனுடைய அதிகபட்ச RLW 15875 கிலோக்கள்.

திறனிற்கு நிரூபணம் கொண்ட AL 370 எஞ்சினால் இயங்கும் காமெட் சூப்பர் செங்குத்தான ஏற்றங்களிலும் மிக எளிதாக ஏறிச் சென்று விடுகிறது.

மொத்தத்தில், இந்த புதிய காமெட் சூப்பர் எந்தவிதமான பிரதேசத்திற்கும் மிகவும் ஏற்றது.

அசோக் லேலண்ட்
-வளர்ச்சியெனும் சக்கரத்தின் தளர்விலா சுழற்சி

அசோக் லேலண்ட் லிமிடெட்
480, அண்ணா சாலை
நந்தனம், சென்னை 600 035.

SAA/AL/3209A

ஆங்கிலம் பள்ளியில் படிக்காமல்

ஏழே மாதங்களில்
இலக்கணத்துடன் பேசவும்
எழுதவும் கற்றுக் கொள்ள

அடிப்படை ஆங்கிலம்

தெரிந்தவர்கள்
மூன்றே மாதங்களில்
சரளமாக ஆங்கிலத்தில் பேச

ஆங்கில உரையாடல்

தபாலில் படியுங்கள்

பள்ளி கல்லூரி மாணவ மாணவியரும்
ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும்,
அலுவலங்களில் பணிபுரிவோரும்
படிக்கலாம்

வீட்டிலிருந்தே

14 வயதான 4 வது படித்தவர்கள் ESLC
16 வயதான 8 வது தேறியவர்கள் SSLC
18 வயதான SSLC தேறியவர்கள் HSC

தபாலில் படித்து

எழுதலாம்

விபரமறிய 75 காசு ஸ்டாம்புடன் எழுதுக

SNTC

மாயூரம் 609 001

C வேலாயுதம் M A
துணை முதல்வர்

C நடராசன் M A M com F A A I
முதல்வர்

உங்கள் பார்சல்களைக் குறைந்த கட்டணங்களில் எடுத்துச் செல்ல சதர்ன் ரோட்வேஸ்.

பார்சல் கட்டணங்கள் ஒரு குவிண்டாலுக்கானவை (100 கிலோ)
(எல்லாக் கட்டணங்களும் சேர்ந்தவை)

	தூரம் கிலோ மீட்டரில்·	S R	கம்பெனி A	கம்பெனி B
		Rs.Ps.	Rs.Ps.	Rs.Ps.
மதுரை—பங்களூர்	436	29.20	39.20 (+34.0%)	38.40 (+32.0%)
மதுரை—ஹோசூர்	410	27.00	34.70 (+28.5%)	34.35 (+27.2%)
மதுரை—சென்னை (தி. நகர்)	467	32.85	40.50 (+23.3%)	38.80 (+18.1%)
திருநெல்வேலி—கரூர் மெயின்	300	19.50	26.00 (+33.3%)	29.90 (+53.3%)
திருச்சி—எர்ணகுளம்	400	27.00	37.00 (+37.0%)	40.00 (+48.1%)
திருச்சி—திருவனந்தபுரம்	470	29.20	40.00 (+37.0%)	42.40 (+45.2%)
திருச்சி—சென்னை	325	25.70	32.40 (+26.1%)	35.00 (+36.2%)
திருச்சி—பங்களூர்	331	25.70	32.10 (+24.9%)	36.15 (+40.7%)
சென்னை—பங்களூர்	340	29.55	32.80 (+11.0%)	32.50 (+10.0%)
சென்னை—எர்ணகுளம்	720	42.40	55.80 (+31.6%)	55.15 (+30.1%)

இங்கு குறிப்பிட்ட கட்டணங்கள், சதர்ன் ரோட்வேஸ் அளிக்கும் சிக்கனமான கட்டண விகிதத்திற்கு ஒரு சில உதாரணங்களே ஆகும். தென்னிந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் உங்கள் பொருட்களை சதர்ன் ரோட்வேஸ்தான் மிகக் குறைந்த கட்டணங்களில் எடுத்துச் செல்கிறது.

இத்துடன் இது அளிக்கும் சேவைப் பட்டியல்:

- உங்கள் பார்சல்களை குறிப்பிட்ட நேரப்படி கொண்டு சேர்ப்பதற்கு உதவ கம்ப்யூட்டர் மற்றும் டெலக்ஸ் தொடர்பு வசதி.
- தென்னிந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் செல்லும் வகையில் ஒரு 68,000 கி.மீ. பாதை
- குறிப்பிட்ட நேரத்தில் பார்சல்களை கொண்டு சேர்த்திட உதவும், தனிப்பட்ட முறையில் உருவாக்கப்பட்ட, ஓர் ஊரிலிருந்து மற்றுமோர் ஊருக்கு நேரிடையாக அனுப்பும் பணி.
- பயிற்சி பெற்ற ஊழியர்கள் உங்கள் பொருட்களைக் கவனமாகக் கையாளும் சிறப்பு.
- அதிக அளவு பொருட்களைப் பாதுகாக்க பெரிய கிடங்குகளைப் பெற்று உங்கள் பொருட்களுக்கு மிகுந்த பாதுகாப்பினை அளிப்பது.

சதர்ன் ரோட்வேஸ் லிமிடெட்

மதுரை

TVS

கிளைகள்: சென்னை, பங்களூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி. திருநெல்வேலி, விஜயவாடா, செகந்திராபாத், அனந்தப்பூர், பாண்டிச்சேரி.

சாலையில் இதைவிடச் சிறந்ததோர் மார்க்கமில்லை

SAA/SRL/3783/Tam

தீபாவளி வாழ்த்துக்கள்

ஸ்பென்ஸர்ஸ்
பழரச பானங்கள்

அன்னுசி
திராட்சை
மாம்பழம்
ஆரஞ்ச்

ஸ்பென்ஸர்ஸ்
தயாரிப்பாளர்கள் :
ஸ்பென்ஸர் கன்சூமர் பிராடக்ட்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட்,
சென்னை மற்றும் கிளைகள்

S 3932 A TAM

From 200 wpm of dictation to endless filing late in the evening, the 9 to 5 man stays cool.



So does Madura.





The 9 to 5 man stays cool, fresh and unruffled because that's the way he's made. So does Madura shirting and trousering. A blend of polyester and cotton that breathes, keeps cool, resists creasing and stays unruffled. In a wide range of stripes, checks, plains and weaves. Over 60 variations in each. To keep the 9 to 5 man looking his best all day. Day after day.

9to5

Trousering and Shirting.
Specially crafted for
the 9 to 5 man.

Madura Fabrics
A quality product from Madura Coats

Rediffusion/MF/2364b

STANDARD-20

It's a Van, It's a Micro Bus, It's a Micro Lorry.

STAMPRO

STANDARD MOTOR PRODUCTS OF INDIA LTD Madras

FDS SMP 3387A

Distributors:

The Union Company (Motors) Private Limited,
118, Mount Road, Madras 600 002.

கொள்ளை அழகு.
அதை உபயோகிக்கவே மனம் மறுக்கிறது.
Neycer
நெய்஝ர். பாத்ரூமிற்கு நிரந்தர அழகூட்டுவது
OBM 8247

முன்னேற்றப் பாதையில்...



சிமெண்ட் தொழிற்சாலைகள்:

1. ஆலங்குளம் தொழிற்சாலை
   இராமநாதபுரம் மாவட்டம்
   பின்கோடு: 626127
2. அரியலூர் தொழிற்சாலை,
   திருச்சி மாவட்டம்
   பின்கோடு: 621704

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் தொழிற்சாலை,
தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்
பின்கோடு: 626127

- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் இறக்குமதி செய்யப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் இழைகளையும், உயர்தர அரசு சிமெண்டையும் சேர்த்து, நவீன தொழில் நுட்பத் திறனைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.
- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எந்த காலத்திற்கும் ஏற்றவை. மேலும் நீடித்து உழைக்கின்றன,
- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளுக்கு அதிக பராமரிப்பு தேவையில்லை.

"தரமிக்க அரசு சிமெண்ட்"
தயாரிப்பாளர்கள் அளிக்கும்
"அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள்"

ARASU ASBESTOS TANCEM
தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
கார்பொரேஷன் லிமிடெட்
735, அண்ணா சாலை, சென்னை-600 002
தொலைபேசி: 812711

அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் உள்ளும் புறமும் ஒரே மாதிரி உறுதியானவை.

EP-DIPR

11,25,51,101*
பரிசு யோசனைகள்!

பாங்க் ஆஃப் இந்தியா 'கிப்ட் செக்' பரிசளிக்க எப்போதும் சரியானது. பரிசு பெறுபவர் தீர்மானிக்க வசதியானது.

அழகான டிசைன்; கோலாகலமான மதிப்புகளிலே: *ரூ. 11, ரூ. 25, ரூ. 51, ரூ. 101.

பாங்க் ஆஃப் இந்தியா கிப்ட் செக்குகள்—கிடைக்கின்றன அதன் பெருநகர, நகர கிளைகளிலே, இந்தியாவிலுள்ள அதன் எந்த கிளையிலும் பணமாக மாற்றலாம்.

பாங்க் ஆஃப் இந்தியா
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)

கிப்ட் செக்

ஒவ்வொரு முறையும் பரிசை உகந்தளிக்கலாம்

ADWAVE/TSR/2488

உள்ளங்கவரும் டிசைன்களில் பெட்சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள், உடுக்கத் தூண்டும் லுங்கிகள், நேப்கின்கள் மற்றும் பாலிஸ்டர் ரகங்கள்.

Erotex

FABRICS

TRANSWORLD TRADE FAIRE SELECTION AWARD GOLD MEDAL

ER/2/T

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

''ஜெகநாத நிலையம்'' 218, நேதாஜி ரோடு, ஈரோடு-638001 போன் : 74170 & 75568 தந்தி: "ஈரோடெக்ஸ்"

ஷோரூம்கள் :

- 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-600 004
- 10, பி. வி. கே. ஐயங்கார் ரோடு, பெங்களூர்-560 053
- 7-3-130, மெயின் ரோடு, ஹிந்துப்பூர் (ஆந்திரம்)
- 281, நாய்க்கர் புது வீதி, மதுரை-1.

ஜெ சுந்தரானந்தன்
தலைவர்

- 77-A கிழக்கு ரத வீதி, திருநெல்வேலி-6.

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்!

○ தரத்தில் சிறந்தது ○ மனநிறைவு தருவது

தாஜ்மஹால்

சூப்பர் பைன்



ஸ்பெஷல் புகையிலே

உரிமையாளர்கள் :

மீ. ந. அ. முகம்மதுசுல்தரன் & சன்ஸ்

போன்: 528 : : தபால் பெட்டி எண்: 29

புதுக்கோட்டை 622001. : : தமிழ்நாடு.

சிந்திப்பீர்!

உங்கள் அருமை மகன்
பள்ளி செல்லும் பருவத்தில்
சேமிக்க மறந்தால்

அவன் கல்லூரி செல்லும்
காலத்தில்
கடனாளியாக நேரிடலாம்!

இன்பமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்குக்
கனரா வங்கியின் வித்யா நிதி டெபாசிட்
திட்டத்தில் சேமியுங்கள்

கனரா வங்கி

வளர்ச்சிக்காகவே சேவை
சேவைக்காகவே வளர்ச்சி

கி. அ.

தீபாவளிக்கு

- கைத்தறிச் சேலைகள்
- வேஷ்டிகள்
- மில் ஜவுளிகள்
- சூட்டிங்குகள்
- பேன்ஸி சில்க்குகள்
- பிரிண்டட் சேலைகள்
- 2×2 பிளவுசுகள்

இதர எல்லாவிதமான, தரமான ஜவுளிகளைக் குறைந்த
விலைகளில் வாங்க நம்பிக்கையான ஒரே இடம்

நல்லி ஸ்டோர்ஸ்

(ஸ்ரீ நவசக்தி விநாயகர் கோவில் அருகில்)
லஸ், மயிலாப்பூர், சென்னை-600004.

ஓம் ஸ்ரீமாத்ரே நம:

பொது மக்களுக்கோர் அரிய நற்செய்தி

ஸ்ரீகாஞ்சி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ சிருங்கேரி மகாசந்நிதானம், திருமுருக கிருபானந்தவாரியார், ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் (ஸ்கந்தாச்ரமம், சேலம்) ஸ்ரீமுகமும், ஆசியும் அருளப் பெற்று நவசக்தி நிலையத்தாரால் உருவாக்கப்படும்

பூஜைக்குரிய தெய்வீக சாதனங்கள்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி மஹாயந்திரம் 24×24 cm.	விலை ரூ.	1000
ஸ்ரீ சககரம் (யந்திரம்) சௌபாக்கிய விஜயலக்ஷ்மி யந்திரம் 16×16 cm.	ஒன்றின் விலை ரூ.	500
ஸ்ரீ மஹா மேரு (பஞ்சலோகம்) 2¼"×2¼" ..	விலை ரூ.	500
ஸ்ரீ மஹா மேரு (பஞ்சலோகம்) 1½"×1½" ..	ரூ.	300
ஸ்ரீ சக்கரமும், மற்ற இதர யந்திரங்களும் 8 cm. ஒன்றின்	ரூ.	115
ஸ்ரீ காமாட்சியுடன் கூடிய ஸ்ரீசக்கர டாலரும், மற்ற இதர டாலர்களும் ஒன்று	ரூ.	50
ஸ்ரீ முருகன் ஆகர்ஷணத்துடன் கூடிய டாலர்	விலை ரூ.	37
ஸ்ரீ முருகன் டாலர் வசிய யந்திரத்துடன்	,, ரூ.	25
54 நம்பர் ஒரிஜினல் ருத்திராட்ச மணிமாலை, ஒரிஜினல் ஸ்படிகமாலை வெள்ளியில் கட்டியது ஒன்றின் விலை	ரூ.	250
ஒரிஜினல் தாமரை மணிமாலை 54 வெள்ளியில் கட்டியது	ரூ	100
ஒரிஜினல் துளசி மணிமாலை 54 மணிகள் வெள்ளியில் கட்டியது	ரூ.	75
அர்ச்சகர் ருத்திராட்ச மாலை 54 மணிகள்	ரூ.	75
செப்பு பிரேஸ்லெட்	ரூ.	20

கோவில்களுக்கு வேண்டிய சகல யந்திரங்களும் கிடைக்கும். விநாயகர், சுப்பிரமணியர், லிங்கம், நவக்கிரகங்கள் இவைகள் யாவும் கருங்கல்லில் சிலா விக்கிரகங்களாகக் கிடைக்கும். இலவச விலைப்பட்டியலுக்கு ரூ. 0.50 தபால் தலையுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

விஸ்வகர்மக்ஞ்ய

ஸ்வாமிஜி ஸ்ரீ S.T. முருகபூஷணம்

ஸ்ரீவித்யா உபாஸகர் தலைவர்

நவ சக்தி நிலையம்

153, லாயிட்ஸ் ரோடு,

ஸ்டேட் பேங்க் எதிரில் (கோபாலபுரம்)

சென்னை 600086 போன்: 812013

எங்கள் லட்சியம்

லோகாஸ் சமஸ்தாஸ் சுகினோ பவந்து.

With best compliments from

Kovilpatti Lakshmi Roller Flour Mills Ltd.

Gangaikondan-627352 Tirunelveli District

Manufacturers of

Kuthuvilakku Brand Wheat Products

KLRF Sheet Metal Industries

Coimbatore

Fabricators of

Sheet Metal Components

KLRF Textiles, Gangaikondan

Manufacturers of Kuthuvilakku Brand Hosiery Yarn

—V.S.Mani

அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

நாகா ஸ்டீல் டிரேடர்ஸ் (பி) லிட்.,

நாகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்

நாகா பவுண்டரி (பி) லிட்.,

ஆத்மா ஏஜென்ஸீஸ்

தரமான முறுக்குக் கம்பிகள், சாதா கம்பிகள், பட்டைகள், ஆங்கிள்கள், சதுரங்கள் ஆகியவற்றின் விற்பனையாளர்கள்.

உங்கள் தேவைகளுக்குக் கீழ்க்கண்ட எங்கள் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தலைமை அலுவலகம்:
No. 30, 3-ஆவது தெரு,
கிழக்கு அபிராமபுரம், சென்னை-600 004
தொலைபேசி எண்கள்: 76988, 73811, 417401.

பாக்டரி:
No. 137A/IC, மஹாபாலிபுரம் ரோடு,
காரப்பாக்கம், சென்னை-600 096
தொலைபேசி எண்: 417166

விற்பனை நிலையம்:
20, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
சென்னை-600 001.
தொலைபேசி எண்: 26760

—R, நாகசுந்தரம்

CHAITRA/A/383 TAM

With the best compliments from

The Coronation Litho Works

POST BOX No. 2 SIVAKASI-626 123

Phone: 54, 254 & 519 Grams: "CORONATION" Telex: 0448-203

The Coronation Arts Crafts

POST BAG No. 11 SIVAKASI-626 123

Phone: 463 Grams: "ARTS CRAFTS"

Quality Offset Printers and Manufacturers of Calendars, Labels, Posters, Folders, Cartons, Diaries, Booklets, Marriage Invitations, Cheque Papers, Tint Boards and every thing in printing

BRANCH

Khaleel Shirazhi Estate (Fountain Plaza)

2nd FLOOR, 257, PANTHEON ROAD

EGMORE, MADRAS-600 008

Phone: 85252 Grams: "CORONLITH"

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இனாம் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி) ஏஜெண்டுகள் தேவை.



மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால் பெட்டி 1405, 14, ரெங்கநாதன் தெரு,

தி. நகர், சென்னை-600 017

பெமினு சில்க்ஸ்
மாபெரும் சேலைகள் ஷோரூம்
Femina SILKS
BIGGEST SAREES SHOWROOM
மேலும் ஒரு
புதிய கடை
திறந்துள்ளது
மேற்கு கோபுரம் வடபகுதியில்
10, 11, மேலச் சித்திரை வீதி, மதுரை-625001
பெமினு
சேலைகளின் சமுத்திரம்
பெண்கள் மனதில் கொலுவிருக்கும்
15 செப்டம்பர் 83 முதல்
பெண்களுக்கான ஜவுளிக்கடையில் பெருமைக்குரிய பெரும் நிறுவனம்
தென்கிழக்கு ஆசியாவிலேயே சேலைகளுக்கு மட்டும் 4000 சதுரஅடி கட்டிடத்தில் மிகப்பெரிய ஷோரூம்
உலகின் எந்த நாட்டுப் பெண்களையும் கவரக்கூடிய பல்லாயிரக்கணக்கான சேலைகளை கொண்ட புகழ்மிக்க ஸ்தாபனம்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், விசா, டைனர்ஸ் கிளப், பேங்க் அமெரிக்கார்டு போன்ற சர்வதேச கார்டுகளைக் கொண்டே கொள்முதல் செய்ய வாய்ப்பளிக்கும் அற்புதமான நிறுவனம்.
எல்லாவற்றிற்கும் மேலாக நியாயமான விலையில் எப்போதும் போல
காஞ்சீபுரம், ஆரணி, தர்மாபுரம், பனாரஸ் பட்டுப்புடவைகள்.
மற்றும் அனைத்து ரக சேலைகள்
30, மேலச்சித்திரை வீதி, மதுரை-625001.
UNIQUE

அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்
சுவாமிமலை
கும்பகோணம் வட்டம் : தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் ஆறுபடை வீடுகளுள் நான்காவதாக அமைந்து சிறப்புற்று விளங்கி வருகின்றது. இத்தலத்து முருகவேள், தந்தைக்கு உபதேசித்த ஞானதேசிகன். இவரை மெய்யன்புடன் வழிபட்டோர் உண்மை ஞானத்தைப் பெறுவர். நக்கீரரால் திருமுருகாற்றுப் படையும், அருணகிரிநாதரால் நாற்பது திருப்புகழ் பாடல்களும் பாடப்பெற்றது. கந்த சஷ்டி, திருக்கார்த்திகைத் திருவிழா, பங்குனி உத்திரம், வள்ளி கல்யாணத் திருவிழா முதலியன மிகவும் சிறப்புடையனவாகும். இத்திருக்கோயிலில், சேவார்த்திகள் வசதியாகத் தங்குவதற்குக் குடில்கள், அறைகள் வாடகைக்குக் கிடைக்கும். குறைந்த கட்டணத்தில் திருமணங்கள் செய்து வைக்கப்படுகின்றன. திருமண விருந்துண்ணப் பாத்திரங்கள் உட்படக் குறைந்த வாடகைக்கு விருந்து மண்டபம் கொடுக்கப்படுகின்றது. தங்க ரதம் புறப்பாடு செய்யக் கட்டணம் ரூ. 400. ரூ. 2,500 முதலிடு செய்து வரும் வட்டியைக் கொண்டு அன்பர்கள் விரும்பும் ஒரு நாளில் ஆறு கால பூஜையும் நடைபெறுகிறது. ஆலய நிதியிலிருந்து ஆதரவற்ற மாணவர்களுக்கான அன்பு இல்லம் ஒன்றும், நாதஸ்வர, தவில் பயிற்சிப்பள்ளி ஒன்றும், தேவார பாடசாலை ஒன்றும் இயங்கி வருகின்றன.

அன்பர்கள் அனைவரும் இத்தல முருகப்பெருமானை வழிபட்டு நல்லருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

திரு. ஆ. குமாரசுவாமி, பி.ஏ.,
செயல் அலுவலர்

திரு குழ. இரத்தினசபாபதி
தக்கார்



உங்கள் இல்லத்தில்
இலட்சுமி வலம் வர, வாழ்வில்
என்றும் ஒளிமயம்
பெருக, வாழ்த்துகிறோம்.

ஸ்டேட் பாங்க்
பாதுகாப்பு ஒரு நிம்மதியான மன நிலை.

CHAITRA-SBI-1171 TAM

Happy Landing

You can assure "a happy landing" for your product, no matter how it travels, by giving it the better protection of CAPS Boxes. For Corrugated Rolls, Boards, Master Cases, Sleeves and Special Bitumen/Hessian lined boxes, for Inland and Export use.

CAPS & CONTAINERS

'B' Floor, Shyamala Studios, Arcot Road, Saligramam, Madras-600 093
Ph. 427598

For COMPETENT ASSISTANCE in your PACKAGING Problems We Specialise in Fine Art Printing, Varnishing, MICROFLUTE (E) Corrugated LAMINATED Cartons with Duplex Board outers, catering to a host of industries for a variety a products

Kartik Cartons & Varnishing

" Brookes Estate "
26, P. P. Amman Koil Street
Chromepet-P.O.
Madras-600 044
Ph: 49-341

திருச்சிமாநகரில்

பெண் மக்களின் பெரு நம்பிக்கையையும்,
ஆடவர்களின் ஆதரவையும் ஒருங்கே பெற்ற

பொன்விழாக் கண்ட

மலைவாசல் பாத்திரக்கடை

A. P. அருணாசலம் செட்டியார் சன்ஸ்

செம்பு, பித்தளை, ஈயம், எவர்சில்வர் பாத்திரங்களைப்
பொறுக்கிக் குவித்திருக்கும் ஓர் ஸ்தாபனம்

தன் பணியில் ஐம்பது ஆண்டுகள் முடித்து ஐம்பத்து ஓராவது ஆண்டில் பீடுநடை போடுகிறது.
தொடர்ந்து உங்களது ஆதரவு கோருகிறோம்.

P. B. No. 347
Phone: 24088

A. P. Arunachalam Chettiar Sons

MALAIVASAL PATHIRAKADAI, TIRUCHIRAPALLI - 620 002.

A. P. அருணாசலம் செட்டியார் சன்ஸ்

மலைவாசல் பாத்திரக்கடை, திருச்சிராப்பள்ளி-620 002.

அனைவருக்கும் எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
மாநகர் மதுரையில் கண்கவர் காஞ்சிபுரம் பகட்டான பனாரஸ்
அழகான ஆரணி தரமான தர்மாவரம்
பட்டுப் பாவாடைகள்
பட்டுப் புடவைகள்
பட்டு ஜவுளிகள்
தேர்ந்தெடுக்க
கைராசியான ஸ்தாபனம்
ராஜ்மஹால்
பட்டு ஜவுளி மாளிகை
37, வெங்கலக் கடைத் தெரு, மதுரை-625 001.
போன்: 22647 தந்தி: SAREE HALL
-சந்திரா

சென்டெக்ஸ்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், அலங்காரத் துணிகள, டவல்கள், டெர்ரி டவல்கள் மற்றும் திரைச் சீலைகள், சீர்சர்க்கர் முதலியன.

எங்கள் பிரத்யேக ஷோ ரூம்கள் :

உம்மிடியார் அங்காடி மையம்
எல்.ஐ.சி. எதிரில்
811, அண்ணா சாலை,
சென்னை-600 002

நீல்கிரிஸ் டெக்ஸடைல்ஸ்
நீல்கிரிஸ் பில்டிங்ஸ்,
பிரிகேட் ரோட், பெங்களூர்

செ ன் டெ க் ஸ் ஷோரூம்
ராஜா ராம்மோகன்ராய் ரோடு,
எம். ஜி. சி. மார்க்கெட் எதிரில்
சிராலா, ஆந்திரப் பிரதேசம்

சென்னிமலை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், சென்னிமலை, தமிழ்நாடு.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ.பி.எல்.,
தலைவர்

—Elegant

உ

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஸ்ரீவெங்கடேச ப்ரசின்ன:—

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசிகளுடன் ஷஷ்டியப்த பூர்த்தி, பீமரதீ, சதாபிஷேகம், Marriage Silver Jubilee, Golden Jubilee, செய்து கொண்ட அனைவருக்கும் எங்களுடைய தீபாவளி நமஸ்காரங்கள்; செய்துகொள்ள இருப்பவர்களுக்கு நல்லபடி நிறைவேற ப்ரார்த்தனைகள். புதுமணத் தம்பதிகளுக்குத் தீபாவளி ஆசீர்வசனங்கள்.

23-2-84ல் சென்னை சென்ட்ரலிலிருந்து ஒரு III Tire Sleeper பெட்டியில் மஹா சிவராத்ரி யன்று காசியில் ஸ்ரீ அன்னபூர்ணா விசாலாக்ஷி சமேத ஸ்ரீவிஸ்வநாதரைத் தரிசித்துப் பில்வ பத்ரங்களால் அர்ச்சித்துப் பயனடையும்படியான 16 நாட்கள் கொண்ட யாத்திரை புறப்படுகிறது.

3 காபி, 1 டிபன், 2 போஜனம் அல்லது இரவில் பலகாரம் ரயில் சார்ஜ்கள், தூங்கும் பெர்த் சார்ஜ்கள், ஒரு பை உள்பட நபர் 1க்கு **ரூபா 1300/-**

இந்த யாத்திரையில் பம்பாய், அலஹாபாத், அயோத்யா, காசி, கயா, கல்கத்தா, பூரி, சிம்மாசலம் முதலிய க்ஷேத்ரங்களைச் சேவிக்கலாம்.

ஊர் சுற்றிப் பார்க்கும் ரிக்ஷா, டோங்கா, பஸ் முதலிய செலவுகள் தனி.

நபர் 1க்கு ரூபா 300 வீதம் அட்வான்ஸ் செலுத்தி ரிசர்வ் செய்துகொள்ளவேணும்.

30-11-83க்குள் பூராப் பணம் ஒரே தடவையாகச் செலுத்தி ரிசர்வ் செய்து கொள்பவர்களுக்குக் கட்டணத்தில் ரூபா 100/- சலுகை உண்டு.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்
21, அய்யாபிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை–600 005.
டெலிபோன்: 841957

எங்கள் மனங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

தீபத் திருநாளுக்கு ஒளியூட்ட ஸ்ரீ ராஜேஸ்வரியின் புதிய படைப்புகள்

தித்திக்கும் தீபாவளித்திருநாளை
எல்லையில்லா இன்பத்துடன்
கொண்டாடிட புதிய பட்டு ரகங்கள்
ஆசையைத்தூண்டும் அழகிய
டிசைன்களில் நேர்த்தியான
நெசவில் எழிலூட்டும் வண்ணங்கள்
இணைந்து ஜொலித்திடும்
பட்டுப்புடவைகள் அழகுக்கு
அழகு சேர்த்திடும்.

சில்க் சேலைகள், சர்ட்டிங், சூட்டிங்
மற்றும் அனைத்து ஜவுளிகளும்
கிடைக்கும்.

விஸ்தரிக்கப்பட்ட
எங்களது ஷோரூமுக்கு
இன்றே விஜயம்
செய்யுங்கள்

ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

போன்: 25859

121, ராஜவீதி, கோவை.1

®

உஷா
சாரி
பாரடைஸ்
கோயமுத்தூர்

OSR

அனைவருக்கும் எமது அன்பார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

நம்பிக்கை நாணயம் கைராசி

22 ct. பவுன் நகைகள், கட்டி வெள்ளிப் பாத்திரங்கள், புதியரக கொலுசு வகைகளுக்கு

V. P. R.

ஆபரண மாளிகை

Prop: V. P. ரங்கநாதன் — Phone: 219, Res.: 514

பெரிய தெரு : : கும்பகோணம்

நவீன வசதிகளுடன் தங்குவதற்குச் சிறந்த இடம்

V. P. R. LODGE

(AIR CONDITIONED)

Tel: VEEPEEOR — Phone: 919, 5 Lines

KUMBAKONAM - 612 001

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

கைவினைப் பொருட்கள் வாங்கச் சிறந்த இடம்—

பூம்புகார்

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம்

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

26, Dr. முனியப்பா ரோடு, சென்னை 600 010.

DIPR/681/83-40/ADWAVE/THDC/2481

Vijay
—For everything in plug-ins
Vijay-A seal for quality
AMA/1/83
Marketed by: Associated Marketing Agencies
"Bharat Buildings", 93 Anna Road, Madras-600 002. Phone: 840845/840794

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி
திருக்கோயில், திருத்தணிகை.

பெருந்தகையீர்,

தெய்வமணங்கமழும் தமிழ்த் திருநாட்டில் இறைவன் உறையும் திருக்கோயில்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் மிக்க புனிதமும், பழமையும், புகழும் வாய்ந்த அறுமுகன் உறையும் ஆலயங்கள் 'ஆறுபடைவீடுகள்' எனச் சங்கக் காலப் புலவர் நக்கீரரால் நவிலப்பட்டு உள்ளன. அவற்றுள், திருமுருகன் உறையும் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படை வீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

மலைதோறும் நிலைபெற்ற குறிஞ்சிக் கடவுள் முருகன் உறையும், மலைக் கோயில்களில் தலைக்கோயிலாகச் சிறந்து விளங்குவது ''திருத்தணிகையே''

மலைத்தலங்களில் மணி மகுடமாக விளங்கும் திருத்தணித் திருத்தலத்தின் மாண்பினைக் கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார்,

''வரை இடங்களில் சிறந்தது
இத்தணிகை மால் வரையே.''

எனச் சிறப்பித்துக் கூறுகிறார். அருணகிரிநாதர், அருளிய திருப்புகழும், வடலூர் வள்ளலார் வழங்கிய திருவருட்பாவும் திருத்தணிகை முருகனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளன.

''புவிக்குஉயிராகிய'' இத்திருத்தணியில், 'திருப்புகழ் ஓதும் கருத்தினர்சேரும்' இத்திருத்தணியில் எழுந்தருளியுள்ள கந்தக் கடவுளின் சுந்தர மந்திரத்தில் ஆடிக் கிருத்திகைப் பெருவிழாவும், தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

ஆடிக்கிருத்திகைப் பெருவிழாவின்போது தமிழ் நாடு, ஆந்திரா, கருநாடகம் ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்து வந்து குழுமும் அடியார்கள், ''சங்கத்தமிழின் தலைமைப் புலவனுக்கு'' மலர்க்காவடி எடுத்து ஆடிப்பாடி அரனைத் தொழுது செல்லும் காட்சி அழகுமிகு காட்சி மட்டுமல்ல, ஓர் இறை அற்புத காட்சியுமாகும். அது உள்ளத்தை உருக்கிடும், உவகையைப் பெருக்கிடும்.

அன்று, குன்று தோறாடும் கோழியங்கொடியோனைக் கும்பிட்டுப் பொன்னடி பணிந்தால் இன்னல் விலகும், கோடி கோடி புண்ணியம் கிட்டும்.

ஓங்கு துயர் நீங்கும், தீங்கு அகலும்,
தாழ் வளைத்தும் நீங்கும், வாழ் வளைத்தும் கிட்டும்.
அருகாத செல்வம் அடைவர், வியாதி அடைந்து நையார்,
ஒரு காலமும் துன்பம் எய்தார்.
தணிகை மலையைச் சாரேனோ
சாமி அழகைப் பாரேனோ

என்ற கீதமிசைத்து இறை அன்பர்கள் தண்ணார் பொழில் சூழும் தணிகையங்கிரிக்கு வருகை புரிந்து குங்குமக் குன்றன், கோதிலாக் குமரன் முருகவேளின் திருவருளில் திளைத்துச் செல்ல அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

D. ராமச்சந்திரன், பி.ஏ. பி.எல்.
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

பேரம்பாக்கம் இரா. சண்முகம்
சட்டமன்ற உறுப்பினர் தக்கார்

—V. K. வீரராகவன்

மணக்கும் மலர்

ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி ஆகிறது. தீபாவளிக்கு விருந்தும் வெடிகளும் உறுப்புக்களாக அமைந்ததுபோல் தீபாவளி மலர்களும் ஆகிவிட்டன. கலைமகள் தீபாவளி மலரை, தீபாவளியில் படிப்பதோடு, தொடர்ந்து சிலகாலம் படித்துக்கொண்டே இருக்கலாம். படங்களைப் பார்த்து ரசித்துக்கொண்டே இருக்கலாம்.

இந்த மலரில் காட்சிக்கும் கருத்துக்கும் உவகை தரும் அம்சங்கள் பல உள்ளன. காபியைப் பற்றிய படக்கோவை, ஆசார்ய ஸ்வாமிகளின் திருவுருவ ஓவியம், பஞ்சமுக ஆஞ்சநேயர் முகப்புப்படம், முதலியவை நம் ஓவியக் கலைஞர்களின் கைத்திறனைக் காட்டுவன. தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்கள் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்கள்.

பெரியவர்கள், பட்டாசு வெடி காதில் விழாமல் அறையை மூடிக்கொண்டு படிக்கலாம். மற்றவர்கள் ஒழிந்தபோது படிக்கலாம்; படித்துச் சுவைக்கலாம்.

தீபாவளி, புத்தாடையோடு புது மலரோடு மணக்கிறது. அந்த மணத்துக்கு இந்த மலரும் மணம் கூட்டும் என நம்புகிறோம்.

—ஆசிரியர்

ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்
... உங்கள் தேவைக் கேற்றது ஸுமீத்

அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டிவருகிறது.

ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுறும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன்மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள்:
ஈரப் பண்ட அரைவைக்காக.
உலர் பண்ட அரைவைக்காக.
கடைய, கலக்க, சாறு பிழிய.
மாமிசத்தை அரிக்க, காய்கறிகளை நறுக்க.

இவை தவிர, சப்பாத்தி, பூரி மற்றும் அப்பளத்துக்காக மாவை விழுதுபோல் பிசைய விசேஷ இணைப்புப் பாகம். அதோடு கேக் மாவை நன்றாகக் கலவை செய்ய விசேஷ 'ஹுக்'...

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.

அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காக்கலாம்.

ஈர அரைவை—வடை, இட்டிலி, தோசைக்காக உளுத்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க—3½ நிமிடங்களில்.

உலர் அரைவைக்காக—எல்லா வித மசாலாக்கள்—மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.

பொடிக்க—1 நிமிடத்தில் மாமிசத்தைப் பொடிக்க. காரெட், வெங்காயம், தேங்காய், மற்றும் கொட்டைகளை நறுக்க—விநாடிகளில்.

அரைக்க—2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம். அல்லது விநாடிகளில் கொத்துமல்லி சட்னி அரைக்கலாம்.

கடைய—லஸ்ஸி/மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோன்னைஸ் தயாரிக்க, வீட்டிலேயே வெண்ணெ கடையலாம்.

மாவு பிசைய—சப்பாத்தி பூரி, நான் தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்—3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

இது ஒன்றே முழுமையான கிட்சன்மெஷின்

இது தவிர கிடைக்கிறது ஸுமீத் டொமஸ்டிக் (பிசையும் இணைப்பு இல்லாமல் கிடைக்கிறது. அதை தனியாகவும் வாங்கிக் கொள்ளலாம்.)
அற்புதமான ஸுமீத் பரவலாகப் பல்வேறு பணிகளைச் செய்கிறது—மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களை விடச் சிறப்பாக.
எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்

அங்கீகாரம் பெற்ற மொத்த விற்பனையாளர்கள்:

விவேக் & கோ	மைலாப்பூர்	புரசைவாக்கம்	தி. நகர்
விவேக் ஏஜென்ஸீஸ்	76923	663545	444129

விவேக் எண்டர்பிரைசஸ் 3, ரிச்மண்ட், ரோடு, பெங்களூர்-560 025, போன்: 568542

கலைமகள்

தீபாவளி மலர்

1983

வண்ண ஓவியங்கள்

பக்தியைப் பெருக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர்
ரசச்சுவை மலிந்த மதுர மங்கையர்
மங்கையரின் மாண்பு வாள் முனையில் வேல் விழி
அரண்மனைச் சூழலில் பக்தையைக் காத்த
ஆன்மிக முதிர்ச்சி பரந்தாமன்

வண்ணப் போட்டோக்கள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரிய சுவாமிகள்
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
ஸ்ரீ சங்கராநந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள்

இருவண்ணப் படம்

அருணை அளித்த அவதார புருஷர் -
ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் - வாழ்வும் வாக்கும்

வண்ணப் போட்டோக் கோவை

பொன்னிறக் காபியின் புன்னகை - படக் கட்டுரை
முதலை - கங்கையின் வாகனம்

அட்டைப் படம்

(சித்திரப்) பெண்ணே வியக்கும் பேரழகி!
(கம்ப ராமாயணம்)

❋ சிறப்புக் கதைகள் 22
❋ கருத்துக் கட்டுரைகள் 11
❋ சிறுவர் பகுதி + புதிர்கள்
❋ கவிதைகள் 14
❋ நாடகங்கள்
❋ மற்றும் பல விசேஷ அம்சங்கள்

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்:
வண்ணப் படங்கள்:
ஓம். சுப்பிரமணியம்

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்:
ஸ்ரீதர்

ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள். சீரும் சிறப்புமாய் வாழுங்கள்!

SHRIRAM CHITS & INVESTMENTS P.LTD.
YOUR FINANCIAL FRIEND IN NEED

நமது ஸ்ரீராம் ஸ்தாபனம் 1974-ல் தொடங்கப் பட்டது. இன்று, உங்கள் ஆதரவுடன் சென்னையில் 5 கிளைகள், 20,000க்கும் மேற் பட்ட வாடிக்கையாளர்களுடன் பெருகி வளர்ந்து நிழல் தரும் ஆலமரமாக வளர்ந்து வருகிறது. சென்னையில் ஆண்டுக்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் குறித்த நேரத்தில் பட்டுவாடா செய்கிறது. உங்கள் ஆதரவு பெற்ற ஸ்ரீராம் ஸ்தாபனத்தின் வெற்றிக்கு வேறு உதாரணங்கள் தேவை இல்லை.

புதிய அன்பளிப்பு!

பண்டிகை காலத்தை முன்னிட்டு புதிதாக சீட்டுகளில் சேருபவருக்கு ஓவிய மாமேதை அமரர் 'சில்பி'யின் 6 தெய்வீக பலவண்ணச் சித்திரங்கள் தற்போது அன்பளிப்பாக அளிக்கப்படுகின்றன. இவை உங்கள் பூஜை அறைக்கு ஏற்ற பொக்கிஷங்கள். விலை மதிப்பிட முடியாதவை. நமது கலாசாரப் பெருமையைப் பறை சாற்றுபவை. நீங்கள் எந்தச் சீட்டில் சேர்ந்தாலும் இந்த அன்பளிப்பு உண்டு. எல்லா அலுவலகங்களிலும் உண்டு.

இந்த வாய்ப்பு டிசம்பர் 31 வரை மட்டுமே!

உங்களது சேமிப்பு பல்கிப் பெருகிட வாருங்கள்!
புதிய சீட்டு குருப்புகள்:

ரூ. 125	×	40 மாதங்கள்	ரூ. 5,000
ரூ. 200	×	25 மாதங்கள்	ரூ. 5,000
ரூ. 200	×	50 மாதங்கள்	ரூ. 10,000
ரூ. 250	×	40 மாதங்கள்	ரூ. 10,000
ரூ. 400	×	25 மாதங்கள்	ரூ. 10,000
ரூ. 500	×	30 மாதங்கள்	ரூ. 15,000
ரூ. 625	×	40 மாதங்கள்	ரூ. 25,000

● நுழைவுக் கட்டண விகிதங்கள் தனி.

அன்பளிப்பு! சில்பியின் 6 தெய்வச் சித்திரங்கள்.

ஸ்ரீ குருவாயூரப்பன்.
ஸ்ரீ முருகன், திருப்பரங்குன்றம்.
ஸ்ரீ பங்காரு காமாட்சி, தஞ்சாவூர்.
ஸ்ரீராமர், பத்ராசலம்.
ஸ்ரீ கோமதி அம்மன், சங்கரன் கோவில்.
ஸ்ரீ அபிராமி அம்மன், திருக்கடையூர்.

ADWAVE/SCI/2484

ஸ்ரீராம்
சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (பி) லிட்.

பதிவு அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.
கிளைகள்: ● தி. நகர்: 54, வடக்கு உஸ்மன் ரோடு, சென்னை-17.
● மயிலாப்பூர்: 21, கிழக்கு மாடவீதி, சென்னை-4.
● அண்ணா நகர்: A-7, அண்ணா நகர் (கனரா பாங்க் அருகில்), சென்னை-102.
● மவுண்ட்ரோடு: 137, மவுண்ட்ரோடு (மின்சார வாரியம் எதிரில்) சென்னை-2.
● பெங்களூர்: 142, K.H. ரோடு (டபிள் ரோடு), பெங்களூர்-27.

ஸ்ரீராம் கைராசி உங்களது பணராசி.

லதா.

பஞ்சமுக ஆஞ்சநேயர்

'ஜோதி'



குதிரைமுகம் ஒருபக்கம் விளங்கக் கண்டோம்;
  கொழிவீர மனிதமுகம் ஒருபாற் கண்டோம்;
அதிசயமாம் குரங்குமுகம் இயல்பாய்க் கண்டோம்;
  அடல்மிகுந்த சிங்கமுகம் அப்பால் கண்டோம்.

பாரினையே கடற்பரப்பி லிருந்து மட்டுக்
  கவினுகின்ற கேழல்முகம் ஒருசார்க் கண்டோம்;
நேரறிய பஞ்சமுக ஆஞ்ச நேயன்
  நிமிருருவம் அச்சமெலாம் போக்கும் அன்றோ?

அம்பெடுத்த திருக்கரம்ஓர் பாலே உண்டாம்;
  அங்குசம்ஓர் கரத்திருக்கும்; மற்றோர் கையில்
கும்பமுண் டாம்; ஓர்கையில் கதையும் உண்டு;
  கூர்வாளோர் திருக்கரத்தில் இருந்து மின்னும்.

சஞ்சீவி பருவதமோர் கையில் ஏற்பான்;
  சார்ங்கம்ஒரு கையினிலே அமைந்தி ருக்கும்;
அஞ்சுகின்ற பாசம்ஒரு கையில்; மற்றோர்
  அங்கையில் கேடயம்;ஓர் கைப்பூ மாலை.

மார்பினிலே பலவகையாம் ஆரம் தோன்றும்;
  மாலையிரு தோள்களிலே வயங்கித் தோன்றும்;
சீரிலகு பொன்னூரம் சிறந்து தோன்றும்;
  சிவந்தஉடை மலர்வினையோ டிலங்கித் தோன்றும்.

சரண் புகும்செந் திருவடியில் தண்டை தோன்றும்;
  சார்கின்ற கிண் கிணியும் அணிந்து தோன்றும்;
அரணெனவே பாதரட்சை அடியில் தோன்றும்,
  அவன்கோலம் கண் டுநெகிழ்ந் துருகி நிற்போம்.

அறிவுடையான், வீரமுளான், பகைவர் தம்மை
  அடலழிக்கும் வெற்றியுளான்; இராமன் பாலே
செறிவுடைய பக்திஉளான்; இவன்றன் செய்ய
  திருவடியைப் பணிந்திடுவோம், போற்றி போற்றி!

பஞ்சமுகம் உடையதிரு ஆஞ்ச நேயன்
  பணிபவர்க்கு வீரத்தோ டறிவை ஈவான்;
அஞ்சுதலைத் தவிர்த்தருளை வழங்கிக் காப்பான்.
  அவனடியே தஞ்சமென்போம், போற்றி, போற்றி!

யாரை நோவது?

கிருபானந்தவாரி



நல்லவர்கட்குப் பல துன்பங்கள் நேருகின்றன. அவ்வாறு துன்பத்தில் துடிக்கின்றபோது தெய்வத்தை நொந்து புலம்புகின்றார்கள். ''ஆண்டவனே! உன்னை அல்லும் பகலும் மறவாமல் துதிக்கின்றேனே! நான் யாருக்கும் ஒரு கெடுதியும் செய்தேனில்லையே! அப்படி இருக்க இந்தத் துன்பத்தை எனக்குத் தந்தனையே! இது முறையா? உன் அருளுக்கு அழகா? இறைவனே, உனக்குக் கருணையில்லையா?'' என்று கூறித் தெய்வத்தின் மீது குற்றம் சாட்டி நோவுகின்றார்கள். இது பிழை.

கருணையே வடிவாய இறைவன், நம்பி வழிபடும் அடியவர்க்கு அல்லல் தருவானா? ஒரு பக்தனை அல்லல்பட வைப்பதில் அவனுக்கு என்ன லாபம்? ஆதலால், ஆண்டவன் மீது குறை கூறுவது அறியாமையின் சிகரமாகும். இறைவனை நோவக் கூடாது.

தேவர்கள் மிகவும் நல்லவர்கள்; தெய்வ சிந்தனையுள்ளவர்கள். உத்தம குணம் படைத்த அமரர்களைச் சூரபன்மன் சிறையில் அடைத்து 108 யுகங்கள் துன்புறுத்தினான்.

இன்பத்தின் உச்சியில் வாழ்ந்த தேவர்கள் துன்பத் தீயில் துள்ளித் துடித்தார்கள். சிறையில் ஈரமான மேடு பள்ளமான தரையில் பாயும் தலையணையும் இன்றிப் படுத்தார்கள். அலம்பாத பாத்திரத்தில் உப்பில்லாத பழங்கஞ்சியைக் குடிக்குமாறு அமரர்களை அரக்கர்கள் அடித்துத் துன்புறுத்தினார்கள். இலந்தைப் பழ அளவுள்ள அசுர மூட்டைப் பூச்சிகள் வரிசை வரிசையாக அவர்களைக் கடித்தன. நெல்லிக்காய் அளவுள்ள கொசுக்கள் தேவர்களைக் கடித்து வேதனைப்படுத்தின. அமரர்கள் 108 யுகங்கள் துன்புற்றார்கள். இந்திராதி இமையவர்கள் சூரபன்மனால் வேதனை அடைந்து சத்திய உலகம் போந்து பிரம்ம தேவனை வணங்கி முறையிட்டார்கள்.

''பிரம்மதேவரே! வாணி கேள்வரே! யாருக்கும் எந்தக் குற்றமும் செய்யாத நாங்கள் சூரபன்மனாலும் அவனுடைய ஏவலர்களாலும் எல்லையில்லாத துன்பத்தை அடைகின்றோம். என் செய்வோம்? படமுடியாது இனித் துயரம், பட்டதெல்லாம் போதும்!'' என்று கூறி அழுது தொழுது புலம்பினார்கள்.

பிரம்மதேவர் அமரர்களைப் பார்த்துக் கூறுகின்றார். ''நமக்கெல்லாம் பரமபதி சிவபெருமான். பரம கருணைக் கடலாகிய கண்ணுதற் கடவுளை நிந்தித்துத் தக்கன் வேள்வி செய்தான். சிவநிந்தை செய்த தக்கனுடைய யாகத்தில் நாம் கலந்து கொண்ட பாவத்தால் 108 யுகங்களாகச் சூரபன்மனால் துன்பம் அடைகின்றோம். நாம் யாரை நோவது? நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டும்.''

இறைவன் பட்சபாதம் இல்லாதவன்; விருப்பு வெறுப்பு இல்லாதவன்; தண்ணருள் புரியும் தயாநிதி. மாம்பழங்களை அதிகம் உண்பவனுக்கு வயிற்று வலி உண்டாகும். அவரவர்கள் செய்த வினைகளை அவரவர்கள் அனுபவித்தே தீரவேண்டும். நாம் செய்த வினைப் பயனை நாம் நுகர்வது முறைதானே? ஆதலால் சிவமூர்த்தியை நோவது கூடாது.

இவறலும் இகலு மின்றி
எவர்க்குமோர் பெற்றித் தாகி
அவரவர் வினைகள் நாடி.
அதற்படும் பயனை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம்
சிறந்தநோன் பியற்றி டாதே
தவறுசெய் தனம்என் றெம்மை
நோவதே தக்க தென்றார்.

ஆதலால், நாம் செய்த வினையையும் நம்மையும் நோவதன்றி இறைவனையும் பிறரையும் நோவக்கூடாது. அடியில் வரும் சிவபோக சாரப் பாடல்களைப் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெறுக.

அவரவருக் குள்ளபடி ஈசன்
அருளாலே
அவரவரைக் கொண்டியற்று மானால்
—அவரவரை
நல்லார்பொல் லாரென்று
நாடுவதென்? நெஞ்சமே

எல்லாம் சிவன் செயலென் றெண்.

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்,
எவரெவர்க் குதவினர், எவரெவர்க் குதவிலர்,
அவரவர் நினைவது தமை உணர்வதுமே

சாலவ நகருக்கு அருகில் உள்ள கானகத்தில் ஒரு பர்ணசாலையில் மாண்டவ்யர் என்ற முனிவர் சிவத்தை நாடித் தவத்தைச் செய்து கொண்டிருந்தார். அவர் பிரம்ம தேவருக்கு நிகரானவர்; சிறந்த தபோதனர். இரவிலே அவருடைய திருமேனியிலிருந்து ஒளி வீசும்.

கள்வர்கள் சாலவ மன்னனுடைய அரண்மனையில் பொன்னும் மணியும் களவு செய்தார்கள். அரண்மனைக் காவலர்கள் கள்வர்களை விரட்டிக்கொண்டு தொடர்ந்து ஓடினார்கள். கள்வர்கள் ஓடியோடி அயர்ந்து மாண்டவ்ய முனிவருடைய பர்ணசாலையில் நுழைந்து அவருடைய திருமுன் மூட்டைகளை வைத்து விட்டு ஒளிந்துகொண்டார்கள்.

காவலர்கள் கள்வர்களையும் மாண்டவ்யரையும் கையில் விலங்கிட்டுச் சிறையில் அடைத்தார்கள். பொழுது புலர்ந்த பின் மன்னன் எதிரில் நிறுத்தி, ''மன்னர் பெருமானே! இவன் ஒரு திருடன், இவர்கள் இவனுடைய சீடர்கள், நேற்றிரவு அரண்மனையில் இவர்கள் பொன்னும் மணியும் களவு செய்தார்கள்'' என்று கூறினார்கள்.

கள்வர்களைச் சிரச்சேதம் செய்யுமாறும், மாண்டவ்யரைக் கழுவில் ஏற்றுமாறும் கட்டளையிட்டான்.

அரசன் இட்ட கட்டளைப்படி கள்வரைக் கொன்றார்கள். பரம ஞானியாகிய மாண்டவ்யரை நெஞ்சில் ஆணி அறைந்து கழுவில் ஏற்றினார்கள்.

காவலன் ஏவலர்களைப் பார்த்து, ''இவன் கள்வர்களுக்குக் ''குரு என்று கூறினார்கள்.'' இரவில் கழுவுக்கு அருகில் ஒளிந்திருங்கள். இவனுடைய சீடர்கள் வருவர்களாயின் அவர்களையும் பிடித்து வாருங்கள்'' என்று பணித்தனன்.

ஒற்றர்கள் ஒளிந்திருந்தார்கள்.

விடியற்காலையில் வசிஷ்டர், காசிபர், அகத்தியர், புலஸ்தியர் முதலிய முனிவர்கள் கங்கையில் நீராட விண் வழியே சென்றவர்கள், மாண்டவ்ய முனிவரைக் கண்டு திடுக்கிட்டு, அவரருகில் வந்து அவரை வணங்கி, ''மாதவ மணியே! தங்களைக் கழுவில் ஏற்றிய பாதகன் எவன்? தாங்கள் பார்வையால் மூன்று உலகங்களையும் சாம்பராக்கும் தவ வலிமையுடையவர். ஆ! ஆ! தாங்கள் கழுவில் இட்டவர்களை



எரிக்காமல் இருக்கின்றீரே! என்ன காரணம்?'' என்று வினவினர்கள்.

மாண்டவ்யர், ''முனிவர்களே! உங்களுக்கு வணக்கம். என்னை யாரும் கழுவில் ஏற்றவில்லை. எனக்கு யாரும் பகையில்லை; நான் யாரை நோவது? என் வினைதான் என்னைக் கழுவில் ஏற்றியது. வினையை நோவாமல் வினைசெய்த என்னை நோவாமல் யாரை நோவது? நீங்கள் இதுகுறித்து வருந்த வேண்டாம், உடம்பு செய்த வினை நுகர்ந்தே தீரவேண்டும். நீங்கள் போய்வாருங்கள்'' என்று ஆறுதலாகக் கூறியருளினார்.

இந்த உரையாடலைக் கேட்ட ஒற்றர்கள் சால்வ மன்னனிடம் கூறினார்கள். அரசன் அஞ்சி, கழுவினிடம் வந்து அருந்தவ முனிவரைக் கழுவிலிருந்து இறக்கி, அவருடைய உடம்பில் இருந்த சிறு சிறு ஊசிகளைப் பிடுங்கினான். கழுத்தில் இருந்த பெரிய இரும்பாணியைக் கழற்ற முடியாமையால் அரம் இட்டு அராவினான். அந்த ஆணி நான்கு விரற்கடையளவு இருந்த போது, முனிவர், ''மன்னவனே! இந்த ஆணி அப்படியே இருக்கட்டும். நான் தினம் சிவபூசைக்கு மலர் பறிப்பது வழக்கம். இந்த ஆணி பூக்குடலையை மாட்டிவைக்கப் பயன்படும்'' என்றார். என்னே, அவருடைய சிவபக்தி!

ஆணியிருந்தபடியால் ஆணிமாண்டவ்யர் என்று பேர் பெற்றார். அவர் ஒரு சமயம் அறக்கடவுளைச் சந்தித்தார். அவரை அறக் கடவுள் வணங்கினார். மாண்டவ்யர், ''அறக் கடவுளே! என் உடம்பில் இவ்வாறு ஓர் இரும்பாணியிருக்க நான் என்ன வினைசெய்தேன்?'' என்று கேட்டார். அறக்கடவுள், சித்திர குப்தனை அழைத்து அவருடைய கணக்கைப் பார்க்குமாறு செய்தார்.

''அவர் இளமையில் ஒரு தும்பியைப் பற்றி அதன் வாலைக் கிள்ளியெறிந்து ஒரு முள்ளைச் செருகிப் பறக்க விட்டார். அந்த வினையால் இது நேர்ந்தது'' என்றான்.

மாண்டவ்யர், ''வினை செய்த என்னை நோவாமல் யாரை நோவது?' என்று கூறிவிட்டுத் தவஞ்செய்வாராயினார்.

உயிர்கட்கு இடர் செய்வது எத்துணை பாவம் என்பதனைக் கண்டு உணர்மின்கள்.

கைகேயி வரம் கேட்க அவ்வரத்தின்படி இராமர் கானகம் போகப் புறப்பட்டார். அதனையறிந்த லட்சுமணன் எரிமலைபோல் சீறினான். ''பகைத்தவரைக் கொன்று, எதிர்த்தவரை வென்று என் அண்ணனுக்கு முடிசூட்டுவேன்'' என்று கொதித்தான். பாதங்களால் பூமியை மிதித்தான்.

அருட்கடலாகிய இராமசந்திர மூர்த்தி தம்பியின் கரத்தைப்பற்றி, ''என் அருமைத் தம்பி, சீற்றம் விளையாத சாந்தி நிகேதனமான இந்த மண்ணில் உனக்கு எவ்வாறு கோபம் வந்தது?'' என்று கேட்டார்.

லட்சுமணன், ''அண்ணா! தங்கள் மகுடாபிஷேகத்துக்கு ஊறு விளைவித்த இந்த வேளையில் கோபம் வராமல் அது எப்போதுதான் வரும்?'' என்றான்.

''தம்பி நதியில் நீர் இல்லையானால் அது நதியின் பிழையா? நாம் யாரை நோவது? தந்தையின் பிழையன்று; பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த தாயின் பிழையன்று; தம்பி பரதன் பிழையுமன்று, இது விதியின் பிழை'' என்றார்.

நதியின் பிழையன்று நறும்புனல்
இன்மை அற்றே
பதியின் பிழையன்று; பயந்து
நமைப்புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை
யன்று; மைந்த,
விதியின் பிழை; நீ இதற்கென்னை
வெகுண்டதென்றான்.

தன் மகுடாபிஷேகத்துக்கு ஊறு விளைத்த கைகேயிமீது சீறினாரில்லை. அவளை மாற்றிய கூனியை நோவவில்லை. தம் வினையையே நொந்து கொண்டார். எத்துணைப் பெரிய சாந்தம்!

இராமதாசர் தம் பொருளைக் கொண்டும் தானீஷாவின் பொருளைக்கொண்டும் பத்திராசலக் கோயிலைப் புதுப்பித்தார். தங்கத்தால் தூபி அமைத்தார். வெள்ளி அனுமவாகனம் செய்தார். பொன்னும் மணியும் கொண்டு பலப்பல அணிகலன்கள் செய்தார். மன்னன் வெகுண்டு அவரை 12 ஆண்டுகள் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான்.

பக்தனுடைய துயரத்தைக் கண்டு திருவுள்ளம் இரங்கிய சீதாதேவி இராமரைப் பார்த்து, ''கருணைக் கடலே இராமதாசன் பரமபக்தன். திருப்பணி செய்த இவன் சிறையில் கிடந்து துன்புறலாமா?'' என்று கேட்டாள்.

இராமர், ''தேவி! அவன் முற்பிறப்பில் ஒரு கிளியின் சிறகை அரிந்து 12 நாள் கூட்டில் அடைத்தான். அதனால் இந்த வினை நேர்ந்தது. அவனுடைய வினையை நோவாமல் யாரை நோவது?'' என்று கூறியருளினார். தன் விருப்பம் போல் பறந்து மகிழும் கிளியைக் கூட்டில் அடைத்த பாவத்தால் இராமதாசர் 12 ஆண்டுகள் சிறையில் இருந்து துன்பத்தைத் துய்த்தார். முற்பிறப்பில் எந்த எந்த உறுப்புகள் குற்றஞ் செய்தனவோ அந்த அந்த உறுப்புக்கள் துன்பத்தை அடையும்.

திருக்கோயிலிலே தெய்வ வழிபாடு செய்கின்ற, கணவனுடன் வந்து வழிபடுகின்ற, ஓரழகிய பெண்மணியைக் கடைக்கண்ணால் உற்று உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் மாறுகண் உண்டாகும்.

பிறர் பேசும் இரகசியத்தை உற்றுக் கேட்பவன் மறுபிறப்பில் செவிடனாகப் பிறப்பான். நண்டின் பத்துக் கால்களை முறித்துச் சமைத்துத் தின்றவன் மறுபிறப்பில் பத்து விரல்களும் அழுகத் தொழுநோயினால் துன்புறுவான். சதா புறங்கூறுகின்றவன் மறுபிறப்பில் ஊமையாகப் பிறப்பான். ஏழையை ஓங்கி அடித்தவன் மறுபிறப்பில் கையொடிந்த முடவனாவான். பிறருடைய வாழ்வைக் கண்டு உள்ளம் புழுங்குகின்றவன் மறுபிறப்பில் குன்ம நோயினால் வேதனை அடைவான். ஞானிகளைப் பழித்தவன் மறுபிறப்பில் பித்தனாக அலைவான்.

சிவபுண்ணியம் தினையத்தனை செய்தால் மலையத்தனை புண்ணியம் எய்தும்.

காவிரிக் கரையில் சிவலிங்கத்தின் மீது காய்ந்த சருகுகள் வீழ்வதைக் கண்டு, எச்சில் நூலால் சிலந்தி பந்தல் இட்டது. இந்தச் சிவபுண்ணியத்தால் சிலந்தி மறுபிறப்பில் சோழ நாட்டில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து தமிழகத்தை ஒரு குடையின்கீழ் மாட்சியுடன் ஆட்சி புரிந்தது.

சிவபெருமானுக்கு 70 சிவாலயங்களும், திருமாலுக்கு 3 திருக்கோயில்களும் கட்டி வழிபாடு செய்து சிவபதம் பெற்றது.

சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்தே
உலந்தவன் இறந்த போதே
கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே.
—அப்பர்.

''வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்
சிலந்தி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக்
கூட்டினையே''
— அருட்பா

வேதாரண்யத்தில் அணைந்த நெய் விளக்கைத் தூண்டிய சிவபுண்ணியத்தால் எலி பலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது. பலிச்சக்கரவர்த்தியின் பெருமை அளவிட முடியாது. அடுத்த இந்திர பதவி அவனுக்கு உரியது.

நிறைமறைக் காடு தன்னில்
நீலெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே.
—அப்பர்.

''நீளுகின்ற நெய்யருந்த நேரெ
லியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனா யாக்
கினையே.''
—அருட்பா.

ஆதலால் அணுத்துணையும் பாவம் செய்யாது சிவபுண்ணியம் செய்து உய்வு பெறுவோமாக.

''சும்மா தனுவருமோ சும்மா
பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம் —
நம்மால்முன்
செய்தவினைக் கீடாச்
சிவனருள்செய் விப்பதெனில்
எய்தவனை நாடி இரு.''
—சிவபோகசாரம்.



நீதியும் மக்களும்



நீதிபதி ச. மோகன்

கட்டுப்பாடுகள் இல்லாத சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனுக்கு வாழ்வு சீராக அமையவில்லை. ஒழுங்கும் நியதியும் தேவைப்பட்டன. சட்டம் பிறந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்லச் சுதந்தரமாகப் பிறந்த மனிதன், சுதந்தரமாக வாழ விரும்பிய மனிதன், சட்டம் ஒரு விலங்காக இருப்பதைக் கண்ணுற்றான். இன்றைய வாழ்வில் சட்டத்தைப் பார்த்து அச்சம் கொள்கிறான். அது நம்முடைய பாதுகாப்புக்கு, முறையான வாழ்க்கைக்கு ஏற்பட்ட ஒரு சிறந்த நெறி முறை என்ற எண்ணங்கள் ஏற்படுவதே இல்லை. இது எதனால் என்றால், சட்டத்தைப் பற்றிய அறியாமை. சட்டங்கள் வழக்கறிஞர்களுக்காகவும், நீதி மன்றங்களுக்காகவும் ஏற்பட்டவை என்ற தவறான கருத்துப் பொதுவாக நிலவி வருகிறது. இந்தக் கருத்துத் தவிர்க்கப்பட வேண்டியது மட்டும் அல்ல; தரைமட்டமாக்கப்பட வேண்டிய ஒன்று.

சட்டமன்றங்கள் ஆகட்டும், பாராளுமன்றமாகட்டும், சட்டங்கள் இயற்றுகின்றன என்றால் மக்களுடைய உணர்வுகளை மதித்து, நாட்டின் தேவைகளைக் கருதி ஏற்படுகிற நெறிமுறைகள்தாம் அவை. ஆனால் இயற்றப்பட்ட சட்டங்கள் அதிகார வரம்பிற்குள் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கிற பொறுப்பு நீதி மன்றங்களுக்கே உண்டு. மக்களாட்சியின் மூன்று கல்தூண்கள்.:

நீதித் துறை
நிர்வாகத் துறை
சட்டத் துறை.

இந்த மூன்று துறைகளும் தம் எல்லைக் கோட்டுக்குள் கட்டுபாடின்றி இயங்குதல் வேண்டும். சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுவது சட்டத்துறை. இது தான் சட்டம் என்று கூறுகிறது நீதித்துறை. நீதி மன்றங்கள் கூறிய தீர்ப்பை ஏற்று அமல்படுத்துவது நிர்வாகத்துறை. இந்திய நாட்டில் 1950-ஆம் ஆண்டு குடியரசு அமைப்பு வந்தவுடன் அரசியல் சட்டத்தில் இந்த முறைக்கான வழி வகுக்கப்பட்டுள்ளது. முதல் முதலாக அடிப்படை உரிமைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டன. உடல், உயிர், சொத்து, பேச்சு, மதம் போன்ற பல சுதந்தரங்கள் தரப்பட்டன. இந்தச் சுதந்தரங்களை நிறைவேற்ற, முழுப்பலன் பெற, நீதிப் பேராணைகளையும் அரசியல் சட்டம் அளித்தது. ஒருவருடைய பேச்சுரிமையோ சொத்துரிமையோ அல்லது எந்தச் சுதந்தரமோ பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் இந்த நீதிப் பேராணையின் துணையை நாடலாம்.

அண்மையிலே இலங்கையில் நடந்த நிகழ்ச்சி; எப்படி நிர்வாகத்துறை, நீதித்துறையின் பணியை மேற்கொண்டு, தன் முடிவைச் செயல்படுத்தியது என்பதைப் பார்க்கும்போது, கரை புரண்டு ஓடிய அதிகாரத்தின் அக்கிரமத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. உச்ச மன்ற நீதியரசர்களும், மேல் முறையீட்டு நீதிபதிகளும், ''பிரிவினையை ஏற்கமாட்டோம்'' என்ற சூளுரை எடுக்க வேண்டும், குறிப்பிட்ட காலத்துக்குள் என்பது சட்டம். தாங்கள் ஒருவர் முன் மற்றொருவர் எடுத்துக் கொண்ட சூளுரை சரியென்று உச்ச நீதிமன்றம் கூறியது. அந்தக் கூற்றுத்தான் சட்டத்தின் இறுதி மொழி. ஆனால் இலங்கை அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அது சரியல்ல என்று கூறியது. அரசின் இக்கூற்றுக்கு ஏது அதிகாரம்? வரம்பு மீறிய செயல் அல்லவா?

சட்டத்தைப் பற்றிய அச்சத்தாலும், அறியாமையாலும் விளைகின்ற கேடுகள் பல. மேற்கோளாக: பொதுச் சாலையில் ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டுப் போவோர் வருவோர்க்கு ஓர் எச்சரிக்கையும் இல்லாத நேரத்தில், அந்தப் பள்ளத்தில் விழுந்து கால் முறிவு ஏற்பட்டால் ஒரு மனிதன் என்ன நினைக்கிறான்? ''இது என் தலைவிதி! வீட்டை விட்டுப் புறப்பட்ட நேரம் சரியில்லை'' என்று தானே?

இந்தக் கருத்து முற்றும் தவறு. பள்ளம் தோண்டியது தொலைபேசித் துறையாகட்டும், மின்சாரத் துறையாகட்டும், அல்லது நகராட்சியாகட்டும், அந்தப் பள்ளத்தை மூடாமல் போனது குற்றம். குறைந்தது ஓர் எச்சரிக்கையையாவது வைத்திருக்க வேண்டும். எனவே, ''நான் விழுந்தது அந்தத் துறையின் கவனக் குறைவு காரணமாக. எனது கால் முறிவுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்'' என்ற எண்ணம் எழ வேண்டும். அதற்காக வழக்காட வேண்டும். அவ்வாறு செய்தால் அந்த வழக்கு மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும், குறிப்பிட்ட துறைக்கு ஒரு படிப்பினையாகும்,

நம் நாட்டில் இதுபோன்ற வழக்குகள் ஏற்படாதது மிகவும் வருந்தத்தக்கது. மக்கள் தம்முடைய உரிமைகளை நிலைநாட்டுவதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். நீதிமன்றங்கள் இருப்பதே மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்குத்தான். ''எனக்கு எதற்கு இந்தக் கோர்ட், வம்பு, வழக்கு எல்லாம்'' என்கிற நினைவே எழக்கூடாது.

இன்றைய நாட்டு நடப்பில் நீதிமன்றங்களை அணுகுவதற்கான சூழ்நிலைகள் பெரிதும் மாற்றியமைக்கப்பட வேண்டும். முதலாவதாக, யாரும் கணக்கிடுவது வழக்கிற்காகும் செலவைத்தான்; இன்றுள்ள கோர்ட்டுக் கட்டணங்கள் யாவரையும் சிறிது கலங்க வைக்கும். நஷ்ட ஈடு பெறுவதற்கோ, கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவதற்கோ வழக்காட வேண்டுமானால் நூற்றுக்கு ஏழரை ரூபாய்வீதம் கட்டணம் செலுத்தவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. இதல்லாமல், வழக்கறிஞர்க்குத் தொகை. இவை இரண்டையும் சரிக்கட்டினால், விரைவில் வழக்கு முடியுமா என்ற வினாக்குறி ஒவ்வொருவரிடமும் தோன்றுவது இயற்கை. இவற்றுக்கு எல்லாம் மேலாக நீதிபதி, விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நேர்மையானவராக இருக்க வேண்டுமே என்ற இனமறியாத பயம். இந்த நான்கு காரணங்கள் தாம் மக்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் இருக்கிற இடைவெளியை அதிகப்படுத்துகின்றன.

நீதி வழங்குவது அரசின் பொறுப்பு, தலையாய கடன் என்றால் கோர்ட்டுக் கட்டணங்கள் இவ்வளவு அதிகமாக இருப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. நீதித் துறைக்கான செலவுகளை மற்ற வரிப் பணத்திலிருந்துதான் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர, இந்தத் துறையிலிருந்து வருவாய் ஈட்ட நினைப்பது தவறு. ஆகவே கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும்.

வழக்கறிஞர்களைப் பற்றிக் கூறவேண்டுமானால் முன்பு இருந்தது போல, இன்றைய வழக்கறிஞர்கள் ஆழ்ந்து ஊன்றிப் படிப்பது இல்லை. ஆகவே, எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்று தெரியாமல் வாதங்களை வளர்த்துக்கொண்டே போகிறார்கள். வாதங்கள் பிடிவாதங்களாக மாறுகின்றன. சில நேரங்களில் வசையாகவும் மாறுகின்றன. இதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ஒரு சுவையான நிகழ்ச்சியை நினைவுகூரத் தோன்றுகிறது.

ஒரு வழக்கறிஞர் எதிர்க்கட்சி வழக்கறிஞரைப் பற்றி நேரடியாகத்தாக்க ஆரம்பித்து, ''ஐயா, நீர் ஒரு திருடன், பித்தலாட்டக்காரன், கீழ்த்தரமான மனிதன்'' என்று கூறினார்.

அதற்குப் பதில் கூறும் வரையில் மற்ற வழக்கறிஞர், ''உம்முடைய யோக்கியதை யாருக்குத் தெரியாது? மோசடிக் கும்பலின் முதல் நபர் நீர். பொய்ச்சாட்சிகளைத் தயாரிப்பதில் உமக்கு ஈடு இணை கிடையாது'' என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

இந்த வசைமாரியைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி, வழக்கறிஞர்களைப் பார்த்துச் சொன்னார்: ''நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கோர்ட்டுக்கு நன்றாக அறிமுகப்படுத்தி விட்டீர்கள். இனிமேல் வழக்கைத் தொடரலாம்'' என்றார்.

நீதிமன்றத்தில் எழுந்த சிரிப்பொலி அடங்க அதிக நேரம் பிடித்தது. அடுத்து, இன்றைய வழக்கறிஞர்களுக்குச் சட்டத் தேர்வுக்குப் பின்னர்ப் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. அண்மை வரை இருந்த இந்தச் சிறந்த முறை இப்பொழுது என்ன காரணத்தினாலோ நீக்கப்பட்டுவிட்டது. சட்டத் தேர்வுக்கும், வழக்கறிஞர் தொழில் நடத்துவதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. தொழில் முறைக்குப் பயிற்சி மிகவும் தேவை. எந்த முறையில் வழக்கைச் சொன்னால் நீதிமன்றம் அதை ஏற்றுக் கொள்ளும் என்பதைப் பழக்கத்தினால்தான் பெற முடியும். வெறும் புத்தகப் படிப்பு மட்டும் உதவாது. ஒவ்வொரு வழக்கறிஞரும் வழக்கு எடுத்துரைக்கும் முறையை (Court craft) நன்றாகப் பயின்று கொள்ள வேண்டும். மேற்கோளாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்லலாம். எர்ட்லி நார்ட்டன் என்ற புகழ் பெற்ற வழக்கறிஞர் இருதாரத் தடைச் சட்டத்தின் (Bigamy) கீழ்க் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்காக வாதாடினார். 'தம் கட்சிக்காரர் குற்றம் செய்யவில்லை' என்ற அவருடைய வாதம் எடுபடவில்லை. என்ன தண்டனை அளிக்கலாம் என்ற பிரச்சினை எழுந்த போது நீதிபதி கூறினார்; ''நார்ட்டன், நீங்கள் முன்பு நேர்மைமிக்க ஓர் அரசுக் குற்ற இயல் வழக்கறிஞராகப் பணியாற்றி இருக்கிறீர்



கள். நீங்களே உங்கள் கட்சிக்காரருக்கு என்ன தண்டனை அளிக்கலாம் என்று கூறுங்கள்'' என்று கேட்டார்.

தமக்கே உரிய நகைச்சுவையோடு, ''இரண்டு மனைவிகள் இருக்கின்றார்கள் என்று குற்றம் நிரூபிக்கப் பட்டுவிட்டது என்று தீர்மானித்து விட்டீர்கள். அப்படியானால் இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டத்தையும் இரண்டு மாமியார் கொடுமையைவிட மீறிய தண்டனை என்ன உள்ளது?'' என்று பதில் அளித்தார். இதை வெகுவாகப் பாராட்டிய நீதிபதி வெறும் அபராதம் மட்டும் விதித்தார். இதுபோன்ற அறிவுக் கூர்மையை வழக்கறிஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லா நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. சராசரி ஒரு வழக்கு முடிவு பெற ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் ஆகின்றன. ஒரு வீட்டுச் சொந்தக்காரர் தம்முடைய சொந்தக் குடியிருப்புக்கு வீடு தேவை, எனவே வாடகைதாரர் வீட்டைக் காலி பண்ணவேண்டும் என்ற வழக்கு முடிய ஏழு ஆண்டுகளானால் வீட்டுச் சொந்தக்காரரின் நிலை எவ்வாறிருக்கும் என்று சிந்திக்க வேண்டும். இதே போன்ற மனமுறிவு, உயிர் சம்பந்தமான வழக்குகள் முடிவு பெறக் கால தாமதம் ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்னவாகும்? சாலை விபத்தில் உயிரிழந்தவரின் வாரிசுகள் அதற்கான இழப்பு ஈட்டைப் பெற இவ்வாறு காலம் கடந்து போனால், அதுவரை இறந்தவரின் வாரிசுகள் எவ்வளவு இன்னல்கள் உறுவார்கள்? எனவே, விரைவில் நீதி கிடைப்பதற்கான வழி முறைகள் வகுக்கப்பட வேண்டும். வழக்கின் ஒவ்வொரு மட்டத்திலும் ஏற்படுகிற காலதாமதங்கள் அறவே தவிர்க்கப்பட வேண்டும். விஞ்ஞானம் வெகுவாக முன்னேறியிருந்தும் கூட இன்னும் தீர்ப்பு நகல்கள்ஜெராக்ஸ் கருவிகள்மூலம் உடனுக்குடன் கொடுப்பதில்லை. சாட்சியங்களைப் பதிவு செய்ய 'டேப் ரிக்கார்டிங்' முறையைப் பயன்படுத்துவதில்லை. இன்றைக்கு இவ்வளவு இன்னல்களிடையேயும் இந்திய மக்கள் நீதிமன்றங்களை நாடி வருகிறார்கள் என்றால், அவர்களுக்கு நீதிமன்றங்கள் மீதுள்ள நம்பிக்கையும், நன்மதிப்புந்தான் காரணம். அந்த நம்பிக்கை இல்லாவிடில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மட்டும் 20,000 'ரிட்' மனுக்கள் (நீதிப் பேராணைகள்) குவிந்திருப்பதை எப்படி விளக்கமுடியும்? மக்கள் அரசுக்கு எதிராக வழக்குப் போடும் துணிவு, நீதிமன்றம் தகுந்த நீதி வழங்கும் என்கிற ஆழ்ந்த நம்பிக்கை, நம் நாட்டு முன்னேற்றத்தின் நல்ல அகுறிகள். எனவே, அந்நம்பிக்கையைக் கலைக்காமல், குலைக்காமல் இருப்பது எல்லாருடைய கடனும் ஆகும்.

நீதிபதிகளைப் பொறுத்தவரையில் விருப்பு, வெறுப்பு, காழ்ப்புப் போன்ற உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவராக, அஞ்சா நெஞ்சத்தினராக இருக்க வேண்டும்.

இந்தத் தீர்ப்பினால் தமக்கு என்ன விளைவுகள் வருமோ என்று அஞ்சி, தம்மைக் காப்பதில் முனைந்து நீதியைத் தவற விடுவாரானால், அந்த உயர்ந்த பதவிக்குப் பெரும் இழுக்கைத் தேடியவராவார். அவ்வித நிலையைப் பெறுவதைவிட, பதவி இழப்பதே சாலச் சிறந்தது.

சரித்திரத்தின் வாயிலாகச் சொல்லவேண்டும் என்றால், 1616-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதலாவது ஜேம்ஸ் ஆண்டு கொண்டிருந்த காலம். ஒரு மாதா கோயிலுக்கு ஒரு பாதிரியை அரசன் நியமித்திருந்தான். அது தவறு என்று வழக்குப் போடப்பட்டு, ஸர் எட்வர்ட் கோக் என்ற தலைமை நீதிபதி முன்னர் விசாரணைக்கு வந்தது. அவரோடு சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு நீதிபதிகளின் விசாரணை தொடங்கியது. அரசன் தன்னுடைய நியமனத்தைப் பற்றிய அதிகார வரம்பை நீதிமன்றம் தீர்மானிப்பது தனக்கு இழைக்கும் மாபெரும் துரோகம் என்று வெகுண்டு உரைத்தான். இந்த விசாரணையை ஒத்திப்போட்டு, தன் முன்னர் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று ஆணையிட்டான். இல்லாவிடில் சிறைவாசம் என்று அச்சுறுத்தினான். இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சி, நீதிபதிகள் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார்கள். ஆனால் தலைமை நீதிபதி எட்வர்ட் கோக்கோ மன்னிப்புக் கேட்க மறுத்து, மனச்சான்றின்படி தான் தீர்ப்புக் கூறுவேன் என்று திட்டவட்டமாகக் கூறினார். இந்தக் கூற்றின் விளைவு சிறைவாசம்; எட்டாம் நாள் உயிர் நீத்தார். அதற்கு முன்னால் சுடர்விட்டுச் சென்ற சொற்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுதல் வேண்டும். அதன் சுருக்கம் இதுதான்; ''உச்சி மீது வானிடித்து வீழ்ந்தபோதிலும், நீதி செய்யத் தவறுதே!'' இதற்காகவே அமைந்துள்ள லத்தீன் பழமொழி,

"Fiat Justitia, Ruet Coelum. Let Justice be even if heavens fall."

இந்தச் சீரிய கொள்கையைத் தான் ஒவ்வொரு நீதிபதியும் நீங்காத நினைவில் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

''ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்,
தேர்ந்துசெய் வஃதே முறை''

என்ற குறளின் இலக்கணத்துக்கு ஒப்ப நடக்கவேண்டும்.

காவியவல்லி

'எழிற்கோவன்'

வருகநா மகளே! வருகநான் மறையே!
வருகயாழ் நாணிசை மகளே!
வருகநன்னூலே! நடனநா மேவி
சரிகம பதநிஸ என்ன
வருகநூ லமுதே! நுண்கலைக் கொழுந்தே!
வருகநான் முகமே! என்றுப சரிப்ப
வருக மாக் காவிய வல்லி!
பெருமைப் பேற்றின் பிறைதோற்ற
நிலவே வருக!
பிழம்பொளிநீ தெளிவாய் வருக!
இருளையகற்றும் நின்னொளியே
இவள் நிறைப்பாள்!
இகழ்மறைத் தேய்வுமில்லாள்!
கருணை யொளியிவள் கலைப்பதம் பணிந்தால்
கடைதேர்ந்தறிவது புனிதம்!
அருமையம்புலியே வருகென அழைப்ப
அரும்பினள் காவிய வல்லி!
தூயதா மரைமேல் நான்முகன் கலைமேல்
துணைநிறை நெறிவளம் விளங்க
நேயமென் நிலையாய் நெகிழ்ந்திசை யலையாய்
ஆயவெவ் வேறாய்க் கலைபலகை
ஆய்வுயர்ந்தோங்கும் அறவழிப் பல்லோர்
அறிவியல் வடங்கள் தொட்டாட்டத்
தாய்நெறிக் கொழுந்து காவியவல்லி
தான் மகிழ்ந்து சல்லாடினளே!

எடுபிடி ஆள்

நெல்லை ஆ. கணபதி

அப்பா நமக்கோர் எடுபிடிஆள்!
அம்மா தான் தினம் எஜமானி!
எப்போ தும்அவர் ஓடோட
எத்தனைகட்டளை இட்டிடுவார்!

காலையில் தண் ணீர் பிடித்திடுவார்!
காபிக்கும் பால்தான் வாங்கிடுவார்!
சேலை துணிமணி துவைப்பதற்கும்
சிற்சில உதவிகள் செய்திடுவார்!

அடுப்பங் கரையில் சமையலுக்கும்
அடிக்கடி எடுபிடி ஆகிடுவார்!
துடைப்பமும் கையுமாய்த் தொழில் செய்வார்!
தொட்டியைக் கழுவியும் விட்டிடுவார்!

காய்கறி வாங்கியே வந்திடுவார்!
கனிவுடன் பண் டங்கள் தந்திடுவார்!
வாய்மட்டும் பேசிடா ஊமையதாய்
வாழ்வெலாம் அவர்தினம் உழைத்திடுவார்!

போட்டதைத்தின்றே மகிழ்ந்திடுவார்!
புறப்பட்டு வேலைக்குச் சென்றிடுவார்!
வாட்டமே இன்றித்தான் முதல்தேதி
வாங்கிய சம்பளம் கொடுத்திடுவார்!

அவ்வப் போது சுடுவார்த்தை
அம்மாதான் கூறினும் பணிந்திடுவார்!
எப்போது பார்த்தாலும் தலையாட்டி
இன்முகமும் காட்டியே வாழ்ந்திடுவார்.

பராசக்தி

'மதிஒளி'



விண் ணை அளக்கும் மலைமுகட்டில்—பாய்ந்து
விரிந்து சுழலும் அலைத்தகட்டில்
பண் ணின் இனிய ஒலியினிடை—உன்னைப்
பார்க்கத் துடித்தேன் பராசக்தி.

பூத்ததோர் தாமரை ஓடையினில்—தங்கும்
புல்லின் நுனியிற் பனித்துளியில்
கூத்திடும் மஞ்ஞை எழிலினிலே—உன்றன்
குங்கும மேனியைக் கண் டேனு?

கொட்டும் அருவிச் சிலிர்ப்பிடையே—அங்குக்
கூடி வருமிளந் தென்றலினில்
பட்டு நிகர்க்குமுன் பாதங்களை—என்கண்
பார்க்கத் துடிப்பதைக் கண் டிலையோ?

அன்பர் உளந்தனில் வீற்றிருப்பாய் – என
அன்றொருநாள் யாரோ சொன்னபடி
மன்பதை தன்னிலோர் அன்பரைநான்—தேடி
மாய்ந்து கிடக்கிறேன் அன்டரில்லை

சொட்டு துளித்துளித் தேனெனவே—உன்னில்
துய்க்கும் நினைவும் இனிக்குதம்மா;
கட்டிப் பிடித்திடும் இன்னலெலாம்—என்றன்
கற்பனைக்கெட் டாது சென்றிடுது.

சோதி விளக்கின் ஒளிச்சுடரில்—நானுேர்
சுந்தர வண் ணம் பரவக்கண் டேன்
ஆதி பராசக்தி அன்னை யுன்றன்—விழி
ஆட்கொண் டிடும்அருள் சூழக்கண் டேன்.

அழகு

இளங்கம்பன்.

பூவதன் நகையாய்ப் பூவையர் வடிவாய்ப்
புதுமணல் விரிப்பாகி
ஆவதன் கன்றின் அருமுடல் வனப்பாய்
அகவிடும் மயிலாகி

காவின் தளிரில் காண்பது வளமாய்க்
கவர்ந்திடும் நிலவாய்நற்
பாவதன் உயிராய்ப் பரவிடும் முதலாய்ப்
பரவசம் தரும் அழகே!

மலையதன் மடியில் மகிழ்ந்தொலி எழுப்பும்
மான் நடை அருவியதாய்
விலையெதும் இல்லா மணியொளிச் சுடராய்
விளங்கிடும் தனிவியப்பே!

கலையதன் ஊற்றே! கற்பனை விரிவே!
கவிமத லைநடையே!
அலைகடல் மீதில் ஆடிடும் அழகே,
அவனியெ லாம்நீயே!



தீபாவளி

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சுவாமிகள்

தீபத்தினுடைய வரிசைகள். தீபம் ஏற்றியவுடன் சிறிய இருட்டு அகலுகிறது. நிறையத் தீபங்கள் ஏற்றினால் பெரிய இருட்டும் அகன்று நிறைய ஒளி கிடைக்கிறது. ஒளியின் மூலம் அங்கு உள்ள பொருள்களையெல்லாம் நன்றாக உணர முடிகிறது. மண்ணினால் பல பாண்டங்களைப் பண்ணுகிறோம். மண் குறைந்து விடுகிறது. தங்கத்தினால் பல ஆபரணங்கள் செய்கிறோம். தங்கம் குறைந்து விடுகிறது. ஆனால் முதல் முதலில் ஒரு தீபம் ஏற்றுகிறோம். அந்த ஒரு தீபத்திலிருந்து பல தீபங்களை ஏற்றுகிறோம். எத்தனை தீபங்கள் ஏற்றினாலும் முதல் தீபம் முதல், கடைசித் தீபம் வரை எல்லாத் தீபங்களின் ஒளியும் சேர்ந்து நிறைய ஒளியைக் கொடுக்கிறது. ஒளி குறைவதில்லை. இருட்டு என்பதை அறியாமை என்று கொள்ள வேண்டும்; அல்லது இருட்டு என்பதைத் தீய குணங்கள் என்பதாகவும் கொள்க.

ஒளி என்பது அறிவு ஒளி. அறிவு ஒளி வளர வளர அறியாமை அகலும். கெட்ட குணங்கள் அகலும். இது தான் உண்மை; ஒளி வளர்வதின் பயன். ஆனால் இன்றுள்ள நிலையிலே அறிவு வளர்ச்சி என்ற பெயரால் உண்மையான அறிவு வளர்ச்சி இராமல் போலி அறிவும் அதன் பயனும் வளர்ந்து வருகின்றன. உண்மையான அறிவு வளர்ச்சி என்பது ஒவ்வொரு பொருளின் உண்மைத் தன்மையையும், ஒவ்வொரு காரியத்தின் உண்மைத் தன்மையையும் அறிந்துகொண்டு அநாவசியமான பொருள்களில் அதிக ஆசைப்படாமல் அவசியமான பரம்பொருள் மீது ஆசையை அதிகப்படுத்திக் கொள்வதுதான் உண்மை அறிவு ஒளியின் வளர்ச்சியாகும்.

ஒவ்வொரு மதமும், 'ஆண்டவன் அல்லது பரமாத்மா எங்கும் நிறைந்து வியாபகமாக இருக்கிறார். எல்லாப் பொருளிலும் ஊடுருவி நிலைத்து நிற்கிறார்.' என்று கூறுகிறது. இப்படிக் கூறுவதன் பயன், ஒவ்வோர் உயிரிலும், உடலிலும், பொருளிலும் ஆண்டவன் அல்லது பரமாத்மா இருக்கிறார். ஆகவே, எந்த உயிரையும் எந்த உடலையும் எந்தப் பொருளையும் கெட்ட நோக்கத்துடன் பார்க்கக் கூடாது என்பதைத் தெரிவிப்பதுதான். அதை வைத்துத்தான் நம்முடைய மதத்திலே, தாயைத் தெய்வமாக நினை, தந்தையைத் தெய்வமாக நினை, குருவைத் தெய்வமாக நினை, கணவனைத் தெய்வமாக நினை, காவேரி போன்ற புனித நதிகளைத் தெய்வமாக நினை, அரசமரம், ஆலமரம் போன்றவற்றைத் தெய்வமாக நினை, பசு போன்ற பிராணிகளைத் தெய்வமாகப் பார், மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும், துவேஷம் கொள்ளக் கூடாது, ஹிம்சை செய்யக்கூடாது, என்பன போன்றவையெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

பகுத்தறிவு இல்லாத பிராணிகள் நமக்கு ஹிம்சை செய்யலாம். பகுத்தறிவு உள்ள மனிதன் ஹிம்சையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல வேண்டுமேயொழிய எதிர் ஹிம்சை செய்யக்கூடாது. இந்த எண்ணம் வளர்ந்தால் உலகில் இன்று நடைபெறும் பிராணிகளைக் கொல்வது, மனிதர்களைத் துவேஷித்துக் கொல்வது போன்ற தீய செயல்கள் எல்லாம் குறையும்.

ஒவ்வொரு பண்டிகையும் வரும் போது ஒவ்வொன்றும் நமக்கு ஞாபகம் வரும். விநாயக சதுர்த்திப் பண்டிகை கொழுக்கட்டையை நினைவூட்டும். சிவராத்திரி, உபவாஸத்தை நினைவூட்டும். ஆஞ்சநேயரின் உத்ஸவம் வடைமாலையை நினைவூட்டும், கோகுலாஷ்டமி கிருஷ்ணனின் லீலைகளை நினைவூட்டும். நரக சதுர்த்தசி என்ற தீபாவளிப் பண்டிகை நினைவு வரும் போது புத்தாடை உடுத்துக்கொள்வது, பட்சணங்களை உண்ணுவது என்பன மாத்திரம் அல்லாமல், தீய சக்தியை அழிக்க வேண்டும் என்ற உணர்வும் நினைவுக்கு வரும்.

நல்ல பயிர் வளர வேண்டுமானால் நல்ல சத்துள்ள உரம் இட வேண்டும். அப்படி இட்ட உரமானது பயிர் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமேயொழியக் களைப் புற்கள் வளர்வதற்கு உதவியாக இருக்கக் கூடாது. ஆகவே, களைப் புற்களை அடியோடு பிடுங்கிப் போட்டுவிட்டு நல்ல உரங்களை இட்டால் பயிர்கள் நன்றாக வளரும். அது போல், நம்முடைய எண்ணத்திலே, செயலிலலே உள்ள களைகளைப் போன்ற தீய செயல்களை முதல் முதலில் அகற்றுவதற்கு முயல வேண்டும். அப்போது தான் நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள் வளர்ச்சி அடையும். தீய எண்ணங்கள், தீய செயல்களை அகற்றாமலே நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள் வளர வேண்டுமானால் அவை நிலையாக, நித்தியமான எண்ணங்களாக, செயல்களாக இரா. இதை வைத்துத்தான் பகவானுடைய அவதாரங்களிலும், தீயவர்களை அழித்து நல்லவர்கள் வளர்க்கப்பட்டார்கள். ஆகவே தீப+ஆவளிப் புனித நன்னாளில் நம்முடைய எண்ணத்திலே, செயல்களிலே உள்ள தீயவைகளை அகற்றி நல்லவைகளை ஏற்றிக்கொள்ள முயல வேண்டும். அப்போது தான் மனித வாழ்விலே துன்பம் குறைந்து இன்பம் பெருகும். இதுதான் அறிவு ஒளி வளர்ச்சியின் பயன். ❊

பறந்து போன பறவை

கி. வா. ஜகந்நாதன்

குளித்து நனைந்த ஆடையுடன் காவிரியிலிருந்து குனிந்த படியே மெல்ல நடந்து வந்தாள் குஞ்சம்மாள். அவளைப் பார்த்த பெண்மணிகள், "எவ்வளவு அடக்க ஒடுக்கமாக இருக்கிறாள்! இவளைப் போய்க் கெட்டவள் என்று சொல்கிறார்களே!" என்று பேசிக் கொண்டார்கள். அவள் தன் வீட்டுக்குப் போனாள்.

கண்ணராய புரத்தில் உணவுச் சாலை வைத்திருந்த முத்து சாமி ஐயர் ஒரு சமயம் மதுரைக்குப் போயிருந்தார். அப்போது அவர் தங்கியிருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரே ரகளையாக இருந்தது. என்னவென்று விசாரிக்கும் போது குஞ்சம்மாள் என்ற பெண்ணை அவள் கணவன் கள்ளைக் குடித்து விட்டு வந்து அடிக்கிறான் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட போது முத்துசாமி ஐயருக்கு இரக்க மாக இருந்தது; வேதனையாகவும் இருந்தது. சிறிது நேரம் யோசனை யில் ஆழ்ந்தார். பிறகு வாசலில் வந்து அந்த வீட்டை எட்டிப் பார்த்தார். அப்போது குஞ்சம் மாளின் கணவன் வெளியிலே போயி ருந்தான். குஞ்சம்மாளைப் பார்த்த போது அவள் நல்ல அழகியாக இருந்தாள்: 'இவ்வளவு அழகிய பெண்ணை அடிக்க இவனுக்கு எப்படி மனம் வந்தது?' என்று எண்ணி னார். இரண்டு நாள் மதுரையில் தங்கியிருந்தார்.

இரண்டாவது நாள் குஞ்சம்மா ளின் கணவன் ஏதோ வேலையாக வெளியூருக்குப் போனான். அப் போது முத்துசாமி ஐயர் சிறிது ஆலோசனை பண்ணி ஒரு தீர்மா னத்திற்கு வந்தார். குஞ்சம்மாளைக் கண்டு, "நீ என்னுடன் எங்கள் ஊருக்கு வந்தால் உன்னை ஜாக் கிரதையாகக் காப்பாற்றுவேன்" என்று சொன்னார். பல காலமாக அடியும் உதையும் பட்டு வேதனை யும் சலிப்பும் கொண்டிருந்த அவள் அவர் சொன்னதைக் கேட்டுத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். உடனே முத்துசாமி ஐயர் அவளைக் கண்ணராய புரத்திற்கு அழைத்து வந்துவிட்டார்.

அவர் தம் வீட்டுக்குப் பின்புறம் ஒரு கூரை வீடு கட்டி அவளை அங்கே இருக்கும்படி செய்தார். ஒவ்வொரு வேளையும் தம்முடைய உணவுச் சாலையிலிருந்து அவளுக்கு உணவை அனுப்பி வந்தார். காலையில் காபி, நண்பகலில் உணவு, பிற்பகலில் சிற்றுண்டி, இரவு உணவு ஆகிய வற்றை அனுப்பினார். தம்முடைய உணவுச் சாலையில் வேலை செய்யும் சுந்தரம் என்பவனிடம் அவற்றைக் கொடுத்தனுப்புவார். சுந்தரம் பெய ருக்கு ஏற்ற அழகன்.

ஒரு நாள் சுந்தரம் சாப்பாடு கொண்டு வந்து இலை போட்டுத் தானே குஞ்சம்மாளுக்குப் பரிமாறி னான். குஞ்சம்மாள் சாப்பிடும்போது சுந்தரத்தின் முகத்தைப் பார்த்துக் கொண்டே உணவு அருந்தினாள்

"சாப்பாடு நன்றாக இல்லையா? அதைக் கவனித்துச் சாப்பிடாமல் என் முகத்தையே பார்த்துக் கொண்டு சாப்பிடுகிறாயே!" என்று கேட் டான்.

"சாப்பாடு மிகவும் நன்றாக இருக் கிறது. அதிலும் உன் கையில் பட்டு வரும்போது அது மிகவும் ருசியாய் இருக்கிறது" என்றாள்.

"என்ன அப்படிச் சொல்கிறாய்? என் முகத்தில் என்ன இருக்கிறது? ஏதாவது கரி கிரி இருக்கிறதோ?' என்று சொல்லி அவன் முகத் தைத் துடைத்துக் கொண்டான்.

"முகத்தைத் துடைத்துக்கொண் டால் அதன் அழகு குறைந்து விடுமா? உன் பெயருக்கு ஏற்றபடி உன் முகம் அழகாக இருக்கிறது. அதைப் பார்த்தபடி சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றாள். சுந்தரம் தலை குனிந்தபடி நகைத்துக்கொண் டான். 'இவள் என்னைப் பற்றி ஏன் இப்படியெல்லாம் நினைக் கிறாள்?' என்று எண்ணினான்.

"உன்னைக் கண்டால் எனக்கு ஏதோ புதிய உணர்ச்சி உண்டா கிறது. உன்னைக் கட்டித் தழுவி.."

"சே! சே! அப்படியெல்லாம் சொல்லாதே! நீ அயலாருடைய மனைவி. நீ இப்படிப் பேசுவது நன்றாக இல்லை" என்றான் சுந்தரம்.

"ஏன்? என் பேச்சு இனிமை யாக இல்லையா?" என்று கேட்டாள் குஞ்சம்மாள்.

"உன் பேச்சும் இனிமையாக இருக்கிறது. உன் அழகும் அற்புதமாக இருக்கிறது" என்றான் சுந்தரம்.

"அப்படியா? எங்கே உன் கையை நீட்டு; பார்க்கலாம்" என்றாள் குஞ்சம்மாள்.

"உனக்குக் கைரேகை பார்த்துக் குறி சொல்லத் தெரியுமா? எதற்காகக் கையை நீட்டச் சொல்கிறாய்?"

"கையை நீட்டு; குறி சொல்கிறேன்."

அவன் கையை நீட்டினான், அவள் அதை முத்தமிட்டாள்; "என்ன அழகான கை!" என்றாள்.

"முகம் அழகாக இருக்கிறது என்கிறாய்; கை அழகாக இருக்கிறது என்கிறாய். இதெல்லாம் எதற்குச் சொல்கிறாய்?"

"நீயே அழகன். உன்னைக் கண்டால் எந்தப் பெண்ணும் உன்னை அடைந்து ஆனந்தம் அடைய வேண்டும் என்று நினைப்பாள்."

"அப்படி எந்தப் பெண்ணும் என்னிடம் சொல்லவில்லையே! அது மட்டும் அல்ல. நான் எந்தப் பெண்ணோடும் அதிகமாகப் பேசுவதில்லையே!"

"அதனாலேதான் உனக்குப் பெண்ணின் மனம் புரியவில்லை. என்னை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை."

இப்படிச் சொல்லிக் கொண்டே அவனை இழுத்து அவன் கன்னத்தில் முத்தம் இட்டாள். சுந்தரத்துக்கு என்னவோ போல் இருந்தது. ஒரு வகையான கிளுகிளுப்பும் மயிர்க் கூச்சும் எடுத்தன. இன்னும் அவள் முத்தம் இட வேண்டும் என்ற எண்ணமும் உண்டாயிற்று.

குஞ்சம்மாள் அவன் மனம் சலனம் அடைந்ததை உணர்ந்துகொண்டாள். பிறகு அவனோடு சல்லாபம் செய்தாள். அவன் இணங்கவே, இருவரும் ஒன்றாகக் கலந்தனர். இப்படிச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் இருவரும் இன்பத்தை அநுபவித்தனர். இந்தச் செய்தி முத்துசாமி ஐயருக்குத் தெரியாது.

குஞ்சம்மாளின் கணவன் வெளியூருக்குப் போயிருந்தவன் திரும்பி வந்து பார்த்தபோது, தன் வீட்டில் மனைவியைக் காணவில்லை. அவள் எங்கோ ஓடிப்போய் விட்டாள் என்று தெரிந்து கொண்டான். யார் எங்கே அழைத்துப் போனார்கள் என்று தெரியவில்லை. விசாரித்துப் பார்த்தபோது, அந்தக் கொடியவனுக்கு யாரும் எதையும் தெரிவிக்கவில்லை. "அவளைக் கண்டால் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்" என்று அவன் உறுமினான். ஆனால் அவளை எங்கே என்று கண்டுபிடிப்பது? தான் போன ஊரில் எல்லாம் விசாரித்தான். ஒன்றும் தெரியவில்லை. மதுரைக்கும் கண்ணராயபுரத்துக்கும் நெடுந்தூரம். ஆகையால் அவன் அந்தப் பக்கம் போகவில்லை.

கண்ணராயபுரத்தில் குஞ்சம்மாளும் சுந்தரமும் குலாவிக் கொண்டிருந்தார்கள். பிறர் அறியாமல் அந்தக் குலாவல் நடந்துகொண்டிருந்தது. இதனால் சுந்தரம் குஞ்சம்மாளுக்கு உணவு கொடுத்துவிட்டு வருவதில் தாமதம் ஏற்பட்டது. முத்துசாமி ஐயர், "ஏன் அப்பா, இப்போது எல்லாம் உணவைக் கொடுத்து விட்டுவர இவ்வளவு தாமதம் ஆகிறது?" என்று ஒரு நாள் சுந்தரத்தைக் கேட்டார்.

"அவளுக்கு உடம்பு சரி இல்லை போல் இருக்கிறது. சாப்பாட்டை மெல்ல மெல்ல விழுங்குகிறாள். சில சமயம் சாப்பாட்டை வாயிலெடுத்து விடுகிறாள்" என்று ஒரு பொய்யைச் சொல்லி வைத்தான் சுந்தரம்.

"ஐயோ, பாவம்! மதுரையில் தான் அவள் கஷ்டப்படுகிறாள் என்று இங்கே அழைத்து வந்தால் இங்கேயும் இப்படி வந்துவிட்டதே! ஏதாவது மருந்து வாங்கிக் கொடுக்கலாமா?" என்று முத்துசாமி ஐயர் கேட்டார்.

"நானே வைத்தியரிடம் சொல்லி மருந்து வாங்கி வருகிறேன்" என்று சொல்லிச் சுந்தரம் மருந்து வாங்கி வந்து முத்துசாமி ஐயரிடம் காட்டினான்.

"சரி, இந்த மருந்தைக் கொடு; பார்க்கலாம்" என்றார் முத்துசாமி ஐயர். ஆனால் சுந்தரம் அந்த மருந்தைக் கொண்டு போய்த் தூர எறிந்துவிட்டான். உண்மையாக நோய் இருந்தால் அல்லவா மருந்து கொடுக்கவேண்டும்? குஞ்சம்மாளுக்கு என்ன நோய் என்று அவனுக்குத் தெரியாதா? அதற்கு வைத்தியம் செய்கிறவன் தானே என்பதும் அவனுக்குத் தெரிந்தது தானே?

அவர்கள் கூடிக் குலவினாலும், 'இது யாருக்காவது தெரிந்து விடப் போகிறதே!' என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. ஆனால் அச்சத்தை விடக் காமமே வலிமை உடையதாக இருந்ததால் அதுவே வென்றது.

குஞ்சம்மாளைத் தேடிக்கொண்டிருந்த அவள் கணவன் எங்கெங்கோ தேடிச் சலித்துப் போய்விட்டான். 'இனித் தேடுவதில் பயன் இல்லை' என்ற முடிவுக்கும் வந்தான். ஆனால் அந்த முடிவு நெடுநாள் நிற்கவில்லை. மறுபடியும், அவளை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவனை உந்தியது. 'இந்த முறை அவள் எங்கே இருந்தாலும் கண்டு பிடித்துத்தான் மறு காரியம் பார்ப்பது?' என்று முடிவு பண்ணினான்.

மதுரையிலிருந்து புறப்பட்டு வடதிசையை நோக்கி வந்தான். காவிரிக் கரையில் உள்ள ஊரில் எல்லாம் தேடினான். எங்கும் புலன் கிடைக்கவில்லை. கடைசியில் கண்ணராயபுரத்தில் உணவுச் சாலை வைத்திருக்கும் முத்துசாமி ஐயர் பாதுகாப்பில் யாரோ அயலூர்ப் பெண் ஒருத்தி இருக்கிறாள் என்ற செய்தி அவனுக்குக் கிடைத்தது.

ஆகவே, அவன் ஒரு நாள் கண்ணராயபுரத்திற்கு வந்து சேர்ந்தான். உணவுச் சாலை வைத்திருக்கும் முத்துசாமி ஐயரை விசாரித்தான். அவர் தமக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டார். 'இந்தப் பாதகன் அவளைக் கண்டுபிடித்துவிட்டால் கொலை செய்து விடுவானே!' என்று அவர் அஞ்சினார்.

கடைசியில் அங்கும் இங்கும் விசாரித்தான் அவன், குஞ்சம்மாள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டான். ஒருநாள் பிற்பகலில் அவள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று அடைந்தான். அதே சமயத்தில் சுந்தரம் குஞ்சம்மாளுக்கு உணவு கொண்டு வந்து பரிமாறிக் கொண்டிருந்தான்.

முத்துசாமி ஐயர் அரைசல் புரைசலாகச் சுந்தரத்துக்கும் குஞ்சம்மாளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கேள்வியுற்றார். ஆகவே, ஒருநாள் சுந்தரத்தைக் குஞ்சம்மாளுக்கு உணவு கொண்டுபோகச் சொல்லி விட்டுச் சிறிது நேரம் கழித்து அவர் அவள் இருக்கும் இடம் சென்றார். அவர் அங்கே போய்ச் சேர்வதற்கும் குஞ்சம்மாள் அங்கே வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது.

குஞ்சம்மாள், அவள் கணவன், சுந்தரம், முத்துசாமி ஐயர் நால்வரும் ஒரே சமயத்தில் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் வருவதை எப்படியோ தெரிந்து கொண்டாள் குஞ்சம்மாள்.

அவ்வளவுதான். உடனே யாருக்கும் தெரியாமல் அவள் அங்கிருந்து புறப்பட்டு ஓடி விட்டாள். அவளைத் தேடி வந்த மூவரும் அங்கே வந்த போது குஞ்சம்மாள் இல்லை. 'பறவை பறந்து போய் விட்டது' என்று உணர்ந்து கொண்டார்கள். 'இனி அவள் எக்கேடு கெட்டால் என்ன? நம் மானம் பிழைத்தது' என்று முத்துசாமி ஐயர் எண்ணினார். 'இனி அந்தப் பழிகாரியைத் தேடி என்ன பயன்?' என்று குஞ்சம்மாளின் கணவனும் அலுத்துப் போய் மதுரைக்குப் போய் விட்டான். சுந்தரந்தான் எதையோ அரிய பொருளை இழந்து விட்டவனைப் போல ஆனான்.

எப்படியோ பறவை பறந்து போய்விட்டது. ✻

LION BRAND
FANCY FIRE WORKS
சிங்கம் அளிக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
தி நேஷனல்
பயர் ஒர்க்ஸ் பாக்டரி
சிவகாசி 626 123. தபால் பெட்டி: 13
போன்: 60 & 1205. தந்தி: SPARKLERS
ADWAVE/NFF/2474



குரு பக்தி

சூரிய வம்சத்திலே திலீபன் என்று ஒரு மகாராஜா, அவனுக்கு வெகு நாளாகப் புத்திர சந்ததியே உண்டாகவில்லை. அதனாலே குலகுருவான வசிஷ்டருடைய ஆசிரமத்துக்குப் போனான் புத்ரஸந்ததிக்காக. எப்போதும் புருஷன் பண்ணவேண்டிய காரியங்கள், கடன்கள், மூன்று உண்டு. வேதம் கற்றுக் கொள்வதனாலே ஒரு கடன், ரிஷி ருணம், தீர்கிறது. யாகாதிகளினாலே தேவர்களைத் திருப்தி செய்வது ஒன்று. இந்த இரண்டையும் நான் பண்ணி விட்டேன். இன்னுமொன்றுதான் பண்ணவேணும். அதுதான் புத்திர சந்ததியை உண்டுபண்ணுவது. அதனாலே பித்ரு ருணம் தீரும். அதுக்கு நீங்கள்தான் அநுக்ரஹம் பண்ணணும்'' என்று வசிஷ்டரிடம் கேட்டான்.

அவர் இரண்டு நிமிஷம் தியானத்திலே இருந்தார். ரிஷிகள் என்றாலே வருங்காலம், நிகழ்காலம், நடந்தது எல்லாவற்றையும் தெரிந்து சொல்லக் கூடியவர்கள். அதனாலே ராஜாவுக்குப் புத்திரன் பிறக்காததுக்குக் காரணம் என்ன? அப்படி அவன் இதற்கு முன்னாடி என்ன (பாபம்) செய்திருக்கான் என்று பார்த்தபோது ரிஷிக்கு எல்லாம் தெரிந்தன.

இந்த ராஜா, இந்திரனுக்குச் சகாயம் செய்வதற்காகச் சுவர்க்க லோகத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது, அங்கே வழியிலே கல்பதருவின் அடியில் சுரபி என்ற காமதேனு இருந்தது. திரும்பி அவசரமாக வந்ததால் திலீபன் அதைக் கவனிக்காமல் வேகமாக வந்துவிட்டான். ஆனால் எப்போதும் கோ (பசு) வைப் பார்த்தால் பிரதக்ஷிணமாகப் போகவேணும். அப்படிப் பிரதக்ஷிணமாக அவன் வரவில்லை. அதனாலே அது சாபம் கொடுத்துவிட்டது.

அவஜாநாஸி மாம் யஸ்மாத் அதஸ் தே ந பவிஷ்யதி |
மத்ப்ரஸூதிம் அநாராத்ய ப்ரஜேதி த்வாம் சசாப ஸா ||

ஸா—என்றால் காமதேனு. காமதேனுவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்னுடைய சந்ததியை நீ பூஜை பண்ணினால்தான் உனக்குப் பிரஜா சந்ததியானது உண்டாகும். காரணம் என்னை எப்போது நீ அவமதித்தாயோ, அதனால் உனக்குச் சந்ததியானது கிடையாது. எனக்கு எப்போது (பிரதக்ஷிணம்) இல்லை என்று சொல்லிவிட்டாயோ, அப்போது உனக்கும் (பிரஜை) கிடையாது'' என்று அது சொல்லிவிட்டது.

இது, ராஜா வேகமாக வந்ததனாலே ஆகாச கங்கையினுடைய இரைச்சலினால் அவனுக்குக் கேட்கவில்லை. இதை ஞானதிருஷ்டியிலே பார்த்து விட்டு வசிஷ்டர் சொன்னார்:

ஈப்ஸிதம் ததவஜ்ஞாநாத் வித்தி ஸார்கல மாத்மந. |
ப்ரதிபத்நாதி ஹி ச்ரேய: பூஜ்ய பூஜா வ்யதிக்ரம: ||

இந்த ச்லோகத்தின் அர்த்தம், 'பூஜிக்கத் தகுந்தவர்களைப் பூஜிக்கவில்லையானால் நம்முடைய சிரேயஸுக்குக் குறைச்சல், என்பது. இதனாலேதான் சந்ததி உண்டாகப் பிரதிபந்தகம்—இடைஞ்சல்—வந்திருக்கிறது என்று சொல்லி, ''காமதேனுவினுடைய சந்ததியானது என்னுடைய ஆசிரமத்திலே வந்திருக்கிறது. நீ அதை ஆராதி'' என்றார் குரு.

ஸுதாம் ததீயாம் ஸுரபே: க்ருத்வா ப்ரதிநிதிம் சுசி: |
ஆராதய ஸபத்நீக: ப்ரீதா காமதுகா ஹி ஸா ||

''காமதேனுவின் பிரதிநிதியான, அதன் பெண்ணான நந்தினியை நீ பத்தினியோடு கூடிப் பூஜை பண்ணவேணும். அது என்னென்ன செய்கிறதோ, அதையெல்லாம் நீயும் பண்ணவேணும்''.

ப்ரஸ்திதாயாம் ப்ரதிஷ்டேதா: ஸ்திதாயாம் ஸ்திதிம் ஆசரே: ||
நிஷண்ணாயாம் நிஷீதாஸ்யாம் பீதாம்பஸி பிபேரப: ||

''ஆசரே: என்றால் அநுஷ்டானம் பண்ணவேணும். அநுஷ்டானமென்றால் அதனுடைய கர்மாவை நீயும் செய்யவேணும். அது ஜலம் குடிக்கும்போது நீயும் ஜலம் குடிக்கவேணும். அது உட்காரும்போது நீயும் உட்காரவேணும். நிழலைப்போல் பின்பற்றுவது என்று சொல்வார்களே, அந்த மாதிரி. அது எப்படியிருக்கிறதோ அந்த மாதிரி நீயும் பின்பற்றவேணும்''.

அதே மாதிரி ஆரம்பித்துவிட்டான் ராஜா. அதனுடைய காரியங்களையெல்லாம் கவனித்தான். அவனுடைய மனைவி சுதக்ஷிணை. அவளும் கையில் அக்ஷதைப் பாத்திரத்தோடு ஆசிரம எல்லைவரைக்கும் போய், பிரதக்ஷிணம் செய்துவிட்டுத் திரும்பி வருவாள். சாயங்காலம் மறுபடியும் அதே இடத்துக்குப் போய் நந்தினிக்குப் பூஜை செய்து ராஜாவோடு திரும்பி வருவாள்.

இரண்டு வேளையும் பசுவுக்கு முகத்திலே பூஜை செய்வார்கள்.

ப்ரதக்ஷிணீ க்ருத்ய பயஸ்விநீம் தாம்
ஸுதக்ஷிணா ஸாக்ஷத பாத்ர ஹஸ்தா |
ப்ரணம்ய சாநர்ச விசாலமஸ்யா:
ச்ருங்காந்தரம் த்வாரமிவார்த்த ஸித்தே: ||

ச்ருங்காந்தரம் த்வாரமிவார்த்த ஸித்தே:—அர்த்தமென்று சொல்லியிருக்கிறது. ஸித்தியென்று சொல்லவில்லை. ஸித்திக்கு வாயில்லென்று சொல்லியிருக்கிறது அர்த்த ஸித்தியினுடைய வழி—வாயில், இரண்டுகொம்புகளுக்கும் நடுவே உள்ள பாகம். அதற்குப் பூஜை செய்கிறாள். அப்படியென்றால் முகத்துக்குப் பூஜை பண்ணுகிறாளென்று அர்த்தம். அதனாலே பசுவும் ப்ரீதியாக இருந்தது. இவர்களும் ப்ரீதியாக இருந்தார்கள்.

பக்த்யோபபந்நேஷு ஹி தத்விதாநாம்
ப்ரஸாத சிந்ஹாநி புர: பலாநி |

அப்படி என்றால், பின்னாலே கிடைக்கப் போகிற பலத்தை இந்த ப்ரீதி முன்னாடியே தெரிவிக்கிறதாக இருந்தது என்று சொல்லியிருக்கிறது.

ஒரு நாள் இந்தப் பசுவானது திலீப மகாராஜாவைச் சோதனை பண்ண எண்ணி, அங்கேயுள்ள குகைக்குப் போயிற்று. போனவுடனே ஒரு சிங்கம் அந்தப் பசுமீது கர்ஜனையோடு பாய்ந்தது. இயற்கைக் காட்சியில் கவனமாக இருந்த ராஜா கர்ஜனையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். உடனே வில்லில் நாண் ஏற்றினான். அப்போது சிங்கம் சொல்லிற்று:

அலம் மஹீபால தவ ச்ரமேண ப்ரயுக்தமப் யஸ்த்ரம்
இதோ வ்ருதா ஸ்யாத் |

ஜகத்குரு

ஸ்ரீ சங்கரானந்தேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

''ந பாதபோந்மூலனசக்தி ரம்ஹ: சிலோச்சயே
மூர்ச்சதி மாருதஸ்ய ll

நீ எதற்காகச் சிரமப்படுகிறாய்? காற்றானது மலையை அசைக்க முடியுமா? அதனாலே என்னிடம் நீ சிரமப்பட

இது பார்வதி செல்லமாக வளர்த்த மரம் என்று சொல்லிவிட்டு அப்புறமும் சொல்கிறது. இந்த மரத்துக்குக் காவல்காரன் நான். சிங்க உருவில் இங்கே இருக்கிறேன். இங்கே என்கிட்ட வர்றதுதான் எனக்கு ஆகாரம்.

வேண்டாமென்று சொல்லியது. அப்புறம் தன் கதையைச் சொல்லியது. தான் யார் என்று சொல்லியது சிங்கம்.

கைலாஸ கௌரம் வ்ருஷமாருருக்ஷா:
பாதார்ப்பணானுக்ரஹ பூதப்ருஷ்டம்l
அவேஹி மாம் கிங்கரம் அஷ்டமூர்த்தே:
கும்போதரம் நாம நிகும்பமித்ரம்ll

''நிகும்பனுடைய மித்திரனான கும்போதரன் என்று (ராவணனுடைய தம்பி கும்போதரன் அல்ல. இவன் வேறு). என்னைத் தெரிந்துகொள். நான் பரமேசுவரனுடைய கிங்கரன், வேலைக்காரன். என் முதுகு மேலே காலை வைத்துத்தான் ஈசுவரர் காளை வாகனத்தின்மீது ஏறுவார்'' என்று சொல்லிற்று. அப்புறம் பக்கத்திலுள்ள ஒரு மரத்தைக் காட்டி, உன் எதிரிலுள்ள இதைப் பார் என்றது.

அமும் புர: பச்யஸி தேவதாரும்
புத்ரீ க்ருதோஸௌ வ்ருஷபத்வஜேநl
யோ ஹேமகும்ப ஸ்தனநிஸ்ருதாநாம் ஸ்கந்தஸ்ய
மாது: பயஸாம் ரஸக்ஞ:ll

ஸிம்ஹஸ்ய அங்காகத ஸத்வ வ்ருத்தி:

'இப்போது இந்தப் பசுவாகிற ஆகாரம் எனக்குப் போதும். என்கிட்டே என்ன வருகிறதோ, அதைத்தான் நான் சாப்பிடுவேன்' இது என்னைச் சேர்ந்தது. அதனாலே விடமாட்டேன்'' என்றது சிங்கம்.

ராஜா எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அது விடுகிற வழியாக இல்லை. ''நான் என்னையே உனக்கு ஆகாரமாத் தருகிறேன். நீ எடுத்துக்கொள். பசுவை விட்டுவிடு'' என்றான்.

''நீ சக்கரவர்த்தி. நீ உயிரோடு இருந்தால்தான் எல்லா ஜனங்களையும் காப்பாற்றலாம். ஒரே ஒரு பசுவுக்காக ராஜா உயிரை விடலாமா?'' என்று கேட்டது சிங்கம்.

சிங்கம் பின்னும் சொல்லிற்று:

சஸ்த்ரேண ரக்ஷ்யம் யதசக்யரக்ஷ்யம்
ந தத் யச: சஸ்த்ரப்ருதாம் க்ஷிணோதி ll

''எது வில்லினால் முடியாதோ அப்படிப்பட்ட விஷயத்திலே வில்லாளிகளுக்கு ஒன்றும் குறைவு வந்து

விடாது. அது உன் கீர்த்தியைக் குறைக்காது. நீ உன் குருபக்தியைக் காட்டிவிட்டாய். குருவிடம் உனக்கு இருக்கிற பக்தி போதும்'' என்று சொல்லியது.

''க்ஷத்திரியன் என்றால், ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறவன் என்று அர்த்தம். ஆபத்திலிருக்கும் இந்தப் பசுவைக் காப்பாற்ற முடியாத நான், க்ஷத்திரியனாக எப்படி ஆகமுடியும்? அதுவும் காமதேனுவுடைய பெண்ணான நந்தினி சாமான்யமான பசு அல்ல. இதற்கு ஈடு இணையே கிடையாது. என் வம்சம் விளங்க அநுக்கிரகம் செய்ய வேண்டிய பசு இது. இதைக் காப்பாற்ற முடியாத நான் உயிர் வாழ்ந்து என்ன பிரயோசனம்? குருவினுடைய கோபத்துக்கும் மக்களின் நிந்தைக்குந்தான் ஆளாகவேணும். அதனாலே, நானே உனக்கு ஆகாரமாகப் போகிறேன். பசுவை விட்டுவிடு'' என்றுசொல்லித் தலையைக் குனிந்துகொண்டு, சிங்கம் தன்மேலே பாயப் போகிறது என்று திலீபன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தான். அப்போது,

அவாங்முகஸ்யோபரி புஷ்பவ்ருஷ்டி:
பபாத வித்யாதரஹஸ்த முக்தா II

புஷ்ப வ்ருஷ்டியானது (மலர்மாரி) அவன் மேலே விழுந்தது. அப்போது எழுந்து நிமிர்ந்து பார்த்தான். அங்கே சிம்பம் இல்லை. அதற்குப் பதிலாக நந்தினி மட்டுந்தான் இருந்தது.

ராஜாவைப் பார்த்து நந்தினி சொன்னது: ''மாயையாலே உன்னைப் பரீக்ஷை பண்ணினேன். ரிஷி ப்ரபாவத்தினாலே—சக்தியினாலே—எமன்கூட என்னிடத்திலே ஒன்றும் பண்ண முடியாது.''

இதனாலே ரிஷிக்கு நிறையச் சக்தி உண்டு என்று தெரிகிறது.

''எனக்கு நீ நிறையப் பணிவிடை எல்லாம் செய்திருக்கிறாய்.

பக்த்யா குரௌ மய்யநுகம்பயா ச
ப்ரீதாஸ்மி தே புத்ரவரம்
வ்ரிணீஷ்வ I
ந கேவலாநாம் பயஸாம் ப்ரஸூதிம்
அவேஹி மாம் காமதுகாம்
ப்ரஸந்நாம் II

''குருவிடமும் என்னிடமும் நீ மிகவும் பக்தியாக இருந்திருக்கிறாய். உனக்கு அநுக்கிரஹம் செய்யும் வேளை வந்துவிட்டது. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்; புத்திர சந்ததியைக் கேள்; புத்ர வரம் வ்ரிணீஷ்வ'' என்றது. இங்கே இரண்டு அர்த்தம் இருக்கின்றன. புத்ர வரம் வ்ரிணீஷ்வ—புத்ர, ஹே குழந்தை, வரம் வ்ரிணீஷ்வ—உனக்கு வேண்டியதைக் கேள் என்று ஒரு அர்த்தம். நந்தினி, திலீபனைத் தன் குழந்தை (பிள்ளை) மாதிரி பாவித்துக் கேட்டது.

அது இல்லாமல் இன்னுமோர் அர்த்தமும் உண்டு; ராஜா, புத்திர சந்ததிக்காக வந்திருக்கிறான், இல்லையா? அதனாலே, ''புத்ர வரம் வ்ரிணீஷ்வ—பிள்ளை பிறக்க வேணும்—புத்திரன் உண்டாகவேணும் எனக்கு என்று கேள்'' என்கிறது நந்தினி.

ராஜா அதேபோலக் கேட்டான்.

''சரி, அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி, ஒரு தொன்னையில் பாலை ஏந்திக் குடி என்கிறது பசு. அவன் சொல்கிறான் ''நான் குருவினுடைய ஆஜ்ஞையை வாங்கிக்கொண்டு பாலைச் சாப்பிடுகிறேன்'' என்றான.

அப்புறம் குருவிடம் வந்து கேட்டான்.

''சரி, பிரசாதம் எடுத்துக்கொள், சந்ததி உண்டாகட்டும்'' என்று சொன்னார் வசிஷ்டர்.

இப்படியாக அவன் நந்தியினுடைய அநுக்கிரகத்தாலேயும் வசிஷ்டருடைய ஆஜ்ஞையினாலேயும் பாலைச் சாப்பிட்டான். இதனாலே என்ன தெரிகிறது என்றால், குருவினுடைய ஆஜ்ஞையோடுதான் எந்த ஒரு காரியத்தையும் செய்ய வேணும் என்று தெரிகிறது.

அப்புறம் திலீபன் ராஜ்யத்துக்கு வந்தான். இதற்கு முன்னடியே மந்திரிகளிடம் ஒப்படைத்திருந்த ராஜ்யப் பொறுப்பைத் தானே எடுத்துக்கொண்டான்.

அதற்கப்புறம் சுதக்ஷிணையானவள் கர்ப்பிணியானாள். ரகு மகாராஜன் பிறந்தான்.

இதனாலே, குருவினுடைய அருள்தான் நமக்கு நிரம்பவும் முக்கியம். அவருடைய அருளினாலேதான் திலீபனுக்குச் சாபம் நீங்கிப் புத்திர சந்ததியும் உண்டாகிறது. சாபம் மாதிரி கஷ்டம் நீங்குவதுமட்டும் அல்ல, புத்திர சந்தானம் போன்ற எல்லாச் செல்வமும் குருவினுடைய அருளாலே கிடைக்கும். அவருடைய அருள் இருந்தால் போதும். நாம் எதற்கும் கவலைப் பட வேண்டாம். அப்படிப்பட்ட அபயத்தைக் கொடுக்கக்கூடியவர்தாம் குரு.

—நாரியணா!

Where technology takes the reins...

The Power of technology is the power to respond to challenges for growth. Not just economic growth, but the upgrading of social prospects and a fostering of the right environment that holds a realistic promise for the future.

At Amalgamations, we have always endeavoured to harness technology in this spirit, and have come a long way since our highly finished and embellished brougham. Today our products and services touch many walks of national life. They include among others: Diesel engines, Tractors and farm equipment, a comprehensive range of auto ancillary products, Engineer's cutting tools, Paints, Transport services, Coffee and Tea, Books and Publishing.

Over the years in this continuous process of growth we have successfully sustained our technological lead by ceaselessly striving to keep abreast with the latest developments and adapting them to suit national goals and aspirations.



Amalgamations Limited
861, Anna Salai,
Madras-600 002

Simpson & Co. Ltd.
Addison & Co. Ltd.
Addisons Paints & Chemicals Ltd.
Amco Batteries Ltd.
Amalgamations Repco Ltd.
India Pistons Ltd.
Bimetal Bearings Ltd.
Indiapistons-Repco Ltd.
Shardlow India Ltd.
Tractors and Farm Equipment Limited
L.M. Van Moppes Diamond Tools India Ltd.
Reichhold Chemicals India Ltd.
The Wheel & Rim Co. of India Ltd.
Associated Printers (Madras) Ltd.
Associated Publishers (Madras) Ltd.
George Oakes Ltd., Madras.
George Oakes Ltd., (Bombay Operations)
Higginbothams Ltd.
The Madras Advertising Co. Ltd.
Simpson & General Finance Co. Ltd.
Speed-A-Way Ltd.
Sri Rama Vilas Service Ltd. Madras
Sri Rama Vilas Service Ltd., Kumbakonam.
T. Stanes & Co. Ltd.
Stanes Amalgamated Estates Ltd.
Stanes Motors (South India) Ltd.
Stanes Tyre & Rubber Products Ltd.
Indian Cashewnuts and Plantations Ltd.
The United Coffee Supply Co. Ltd.
The United Nilgiri Tea Estates Co. Ltd.
Wallace Cartwright & Co. Ltd., London
Malaysia Pistons Sdn. Bhd., Malaysia

MAC/AMAL/080 D

கண்ணைக் காக்கும் முறைகள்!



டாக்டர் எஸ். எஸ். பத்ரிநாத்

ஆண்டவன் படைத்த ஆறறிவில் பார்வையைத் தருகிற கண்ணானது மிகவும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். ஒவ்வொருவரும் இந்த முக்கிய உறுப்பினால் பெறுகின்ற பயனைக் கருதித்தான், அதற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டும்.

பொதுவாக மக்களில் பலர் பார்வைக்குக் கண்ணாடி அணிவதை விரும்புவதில்லை. தங்கள் குழந்தைகள் கரும்பலகையில் உள்ளவற்றைப் படிக்க இயலவில்லையென்றோ, அல்லது புத்தகத்தை முகத்துக்கு அருகில் வைத்துப் படிக்கின்றார்களென்றோ கேள்விப்பட்டால், பெற்றோர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகிறார்கள். இதற்குமுன் இதே பத்திரிகையில் வெளிவந்துள்ள கட்டுரையில் பார்வைக் குறையின் காரணங்களை மிக விரிவாகவும், அதற்குப் பயன்படும் 'ப்ளஸ்', 'மைனஸ்' கண்ணாடிகளின் தன்மைகளைப் பற்றியும் மிகத் தெளிவாக எழுதியுள்ளோம்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் ஆறறிவின் மூலமாகப் பயனடைவதற்கு வளரும் இந்தப் பருவமே தக்க சமயமாகும். இளமையில் கல்வி கற்பது மிகவும் இன்றியமையாததாகும். வளரும் பருவத்தில் கண்ணொளி சரியாக இல்லையெனில் முடமாகத்தான் கருதப்படுவர்.

பார்வையைச் சரி செய்யும் கண்ணாடிகளை அணிந்து கொள்ளும் எளிய முறையினால் வளரும் பருவத்தில் கல்வியறிவையும் நன்கு பெற முடிகிறது. கண்ணையும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

இந்த எளிய மருத்துவ உதவியைப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவசியமற்றதாக நினைப்பதால் பின்னால் அவர்களது எதிர்காலம் பாதிக்கப்பட்டுக் கண்ணின் நோயையும் பெரிது படுத்திவிடுகிறார்கள்.

பெண் குழந்தைகளின் பெற்றோர்கள்தாம் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். 'எப்படி அவள் மணம் புரிந்துகொள்வாள்?', 'ஏன், கல்யாணத்துக்குப் பின் கண்ணாடியைப் போட்டுக் கொள்ளட்டுமே!', 'ஐயே பாழாய்ப் போன 'பிரேம்' என் மகளின் முகத்தையே கெடுத்துவிடுமே!' இவை போன்ற பிரதிபலிப்புக்களை நம்மவர்களிடம் அடிக்கடி காண்கிறோம். கண் பார்வைக் குறைவைத் தங்கள் பெண்களிடம் அப்படியே விடுவதனால் அவர்கள் தங்களுக்குத் தேவையான மணமகனைக்கூட அழகாகத் தேர்ந்தெடுக்க முடியாமல் போகுமே! அப்போது என்ன செய்வார்கள்?

ஒரு தடவை என் நண்பரின் மகன் திருமணத்தின் போது அவர் எழுப்பிய சந்தேகம் என் நினைவுக்கு வருகிறது. அவர் மணமகனுக்கும் மணமகளுக்கும் உள்ள கிட்டப் பார்வைக் குறைவு, அவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைக்கும் வருமா என்ற கவலையானது அவரைத் துன்புறுத்திற்று. அவரது வருங்காலச் சம்பந்திகளிடமும் இதுபற்றி நேரடியாகவே கலந்தாலோசித்தார். உண்மையிலேயே ஒளிவு மறைவில்லாது கண் மருத்துவத்தின் பிரச்னைகளைத் திருமணத்துக்கு முன்பே பேசி முடித்த அந்த நண்பர் பாராட்டுக்குரியவரே.

நவநாகரிக இந்தியா விழித்துக் கொள்ளும் நேரம் இது. திருமணம் செய்பவர்கள் இனிமேல் குலம், கோத்திரம் பார்ப்பதைவிட மணமக்களின் கண்கள் நோயினால் பாதிக்காதவாறு உள்ளனவா என்றுதான் பார்ப்பார்கள்.

உயிரணுக்களின் மாறுபாடுகளால் உருவாகும் நோய்கள் குடும்பத்தில் ஒருவரைப் பாதிக்குமேயானால் அவை வழி வழியாக அந்தப் பரம்பரையைத் தொடர்ந்து வரக்கூடும். உதாரணமாக, பிறக்கும் குழந்தைக்குக் 'காடராக்ட்' எனப்படும் நோய் இருந்தால், அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் அதே நோயினால் அவதிப்பட்டவர்களாக இருக்கலாம். உயிரணுக்களின் வேறுபாடுகள்தாம் இதற்குக் காரணம்.



"மாலையிடுவது மணாளனா?"

'ரெடினோ ப்ளாஸ்ட்மா' என்னும் வியாதியானது 'ரெடினா'வில் உருவாகும் கொடிய புற்றுநோயாகும். இது பொதுவாகக் குழந்தைகளை அதிகம் பாதிக்கும். இது அதிகமாக முஸ்லீம் இனத்தில்தான் காணப்படுகிறது. அவர்களில்தான் பலர் உறவுக்குள்ளேயே திருமணம் புரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆகவே இதுபோன்ற கொடிய வியாதியினால் பாதிக்கப்படுகின்றவர்கள் உயிரணுக்களின் வளர்ச்சியைப் படிக்கத் தெரிந்த வல்லுநர்களிடம் ஆலோசனை பெறுதல் சாலச் சிறந்தது. இதுபோன்ற வசதிகள் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் (ஹைதராபாத்) கிடைக்கின்றன.

பார்வைக் குறைவின் இயல்புகளையும், அவை காரணமாக வருந்துபவர்களையும் பற்றி முன்பு சொல்லியுள்ளோம். ஏறிக்கொண்டே போகும் 'லென்ஸ் பவரை' நிறுத்த ஏதாவது வழியுண்டா எனப் பலர் கேட்கிறார்கள். அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்: குழந்தைகள் பெறுவதைத் தாங்களே தடுக்க வழியுண்டா? அதுபோல் குழந்தைகள் வளர்வதைப் போல 'லென்ஸ் பருவம்' அதிகப்பட்டுக்கொண்டேதான் போகும். குழந்தைக் கட்டுப்பாட்டுத் திட்டம்போல் கண்ணாடிகள் அணிந்து தான் அதிகரிக்கும் பவரைக் கட்டுப்படுத்த இயலும்.

அடுத்த கேள்வி: ''என் குழந்தைக்குக் 'கான்டாக்ட் லென்ஸ்' போடலாமா?'' பொதுவாகக் கல்யாணமாகக்கூடிய பெண்கள் கான்டாக்ட் லென்ஸினால் அதிகப் பயனடைகிறார்கள். சீக்கிரம் அவர்களால் கற்றுக் கொள்ளவும் முடிகிறது. ஆரம்பத்தில் கான்டாக்ட் லென்ஸ் உபயோகிப்பவர்களுக்கு உயர்ந்த முறையிலான பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட நேரத்தைத் தவிர அதிக நேரம் அவற்றை உபயோகிக்க முடியாது. அவற்றை அணிந்துகொண்டு

தூங்கக்கூடாது. கண் சிவந்தாலோ, வலி இருந்தாலோ கண் மருத்துவரின் பார்வைக்கு அவர்கள் கொண்டு வரப்பட வேண்டும். விளையாடும் போதும், போட்டிகளில் கலந்து கொள்ளும்போதும் அவற்றை உபயோகிக்கலாம். நீச்சல் சமயத்தில் கழற்றிவிட வேண்டும்.

'யாரை அழைக்கிறது பார்வை!"

ஆவல் 'காரணமாகப் பெற்றோர்கள் அளவுக்கு மீறிய உணவுகளையும், வைட்டமின் மாத்திரை மருந்துகளையும் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பது தேவையற்றதாகும். அன்றாடம் உட்கொள்ளும் உணவிலேயே உடலுக்குத் தேவையான எல்லாம் அடங்கியுள்ளது. வைட்டமின் ஏ தனியாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாரும் விரும்பிக் கொடுக்கும் 'காட்லிவர்' ஆயில்கூட அநாவசியமானதுதான்.

கீரை, காரட், மீன், முட்டை, பால் போன்ற உணவுப் பதார்த்தங்களில் வேண்டிய அளவு வைட்டமின் ஏ இருப்பதால், தினமும் காரட் ஜூஸ் சாப்பிட்டால்தான் கண்கள் பாதுகாப்பாக இருக்கும் என்ற மூட நம்பிக்கைகளை விட்டொழிப்பது மேல். அதிகப்படியான வைட்டமின் ஏ கொடுப்பதால் தீங்கு நேரிட வாய்ப்புண்டு.

கண்களை அலங்கரிப்பது தவறல்ல. அதற்கு உபயோகிக்கும் அலங்காரப் பொருள்கள் உயர்ந்த வகைகளாக இருப்பது சாலச் சிறந்தது. கண்களில் எரிச்சல், சிவப்பாகிவிடுதல் அல்லது கருவிழியில் புண் போன்றவை ஏற்பட்டால் கண்களுக்கு அலங்காரம் தீட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். ஒரு நம்பிக்கை: கேசத்துக்கு 'டை' அடிப்பதால் கண்கள் பாதிக்கப்படுவதில்லை. வளர்ந்து வரும் பல் வைத்திய முறைகளினால் கண்கள் எவ்வித ஆபத்துக்கும் ஆளாவதில்லை.

சாதாரணமாகக் குழந்தைகளின் கண்கள் பாதிக்கப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். அம்பு விளையாட்டு மிகவும் கொடிய ஒன்றாகும். கில்லி தாண்டல், வெடி விபத்து துடைப்பக்குச்சி விளையாட்டு, பென்சில், 'காம்பஸ்' பாக்ஸ் விபத்து. போன்றவை சில உதாரணங்களாகும். எப்போதாகினும் மேற்கண்ட விளையாட்டுகளினால் கண் குத்திப் பாதிக்கப்படுமானால் தீர்க்க முடியாத கொடிய வியாதிகள் ஏற்பட ஏதுவாகும்.

காடராக்ட், க்ளாக்கோமா, ரெடினல் டிடெச்மெண்ட், என்ட்டாப்தால்மிடிஸ் போன்ற வியாதிகள் மேற்கண்ட வகையைச் சார்ந்தனவாகும். அறுவைச் சிகிச்சை மூலம் ஓரளவிற்குத்தான் குணப்படுத்த இயலும்.

இரசாயனப் பொருள்களால், அதாவது அமிலம், திராவகம் போன்றவற்றால் கண்ணுக்குத் தீங்கு ஏற்படுமானால் அதற்கு உடனே செய்து கொள்ளக்கூடிய முதலுதவி, நிறையத் தண்ணீரை அள்ளித் தெளித்துக் கொள்வது மேலானதாகும். ஒருவர் கண்ணிமைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வேகமாக வெளிவரும் குழாய் மூலம் தண்ணீரைக் கண்களில் படுமாறு செய்தால் ரசாயனப் பொருட்களைக் கண்களிலிருந்து வெளியேற்றிவிடலாம். அவ்வாறு உடனடியாகச் செய்யத் தவறி, காலதாமதம் ஏற்படுமெனில் ரசாயனத் துகள்கள் கண்களில் தங்கி மருத்துவ உதவியை நாடிட நேரிடும். சமயத்தில் குணமாக்க முடியாத சூழ்நிலைகூட ஏற்படலாம்.

மேற்சொன்ன விபத்துக்கள் குழந்தைகளுக்கோ வேலை செய்யும் எந்த மனிதருக்கோ ஏற்படாது தடுத்திட வேண்டுமெனில், அதற்குரிய கண்ணாடிகளை அணிய வேண்டும். அவ்வாறு காயப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கேற்றவாறு பிளாஸ்டிக் அல்லது கீறல்கள் விழாதவாறு தாங்கும் சக்தி படைத்த கண்ணாடிகள் வெளியில் கிடைக்கின்றன.

விட்டிலே பாட்டி சொல்லக் கேட்கலாம். 'பேரனுக்கு ஏற்பட்டுள்ள கருடப் பார்வை பாட்டனுக்கு இருந்ததுபோலத் தோணுவதால் அதிர்ஷ்டந்தான் வரப்போகிறது' என்பார். கருடப் பார்வை காரணமாக அந்த முதியவர் ஒரு கண் பார்வையை வாழ்க்கை முழுவதும் இழந்து வாழ்ந்ததைப் பாட்டி அறியாததே அது மாதிரி வீண் நம்பிக்கைக்குக் காரணம். கண்ணைச் சுருக்கிக் கருடப் பார்வை பார்ப்பது கண்ணொளி போனதன் அறிகுறி. எனவே அதுபோன்ற அறிகுறி உங்கள் குழந்தைக்குக் காணப்பட்டால் உடனே டாக்டரிடம் செல்லவும். விரிவான சோதனைகள் செய்த பின்னர்க் கண்ணாடி போடச் சொல்லலாம்; மருந்து கொடுக்கலாம்; பயிற்சிகள் தரலாம்; அறுவைச் சிகிச்சைகூடச் செய்யலாம்.

'பொரை' வளர்ந்து முதுமையால் வரக்கூடிய நோய். அது வளரும் நிலையிலேயே பாதுகாப்பாக எடுத்துவிடலாம். எந்த விதத்திலும் மருந்தினால் அதைக் குணப்படுத்த இயலாது. எந்த விதத்திலும் நமது வயதை எப்படிக் குறைக்க முடியாதோ, அதுபோலத்தான். நவீனக் கருவிகள் கொண்டு அறுவைச் சிகிச்சை மூலம் இப்போது அதை அகற்றிவிடலாம்.

'க்ளாக்கோமா' என்னும் நோய் கண்ணில் உள்ள நரம்பு பாதிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய ஒன்று. கண்ணில் உள்ள உள்ளழுத்தம் அதிகப்படியாக உந்தப்படுவதால் வரக்கூடியது இது. கண்ணழுத்தத்தை, 'இரவில் திருடன்' (Night Thief) என்று சொல்வார்கள்.

40 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் கண்ணழுத்தத்தை அதற்கென்று உரிய 'டோனா மீட்டர்' கருவி மூலம் சோதனை செய்துகொள்ள வேண்டும். இரு வருடங்களுக்கு ஒருமுறை பார்த்துக் கொள்வது நல்லது. குடும்பத்தில் யாருக்காவது 'க்ளாக்கோமா' இருக்குமானால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்வது பாதுகாப்பானதாகும்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் மிக முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், சர்க்கரை ரத்தத்தில் அதிகம் இருக்கிறது என்பதைத் தெரிந்த நாளிலிருந்து தொடர்ந்து அதற்கான சிகிச்சையைச் செய்து கொண்டாலொழிய எதிர்காலம் சீரும் சிறப்புமாக அமைய முடியாது. சர்க்கரை வியாதியுள்ள குடும்பங்கள் ஒன்றுக்கொன்று திருமண உறவு வைத்துக் கொள்வது கூடாது. அதோடு கண்களை டாக்டரிடம் காட்டி, கண்ணின் பின்பாக உறுப்புக்கள் 'டையபடிக் ரெடினோபதி' என்ற வியாதியால் பீடிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தகுந்த சிகிச்சை மூலம் கண்ணின் உள்ளுறுப்பான 'ரெடினா' பாதிக்கப்படாமல் காத்திட வழியுண்டு.

"டாக்டர், கண்ணாடி போட்டா கல்யாணம் நடக்குமா?"

உங்கள் கண்கள் உங்களுக்கு எதிரியாக மாறாதிருக்க வேண்டுமானால் நீங்கள் உங்கள் கண்களுக்கு நெருங்கிய நண்பனாக எப்போதும் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதோடு உங்கள் கண்கள் நீங்கள் இறந்த பின் பிறருக்கு நண்பனாக இருக்க விரும்புவீர்களானால் இன்றே, இப்போதே புறப்படுங்கள், 'கண் தான வங்கி' நோக்கி. இறந்தும் பிழைத்திட இது ஒரு தக்க தருணம்.

*

இந்த மிக உறுதியான வாட்டர் ஹீட்டர் மிகப் பாதுகாப்பானதும் ஆகும்!
VOLTAS
VEELINE
வீலன் வாட்டர் ஹீட்டர்
விட்ரியஸ் எனுமலிங் இதற்கு உறுதியும் நீண்ட கால உழைப்புத் திறனையும் அளிக்கிறது:
விட்ரியஸ் எனுமல் செய்யப்பட்ட விசேஷ எஃகு உட்கலம் வீலன் வாட்டர் ஹீட்டர்களை துரு எதிர்ப்பவையாக்குகின்றது. உலகப் புகழ் பெற்ற, நீண்டகால பரிசோதனை செய்யப்பட்ட தனிப்பட்ட தொழில் முறையாகிய விட்ரியஸ் எனுமலிங் இந்தியாவில் முதல் முறையாக செயல்படுகிறது. அதுவே வீலன் வாட்டர் ஹீட்டர் நீண்ட உழைப்பைத் தருவதாக்குகிறது.
மூன்று விசேஷ பாதுகாப்பு அம்சங்கள்:
ஒரு ப்ரெஷர் ரிலீஸ் வால்வ். ஒரு தெர்மோஸ்டாடிக் டெம்பரேச்சர் கண்ட்ரோல். அத்துடன் அளவுக்கு மீறிய உஷ்ணம் ஏற்படுவதைத் தடுக்க உருகக்கூடிய ஒரு ப்ளக்.
பரவலான அணிவகுப்பு
5, 15, 25,35,50 மற்றும் 70 லிட்டர் கொள்ளளவில் கிடைக்கிறது.
விசேஷச் சிறப்பு
எல்லா மாடல்களுமே (5 லிட்டர் தவிர) இடமிருந்து வலமாகவோ அல்லது மேலிருந்து கீழாகவோ பொருத்த வசதியானவை.
இணையற்ற தரம்
வோல்டாஸ் நிறுவனத்திற்கே உரிய பல வருட பாரம்பரியத் தரச்சிறப்பு கொண்டவையாகும் வீலன் வாட்டர் ஹீட்டர்கள்.
விற்பனைக்கு விடுப்போர்:
வோல்டாஸ் லிமிடெட் அப்ளையன்ஸெஸ் டிவிஷன்
19, ஜே.என். ஹெரெடியா மார்க், பலார்ட் எஸ்டேட், பம்பாய் 400 038.
வீலன் வழங்குவோர் வோல்டாஸ்
CASV-317-203 TAM

குடை மங்கலம்

கி.ஸ்ரீதரன்

வீதி உலாவில் குடை

நம் வாழ்க்கையில் உபயோகப்படும் ஒரு முக்கியமான பொருள் குடையாகும். இது ஒரு சாதாரண மான பொருள்தான். ஆனுல் வரலாறு மற்றும் கலைச் சிறப்பில் குடை பற்றிப் பார்ப்போமானுல், அது ஒரு முக்கியமான இடத்தைப் பெற்று வந்திருக்கிறது என்பதை அறியலாம். சங்க இலக்கியங்களில் இதன் பெருமை கூறப்படுகிறது. கோயில்களுக்குக் குடையைச் செய்து தானம் அளித்துள்ளதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. பண்டைய சிற்பங்களிலும், ஓவியங்களிலும் குடையைச் சித்திரிப்பது முக்கியத்துவம் வாய்ந்திருக்கிறது. இதனுல் குடையின் வடிவமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களை அறியலாம். 'திருப்பதி குடை' சிறப்பைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அலங்கரித்த குடைகளை ஊர் வலமாக எடுத்துச் சென்று, புரட்டாசி மாதத்தில் பெருமாளிடம் சேர்ப்பிப்பார்கள்.

அரச சின்னம் : பண்டைக் காலத்தில் குடை அரச சின்னமாகக் கருதப்பட்டது. அரசனின் முடி புனை விழாவில் 'வெண்மையான குடை' அளிக்கப்பட்டதாகக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது. குடை அரச உரிமையைக் குறிப்பது என்ற பொருளில் புறநானூறு 'கொற்ற வெண்குடை' என்று குறிக்கிறது. சேரன் செங்குட்டுவனை 'மாலை வெண்குடை மன்னன்' என்று சிலம்பு கூறுகிறது.

குடிமக்களுக்கு ஏற்படும் துன்பங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றித் தன் அருட்குடையின் கீழ் அரசர்கள் கொண்டு வரவேண்டும். இதைப் பற்றி வெள்ளைக்குடி நாகனுர் என்னும் சங்க கால புலவர் 'வளவ, நின்னுடைய குடை வெயில் மறைப்பதற்காகக் கொள்ளப்பட்டதா என்றுல் இல்லை. வருத்தமுற்ற குடியை நிழற்செய்தல் காரணத்தால் கொள்ளப்பட்டது என்பதை, 'வியன் குடை வெயில் மறை கொண்டன்றே அன்றே வருந்திய குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ என்று பாடுகின்றுர்.

மக்களின் வருத்தத்தைப் போக்கும் சின்னமாக இது கருதப்பட்டதால் குளுமை நிறைந்தது என்று புலவர்களால் பாடப்பட்டது.

'தொல்குல மாமதி போல் பனி முத்திலங்குங்குடை மன்னன்' என்று நெடுமாறன் புகழப்படுகிறுன். (பாண்டிக் கோவை — 131) கடும் வெயில் அடித்தாலும், பெரும் மழை பெய்தாலும் கொடிய காற்று வீசினுலும் தடையின்றி மக்களைப் பாதுகாக்க வல்லது நெடுஞ் சேரலானது குடை என்று பதிற்றுப்பத்து (17) கூறுகிறது.

கிள்ளிவளவனது குடையானது கடலால் சூழப் பெற்ற இந்த உலகம் முழுவதும் சோழ அரசை நிலை நாட்டி, அமைதி பெறுமாறு அருள் நிழல் தரும் என்று முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்று குறிக்கிறது.

மந்தரங் காம்பா மணிவீசும்
போலையாத்
திங்கள் அதற்கோர் திலகமா—
எங்கணும்
முற்றுநீர் வைய முழுதும் நிழற்
றுமே
கொற்றப் போர்க் கிள்ளி குடை

கல்வெட்டுக்களில், செப்பேடுகளில்:

மேற்கூறிய கருத்தினைக் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் வலியுறுத்துகின்றன. அதிராஜேந்திரனின் கல்வெட்டு 'திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டிய மன்னுயிர் தோறும் இன்னருள் சுரந்து நிரை நிழல் பரப்பி' எனக் குறிக்கிறது. மக்களைப் பெற்ற தாயினும் சிறக்கக் காக்கவல்லது என, 'பன் மணிக் கொற்ற வெண்குடை நிழல் குவலயத்து உயிர்களைப் பெற்ற தாயினும் பேணி'' என்று வீரராஜேந்திரன் கல்வெட்டுக் கூறுகிறது.

''அகில புவனமும் களிப்பதோர் புதுமதிபோல வெண்குடை மீமிசை நிழற்ற'' என்று விக்கிரமசோழன் மெய்கீர்த்தியும், ''திங்கள் வெண்குடை திசைகளெட்டுந்தாங்கும் தனிக் கூடந்தான் என விளங்க'' என்று இரண்டாம் இராஜராஜனின் மெய்கீர்த்தியும் கூறுகின்றன.

'குளிர் வெண் குடை மண் காப்ப' என்று பாண்டியரின் வேள்விக் குடிச் செப்பேடு குறிக்கிறது. வெண் குடை இருநில வளாகம் எங்கணும் தனது இரு நிழல் வெண்ணிலாத்திகழ என்று முதற்குலோத்துங்கனின் மெய்கீர்த்தி கூறுகிறது.

மன்னன் குடைக் கீழமர்ந்து அரசாண்டதை 'வெண்குடை நிழற்கீழ் செங்கோலோச்சி' என்று குலோத்துங்கனின் மெய்கீர்த்தி கூறுகிறது.

மன்னனின் ஆட்சி எதுவரை பரந்து நின்றதோ அது வரையிலும் மன்னனின் குடை நிழல் அளித்தது என்று புலவர் சிறக்கப் பாடுவார். விக்ரம சோழன் மெய்கீர்த்தி, சந்திரன், சூரியன் வரையும் அவன் குடை நிழல் பரவியது என்று குறிக்கிறது.

தெய்வ வழிபாடு நடக்கும் இடங்களில் அரசனது குடை தாழ்த்திப் பிடிக்கப் பெறும். பிற இடங்களில் உயர்த்திப் பிடிக்கப்படும். பல்யாக சாலை முதுகுடுமி பெருவழி சிவபெருமானின் கோயிலை வலம் வரும் பொழுது அவன் குடை தாழ்த்திப் பிடிக்கப்பட்டது.

தின்குடை முனிவர் முக்கட்செல்
வர்நகர் வலஞ்
செயற்கே இறைஞ்சுக பெரும.
(புறம் —6)

ஒரு மன்னன் மாற்றரசர் மீது படையெடுக்கப் புறப்படும் போது நல்ல வேளையில், நல்ல நாளில் குடை, வாள், முரசு ஆகியவற்றை வடதிசையில் பெயர்த்து வைப்பது மரபு. 'வாருங்குடையும் வடதிசைப் பெயர்க'என்று செங்குட்டுவன் ஆணயிட்டதாகச் சிலம்பு கூறுகிறது.

போரில் ஒரு மன்னனது குடை வீழ்ந்தால் அவன் தோற்றுன் எனக் கருதப்படும். பெருஞ்சேரலிரும்பொறை என்ற மன்னன் சோழ பாண்டியரை வென்று அவர்களுடைய முரசும், குடையும், கலனும் கொண்டான் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது.

பல்லவ மன்னன் பரமேசுவரீ வர்மன், சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தனுடன் கடும் போரிட்டபோது பல்லவ மன்னர் வெற்றி பெற்ருன். மாற்றரசனுடைய குடை சிதறியது என்று கூரம் செப்பேடு கூறுகிறது.

தலைக்கோல்: போரில் மாற்றரசர்களை வென்று அவர்களிடமிருந்து கவர்ந்த கொற்றக் குடையின் காம்புகளைத் தலைக் கோலாகச் செய்வது வழக்கம். தலைக்கோலின் கண்கள் தோறும் நவரத்தினங்களால் கட்டி, இடைப் பகுதியைப் பொன் தகட்டால் கட்டுவர். நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளும் நாளன்று, அதற்கு நீராட்டி. மாலை சூட்டி. அரங்கில் கொண்டு வரப்பட்டு, பின்பு நாட்டிய மகளுக்குத் தலைக்கோலி என்னும் பட்டம் அளித்தல் மரபு இருந்து வந்ததாகச் சிலம்பு கூறுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த குடையைப் பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தமிழகக் கோயில்களில் உள்ள சிற்பங்களிலும், ஓவியங்களிலும் சிறப்பாகச் சித்திரிக்கப் படுகிறது.

பல்லவர் காலம்: 'இக்காலச் சிற்பங்களில் இறைவன் அல்லது தேவியின் தலைக்கு மேலே குடை இருக்கும். அல்லது யாராவது ஒருவர் பிடித்துக் கொண்டிருப்பது போலக் காட்டப் பெறும். கைலாசநாதர் கோயில், மாமல்லை ஆகிய இடங்களில் இத்தகைய சிற்பங்களைக் காணலாம். தென் ஆர்க்காடு மாவட்டம் பனைமலையில் இராஜசிம்மன் காலத்து ஓவியங்கள் உள்ளன. இறைவன் சம்ஹார தாண்டவம் ஆடும் காட்சி ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. பக்கத்துச் சுவரில் அவர் ஆடலில் மெய் மறந்து நிற்கும் அன்னையின் திரு உருவம் தீட்டப்பட்டுள்ளது. ஒரு காலை மடித்துப் பூங்கொடி என நிற்கிருள் அன்னை. அவளின் தலைக்கு மேல் அழகான வண்ணக்குடை உள்ளது. அதன் விளிம்பிலிருந்து தொங்கும் தொங்கல்கள் முதலியவை அழகுறத் தீட்டப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைக்கு இவை எடுத்துக் காட்டாகும்.

சோழர்காலம்: முற்காலச் சோழர் காலத்திலும் சிற்பங்களின் மேலே சிறிய குடை காட்டப் பெற்றிருக்கும். புள்ள மங்கை, சக்கரப் பள்ளி, தஞ்சைப் பெரிய கோயில் முதலிய இடங்களில் இத்தகைய சிற்பங்களைக் காணலாம். இராஜராஜ சோழன் காலத்து ஓவியங்கள் தஞ்சை பெரிய கோயில் கருவறையைச் சுற்றியுள்ள பாதையில் தீட்டப்பட்டுள்ளன. அதில் சுந்தரமூர்த்தி நாயனரைத் தடுத்தாண்ட புராணம் ஒன்று ஆகும். சுந்தரருக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவர் திருமணத்தைத் தவருது ஆட்கொள்ள வருகிருன், இறைவன், ஒரு வயதான அந்தணர் வடிவில். அப்பொழுது அவர் வடிவை,

முக்குடை பகவான் கோயில், கரந்தை

''காதலணி கண்டிகை வடிந்த
குழை தாழச்
சோதி யணி மார்பின் அசை
நூலினெடு தோளின்
மீது புனை உத்தரிய வெண் துகில்
நுடங்ங
ஆதவம் மறைக்குடை அளிக்
கரம் விளங்க''

எனச் சேக்கிழார் வர்ணித்துச் செல்கிருர். சோழர் காலக் குடைகளுக்கு இவை எடுத்துக்காட்டாக அமையும்.

பிற்காலச் சிற்பங்களில் இறைவன் அல்லது தேவி தலைமீது



குடை அலங்காரத்துடன் தெய்வத் திருவுருவங்கள்

குடை காட்டப்பெறுவது குறைந்து விட்டதைக் காணலாம். ஆனால் ஓவியங்களில் குடை சித்திரிக்கப் படுவது நாயக்கர் கால ஓவியங்கள் வரை தொடர்கின்றன. இறைவன் அல்லது மன்னனைக் காண்பிக்கும் பொழுது அவன் தலைக்கு மேலே குடை காட்டப் பெறும்.

இறைவனை வாகனங்களின் மீது வைத்து வீதியுலா செல்லும் நேரங்களில் குடை முன்னால் தூக்கிச் செல்லப்படுவதைக் காணலாம். அழகர் கோயிலில் (மதுரை) நாயக்கர் காலத்தைச் சேர்ந்த ராமாயண ஓவியங்கள் காணப்படுகின்றன. சிறு வயதில் இராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன் ஆகிய நால்வரும் விளையாடச் செல்கிறார்கள். ஒவ்வொருவர் தலைக்கு மீதும் அழகிய சிறிய வண்ணக் குடைகளைச் சேடிப் பெண்கள் பிடித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு காட்சி தீட்டப்பட்டுள்ளது.

குன்றெடுத்து ஆநிரை காத்த ஆயன்:

இந்திரன் ஆற்றலில் மிக்கவன் என்பதால் அவனுக்கு விழா எடுத்தனர் ஆயர்குலத்தோர். அவனுக்கு அப்பூசை செல்லாது தடுத்து நிறுத்தினான் கண்ணன். ஆதலால் வெகுண்டு ஆயர்பாடியில் கல்மாரி பொழிந்தான் அமரர் கோன். ஆயர் குடியும் அல்லலுறாமல் தடுக்க கோவர்த்தன கிரியைக் குடையாகத் தாங்கினான். ஆயர் மக்கள் அனைவரும் அம்மலைக் கீழே தங்கினர். இந்தக் காட்சியைப் பாறையில் சிற்பமாக வடித்தான் ஒரு சிற்பி. இதைக் காண மாமல்லபுரம் (கிருஷ்ண மண்டபம்) செல்ல வேண்டும்.

இக்காட்சியை,

‘குன்று குடையா எடுத்தாய் குணம்
போற்றி —ஆண்டாள்
குன்று எடுத்து ஆநிரை காத்த
பிரான்’

என்று பெரியாழ்வாரும்

இந்திரனுக்கு என்று ஆயர்கள்
எடுத்த
எழில் விழாவில் பழிநடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது
மழை பொழிந்திட தளர்ந்து ஆயர்
எந்தம்மோடு இள ஆநிரை தளரா
எம்பெருமான் அருள் என்ன [மல்

‘அந்தம் இல்வரையால் மழை தடுத்தான்’ என்று திருமங்கையாழ்வாரும் போற்றுகின்றனர்.

மன்னர்கள் கோயிலுக்குக் குடை செய்து தானமளித்ததைப் பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜராஜன் தஞ்சைப் பெரியகோயிலுக்குத் திருக்கொற்றக்குடை தானமளித்தான். அது எவ்வாறுசெய்யப்பட்டது, அதன் எடை என்ன என்பன பற்றிக் கல்வெட்டு பின்வருமாறு குறிக்கிறது.

‘‘திருக்கொற்றக்குடை மகுடம்
மொட்டு அடுத்து
விளக்கின பறனை உள்பட ஒன்று,
பொன்
பதினைங் கழஞ்சரையே இரண்டு
மஞ்சாடியுங்’’

திருமழபாடி கோயிலுக்கு முத்துக்களால் ஆன குடை தானமாக அளிக்கப்பட்டது. அதில் எவ்வகையான முத்துக்கள், எவ்வளவு முத்துக்கள் கோக்கப்பட்டிருந்தன என்று கல்வெட்டுக் கூறுகிறது.

ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வண்ணக் கற்கள் பதித்த பொன்னால் ஆன குடை ஒன்று விஜயரெங்க சொக்கநாத நாயக்கனால் தானமளிக்கப் பட்டது. இது அக்குடையின் மீது தெலுங்கில் பொறிக்கப்பட்டுள்ளது. இன்றும் அந்தக் குடை இந்தக் கோயிலில் உள்ளது.

சமண சமயத்தில் தீர்த்தங்கரரின் சிற்பங்களில் தலைக்கு மேலே முக்குடை இருக்கும். இவரை ‘முக்குடை பகவான்’ என்றே கூறுவார்கள்.

புத்தர் இறந்ததின் நினைவாக எடுக்கப்பட்டுள்ள ஸ்தூபங்களின் மீது மூன்று விதமான குடைகள் இருக்கும்.

பிள்ளையார் சதுர்த்தி அன்று களிமண் பிள்ளையாரின் தலைக்கு மேலே வைப்பதற்காக எவ்வளவு விதமான வண்ணக் குடைகள் தயாராகின்றன. இன்றும் குடைகள் கோயில்களுக்குத் தானமாக அளிக்கப்படுகின்றன. இன்றைய வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் குடை மழைக் காலத்திலும், வெயிற் காலத்திலும் இன்றியமையாத பொருளாக விளங்குகிறது. *

For Better Grinding Use

Rock Fort Grinding Wheels

ROCK FORT

MANUFACTURERS:

M|s Abrasives and Chemicals

TIRUCHIRAPALLI-620 010

SOLE SELLING AGENTS:

M|s Shakir Steel & Tolls

No. 4, WEST BOULIWARD ROAD, TIRUCHIRAPALLI-620 008

—Kavitha



ஏழை மக்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் பணியில்....

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்



முயற்சிகள்

வாரியம் 1983-84 ஆம் ஆண்டில் 20,000 குடியிருப்புகளை சுமார் 40 கோடி செலவில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதில் 10,600 குடியிருப்புகள் பொருளாதாரத்தில் பின் தங்கியோர்க்காக கட்டப்படுகிறது.

ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் சுமார் 552 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,50,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

HB-157-TAM

என வாழ்த்துகிறது
கரூர் வைஸ்யா பாங்க்

இவ்வாறு வாழ்த்துவதுடன் நின்று-
விடாமல், நமது மக்களின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கென செயலும்-
புரிகிறது கரூர் வைஸ்யா பாங்க்.
வருங்கால வளமான வாழ்க்கைக்கு
ஆதாரமான சேமிப்பு முயற்சிகளை
பல வழிகளில் ஊக்குவிக்கிறது.
விவசாயம், தொழில்துறை, சுயவேலை-
வாய்ப்பு, மற்ற பயனுள்ள நடவடிக்கை-
களுக்கு கடனுதவி அளித்தும்
உதவுகிறது. வளம் பெருக்கும்
பணியில் ஈடுபட்டுள்ள நாங்கள்,
இந்த தீபாவளித் திருநாள்
கோலாகலம் என்றும் நிலைத்திருக்குமாக
என்று வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.


கரூர் நகரில் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்ட எமது புதிய மத்திய அலுவலகக் கட்டிடம்.

கரூர் வைஸ்யா வங்கியின்
மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு & மத்திய அலுவலகம்: கரூர்-639 002

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் புரிய அங்கீகாரம் பெற்றவர்கள்

G. வெங்கடேசம், சேர்மன்

CO.M83.25 Tm.

வசுந்தரா என்...

ஸ்ரீ வேணுகோபாலன்

ஞாயிறுகளில் அப்பா என்னை இழுத்துப் பாதி வெளிச்சக் கூடத்தில் உட்காருவார். கீல் விட்டிருந்த பெட்டியிலிருந்து பழைய வயலினை எடுத்து மடிமீது செல்லமாக வைப்பார். சடங்கு செய்வது போன்ற சிரத்தையுடன் வில்லை எடுத்துத் தமது துண்டில் துடைத்து, தந்திகளில் மிருதுவாக இழுப்பார். இரண்டு மூன்று இழுப்புகளுக்குப் பிறகு சுநாதம் வர ஆரம்பிக்கும்.

மத்தியமாவதி அவருக்கு நிரம்பப் பிடிக்கும். மெய்ம்மறந்து கண்ணை மூடி வாசிப்பார். லால்குடிதான் அவருக்கு ஆதர்சம். ஆலாபனையை லால்குடி பாணியில் இழுக்கப் பார்க்கும்போது, அவர் நினைத்த கற்பனை தந்தியில் வராது. தப்பும் தவறுமாக வரும். கழுதை ராகம் கூட வரும். நான் சிரிப்பை அடக்குவேன். அப்பா அதில் ஈடுபட்டு இருப்பார். சரியான ஆலாபனையைச் சீட்டி அடித்துப் பாடுவார். அது அவர் வாசிப்பின் தப்பை மறைப்பதுடன் ராகத்துக்கு அழகான ஓர் இனிமையைக் கொடுக்கும்.

ஒரு மணி நேரம் என் பொறுமையைச் சோதித்துவிட்டு வில்லைக் கீழே வைப்பார். ''அந்த நாள்லே எனக்குச் சொல்லிக் குடுக்க ஆள் இல்லேடா! இல்லாட்டா இப்போ லால்குடியை 'பீட்' பண்ணுவேன்'' என்பார்.

பொய்க் கவனத்தோடு கேட்பேன்.

''நீ இப்போ ஆரம்பிடா; சீக்கிரம் பிரபலம் ஆயிடுவே'' என்பார்.

விநயத்தோடு கேட்பேன். என் கண் முன்னால் நான் கச்சேரி செய்யும் காட்சி தெரியும். ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம், கைதட்டல், புகழ்மாலை எல்லாம் பரிமளிக்கும்.

ஆனால் என் கற்பனை ஆர்வம் இருக்கும் அளவுக்கு எனக்கு அப்பியாசம் கிடையாது. வயலின் எனக்கு வேப்பங்காய். பாகவதர்களை எனக்குப் பிடிக்காது. ஆலாபனை எனக்குப் பெரிய அறுவை.

அப்பாவுக்காக வாசிப்பேன்.

சரளி வரிசையில் மாதக் கணக்காகத் தங்கி இருந்தேன். நேற்று வாசித்தது இன்று மறந்துவிடும். சங்கீதம் எனக்கு ஞொய் ஞொய் காட்டிக் கொண்டிருக்கும். சீக்கிரமே வெளியே போக விரும்புவேன். அப்பா தலை மறைந்ததும் வில்லைத் தூக்கி உள்ளே எறிவேன். வெளியே ஒரு பந்துபோல எகிறுவேன்.

அப்பா எனக்கு 'டியூஷன்' வைக்க நினைத்தார். ''சாரதாவைக் கற்றுக் கொடுக்கச் சொல்லி இருக்கேண்டா; நல்லா வாசி!'' என்றார். சாரதா சிலுக்குப் போல இருப்பாள் என்று நினைத்தேன். மனம் உற்சாகமாக இருந்தது.

முதல் ஞாயிறு சாரதா வந்தபோது என் அத்தனை உற்சாகமும் வடிந்துவிட்டது. நாற்பது வயசு மாமி! வயிறு பருத்திருந்தது. வைரத்தோடு போட்டிருந்தாள். கழுத்தில் வரி வரியாகச் சுருக்கம். 'லம்போதர' ஆரம்பித்துப் பார்த்தாள். வாய்ப்பாட்டு, கர்ண கடூரம்!

சீக்கிரம் சாரதாவுக்கு டிமிக்கி கொடுக்க ஆரம்பித்தேன். அவளும் அதைச் சுபாவமாக எடுத்துக் கொண்டாள். பாட்டிக்குப் பேச்சுத் துணை கொடுத்துக் காபிப்பொடி கடன் வாங்கிப் போக ஆரம்பித்தாள்.

நீண்ட நாழிகைகள் பார்க்கில் கழிக்க ஆரம்பித்தேன். கடலை வாங்கிக் கொறிக்கத் தொடங்கினேன். அந்த வருஷம் மழையே இல்லை. பார்க்கில் மரங்கள் என்னைப் போல நொந்து சோகமாகக் குனிந்திருந்தன. எதற்காக எல்லோரும் படிக்கிறார்கள் என்று நினைத்தேன். எதற்காகப் படிக்கிறார்கள், சங்கீதம் கற்கிறார்கள்? வேலை தேடி அலைகிறார்கள்?

சாயங்காலம் வீட்டுக்குத் திரும்புவேன். அப்பா ராத்திரி வருவார். ஆடிட்டர் ஆபீசில் வேலை. ஊறுகாய் தொட்டுக்கொண்டு சாப்பிடுவார். பிறகு மாடிக்குப் போய்விடுவார்.

ராத்திரி எனக்கு நிரம்பவும் ஊர்ந்துபோகும். சாப்பிட்ட பிறகு தூங்கும் வரை நீளமான நேரம் ஒரு மலைப் பாம்பு போல் ஆடாது அசையாது இருக்கும். வாசல் இடைகழியில் உட்காருவேன். தெரு விளக்கு மங்கலாக இருக்கும். எத்தனையோ பேர் காரணம் இல்லாமல் தெருவில் போய்க்கொண்டிருப்பார்கள். யாராவது பாவாடை கட்டி நடந்துபோனால் மனம் சலனம் அடையும். அவள் என் வசுந்தரா என்று நினைப்பேன். வசுந்தரா என் கற்பனைச் சிநேகிதியின் பெயர். என்னோடு செஸ் விளையாடுவாள். சைக்கிளைத் தள்ளிவிட்டுக் காரியரில் ஏறி உட்காருவாள்.

ஒரு நாளை விட்டு ஒரு நாள் எனக்கு வித்தியாசமாக இராது. எல்லாம் ஒரே மந்தமாக, ஒரே மூட்டமாக, உற்சாகமின்றி இருக்கும். ஒவ்வொரு மணியும் கனத்து நகர முடியாமல் நகர்ந்து கொண்டிருக்கும். சில சமயம் வீணாக அழுகை வரும். என்ன காரணம் என்று தெரியாமல் அழுதுவிடுவேன். வசுந்தரா என்னைச் சமாதானப்படுத்துவாள்; பாப்கார்ன் வாங்கிக் கொடுப்பாள்.

ஞாயிறன்று பிரம்மஸ்ரீ அங்கிபுரம் வைத்தியராம பாகவதர் வந்தார். உபன்யாசகர், பாடகர்; இரண்டும் சேர்ந்தவர்.

''வயலின் வாசிப்பான்!'' என்றார் அப்பா. பாகவதர் ஏகப்பட்ட உடம்போடு இருந்தார். நாலு தடவை சேவித்தேன்.

''வா இப்படி!'' என்றார். போனேன். பருமனான விரல்களால் முதுகைத் தடவினார். தாடி கொஞ்சம் வீச்சம் அடித்தது. ''சீக்கிரம் சரியாயிடுவான். கவலைப்படாதீங்கோ!'' என்றார். பாயசம் வடையோடு சாப்பிட்டார். நான் ஒதுக்கமாகக் கண்ணீர் விட்டேன். பன்னிரண்டு வயதில் நான் எல்லாரையும் போலத்தான் இருந்தேன். பேச்சுத்தான் ஸ்தம்பித்துவிட்டது.

ஊமையாகிவிட்டேன், திடீரென்று அதிசயமாக.

''எப்போ நடந்தது இது?'' என்றார் பிரம்மஸ்ரீ, வெற்றிலை குதப்பிக் கொண்டு. நான் இல்லை என்று அவர்கள் நினைப்பு.

''ஒரு வருஷம் ஆச்சு.''

''எப்படி நடந்தது?''

''திடுதிப்புனு, காரணமே இல்லை.''

'இல்லை, அப்பா! காரணம் உண்டு. உனக்குத் தெரியாது.'

மனம் ஓங்கி இரைந்தது.

''ஹயக்ரீவ ஸ்தோத்திரம் ஒண்ணு இருக்கு.''

''ம்...''

''எழுதித் தறேன். தினம் பாராயணம் பண்ணணும், ஒரு வருஷம்.''

''ம்...''

''வெள்ளிக்கிழமை நவக்கிரகத்தைச் சுத்தணும், 108 தடவை.''

''சரி.''

''பௌர்ணமிதோறும் காயத்திரி பூஜை பண்ணணும்.''

''சரி.''

''சீக்கிரம் தாவலை ஆயிடும்.''

பிரம்மஸ்ரீ கண்களை மூடிக்கொண்டு சொன்னார். தடிமனாகப் புஜத்தில் வெள்ளி ரட்சை மின்னியது. நெஞ்சு நிறைய நரை ரோமங்கள் சிலிர்த்தன.

''பார்யாள் வந்தாச்சோ?''

''இல்லை. பிரசவத்துக்குப் போயிருக்கா.''

''நியமத்தோட ரெண்டு பேருமாத் தரித்திர நாராயண பூஜை பண்ணணும். அடுத்த மாசம் வறேன்.''

''சரி.''

''பையன் பிடில் கத்துக்கறான்னீங்களே?''

''ஆமா.''

''கூப்பிடுங்கோ.''

அப்பா, ''சங்கர்!'' என்றார்.

எனக்கு விருப்பமே இல்லை. இரண்டாம் முறை கூப்பிட்ட பிறகு இறங்குகிறேன். என்னோடு வசுந்தரா வருகிறாள், கையைப் பிடித்துக்கொண்டு எனக்குத் தைரியம் சொல்லியவாறு.

''வாசிடா'' என்கிறார் அப்பா. வயலின் பெட்டியை எடுத்து முன்னால் வைக்கிறார். வசுந்தரா என்னை விக்கித்துப் பார்க்கிறாள்.

''வாசி, தம்பி!'' என்கிறார் பிரம்மஸ்ரீ.

வயலினை எடுத்தேன். மார்பில் அழுத்துகிறேன். கண்ணில் நீர் புரளுகிறது. 'வசுந்தரா' என்று என் மனம் கூப்பிடுகிறது.

'ஸ..ரி..மா..க..ரி..' என்று இழுக்கிறேன்.

அபரிமித சோகம் வடிகிறது.

''பிரமாதம்'' என்கிறார் பிரம்மஸ்ரீ.

'ஸ..ரி..மா..கரி..'

இரண்டாம் முறை! அப்பா விழிக்கிறார். ''மேலே போ.''

''ஸரி...மா...கரி...''

''போடா மேலே.''

விழிக்கிறேன்.

''போடா மேலே.''

எழுந்தேன். ''அதுக்கு மேலே தெரியாது'' என்று கத்தினேன். படீர் என்று வயலினைக் கீழே போட்டேன். அதன் மரக்கூடு சோகமாகப் பிளிறியது; இரண்டாகச் சிதறியது.

''பிடி அவனை.''

நான் ஓட, அப்பா மூர்க்கத்தனத்தோடு என் பின்னால் வந்தார். ஸைகியாட்ரிஸ்ட் சீதாராம ராவ் என்னைப் பார்த்தார், விசாரித்தார். என் மனத்துள் மூழ்கிக் காரணங்களைத் தேடினார். தட்டிக்கொடுத்தார். சிரித்தார்.

வெளியே அப்பா பெஞ்சியில் உட்கார்ந்திருந்தார். என்னை அவரிடம் ஒப்படைக்க, அப்பா கவலையோடு டாக்டரைப் பார்த்தார்.

டாக்டர் என் காது கேட்கச் சொல்ல விரும்பவில்லை. அப்பாவைத் தாவி இழுத்துத் தணிவாக, ''இன்னும் சோதனை பண்ணணும். ஒரு மாசம் ஆகும். 'ஸெக்ஸ்' இருக்கும்'' என்றார்.

''இவனுக்கா? வயசு இன்னும்..''

''வயசு கணக்கே இல்லை! பொறந்ததிலேர்ந்தே அதுவும் மனசிலே பொறந்தாச்சு: நாம்ப வெளியிலே ஒத்துக்கக் கஷ்டப்படறோம்.''

''அப்போ கல்யாணம் பண்ணி வைக்கணும்மா?''

''இல்லை, இல்லை: இது ஒரு பூடகமான ஸெக்ஸா இருக்கும். பிள்ளைத்தனமா...''

'டாக்டர்!' என்று கூவ விரும்புகிறேன். ''எனக்குக் காதல் இருக்கு டாக்டர்! நீங்க சொல்றது சரி! வசுந்தரா என் சிநேகிதி, ஆனா, சத்தியம் பண்றேன் டாக்டர்: அவளோட நான் எந்தத் தப்பிதமும் பண்ணலை.''

டாக்டரைக் கரையும் கண்ணோடு பார்க்கிறேன். மனத்துள் ஒரு சமுத்திரம் விம்மிக்கொண்டு நிற்கிறது.

என் ஆறு வயதிலிருந்தே நினைக்கிறேன். அவளுக்கு எப்படிப் பெயர் வைத்தேன் என்றே தெரியாது: அவள் என் கற்பனைப் பெண். அவளோடுதான் என் விளையாட்டு; என் பேச்சு:

மூலைக்கு மூலை உட்கார்ந்து நான் ரகசியமாக அவளிடம் பேசி, விளையாடினேன்.

அப்பா, அம்மாவைப் பிரிந்த சோகம் எனக்கு என்று நினைக்கிறார்:

அம்மா நிரந்தரக் கால் வாதமாகத் தாத்தா வீட்டில் கிடக்க, நாக்குக்கூட இழுத்திருக்க, அப்பா வருடத்திதுக் ஒரு முறை என்னை அழைத்துப் போய் அவளைக் காட்டுகிறார். அம்மா என்னைப் பொறுத்த வரையில் ஒரு ஜடம்: என்னைப் புரிந்து கொண்டாளா என்றே தெரியாது. நான் அவளை விட்டுச் சீக்கிரம் பிரிகிறேன். வசுந்தராவோடு விளையாட ஓடுகிறேன்.

The Vijayakumar Mills Limited

Kalayamputhur-624 615

Via Palani S. Rly.

Telephone : 591 (6 lines) Telegram : VIJAYKUMAR, Palni

COTTON YARN	:	Carded-60s Combed-100s & 120s
HOSIERY YARN	:	Combed-34s ISI-Deluxe 40s ISI-Colts 40s ISI-Colts-Silver 40s -Colts-Gold 60s -Krishna Special
MERCERISED YARN	:	Combed-2/64s ; 2/100s ; 2/120s Both Grey & Bleached
SEWING THREAD YARN	:	2/34s; 2/36s; 2/40s; 3/50s; & 3/60s

Colts

A Vibrant Range of Vests and Briefs

&

Cotton Sewing Thread in all Ranges

DESIGNED WITH YOU IN MIND

பெயருக்காக அம்மாவாக இருந்தவள், இரண்டு வருடங்களுக்கு முன்தான் நிரந்தரமாக மறைந்தாள்.

அதிலிருந்து வசுந்தராதான் எனக்கு எல்லாம்; சிநேகிதி, காதலி; அம்மாவின் இழப்பை எல்லாம் இட்டு நிரப்பும் அதிசயக் காதலி;

போன வருஷந்தானே அது. ஆமாம், போன வருஷந்தான் அது!

அப்பா திடீரென்று ஒரு வாரம் வெளியூர் போக, பாட்டியோடு ஒட்டிக்கொண்டிருந்தேன். அப்பா திரும்பி வந்தார். கதவைத் தட்டினார். திறந்தேன்.

அப்பாவின் முகத்தில் ஏதோ ஒரு பொலிவு. ''உனக்கு ஒரு சித்தி வந்திருக்கா, பாரு!'' என்றார்.

பார்த்தேன். அப்பா பின்னால் அந்தப் பெண். அவர் மணம் செய்துகொண்டு வந்திருக்கும் புதுப் பெண்.

என் தலைக்கு ஒரு வெடி விழுந்து இரண்டாகக் கீறியது. என் பார்வை அவளைப் பார்த்தவாறு ஸ்தம்பித்தது. ஆச்சரியம்! உலகில் இந்த ஒற்றுமை உண்டா? கற்பனையில் தோன்றியவளை நேரிலே பார்க்க முடியுமா?

ஆமாம்! அந்த அதிசயம் நிகழத்தான் செய்தது. மனத்தில் சிநேகிதியாக நான் வளர்த்து வந்த என் கற்பனை வசுந்தரா என் எதிரே சாக்ஷாத்காரமாகி நின்றாள். அதே உருவம்; அதே முகவெட்டு. கண்கள்; அதே உயரம்.

ஒரே ஒரு வித்தியாசம்! இவள் புடைவை உடுத்தியிருந்தாள். என் வசுந்தரா தாவணி.

ஆனால் என் வசுந்தரா வேண்டுமென்றே வயதுக்கும்மீறிப் புடைவை கட்டி வந்தது போலிருந்தது; அவளைப் பார்த்தால் நிச்சயம் பத்தொன்பது இருபதில்தான் இருப்பாள். முகம் என் வசுந்தராவின் இளமைதான்.

''ஏண்டா, மண்டு. பாட்டிகிட்டே சொல்லு, பக்கத்துப் போர்ஷன் மாமியைச் சோத்துப்பொட்டுக் கொண்டுவரச் சொல்லு.''

நின்றேன். நின்றேன். விழித்தேன் ''போடா, போ! உள்ளே போய்..''

''அப்பா!'' என்று உண்மையில் கத்த நினைத்தேன். கூவக்கூடச் செய்தேன். ஆனால் தொனி வெளிவரவில்லை. வாய் ஊமையாகி விட்டது.

''போடா, பிரம்மம்!''

பிரம்மந்தான். பேச்சு மூச்சற்ற பிரம்மம்.

சிகிச்சை நடக்கிறது. சீதாராமராவிடம் பலமுறை போய் வந்தேன்.

இடையில், அப்பா ஊருக்குப் போனார். அந்தப் பெண்ணை அழைத்து வந்தார். கருச் சிதைவு நடந்திருக்கிறது. பெண்ணுக்கு வர விருப்பம் இல்லை. அப்பா வலுக்கட்டாயமாக இழுத்து வர, அவள் கீழே இருக்க, நான் மாடியிலேயே இருந்தேன்.

இரண்டாம் நாள் காலையில் தடும் என்று சத்தம்.

பாட்டி கூப்பாடு போட்டாள். அக்கம் பக்கத்தார் வந்தார்கள். கிணற்றிலிருந்து அவளை எடுத்தார்கள். நான் ஓடிப் போய் அவளைப் பார்த்தேன்.

அவள் உயிர் பிரிந்திருந்தது.

கண் மட்டும் என்னைக் கோரமாகப் பார்க்க, ''அப்பா!'' என்று கத்தினேன்.

ஆச்சரியம்!

குரல் தொண்டையை விட்டு வெளியே வந்துவிட்டது.

வெளியில் போயிருந்த அப்பா உள்ளே வந்து ரகளையைப் பார்க்க, ''அப்பா! வசுந்தரா செத்துப் போயிட்டாப்பா! வசுந்தரா செத்துப் போயிட்டா!'' என்று கத்தினேன்.

அப்பா அதிசயத்தோடு என் குரலைக் கேட்கிறார்.

அதுவரை என் நெஞ்சில் கூடு கட்டி என் மனசுக்குள் சிக்கல் ஏற்படும்படி பெரிதாக வளர்ந்த என் வசுந்தரா உருவம் அந்தக் கணமே சில்லுச் சில்லாக உடைந்து சிதறிப் போயிற்று.

என் மனசும் நினைவுகளும் இறுக்கம் தளர்ந்து லகுவாகி மெள்ள மெள்ளச் சுதந்தரமாக இயங்கி, எல்லோரது மனங்களைப் போல் சகஜமாவதை உணர்கிறேன். ❋

திருமணம், விவாகரத்துச் சட்டங்கள்

(இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்)

திருமணங்கள் செய்துகொள்வது எப்படி? சேர்ந்து வாழ இயலாத நிலையில் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்வது எப்படி? பிரிந்தவர்கள் மறுபடியும் வாழ்க்கையில் ஒன்று சேர்வது எப்படி? இவ்வாறு மண வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்கவும், மத வேறுபாடின்றித் திருமணம் செய்துகொள்ளவும், சட்ட விரோதமான திருமணங்கள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் தரப்பட்டுள்ள நூல்.

விலை ரூ. 14·75

மேலும், கிரிமினல் குற்றச் சட்டம், வீட்டு வாடகைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், சாட்சியம் சட்டம், போலீஸ் காவல் சட்டங்கள் முதலிய சட்ட நூல்களும் கிடைக்கும்.

லட்சக் கணக்கானோர் பாராட்டிப் பயனும் பெற்ற மொழி நூல்கள் பல. எந்த இந்திய மொழியிலிருந்தும் எந்த மொழியையும் கற்கலாம்.

விவரங்களுக்கு:

பாலாஜி பப்ளிகேஷன்ஸ்

103, பைகிராப்ட்ஸ் சாலை, சென்னை-6000 014.



நீடித்த நறுமணத்திற்கு
என்றும் எங்கும் சிறந்து விளங்குவது

செல்வம் ராணி ஊதுபத்திகள்

மனோரஞ்சிதம், தாழம்பூ, மரிக்கொழுந்து,
சுபம் பத்திகள்

அருள்ஜோதி பத்திகள்

உரிமையாளர்:

S. B. குணசேகர பாண்டியன்

செல்வம் பரிமளசாலை,
237-B, 10-வது தெரு, தெற்கு நடராஜபுரம் காலனி
மருத்துவக் கல்லூரி ரோடு
தஞ்சாவூர் 613007

வண்டமிழின் வசந்தம்

தமிழுக்கு நிகரேதும் இல்லை —புகழ்
அமிழ்தான மொழிக்கிங்கு வேறேதிங் கெல்லை
கலையன்னை நமக்கீந்த பொன்னாய்த் —தேன்
கனியான தமிழாலே நற்பாடஞ் சொன்னாய்.

மலையேறிச் சென்றிட முடியும் —தமிழை
மனத்தாலே கற்றிட வந்தாலே படியும்
மலைத்தேனே அல்லவோ தமிழே —எதிர்
மறையாக வாராதவ் வினிதான கல்வி.

விடியாத இரவிங்கு வந்தால் — ஒளி
விளக்கையே நாடொறும் தேடுவார் தெரிந்தால்
ஓடியாத முன்நலம் தேடு — நீ
ஓயாத ஐம்பெருங் காவ்யம் —பண்ணோடு.

படித்தாலே இனிக்கும்எப் போதும் —தமிழைப்
பயின்றிடப் பயின்றிடத் தெரியுமப் போது
கடல்போன்ற இம்மொழி யோடு
மடல்திட்டி மடல்திட்டித் திருப்புகழ் பாடு.

ஆற்றலரசு

வந்தது தீபாவளி

வெள்ளிச் சரிகையிட்ட விந்தைக் கலையுடுத்தி
அள்ளும் அழகியவள் ஆதரவாய்க் —கொள்ளையெழில்
கந்தருவன் போலவந்த காதலனைக் கண்டுவப்ப
வந்ததுவே தீபா வளி.
ஆர்வத்தால் துள்ளி அதிர்வெடியும் மத்தாப்பும்
பார்வைக்குள் மின்னலிடப் பாய்ந்துவரும் —சீர்வைத்த
விந்தைச் சிறார்கள் விளையாட வேகமுடன்
வந்ததுவே தீபா வளி.
நாலு வகையில் நயந்து பெறுங்கடனால்
கோலமுடன் பண்டிகையைக் கொண்டாடிச் —சாலவே
வந்த கடன்களினால் வாழ்க்கையிலே தொல்லையுற
வந்ததுவே தீபா வளி.
அன்றாடங் காய்ச்சியரும், அம்மா பசியென்று
நின்றுஓடு தாங்கும் நிலையினரும் —நன்றாக
மொத்தைக்கூ ழுக்குள் முழுப்பண் டிகைகாண
வந்ததுவே தீபா வளி.
உல்லாசம் ஓர்பால் உகுங்கண்ணீர் மற்றொருபால்
எல்லாரும் எல்லாமும் எய்துதற்கே—இல்லாமல்
சிந்தைக்கப் பாலொருவன் செய்யும் விளையாட்டாய்
வந்ததுவே தீபா வளி.

வ. துரைசாமி

மனக் குரங்கு

செலவே என்று
பேதை மனம் —தினங்கள்
சென்ற தெண்ணிப்
பறக்கிறது. —அதுதான்
வரவே என்று
வாதைமனம் —அநுப
வங்கள் ஏற்க
மறுக்கிறது.
இருளே எனக்கஞ்
ஞானமனம் —புதிய
எதிர்காலத்தைப்
பழிக்கிறது. —அதுதான்
அருளே எனக்கண்
டாமைமனம் —ஒளியை
அறியா மல்தான்
விழிக்கிறது.
குறையே என்று
மூடமனம் —நிறைவு
கொள்ளா விதமே
அலைகிறது. —அதுதான்
இறையே நின்ற
பீடமென — உயர்ந்த
ஏலா மையால்
மலைகிறது.
பகையே என்று
தாழ்வுமனம் —மனித
பலத்தைப்புவியை
வெறுக்கிறது. —அதுதான்
வகையே வாழ்வும்
யாவுமெனும் —ஒரு நாள்
வாரா மைமேல்
சிரிக்கிறது.

தமிழழகன்



எரிமலையா மாறிப் போவுங்க!

அரசு மணிமேகலை

ஏழைபாழை பொழைக்க ஒரு
வழியும் கிடைக்கல்லே:—இங்கே
பாழாய்ப்போன பாவிக்கு
கைகள் பத்தலே—ஆமா
கைகள் பத்தலே!
கட்சிமாறும் துரோகி இல்லே
என்று முழங்குறான்:—நேராக்
கட்சிவிட்டுக் கட்சி மாறிக்
காசை அள்ளுறான்:—ஆமா
காசை அள்ளுறான்.
தேர்தலுன்னு சொல்லிப் புட்டாக்
காலைப் புடிக்கிறான்—ஆனாத்
தேர்தலிலே ஜெயிச்சதுமே
ஆளை மறக்கறான்:—ஆமா
ஆளை மறக்கறான்!
எட்டுவீடு பெண்டாட்டிக்குச்
சேர்த்து வைக்கறான்:—ஆனா
எங்களுக்கோ உழைக்கமட்டும்
ஏனோ மறக்கறான்:—ஆமா
ஏனோ மறக்கறான்

மதுவிலக்கு, மதுவிலக்கென் றேபசப்புறான்:—அவனே
மத்தியானம் போச்சுதுன்னா மதுவைத் தேடறான்!
சாதியில்லை சாதியில்லை என்று முழங்குறான்—சொந்தச்
சாதியான்னு பாத்துப்பொண்ணைக் கட்டிக் குடுக்கறான்!
சுதந்தரம் சுதந்தரம் என்று பேசுறான்:—சொந்தப்
பொண்டாட்டிக்கு மட்டும்அது இல்லை என்கிறான்!
பாரதியார் பாடல்வரி பலவும் சொல்லுறான்—ஆனாச்
சொல்லிப்போட்டு இறங்கினதும் எல்லாம்மறக்கறான்!
பாத்துப் பாத்தே அலுத்துப் போயி ஓஞ்சிட்டேனுங்க;
பாழும்நிலை என்னிக்குத்தான் மாறிப்போகுங்க?
இப்படியே போச்சுதுன்னா என்ன ஆகுங்க?ஒருநாள்
இந்தியாவே எரிமலையா மாறிப் போவுங்க! ஆமா,
மாறிப் போவுங்க!

எண்ணத்தில் கலந்து விட்டு
என்னிதயம் கிள்ளிச்சென்று
விண்ணதில் நின்றானடி!—கிளியே
வீரக் குமரனடி—அவன்
தீரத் திலகமடி!
கண்ணயர்ந்து தூங்கையிலே
காதினில் துரும்பை விட்டுப்
பெண்மை விழிக்கச் செய்தான்—கிளியே
பேதைமை போக்கிவிட்டான்—அவன்
பேச்சில் குழைந்தாயடி!
வந்துனைக் கைப்பிடிப்பேன்
வரும்வழி பார்த்திரென்று
சிந்தை மகிழ வைத்தான்!—கிளியே
சினத்தையே கொன்றானடி;—அவன்
சிங்கார வேலனடி!
எழில் கொழிக்கும் பருவமென்றே
என்னையும் வர்ணித்து விட்டு
பொழிலிடை மறைந் தானடி!—கிளியே
பொன்னிற மேனியண்டி!—அவன்
பொன்னடி மறப்பேனோடி?

எப்படி மறப்பேன்?

குடந்தை புகழேந்தி

இயற்கை விருந்து

மின்னூர் சீனிவாசன்

எங்கெங்கும் பார்அழகின் ஓடை,
என்விழிகள் அதில்நீந்தும் கெண்டை.
செங்கதிரோ ஓர்பழத்தின் ஜாடை!
சென்றுவிழும் மேல்வானம் கூடை
மாலைமுகில் செம்பருத்தித் தோட்டம்—பின்
வயிரமெனும் விண்மீனின் கூட்டம்;
சேலையென மண்மகள் மேல் தரித்து—கடல்
சிதறும்பூ நுரையொளியாய்ச் சிரித்து.
தந்தமென விழுகின்ற அருவி—யானைத்
தந்தமெனப் பிறை தெரியும் உருவில்,
சந்தமெழ வண்ணமிகு மயிலே—ஆடும்
தக்கதக நடமேஓர் ஒயிலே.
பச்சைக்கம் பளத்தின்மேல் சங்கே—கொக்குப்
படைவயலின் பக்கம் பார் இங்கே!
கச்சிதமாய் மலைமீது காடும்—கண்
கவர்ந்திடுமே பனித்திரைமுக் காடும்!

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியும் அத்வைதமும்

பேராசிரியர்
டாக்டர் பி. ராமமூர்த்தி

பாரதத்தின் பண்புக்கும் கலாசாரத்துக்கும் எடுத்துக்காட்டுக்களாக விளங்குவன வேதங்கள். வேதத்தின் சாரத்தை முடிந்த முடிவுகளாகக் கொண்டு, பலாச் சுலோகங்களைப் போல விளங்குவது உபநிஷத்துக்கள். இவற்றை ஆதாரமாகக் கொண்டு, பல சாஸ்திரங்கள் விளங்குகின்றன. எல்லாவற்றுக்கும் ஆதாரமான வேதத்தை வேத விருட்சம் என்று சொல்வார்கள். 'அஹம் பிரஹ்மாஸ்மி!' என்ற வேத வாக்கு, ('நானே பரம்பொருளாக இருக்கிறேன்') மனிதனின் உயர்ந்த சிந்தனை வளத்தைக் காட்டுகிறது. பாரத மண்ணில் இந்தச் சிந்தனை வளம் செழித்து வளர்ந்து படர்ந்து விரிந்திருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தச் செல்வம், பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. கல்வி, விஞ்ஞானம், ஜோதிடம், மருத்துவம், ஆத்ம விசாரம், தத்துவக் கோட்பாடுகள் என்று விரிந்து, மனித மனத்தைச் செம்மைப்படுத்தி வந்திருக்கிறது.

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியும் ஒரு பக்கத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளாகத்தான் மருத்துவத் துறையில் நுணுகிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் மருத்துவத் துறையில் எவ்வளவோ முன்னேற்றங்கள் உண்டாகியிருக்கின்றன. ஆனால் எந்த ஆராய்ச்சி முடிவும் முடிந்த முடிவு என்று சொல்வதற்கில்லை. மூளை, நரம்பியல் துறையில் ஆராய்ச்சிகளும், அவற்றால் ஏற்பட்ட முன்னேற்றங்களும் சமீப காலமாகத்தான் ஏற்பட்டிருக்கின்றன. தொழில் நுணுக்க வசதிகளும் அறுவைச் சிகிச்சையில் முன்னேற்றங்களும் பிரமிக்கத் தக்க வகையில் உண்டாகியுள்ளன என்பது உண்மைதான். மூளை, நரம்பியல் துறையில் அதிசயிக்கத்தக்க கண்டுபிடிப்புகள் ஏற்பட்டு, துறையின் முன்னேற்றத்துக்கு உதவி வருகின்றன.

ஆனால்?

இந்த 'ஆனால்?' என்பது பெரிய கேள்விக் குறியாகத்தான் இன்றளவும் நிலவி வருகிறது. பதினைந்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்கத்திய ஆராய்ச்சிகளில் பல, புதிய புதிய உண்மைகளை உணர்த்தி வருகின்றன. அதாவது, நம் மகான்களும் யோகிகளும் கண்டுபிடித்தோ, உள்ளுணர்வின் மூலம் உணர்ந்தோ கூறிய கருத்துக்களுக்கு இணையாக உள்ளன.

உதாரணத்துக்கு ஒன்று கூறுகிறேன்: மூளையின் இயக்கத்தினால்தான் நம்மால் சரிவரச் செயல்பட முடிகிறது என்பது தெரிந்த விஷயம். மூளையிலுள்ள பல பாகங்கள், செயல்படுவதற்கேற்ப நம் செயல்கள் அமைகின்றன என்று சொல்லலாம். மூளையில் ஒரு வித ரசாயனப் பொருள் இருக்கிறது. அதை 'நியூரோ பெப்டைட்ஸ்' (Neuro Peptides) என்று கூறுவார்கள். இந்த ரசாயனப் பொருள்தான், நம் உடல் இயக்கங்களை எல்லாம் அடக்கி ஆண்டு வருகிறது என்று இதுவரையில் எண்ணி வந்தார்கள். இந்த ரசாயனப் பொருள் மூளையில் மட்டும் இருந்து பிற உடல் பாகங்களை இயக்குகிறது என்றே மேற்கத்திய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்து, அப்படியே நம்பியும் வந்தார்கள். மருத்துவ அறிஞர் பெருமக்களும், உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் நலிவு ஏற்பட்டால், இந்த ரசாயனப் பொருளைச் சரிசெய்ய மருந்துகள் அளித்து வந்தார்கள்.

ஆனால், இப்போதைய ஆராய்ச்சிகள் இந்த ரசாயனப் பொருள் கல்லீரல், உணவுக் குழாய், நுரையீரல் போன்ற உடலின் எல்லாப் பாகங்களிலும், நீக்கமற நிறைந்திருப்பதாகத் தெரிவிக்கின்றன. அந்த அந்தப் பாகத்தில் இந்த ரசாயனப் பொருள் இருப்பதால், அந்த அந்தப் பாகங்களின் சீரமைப்புக் கண்காணிக்கப்படுகிறது. இந்த ஆராய்ச்சி நம் நாட்டு யோகிகள் கூறிய யோக சாதனை முறைக்கு ஏற்ப அமைந்திருக்கிறது. உடல் உறுப்புக்களில், ஒவ்வொன்றும் செம்மையாகச் செயல்பட உகந்த யோகமுறைகள் யோகசாஸ்திரங்களில் காண்கின்றன.

'யோகங்களின் மூலம் ஒவ்வோர் உறுப்பையும் செம்மையாக்கலாம்; உடல் உறுப்புகள் வலுவாக அமைந்தால் மனமும் அமைதியாக இருக்கும்' என்று அநுபவத்தின் மூலம் நம் முன்னோர் கூறியிருப்பதிலிருந்து, அந்த அந்த உடல் உறுப்பைச் செம்மைப்படுத்தும் ஏதோ ஒரு 'பொருள்' அந்த அந்த இடத்தில் இருக்கிறது, அதைச் சாதனைகளின் மூலம் சரியாக வைத்துக்கொண்டால், நோய் நொடியின்றிப் பல ஆண்டுகள் வாழலாம்' என்ற உண்மையை அவர்கள் அறிந்து கூறியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. யோகங்களின் மூலம் மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை எழுப்பிச் சிரசுக்குக் கொண்டு சென்றால் மனிதன் இறைவனைக் காணலாம்.

இந்தக் கூற்று ஏன் உண்மையாக இருக்க முடியாது?

நம் நாட்டு ஆயுர்வேத மருத்துவ முறை மிகப் புராதனமானது. அநுபவத்தின் மூலம் தேர்ந்த வைத்திய முறைகள் அதில் காண்கின்றன. ஆயுர்வேதத்தில் முக்கியமாக மூன்று குணங்களின்



1. ஓர் அணு-நான்கு அமைப்புக்கள் கொண்டது இது.

2. அணுவின் உட்கருவிலுள்ள புரோட்டான், நியூட்ரான், எலெக்ட்ரான்

3. ஒரு புரோட்டானிலுள்ள மூன்று க்வார்க்

4. ஒரு க்வார்க்கினுள் இருப்பதாக நம்பப்படும் ப்ரிக்வார்க்

தோஷத்தை உடல் நோய்க்குக் காரணமாகச் சொல்வார்கள். வாதம், பித்தம், கபம் என்பவையே அவை. இவை மூன்றும் இயற்கை நியதிப்படி அமையாவிட்டால் தோஷங்கள் காணும், அதாவது நோய் வரலாம் என்கிறது ஆயுர்வேதம். அத்துடன் உடல்வாகிலும், நோய் வந்தால் அதைச் சமாளிக்கும் திறனிலும், உண்ணும் உணவைச் செரித்துக் கொண்டு சக்தியாக மாற்றும் வகையிலும் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் உண்டு. டைபாய்டு பரவியுள்ள ஓர் இடத்தில் பலர் இருந்தாலும் எல்லாருக்குமே டைபாய்டு நோய் வந்துவிடுவதில்லை. மேலும் டைபாய்டு ஜுரம் ஏற்பட்டாலும் ஒரு மனிதனைப் போல் இன்னொரு மனிதனை வாட்டி வதைப்பதில்லை.

இந்த நாளைய மருத்துவர்கள் ஏதாவது ஒரு நோய் பரவலாகப் பல பேருக்குக் காணப்பட்டால், ஒரே மருந்தை எல்லாருக்கும் சகட்டு மேனிக்கு எழுதிக் கொடுத்து விடுவார்கள். ஆனால், மனிதனுக்கு மனிதன் உடல் அமைப்பிலுள்ள வித்தியாசங்களை அறிந்து, அவரவருக்குத் தேவையான மருந்துகளை அளிக்க வேண்டும் என்று ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. இதே கருத்தை இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியும் தனி மனிதனின் உடல்வாகைத் துல்லியமாக அறிந்தே வைத்தியம் செய்ய வேண்டும் என்று கூறுகிறது.



வாதம், பித்தம், கபம் என்றால் வெறுமனே காற்று, பித்தநீர், சளி என்று எண்ணிவிடக் கூடாது. வாதம் என்பது சக்தியையும் இயக்கத்துக்குத் தேவையான பலத்தையும் ((Energy and Movement) அளிப்பது. ஜீவதத்துவ பரிணும வளர்ச்சியின் அளவைச் சொல்லுவது (Metabolism) பித்தம். கபம் என்பது உடலில் சுரக்கும் (Secreations) பல விதச் சுரப்பிகளின் தன்மையை விவரிப்பது. இந்த மூன்று குணங்களும் ஒருவர் உடலில் விவங்கும் தன்மையைப் பொறுத்தே, அவரவர்களின் உடல் ஆரோக்கியமும் மனோவளமும் அமைந்திருக்கும். மனிதர்களிடம் தமஸ், ரஜஸ், சத்வம் என்று மூன்று விதக் குணங்கள் காண்கின்றன. சத்துவ குணம் நிரம்பியிருந்து, மற்றக் குணங்கள் அடங்கியிருந்தால், அத்தகைய மனிதன், மனிதனில்சிறந்தவனுகவிளங்குகிருன்.

இரணியாட்சன், "நீ கூறும் கடவுள் எங்கேயடா இருக்கிருன்?" என்று தன் மகன் பிரகலாதனைப் பார்த்துக் கேட்கிருன். அதற்குப் பிரகலாதன், "இந்தத் தூணிலும் உளன், துரும்பிலும் உளன், சதகூறிட்ட அணுவிலும் உளன்" என்று பதில் கூறுகிருன். கண்ணுல் பார்க்க முடியாதது அணு. மிகமிக நுண்ணியது. அதை மேலும் பிளக்க முடியாது என்ற கொள்கை மாறிப் போய், அணுக்குண்டு யுகத்தில் நாம் வாழ்கிருேம். அணுவை மேலும் சிதைத்து, ஆக்க சக்திக்கும் பயன்படுத்தி வருகிருேம்.

'சதகூறிட்ட அணு' என்ற சொற்ருெடர் அணுவை மேலும் பிளக்க முடியும் என்ற அறிவு நம் முன்னேர்களுக்கும் இருந்தது என்பதைக் காட்டுகிறது.

அணுவே கண்ணுல் பார்க்க முடியாதது. அதன் மையத்தில் உட்கரு (Nucleus) என்ற அமைப்பு இருக்கிறது. இதைச் சுற்றிலும் நியூட்ரோன், புரோட்டான், எலெக்ட்ரான் என்ற நுண்ணிமங்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. அணுவுக்குள் உள்ள ஒவ்வொரு புரோட்டானிலும் மூன்று மிக மிக நுண்ணிய க்வார்க் (quark) என்ற நுண்ணிமங்கள் உள்ளதாகக் கண்டு பிடித்திருக்கிருர்கள். இந்த க்வார்க் என்பதைக் காணவும் முடியாது, தொடவும் முடியாது, உணரவும் முடியாது. ஆராய்ச்சியின் முடிவிலிருந்து ஊகித்துக் கொள்ள (Inference) வேண்டியதுதான். இது அணுவில்ருந்து 10,0000 மடங்கு சிறியது. இதைத் தான் நம் சாஸ்திரங்கள் பரமாணு, பரமாத்மா என்று சொல்கிறது என்று தோன்றுகிறது.

ஒவ்வொரு ப்ரோட்டினிலும் மூன்று க்வார்க் அடங்கியது என்று எண்ணி வந்ததுபோக, இப்போது க்வார்க் ஒவ்வொன்றிலும் ப்ரிக்வார்க் என்ற நுண்மைத்துகள் நான்கு அடங்கியுள்ளதாகச் சமீப ஆராய்ச்சிகளின் மூலம் நம்பப்படுகிறது. இந்த ப்ரிக்வார்க், க்வார்க்கைவிடப் பத்தாயிரம் மடங்கு சிறியது.

இறைவனின் தன்மையைக் கூறும் போது, 'அணுவுக்கு அணுவாகச், சூட்சுமத்துள் சூட்சுமமாக இருக்கிருன். இந்தப் பிரபஞ்சத்தின் விரிவாகவும் காண்கிருன்' என்று சொல்லுவார்கள். சூட்சுமத்துள் மிக சூட்சுமமாக இருப்பதை, 'அணேரணீயான்' என்று சொல்வார்கள். பரந்து விரிந்த பிரபஞ்ச தத்துவத்தை 'மஹதோர் மஹீயான்' என்று சொல்வார்கள். 'விச்வம் விஷ்ணு' என்று தொடங்கும் விஷ்ணு சகஸ்ரநாம முதல் திருநாமம் இறைவனின் பிரபஞ்ச விரிவைக் காட்டுகிறது.

'நுணுக்கரிய நுண்மையன் இறைவன்' என்ற நம் தத்துவக் கோட்பாட்டை, இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியின் 'க்வார்க்', 'ப்ரிக்வார்க்' தன்மைகள் வலியுறுத்துகின்றன. பஞ்சபூதத்தின் சேர்க்கையால் இந்தப் பிரபஞ்சமும், பூத உடலும் அமைப்பைப் பெற்றிருக்கின்றன. 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின், வகை தெரிவான் கட்டே உலகு' என்று திருக்குறளும் கூறுகிறது. 'முன்பு சொன்ன ரசாயனப் பொருள், இந்தப் பஞ்சபூதச் சேர்க்கைக்கு (பரம்பரை பரம்பரையாய்) அடித்தலம் அமைத்து வருகிறதோ?' என்பது சமீபத்திய ஆராய்ச்சிகளில் கண்ட முடிவுகளிலிருந்து எழுந்துள்ள ஒரு வினு.

இப்படிப் பார்த்துக்கொண்டே போகும் போது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எந்தப் புற வசதிகளும் இல்லாத நிலையில், நம் நாட்டு மகான்கள் கண்டறிந்து கூறியுள்ள உண்மைகள் இன்றைய நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகளுக்கு மிக நெருங்கி வருகின்றன. இன்று போல் தொழில் நுணுக்கமும், தொலை நோக்காடி, உருப்பெருக்காடி போன்ற கருவிகளும், வசதியான சோதனைச் சாலையும் அந்தக் காலத்தில் இருந்திருக்குமா என்பது சந்தேகம் மட்டும் அல்ல, இருந்திருக்கமுடியாது என்றே சொல்லலாம்.

அவர்கள் எப்படி இவ்வளவு நுணுக்கமாகக் கண்டறிந்தார்கள் என்பதற்கு ஒரே பதில், ஆத்ம பலமும் தியானமுமே காரணங்கள். மனித மனத்தின் அல்லது மூளையின் செயல் திறனைத் தியானத்தின் மூலம் பல மடங்கு உயர்த்த முடியும். பிரபஞ்சத்தின் இயற்கை ரகசியங்களை—அதாவது இறைவனின் இயல்பை—திறனை உயர்த்திய மனிதனுல் கண்டு உணர முடியும். தூரத்தில் நடப்பதை, விண்ணில் நடக்கும் அதிசயங்களை, சப்த அலைகளை நிச்சயமாக உணர்ந்து சொல்ல முடியும். அத்தகைய சக்தியுடன் மகான்கள் அன்று வாழ்ந்தார்கள். அவர்கள் கண்டறிந்த உண்மைகள், இன்று விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் நிரூபணமாகி வருகின்றன.

'க்வார்க்' என்ற நுண்ணிமைத்துகள் தத்துவம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு 'அஹம் பிரஹ்மாஸ்மி!' என்ற அத்வைதக் கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. ✻



எம்.எஃப். டிராக்டர்களோடு, உபகரணங்களும், உங்களுக்குத் தோள்கொடுத்து வயலிலே பாடுபடும்போது உங்கள் பண்ணையின் உற்பத்தித் திறனோடு, விளைச்சலும் அமோகமாகப் பெருகுகிறது.
எம்.எஃப்.245
எம்.எஃப்.1035 டீலக்ஸ்
டாஃபு – தலைசிறந்த டிராக்டர் தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல: எல்லா உழவு செய் நேர்த்திகளுக்கும் ஏற்ற பலவகைச் சாதனங்களையும் உருவாக்குகிறார்கள்.
டில்லர்
டிஸ்க் பிளவ்
மோல்டு போர்டு பிளவ்
ஆஃப் ஸெட் டிஸ்க் ஹார்ரோ
பாடி டிஸ்க் ஹார்ரோ
டெர்ரஸர் பிளேடு
டில்லர் ஸீடிங் அட்டாச்மென்ட்
சப்-ஸாயிலர்
ஜிப் கிரேன்
டிரெய்லர்
தாய்நாட்டு வேளாண்மை வளரத்
தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளது
டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்
சென்னை
MF Massey Ferguson
TAFE
MAC/T/49-TAM/A

மதுர மங்கையர்

(1) நாகாநந்தம் நாடகத்தில் ஒரு காட்சி. ஜீமூதவாகனனின் வரவை எதிர்நோக்கித் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு காத்திருக்கிறாள் காதலி மலையவதி. அவளுடைய மனநிலையை மிகக் கவர்ச்சியாக வர்ணிக்கிறார் ஹர்ஷகவி; வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் பூங்கா. லதா குஞ்சம் என்ற கொடி வீட்டிலே, ஊஞ்சல் ஒன்றைத் தயாரித்திருக்கிறாள். காதலன் வந்தவுடன் அவனுடன் அதில் அமர்ந்து ஆடிக் களிக்க விரும்புகிறாள். அந்த இன்பத்தின் இனிமையை மனம் அசைபோட்டுக் கொண்டிருக்கிறது. முழுமதியும் அவள் மனநிலைக்கு ஒற்றடம் கொடுக்கிறது. வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறாள், அழகி. கணப்போது ஒரு யுகமாக மாறுகிறது அவளுக்கு. இந்த மனநிலையோடு கூடியவளை 'விப்ரலப்தா' என்று குறிப்பிடுவார்கள்.

(2) யாராக இருந்தால் என்ன? முதலிரவு என்றால் நினைக்க நினைக்க இனிப்புத்தானே? அமருகனும் திலகவதியும் முதலிரவில் சந்தித்து மகிழ்கிறார்கள். மன்னனும் மகிஷியும் அல்லவா? கற்கண்டாகப் பேசுகிறாள் திலகவதி. அதைச் சுவைத்து மகிழ்கிறான் அமருகன். அந்த அறையில் இருந்த கிளி, இந்தச் சல்லாபப் பேச்சுக்களை அப்படியே மறுநாள் வெளியிடுகிறது. 'மாமியாரும் நாத்தியும் எங்கே அதைக் கேட்டுவிடப் போகிறார்களோ?' என்று வெட்கி, தன் காதிலிருந்த பத்மராகத் தோட்டைக் கிளியிடம் காட்டுகிறாள், மாதுளங்கனியோ என்று கிளி அதைக் கொத்த வருகிறது. முதலிரவு இனிமையைவிடக் கவியின் கற்பனை நம்மை அயர வைக்கிறது. இந்த வகை நாயகியைச் 'சுவாதீன பதிகை' என்பர்.

(3) கவிச்சக்கரவர்த்தி என்றால் கம்பனையும் காளிதாசனையுமே குறிக்கும். காளிதாசனின் 'மேகஸந்தேசத்'தில் சிருங்கார ரசத்தை அருந்தித் திளைக்கலாம். பூஜைக்கு மலர் கொண்டு வரத் தாமதமானதால், குபேரனின் சாபத்துக்கு ஆளாகி, யக்ஷன் ஓராண்டு மறைவாயிருக்கிறான். அளகாபுரியிலுள்ள தன் மனைவி, தன் பிரிவை எப்படி எப்படி எல்லாம் ஆற்றிக் கொண்டிருப்பாள் என்று மேகத்திடம் கூறுகிறான். 'என்னைக் காணாமல் வருந்தி, என்னைச் சித்திரத்தில் வடித்து அழகு பார்ப்பாள். பிரிவை மறப்பதற்காக வாசலில் கீச் கீச்சிடும் பறவையினங்களுக்குத் தானியங்களை வாரி இறைப்பாள்; கருணையிலே கணவன் பிரிவை மறக்கப் பார்ப்பாள். 'விரகோத்கண்டிதா' என்ற கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணுக்கு உவமை யக்ஷனின் மனைவி.

(4) அன்னம் தூது போய்த் தமயந்தியிடம் முன்பே நளனைப் பற்றிக் கூறியிருக்கிறது. அதனால் நேரில் சந்திக்காமலே நளனும் தமயந்தியும் காதலர்களாக விளங்குகின்றனர். தமயந்திக்குச் சுயம்வரம் ஏற்பாடாகியதும், 'ஆஹா, கண்ணால் கண்டு மகிழாத சுந்தர புருஷர், நளன் வரப்போகிறார்; அவருக்கே மாலையிட்டு மகிழப்போகிறேன்' என்ற குதூகலத்துடன், நிலைக்கண்ணாடியில் தன் மேனியெழிலை, மதி முகத்தை, அலங்காரச் சிறப்பைப் பார்த்துக் கொள்கிறாள். மகிழ்ச்சிப் பெருக்கால் மார்பு விம்முகிறது; இன்பத்தைச் சுவைத்து மனம் துள்ளுகிறது. மனத்தைக் கவர்ந்த மணாளனை எதிர்பார்க்கும் இந்த மதுரமான மங்கையை 'வாஸக ஸஜ்ஜிகா' என்பார்கள்.

(5) கதைக் களஞ்சியம் போல் விளங்கும் கதாசரித் சாகரத்தில் அழகான பல கதைகள் இருக்கின்றன. மலையவதி என்ற அரசிளங்குமரி, தன் காதலனை எதிர்பார்த்துப் பஞ்சணையில் இரவுப் போதைக் கழிக்கிறாள். விடியும் நேரத்தில் காதலன் திரும்புகிறான். மனைவியைச் சமாதானப்படுத்த எண்ணி வேகமாக வருகிறான். ஆனால் அவன் முகத்தில் காணப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு அடையாளங்கள், அவன் பரத்தை வீட்டுக்குப் போயிருந்தான் என்பதைக் காட்டிவிடுகின்றன. காதலி எதுவும் பேசவில்லை. அவன் முகத்துக்கெதிராக ஒரு கண்ணாடியை எடுத்துக் காட்டுகிறாள். காதலன் தலையைக் குனிந்துகொள்கிறான்; 'கண்டிதா' என்ற வகைக் குமரி இவள்.

(6) கணவனைப் பிரிந்திருக்கும் மங்கையருக்கு எதிலுமே நாட்டம் ஏற்படாது. அலங்காரம் செய்து கொள்ளப் பிடிக்காது; உணவு தெவிட்டும்; உடலில் பசலை பூக்கும். பொழுது போக வீணையை எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்க உட்காருவாள். வீணையின் நாதம் எழுந்ததும், 'ஆஹா, நம் கணவர் அருகில் இருந்தால் எப்படி ரசிப்பார், பாராட்டுவார்' என்ற பழைய நினைவுகள் வந்துவிடும். கண்ணீர் முத்துக்கள் வீணையின் தந்தியில் விழுந்து சிதறும். இதே போன்ற நினைவுகளைப் பிரிந்திருக்கும் கணவனின் மனமும் அசைபோடும். மேகசந்தேசத்தில் வரும் யக்ஷன், தன் மனைவியைப் பற்றியும் இப்படி எல்லாம் நினைக்கிறான். 'ப்ரோஷித பர்த்ருகா' என்ற இந்த மங்கையர் பழைய நினைவுகளில் மனத்தைக் கரைப்பர்.

(7) 'காதலன் வருவான் வருவான்' என்று காத்திருப்பதைவிட, அவனையே எதிர் கொண்டு போய்விடுவது நல்லதல்லவா? சாருதத்தனைத் தேடிக்கொண்டு வசந்தசேனை புறப்படுகிறாள். வசந்தசேனைக்கு அலங்காரம் செய்து அணிமணி பூட்டி, அவள் தோழி கூறுகிறாள்: 'இரவு உனக்குத் தோழிபோல் விளங்குகிறது. மின்னல், ஒளிக் கீற்றுப்போல் வழிகாட்டுகிறது. பயப்படாமல் போ, காதலனை அடைந்து களிப்பாயாக'. 'அபிசாரிகை' என்ற இந்த வகை நாயகிகளை 'மிருச்சகடிகம்,' போன்ற காவியங்களில் காணலாம்.

(8) மாலையும் மதியும் காதலர்களின் உள்ளங்களில் களியாட்ட நினைவுகளைத் தூண்டிவிடுபவை. காதலனை எதிர்பார்த்திருக்கிறாள் காதலி. ஆனால் காதலனோ பரத்தையிடம் சென்றிருக்கிறான்; இலவு காத்த கிளியாக இரவெல்லாம் கண்விழித்துக் காத்திருந்த காதலியிடம் கருக்கலில் வந்து சிரித்துச் சிரித்துப் பேசி மழுப்புவான். காதலன் செய்யும் சாகசங்களில் மயங்கிவிடாமல் எப்படிக் கோபத்தைக் காட்டவேண்டும் என்று தோழி கூறுகிறாள். 'அவன் வந்ததும் முறுவல் செய்யாதே, கண்களில் கோபம் தெரியட்டும், கௌரவத்தை இழக்காதே' என்கிறாள். ''அடி பைத்தியம், என் நாயகன் எங்கோ இருக்கிறான் என்று எண்ணி இரைந்து பேசாதே. அவன் இதோ இருக்கிறான்'' என்று தன் இதயத்தைத் தொட்டுக் காட்டுகிறாள். அமருதசதகத்திலே வரும் அழகிய தலைவியை 'கலகாந்தரிதை' என்பார்கள்.

'பெண்ணாகப் பிறக்க மாதவம் செய்திடவேண்டும்' என்ற கவி வாக்குப்படி, இந்த எட்டு நாயகிகளும் மதுர மங்கையராய், இனிமையின் மறுபிறப்பாய் வாழ்கிறார்கள்; வாழ்வும் அளிக்கிறார்கள். காவியக் காட்சிகளைத் தொகுத்துத் தந்தவர் சென்னை, சம்ஸ்கிருதக் கல்லூரிப் பேராசிரியர் திரு கே. வி. சேஷாத்திரிநாதன் அவர்கள். திரு மணியன் செல்வனின் தூரிகை அவற்றுக்கு வண்ண வடிவம் கொடுத்திருக்கிறது.

1
2
கலைமகள்-தீபாவளி மலர் 1983

3
4

5
கலைமகள்-தீபாவளி மலர், 198
6

7
8

நா. பார்த்தசாரதி

கடைசியாக ஒரு வழிகாட்டி

பல்கலைக் கழக ரிஜிஸ்திரார் ஆபீசில் அவள் தெரிந்துகொண்ட தகவல் கவலையளிக்கப் போதுமானதாக இருந்தது. எதிர்காலமே இருண்டு போகும்போல் இருந்தது. விளக்கடியில் தேங்கி நிற்கும் இருட்டைப் போல ஒவ்வொரு பேராசிரியரிடமும் தேங்கியிருந்த விருப்பு வெறுப்புக்களும், பழி வாங்கும் மனப்பான்மையும், சுய சாதி அபிமானமும் பயங்கரமாயிருந்தன; அநாகரிகமாகவும் இருந்தன.

இப்போதைய இந்த வெள்ளத்தில் எதிர் நீச்ச லீட்டுக் கரை சேர முடியுமா என்று பல போராட்டங்களை நடத்தியிருந்த அவளுக்கே மலைப்பாயிருந்தது. இத்தனை விருப்பு வெறுப்புகளுக்கும், சூதுவாதுகளுக்கும், கள்ளம் கபடுகளுக்கும், குரோத விரோத மனப்பான்மைகளுக்கும் நடுவே கல்வி எப்படி வளர முடியும் என்று அவளுக்கே சந்தேகமாகக்கூட இருந்தது. அரசாங்கமே அங்கீகரித்திருந்த வகுப்புவாதப்பிரதிநிதித்துவ முறைகளைத் தவிர, ஒவ்வொரு பேராசிரியரும் தனியே தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப ஒரு பிரதிநிதித்துவ முறையை வைத்துக் கொண்டிருந்தார்.

''அந்தப் புரொபஸரா? அவருக்கு இன்ன இன்ன ஆட்களுக்குக் 'கெய்டாக' இருக்கப் பிடிக்காது. ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துவிடுவார்'' என்று ஒருவரைப்பற்றிச் சொன்னார்கள்.

''இவரா? ஒவ்வொரு ஸ்டேஜிலும் ரிஸர்ச் ஸ்டூடண்டைப் பணம் கேட்பார். கொடுத்து மீறுவது கடினம்.''

''அவரா? ஆபத்தான பேர்வழி. பெண்கள் அவரிடம் போவது நல்லதில்லை. ஒரு மாதிரி சபலபுத்திக்காரர்.''

அவள் ஆராய்ச்சி செய்ய இருந்த துறையில் 'கெய்டு' ஆகப் பல்கலைக் கழகம் அங்கீகரித்திருந்த பேராசிரியர்களின் எண்ணிக்கையே நாலு ஐந்துதான் இருந்தது. அவள் முழு நேர மாணவியாகக் கற்க விரும்பியதால் பல்கலைக் கழகம் 'ரிஸர்ச் சென்ட'ராக அங்கீகரித்திருக்கக் கூடிய ஒரு கல்வி நிறுவனத்தில் அங்கீகாரம் பெற்ற வழிகாட்டியாகக் கூடிய ஒரு பேராசிரியரைக் 'கெய்டா'க் கொண்டுதான் அந்த ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகளாலும், படிக்கிற நாளில் பல்வேறு மாணவர் போராட்டங்களில் கலந்துகொண்டு போதுமான அளவு கெட்ட பெயர் எடுத்திருந்ததாலும் அவளுக்கு இடமும், 'கெய்டும்' கிடைப்பது சிரமமாக இருந்தது. சில இடங்களில் பயந்தார்கள். வேறு சில இடங்களில் உள்ள சிரமங்களைச் சொல்லி மற்றவர்கள் அவளைப் பயமுறுத்தினார்கள். ஆக உயர் கல்வியும், ஆராய்ச்சித் துறைகளும் எல்லாம்

பயத்துக்கும் பயமுறுத்தல்களுக்கும் நடுவே இருந்தன.

அவளைப்போல் புதுமைப் பெண்ணாக வளர்ந்துவிட்ட ஓர் இளம் பெண்ணுக்கு மற்றெல்லாத் தகுதிகளும் இருந்தும்கூட ஆராய்ச்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஓர் வழிகாட்டி கிடைக்கவில்லை. இடமும் அகப்படவில்லை.

''சுகுணா, நீ கல்லூரி நாட்களில் மறியல், போராட்டம் என்று நிறையச் செய்துவிட்டாய். சில பேராசியர்களைக்கூட விரோதித்துக் கொண்டுவிட்டாய். அதனால்தான் இப்போது இந்தச் சிரமம் எல்லாம். அடங்கிய பெண்ணாகக் கல்லூரி நாட்களைக் கழித்திருந்தால் இந்தச் சிரமமெல்லாம் இப்போது உனக்கு ஏற்படாது'' என்றாள் சுகுணாவின் தோழி ரத்னா.

''தெரியாமல் சொல்கிறாய் ரத்னா! அடங்கிய பெண்ணாக இருந்திருந்தால் நான் படித்து மேலே வந்திருக்கவே முடியாது. போராடுகிறவர்களுக்கு மட்டுமே, இந்த உலகம். பயப்படுகிற உலகத்தில்தான் இன்று நாமும் வாழ்கிறோம்.''

இதற்கு ரத்னாவால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. தாராள மனப்பான்மையும், பெருந்தன்மையும், உதவுகிற குணமும் இல்லாதவர்கள்தாம் கல்வித்துறையில் பெரிய பெரிய பதவிகளில் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். நிறையப் பேர் நன்றாகப் படிக்க வேண்டும், பட்டங்கள் பெற வேண்டும் என்று நினைப்பதற்குப் பதிலாக, நிறையப் பேர் படிக்கவேண்டாம்; பட்டங்கள் பெற வேண்டாம் என்று நினைக்கிற மனப்பான்மையே பல ஆசிரியர்களிடம் இருந்தது.

புரொபஸர் ரத்னவேல்ராஜ் என்பவரிடம் ஒதுக்கப்பட்டிருந்த 'கோட்டா'வில் ஓர் இடம் மீதமிருக்கிறது என்று கேள்விப்பட்டு அவரைச் சந்திக்கப் போனாள் சுகுணா.

வியர்வை ஆறாக ஓடுகிற கடுமையான கோடைக் காலத்திலும் சூட், கோட், டை உட்பட அணிந்து, பைப் புகைத்துக் கொண்டிருந்தார் அவர், கறுப்புத் துரையாகக் காட்சி அளித்தார்.

சுகுணாவின் நேரத்தில் ஒரு மணிக்கு மேல் எடுத்துக்கொண்டுவிட்ட அவர், தாம் ஆக்ஸ்போர்டில் படிக்கப்போனது, வந்தது, எல்லாவற்றையும் விவரித்துவிட்டு, அவளுடைய ஆராய்ச்சி பற்றி யோசித்து முடிவு செய்து பிறகு சொல்வதாக நழுவிவிட்டார். நாசுக்காக அவள் என்ன சாதி என்றறியும் முயற்சியிலும் இறங்கினார் அவர்.

அடுத்து அவள் பார்த்த மனிதர் டாக்டர் தாமஸ். அவர் தம்மிடம் இருந்த ஒரே இடத்தை யாரோ மந்திரி சிபாரிசு செய்த ஒரு மாணவருக்காகப் பதிவு செய்துவிட்டதாகவும், தம்மைத் தேடியலைந்து இனி அவள் நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை என்றும் கூறி முகத்தில் அடித்ததுபோல் மறுத்துவிட்டார்,

மூன்றாம் மனிதராக அவள் சந்தித்தவர் இளைஞரான டாக்டர் வீரபத்திரன்.

''இதோ பார் அம்மா! நான் கூடியவரை பெண்களை ரிஸர்ச் ஸ்டூடண்ட்ஸா எடுத்துக்கொள்ள வேண்டாம்னு கொள்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் கொஞ்ச வயசுக்காரன்; திருமணமாகாதவன்; பெண்களுக்குக் 'கெய்டா' இருந்தா வீண் கதை கட்டி விட்டுடுவாங்க. மனம் விட்டுச் சொல்றத்துக்காக நீங்க வருத்தப்படக்கூடாது. மன்னிக்கவேணும், ஸாரி'' என்று பயந்து ஒதுங்கினார் வீரபத்திரன்.

அடுத்துப் பார்த்த புரொபஸர் கனி என்பவரும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கத்திரித்து அனுப்பிவிட்டார்.

இந்தப் பேராசிரியர்கள் எல்லாரும் நவநாகரிகமாக உடை அணிந்திருந்தார்கள். ஆனால் இவர்கள் மனம் மிகவும் அநாகரிகமாக இருப்பதை அவள் உணர்ந்தாள். இவர்கள் மிக அழகாக ஆங்கிலம் பேசினார்கள். ஆனால் ஆங்கிலேயர்களிடம் உள்ள தாராள மனமும், பெருந்தன்மையும் கிஞ்சித்தும் இவர்களிடம் இல்லை. ஆங்கில நடையுடை பாவனைகளும் குறுகிய இந்திய மனமுமாக இவர்கள் உலவினார்கள்.

சுகுணாவுக்குப் படிப்பிலேயே வெறுப்பு வந்துவிட்டது. பி.எச்.டி.யே வேண்டாமென்றுகூட விரக்தி ஏற்பட்டது. ஆராய்ச்சிக்கு விருப்பமும் தகுதியும் உள்ளவர்களுக்கு ஆராய்ச்சி செய்ய வாய்ப்பில்லை. விருப்பமும் தகுதியும் அற்றவர்கள் மீது ஆராய்ச்சிகள் திணிக்கப்படுகின்றன. ஆராய்ச்சித் துறைகளையும், ஆராய்ச்சிக்கு வழிகாட்ட வேண்டிய பேராசிரியர்களையும், அவர்களின் ஊழல்களையும் பற்றியே ஒரு பெரிய ஆராய்ச்சி செய்ய வேண்டும்போல் இருந்தது. ஆனால் எந்தப் பல்கலைக் கழகமும் அப்படி ஓர் ஆராய்ச்சியை ஏற்று அதற்குப் பட்டம் வழங்கத் தயாராயிராது.

ஏமாற்றமும், விரக்தியோடு கூடிய கசப்பு உணர்ச்சியுமாக அவள் ஆராய்ச்சி செய்யும் எண்ணத்தையே கைவிட்டுவிட்டு, ஏதாவது குமாஸ்தா வேலைக்குப் போய்த் தொலைக்கலாம் என்று இருந்தபோது, கடைசியாக விசாரிப்பதற்கு இன்னும் ஒரே ஒருவர் மீதமிருப்பது தெரியவந்தது. பெரிய நம்பிக்கை ஒன்றும் இல்லை. அதையும் பார்த்துவிடலாம் என்றுதான் தேடிப் போனாள்,

''பொன்மலர்க் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்று மறுபடி அங்கேயே யூ. ஜி. ஸி. ஆராய்ச்சிப் பேராசிரியராக இருந்த ஒரு வயதானவரிடம் யாருமே இன்னும் ரிஜிஸ்தர் செய்துகொள்ளவில்லை. காரணம், அந்தப் பேராசிரியர் 'ஸ்டிரிக்ட் டிஸிப்ளினேரியன்'. நிரம்பக் கர்நாடகமான ஆள். பத்தாம் பசலி ஆசாமி என்று நிறைய மாணவர்கள் போகப் பயப்படுகிறார்கள். 'மெத்தடாலஜி டெஸ்ட்' முடிவதற்குள்ளேயே கசக்கிப் பிழிந்துவிடுவாராம்'' என்று தோழி ரத்னா வந்து சொன்னதிலிருந்துதான் அந்தத் தகவலே சுகுணாவுக்குத் தெரிந்தது.

''அந்த மனிதரின் பேர் என்னடி ரத்னா?'' என்று சுகுணா கேட்டதற்கு, ''பேர் நினைவு இல்லை. ஏதோ பழங்காலப் பேர். மறந்துபோச்சு. கடைசியிலே நாயுடுன்னு முடியும். ஆனால் கண்டுபிடிக்கிறது ரொம்பச் சுலபம். அந்த டிபார்ட்மெண்ட்டிலே அவர் ஒருத்தர்தான் யூ.சி.ஜி. புரொபஸராம். எல்லாரும் டாக்டர் நாயுடுன்னுதான் கூப்பிடுவாங்க.''

புறநகரில் அவர் குடியிருக்கும் வீட்டு விலாசத்தையும் ரத்னாவே குறித்துக் கொடுத்திருந்தாள்.

கடைசியாக முயன்று பார்த்துவிடலாம் என்று சுகுணா டாக்டர் நாயுடுவைத் தேடிப் போனாள். அமைந்தகரைக்கும் அப்பால் கோயம்பேடு போகிற வழியில் ஒரு தென்னந் தோப்பிற்கு நடுவில் இருந்தது அந்தப் பழங்கால வீடு. வீடே கோயில்போல் இருந்தது. முகப்புக் கதவின் மரநிலைப்படியில் நாமமும் இருபுறமும் சங்கு சக்கரமும் இருந்தன. டாக்டர் சந்தானகிருஷ்ண நாயுடு எம்.ஏ. பி.எச்.டி. என்று சிறிய பிளாஸ்டிக் போர்டும் இருந்தது.

முன் திண்ணையில் பட்டையாக நாமம் தீட்டிக்கொண்டு காதில் சங்கு சக்கரக் கடுக்கன் அணிந்த கிழவர் ஒருவர் கிழிந்துபோன காஞ்சிபுரம் பழுக்காக்கரை வேஷ்டி ஒன்றை ஊசி நூலில் கவனமாகத் தைத்துக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் தடிமனாக நாலாயிர திவ்யப் பிரபந்தம் என அட்டையில் அச்சிட்ட பெரிய புத்தகம் ஒன்று கிடந்தது.

இதைப் பார்த்ததும், கல்லூரி நாட்களில் நாமம் விபூதிப்பட்டை அணிந்த பேராசிரியர்களைத் தானும் சக மாணவ மாணவிகளும் விதவிதமாகக் கிண்டல் செய்திருப்பது அவளுக்கு நினைவுக்கு வந்தது. ஒரு சமயம் நாமம் போட்ட ஹிஸ்டரி புரொபஸர் ஒருவர் கலந்துகொண்ட வரலாற்றுக் கழகத் தொடக்க விழாவில் அவளும் சக மாணவர்களில் ரௌடிகளான சிலரும் அழுகிய தக்காளி, முட்டைகளை எறிந்து கலாட்டா செய்திருந்தனர். பஞ்சாங்கக்காரர்கள் போலவும் புரோகிதர்கள் போலவும் தோற்றமளித்த சில பழங்கால ஆசிரியர்களை வகுப்புக்களில் கிண்டல் செய்த சம்பவங்களும், ''புரோகிதரா, புரொபஸரா?'' என்று சுவர்களில் எழுதி வைத்ததும் நினைவுக்கு வந்தன.

''யாரும்மா? என்ன வேணும்?'' பழைய வேஷ்டி தைத்துக்கொண்டிருந்த நாமக்காரக் கிழவர் அவளை நிமிர்ந்து பார்த்துக் கேட்டார்.

சுகுணா சிந்தனை கலைந்து இந்த உலகிற்கு வந்தாள்.

''புரொபஸர் சந்தானகிருஷ்ண நாயுடு அவர்களைப் பார்க்கவேணும்'' என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

''திண்ணையில் உட்கார் அம்மா.''

அந்தக் கிழவருக்கு ஆங்கிலத்தில் பேச வராததால்தான் தனது ஆங்கில வினாவுக்குத் தமிழில் பதில் சொல்கிறார் என அவளாக நினைத்துக் கொண்டாள். கிழவர் புரொபஸரின் அண்ணாவாகவோ, தந்தையாகவோ இருக்க வேண்டும் என்பது அவள் அநுமானம்.

நாமக்காரக் கிழவர் உள்ளே எழுந்து போனார். அவள் திண்ணையில் உட்கார்ந்தாள்.

உபதேச ரத்னமாலை, நித்யாநுசந்தானம், திவ்யார்த்த தீபிகை என்று சமய நூல்களாகத் திண்ணையில் அடுக்கியிருந்தன. ஒரு வர்த்தகத் துறைப் படிப்பின் பேராசிரியர் வீட்டு முகப்பில் ஒரே சமய சம்பந்தமான புத்தகங்களாக இருந்ததைக் கண்டு அவளுக்கு என்னவோபோல் இருந்தது. இதற்கு முன்னால் அவள் தேடிச் சென்றிருந்த டாக்டர் ரத்னவேல் ராஜ், தாமஸ், கனி ஆகிய பேராசிரியர்கள் வீட்டில் எல்லாம் புதியவையாக வந்துள்ள பொருளாதார நூல்கள் போன்றவற்றைத்தான் கண்டிருந்தாள். இங்கோ எல்லாமே கோவிந்த நாம சங்கீர்த்தனமாகவே இருந்தன. வேஷ்டி தைத்துக் கொண்டிருந்த கிழவரின் புத்தகங்களாக இருக்கலாம் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

பத்து நிமிஷங்கள் ஆயின.

''என்ன காரியமாக வந்தாய் அம்மா?''

குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வேஷ்டி தைத்துக் கொண்டிருந்த அதே கிழவர்தாம் இப்போது ஒரு கதர் அரைக் கைப் பனியனோடு மீண்டும் எதிரே வந்து உட்கார்ந்திருந்தார்.

''புரொபஸரைப் பார்க்க முடியுமா?'' என்று ஆங்கிலத்திலேயே மீண்டும் கேட்டாள்.

''நான்தான் அம்மா. வந்த காரியத்தைச் சொல்லு.'' கிழவர் சிரித்துக் கொண்டே இதைக் கூறினார்.

தான் ஆங்கிலத்திலேயே பேச, அவர் தமிழிலேயே பதில் சொல்வது அவளுக்கு உறைத்தது. மறுபடி ஆங்கிலத்தில் தொடங்கி உதட்டைக் கடித்துக்கொண்டு நடுவே 'ஸாரி ஸார்' போட்டு ஆங்கிலத்தை முறித்து மீண்டும் தமிழில் பேச முயன்றாள் அவள்.

''என் பெயர் சுகுணா. முதல் வகுப்பில் டிஸ்டிங்ஷனோட போஸ்ட் கிராஜுவேட். 'ரிஸர்ச்'சுக்கு ஒரு 'கெய்டு'க்காக அலையறேன். நீங்கதான் பெரிய மனசு பண்ணணும்''.

''எந்த வருஷம் எம்.ஏ. முடிச்சே? எந்தக் காலேஜ்?''

வருஷத்தையும், படித்த காலேஜின் பெயரையும் கூறினாள் அவள்.

''வம்பு தும்புக்குப் பெயர்போன காலேஜ் ஆச்சே அது?''

அவள் இதற்குப் பதில் சொல்லவில்லை.

''அந்தக் காலேஜிலே பசங்க படிக்கிறதை விடப் போராடறத்துக்கும், ஊர்வலம் போறதுக்குமே வருஷம் பூராச் செலவழிஞ்சு போயிடுமே!''

இதற்கும் அவள் பதிலே கூறவில்லை.

''உங்களுக்கு எல்லாம் யாரு புரொபஸரா இருந்தா?''

''கண்ணபிரான் ஸார்தான் புரொபஸர்.''

''அவன் நல்ல படிப்பாளி. பாவம்! அந்தக் காலேஜிலே போய் மாட்டிக் கொண்டான்.''

இதற்கும் அவள் பதில் எதுவும் கூறவில்லை.

''என்கிட்டச் கட்டுப்பாடு பார்க்கிற குணம் அதிகம். நீயோ 'கட்டுப்பாடு கிலோ என்ன விலை என்று கேட்கிற காலேஜிலே படிச்சு வந்திருக்கே. ஒரு வருஷத்திலே 'மெத்தடாலஜி' முடிக்கணும். அப்புறம் நிறைய 'லைப்ரரி ரெஃபரன்ஸு'க்கு அலையணும். சிரமப்பட்டு உழைச்சுப் படிக்கணும். இதுக்கெல்லாம் சம்மதமானால் சொல்லு. இப்பவே உனக்குக் 'கெய்டா' இருக்கச் சம்மதிச்சு யூனிவர்ஸிடி ஃபாரத்துலே கையெழுத்துப் போட்டுத் தரேன்.''

''நீங்க சொல்றபடி கேக்கறேன் ஸார்.''

''ரிஜிஸ்டிரேஷன் ஃபாரம் இருக்கா? கொண்டு வந்திருக்கியா?''

அவள் அடக்க ஒடுக்கத்தோடு கைப்பையைத் திறந்து ஃபாரத்தைத் தேடி எடுத்து அவரிடம் அளித்தாள்.

அவர், ''ஸ்ரீமதே ராமானுஜாய நம:'' என்று கூறிக் கண்களை மூடி ஒரு நிமிஷம் தியானிப்பதுபோல் செய்துவிட்டு, அவளுடைய பி.எச்.டி. ரிஜிஸ்திரேஷன் ஃபாரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். அவள் சாதி சமய கோத்திர விசாரணையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர் இறங்கவில்லை.

'மூன்றாவது உலகநாடுகளின் வளமும் பொருளாதார வளர்ச்சியும்' என்று அவள் கொடுத்திருந்த ஆராய்ச்சித் தலைப்புத் தொடர்பாக நடுவே அவர் இரண்டு வாக்கியங்கள் ஆங்கிலத்தில் பேசியபோது அவரது அந்த ஆங்கில உச்சரிப்பும் கம்பீரமும் அவளை மெய்சிலிர்க்கச் செய்தன. 'இவ்வளவு பிரமாதமாக ஆங்கிலம் பேசக்கூடிய இவரா இது வரை தமிழிலேயே பேசினார்?' என்றெண்ணி வியந்தாள் சுகுணா.

''ரிஸோர்ஸஸ் அண்ட் டெவலப்மெண்ட் ஆஃப் த தேர்ட் வோர்ல்ட் கண்ட்ரீஸ் என்கிற தலைப்பை இன்னும் சுருங்கிய எல்லைக்குக் கொண்டுவர வேண்டும்'' என்று அவரே யோசனையும் கூறினார்.

''நீ நாளைக்குக் காலையில் காலேஜுக்கு வா. பிரின்ஸிபாலிடமும் ஒரு கையெழுத்து வாங்கிக்கணும். அப்புறம் ஃபாரத்தை யூனிவர்ஸிடிக்கு அனுப்பணும். அதுக்கு முன்னாலே தலைப்பைப் பத்தி நாம் விவாதிச்சு முடிவு பண்ணிக்கலாம்.''

''சரி ஸார். நாளைக்கு வரேன்.'' அவரை வணங்கிவிட்டு மீண்டும் நன்றி கூறியபின், புறப்பட்டாள் சுகுணா.

கம்பீரமான ஆங்கிலேயரின் உடையில் தமிழ்நாட்டு மனத்தோடு கூடிய குறுகிய உள்ளம் படைத்த பல பேராசிரியர்களையே நேற்று வரை அவள் சந்தித்து ஏமாந்து போயிருந்தாள். அவர்கள் தாராளமாக ஆங்கிலம் பேசிவிட்டுக் காரியத்தில் மட்டும் தமிழர்களாக நடந்து கொண்டார்கள். நாயுடுவோ தமிழில்தான் பேசினார். ஆனால் செயலில் ஆங்கிலேயராக நடந்து கொண்டார்.

இன்று கடைசியாகத் தமிழ் நாட்டு உடையில், ஆங்கிலேயர்களின் தாராள மனமுள்ள ஒரு பேராசிரியரை அவள் சந்தித்துவிட்டாள். தனக்குச் சுலபமாக ஒரு வழிகாட்டி-கெய்டு - கிடைத்துவிட்டார் என்பதை நம்புவதே கடினமாக இருந்தது அவளுக்கு.

நவநாகரிகமான உடைக்குள்ளே நுழைந்திருக்கும் அநாகரிகமான பல பத்தாம் பசலி மனிதர்களைவிட, அநாகரிகமான பத்தாம் பசலி உடையில் ஒளிந்திருக்கும் நவநாகரிகமான மனிதர் ஒருவரை எதிர்பாராத வகையில் வழிகாட்டியாக அடைந்ததைத் தன் பாக்கியம் என்றே கருதினாள் சுகுணா. *

With best compliments from

W. S. Insulators of India Limited

MANUFACTURERS OF

- LIGHTNING ARRESTERS
- PORCELAIN BUSHINGS FOR TRANSFORMERS AND SWITCHGEARS
- TRANSMISSION LINE AND SUB STATION INSULATORS UPTO 400 KV
- SOLID CORE INSULATORS UPTO 220 KV
- CAPACITORS FOR POWER FACTOR CORRECTION
- COUPLING CAPACITORS
- CURRENT TRANSFORMERS
  INDUCTIVE AND CAPACITIVE VOLTAGE TRANSFORMERS
- LINE TRAPS

Regd. Office and Works:
PORUR, MADRAS-602 104.

Grams: POWRFLO, MADRAS
Telex: 041 - 281
ABC: 41 281 WSI IN
Phone: 431811|4.



கலைக்க முடியாத களை

சு. சமுத்திரம்

அன்று இரவு தொலைக்காட்சியில் கண்ணுக்குக் குளுமையான, காதுக்கு இனிமையான நல்ல நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதாக, மூன்று நாட்களாகவே அறிவிக்கப் பட்டிருந்தது. 'ஒலியும் ஒளியுமா? 'திரைமலரா?' என்று நளினிக்கு இப்போது நினைவில்லைதான். என்றாலும், அப்போது பார்த்த 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' அவளுக்கு எப்போதுமே வருந்தும் தடங்கலாக வந்ததை, அவளே நினைத்தாலும் மறக்கமுடியாது.

மாலை, குரங்கின் கை மாலையாகக் கசங்கிக்கொண்டிருந்தது. அவள் அறைக்குள் ஒவ்வொருத்தியாக வந்து உட்கார்ந்தார்கள். கல்லூரியில் பல்வேறு பாடப் பிரிவுகள் இருப்பதுபோல் அந்த மாணவிகளும், பல்வேறு வண்ணத் தோரணைகளில் வந்தார்கள். ஒரே கூட்டம். அந்த மகளிர் கல்லூரி விடுதியிலும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. ஆனால், அது ஓட்டை; உடைசல். நளினியிடமோ அழகான வண்ணப் பெட்டி இருந்தது.

நளினி சிரித்தபடி, அத்தனை பெண்களையும் வரவேற்பதுபோல், இருக்கைகளை நகர்த்திப் போட்டாள். அந்த அறை, திரையரங்காகியது. வசதியாக உட்கார்ந்திருந்த ஒரு வெடிவால் தாவணி, "நளினி, கதவைச் சாத்தட்டுமா? இதுக்கு மேல் கூட்டம் தாங்காதுடா" என்றாள்,

நளினி சிரித்தபடியே சொன்னாள்: "அப்படிக் கதவைச் சாத்தறதாய் இருந்தால், முதல்லே, நான்தான் அறைக்கு வெளியே நிற்பேன்."

அப்போது வாசலுக்குள் நுழைந்த தமிழ்ப் பட்டப்படிப்பு இரண்டாவது ஆண்டுக்காரி ஒருத்தி, வெடிவால் மங்கையைச் செல்லமாகவும், சீண்டுவது போலவும் கேட்டாள்.

"இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பாராம். ஒனக்கென்னடி வந்திருக்கு?"

"ஏய், வாயை அடக்கிப் பேசுடி."

"இடையர் பொறுத்தாலும் இடைக்குட்டி நாய் பொறுக்காதுன்னு சொல்லவந்தேன். எதையும் அடக்கிப் பேசணும் என்பதால்தான், முதல் உதாரணத்தைச் சொன்னேன்."

இரண்டு பெண்களும், ஒருவரை ஒருவர் சக்களத்திகள் மாதிரி பார்த்தபோது, அரசி, ஆண்டாள், மல்லிகா, செண்பகம், பாமா, வடிவு, விமலா, கமலா, கஸ்தூரி ஆகிய மற்றப் பெண்கள், அவர்களை(ய) தொலைக்காட்சிப் பிம்பங்களாய் நினைத்து ரசித்தபோது, நளினி அமைதிப்படுத்தினாள்.

"ஏன் இப்படிக் 'கதைக்கிறிங்க?' இங்கே யாரும் யாருக்கும் பிச்சை போடலே. நம்மோட பேச்சுக்கள்ளாம் காகிதத் தோட்டாக்கள்தான். ஆனாலும், அந்தக் காகிதம் அட்டைக் காகிதமாய் அழுத்தமாய் ஆகிவிடக்கூடாது."

எல்லாப் பெண்களும், அவளை அதிசயித்துப் பார்த்தார்கள். பொருளாதாரப் பட்டப் படிப்பில் இறுதி ஆண்டு. ஏதோ உச்சியிலிருந்து, சுனைநீர் உள்ளூறக் கொட்டிக்கொண்டிருப்பது போன்ற குளுமையான முகம். சிவப்பும் கறுப்பும் சந்தித்து, தங்களது 'சந்ததி' நிறத்தைப் பரீட்சார்த்த ரீதியில் உருவாக்கியவை போன்ற கருஞ்சிவப்பு. உடைமேல் உடல் வைத்ததுபோல் இருந்த பல பெண்களுக்கு மத்தியில், உடைக்குள், உடலே தெரியாமல் இருந்தது. அந்தப் பெண்கள், அதற்காக அவளை அதிசயித்து நோக்கவில்லை. அவள் அழகால் ஏற்படும் இயல்பான இலைமறைகாய்மறைப் பொருமையையும் மீறிய அன்புப் பார்வை. சூது என்பதே இனிமேல் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதுபோல், பேசும் பேச்சு; வாயில் சென்னைத் தமிழைச் சின்னதாக்கும் தமிழ். அவளையே சொல்லி வைத்ததுபோல் பார்த்த அத்தனை பெண்களும், வாசலில் சத்தம் கேட்டுக் கண்களைத் திருப்பிக் காதுகளைச் சாய்த்தார்கள்.

நாணம் கலந்த பார்வையோடு சித்திராவும், இன்னும் நான்கைந்து பெண் பட்டாளமும் உள்ளே வந்தது. சித்திரா, பையிலிருந்த அழைப்பிதழை எடுத்து, நளினியிடம் நீட்டினாள். நளினி அதைப் படிக்கும் முன்னாலேயே, "எப்போ கல்யாணம்? அவர் பேரு என்ன? நீ காதலிச்ச அதே ஆள்தானே?" என்றாள்.

"படித்துப் பாரேண்டி" என்ற சித்திரா, அங்கேயே திருமணம் நடந்து கொண்டிருப்பது போல நாணப்பட்டபோது, அதே அந்த வெடிவால் மாணவி, "இவள் பேரு, சித்திரா. அவர் பேரு பங்குனி, இல்லேன்னா வைகாசி" என்றாள்.

உடனே, இன்னும் அவளிடம் 'கன்மம்' வைத்த தமிழ்க்காரி, "ஏண்டி? கர்நாடகமாய்ப் பேசுறே? சித்திரை சித்ரா ஆயிட்டா, பங்குனி பங்குனியா ஆயிடும்! வைகாசி, வைகான்னு ஆயிடும். என்னப்பா, என்ன பேருப்பா? முந்தின மாதமா? பிந்தின மாதமா?" என்றாள்.

உடனே வெடிவால், "இன்னும் கல்யாணமே ஆகலே! அதுக்குள்ளே எப்படி மாதம் வரும்?" என்றாள்.

நளினி சிரித்தபடி சொன்னாள்:

"ஒன் ஆள் பேர் என்னவோ? ஒன் பேர் சித்திரா. அதனால அவருக்கு நாங்க வைக்கிற பேர் பங்குனி, அதாவது பங்கு நீ. நீ அப்படித்தான் கூப்பிடணும்."

மணக்கப் போகிறவளோடு வந்த விடுதி மாணவியர் செயலாளர் தமயந்தி நளினியை உரிமையோடு கண்டித்தாள்.

"என்னடி நளினி, இவளுக்கு ஏதாவது செய்யணுமுன்னு நன்கொடை வசூலிச்சோம். நீ கண்டுக்கலே" என்று சொன்னபடியே பாதி மையான ஒரு காகிதத்தை நீட்டினாள். அதில், நளினி எதையோ எழுதி நீட்டிவிட்டு, மேஜையைத் திறந்தபோது, செயலாளப் பெண் ஆச்சரியம் தாங்க முடியாமல் கந்

தினாள். ''அடேயப்பா, நூற்று ஒரு ரூபாய்!''

எல்லா மாணவிகளும், தொலைக் காட்சிப் பெட்டியை நோக்காமல், அந்தக் காகிதத்தையே பார்த்த போது, நளினி ஒரு சின்ன அட்டைப் பெட்டியைத் திறந்தாள்.

''சித்திரா, இங்கே, வா. இது உன் கைக்குச் சரியாய் இருக்கான்னு பாரு. இல்லேன்னா நகைக் கடைலே போய் மாத்திட்டு வாரேன்.''

தயங்கியபடி வந்த சித்திராவைத் தன் பக்கம் இழுத்தபடியே, நளினி அவள் கையில் மோதிரத்தை மாட்டினாள். பிறகு, ''ஒனக்குன்னு செய்தது மாதிரியே இருக்குது'' என்று சொன்னபடி, மோதிரத்தைக் கழற்றப் போனாள். உடனே, ''ஒன் விரல்லேயே இருக்கட்டும். ஒன் 'இவர்' கல்யாண மோதிரம் போடுமுன்னாலேயே நான் போட்டதாய் இருக்கட்டும். அப்பாகிட்டே இருந்து இந்த மாதக் 'கோட்டா' வர்லே. இல்லேன்னா பெரிசாவே வாங்கியிருப்பேன்'' என்றாள்.

மாணவிகள் பிரமித்தார்கள். சிலர், 'பணத்திமிரைக் காட்டுகிறாள் பாரு' என்றுகூட, தங்களை அறியாமல் நினைத்துவிட்டு, அப்புறம் தலைகளில் மானசீகமாகக் குட்டிக் கொண்டார்கள். அப்பா, தொழிற்சாலை வைத்திருப்பவர். சென்னை நகரில், தனிப் பங்களாவில் இருக்கவேண்டும் என்று அவர் வாதாடி எழுதியிருந்தாலும், மற்ற மாணவிகளோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே, இந்தக் கொசுத் தொல்லையும், வார்டனம்மா தொல்லையும் நிறைந்த விடுதிக்குள் வந்திருப்பவள் நளினி. லண்டனில் படிக்கவேண்டும் என்று அப்பா சொன்னாலும், படித்தால் தமிழ்நாட்டுத் தலைநகரில்தான் படிப்பேன் என்று பிடிவாதம் போட்டிருந்தவள். அதோடு, இந்தச் சித்திரா, அவளுக்கு உயிர்த் தோழி.

சித்திராவும், அவள் மெய்காவலாளிகளும் போய்விட்டார்கள். மாணவிகள் தொலைக் காட்சியை உற்று நோக்கினார்கள். நளினிக்கும் தொலைக் காட்சி ஒளிபரப்பு, அவள் மனத்தில், காசிநாதனை ஒளிரூபமாக்கி, காதுகளில் அவன் ஒலியை உள்வாங்க வைத்தது. 'காசிநாதன் இப்போ என்ன செய்வார்? என் மாதிரியே

என்னையே நினைத்தபடி இருப்பாரா? மதுரைக்கு வரணுமுன்னாரே, வந்திருப்பாரா?'

தொலைக்காட்சியில் அந்த நிகழ்ச்சி முடிந்து, அடுத்த நிகழ்ச்சி துவங்கியது. ஒரு சில மாணவிகள் ஓடிவிட்டார்கள். பெட்டியில் வண்ணம் போய், வெண்மை வந்தது. உடனே நேரத்தைக் காட்டும் 20—29—50, அப்புறம் 50, 51,.. 60. பிறகு, வட்ட வட்டமான உள்வட்டங்களைக் கொண்ட ஒரு பெரிய வட்டம்.

'வணக்கம். இன்றைய தலைப்புச் செய்திகள்.

'இலங்கையெங்கும், குறிப்பாக, கொழும்பு நகரில் நூற்றுக்கணக்கான தமிழர்கள், சிங்களவர்களால் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கொலைவேகம் குறையவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.'

நளினி, தன்னை அறியாமலே எழுந்தாள். அந்தக் கொலைகள், அந்தப் பெட்டிக்குள்ளேயே நடப்பதுபோல், அதை விரோதித்துப் பார்த்தாள். துக்கித்துக் கேட்டாள். கேட்கக் கேட்கக் காதுகள் சிவந்தன. பார்க்கப் பார்க்கப் பரிதவிப்பு;

பதினைந்து நிமிடச் செய்தி வாசிப்பில், பத்து நிமிடங்களுக்குமேல், இலங்கை. இலங்கையில் இனப் படுகொலைகள். வாசிப்பாளரே, அரண்டும், மிரண்டும், அழுவது போலவும் படித்தார். கொழும்பில் மட்டும், நூறு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்களாம். ராணுவம் இந்தக் கொலைகாரச் செயலில் ஈடுபட்டிருப்பதுபோல் தெரிகிறதாம். ஊரடங்கு உத்தரவாம், பத்திரிகைத் தணிக்கையாம். பெண்கள் கற்பழிப்பாம். தமிழ்க் குழந்தைகள் நெருப்பிலாம். தெருக்களில் ஒரே பிணக் குவியலாம். விமானப் போக்குவரத்து ரத்தாம். தொலைதகவல் தொடர்புத் துண்டிப்பாம். துப்பாக்கிச் சூடுகளாம்!

நளினி நடப்பது தெரியாமல் நடந்து, அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிமேல் சாய்வது தெரியாமல் சாய்ந்தபோது, பெட்டியின் மேல் முனையில் இரண்டாக விரிக்கப்பட்ட திரைத்துணி, மீண்டும் தொங்கி, இழவுச் செய்திகளைச் சொன்ன திரையை மறைத்தது. அதுவரையில், செய்திகளைச் சிறிது துணுக்குற்றுக் கேட்ட மாணவிகள், அப்போதுதான், நளினிக்கு ஒரு வேளை ஏற்பட்டிருக்கக்கூடிய ஈடு செய்ய முடியாத இழப்புக்களை உணர்ந்தவர்கள்போல் ஓடிப் போய், அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். அவளோ, அவர்களையும் மீறி, அடித்துப் புரண்டாள். கொழும்பில் நடுத்தரத் தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான அவள் தந்தையும், தாயும், தம்பியும், தங்கையும் சிங்களவர்கள் அதிகமாக வாழும் நகர்ப்பகுதியில் ஒற்றைக் குடும்பமாய் இருப்பவர்கள். அவளைக் கைப்பிடிப்பதாக இருக்கும் காசிநாதன் அதற்கு அடுத்த தெருவில், பொறியாளனாக இருப்பவன். ''என்ன ஆனார்களோ?'' நளினி வாய்விட்டுக் கதறினாள்.

''அப்பா அம்மா, ஒங்களையும் தம்பி தங்கைகளையும் நான் உயிரோடு பார்ப்பேனா? பார்க்க முடியுமா? காசி, என்னோட காசி. அப்பப்பா, அம்மம்மா, என்னை விடுங்கடி! விடுங்கடி!''

கல்லூரிக் கட்டிடமே அதிரும்படி நளினி கத்தினாள். அந்த விடுதியில் உள்ள அத்தனை பெண்களும் ஓடி வந்தார்கள். ஒரே அமளி. ஒரே பரபரப்பான படபடப்பு. நளினி மூர்ச்சித்தவளாய்த் தரையில் விழுந்தாள். எவளோ ஒரு பெண், சமயோசிதமாக, அவள் முகத்தில் நீரைத் தெளித்தபடி, ''காற்று வேணும். கொஞ்சம் வழி விடுங்க'' என்றாள். நளினியே அங்கு மரித்துவிட்டதுபோல், மாணவிகள் 'ச்சொ', 'ச்சொ' என்றார்கள். இறுதியில் விடுதிச் செயலாள மாணவி தமயந்தி, நளினியைத் தூக்கி நிறுத்தினாள்; தன் தோளிலே சாய்த்துக் கொண்டாள். 'என்ன விஷயம்' என்பதுமாதிரி ஒருத்தியை வினாக்குறியுடன் அவள் பார்க்க, அவள் விளக்கினாள். விளக்கும்போதே அழுதுவிட்டாள். அழுதவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நளினியும் அழுதாள். இறுதியில் செயலாளப் பெண் நளினிக்கு ஆறுதல் கூறினாள்.

''என்ன நளினி, குழந்தைமாதிரி! ஒன்னோட நல்ல குணத்துக்கு ஒன் குடும்பத்துலே யாரும் செத்திருக்கமாட்டாங்கம்மா. நிச்சயமாய் நம்புடி.''

நளினி, அவள் மார்பில் முகம் புதைத்தாள். பிறகு, ''நான் எப்படியோ? என்னோட அம்மா அப்பா குணத்தோட ஒப்பிட்டால் நான் தூசுடி தூசு. என்ன ஆனாங்களோ தமயந்தி? அவங்களோட பிணத்தையாவது நான் பார்ப்பேனாடி?'' என்றாள்.

''அபத்தமாய்ப் பேசப்படாது. வேணுமுன்னாப் பாரேன். அவங்களுக்கு எதுவும் ஏற்பட்டிருக்காது.''

''ஏய் தமயந்தி, என்னை இப்பவே கொழும்புக்கு அனுப்புடி. என் பெற்றோரை நான் பார்த்தாகணும். என் தம்பி, தங்கைகிட்டப் பேசியாகணும். இப்பவே பார்க்கணும்; இப்பவே பேசணும். என்னை அனுப்புடி. அப்படியே அவங்களைப் பார்க்க முடியாட்டால் அவங்களுக்கு வந்தது எனக்கும் வரட்டும். எனக்கும் வரணும். தமயந்தி, என்னைக் கூட்டிட்டுப் போடி. கூட்டிட் ...''

மாணவிகள் மௌனித்தார்கள். அத்தனை கண்களும் மேகமாயின. அவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று புரியவில்லை. 'அப்பா செத்தால் அம்மாவைக் காட்டலாம். அம்மா செத்தால் அப்பாவைக் காட்டலாம். இருவரும் செத்தால், குடும்பத்தில் எஞ்சியவர்களைச் சுட்டிக் காட்டி, ஆறுதல் கொடுக்கலாம். அந்தக் குடும்பமே ஒட்டு மொத்தமாய் உருக்குலைந்திருந்தால்?'

தமயந்தி, தன் அழுகையை அடக்கியபடியே ஆற்றுவித்தாள்.

''அழாதே, நளினி. அழாதே! தொலைக்காட்சியிலே கூறப்படுகிறதின்னுதானே சொல்லியிருக்காங்க?'

''அரசாங்கச் செய்தியில கூறப்படுதுன்னு சொன்னால், 'இலங்கையில கூற்றுவன் கூத்தாடுறான்'னுதானடி அர்த்தம். நாலைஞ்சு நாளாவே பதட்ட நிலை இருக்குதுன்னு செய்தி வந்துதே. சிங்களவங்க, ஐந்து வருஷமாய், தமிழர்களோட வீடுகளுக்குள் புகுந்து, எல்லாப் பொருளையும் கொள்ளையடிச்சுக் கொள்ளையடிச்சுப் பழக்கப்பட்டுப் போனாங்க. இப்போ எம் ஆட்களோட உயிரையே கொள்ளையடிக்கிறாங்களே!''

உள்ளத்தால் செத்து, உடலால் மட்டுமே அங்கிருப்பவள் போல், உணர்வற்றுக் கிடந்தாள் நளினி. ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, ஒவ்வொரு பெண்ணாக அகன்றார்கள். இறுதியில், நளினிக்கு நெருக்கமான தமயந்தி மட்டும் நின்றாள். வெளியே ஏதோ சத்தம் கேட்டு நகரப் போனவளை, நளினி திடீரென்று பாய்ந்து பிடித்துக் கொண்டாள். ''எனக்குப் பயமாய் இருக்கு. என்னை விட்டுட்டுப் போயிடாதே'' என்றாள்.

''இந்த நிலையில, ஒன்னை விட்டுட்டுப் போனால், எனக்கும் சிங்களவங்களுக்கும் என்ன வித்தியாசம்?''

''தமயந்தி, நாய் யாருக்காக அழுறது? அப்பாவுக்கா, அம்மாவுக்கா, தம்பிக்கா, தங்கைக்கா, என்னோட காசிக்கா? யாருக்காகடி அழுறது? இவங்க எல்லாம் உயிரோட இருந்து, அவங்கெல்லாம் எனக்காக அழுதால்கூடப் பரவாயில்லே. ஒருத்திக்காகப் பலர் அழலாம், பலருக்காக ஒருத்தி அழ முடியுமாடி?''

''என்னம்மா நீ, கற்பனையும் பயமும் ஒன்றாயிட்டால் நாம் வேரில்லாமல் போயிடுவோம். நடந்திருக்காத ஒன்றை நடந்ததாய் அனுமானிக்கிறது பெரிய தப்பு.''

''தமய், அப்படியா சொல்றே? எங்க குடும்பத்துலே யாரும் இறந்திருக்கமாட்டாங்கன்னு சொல்றியா?''

''ஆமாம். என் மனசுல ஏதோ ஒண்ணு, ஒனக்கு எந்த இழப்பும் நடந்திருக்காதுன்னு சொல்லுது.''

''நீ சொன்னது மாதிரியே இருக்கட்டும். என்னோடை காசிநாதனுக்கும், ஏதும் நடந்திருக்காதே?''

'சத்தியமாய் நடந்திருக்காதும்மா. நீ என்னை நம்புடி.''

''நிசமாவா?''

''நிசமாவே என் வாக்கு எப்பவுமே பொய்த்ததில்லை.''

நளினி, தமயந்தியை மாணவி மாதிரி பார்த்தாள். ஆசிரியையாக அனுமானித்தாள். யோகியாக நினைத்தாள். முக்காலமும் தெரிந்த முனிபுங்கவப் பெண்ணாய் எண்ணினாள். அவள் கரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டாள். தோளில், வலுவாகச் சாய்ந்துகொண்டாள்.

இரவில் இரு பெண்களும் தூங்கவில்லை. தமயந்தியின் கையைப் பலமாகப் பிடித்தபடி, அங்குமிங்குமாய்ப் புரண்ட நளினி, திடீர் திடீரென்று எழுந்தாள். சுவரில் சாய்ந்தாள். தரையில் அமர்ந்தாள். அறைக்குள் தாவித் தாவி நடந்தாள். மனப்புலனில், அம்மா முதலில், அப்புறம் அப்பா, பிறகு தம்பி ஒரு தங்கை, இறுதியில் காசிநாதன்.'

இந்த நினைவு வகைவகையாய் மாறி மாறி முன்னும் பின்னுமாய் வந்தது. ஐந்து உடல்களும் சிதைந்து, சீரழிந்து, ஈமக்கடனுக்காக இன்னும் துடித்துக் கொண்டிருப்பதுபோன்ற பிரமை. அவர்களின் அவயவங்கள், தனித்தனியாய்ச் சிதறிக் கிடப்பது போன்ற சிந்தனை.

நளினி பயந்துபோனாள். தனியாய் இருக்கப் பயந்துபோய்க் கட்டிலில் கிடந்த தமயந்தியை எழுப்பப் போனாள். பிறகு, அவளோடு சேர்ந்து ஒட்டிப் படுத்துக்கொண்டாள். அவள் கையை, தன் இடுப்போடு சுற்றி வளைத்துக் கொண்டாள். இந்த உளைச்சலில் இன்னோர் எண்ணம்: 'பெற்றோரும், பிறந்தோரும், காசியும் இறந்திருந்தால் நான் இருக்கப் போவதில்லை, இருக்கவேமாட்டேன்.'

சுய மரணச் சிந்தனை, நளினிக்குச் சிறிது சோகச் சுவையைக் கொடுத்தது. எந்தப் பிரச்னைக்கும், மரணம் முற்றுப்புள்ளி வைக்கும் என்பது புரிந்தது. அவளுக்குத் துக்கம் வரவில்லைதான். ஆனாலும் அவள் மரணத் திடத்தோடு படுத்தாள்.

பொழுது புலர்ந்து, புல்லினங்கள் ஆர்க்கும் முன்னாலேயே நளினி எழுந்தாள். பத்திரிகைக்காரர் வருகிற வரைக்கும், அவளால் காத்திருக்க முடியவில்லை. விடுதியை விட்டு வெளியேறியபோது, ஏதோ கேட்கப் போன காவலாளியிடம், ''ஏற்கனவே செத்துப் போனவள்; என்ன ஆனால், ஒனக்கென்னய்யா?'' என்று கத்திவிட்டு, தன்னந் தனியாய் நடந்தாள். பத்திரிகைகளை எதிர்பார்த்து, திறக்கப்படாத கடைகளைப் பார்த்தபடி, திறந்த வழியில் நடந்தாள். நேற்றுவரை விடுதிக்குள்ளேயே இரவில் நடமாடப் பயந்த அந்த இலங்கைத் தமிழ்க்காரி, இப்போது, தன் நடமாட்டமே, பார்ப்பவர்களுக்குப் பயமூட்டும்படி ஓடினாள். தாவினாள். நடந்தாள். ஆங்காங்கே நின்று தேம்பினாள்.

எப்படியோ, எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளையும், ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாங்கியவளுக்கு, அப்போதுதான் காசு கொண்டு வரவில்லை என்பது புரிந்தது. பத்திரிகைக்காரப் பையனிடம் மன்றாடினாள்.

''தம்பி, நான் இதோ இந்தச் செய்தி சொல்ற துரதிருஷ்டக்காரப்பா. அதோ அந்த விடுதியில வந்து காசு வாங்கிக்கிறியா? எனக்கு இவை எல்லாமே வேணும்.''

''அதுக்கென்னம்மா. நீங்க கொண்டு போங்க. நான் அப்புறமாய் வாங்கிக்கறேன்.''

நளினி, கை நிறையப் பத்திரிகைகளோடு வந்தாள். ஒரு சில இடங்களில், நின்று நின்று படித்தாள். ஒரு பத்திரிகையில் வந்தது, இன்னொரு பத்திரிகையில் பொய்யாக்கப்பட்டும் என்ற பொய் மனப்பான்மையுடனேயே படித்தாள். நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்களை இலங்கை ராணுவ பலத்தோடு சிங்களவர்கள் குத்திப் போட்டதும், வெட்டிப் போட்டதும், கற்பழித்

எல்லோருக்கும் எங்களது தீபாவளி வாழ்த்துக்கள்

தீபாவளி வாழ்த்துக்கள்
தீவினை அகன்றிட தீப
ஒளிதனை ஏற்றிடுவோம்
மேம்பட வாழ்ந்திட
மின்சக்தி பெருக்கிடுவோம்
மின்சக்தி பெருக்கி, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும். திறமையை உருவாக்கி, பெருக்கி, நன்கு பயன்படுத்தி பொதுத்துறை நிறுவனங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டும்.
இந்தியப் பொருளாதார மேம்பாட்டுக்காக இவற்றை வலியுறுத்தும் 20-அம்சத் திட்டம் வெற்றிபெறப் பாடுபடுவோம் என்றுகூறி, இந்நாளில் எங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.
மக்களுக்கு சக்தி
பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி 620 014
18-20 கஸ்தூரிபா காந்தி மார்க், புது டெல்லி 110 001
HTM-BHEL-1069

தும் நிருபணமாயின. விடுதிக்குள் எப்படித்தான் வந்தாளோ? நடப்பது தெரியாமல் நடந்து, தன் அறைக்குள் வருவது தெரியாமல் வந்து விழுந்தாள். தமயந்தி, அப்போதும் அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

நளினி சுரணையற்றுக் கட்டிலில் விழுந்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்லப் போன தமயந்தி நிதானப்பட்டாள். 'அழட்டும், நல்லா அழட்டும். மனத்தின் சோகக் குவியல்கள் கண்ணீரில் கரையட்டும். விம்மலோடு விம்மலாய் வெடித்து வெளிக் கிளம்பட்டும்.'

மூடிய கண் திறக்காமல், காலையிலிருந்து நண்பகல் வரை, கட்டிலைக் கௌவிக்கொண்ட நளினியையே தமயந்தி பார்த்தாள். 'இவளோட குடும்பத்தின் இப்போதைய நிலையை, எப்படி அறிவது? யாரிடம் கேட்பது?'

நளினி கண்ணற்றவளாய், கண் விழித்தாள். தமயந்தி, நளினியைத் தாங்கிப் பிடித்து ஆட்டோவில் ஏற்றினாள். இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்கே பலத்த போலீஸ் காவல். அவர்களை உள்ளே விட மறுத்தார்கள். கெஞ்சிப் பார்த்தும் மிஞ்சிப் பார்த்தும் பலன் இல்லை. வெளியே வந்த காருக்குள் இருந்த சிங்கள அதிகாரியைப் பார்த்து, நளினி கையெடுத்துக் கும்பிட்டாள். பலதடவை இந்த அலுவலகம் வந்தவள். அப்போது சொந்தவீடாய்த் தெரிந்த அந்த மாளிகை இப்போது எதிரி வீடாய்க் காட்டியது. நளினி கெஞ்சினாள்.

''என்னை ஞாபகம் இருக்குதா? இதே அலுவலகத்துலே பண்பாட்டு விழாவிலே பாடியவள் நான். என்னோட குடும்பம் கொழும்பில் எப்படி இருக்கு, சொல்ல முடியுமா?''

காருக்குள் இருந்தவர், டிரைவரை உசுப்பினார். கார் பறந்தது. தன்னையறியாமலே, காரின் முன்னால் ஓடிய நளினியை, தமயந்தி துரத்திப் பிடித்தாள். அவளைத் 'தமிழ்ப் புலியாக' நினைத்த ஒரு தூதரகக் காவலாளிமேல், புலிப் பார்வையை வீசினாள். பிறகு, நளினியைத் தோளோடு சேர்த்தபடி, அங்கேயே தவம் கிடந்தாள். தகவல்கள் கிடைக்கவில்லை. தகராறுகள்தாம் கிடைத்தன. இறுதியில், நளினிதான் தமயந்தியை உஷார்படுத்தினாள். ''என்னோட பேரைத் தெரிஞ்சு ஒரு வேளை இன்னும் உயிரோடு இருக்கிற என் குடும்பத்தை ஒழிச்சிடப்படாது. வா.''

நான்கு நாட்கள், நளினிக்கு விநாடி விநாடியாய்க் கழிந்தன. ஒவ்வொரு விநாடியும் உயிர்மரணப் போராட்டம். கொந்தளிப்பைக் குறைக்கும் வகையில் கல்லூரிகள் மூடப்பட்டன. தமயந்தி, இசகுபிசகாய் எதுவும் செய்து விடப்படாதே என்று, அவள் தந்தை வந்து, அவளை வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு போய்விட்டார். தனித்து விடப்பட்ட நளினியின் புலம்பல் ஒடுங்கியது. அழுகை அகன்றது. உணர்வில் செத்துப் போனாள். சோகத்தால் மரத்துப் போனாள். கைப்பணம் போய்விட்டது. எங்கேயாவது போய் விவரம் கேட்க வேண்டுமானால், பணம் வேணுமே!

குப்புறக் கிடந்தவள், விம்மல் சத்தம் கேட்டுக் கண் விழித்தாள். மணப் பெண், தரையில் மண்டியிட்டபடி அவளையே பார்த்து அழுதாள். அழவேண்டியவள், அழுபவளுக்கு ஆறுதல் சொல்பவள் போல், முதுகைத் தட்டிக் கொடுத்தாள். சித்திரா, தன் கையில் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றி, அவளிடம் நீட்டியபடி, ''ஒனக்குப் பணம் வந்திருக்காது. வேற வழியில என்னால் உதவவும் முடியலே. அதனாலதான்..'' என்று இழுத்துப் பேசினாள்.

நளினி, தன் உள்ளங் கையில் திணிக்கப்பட்ட மோதிரத்தை மௌனமாக நின்ற சித்திராவின் விரலில் மாட்டியபடியே, ''இது என்னோட அன்பைக் காட்டுகிற சின்னம். கொடுத்த அன்பைத் திருப்பித் தரலாம். அன்பே வேண்டாமுன்னு இதைத் தரலாமாடி? என் கல்யாணத்துக்குத் திருப்பிப் போடணுமேன்னு நினைக்கறியா? அப்படி ஒரு நிலைமை வராதுடி. தரதாய் இருந்தால், இந்தப் பாவிக்கு அன்பை மட்டுமே தாடி, போதும். அன்பு உருவமற்றது. மோதிரம் உருவம் உள்ளது'' என்றாள்.

சித்திரா நளினியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். விலகி விலகிப் போன அவள் முகத்தைத் தன் தோளில் கவிழ்த்துக் கொண்டாள். நளினியின் பிடறியில், சித்திரா சிந்திய கண்ணீர் பெருக்கெடுத்தது.

இரண்டு நாட்கள் மேலும் ஓடின.

நளினி, அறைக்குள்ளேயே முடங்கிவிட்டாள். காலத்தை மறந்த புலனற்ற நிலை. சொல்லவும் முடியாத, சொன்னாலும் தீராத அவலத்தையே உணவாகக் கொண்ட, உள்ளத்தின் ஒடுங்கிய நிலை. விடுதி வெறுமையாய்க் கிடந்தது. எவளோ ஒருத்தி வந்து, ராமேசுவரத்துக்குப் பாதிக்கப்பட்ட தமிழர்கள், கப்பலில் வந்து இறங்குவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றைப் படித்துச் சொன்னாள். நளினிக்கு லேசாய் உணர்வு தட்டியது. ராமேசுவரம் போய்ப் பார்க்கலாம். பணத்துக்கு?

புத்தகங்களைக் குடைந்து, பெட்டியைக் குடைந்தவளுக்கு, எப்போதோ வைத்திருந்த இருநூறு ரூபாய் கிடைத்தது. எழும்பூர் ரெயில் நிலையத்தைப் பார்த்து ஓடினாள்.

ராமன் தொழுத பூமி, இப்போது இரத்த அலைகளாய் விம்மியது. ஆயிரக் கணக்கான மக்கள் எதிர் கொண்டழைக்க, கப்பலில் வந்திறங்கிய அகதிகளை, நளினி ஓடி ஓடிப் பார்த்தாள். ஒவ்வொருவராய்ப் பார்த்தாள். தெரிந்த முகம் எதுவும் தென்படவில்லை. எவரிடமாவது கேட்கலாம் என்றால், ஒவ்வொரு முகமும் செத்துக் கிடந்தது.

அந்த முகங்களைப் பார்க்கப் பார்க்க' அவர்களின் சுமையையும், தான் வாங்கிக் கொண்டதுபோல் அவள் உள்ளம் கனத்தது. அதே சமயம், தனது இழப்புத் தாங்கிக் கொள்ளக் கூடியது போலவும் தோன்றியது.

சென்னை திரும்பிய நளினி, யார் மூலமாவது, தன் குடும்பத்து நிலைமையை உணர்ந்த பிறகே, ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள். அவர்கள் இருந்தால் இருக்கலாம், இறந்தால் இறக்கலாம். மீண்டும் தன்னந்தனியாய், இலங்கைத் துணைத் தூதரகம் போனாள். அவளை உள்ளேயே விடவில்லை. விரக்தியோடு திரும்பியவள், தமிழக அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்தாள். டாக்டர் சனார்த்தனத்தைச் சந்தித்தாள். அத்தனை பேரும் ஆறுதல் சொன்னார்கள். அறிந்து சொல்வதாய் இதய சுத்தியோடு பதிலளித்தார்கள்.

ஓரிரு நாட்கள், அவளுக்குக் கொலைகார நாட்களாய் ஓடின. அறையே சிறையாகியது. தமிழ் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் திரு அமிர்தலிங்கம், சென்னைக்கு வந்திருப்பதாக வானொலி கூறியது. நளினி லேசாய் உயிர்த்து எழுந்தாள். அந்த இலங்கைத் தமிழ்த் தலைவரைச் சந்தித்தாள். அவரோ, ஒட்டுமொத்தமாய் அத்தனை தமிழர்களுக்குமாக அழுதுகொண்டிருந்தார். நளினி தன் நிலையை எடுத்துச் சொன்னபோது, ''பக்குவமாய், விசாரிச்சுப் பார்க்கேன். ஒரு வேளை நான் விசாரிக்கிறதாலேயே ஒன் குடும்பத்தினர் பழி வாங்கப் படாமல் இருக்கணும். எதற்கும் எழுதிக் கொடு'' என்றார்.

நளினி, எழுதிக் கொடுக்காமல் நழுவி வந்தாள். 'செத்திருந்தால், இந்நேரம் செத்திருப்பார்கள். எனக்குத் தகவல் வேண்டும் என்பதற்காக ஒரு வேளை உயிரோடு இருந்து, அதற்கு நானே எமனாகப் படாது. பார்க்காவிட்டாலும் பரவாயில்லே. நல்லபடியாய்ப் பொன்னோடு பொருளோடு வேண்டாம். கைகால் கதியாய் இருந்தால் போதும்.'

நளினி, விடுதிக்குள் வந்து, உடல் முழுவதையும் மூடிக் கொண்டாள். 'இன்னுமா தூக்கம்?' என்று அம்மா போர்வையை விலக்குகிறாள். ''ஏன் அழுக்குப் போர்வையைப் போர்த்தியிருக்கே?'' என்று அப்பா, கேட்கிறார். ''ரூபவானில ஒரு நல்ல நிகழ்ச்சி'' என்று தங்கை ஞாபகப்படுத்துகிறாள். 'சென்னையில் இருந்து என்ன வாங்கிட்டு வந்தே?'' என்று தம்பி கேட்கிறான். இவர்கள் எல்லாருக்கும் எதையோ பதிலாகச் சொல்லிவிட்டு, நளினி, புரண்டு

படுக்கிறாள். போர்வையால் மீண்டும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை மூடிக் கொள்ளப் போகிறாள். திடீரென்று போர்வை இழுக்கப்படுகிறது. காசிநாதன் சிரித்தபடி, ''எனக்கும் போர்வை'' என்கிறான்.

நளினி அலறியபடியே எழுந்தாள். அவள் சத்தம் கேட்டு யாரும் வரவில்லை. விடுதியே வெறிச்சோடிக் கிடந்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். ஓடாமல் கிடந்தது. நேரத்தை அறிவதற்காக, வானொலிப் பெட்டியைத் திறந்தாள். கொழும்பிலிருந்து, விமானத்தில் தமிழர்கள் சென்னைக்கு வருவதாக, வானொலிச் செய்தி கூறியது. நளினி எழுந்தாள்.

ஒரு மணி நேரத்துக்கு முன்பாகவே மீனம்பாக்கம் விமான நிலயத்துக்கு வந்துவிட்டாள். குடும்பத்தினர் கண்டிப்பாக வருவார்கள் என்று மனம் கணக்குப் போட்டது. அப்பாவுக்குத் தெரியாத அதிகாரிகளே இல்லை. பணத்துக்கும் பஞ்சம் இல்லை. கண்டிப்பாக வருவார்கள். ஒரு வேளை, காசிநாதனும், அவர் குடும்பத்தினரும் வரலாம்; வரவேண்டும்.

விமானம், ஆகாயத்தை வட்டமடித்தபோது, அவள் குதிகால்களை உயர்த்தி உயர்த்தி, பறக்கப் போகிறவள் போல் எழும்பினாள். விமானம் இறங்கியது. நளினி, ஓடினாள். பாதுகாப்புத் தடையையும் மீறிப் போனாள். அதற்குள், விமானத்திலிருந்து, ஒவ்வொருவராய் இறங்கினார்கள். நளினி, தலையைத் தூக்கிப் பார்த்தாள். தன்முன்னால் நின்றவர்களைப் பலவந்தமாய் விலக்கிப் பார்த்தாள். 'அப்பா மாதிரி தோணலையே அம்மா மாதிரி தோணலையே? 'அதோ அப்பா! என்னோட அப்பா. அப்பா, அப்பா, இதோ இருக்கேன், இதோ இருக்கேன்.''

கூவிய நளினியின் குரல் உடைந்தது. வந்தவர் அப்பா மாதிரி, பார்த்தவர்களில், எவரும் அவளுக்குத் தெரிந்தவராய்த் தெரியவில்லை. அதிலே ஓர் ஆறுதல். குடும்பத்தினர் அகதி முகாம்களில் இருக்கலாம். ஒரு வேளை வீட்டிலேயே இருக்கலாம். இல்லையானால், அவர்கள் தப்பியோடி வட மாகாணங்களில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருக்கலாம். திரிகோணமலையில் திரியலாம். கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கலாம்.

விரக்தி வாய்ப்பட்ட வடிவோடு, அவள் திரும்பியபோது, திடீரென்று ஒரு குரல். திரும்பினாள்; யார் என்று அடையாளம் பிடிபடவில்லை. அப்புறந்தான், தந்தையின் தொழிற்சாலையில், குட்டுக் கோட்டும் போட்ட அதே அருணாசலம். இப்போது தாடியும் மீசையும், ஒட்டிப் போன உயிரோடு, உலர்ந்து போன கண்களோடு நிற்பது தெரிந்தது. அந்த முதியவரின் கையைப் பிடித்தபடி அவள் விம்மினாள். அவர் தம் சுமையை எடுத்து வைக்கப் போனார்.

''எல்லாம் முடிந்தது, எல்லாமே முடிந்தது. அப்பா காரில ஏறினார். தொலைவில் வந்த பழக்கப்பட்ட சிங்களவர்களைப் பார்த்து, அப்பா சிரித்தபடி நின்றார். நம் கம்பெனியில் கடனுக்குச் சரக்கு வாங்குபவர்கள் அப்பாவைப் பார்த்துட்டுப் பாய்ந்தாங்க. அப்புறம் அவர் தலை கீழே விழுந்தது. அதோடு விடலே. பிணத்தைக் காலேயே தூக்கிப் போட்டபடி போனாங்க. ஒங்க வீட்டைப் பார்த்து ஓட்டினாங்க. அப்போ என்னோட குடும்பமும் ஒன்னோட தம்பி பிறந்த நாளைக் கொண்டாடறதுக்காகப் போயிருந்தாங்க. எல்லாருக்குமே அது இறந்த நாளாய் ஆயிட்டும்மா. ஒருவர்கூடத் தேறலம்மா. அதோடவும் அவங்க விடலேம்மா. நம்ம தொழிற்சாலையையும் தரை மட்டமாக்கிட்டாங்க. என் தலைவிதி, நான்தான் தப்பிச்சேன். இலங்கையில் நம்ம ஆட்களுக்கு நடந்த கொடுமைகளை, வார்த்தைகளாலே வர்ணிக்க முடியாதம்மா.''

நளினி கல்லானாள், மரமானாள், அவளையே பார்த்தபடி நின்ற அருணாசலத்திடம், ஓர் அதிகாரி வந்து, ''நாங்க ஏற்பாடு செய்திருக்கிற முகாமுக்கு வர்றீங்களா இல்லே, இந்த அம்மாவோட போறீங்களா?'' என்றார். அருணாசலம் நளினியையே பார்த்தார்.

நளினியின் உடம்பு லேசாய் அதிர்ந்தது. 'நான் இனிமேல் இருக்கப் போறதில்லே. இவரும் என்னோடு வந்து என் மரணத்துக்கு இடையூறாக இருக்க வேண்டாம்.' கல்லான நெஞ்சோடு நளினி பதிலளித்தாள்.

''இவரை முகாமுக்கே அனுப்புங்க.''

அருணாசலம், பிரிய மனம் இல்லாமல் பிரிந்தார்.

நளினி, தன்னந்தனியாய் நடந்தாள். மரத்துப் போன மனசோடு, செத்துப் போன சிந்தனையோடு, சாவதற்காக நடந்து கொண்டிருந்தாள். அருணாசலத்திடம், காசிநாதனைப் பற்றிக் கேட்காததுகூட அவளுக்கு உறைக்கவில்லை.

கிண்டியைத் தாண்டி, அண்ணாசாலை வழியாக, அவள் நின்று நின்றும், வேக வேகமாகவும் நடந்தாள். அவள் பார்க்காமலே பல காட்சிகள் அவள் கண்ணில் முட்டின.

ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள். பார்த்தவர் உடைகளில், இலங்கையின் சோகத்தை உள்வாங்கும் கறுப்புத் துணிகள், தொழிலாளர் ஊர்வலங்கள், பல்வேறு கட்சிகளின் சுவரொட்டிகள், பெண்களின் ஊர்வலங்கள், முக்கிய இடங்களில் உண்ணாவிரதங்கள், பாய்ந்து சென்ற வாகனங்களில் கறுப்புக் கொடிகள், 'இந்திய அரசே ராணுவத்தை அனுப்பு' என்ற கோஷங்கள். அன்றாடப் பிழைப்புக்காரர்கள் கூட ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கரங்களில் வில் பிடித்தது போன்ற அட்டைகள், கண்களில், இலங்கையை எரிக்கப்போவது போன்ற அக்கினிப் பிழம்புகள், கொடும்பாவி எரிப்புக்கள், கொலைகாரச் சிங்களவர்களைக் கொல்லாமல் இருக்கிறோமே என்ற தவிப்புக்கள்.

தானும் ஆடி, சதையும் ஆடி, தமிழகமே ஆடிப் போனதை, நளினி சிந்திக்கத் துவங்கினாள். இலங்கைத் தமிழர்களுக்காக, இங்குள்ள தமிழர்கள், ஊழி நடனம் ஆடுவதுபோல் அவள் பார்வைக்குப் பட்டது. பார்க்கப் பார்க்க, அவளுள் இனம் காண முடியாத ஓர் இன உணர்வு ஏற்பட்டது. 'இவர்கள் எல்லாம் யாருக்காக இப்படிச் செய்கிறார்கள்? எனக்காக, என் குடும்பத்துக்காக. என் குடும்பத்தைப் போன்ற இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்காக. இவர்கள் ரத்தம் ஏன் இப்படித் துடிக்கிறது? இதுதான் இனம் என்பதோ? இதுதான் மொழி என்பதோ? இதுதான் ரத்தபந்தம் என்பதோ? இவ்வளவு பெரிய தமிழ்க் குடும்பத்தில் நான் அநாதையா? எம்மவர்களுக்காக, உடலாலும், உயிராலும் துடிக்கும் இவர்கள், என் சோதர, சோதரிகள், என் அப்பன்கள், அம்மாக்கள், உடன் பிறவா உறவினர்கள், நான் இதோ, இந்த அன்பு வர்க்கத்தின் மத்தியில்தான் நடமாடுகிறேன், நடக்கிறேன். ஓர் அப்பாவின் மரணத்தில், இதோ பல தந்தையரைப் பார்க்கிறேன். ஒரு சின்னக் குடும்பத்தின் மரிப்பில் நாலரைக் கோடிப் பேரைக் கொண்ட தமிழ்க் குடும்பத்தைத் தரிசிக்கிறேன். நான் அநாதையில்லை. தற்கொலை செய்துகொள்ளும் கோழையில்லை. இந்த மொழி என் தோழி, இந்த நாடு என் வீடு. நான் போகமாட்டேன். சாவுக்கும் போகமாட்டேன். இலங்கைக்கும் போகமாட்டேன். காசிநாதன் ஒருவேளை உயிரோடு இருந்தால், அவர் இங்கேதான் வரவேண்டும். எந்தத் தகவலும் தெரியாத காசிநாதனைவிட இப்போது என்னிடம் ஆறுதலுக்காகப் புலம்பிய அருணாசலமே முக்கியம்.

தனி வாழ்வில் செத்து, பொது வாழ்வில் பிழைத்த நளினி, ஆர்ப்பாட்டக்காரர்களையும், உண்ணாநோன்பு கொண்டவர்களையும் கையெடுத்துக் கும்பிட்டாள். பிறகு, திரும்பி ஓடினாள். அருணாசலத்தை அகதி முகாமுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பே, அவரைத் தன்னோடு அழைத்துச் செல்வதற்காக. ஓடினாள். உயிரோட்டமாய், உணர்வோட்டமாய் ஓடினாள். *

ஷா வாலஸ் வழங்கும்
சூப்பர் பவர்
ரீகல்
டிடர்ஜெண்ட் கட்டி
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
ரீகலின் அபார சலவை சக்தி, உங்கள் துணிகளில் விடாப்பிடியாகப் படிந்திருக்கும் அழுக்கைத் தகர்த்து விரட்டுகிறது. உங்கள் துணிகளை அதிவெண்மையாகவும் பளிச்சென்றும் சலவை செய்கிறது.
மேலும் ரீகலின் பாதுகாப்பான சலவை உங்கள் துணிகளுக்கு இதமானது, மென்மையானது... புதுமையான நறுமணத்துடன் கூட.
Super Power
Regal
Tough on dirt - Soft on clothes
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
Shaw Wallace
ACIL/0592/83-Tam-R

பல வகையிலும் பயன்படும் இதனை உபயோகிக்காமல் இவ்வளவு நாள் எவ்வாறு சமைத்தோம்!

பிரெஸ்டிஜ் அளிக்கும் பிரஷர் பேன்

வறுக்க பொரிக்க வதக்க வேக வைக்க



இதில் நீங்கள் வறுக்கலாம், பொரிக்கலாம், தாளிக்கலாம், வதக்கலாம் பின்பு மூடி வைத்து வேக வைக்கலாம்—பிரஸ்டிஜின் பிரஷர் பேன் மிகவும் வசதியானது. உங்களுக்காகவே தயாரிக்கப் பட்டுள்ளது. உங்கள் குடும்பத் தினசின சுவைக்கேற்ற பதார்த்தங்களைச் சில நிமிடங் களில் தயாரிக்க இது உதவுகிறது.

மூடியில்லாத, கனமான இந்த வாணலி வெங்காயம், காய்கறிகள், மசாலா, மாமிசம், கோழிக்கறி இவற்றைக் குறைந்த அளவு எண்ணெயில் வதக்க உதவுகிறது.

இதைப் பிரஸ்டிஜின் மூடியினால் மூடி விட்டால் உணவு சீக்கிரம் வெந்து விடுகிறது. சிக்கன் புர்த்தா—20 நிமிடங்களில் தயார். மட்டன் தோப்பியாசா—25 நிமிடங்களில், தம் ஆலு—இன்னும் சீக்கிரம். மற்றக் காரியங்களைக் கவனிக்க நேரத்தை மிச்சப்படுத்துகிறது. எளிபொருளும் நீண்ட நாட்களுக்கு வருகிறது.

பிரெஸ்டிஜ் இந்தப் பிரஷர் பேனைத் தருகிறது—இவர்களதான் இந்தியாவில முதன் முதலாக மிக அதிகமாக விரும்பி உபயோகிக்கப் படும் பிரஷர் குக்கரைத் தந்தவர் கள—பிரஷர் குக்கருககு முழுப் பாதுகாபபைத தரும ஒபபறற காஸகெட் ரிலீஸ ஸிஸ்டம் என்ற அமைபபைப புகுத்தியவர்களும் இவர்களே.

பிரெஸ்டிஜ் பிரஷர் பேன் உங்கள் சமையலறையில் மிக அதிகமாக உபயோகபபடும பாத்திரம. இது உறுதியான சூடேருத ஹேண்டில்களுடனும், கனத்த அலுமினியத தகட்டினுலான அமைபபுடனும் தயாரிககப படுகிறது. இனி ஒரு பாத்திரத்தில் வதக்கி, இனனொரு பாத்திரத்தில் வேகவைத்துக் கடைசியில் பிரஷர் குக்கரில் வேக வைக்கத் தேவையில்லை. இந்தப் பிரெஸ்டிஜ் பிரஷர் பேன் ஒரு பாத்திரத்திலேயே பல பாத்திரங் களின் வசதிகளைத் தந்து விடுகிறது.

<u>பாதிக்கும் குறைவான விலையில் இந்தப் பிரஷர் பேனை வாங்குவது எவ்வாறு?</u>

உங்களிடம் ஏற்கெனவே ஒரு பிரெஸ்டிஜ் பிரஷர் குக்கர் இருந்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!

ஒரு சாதாரண கனமான வாணலியின் விலையில் உங்களுக்குப் பிரெஸ்டிஜ் பிரஷர் பேன கிடைக்கிறது.

உங்கள் பிரஷர் குக்கரின் மூடியை இதில் பொருத்தி விட்டால் உங்களுக்கு ஒரு புது பிரெஸ்டிஜ் பிரஷர் பேன குறைநத விலையில் கிடைக்கிறது. உங்கள் கடின உழைப்பின் ஊதியத் திற்குக் குறைந்த விலையில தரமான தயாரிப்புகளைத் தருவதே பிரெஸ்டிஜின் குறிக்கோள.

இதுவரை உங்களிடம் பிரெஸ்டிஜ் பிரஷர் குக்கர் இல்லாவிட்டால்

இதோ உங்களுக்கு இரட்டை லாபத்திற்கு ஒரு வாய்ப்பு! இப்பொழுது நாங்கள் இரண்டு அபூர்வமான சமயலறை உபகரணங்களை அளிக்கிறோம்—இந்தியாவிலேயே மிகுந்த பாதுகாப்பைத் தரும் உன்னத மான 'காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம்' கொண்ட பிரஷர் குக்கரையும், ஆவலைத் தூண்டும் பிரஷர் பேனையும் தருகிறோம். ஒன்றின் விலைக்குச் சிறிது கூடுதலான விலையிலேயே இரண்டும் கிடைக்கிறது. ஒரு மூடி இரண்டுக்கும் உதவுவதால உங்களுக்கு ரூ. 150/-க்கும் அதிகமான லாபம்.

Prestige
PRESSURE
PAN

ttk தயாரிப்பு

வசந்தம் வாழ்த்துகிறது

கமலா சடகோபன்

மகாலிங்கம் அதிர்ச்சியுடன் அருகிலிருந்த தம் மனைவி ஜானகியைத் திரும்பிப் பார்த்தார். ஜானகி தங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் விதத்தில் பேசிய பானுவை வைத்த விழி வாங்காமல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்த அழகான சின்னப் பெண் நிலைமையைப் புரிந்துகொண்டு பேசுகிறாளா? இல்லே, பணம், வசதின்னு ஆசைப்பட்டுண்டு, தன் தலையிலே தானே மண்ணை வாரிப் போட்டுக்க நினைக்கிறாளா? அப்புறம் இவளே இன்னொரு பிரச்னையாக மாறி இன்னும் மோசமான நிலைக்குச் சதீஷைக் கொண்டுவந்துவிட்டாளானால் என்ன செய்யறது?''

இருவரது முகத்திலிருந்தும் அவர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைத் தெரிந்துகொண்ட பானு, அதை மனத்துக்குள் ரசித்துக்கொண்டு, சமையல்காரன் கொண்டு வந்த காபியை எடுத்துச் சுவைக்க ஆரம்பித்தாள்.

ஜானகி கூறினாள்: ''பானு, உங்கக்கா காயத்திரி என் பிள்ளை சதீஷைக் கல்யாணம் செய்துக்க மறுத்ததிலே ஆச்சரியம் எதுவும் இல்லே. இதை நாங்க எதிர்பார்த்தது தான்.''

மகாலிங்கம் தொடர்ந்தார்: ''ஏளைக்கே, நாங்க இதை மறைச்சு தன்னை ஏமாத்திட்டதா உங்கக்கா எங்கமேலே பழி சொல்லக் கூடாதுன்னுதான், சதீஷுக்கு ஒரு நாட்டியப் பெண்ணுடன் தொடர்பு உண்டுங்கறதை மறைக்காமல் சொல்லி விட்டோம். உங்கக்கா மறுத்தது ஆச்சரியம் இல்லே. அதே மாதிரி நீ சதீஷை மணக்க முன் வந்திருப்பதும் எனக்கு ஆச்சரியந்தான். உனக்கு அவனைப்பற்றித் தெரியும்னு நினைக்கிறேன்.''

பானு தயங்கினாள். ஓய்வு பெற்ற நிலையிலே, வயதுவந்த இரண்டு பெண்களை வேண்டாத சுமைகளாகச் சுமந்து திருமணம் செய்ய வழியில்லாமல் தவிக்கும் அப்பா வரதராஜனுக்காக இரங்கி, அந்த முடிவெடுத்ததாக அவள் கூற முடியுமா?

தறிகெட்டுத் திரியும் சதீஷை மணக்க வெறுத்து, தந்தையையும் எதிர்த்து நிற்கத் துணிவில்லாமல், கழுத்தில் தொங்கும் மஞ்சள் கயிறுக்குப் பதிலாகக் கொடிக் கயிற்றில் தன் கழுத்தைத் தொங்க வைக்கும் முடிவுடன், நேற்று நடு இரவில் அவளுடைய அக்கா காயத்திரி செய்த முயற்சியைப்பற்றி அவள் விளக்க முடியுமா?

'நான் கல்யாணம் செய்துண்டு அதுக்கப்புறம் சதீஷைத் திருத்தி நல்லவனுக்க முடியும்னு சொல்றியே நீ, அதை நீகூடச் செய்யலாமே! மூத்தவளாகப் பிறந்த ஒரே குற்றத்துக்காக நான் சிக்குண்டு தவிக்கிறேன். நீ தப்பிச்சுண்டுட்டே. தைரியமா எனக்குப் பொறுமை உபதேசம் செய்யறே?'

''என்னம்மா பானு, பதிலையே காணுமே?'' மகாலிங்கம் கேட்டார்.

பானு சிரித்தாள். ''இந்தக் கல்யாணத்தினலே அப்பாவுக்கு ஆதாயம் ஏற்படுவது உண்மைதான். அதுக்குப் பதிலாக எங்கக்கா உங்க பிள்ளைகிட்டே இருக்கும் குறையைப் போக்கணும். எங்கக்காவுக்கு அந்த விஷயத்திலே தன்னிடம், அதாவது, தன்னல் முடியும்னு நம்பிக்கை இல்லே. அதனலே அவ விலகிட்டா.''

அவள் தன் அக்காவை விட்டுக் கொடுக்காமல் நாசுக்காகக் கூறும் தன்மையை மனத்துக்குள் பாராட்டினர். ''அப்படியா? உங்கக்காவுக்குப் பதில் நீ சதீஷைக் கல்யாணம் செய்துக்கறதாகச் சொல்றியே, உனக்கு அந்த நம்பிக்கை இருக்கா?''

''இருக்கு சார். உங்க பிள்ளையை இந்தக் கல்யாணத்துக்கு எப்படிச் சம்மதிக்க வைச்சீங்க?''

அவர் மனைவி வேதனையுடன் தலைகுனிந்து கொண்டாள். அவர் வெறுப்பு நிறைந்த குரலில் கூறினர்.

''நாய்க்கு எலும்புத் துண்டைப் போடறதுபோலே, சொந்த பிள்ளைக்கே பணத்தைக் காட்டிப் பணிய வைச்சோம். நாங்க சொல்ற பெண்ணின் கழுத்திலே அவன் தாலி கட்டினு, அவன் கேட்ட பல ஆயிரங்களைக் கொடுக்கறதாச் சொல்லியிருக்கோம்.''

''இந்தமாதிரி பணத்தைக் காட்டி அவரை உங்க வழிக்குக் கொண்டு வருவதை விட இப்போ அவர் இருக்கும் நிலைமையே தேவலை.''

ஜானகி துக்கம் தொண்டை அடைக்கக் கூறினாள்: ''பானு, செய்த தப்பு எங்களுக்கும் தெரிகிறது. அவன் திருந்துவான் என்ற நம்பிக்கையை விட எங்க வம்சம் நல்ல விதமா வளரணுங்கிற ஆசை தான் அதிகமாயிருக்கு. எங்களுக்கு ஒரு பேரன் பிறந்தா போதும்.'' ஜானகி அழுதுவிட்டாள்.

''உஷ், ஜானகி, என்ன இது குழந்தை மாதிரி?'' என்று மகாலிங்கம் கண்டித்தார்.

''ஸார், இன்னொரு விஷயம்?'' பானு தயக்கத்துடன் அவரைப் பார்த்தாள்.

''என்னம்மா?''

''பெரியவ என்ற முறையிலே எங்கக்காவுக்கு முதலில் கல்யாணம் செய்ய வேண்டியிருக்கு. அவளைக் கல்யாணம் செய்துகொடுத்தால் இன்னொரு பெண்ணுக்கும் நீங்களே கல்யாணம் செய்துவைப்பதாகச் சொன்னீங்களே, இப்போ எங்கக்காவுக்குப் பதிலா நான் வரதினலே, அந்த விஷயம் பாதிக்கப்படுமா?''

அவர் அவளைப் புன்னகையுடன் பார்த்தார். பானு மீண்டும் தொடர்ந்தாள்: ''எங்கப்பாவை உறுதிப் பத்திரம் எழுதித் தரச் சொன்னலும் எழுதித் தருவார்.''

அவர் குரலை விட்டுச் சிரித்தார்: ''தேவையில்லேம்மா, நான் உன்னை நம்பறேன். சதீஷ் மனசு மாறுவதற்

குள் இந்தக் கல்யாணம் நடந்து முடிஞ்சுடணும். அதனுலே சீக்கிரமாகவே காயத்திரி கல்யாணத்தை முடிச்சிட்டு, அடுத்த முகூர்த்தத்திலேயே உன் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லு.''

பானுவை வழியனுப்ப வாசல் வரையில் இருவரும் வந்தார்கள். அதே சமயம் போர்டிகோவில் ஸ்கூட்டலிருந்து வாட்டசாட்டமாக ஒரு வாலிபன் இறங்கினுன். ஜானகியைப் போன்று சிவந்த நிறமும், முகஜாடையும் கொண்டிருந்த அவன் உடல்வாகிலும், கம்பீரத்திலும் மகாலிங்கத்தை ஒத்திருந்தான். இவன் குணத்தில் குறை இருப்பது மட்டும் தெரியாதிருந்தால், இவனை நேரில் பார்த்ததும் ஆசையுடன் இவள் மணந்திருப்பாளோ என்னவோ?

''இவன்தாம்மா சதீஷ், தவம் செய்து பிறந்த புதல்வன்'' என்று மகாலிங்கம் பானுவிடம் முணுமுணுத்தார்.

ஜானகி அவனைக் கண்டதும் உள்ளே நழுவிவிட்டாள். அவன் வராந்தாப் படிகளில் ஏறிவந்ததும் புருவங்கள் நெறியப் பானுவைப் பார்த்து நின்ருன்:

''என்னடா பார்க்கறே? உனக்குப் பட்டுக் குஞ்சலமாதான் பார்த்து வைச்சிருக்கேன்.''

''அதுக்காகக் காயத்திரி மந்திரமாவே ஜபிச்சிண்டிருப்பேனு நீங்க நினைச்சா ஏமாந்துதான் போவீங்க!''

''இப்பொ இவளைக் காயத்திரினு நினைச்சா நீதான் ஏமாந்து போவே. காயத்திரி தங்கை இவ. கண் கெடறதுக்கு முன்னே சூரிய நமஸ்காரம் செய்யறது நல்லதுனு இந்தப் பானுவைத்தான் உனக்குக் கல்யாணம் செய்துவைக்கப் போகிறேன்.''

அவன் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான். ''யாராக இருந்தால் எனக்கென்ன? பங்களா, இரும்புப் பெட்டி, பாங்க் பாலன்ஸ் எல்லாத்தையுமே காட்டி இருப்பீங்களே?''

''காண்பிச்சேன். கடைசியாத்தான் உன்னை அவளுக்குக் காண்பிக்கிறேன்.''

பானு விஷமத்துடன் சதீஷைப் பார்த்துவிட்டு மகாலிங்கத்திடம் கூறினுள்:

''பெருமைப்பட வேண்டிய விஷயங்களை முதலில் காண்பிச்சீங்க. இதிலே என்ன தப்பு?''

சதீஷ் கோபத்தினுல் முகம் சிவக்க அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தான்.

ஒரு வார வித்தியாசத்தில் காயத்திரியின் திருமணம் முதலிலும், பானுவின் திருமணம் பின்பும் நடந்தது. இரண்டு திருமணங்களையும் மகாலிங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு சிறந்த முறையில் நடத்தினர்.

மணப்பந்தலில் சதீஷ் நடந்துகொண்ட முறை பானுவுக்கு அதிர்ச்சி அளித்தது. அவள் அவசர முடிவு எடுத்ததற்காகத் தனக்குள் நொந்துகொண்டாள். அடுத்த நிமிடம் பந்தலில் ஒரு பக்கம் நின்று காயத்திரி உவகை பொங்கத் தன் கணவனுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டதும் தன் மனசைத் தேற்றிக்கொண்டாள்.

தாலி கட்டுவதற்கு முன் சதீஷ் தன் தந்தையை அருகில் கூப்பிட்டு, எதையோ கேட்டு ரகசியமாகப் பேசினுன். அவரும் தம் மடியிலிருந்து ஒரு கவரை எடுத்துக் கொடுத்தார். பானு அது என்ன என்பதைப் புரிந்துகொண்டாள். அதன் பின்பு அவளுக்கு அவன் தாலி கட்டும்போது அருவருப்புடன். கண்ணீரை மறைப்பதற்காகத் தலையைக் குனிந்து கொண்டாள்.

மாங்கல ஆரத்தி எடுத்து, மனைவியுடன் அவன் உள்ளே நுழைந்தவுடனேயே, அவன் ஊருக்குப் போவதுபோல் தன் பொருள்களை எடுத்து வைத்துக் கொள்வதைப் பானு கவனித்தாள்.

அவன் அவளைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். ''கல்யாணம் நம் இருவருக்கும் முடிஞ்சாலும், ஹனிமூன் எனக்கு மட்டுந்தான். எங்கம்மா நினைக்கிற மாதிரி வெயிலுக்கோ, மழைக்கோ ஒரு குழந்தை பிறந்துட்டா, என்னை அடக்கி ஆள முடியும்னு நினைச்சா, அதை மறந்துடு...''

''வெறும் வெயில், மழைக்கெல்லாம் நான் மகிழ்ந்துவிடமாட்டேன். நிரந்தர வசந்தம் என் வாழ்க்கையில் வராமல் போகாது. என்னை வாழ்த்தவும் போகிறது.''

''வசந்தம் என் பக்கம் இப்பவே அடிக்க ஆரம்பிச்சிருக்கு. காஷ்மீருக்கு விமானத்தில் பறந்து போகிறேன். ஆனு உன்னேட இல்லே!'' அட்டகாசமாகச் சிரித்தான்.

''தெரியும். என் கழுத்திலே முடிச்சுப் போட அப்பாகிட்டே வாங்கின கூலியிலே இத்தனையும் அநுபவிக்கப் போறீங்க, இல்லையா?''

''கிழம் மாட்டுப் பெண்ணிடம் வீட்டுப் பொறுப்பை மட்டும் ஒப்புவித்ததாக நினைச்சேன். வீட்டு ரகசியத்தையும் உளறிடுத்தாக்கும்.''

''வீட்டு ரகசியமா அது? மானக்கேடான விஷயம்.''

''வாயை மூடு. நீ மட்டும் என்ன? சொத்துக்கு ஆசைப்பட்டுண்டுதானே இந்த வீட்டு மருமகளா வந்தே?''

பானு அருவருப்புடன் அவனைப் பார்த்துவிட்டுக் கீழே வந்துவிட்டாள். இருபது நாட்கள் கழித்து, வீட்டு நினைவு வந்தவன்போல் அவன் வீட்டுக்குத் திரும்பியதும், பெற்ருேர்கள் அவனிடம் பலவிதமாக விவாதித்தனர். சண்டை போட்டுத் திட்டினுர்கள். பானு அவன் இருக்கும் பக்கம் கூடத் திரும்பவில்லை. அம்மாதிரி வாதிப்பதில் நம்பிக்கை இல்லை அவளுக்கு. செயலில் காட்டி அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்த வேண்டும் என்று மனத்துள் எண்ணினுள்.

அவளுக்கு அதற்கொரு வாய்ப்புக் கிட்டியது. ஒரு திரைப்பட விழாவுக்கான டிக்கெட் இரண்டை அவனது நண்பன் கொண்டுவந்து அவளிடம் கொடுத்தான். அதை அவனது மேஜையில் வைத்துவிட்ட அவள் தனக்குள் ஒரு முடிவு எடுத்தாள்.

குறிப்பிட்ட தினத்தன்று அரை மணி முன்னதாகவே மாமனுரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு காரில் டிரைவரைக் கொண்டுவிடச் சொல்லி

அந்த விழா நடக்கும் ஹாலுக்குச் சென்ருள். அந்த நண்பன் அங்கே இருந்ததால், ''மிஸஸ் சதீஷ்'' என்று அறிமுகப்படுத்திவிட்டு, அவளை அவளுக்குரிய ஆசனத்தில் உட்கார்த்தி வைத்துவிட்டான்.

பானு தைரியப்படுத்திக்கொண்டு, எரிமலை வெடிக்கப் போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். சதீஷ் சாவகாசமாக வந்து தனக்கு வேண்டிய ஒருத்தி அருகில் நிற்க, நுழைவாயிலில் டிக்கெட்டுகளை நீட்டினுன்:

பானு அங்கே நடக்கும் வேடிக்கையை ரசித்துக் கொண்டிருந்தாள். சதீஷ் கோபத்துடன் அங்கிருந்தே பானுவைப் பார்வையால் எரித்தான். ஏனெனில் சதீஷுடன் வந்தவள் கோபத்துடன் திரும்பிப் போய்விட்டாள்.

சதீஷ் ஆத்திரத்துடன் பானுவை நோக்கி வேகமாக வந்தான். பல்லைக் கடித்துக்கொண்டு அவளுக்கு மட்டும் கேட்கும்படியாகப் பேசினுன்: ''என்ன அசிங்கம் இது?

மரியாதையா எழுந்து வீட்டுக்குப் போய்த் தொலை. இல்லேன்னு உன் மானம் போயிடும்.''

''மிஸஸ் சதீஷை இங்கிருந்து விரட்ட மிஸ்டர் சதீஷாலும் முடியாது.''

''மிஸஸ் சதீஷாக நீ மாறினதே நான் கொடுத்த பிச்சை.''

''இல்லே, பத்தாயிரம் ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கினேன்.''

கொடுக்கவில்லை. அமைதியாக நின்றாள்.

அந்தச் சம்பவத்திலிருந்து சதீஷ், பானு விஷயத்தில் தன் மிரட்டல் எதுவும் பலிக்காது என்பதைப் பூரணமாக உணர்ந்தான். இரண்டொரு தினங்கள் கழித்து அவன் தனக்கு இம்மாதிரி விஷயங்களில் ரகசியமாக உதவி செய்து வலக்கையாக இருந்துவரும் நண்பன்

''நீங்க ஏறுங்க முதல்லே. டாக்சி டிரைவர் கேள்வி கேட்கறுப்போல இருக்கு'' என்று கேலியாகக் கூறினாள்.

சதீஷ் வேறு வழியில்லாமல், நண்பன் எதிரில் அவளிடம் பேச்சுக் கொடுக்கவும் பயந்து, காரைக் கிளப்பினான்.

இரண்டொரு தெருக்கள்கூடத் தாண்டி இருக்காது. ''மிஸ்டர்''

சதீஷ் வந்த வழியே திரும்ப அந்தச் சொல்லடி ஒன்றே போதுமானதாக இருந்தது. வாசலில் கோபத்துடன் நிற்பவளைச் சமாதானப்படுத்தவேண்டுமே என்ற கவலை வேறு. அவன் திரும்பிவிட்டான்.

பானு எதிர்பார்த்தது போலவே சதீஷ் ஆத்திரத்துடன் வீட்டுக்கு வந்தான். தொண்டை கிழியக் கத்தினான். அவளை வாயில் வந்தபடி திட்டினான். பானு எதற்கும் அசைந்து

ஒருவனுடன், வெளியே புறப்பட்டவன், காரில் பின் சீட்டில் பானு தனக்காகக் காத்திருப்பதுபோல் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தான்.

நண்பன் சங்கடத்துடன் அவனைப் பார்த்தான். ''பரவாயில்லே, ஏறு காரிலே'' என்று அவனை வற்புறுத்தித் தன் அருகில் உட்கார்த்தி வைத்துக் கொண்டான்.

''பானு, நீ எங்கே போகணும்?''

என்று பானு கடுகடுவென்று முகத்தை வைத்துக்கொண்டு கூப்பிட்டாள்.

அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். ''என்னையா கூப்பிட்டீங்க?''

''ஆமாம், கொஞ்சமாவது உங்களுக்கு நாகரிகம் தெரியவேண்டாமா? கணவன், மனைவியா நாங்க வெளியே ஒரு இடத்துக்குப் போகும்போது, நீங்களும் அவசியம் எங்ககூட வந்துதான் ஆகணுமா?''

K. ORR & COMPANY

28, STRINGERS STREET, MADRAS 600 108

Phone: 23019, 23526 Grams: "PRESUNDRY"

Agents and Stockists

- PAPER
- PRINTING Inks: "UNITED", "MONARK", "COATES" and "HOOGHLY" Brands
- PRINTERS SUNDRIES
- MONO SPOOLS

Indents Booked For

- Paper Process Zinc and Copper Sheets, Rubber Blankets, Lithographic Zinc Sheets, Hardware
- Bronze Powders From ENGLAND & Zip Fastners
- Art Paper From JAPAN
- Bolts and Nuts From Rachna Enterprises & Jyoti Steels, Amritsar
- Pearl Buttons, Zips & Sewing Machines from TAIWAN

BAGS & PRINTS

62, CHINNATHAMBI STREET, MADRAS 600001

Phone: 29541 Grams: "PAPERBAG"

Manufacturers of Tele Tapes & Teleprinter Paper Rolls

''ஸாரி மேடம்'' என்று அவன் முணுமுணுத்தான். இதைச் சற்றும் எதிர்பார்க்காத சதீஷ், அவனை அறியாமல், காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டான். அந்த நண்பன் சதீஷிடங்கூடச் சொல்லிக் கொள்ளாமல், அவசரமாக இறங்கித் திரும்பிப் பார்க்காமல் சென்றான்.

பானு இறங்கி முன்பக்கம் வந்து சதீஷின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். ''பானு, நீ மனசிலெ என்னதான் நினைச்சிண்டிருக்கே? மனைவினு அடிக்கடி சொல்லி, அந்த ஒரு காரணத்தாலேயே என் மானத்தை வாங்கறியே? மனைவி என்றால் இப்படித்தான் நடக்கணுமா?''

பானு ஏளனமாக அவனைப் பார்த்தாள். ''சாதாரண மனைவியாக நான் இருந்தால் இப்படி நடந்துக்க மாட்டேன். என் மாமனார் எனக்காகப் பத்தாயிரம் ரூபாய் தனிப்பட்ட முறையிலே தன் பிள்ளைக்கும், என் குடும்பத்துக்கு வேறு எக்கச்சக்கமாகவும் செலவழிச்சிருக்காரே, அதை நான் மறக்கலாமா?''

''இப்பொ எங்கே போகணும்? அதைச் சொல்லித் தொலை.''

''பீச்சுக்குப் போகலாமே!'' சதீஷ் முணுமுணுத்துக் கொண்டே காரை பீச்சுப்பக்கம் திருப்பினான். அதற்குப் பின்பு இருவருமே பேசிக்கொள்ளவில்லை. அன்று இரவு நண்பனுடன் ஜாலியாகக் கழிக்கப் போட்டிருந்த திட்டம் பாழானதை நினைத்து, வெறுப்புடன், வீட்டுக்கு வந்ததும் பர்ஸை மேஜையின்மேல் வீசினான். பானு புன்னகையுடன் பீரோவில் அதை எடுத்து வைத்தாள்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. பானு வழக்கம்போல் ஒரு நாள் இரவில் படுக்கை அறையில் தனியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். நடு இரவில் காலிங் பெல் சப்தத்தினால் தூக்கம் கலைந்து எழுந்த அவள் விளக்கைப் போட்டு மணியைக் கவனித்தாள். ஒரு மணி.

சதீஷ் வழக்கத்துக்கு விரோதமாக இந்த வேளையில் வீட்டுக்கு வந்திருக்கிறான் என்று வியப்புடன் கீழே இறங்கிச் சென்று கதவைத் திறந்தாள்.

சதீஷ் சோர்வுடன் நின்றிருந்தான். ஸ்கூட்டரை வராந்தாவில் ஏற்றக்கூடச் சக்தியின்றி அவன் தவிப்பதை அவள் கவனித்தாள்.

அவன் உள்ளே போனதும், சமையலறை வராந்தாவில் தூங்கிக் கொண்டிருந்த சமையல்காரனைத் தட்டி எழுப்பினான். ''மணி, ஏதாவது சாப்பாடு மீதி இருக்குமா? ரொம்பப் பசிக்கிறதுடா?''

''இல்லையே, எல்லாம் தோட்டக்காரனுக்கும் வேலைக்காரிக்கும் கொடுத்துட்டோம். ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு மேலே என்ன இருக்கும்? ஃப்ரிஜ்லே பழம் ஏதாவது இருக்கும். எடுத்துச் சாப்பிடு'' என்று தூக்கக் கலக்கத்துடன் உளறினான்.

சதீஷுக்கு நல்ல பசி. போன இடத்தில் சீட்டாடிக் கொண்டிருந்ததில் தாமதமாகிவிட்டது. அவனுக்கு வேண்டியவனை அகாலத்தில் போய்த் தூக்கத்திலிருந்து எழுப்பியதில் கோபம் வந்துவிட்டது. 'எங்கேயாவது பன், பால் வாங்கிச் சாப்பிடுவதைவிட்டு என் கழுத்தை அறுப்பானேன்?' என்று எரிந்து விழுந்தாள் காதல் கிழத்தி. கையில் காசும் இல்லை. சீட்டாட்டத்தில் எல்லாம் கரைந்துவிட்டது. ரோஷ உணர்வுடன் வீட்டிலாவது சாப்பாடு கிடைக்கும் என்று அவன் வந்தான்.

பானு வந்து கதவைத் திறந்தாலும், அவளிடம் அவன் என்ன உரிமையில் கேட்பது என்று கூசினான். வெறுப்புடன் சமையலறையை விட்டுத் திரும்பினான்.

''இப்படி டைனிங் டேபிளில் உட்கார்ந்திருங்க. அஞ்சே நிமிஷத்தில் சமையல் செய்து போடுகிறேன்.''

பானு சொன்னதைக் கேட்டதும் திரும்பி வந்து உட்கார்ந்தான். ஒரே சமயத்தில் இரண்டு காஸ் அடுப்பு, ஸ்டௌவ் ஒன்று பற்ற வைத்துக் கொண்டாள்.

டைனிங் டேபிளில் தலைசாய்த்தவன், களைப்பினால் உறக்கம் கண்களை இழுக்க அப்படியே தூங்கிவிட்டான். திடீரென்று குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதும் திடுக்கிட்டு எழுந்தான். பானுதான் எழுப்பியிருக்கிறாள்.

எதிரே அவனது தட்டில் சூடான சாதம், காரட் கோசுமல்லி, தேங்காய் துவையல், பொரித்த அப்பளம், ஒரு கிண்ணத்தில் ஆவி பறக்கும் சூடான ரஸம் இத்தனையும் எடுத்து வைத்திருந்தன.

பானு அருகில் இருந்து பரிமாறச் சதீஷ் சாப்பிட்டு முடித்தான்.

''பெண் போலீஸ் பொன்னம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது ரொம்பத் தப்பாப் போச்சு சார்!''

''ஏம்பா?''

''பின்ன என்ன சார்? நான் கஷ்டப்பட்டு என்னோட டிரஸ்ஸுக்குக் கஞ்சி போட்டு இஸ்திரி போட்டு வச்சா அவ எடுத்து மாட்டிக்கிட்டுப் போயிடறா சார்!''

அவளுடைய முகத்தை ஆவலுடன் முதல் முறையாக நிமிர்ந்து பார்த்தான். இளம் வயதில் அப்பாவுக்குத் தெரியாமல் இரவு வேளைகளில் நேரம் கழித்து வரும்போது, அம்மா தனக்கு உணவு பரிமாறியது அவனது நினைவில் எழுந்தது.

சிந்தனை சிறகிட்டது. நடனக்காரியின் உதாசினம் அவன் உள்ளத்தில் பளிச்சிட்டது. அதே சமயம் கட்டிய மனைவியின் பாசம், கனிவு...

பானு எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு வரும்போது, அவன் படுத்துக்கொள்ளாமல் உலாவிக் கொண்டிருந்தான். மெள்ள அவளது கரத்தைப் பற்றித் தன் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

''பானு, உன் சமையல் பசி வேளைக்கு ரொம்பப் பிரமாதமாக இருந்தது. என் அகோரப் பசியும் தீர்ந்தது. பாவம், உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திவிட்டேன்.''

அவள் மெள்ள அவனுடைய அணைப்பிலிருந்து விலகிக் கொண்டாள். ''பானு, ப்ளீஸ், இன்னும் நீ என்னைப் புரிஞ்சுக்கலியா?''

''புரிகிறது. உங்கம்மா சொன்ன வெயில் மழை எதுனு நீங்கதான் புரிஞ்சுக்கலே? கோபம் என்னும் வெயிலுக்கும், இப்போ ஏற்பட்டுடுள்ள கருணை என்னும் மழைக்கும் நான் மயங்கிடமாட்டேன். நிரந்தரமான வசந்தம் வரும்வரைக்கும் நான் காத்திருக்க விரும்பறேன்.''

அதன் பொருளைப் புரிந்து கொண்ட சதீஷ் ஏமாற்றத்துடன் தன் கட்டிலுக்குச் சென்று படுத்துவிட்டான்.

பானு எதிர்பார்த்துக் காத்திருந்த வசந்தம் ஒரு நாள் வராமல் போகவில்லை. ஆனால் சுலபமாக வராமல் சதீஷின் நோய் உருவத்தில் வந்தது. அவன் உயிர் பிழைத்து எழுந்திருப்பானோ என்று அவளும் பெற்றோரும் கவலைப்படும் அளவுக்குச் சதீஷின் உடல் நிலை பாதிக்கப்பட்டது.

வேளை தவறாமல் ஆகாரமும், மருந்துகளும் கொடுத்துத் தாதி மாதிரி இரவும் பகலும் அவன் படுக்கை அருகிலேயே விழித்திருந்து பானு உட்கார்ந்திருந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னிடம் அவனுடைய கவனம் திரும்பும் வேளையில், இப்படி ஒரு தீமை வியாதி உருவில் இவனுக்கு வந்ததே, என்று வருத்தப்பட்டாள்.

சதீஷ் அந்தக் குறுகிய நாட்களில் அவளது அருகாமையின் உயர்வை உணர்ந்து கொண்டான். அந்தக் கரங்களின் மென்மை, குளிர்ந்த பார்வையில் மிதந்த அன்பு, அவளுடைய குரலில் ஒலித்த இதமான பரிவு, அத்தனையும் தாம்பத்தியத்தின் முழுப் பொருளை அவனுக்கு உணர்த்திவிட்டன.

'அவன் செய்த தப்பைச் சொல்லிக் காட்டி அவனை ஏளனம் செய்து வார்த்தைகளால் விளையாடி வதைத்த அந்தப் பானுவா இவள்?' என்று அவன் வியக்கும் அளவுக்கு முற்றும்

வேறுபட்ட பானுவை அவளிடம் பார்த்தான்.

பெற்ற தந்தையிடம் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு இவள் கழுத்தில் தாலி கட்டினதை நினைத்து வெட்கப்பட்டான். அந்தப் பணத்தையே வேறு ஒருத்தியுடன் உல்லாசமாக இருக்கச் செலவழித்தத் தன் கீழ்த்தரமான புத்தியை நினைத்துத் தன்னை நொந்துகொண்டான். அவன் வெளிப்படையாக எதுவும் சொல்லாவிட்டாலும், பானு நடந்த இரண்டொரு சம்பவங்களினால் அவன் மனம் தன் விஷயத்தில் மாறுதல் அடைந்திருப்பதை உணர்ந்தாள்.

சதீஷ் உடம்பு குணமாகிவிட்டாலும், பலவீன நிலையில் இருந்த அவன், பானுவின் உதவியுடன் வீட்டுக்குள் நடக்க ஆரம்பித்தான்.

அன்று காலையில் பேப்பரில் வெளியாகி இருந்த ஒரு செய்தியை, சதீஷ் எப்படி வரவேற்கிறான் என்பதை, அவன் பேப்பர் படிக்கும்போது மறைந்திருந்து பானு கவனித்தாள்.

பிரபல நாட்டிய நட்சத்திரத்தைக் கதாநாயகியாக வைத்து எடுக்கப்போகும் ஒரு படத்தின் ஆரம்ப விழாவுக்கான பூஜை அன்று ஸ்டூடியோவில் நடப்பதாகச் செய்தி வந்திருந்தது.

சதீஷ் விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் அந்தச் செய்தியைப் படித்தான். இது ஒரு நாள் நடக்கும் என்பது அவனுக்குத் தெரிந்ததுதான். ஏனெனில் திரைப்படத் துறையைச் சேர்ந்த ஒருவனது நட்பு அவளுக்குப் புதிதாகக் கிடைத்திருந்தது.

அவனது முதுகுக்குப் பின்னால் முயற்சிகள் நடந்து கொண்டிருந்தாலும், முகத்துக்கு நேராக அசட்டைகள் நாளுக்கு நாள் அதிகமாவதைக் கண்டுபிடிக்க அவனுக்கு முடியாமல் போகவில்லை.

முன்பு இது நடந்திருந்தால் பாதிக்கப்பட்டிருப்பானோ என்னவோ? இப்போது பானுவின் அருகாமை அவன் மனத்தை முற்றும் மாற்றி விட்டது.

அன்று மாலையில் தோட்டத்தில் பானுவும் அவனுமாக உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பெட்டியுடன் சைக்கிளில் ஒருவன் வந்ததை இருவரும் கவனித்தனர். அவனைச் சதீஷ் அறிவான். இனிமேல் 'அந்த வீட்டுக்குச் சதீஷின் வருகை அவசியமில்லை' என்பதை உணர்த்தும் சூசகம் அது. வேலைக்காரன் மூலம் அவள் உணர்த்திவிட்டாள்.

''உங்க பொருள்கள், டிரஸ் எல்லாம் இந்தப் பெட்டியிலே இருக்கு. அம்மா அதைத் திருப்பிக் கொடுத்துவிடச் சொன்னாங்க.''

பானு சதீஷின் முகத்தை ஜாக்கிரதையாகப் பார்த்தாள்.

''ஏழுமலை, இதை விலைக்கு வித்துப் பணத்தை நீ வைச்சுக்கோ; விலையும் போகல்லேன்னா பெட்ரோலை ஊத்தித் தீயை வைச்சுக் கொளுத்து.''

அவன் குரலில் இருந்த வெறுப்பும் முகத்தில் தென்பட்ட அருவருப்பும் பானுவுக்குப் புரியவைத்தது.

வந்தவன் திரும்பிப் போகும் வரை காத்திருந்த அவள், சதீஷைக் கேள்வியுடன் பார்த்தாள்.

''பானு, இந்த வீட்டின் தூய்மையைக் கெடுக்கும் விதத்திலே, அந்த நினைவைக்கூடச் சுமக்க நான் விரும்பல்லே. இந்த நோயிலிருந்து நான் பிழைத்து எழுந்ததையே, புதுசாப் பிறந்ததைப் போல் நான் நினைக்கிறேன்.''

பானு உடல் சிலிர்க்க அவனைப் பார்த்தாள். ''உண்மைதான் பானு. நீ சொன்னமாதிரி வசந்தம் நம்மை வாழ்த்துகிறது'' என்று சொல்லிச் சிரித்தான்.

பானு பொங்கும் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு, தோட்டத்தைச் சுற்றித் தன் பார்வையைச் செலுத்தினாள்.

அந்த இதமான மாலைப் பொழுதும், மலர்கள் பூத்துக் குலுங்கும் அந்தத் தோட்டத்தின் சூழ்நிலையும் அவளது கணவன் கூறுவது முற்றும் உண்மை என்று ஆமோதித்தன.

✳

வாசகர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

ஒளிமயமான எதிர்காலத்திற்குச் சேமிப்பே சிறந்த வழி
இன்றே எங்கள் வங்கியின் கிளையொன்றில்
உங்களது சேமிப்புக் கணக்கைத் தொடங்குங்கள்.
உங்கள் தேவைக்கேற்ற சேமிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்

எமது பயனுள்ள பல சேமிப்புத் திட்டங்களாவன:

- குழந்தைகள் நலனுக்கான சேமிப்பு
- தனித்தன்மை வாய்ந்த முதலீட்டுச் சேமிப்பு
- நீண்டகாலச் சேமிப்பு
- தொடர் சேமிப்பு
- ரொக்கப் பத்திரங்கள்

விவரங்களுக்கு அருகாமையிலுள்ள எங்களது கிளையினை அணுகுங்கள்:

பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்;

(ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: ஆக்ஸ்போர்ட் ஹவுஸ், அண்ணா சாலை, சென்னை-600 006)

Tel: "SPIDER" Phone: 20160

பொன்னான நன்னாளாம்

இத் தீபாவளித் திருநாளில்

எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

Spider
BANIANS

SHOW ROOMS

ஸ்பைடர் ஷோரூம்
104-A, காமராஜ் சாலை,
திருப்பூர்-638604

ஸ்பைடர் ஷோரூம்
உரிமை பெற்ற விற்பனையாளர்
ராஜாராம் டெக்ஸ்டைல்ஸ்
பஸ் ஸ்டாண்ட், மேட்டுப்பாளையம்

தயாரிப்பாளர்:

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

பூர்ண உரிமையாளர்:

P. சகுந்தலா பழனிசாமி

104-A, காமராஜ் சாலை, திருப்பூர்-638604.

ஒரு முதலமைச்சரின் கதை

கோவி. மணிசேகரன்

ஜெயசிம்மனால் உருவாக்கப்பட்ட கல்யாணி (கி.பி.1008) தலைநகரம், மூன்றாம் தைலப்பனால் மூச்சுத் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் சாளுக்கிய தேசத்துக்கு இப்படி ஒரு சோதனையா?

மதம் பல நாடுகளை மதர்க்கச் செய்தது என்றாலும், பரத (இந்திய) நாட்டைப் பொறுத்தமட்டில், மதம் மண்ணைப் பொன்னாக்கியதும் உண்டு; புண்ணாக்கியதும் உண்டு. இப்போது சாளுக்கிய நாடு புண்பட்டுப் புலம்பிக் கொண்டிருக்கிறது.

வீரசைவ மதத்தால் ஏற்பட்ட புரட்சியை அடக்க முடியாமல் அவலப்பட்டு அலைமோதுகிறான், சாளுக்கிய வேந்தன் மூன்றாம் தைலப்பன். கல்யாணி தலைநகரமே கண் கலங்கி, பின் மண் கலங்கிக் கொண்டிருந்தது. புரட்சிக்குத் தலைமை தாங்கியவன் நேற்றுவரை தைலப்பனிடம் முதலமைச்சனாகப் பணியாற்றிய பிஜ்ஜலன்.

''நாட்டிலுள்ள அனைவரும் கழுத்தில் லிங்கம் வைத்த அணிகலனை அணிந்துகொள்ள வேண்டும். தேச முழுவதும் லிங்காயதர்களாக மாறவேண்டும்!''

இது கடுமையான உத்தரவு தான்.

ஆனால் சாளுக்கிய வேந்தன், பேரமைச்சன் பிஜ்ஜலனின் இந்த உத்தரவைச் செயல்படுத்த மறுத்தான். விளைவு? நாட்டில் வீரசைவப் புரட்சி வெடித்தது. தைலப்பனின் தவிப்புச் சொல்லி முடியாது.

எல்லாப் பொறுப்பையும் பிரதான அமைச்சனிடம் விட்ட தீவினை இப்போது புரட்சி ரூபத்தில் மூண்டு விட்டது.

சாளுக்கிய தேசத்தில் பல மதங்களைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

அவற்றையெல்லாம் விடுத்து அனைவருமே வீரசைவர்களாகி, வேதங்களைப் பழித்து, பிராம்மணர்களை ஒழித்து, மறுபிறப்பில் நம்பிக்கை வைத்த நூல்களை எரித்தார்கள்.

இது என்ன நியாயம்?

சிந்தித்து, சினந்து, சீற்றம் கொள்கிறார், அப்போதைய சிந்தனைவாதியாகவும், கவின் மிகு கன்னட மொழிப் புலவராகவும் திகழ்ந்த ராஜப்பா.

வேந்தன் தைலப்பனுடைய தவத்துக்குரிய அன்புக்குக் கட்டுப்பட்ட நண்பர் ராஜப்பா, துணிந்து தூது செல்கிறார்.

புரட்சிக்குத் தலைவனான பிஜ்ஜலன் புலவர் ராஜப்பாவை முதலில் அனுமதிக்க மறுத்தாலும் மொழிக் காழ்ப்பு ஏற்பட்டுவிடக் கூடாதே என்கிற எண்ணத்தில் வரவேற்கிறான்.

நடந்து வரும் புரட்சி அடாத செயலென்றும், மதம் காரணமாக ஏற்படுகிற எந்தப் புரட்சியும் சரித்திரத்தைத் தலைகுனியச் செய்வதாகும் என்றும் எடுத்துக் கூறுகிறார் புலவர்.

மேலும், 'வேதங்கள், உபநிஷதங்கள் யாவும் நம் பாரம்பரியச் சொத்துக்கள். மறுபிறப்பில் வீரசைவத்துக்கு எவ்வளவு நம்பிக்கை

இல்லையோ, அவ்வளவு நம்பிக்கையுடன் ஏன், ஏனைய மதங்கள் இருக்கக்கூடாது?' என்று வாதிட்டார். முதலமைச்சனான பிஜ்ஜலன் செவிகள் இதுபற்றிச் செவிடாகிவிட்டனவே!

தூது தூசுக்குப் பயனற்றுப் போயிற்று. முடிவில், மூன்றும் தைலப்பன் கொல்லப்பட்டான். அமைச்சுப் பூண்ட பிஜ்ஜலன் அரசு கட்டில் ஏறினான்.

கல்யாணியாகிய தலைநகரிலேயே விழிக்கக்கூடாது என்ற முடிவுடன் வெகு தொலைவிலிருந்த ஒரு கிராமத்தை நாடிச் சென்றுவிட்டார் புலவர் ராஜப்பா. அவருடைய காவிய நெஞ்சுக்கு அந்தக் கிராமம் கவின் மிகு தோற்றத்துடன் திகழ்ந்தது.

கல்யாணித் தலைநகரின் ஆட்சி பீடத்தில் பிஜ்ஜலன் அமர்ந்து அமர்க்களப்படுத்தினான். வீரசைவ சமயம் வேரூன்ற மூலகாரணமாக இருந்த பசவன் என்பான் இப்போது முதலமைச்சனானான்.

ஆ! அமைச்சனாக இருந்தவனே ஆட்டிப் படைத்தவன் இப்போது அமைச்சனாகி இருக்கிறான். என்னே வரலாற்று விந்தை!

அரசியல் மேதையான, அரசியல் நூலை வடமொழியில் எழுதிய மூன்றும் சோமேச்வரன் (கி.பி.112) அமர்ந்த அரியணையில் இப்போது ஒரு மதவெறியனா?

கண்கலங்கிப் போனார் புலவர்.

அவர் அமைதியாகக் காலந்தள்ளிய அந்தக் கிராமத்துக்கு இயல்பான ஒரு சோதனை எங்கிருந்துதான் முளைத்ததோ? அவருடைய கற்பனைச் சோலையான அந்தக் குடிலுக்கு எதிரே ஒருவன் கள்ளுக் கடை வைத்தான். அங்கே வைத்தால்தான் நல்ல வியாபாரம் நடக்கும் என்று நன்கு புரிந்த காரணத்தால் அந்தக் குத்தகைக்காரனான குண்டப்பன் கடைவிரித்தான். நல்ல கொள்முதல்.

புலவர் ராஜப்பாவுக்குப் பொறுமை தாங்க முடியவில்லை. காவியம் பிறந்து நடந்துகொண்டிருக்கிறபோது இப்படி ஓர் அரக்கத்தனமான மது சோதனையா?

நேரே குண்டப்பாவிடம் சென்றார். ''என் வாழ்வு குறித்து நீங்கள் அறிவீர்கள். நான் புலவன். காவியம் சமைப்பவன். என் வீட்டு எதிரில் கள்ளுக்கடை; அதைச் சுற்றி இறைச்சி, மீன், இறால் கடைகள், மலத்தைச் சுற்றி ஈக்கள் மொய்ப்பதுபோல. இதனை வேறு இடத்துக்கு எடுத்துச் சென்றால் இந்த மொழிக்கு நீங்கள் நல்லது செய்தவராவீர்கள்!''

ராஜப்பாவின் வேண்டுதலையாவது ஏற்பதாவது? கவியாம், மொழியாம்!

மேலும், மலத்தைச் சுற்றி மொய்க்கும் ஈக்கள் என்று கூறிய உதாரணம், குண்டப்பாவின் இரு கன்னங்களிலும் பளீர், பளீர் என்று அறைந்ததுபோல இருந்தது.

''புலவரே, கள்ளுக்கடை இங்கேதான் இருக்கும். நீங்கள் வேண்டுமானால் அதோ மலம் கழிக்கும் இடம் இருக்கிறதே, அங்கே சென்று வீடு அமைத்துக்கொள்ளலாம்'' என்றான் குண்டப்பா. சொற்களில் துர்வாடை!

புலவர் ராஜப்பாவின் ஆத்திரம் பொறுமையை இழக்கச் செய்து விட்டது.

''கள்ளுக்கடை புத்தி புளிக்கத்தானே செய்யும், இனிக்கவா செய்யும்?'' என்றார்.

பளார்!

கன்னத்தில் விழுந்தது அறை. ஒரு மகாகவிக்கு ஏற்படக்கூடிய இழிவா இது?

''இதை நீ அநுபவிப்பாய்!''

புலவர் நாவு பொருமுகிறது.

அநுபவிப்பதாவது?

அன்றிரவே அவருடைய வீடு தரைமட்டமானது. அந்தக் கிராமத்தையே விலைக்கு வாங்கவல்ல குண்டனான அவனிடமிருந்த ஆட்கள், இந்தக் கைங்

கரியத்தைச் செய்து முடித்துவிட்டார்.

ஒரு மொழியின் சர்வ வல்லமை பொருந்திய அறிவுஜீவி நடுத்தெருவில் நிற்கும் நிலை குறித்து, நடந்த செய்திகளை விவரித்து எழுதி அப்போதைய அரசனை பிஜ்ஜலனுக்கு அனுப்பிவைத்தார் ராஜப்பா.

நாட்கள் நகர்ந்தனவேயன்றி, நடப்பில் ஒன்றையும் காணோம். முதலமைச்சனாக இருந்த பசவனுக்கு எழுதியனுப்பினார். எந்த விதமான எதிர்பார்ப்பும் ஏற்படவில்லை.

சே! இவர்கள் சாளுக்கியத்துக்கு மாறுபட்ட சாக்கடைகள்! அதனால் தான் ஒரு பாஷா ராஜனுடைய, காவியகர்த்தாவுடைய பொருமையும் பெருமையும் தெரியவில்லை.

சில சமயங்களில், சில நாடுகள் சில சிறுமையானவர்கள்பால் பட்டுச் சிறப்பிழந்துவிடுகிறது.

புலவர் ராஜப்பா அடுத்த கிராமத்தை நாடிச் சென்றுவிட்டார். துஷ்டனைக் கண்டால் தூர விலகு.

ஓராண்டுக்குப் பிறகு...

கலிங்கநாட்டை ஆண்ட கீழைக் கங்க மன்னன், கல்யாணிக்கு வருகை தந்திருக்கிறான் என்கிற செய்தி சாளுக்கிய தேசமுழுவதும் பரவியது.

அரசன் பிஜ்ஜலன் சகல மரியாதைகளுடன் கீழைக்கங்கனை வரவேற்று உபசரித்தான்.

கீழைக்கங்கன் வந்த நோக்கமே புலவர் ராஜப்பாவைத் தரிசிக்க வேண்டும் என்பதற்காக. அவர் எழுதிய 'கங்கா ஸ்நானம்' என்ற நூலைப்பற்றி அறிந்து, அதனைப் பாடக் கேட்கவேண்டும் என்ற பேரவாவுடன் அவன் வருகை புரிந்திருந்தான்.

சாளுக்கிய அரசன் பிஜ்ஜலன் கணத்துக்குக் கணம் புலவர் ராஜப்பாவை எதிர்நோக்கினான்.

இந்த ஒரு வாரத்துக்குள் எத்தனையோ ஆட்கள் குதிரைகளில் இறக்கை கட்டிக்கொண்டு பறந்திருக்கிறார்கள். அழைத்துவர ரதமும் சென்றிருந்தது.

கங்க அரசனுடைய விருப்பத்தை அறிந்த பிறகுதான், 'ஓ! ராஜப்பா இத்தனை பெரிய கவியா?' என்கிற கேள்விக்குறியே பிஜ்ஜலன் நெஞ்சில் ஆச்சரியக் குறியாய் எழுந்தது.

முதலில் வர மறுத்தாலும் பிறகு அரச ஆக்ஞையை அவமதிக்கக்கூடாது என்று எண்ணிக் கல்யாணியை நோக்கி வருகை தந்தார், புலவர் ராஜப்பா.

அரண்மனைக்கு அடுத்திருந்த சிறப்பு வாய்ந்த விருந்தினர் மாளிகையில் அவருக்குத் தங்கும் வசதியும் இட்ட குரலுக்கு ஆளுமாக ஏற்பாடு செய்திருந்தான் பிஜ்ஜலன்.

காலை புலர்ந்ததும், கங்க வேந்தன் தரிசனம்.

மாளிகையின் வேயாமாடத்தில் நின்றுகொண்டு இரவுக் கன்னி தாலாட்டும் கல்யாணித் தலைநகரைக் கவனிக்கிறார் ராஜப்பா. 'எவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்தத் தலைநகரைக் காண்கிறோம்!'

தைலப்பன் ஆட்சியின்போது இருந்த கல்யாணியா இது?

நாளைய பொழுது தன்னை எவ்வாறு சந்திக்கப் போகிறதோ என்ற நினைவுடன் உறங்கச் சென்றார். கீழ்வானில் அக்கினி யாகம் நடந்து கொண்டிருக்கிறது.

வெள்ளென எழுந்து காலைக் கடனை முடித்துச் சூரிய தரிசனம் காண்கிறார் புலவர். அவனிலிருந்துதானே அவனியின் நாகரிகமெல்லாம்?

கொலுமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப் பல்லக்கு வந்திருப்பதாகச் செய்தி வருகிறது. எப்போதும் போன்ற அலங்காரத்துடன் புறப்படுகிறார்.

கொலுமண்டபமே அலங்காரமாகத் திகழ்கிறது.

சாளுக்கியத்தின் அரச ரத்தமிலா அமைச்சு ரத்தம் அரியணையில் அமர்ந்திருக்கிறது. அமைச்சு ரத்தமில்லா மத ரத்தம், பசவர் அமைச்சு பீடத்தில். ஒரு கம்பீரமான பொன்னாசனத்தில் விருந்தினராக வருகை தந்திருந்த கங்க நாட்டரசன்.

புலவர் ராஜப்பாவைச் சகல மரியாதையுடன் அழைத்து வருகிறார்கள்.

'இவர்தாம் புலவர் ராஜப்பா' என்று அறிந்ததும் எழுந்து நின்று கரம் கூப்புகிறான் கங்கநாட்டரசன்.

அவன் அவ்வாறு செய்யவே, வேறு வழியில்லாமல் பிஜ்ஜலனும் எழுந்து நிற்க, அவையே எழுந்து நின்றது.

'ஓ! என் கன்னட மொழியே! உனக்கு இவ்வளவு பெரிய கௌரவத்தை அளிக்க இந்தப் பிஜ்ஜலன் முனைந்துவிட்டானே!'

கவி சிந்திக்கிறார். அவருடைய கண்கள் கொலு மண்டபத்தையே வலம் வருகின்றன. எங்குமே வீரசைவம் பேசும் லிங்காயதர்கள்!

''புலவரே! நமது அரசாங்கச் சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் கங்கநாட்டரசர், நீங்கள் எழுதியுள்ள 'கங்கா ஸ்நானம்' என்கிற காவியத்தை நீங்களே பாடக் கேட்க விரும்புகிறார். அரச ஆணையை ஏற்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்றான் பிஜ்ஜலன்.

அரச ஆணை!

''பிஜ்ஜலா!''

புலவர் இப்படி அழைக்கவே அவையில் ஓர் அதிர்ச்சி.

''பிஜ்ஜலா! அரச ஆணை! யார் அந்த அரசன்?''

மீண்டும் அதிர்ச்சி.

''கல்யாணி அரசன்.''

''கல்யாணி அமைச்சன் என்று சொல்லும்! பச்சையாக இருப்பனவெல்லாம் கிளியாகிவிட முடியாது. கறுப்பாக இருப்பனவெல்லாம் காகம், குயிலாகிவிட முடியா.''

பிஜ்ஜலனுக்கு ஆத்திரமோ ஆத்திரம்.

கங்கநாட்டரசன் புரிந்து கொள்கிறான். இருவருக்குமிடையே ஏதோ மனத்தாபம் ஊஞ்சலாடுகிறது.

''புலவரே, நான் கங்கநாட்டரசன். நான் பணிவுடன் வேண்டுகிறேன். தயவுசெய்து காவியத்தைப் பாட நான் கேட்கவேண்டும்.''

''இந்தக் காவியத்தைக் கல்யாணி மண்டபம் கேட்ட பிறகு என்ன பரிசு கிடைக்கும் தெரியுமா?

''யானை முதுகு சுமக்கும் அளவுக்குப் பொன்னையும் மணியையும் ஏற்றியனுப்புகிறேன்'' என்றான் பிஜ்ஜலன்.

புலவர் ராஜப்பா கலகலவென்று சிரிக்கிறார்.

''நிச்சயமாக அது கிடைக்காது. யானைக் காலால் எனது தலையை இடறச் செய்வாய், பிஜ்ஜலா. கங்கா ஸ்நானம் என்றால் ஏதோ புனித ஸ்நானம் என்று நினைத்துவிட வேண்டாம். இந்த நாட்டில் மதுவால் ஏற்படும் அவலங்கள் குறித்த காவியம் இது. ஒரு கள்ளுக்கடைக்காரன் என் கன்னங்களில், காவியக் கன்னங்களில் அறைந்துவிட்ட அவமான காவியம் இது! இந்த நாட்டை ஒரு முதலமைச்சன் ஆளுகிறானே; அவன் என் குறித்து அசட்டையாக இருந்துவிட்ட அவமதிப்புக் காவியம் இது! இந்தத் தேசத்துக்குப் புனிதமான கங்கா ஸ்நானம் எப்போது என்று கேள்வி கேட்கும் புரட்சிக் காவியம் இது! நீ செய்தது புரட்சியல்ல; நான் பாடியதுதான் புரட்சி. நீயோ முதலமைச்சன்.''

ஓ என்று வெறி கொண்ட வேங்கைபோலச் சத்தமிட இருந்த பிஜ்ஜலனைக் கங்க நாட்டரசன் பார்வை தடுத்துவிட்டது.

''புலவரே, மதுவின் கொடுமைகளைக் குறித்துப் பாடிய இரண்டொரு பாடல்களைக் கேட்டுத்தான் ஓடோடி வந்தேன். ஆனால் உங்கள் கன்னத்தில் ஒரு கேவலமானவன் கை வைத்துவிடுகிற அளவுக்குப் பிஜ்ஜலர் வாளாயிருந்தார் என்றால் அது இலக்கியத்தை அவமானப்படுத்தியதாகும். நல்லது புலவரே, இன்றே என்னுடன் புறப்படுகிறீர்கள். காவியத்தை என் கொலு மண்டபத்தில் அரங்கேற்றுகிறேன்.''

புலவர் ராஜப்பா கலகலவென்று சிரிக்கிறார்.

''கங்க நாட்டரசரே, மகிழ்கிறேன். என் நாட்டின் அவமானத்தை இன்னொரு நாட்டில் அரங்கேற்ற நான் சம்மதியேன். இந்த முதலமைச்சனை அறம் பாடவேண்டும் என்று எண்ணினேன். பாடிவிட்டேன். நான் என் பிறந்த மண்ணை விட்டு எங்கும் போகமாட்டேன். நாளையே இந்த மண்ணில் எனக்குச் சிரச்சேதம் ஏற்படுமானாலும் நான் மகிழ்ச்சியாக என் ரத்தத்தைச் சிந்த ஆயத்தமாக இருக்கிறேன். பிஜ்ஜலன் செய்தது வெறும் மதப் புரட்சி; நான் செய்தது காவியப் புரட்சி.''

புலவர் ராஜப்பா கொலு மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார். 'உன்னை நம்பியோ மொழியை ஓதினேன்?' என்பது போல் இருந்தது அவருடைய மிடுக்கான வீர நடை. கங்கநாட்டரசன் கண்ணயர்ந்து போனான். *

தீபாவளி
வாழ்த்துக்கள்
தீபாவளி திருநாளில்
இன்றுபோல என்றும்
மங்களம் தங்கிட
வாழ்த்துகிறோம்.
THE LAKSHMI VILAS BANK LTD.
LVB
the bank for the masses
லக்ஷ்மி விலாஸ்
பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம் : கரூர் 639001
நிர்வாக அலுவலகம் : சென்னை-600 086
என். முத்தியாலு சேர்மன்

உள்ள உணர்ச்சியும் மெய்ச்சிலிர்ப்பும்

அனுமன் சீதையைக் கண்டு ஆறுதல் கூறிவிட்டு, சீதை கொடுத்தனுப்பிய சூளாமணியை இராமனிடம் கொடுக்கிறான். சீதையைப்பற்றிக் கேட்ட இராமன் மனத்தில் எழுந்த காதல் மிகுதி, அடையாளச் சின்னமாகப் பெற்ற சூளாமணியைத் தொட்டுப் பார்த்ததும் தணிந்தது. திருமண மேடையில் சீதையின் கரம் பட்ட உணர்வு சூளாமணியைக் கையில் பற்றியதும் ஏற்பட்டது.

பையப் பயந்த காமம்
உயர்ந்து பொங்கி,
மெய்யுற வெதும்பி, உள்ளம்
மெலிவுறு நிலையை விட்டான்;
ஐயனுக்கு, அங்கி முன்னர், அங்
கையால் பற்றும் நங்கை
கைஎனல் ஆயிற்று அன்றே
கைபுக்க மணியின் காட்சி!
பொடித்தன உரோமம்; போந்து
பொழிந்தன கண்ணீர், பொங்கித்
துடித்தன, மார்பும் தோளும்;
தோற்றின வியர்வின் துள்ளி;
படித்தது, மணிவாய், ஆவி
வருவது போவது ஆகித்
துடித்தது, மேனி; என்னே,
யார்உளர் தன்மை தேர்வார்?
(கம்ப ராமாயணம்)

அப்போது இராமன் மேனியில் மயிர்க் கூச்செறிந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தது. மார்பும் தோளும் துடித்தன. உடலில் வியர்வைத் துளிகள் படிந்தன. அழகிய உதடுகள் மடிந்தன. பெருமூச்செறிந்தான். இராமனின் தன்மையை யாரால் புரிந்து கொள்ள முடியும்?

த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண
யுயுத்ஸும் ஸமுபஸ்திதம்!
ஸீதந்தி மம காத்ராணி முகம் ச
பரிசுஷ்யதி!
வேபதுஸ்ச சரீரே மே ரோமஹர்
ஷஸ்ச ஜாயதே!
காண்டீவம் ஸ்ரம்ஸ ஹஸ்தாத்
த்வக் சைவ பரிதஹ்யதே!
ந ச சக்னோம்யவஸ்தாதும் ப்ரமதீவ
ச மே மன:!!
நிமித்தானி ச பச்யாமி விபரீதானி
கேசவ!
ந ச ச்ரேயோ அனுபச்யாமி ஹத்வா
ஸ்வஜனம் ஆஹவே!!
நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச
ராஜ்யம் ஸுகானி ச!
கிம் நோ ராஜ்யேன கோவிந்த கிம்
போகைர் ஜீவிதேன வா!!
(பகவத்கீதை)

மகா பாரதப் போர் தொடங்குவதற்கு முன்னுள்ள காட்சி.

அர்ச்சுனனுக்குத் தேரோட்டி கண்ணன். போரில் தன் உறவினர்களே எதிர்த்து வருவதைக் கண்டதும் அர்ச்சுனன் தயங்குகிறான். அவனுடைய உடல் உறுப்புகளெல்லாம் சுருங்குகின்றன. நா வறள்கிறது. உடல் துடிக்கிறது. மயிர்க் கூச்செறிந்து நிமிர்ந்து நிற்க, கையிலிருந்த காண்டீவம் என்ற வில் நழுவித் தரையில் விழுகிறது. சருமம் பற்றி எரிவது போன்ற ஓர் உணர்வு. சக்தியிழந்து, மனம் குழம்புகிறது. அர்ச்சுனனுக்கு விபரீதமான விளைவுகள் தோன்றுகின்றன. தன் உறவினர்களைக் கொன்று புகழ் பெற விரும்பவில்லை. அந்த வெற்றியும் வேண்டாம், அதனால் கிடைக்கும் அரசு, சுக போகங்கள் ஒன்றும் வேண்டாம் என்று கண்ணனிடம் கூறுகிறான். அப்போதுதான் கண்ணன் அர்ச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்கிறான்.

''நீல மாமணிச் சிவிகை வெள்ளமும்
நித்திலக் குலக்கவிகை வெள்ளமும்
காலி னுல்வரும் யமுனை வெள்ளமும்,
கங்கை வெள்ளமும் காண்மின்''
என்னவே.
(கலிங்கத்துப் பரணி)

முதல் குலோத்துங்க மன்னன் பவனி வரும்போது காட்சிகள் பலவற்றின் வர்ணனைகளைக் கலிங்கத்துப் பரணியில் [illegible] மேற்கூறிய பாடல் அவற்றில் [illegible] யமுனை ஆற்று நீர் கருநீல நிறமுடையது. கங்கையாற்றின் நீர் வெண்மையானது. விலையுயர்ந்த நீலக் கற்கள் பதித்த பல்லக்குகளும், உயர்ந்த முத்துக்கள் பதித்த குடைகளின் கூட்டமும் வந்தன. யமுனை கங்கை ஆறுகளின் நீலநிற வெண்மை நிற வெள்ளப் பெருக்குகள் போல இருந்தனவாம் அந்தக் காட்சி.

க்வசித் ப்ரபாலேபிபிரிந்த்ர நீலை:
[illegible] யஷ்டிரிவாநுவித்தா!
பச்யாநவத்யாங்கி விபாதி கங்கா
பிந்நப்ரவாஹா யமுநாதரங்கை:!

இலங்கையிலிருந்து அயோத்திக்கு 'புஷ்பக' விமானத்தில் திரும்பும்போது இராமன் சீதையிடம் கங்கை, யமுனை ஆறுகள் கலக்குமிடமாகிய சங்கமத்தை விவரிப்பதை, காளிதாசன் ரகுவம்சத்தில் வர்ணிக்கிறான். யமுனையும் கங்கையும் கலப்பது நீலமணிகள் முத்துக்கள் பதித்த சரம் இணைந்திருந்தது போல் காட்சியளிக்கிறதாம்.

திங்க ளுதல் வியர்க்கும் வாய்துடிக்
கும் கண் சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்
லசையும் —கொங்கை
பொருகாலு மூடிப் புடைபெயருங்
காலும்
இருகாலு மொக்கு மிவர்க்கு.
(தண்டியலங்காரம்)

நகில்கள் என்மீது அழுந்த இவர் என்னைத் தழுவுங் காலத்திலும்,

என்பால் பிணைக்குக் கொண்டு பக்கத்தே நீங்கிச் செல்லுங்காலத்திலும், இவர்க்கு, மூன்றும் பிறைச் சந்திரன் போன்ற நெற்றி வேர்க்கும்; வாய் துடிக்கும்; கண் சிவக்கும்; அழகிய கரங்களாகிய தளிர்கள் நடுங்கும்; நாக் குழறும்.

''கைபிசையா வாய்மடியாக் கண்
சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்
டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகனைத்
கருகென்று
போர்வேந்தன் தூதிசைத்த போது''
(தண்டியலங்காரம்)

துரியோதனன், ''வெற்றி மாலையைச் சூடிய தோள்களையுடைய துருபதமன்னன் மகள் திரௌபதியைச் சபைக்குக் கொண்டு வருக'' என்று தன் தூதனிடத்தில் கூறுகிறான். அதைக் கேட்ட வீமன், கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக் கண் சிவந்து, வெப்பமாகப் பெருமூச்செறிந்து, தேகம் நடுக்குற்று, வியர்த்துக் கோபம் கொண்டு போர் புரிய எழுந்தான்.

தண்டியெனும் கவி, தம்முடைய காவியாதரிசத்தில் முப்பத்தைந்து கவிதை அலங்கார உத்திகளை வர்ணிக்கிறார். அதில் ஒன்று சுபாவோக்தி எனப்படும். அதில் சாதி, செய்முறை, குணம், தனித்தன்மை எனப் பிரிவுப்படுத்தி உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(1) சாதி: வளைந்த சிவப்பு அலகுகள், மென்மையான பச்சை இறக்கை, மூவண்ணக் கோடுகள் படிந்த கழுத்தைக் கொண்ட கிளிகள், இனிய குரல்கள் படைத்தவை.

செய்முறை : புருக்கள் இனிய குரல் ஒலிகளைத் தொண்டை மூலம் எழுப்ப, கண்மணிகள் உருள, அங்குமிங்குமாகச் சுற்றிச் சுற்றி வட்டமிட்ட தன் ஜோடிகளுடன் முத்தமிடும்.

குணம்: பிரியமானதை அணைக்கும்போது, மயிர்க்கூச்செறிந்து, மகிழ்ச்சி மேவிடக் கண்கள் மூடிக் கொள்ளும்.

தனித்தன்மை: நீல நிறக்கழுத்து, கையில் மண்டையோடு, தலையில் பிறைச்சந்திரன், சடைமுடி, அழகிய காளை பொறித்த கொடியுடைய சிவன் தோன்றினான்.

சுபாவ உக்தியை விளக்க மேற்கூறிய உதாரணங்கள் காவ்யாதரிசத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

இதுவே தண்டியலங்காரத்தில் தன்மையணி என்று விளக்கப்படுகிறது.

''எவ்வகைப்பொருளு மெய்வகை
விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை
யாகும்''

எவ்வகைப்பட்ட பொருளும் உண்மையின் வகையினல் இவ்வணிப் பொருளின் நேரிற் பார்த்தாற் போலத் தோன்றுமாறு உள்ளபடி விளக்கிச் சொல்வது.

'அதுவே, பொருள் குணஞ் சாதி தொழிலோடு புலனும்.' அத்தன்மைப் பொருளும், குணமும், சாதியும், தொழிலும் என்னும் இவைபற்றித் தோன்றும்.

ஒவ்வொன்றுக்கும் உதாரணச் செய்யுள் கூறப்பட்டுள்ளது. குணத் தன்மைக்குக் கூறப்பட்டுள்ளதை மட்டும் பார்ப்போம்.

''உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்
துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்
—புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத்
திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.''

உள்ளம் குளிர்தல், உரோமம் சிலிர்த்தல், மறத்தாலாகிய குணத்தோடு நிகழும் அதன் தன்மைகள். கண்களில் நீர் மல்கத் தன்னை மறந்தாள் தில்லைச் சபாபதியைத் தொழுதலால். எழும் ஆனந்தத்தின் தன்மையைக் கூறியதனல் குணத் தன்மையாம்.

இவ்வண்ணம் பொருள், சாதி, தொழில் தன்மைகள் விளக்கப்படுகின்றன, தண்டியலங்காரத்தில்.

கம்பராமாயணம், பகவத்கீதை, கலிங்கத்துப்பரணி, ரகுவம்சம், (காளிதாசன்), தண்டியலங்காரம் காவ்யாதசர்ம் (தண்டி) போன்ற காவியப் படைப்புகளிலிருந்து சில உதாரணங்களைத் தொகுத்து அளித்துள்ளேன். சுபாவோக் அல்லது தன்மையணி என்னும் அலங்கார லட்சணங்களை இவற்றில் காணலாம். உள்ள உணர்ச்சிகளின் மெய்ச் சிலிர்ப்புகளே இவற்றின் தன்மைகள். *

Hauers Lines Private Limited

7 & 9 STEPHEN HOUSE
5, DALHOUSIE SQUARE EAST, CALCUTTA-700 001

Telephones: 23-1762, 23-2735, 23-1683, 23-9444
Grams: SUNNYISLES Telex: 021-3100

Branches . Diana House, 31, Walltax Road, Madras 600 001
Phone: 39382 Grams: POTENTIAL Telex: 041-7385
61, Rajat Apartments, Mount Pleasant Road,
Malabar Hills, Bombay-400 006
Phones: 819867 & 828205 Grams: POTENTIAL
Aberdeen Bazaar, Port Blair-744 101 (Andamans)
Phone: 609 Grams: SRIKANTH

Owners of Fleet of ocean going vessels:

m. v. KAMAKSHI, m. v. ISLAND GLORY, m. v. VISALAKSHI,
m. v. ISLAND PRINCESS & m. v. ISLAND QUEEN
Cruising Coastal & International Waters.

'Diana' Rolling Shutters & Grills

DISTINCTLY SUPERIOR IN: QUALITY OF MATERIAL
DESIGN & CONSTRUCTION
DURABILITY & TROUBLE-FREE PERFORMANCE
DEPENDABLE AFTER-SALE SERVICE

A TRUSTED NAME FOR 28 YEARS

Diana Shutters Private Limited

DIANA HOUSE
31, WALLTAX ROAD
MADRAS-600 001
Phones: 39682|39683
Grams: DIANADOORS
Telex: MS 7385

திருமுறையின் இசைமுறை

இசையின் அமைப்பும் சொல்லின் அமைப்பும் எப்படித் தேவாரங்களில் ஒன்று கூடியிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கிறது.

தேவாரப் பதிகங்களிலே உள்ள சொற்பொருள் என்பது, அந்தப் பாடல் பிறந்த நிலையும், நோக்கமும், சூழலும் சேர்ந்து, பாடலிலே அமைந்து நிற்கிற கருத்து, உணர்ச்சி, சாயல் ஆகிய உட்கிடையாகும். இது சொல்லின் பொருள்.

பண்ணுக்குப் பொருள் என்று சொல்லும்போது நாம் எதைக் குறிப்பிடுகிறோம்?

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இசையாசிரியனின் அமைதியை வகுக்கும்போது,

> ''இசைந்த பாடல்
> இசையுடன் படுத்து''

என்று வருகிற அடியிலே, இரண்டு 'இசை' வருகின்றன. ஒன்று பாடலின் அமைப்பிலே உள்ள இசை. மற்றொன்று, அதைப் பாடுதல் என்ற செயலுக்கு வளைக்கும்போது இணைகிற இசை.

இந்த அடிக்கு விளக்கம் கூறுகிற அரும்பத ஆசிரியர் சொல்கிறார்:

'சேரச் செய்த உருக்களை இசை கொள்ளும்படியும், இரதம் பொருந்தும்படியும் புணர்த்த வல்லவனுகி'' (இருக்கவேண்டும் இசையாசிரியன்.)

இதையே அடியார்க்கு நல்லார், 'சேரச் செய்த உருக்களை இசை கொள்ளும்படியும், சுவை பொருந்தும்படியும் புணர்த்தவல்லவனுகி' (இருக்கவேண்டும் இசையாசிரியன்.)

இந்த இரு பெரும் உரையாசிரியர்களும் கூறுகிற இலக்கணம் எதை வற்புறுத்துகிறது?

பாடல்களுக்கு இசை அமைப்பவன், அதாவது சாகித்தியங்களுக்கு மெட்டுப் போடுபவன், இரண்டு கடமைகளைச் செய்ய வேண்டும்.

ஒன்று, இசை கொள்ளும்படி மெட்டு அமைக்க வேண்டும். இரண்டு, இரதம் பொருந்தும்படி மெட்டு அமைக்கவேண்டும்.

'இசை கொள்ளும்படி' என்பதில் உள்ள 'கொள்ளும்படி' என்ற சொல்லைக் கவனிக்க வேண்டும். பாத்திரம் கொள்ளும்படி தண்ணீர் ஊற்ற வேண்டும் என்பது போன்றது அது.

பாடலின் சொற்கள் அந்த இசையை வாங்கிக்கொள்ளும்படி அந்தச் சொற்களிலே இசையை வார்க்கவேண்டும். சொற்களை மறிப் போய் அந்த இசை வழிந்து ஓடி விடக்கூடாது. சொற்களிலே அந்த இசை அடங்கவேண்டும்.

கொள்ளுதல் என்பதில் இன்னொரு பொருளும் இருக்கிறது. உடம்புக்கு ஊட்டுகிற உணவு, நாம் கொள்ளக்கூடியதாய், உட்கொண்டு உடம்போடு சேரக்கூடியதாய் இருக்கவேண்டும். எதிரளிக்கக்கூடாது. கொப்புளித்து வரக் கூடாது. இதுவும் முக்கியம்.

இனி, இரதம் அல்லது சுவை பொருந்தும்படி இசை அமைய வேண்டும்.

பாட்டுக்கு, அதன் சொற்களுக்கு, ஒரு பொருள் இருப்பதுபோலவே, இராகங்களுக்கும் பொருள் இருக்கிறது. அர்த்த பாவமும் ராக பாவமும் இரண்டும் பொருந்த வேண்டும். இரண்டுக்கும் இயைபு இருக்கவேண்டும்.

சிலப்பதிகாரம் கூறுகிற இலக்கணம் இது.

எண்வகை மெய்ப்பாடுகளும், சம நிலையும் சேர்ந்து சுவையின் விரிவு ஒன்பது. இவற்றில் எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்னும் நான்கினுல் வருகிற சிரிப்பும், உறுப்பறை, குடிகோள், அலை, கொலை ஆகிய நான்கினுல் வருகிற சீற்றமும், தெய்வப் பாடல்களாகிய தேவாரங்களில் வருவதில்லை. எனவே இந்த இரண்டும் தவிர மற்றச் சுவைகளே பண் தேர்வுக்குப் பொருந்துபவை. இவற்றிலும் பெருமிதம், உவகை, அவலம் ஆகிய மூன்றும் பற்பல சாயல்களுடன் வருகின்றன. இவற்றோடு சமநிலை என்பதும் முக்கியமாகும். அதாவது, ''செஞ்சாந்தெறியினும் செத்தினும் போழினும், நெஞ்சோர்ந்திடா நிலை' இது. சாந்த மயமான மனநிலை.

இன்னோர் அம்சமும் இங்கே கவனிக்க வேண்டும். பெருமிதம், உவகை, அவலம், சாந்தம் ஆகியவற்றுள்ளும், ஒரு பாடலில் ஒரே சுவை மட்டும் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அப்படியே வருவதில்லை. மருண்ட உவகை, பெருமித உவகை, அவல அச்சம் என்று ஒன்றோடொன்று கலப்பதுண்டு. நீலமும் மஞ்சளும் கலந்து வண்ணங்களிலே பச்சை என்று ஆவதுபோல், ராக பாவங்களிலும் ரச இணைப்பு ஏற்படுவதுண்டு. சொற்பொருளிலும் அவ்வாறே.

இத்தனைக்கும் ஈடு கொடுக்கும்படி இசை அமைப்பு இருக்கவேண்டும். ஸ்வர ஸ்தானங்கள் என்ற ஒலி நிலைகள் அங்கங்கே அசைந்து, நெளிந்து, கமகங்கள் பேசி ஒலிக்க வேண்டும். இந்தக் கமகங்களின் பேச்சு தன் ஏற்றத்தாழ்வுகளினுல் சுவை மாற்றங்கள் விளைவிப்பதுண்டு. எனினும் ஒவ்வொரு பண் அல்லது ராகத்துக்கும், தனிப் பண்போடு கூடிய ஒரு சுவை இருக்கிறது. அதுவே அதன் ரச பாவம்.

மனித உணர்ச்சி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒரு நிறத்தைச்

சொல்கிறது, சித்தர்களின் இலக்கியம். ஒளியின் நிறத்தை ஒலியின் நிறமாக மொழிபெயர்த்துப் பேசுவார்கள், ஞானயோக சித்தர்கள். இவ்வாறே ராகங்களை ஆண் ராகங்கள் என்றும் பெண் ராகங்கள் என்றும் பான்மை கூறி, அவற்றுக்குரிய பருவகாலம், நாள், நேரம், இடம், உணர்ச்சி ஆகியவற்றையும் வகைப்

படுத்தியிருக்கிறார்கள். இதனால்தான் ஒலி ஞானம் தேர்ந்த சில ஓவியர்கள் ராகங்களையே வண்ண ஓவியங்களாக வரைந்து காட்டியிருக்கிறார்கள்.

இவ்விதமாக நம் முன்னோர்கள் பண்களுக்கு உரிய சுவைகளையும், வடிவங்களையும், ஆண் பெண் தன்மைகளையும், காலநேர வகைகளையும் அளந்து கூறியிருப்பதோடு, இவற்றுக்கான சட்ட திட்டங்களையும் நெறிமுறையோடு ஆக்கித் தந்துள்ளார்கள்.

எனவேதான், சிலப்பதிகாரத்திலும் அதன் உரைகளிலும் பாடலின் பொருளும் பண்ணின் பொருளும் இயைபோடு பொருந்தவேண்டும் என்பதை அடிக்கோடிட்டு வற்புறுத்தியுள்ளார்கள்.

இசைப் பாடல் என்றால் அதற்கு நான்கு பொருட் பண்புகள் இருக்க வேண்டும்.

ஒன்று, அந்தப் பாடலில் வருகிற சொற்களுக்கு ஓர் இசைப்பண்பு இருக்கவேண்டும். இது அந்த மொழிக்குள்ள இசைப் பண்பு.

இரண்டாவது, அந்தப் பாடலின் யாப்புக்குள்ள இசைப் பண்பு. இது அந்தச் சொற்களை வரிசைப்படுத்திப் புணர்ப்பதனால் வருகிற பாவோசை.

மூன்றாவது, அந்தப் பாடலின் உணர்ச்சிக்கும், நிலைக்கும் உள்ளாகி இதயத்தில் எழுகிற இசைப் பண்பு.

நான்காவது அந்தப் பாடலின் எழுத்தொலியிலே வன்மையாகவும், மென்மையாகவும், இரண்டுக்கும் நடுவே இடைநிலையாகவும் கேட்கிற இசைப்பண்பு.

இந்த நான்கும் சேர்ந்தே ஓர் இசைப்பாடலுக்கு இசைமையைத் தருகின்றன. இதுவே மற்ற இனங்களிலிருந்து இசைப்பாடலை வேறு பிரிக்கிறது.

செய்தித்தாளிலே வருகிற ஒரு தினச்செய்தியை எடுத்து வைத்துக்கொண்டு, சங்கராபரண ராகத்தில் அதைப் பாடினால் அந்தச் செய்தித்துணுக்கு இசைப்பாடலாக ஆகிவிடுமா? ஆகிவிடாது. காரணம், இசைமை என்ற உயர் தனிப் பண்பு அதில் இல்லை.

தேவாரங்களைப் பொறுத்தவரை அவற்றின் பிறப்பிலேயே அவற்றுக்கு ஒரு மாண்பு உண்டு. அது தான் சொல்லும் இசையும் ஒரு சேரப் பிறந்த மாண்பு. சொல்லின் ஆசிரியரே அந்தத் தேவார இசையின் ஆசிரியராகவும் திகழ்கிறார். பண்ணுக்கும் பாடலுக்கும் இரண்டுக்குமே தந்தை அவர். எனவே இயைபு என்பது அமைப்பிலேயே அமைந்துவிட்டது.

மோட்டார்க் காரைச் செய்கிறவர்கள், ஒவ்வோர் உறுப்பாகச் செய்து பொருத்துவார்கள். ஆனால் மனித இயந்திரத்தைச் செய்கிற இறை ஆற்றல் அவ்வாறு செய்வதில்லை. எவ்வளவு சிறிய உருவமானாலும், அந்த உருவம் முழுவதையும், அதன் வருங்கால வளர்ச்சித் திட்பமும் சேர்த்து, முழுமையாகச் செய்து, முழுவடிவிலேயே ஒரு குழந்தையாக உலகுக்கு அனுப்புகிறது, அந்த மாபெரும் ஆற்றல். இது படைப்பின் ஆற்றல்; தெய்வ ஆற்றல். இவ்வாறுதானே தெய்வப் பாடல்களாகிய தேவாரங்களும் முழு உருவமும் முழு ஆற்றலும் பிறவியிலேயே பெற்றுக்கொண்டு, கவியும் இசையும், சொல்லும் பண்ணும் சேர்ந்து கை கால்களோடு தெய்வமாக் குழந்தைகளாகப் பிறந்துள்ளன? அவற்றின் அவதார இரகசியம் என்பது இதுவே. இசை எழுந்து சொல்லைத் தோற்றுவித்ததா, அல்லது சொல் எழுந்து

இசையைத் தோற்றுவித்ததா என்று வேறு பிரித்துச் சொல்ல இயலவில்லை.

இந்த இரண்டுக்குமே அடிப்படையாகப் பக்தி இருந்து செயற்பட்டது என்றே சொல்ல வேண்டும். பக்தி என்றால் அது ஒரு மகானின் பக்தி. ஒரு கவி மேதை, ஓர் இசை மேதை, ஓர் இசைக்கவி மேதையின் பக்தி. மனித குலம் முழுமைக்குமாக, ஊமை இதயங்களுக்குக் குரல் கொடுத்து, மனித சமுதாயத்தின் உணர்ச்சிகளைத் தான் வாங்கிப் பேசுகிற குரல் அது. அதுவே ஞான சம்பந்தப் பெருமானின் குரல். அதுவே அப்பர் சுவாமிகளின், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குரல். அதுவே தேவாரத்தின் குரல்.

பாடல் ஆசிரியன் ஒருவனாகவும், இசையாசிரியன் மற்றொருவனாகவும் இருப்பதில் பிசகில்லை. சிலப்பதிகாரமே அதற்கு வழி வகுத்திருக்கிறது. ஆனால் தேவாரப் பாடல்களில் அந்த அவசியம் இல்லை. பருத்தி புடைவையாகக் காய்த்தது போலே, இசையும் மொழியும் இணைந்து உருவான பாடல்கள் அவை.

தியாகராஜரும், தீக்ஷிதரும், கோபால கிருஷ்ண பாரதியும், இவர் போன்றோரும் வாக்கேயகாரர்கள் என்பது நமக்குத் தெரியும். இசைக்கும் மொழிக்குமே சேர்ந்து ஆசிரியர்கள் இவர்கள். இது அண்மைக் கால வரலாறு. இதுபோலவேதான் தேவார மும்மூர்த்திகளாகிய சம்பந்தரும், வாகீசரும், சுந்தரரும்; ஆகையால்தான் இந்தப் பாடல்களிலே இசைக்கு எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் மொழிக்கும். அவை இணைபிரிக்க முடியாதவை. எல்லாப் பாடல்களுக்குமே இந்த உண்மை பொருந்துமேயானாலும், தேவாரங்களுக்கு இவை சிறப்பாகப் பொருந்தும். ஏனென்றால் ஞானசம்பந்தர் அவருடைய சொற்களுக்குள்ளே எவ்வளவுக்குக் காட்சி தருகிறாரோ, அதே அளவுக்கு அந்த இசைக்குள்ளிருந்தும் காட்சி தருகிறார். அப்பரும் அப்படியே. சுந்தரரும் அப்படியே.

திருமுறைப் பாடல்கள் எல்லாம் ஒவ்வொரு பதிகமும் ஒரே ஆன்மாவின் ஒன்றித்த வடிவமாக இசையும் சொல்லும் இணைந்த படைப்புக்கள். இரண்டில் ஒன்றை மட்டும் அநுபவிப்பது என்பதில்லை.

செண்பக மலரிலே எழில் இருப்பது போலவே மணமும் இருக்கிறது. வேறு சில மலர்களும் அப்படித்தான். தேவாரப் பாடல்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. கண்ணை மூடிக்கொண்டு வாசனையை மட்டும் நுகர்வோமா? அல்லது நாசியை அடைத்துக் கொண்டு அழகை மட்டும் கண்டு களிப்போமா? இல்லை; இரண்டையும் இணைத்து அநுபவிக்கும் போது, நம்முடைய பூ அநுபவம் முழு அநுபவம் ஆகிறது. அது போலவேதான் திருமுறையின் இசை முறையும்.

கவி என்ற முறையிலே அற்புதமான கவிதைகள் அவை. உருக்கள் அல்லது இசை உருப்படிகள் என்ற முறையிலே அற்புதமான இசைப் பாடல்கள் அவை. இப்படி எழிலும் மணமும் சேர்ந்திருப்பது மட்டும் அல்ல. இன்னோர் உயர் தனிச் சிறப்பும் இவற்றுக்கு உண்டு.

இசையிலே ஆதார சுருதி என்கிறோம் அல்லவா? தம்புராவை மீட்டும்போதே அது ஒலிக்கிறது. இவ்வாறு இந்தத் தெய்விகமான பாடல்களுக்கு ஆதார சுருதி எது? இறையுணர்வு, தெய்வக் காதல், இறைப்பற்று என்று சொல்லிக் கொண்டே போகலாம். இதயத் தந்திகளை இந்த ஆதார சுருதியிலே மீட்டி, அந்தச் சுருதிக்கு ஒன்றிய நிலையிலே இந்தப் பாடல்கள் எழுந்தன. எனவே சாதாரண மலர்களின் எழிலிலே காணாத ஒரு தெய்வ வண்ண எழிலை இவற்றிலே காண்கிறோம். சாதாரண மலர்களின் வாசனையிலே மணக்காத ஒரு தெய்வமணத்தை இவற்றிலே நுகர்கிறோம். பேரானந்தம் என்பதன் தத்துவம் இதுவே. இதைத் தருவதே திருமுறை!

⁂

இருள் கதவத்தின் திறப்பாக ஒளிச் சிதறல்கள் வெட்டிச் சிதறின. வான மங்கையர்களின் நீராடுதலாக வெள்ளி இழைகளாக இடைவெளி இன்றி மழை கொட்டியது. டக் டக் கென்ற தாளமிட்டு வந்த புரவிகள் இரண்டும் தடுமாறித் தவித்தன. புரவி மீதமர்ந்து வந்த இருவரும் தங்க இடம் தேடினர். மாளிகை போன்ற இல்லத்தின் முகப்பு ஒதுங்க இடம் தந்தது.

இடியின் தாளத்துக்கு ஏற்ப இல்லத்தில் தாளம் ஜதி முழங்க, சதங்கைகள் சொற்கட்டுக்களைக் கொஞ்சின. நடனத்தில் கவனத்தைச் செலுத்திய அந்த நங்கையை இடி. மழையால் அசைக்க முடியவில்லை. ஆனால், இந்தப் பயணிகள் இடித்த இடியால் கதவு அதிர நடனம் நின்றது. சினம் கலந்த முகத்தினளாகக் கதவைத் திறந்தவள், மழையில் ஒதுங்கியவர்களைக் கண்டு முகம் மாறினாள்.

''உள்ளே வாருங்கள். மழையில் அதிகம் நனைந்து விட்டீர்கள் போலிருக்கே?'' என்று அழைத்தாள்.

இருவரும் உள்ளே வந்தனர். பணிப்பெண்ணை அழைத்து உலர்ந்த ஆடைகளைத் தரச் செய்தாள். சூடான பாலும், சுவையான கனிகளையும் தந்து உபசரித்தாள்.

''தாங்கள் யாரென்று அறியலாமா?''

ஒருவன் சற்றுக் கம்பீரமாக, மற்றவனைவிட இரண்டு வயது கூடுதலாக இருந்தான். இளையவனோ சற்றுக் கலவரத்துடன் மூத்தவனைப் பார்த்தான். மூத்தவனோ சற்றும் கனியாத குரலில், ''எங்களைப் பார்த்தாலே தெரியவில்லையா? நாங்கள் பாண்டிய நாட்டுப் படையைச் சேர்ந்தவர்கள்'' என்றான்.

''அப்படியா? நான் ஆட்டத்தைத் தொடர வேண்டும். நீங்களும் பார்க்கலாம். மழை நின்ற பிறகு செல்லுங்கள். அவசரமில்லை'' என்று அலட்சியமாகக் கூறியவள் ஆடத் தொடங்கினாள்.

இருவரும் அமர்ந்திருக்கும் உணர்வில் சற்றுச் சிரத்தையுடன் ஆடினாள்.

''இவள்தான் நாட்டியக் கலாவதி சித்திரவல்லி'' என்று இளையவன் விசித்திரன் மூத்தவனிடம் முணுமுணுத்தான்.

'புரிந்துகொண்டேன்' என்று மூத்தவனின் பார்வை பேசியது.

''தங்களுக்குத் தெரிந்திருந்தாலும் ஆடவல்லானின் தூக்கிய திருவடியைத் தவிர வேறு எதையும் கவனிக்காதவராயிற்றே!'' என்றான் விசித்திரன்.

''என்றாலும் பாண்டிய மண்டலத்தின் ஆடலரசியைத் தெரியாதா என்ன? இப்போது கூட இவள் ஆட்டத்தில் எனக்கு ஒன்றும் மெய் சிலிர்ப்பு ஏற்படவில்லை. இவள் ஒரு கணிகைதானே? தன் குலத் தொழிலைச் செய்கிறாள். இதனால் இவளிடம் எனக்கு உயரிய மதிப்போ கௌரவமோ ஒன்றும் தோன்றுது.''

''அப்படி நினைப்பது தவறு. இந்தப் பரதக் கலை கடினமான கலை. ஆடுவதும் கடினம்; சாதனைதான். நாத உபாசனை செய்தவர்களால்தான் நாதாந்த நடனத்தை உணர முடியும்.''

மூத்தவன் மிடுக்குடன் விசித்திரனைப் பார்த்தான்.

''எனக்கு அந்த நாத உபாசனை இல்லையா? மகர யாழ் மீட்டி அந்த நாதாந்த நடனத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் வல்லமை என் விரல்களுக்கு உண்டு விசித்திரா!''

''இல்லை என்று சொல்லவில்லை. கலைகளை ஆராதனை செய்யவேண்டிய தாங்களே..''

அவன் முடிக்கு முன் சித்திரவல்லி சதங்கை குலுங்க வந்தாள்.

''இந்தப் பாண்டி மண்டலத்தின் ஆடலரசியாகப் பெரும் புகழ் பெற்று விட்டேன். ஆனால் இன்னும் மாமன்னர் எதிரே ஆடிப் பரிசு பெறும் பேற்றை அடையவில்லை. இது எனக்குப் பெரிய குறைதான்.''

விசித்திரன் மூத்தவனைப் பார்த்தான்.

''பரதக் கலையை மனிதர்கள் ஆடும் கலையாக மாமன்னர் நினைப்பதில்லை. இறைவனுக்கு உரிய கலையாக நினைத்துப் பக்தி செலுத்தி வருகிறார். அதிலும் பெண்கள் ஆடுவதை அவரால் ஏற்றுக்கொள்ளவே முடிவதில்லை. அதனால் அவர் தங்கள் ஆட்டத்தை ஏற்றுக்கொள்வார் எனக் கூற முடியாது.''

அவள் முகம் சினத்தால் சிவந்தது.

''நான் மாமன்னரை ஏற்றுக்கொள்ள வைத்தால்..?''

''முடியும் என்று அடியேனுக்குத் தோன்றவில்லை.''

''ஏன்? நான் ஆடுவது நடனம் இல்லையா? பரதக் கலைக்குரிய முத்திரைகளை என் தாளத்தினால் கால்களிலும், கைகளிலும் அபிநயிக்கவில்லையா? எனது முக பாவத்தில் நவரஸங்கள் பிரதிபலிக்கவில்லையா? என் நடனத்தில் என்ன குறை என்று மன்னர் சொல்லட்டுமே!''

மூத்தவன் சிரித்தான். ''நீ தொழிலுக்காக ஆடுகிறாய். இறைவனுடன் ஆடிய காளியே தோற்றுவிடவில்லையா?''

'நீ தொழிலுக்காக ஆடுகிறாய்' என்ற சொல் அவளைக் குத்திக் கிழித்தது. சினத்தில் ஊர்த்துவ தாண்டவ முத்திரைகளைக் கண்களில் பிரதிபலித்தாள்.

''என்ன பெண்ணே, பேசவில்லை?''

''தாங்கள் சொல்லிய இந்தச் சொல்லை மாமன்னரிடம் முறையிடுவேன். மன்னர் எதிரில் தங்களை என்னிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க வைப்பேன்.''

அந்த மூத்தவன் கணகணவென்று ஒலிக்கும் ஆலய மணியின் நாதமாக நகைத்தான்.

''நடக்காது பெண்ணே. வீண் கனவு காணாதே!''

''ஏன் நடக்காது?''

''இப்போது சொன்னதே மாமன்னனாக இருந்தால்?''

அவள் கண்களில் அதிர்ச்சி மின்னியது: ''நிச்சயம் இல்லை'' என்றாள் சற்றுத் தூக்கலான குரலில்.

''எப்படிச் சொல்லுகிறாய்?''

''கலையை ஆராதிப்பவர் பாண்டிய மன்னர். இது அவர் விரும்பாத கலையாக இருந்தாலும்..''

''தவறு. அதைப் பெண்கள் பயிலும் கலையாக நினைக்கவில்லை. வெள்ளியம்பலத்தில் காலைத் தூக்கி நின்றாடும் எம்பிரானுக்கே உரிய கலையாகக் கருதுகிறேன்.''

''மன்னரின் கருத்து அதுவாகலாம். ஆனால் பரதம் ஒரு புனிதக் கலை. அதை யார் வேண்டுமானாலும் பயிலலாம்.''

''உன் தொழிலுக்காக இதை நீ கற்றுக் கொண்டிருக்கிறாய் என்று தான் கூறுகிறேன்'' என்றான் மன்னன் இராஜசேகர பாண்டியன்.

''இதை மறுத்துக் கூறும் காலம் ஒன்றை மிக விரைவில் ஏற்படுத்துவேன் மன்னவா.''

''பெண்ணே, நீ பேசுவது யாரிடம் என்பதை உணர்கிறாயா?'' என்றான் விசித்திரன் குறுக்கிட்டு.

''புரிந்தது ஐயா. நான் ஓர் ஆடலரசி. என் நடனக் கலையை இகழ்ந்து பேசுவதை என்னால் சகித்துக்கொள்ள முடியாது. என் நடனத்துக்கு நிகராக ஆட இந்தத் தென்னகத்தில் யாரும் இல்லை என்பதை உறுதியாகக் கூறுவேன். மன்னவா, தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளும் காலம் அதிக தூரத்தில் இல்லை.''

மன்னன் கலகலவென்று நகைத்தான். ''பேதைப் பெண்ணே! அதையும் பார்க்கலாம். பெண்ணே, மழை நின்றுவிட்டது. வருகிறோம்.''

புரவிகள் புறப்படும் சப்தம். கேட்டுத் திகைத்து நின்றாள் சித்திரவல்லி. அவள் எத்தனை ஆசைப்பட்டாள், மாமன்னர் எதிரில் ஆடினால் மகர கண்டிகையையும் மாணிக்க மாலையையும் பரிசாகப் பெறலாம் என்று கனவு கண்டாளே! அந்த ஏமாற்றம் நெஞ்சை அசைத்துக் கண்ணீராக வெளிப்பட்டது.

மழை ஈரம் தேங்கிய சகதியில் அவர்கள் தங்கள் புரவிகளை மெல்லத்தான் செலுத்த முடிந்தது. மன்னரின் முகம் இறுகி இருந்தது.

''இருந்தாலும் தாங்கள் அந்தப் பெண்ணுக்கு ஏதாவது ஒரு பரிசைக் கொடுத்திருக்கலாம், மன்னவா'' என்றான் இளையவன்.

பாண்டியன் நகைத்தான். ''எம்பெருமானின் சித்தம் எதுவோ? என்னால் இதை நரர்கள் பயிலும் கலையாகக் கருத முடியவில்லை. அதனால்தான் ஆய கலைகள் அறுபத்து நான்கில் அறுபத்துமூன்றை மட்டும் பயின்றேன்.''

விசித்திரன் என்ன பதிலைச் சொல்லுவான்?

அன்று—

மங்கல மாடம் ஓங்கும் மதுரை மாநகரில் என்றும்போலப் பாண்டியனது அரச சபை கூடியது. மன்னரின் மனத்தில் ஏனோ சில தினங்களாக அமைதி இல்லை. சித்திரவல்லியின் சந்திப்பாகவும் இருக்கலாம். முக்கியமாகக் கவனிக்க வேண்டிய வேலைகளை மந்திரிகளுடன் ஆலோசித்தான். அந்தச் சமயத்தில் அந்தரங்கக் காவலன் ஒருவன் வந்

தான். அதிக முக்கியம் இல்லாவிட்டால் அவன் வருவதில்லை.

''சோணாட்டைச் சேர்ந்த பண்டிதர் ஒருவர் மாமன்னரைக் காண வந்துள்ளார். தேசாந்தரம் சென்று பல தலங்களைத் தரிசித்துப் பல மன்னர்களைக் கண்டு பரிசில் பெற்றுள்ளார். பாண்டிய அரச சபையை அலங்கரிக்கும் அவாவைத் தெரிவித்துள்ளார்'' என்றான் பணிவுடன்.

''புலவர்களையும் பண்டிதர்களையும் உபசரிப்பதுடன் பாண்டியர் திருச் சபையின் கடமை முடிந்துவிடவில்லை. தமிழை ஆராயும் அரிய பணியும் ஒன்று உண்டு, இத் திருத் தமிழ்ச் சபைக்கு என்று அவரிடம் கூறி அழைத்து வா'' என்றான் பாண்டியன்.

பட்டாடை பொலிய, நெற்றி நிறைந்த திருநீற்றுடன் பண்டிதர் கம்பீரமாக வந்தார். ''மங்கலம் ஓங்கும் மதுரையம்பதியில் செங்கோல் ஓச்சும் மன்னவன் புகழ் தென்னகம் எங்கும் ஓங்குக. வளர்க நின் கொற்றம். வாழ்க நின் அறம்!''

''பண்டிதரே, தாங்கள் சோழவள நாட்டினர் என்று அறிந்தேன். தங்கள் வரவை இப்பாண்டியர் திருச்சபை வரவேற்கிறது. தங்கள் தமிழ்ப் புலமையைக் கேட்க என் நெஞ்ச அளவில்லா அவாவுறுகிறது. மாமன்னர் கரிகால் பெருவளவர் நலமாக உள்ளாரா?''

''நலமாக இருக்கிறார் மன்னவா! நீதி தழைத்து, நெறி முறைகள் பிசகாமல் ஆளும் ஆட்சியில் மக்களும் நலமாக உள்ளனர். எம் மன்னவர்க்கு ஈடாக இப் பரந்த பூவுலகில் யார் உள்ளார்கள் என்றறியும் நோக்கில்தான் இந்தச் சுற்றுலாவை மேற்கொண்டேன். எம் மன்னவனுக்கு ஈடு எம் மன்னவன் கரிகாற் பெருவளத்தான் தான்.''

பாண்டியனுக்கு மீசை துடித்தது. கலைஞர்களுக்குக் கர்வம் போகாதோ? எல்லாம் கரிகால் பெருவளத்தான் கொடுக்கும் இடம். இவர்களைச் சிறப்பிப்பதற்கும் ஓர் அளவில்லை. பட்டினப் பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறுகால் மண்டபத்தைக் கொடுத்துச் சிறப்பித்திருக்கிறான்.

இதே உருத்திரங் கண்ணனார்க்குத் தொண்டைமான் இளந்திரையன் குன்று மீது நின்று கண்களுக்கெட்டிய தூரம்வரையில் உள்ள இடத்தையெல்லாம் தரவில்லையா?-மனத்தில் சின்னக் கூக்குரல்!

'உன் நாட்டிலேயே சித்திரவல்லி என்ன துடிப்பாகப் பேசுகிறாள்?' மனத்தினுள் சினம் பொங்கி வழிந்தது.

''அப்படி உம் மன்னனிடம் உள்ள சிறப்புக்கள் என்னவோ? எம்மிடம் இல்லாத சிறப்புக்கள் உம் மன்னனிடம் உளவோ?''

''பாடிப் பரிசில் பெறும் பாவலன்தான் நான். எம் மன்னரும் எங்கள் கலைக் குடும்பத்தினர் ஆவார். அந்த வகையில் எம் மன்னவரின் அறிவுத் திறமை எங்களை வியக்க வைத்ததுண்டு. எம் மன்னவர் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் கற்றவர். பாண்டிய மாமன்னர் அறுபத்துமூன்று கலைகளை மட்டுமே கற்றவர்.''

மன்னன் நகைத்தாலும் சினம் தன் சிவப்பைக் கண்களில் காட்டாமல் மறைக்கவில்லை.

''பரதக் கலை தெய்வக் கலை. அதை மானுடன் ஆடுவது என்பது எம் மனத்துக்கு ஒப்பவில்லை. தேவர்களுக்குரிய கலை என்பதால் கற்கவில்லை பண்டிதரே. தேவை என்றால் கற்கவும் தயங்கமாட்டேன்.''

''அறுபத்து நான்கு கலைகளில் அநேக கலைகள் தெய்விகக் கலைதாம் மன்னவா! ஒரு கலை நாட்டில் கற்றுப் பரவும் போதுதான் அதன் சிறப்பும், பெருமையும், மகிமையும் நமக்குத் தெரிகின்றன. இப்படி ஒரு கலையை ஒதுக்கி அழுத்திப் பாதுகாப்பதனால், அந்தக் கலை மறைவதற்கு நாமே வழி செய்கிறோம். அப்படிச் செய்யலாமா? மன்னவா!''

பாண்டிய மண்டலம் பூராவும் மன்னன் வலை போட்டுத் தேடினான். பரதக் கலையைச் சாஸ்திரப் பூர்வமாகக் கற்கும் பரதக் கலைஞர்களை வரவழைத்தான். வந்தவர்களில் யாரும், மன்னனின் அறிவுபூர்வமான சோதனைகளைத் தாக்கிப் பிடிக்க இயலாமல் ஓடினார்கள்.

''மன்னவா, அடியேனின் விண்ணப்பம் ஒன்று உண்டு. அன்று மழைக்காக ஒதுங்கிய சித்திரவல்லியைக் கற்பிக்கச் சொன்னால்?'' என்று தயங்கியபடி வந்து சொன்னான் விசித்திரன்.

''அந்தக் கணிகையிடமா? ஒரு பெண்ணையா குருவாகக் கொள்வது?''

''படைப்போனுக்குப் பலம் அளிப்பவள் கலைமகள்தானே? பரமனுக்குப் பிக்ஷை அளித்தவள் மலைமகள் தானே?'' என்றான் விசித்திரன்.

''சரி, நீ போய் அவளை அழைத்து வா. பரதக் கலையைக் கற்றுச் சோழ மன்னனுக்கு நிகராக ஆடச் சொல்ல வேண்டும். ஒரு பண்டிதன் என்னை என்ன சொல்லிவிட்டான்? நடராஜப் பெருமானின் திருவுளம் நான் இதைக் கற்கவேண்டும் என்பது போலும்!'' என்று நெட்டுயிர்த்தான்.

விசித்திரன் போன வேகத்தில் வந்தான். ''மன்னவா, அவள் இந்தப் பாண்டிய மண்டலத்தை விட்டே போய் விட்டதாக அறிகிறேன். மன்னவர் பாராட்டாத ஒரு கலை இப்பாண்டிய மண்டலத்துக்கே தேவையில்லை என்று கூறிச் சென்றாளாம்'' என்றான் விசித்திரன்.

சோமசுந்தரப் பெருமானின் விசேட பூஜையில் பாண்டிய மன்னன் இராஜசேகரன் நின்று கொண்டிருந்தான். அகிலும், சண்பகமும் மணந்தன. பாண்டியனின் மனம் மிகவும் சஞ்சலப்பட்டது. சஞ்சலம் அடையும் சமயம் இப்படித்தான் இறைவன் முன்பு நிற்பது வழக்கம். வெள்ளியம்பலத்தானும் இவன் குறையைத் தீர்த்து வைப்பான்.

''உனது பரதக் கலையைப் பயில எனக்கு ஒரு வழி காட்ட மாட்டாயா? நிருத்தத்தின் நித்திய தரிசனத்தை நான் பெறக்கூடாதா?'' என்று இறைஞ்சித் தொழுதான்.

''மன்னவா, தங்களைக் காண ஒருவர் வந்திருக்கிறார். நிருத்தியப் பேராசிரியர் எனக் கூறிக்கொள்கிறார். அரண்மனைக்குச் சென்றுவிட்டு இங்கு வந்துள்ளார்'' என்று காவலன் கூறினான்.

''வரச் சொல். ஆடவல்லான் நின்று நேருக்கு நேர் பேசும் தெய்வம் அல்லவா? என் குறைக்குச் செவி சாய்த்து விட்டான்'' என்று மன்னன் இறும்பூது எய்தினான்.

அழகான நடையுடன் வந்தவனைக் கண்டதும் பாண்டிய மன்னனது மகிழ்ச்சி அளவு கடந்தது.

''வற்றாத வளம் சுரக்கும் பாண்டிய மண்டலாதிபதி மகாராஜாவுக்கு என் பணிவான வணக்கங்கள்'' என்று அவன் அபிநய பாணியில் உடலை வளைத்தான்.

''தங்கள் திருநாமம்?''

''தில்லை ராசன். மாமன்னரின் விருப்பத்தை என்னால் பூர்த்தி செய்ய முடியும்.''

'தில்லை ராசன்' என்ற பெயரைக் கேட்டதும் ராஜசேகரனின் கண்கள் ஆனந்தத் தாண்டவராஜனின் பால் ஓடின. கண்கள் பனித்தன. 'இதுவும் நின் அலகிலா விளையாடலா?'

பரதப் பயிற்சி ஆரம்பமாகியது. இதற்கென்று நாட்டிய மண்டபம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தான் ராஜசேகரன். ராஜாங்க வேலைகள் போக மீதியுள்ள நேரங்களில் நடன மண்டபத்தில்தான் மன்னவனைக் காணலாம்.

மன்னவனின் நடையே 'தத்தீம், தகதீம்' என்ற தாளக் கட்டில் அடங்கி யிருந்தது. மிகக் குறுகிய காலத்துக்குள் மன்னன் பரதக் கலையைக் கற்றுத் தேர்ந்து விட்டான்.

''பாண்டிய மன்னரே, நான் இனித் தங்களுக்கு எதையும் கற்பிக்க வேண்டிய பாக்கி இல்லை. கற்றுத் தேர்ந்துவிட்டீர்கள். நான் விடை பெறுகிறேன்'' என்றான் தில்லைராஜன்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் கற்றுத் தேர்ந்த கர்வம் பாண்டியனது கண்களில் மிதந்தது.

''தில்லை ராசரே, நான் இன்னும் தங்களுக்குக் குரு காணிக்கை செலுத்தவில்லையே!''

''எனக்குக் காணிக்கை தரத் தங்களிடம் எதுவும் இல்லை மன்னவா!''

''என்ன சொன்னீர்கள்? பூமண்டலத்தை ஆளும் பூபதியான என்னிடம் தங்களுக்குத் தர எதுவும் இல்லையா?'' கண்கள் சிவந்து, புருவங்கள் வளைந்து நெரிந்தன.

''தங்களுக்கு ஆடலைக் கற்பித்தவனும் ஒரு மண்டலாதிபதியாக இருந்தால்?'' என்று இளம் புன்னகை இதழ்களில் ஓடக் கேட்டான் தில்லைராசன்.

''என்ன?''

''என்னை நன்கு பாருங்கள், பாண்டியரே! அஸ்த முத்திரையைப் பிடித்த இந்தக் கரங்கள் ஆயுதங்களைப் பிடித்தவைகள்தாம். துரித கதியில் சொற்கட்டுகளுக்கு ஏற்ப ஆடிய கால்கள் துடிக்கத் துடிக்கப் பகைவர்களைப் பிடித்த கால்கள்தாம்'' என்றபடி தனது ஒப்பனையைச் சிறிது சிறிதாகக் கலைத்ததும்—

''சோழ மன்னவன், கரிகாற் பெருவளத்தானா?'' என்று பாண்டியன் வீரிட்டான். நாட்டியக் கலையைக் கற்பித்துத் தனக்கு ஆசானாகி விட்டானே என்ற வெட்கம் கண்களில் திரையிட்டது.

''என்ன குரு காணிக்கையைத் தரப் போகிறீர் பாண்டியரே?''

''எதுவானாலும் தரச் சித்தமாக உள்ளேன் சோழரே.''

''என் மாணவரின் குரு காணிக்கையை என் குருவுக்கு அளிப்பது வழக்கம். அதனால் காணிக்கையை என் குருவுக்கு அளியுங்கள்.''

''தங்கள் விருப்பம் கரிகாலரே. தங்கள் குரு எங்கே இருக்கிறார்?''

''தற்சமயம் எனது இல்லத்தில் இருக்கிறார். அழைத்துவரச் சொல்லுகிறேன்.''

நாழிகைகள் மின்னலென வெட்டிச் சென்றன. மண்டப வாசலில் நூபுர ஒலி கலகலத்தது. அலட்சியமாகப் பார்வையைத் திருப்பிய ராஜசேகரன் திகைத்தான். 'இந்தச் சித்திரவல்லி எங்கே வந்தாள்?'

''வணக்கம், சோழ மண்டலாதிபதியே. வணக்கம், பாண்டிய வம்ச திலகமே! என்னை நினைவிருக்கும் என எண்ணுகிறேன். பரதக் கலையை எனது குலத் தொழில் என்றீர்கள். தாங்கள் அதைக் கற்றுக் கொண்டது ஆச்சரியம்'' என்று நகைப்புடன் சொன்னாள்.

''அறுபத்து நான்கு கலைகளைக் கற்ற சகல கலாவல்லவனாக வேண்டி இதைக் கற்றேன். இப்பொழுதும் எனது கருத்து மாறவில்லை. பெண்ணே, நீ இங்கே வந்த காரணம்?''

''பாண்டியரே! இந்தச் சித்திரவல்லிதான் என் நாட்டிய ஆசான்'' என்றாள்.

''ஓ..'' என்று இதழ்களை வளைத்த பாண்டியன், ''பெண்ணே! குரு காணிக்கை செலுத்த வேண்டும். என்ன வேண்டுமோ கேள்!'' குரலில் சற்று எரிச்சல் கலந்தது.

''என்ன கேட்கலாம் என்று சொல்லுங்கள், சோழ மன்னரே! பொன்னையும் பொருளையும் போதும் போதும் என்ற வரைக்கும் தாங்கள் எனக்கு அளித்து விட்டீர்கள்'' என்றாள் சித்திரவல்லி.

''பாண்டிய மன்னரின் குருவுக்குக் குரு நீ. என்ன வேண்டுமோ அதைத் தடையின்றி நீ பெறலாம்'' என்று பதில் அளித்தான் கரிகாலன்.

கம்பீரமாக மன்னவனைப் பார்த்தாள் சித்திரவல்லி. ''வரும் சிவ

''தளபதியாரே! தங்கள் மார்பு, தோள், கன்னங்களில் வீரத் தழும்பு காணப்படுகிறதே! எந்தப் போரில் நிகழ்ந்தது?''

''கொதிக்கும் எண்ணெயில் ஓமப்பொடி பிழியும்போது வெடித்துச் சிதறியபோது ஏற்பட்டது மன்னா!''

ராத்திரிப் புனித நன்னாளில் சோமசுந்தரப் பெருமானுக்கு விசேட பூஜை செய்வீர்கள் அல்லவா?''

''ஆமாம்.''

''அன்றைய தினம் இருபத்து நான்கு அபிநய வகைகளையும், ஏழு வகைத் தாளங்களையும் இணைத்துக் கூத்தப்பிரான் முன்பு ஆடி, குருவுக்கு மிஞ்சின சிஷ்யர் என்று நிரூபித்து விட்டால் அதுவே எனது குரு காணிக்கையாகும்.''

பூத்த மலரின் உதிர்வாக நாட்கள் உதிர்ந்தன. இன்று மகா சிவராத்திரி நன்னாள்.

காலையிலிருந்தே சோம சுந்தரப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அகிலும், சந்தனமும், சண்பகமும், முல்லையும், மல்லிகையும் மணந்தன. மாமன்னரின் நடனத்துக்காக மண்டபம் விசேட அலங்காரத்தைப் பெற்றது. முக்கியப்பட்டவர்கள் மட்டும் அழைக்கப்பட்டனர். ஆடும் கூத்தனின் பெரிய சிலை ஒன்றை வைத்திருந்தார்கள்.

இருபத்து நான்கு அபிநய வகைகளையும் ஏழு வகைத் தாளத்தில் அமைத்து ஆடிப் பார்த்துக் களைத்தான், பாண்டிய மன்னன். இன்றைய தினம் என்ன விந்தை நிகழப் போகிறது?

''எம் பெருமானே, நீவிர்தாம் வந்து ஆடவேண்டும்'' என்று வேண்டியபோது, சிரிப்பு வந்தது.

அரங்கம் நிரம்பி வழிந்தது. இன்று மன்னவனின் அரங்கேற்றமா? மன்னன் கேவலம் ஒரு கணிகைப் பெண்ணைத் தம் குருவாக வணங்குவதா?

''கரிகாலரே, ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்ட பாண்டிய ராஜசேகரன், மலர்களை எடுத்து அர்ச்சித்து, ஆடவல்லானை வணங்கி நின்றான். கண்கள் பனித்தன. கால்கள் துவண்டன. ஏற்கெனவே கடும் பயிற்சி. கால் விரல்கள் வலியில் தெறித்தன. இசைக் கருவிகள் சுருதியைக் கூட்டி அவனை ஆட அழைத்தன.

நட்ட பாடை, குறிஞ்சிப்பண், காந்தாரப் பண். மோகனமாகப் பாண்டியனின் நெஞ்சில் துள்ளல் பிறந்தது. கலைகளில் கரை கண்ட பாண்டியனுக்கா இந்தத் தளர்வு? பூமித் தாயைத் தொட்டு வணங்கினான்.

சொற்கட்டுப் பேச, சுருதி ரீங்கரிக்க, ஸ்வரங்கள் பாதங்களில் விரையப் பாண்டியன் ஆடினான். இது என்ன நடனம்? பாண்டியனா ஆடுகிறான்? கால்களில் தளர்வு அதிகரித்தது. குருகாணிக்கை தராமல் பாண்டியன் தோற்றவனாகி விடுவானோ?

''வெள்ளியம்பலத்துத் தாண்டவா! நினது திருநடனத்தைக் கண்டு களித்ததுண்டு. ஒரு காலைப் பதித்து, ஒரு காலைத் தூக்கி எத்தனை காலம் ஆடுவீர்? சிவாகம விதிப்படி நாலு கால பூஜைகளையும் செய்த பக்தன் கேட்கிறேன். தூக்கிய திருவடியைப் பதித்து, பதித்த திருவடியைத் தூக்கிக் கால் மாறி ஆடி அற்புதம் நிகழ்த்துங்கள் எம்பெருமானே? என்னால் இரண்டு கால்களைப் பதித்துமே ஆட முடியவில்லை.'' கண்ணீர் பொங்க ஆடிக் களித்துத் துவண்டு எம்பெருமானின் திருவடிகளைப் பற்றிக் கொள்ளத் துடித்தபோது..

'ஜல், ஜல்' என்ற சதங்கை ஒலி அரங்கத்தில் கவனத்தைத் திருப்பியது. ஓ எத்தகைய பேறு? வெள்ளியம்பலத்துத் தாண்டவன் கால்மாறி ஆடும் பேரொளி! அனைவரும் பிரமித்தனர். தாங்களே பம்பரம் போலச் சுழன்றனர். சித்திரவல்லியும், கரிகாலனும் சிரத்தின் மீது செங்கரத்தை வைத்துக் கூப்பித் தொழுதனர்.

'தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா
போற்றி!'

ஆடவல்லானின் நிருத்தத்தின் முன்பு வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு? பாண்டியனை ஆடவைத்து அதன் மூலம் ஓர் அற்புதத்தை நிகழ்த்திவிட்டான். பாண்டியன் அறுபத்து நான்கு கலைகளைக் கற்றான் என்பது மட்டும் அல்ல. நான்மாடக் கூடலின் நாயகன், அங்கயற் கண்ணியின் திருவுளத்தில் அழகொழுகத் தன் உருவை எழுதிப் பார்த்திருக்கும் ஓவியன் தன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றாகி விட்டது என்பதை அப்போது யாரே அறியப் போகிறார்கள். ❋

SOUTHERN RAIL WAY

Dear Passengers!

Southern Railway Wishes you a HAPPY DEEPAVALI

AND

Solicit your co-operation in

Eradicating Fire Accidents in Trains

* Don't carry Fire Works, Crackers and other inflammable Goods along with you.

It may endanger not only your life, But the lives of other Co-passengers as well.

** Further, carriage of explosives by passenger trains is punishable under sections 59 and 107 of Indian Railways Act.

Protect the Railway property as your own

Help the Railways to serve you better!

Issued by: Chief Public Relations Officer
Southern Railway, Madras-600 003

PUB4/II/I/R299



வாள் முனையும் வேல் விழியும்



பாண்டிய மன்னர்களில் கடைசி அரசன் சுந்தரகுமார பாண்டியனுக்கு வாரிசு இல்லை. விஜயநகர அரசரின் பிரதிநிதியான விசுவநாத நாயக்கர் அரசராளுர். இவருக்குத் தளவாய், அரியநாத முதலியார்.

நாயக்க அரசரின் மகள் கனகவல்லி நல்ல அழகி. இருபது வயதிருக்கும். தாயற்றவள். தளவாயின் வளர்ப்பு மகன் சிவக்கொழுந்து படிப்பறிவு இல்லாதவன். ஆனால் மற்போர், சிலம்பம், வாட்போர் ஆகியவற்றில் தேர்ந்தவன். ஒரு நாள் அவன் வாட்போர் செய்வதைக் கனகவல்லி பார்க்கிருள். தானும் கற்க விரும்புகிருள். தன் ஆவலை மன்னனிடம் கூறுகிருள். அவர் தடுத்து விடுகிருர். தளவாயும், "பெண்ணுக்கு எதற்கு வாட்போரும் மற்போரும்?" என்று கூறி விடுகிருர்.

ஆவலை அடக்க முடியாத கனகவல்லி சிவக்கொழுந்தை மற்போர்க் களத்தில் சந்தித்து, அவன் உடல் வனப்பிலும், மற்போர் திறத்திலும் மனத்தைப் பறிகொடுத்து விட்டதாகக் கூறி, அவன் மனத்தை மாற்றி, அவனிடம் பயிலத் தொடங்கிருள். அரசன் அறியாமல் வாட்போர்ப் பயிற்சிகள் தொடர்கின்றன.

இதற்கிடையில், மதுரை அரசு மாற்றான் ஆட்சிக்கு வந்ததை அறிந்த, (முந்திய) பாண்டிய மன்னனின் காதல் கிழத்தியின் புதல்வர்கள் ஐந்து பேர் போர் முரசு கொட்டுகிறார்கள். மூத்தவன் மிக்க தைரியமும் திடமும் போர்ப் பயிற்சியும் பெற்றவன். ஐந்து சகோதரர் களையும் மக்கள் 'பஞ்ச பாண்டியர்' என்றே அழைப் பார்கள். மூத்தவன் தென்பாண்டி வீமனின் மனைவி பாஞ்சாலி அசாத்திய தைரியமும், துணிவும் நிறைந்தவள்.

இந்தப் பஞ்சபாண்டியர், கள்ளர், மறவர் போன்ற இனத்தவர்களைக் கூட்டிக் கொண்டு, புதிதாக வந்து ஆட்சியைப் பிடித்த நாயக்கரை எதிர்த்தனர். மக்களும் இவர்களுக்குப் பக்கபலமாக இருந்தனர்.

தளவாய் அரியநாதர் போரை எப்படிச் சமாளிப்பது என்று அரசனுடன் கலந்தார். விஜயநகர அரசன் கிருஷ்ண தேவராயரிடம், தம் மகனைத் தூதனுப்பி, வீரர்களை அனுப்பச் சொன்னார். மக்கள் அரசுப் பக்கம் இல்லை என்பதை அறிந்த ராயர், புதிய ராணுவத்தை அனுப்பவில்லை.

கயத்தாற்றின் அருகே படைகள் சந்தித்துப் போரிட்டன. மூன்று மாதம் போர் நடந்தும் வெற்றி





தோல்வி இல்லை; இச்சமயத்தில் தளவாய் ஓர் அரிய யோசனையைக் கூறினார்; ''முடிவு காணாமல் நடக்கும் போரினால் மனித, பொருள் இழப்புக்களே அதிகம். இரண்டு படைகளில், யாராவது இருவர் கயத்தாற்றுப் பெருமானின்முன் மற்போர் செய்யலாம். யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்களே வென்றவர்.''

இந்த யோசனையைப் பஞ்சபாண்டவர் ஏற்றனர். கயத்தாற்றுப் பெருமான் கோயிலுக்கு எதிர் மைதானத்தில் மற்போர் தொடங்க, அதைக் காண மக்களும் அரசகுமாரியும் பாஞ்சாலியும் வந்திருந்தனர். தென்பாண்டி வீமனும் விசுவநாத மன்னனும் மற்போரும் வாட்போரும் செய்தனர். இதில் வீமன் தோற்றான்.

மகிழ்ச்சியுடன் தளவாயும் மன்னனும் புறப்பட்ட போது, வேங்கைபோல் உருமிக் கொண்டு பாய்ந்தாள் பாஞ்சாலி. ''எங்கே போகிறீர்கள்? என்னையும் வென்றால்தான் முழு வெற்றியாகும்'' என்றாள்.

'ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் போரிடுவதாவது?'' என்று, மன்னனும் தளவாயும் தவித்த சமயத்தில் மன்னன் மகள் கனகவல்லி, கண நேரத்தில் களத்தில் குதித்துவிட்டாள், கையில் வாளுடன்.



வாள் போர் பயிற்சி பெற்ற கனகவல்லியின் முன் பாஞ்சாலி தளர்ந்து விழ, அச்சமயத்தில் மைதானத்தில் பறந்து வந்த குத்திட்டி ஒன்று, கனகவல்லியின் மார்பில் பாய்ந்தது. இரண்டு பெண்களுமே மைதானத்தில் குற்றுயிராய் விழுந்தனர். ஆனால் பாய்ந்து வந்த சிவக்கொழுந்து, கனகவல்லியை மடியில் கிடத்தி, உதவி செய்யப் போய், குறி தவறிக் காதலியின் உயிரைக் குடித்து விட்டதை எண்ணிப் புலம்பினான்.

'தளவாயின் மகன் வேண்டுமென்றே தன் மகள் மேல் வாளை எறிந்து விட்டானோ?' என்றெண்ணிக் கோபித்து, அவனை உடனே கைது செய்ய ஆணை பிறப்பித்தான் மன்னன். கனகவல்லி, அவன் தனக்கு வித்தை கற்றுக்கொடுத்த குரு என்றும், அவன் நோக்கம் தன்னைக் காப்பாற்றுவதுதான் என்றும், அவனைக் காதலிப்பது போல் நடித்து வித்தையைக் கற்றுக் கொண்டு, பிறகு அவனைப் புறக்கணித்து விடலாம் என்றும் இருந்த தன் திட்டத்தைக் கூறினாள். தன் வஞ்சகச் செயலுக்கு ஏற்ற தண்டனையை இறைவன் அளித்து விட்டான் என்று கூறி, உயிர் துறந்தாள். நாயக்க அரசு மதுரையில் வேரூன்றியது.



GIVE YOURSELF A WORRY - FREE LIFE !

Time is running out. And you have sons to get educated and daughters to give in marriage. Do not forget your own retired life. South Indian Bank consider those problems as their own, so as to give you a worry - free life.

With South Indian Bank, there is a scheme to suit every one of your needs. Walk into any of South Indian Bank branches in India for that friendly, individual service.

Once a South Indian Bank customer, always a South Indian Bank customer. Happily and Willingly.

The South Indian Bank Ltd

Regd. Office : TRICHUR, KERALA

(GROWING TO SERVE YOU EVERY WHERE)

அனைவருக்கும் எங்களது தீபாவளி நல் வாழ்த்துக்கள் !



- நகரின் மத்தியில் நவீன வசதியுடன் அமைந்தது.
- A/c மற்றும் Deluxe அறைகள்.
- 3 சானல் மெல்லிசையுடன் டெலிபோன் வசதி.
- டூரிஸ்ட் கார் வசதி, கார் நிறுத்தும் வசதி.
- மீட்டிங் ஹால், எல்லா அறைகளிலும் வெந்நீர் வசதி.

கோமத் லாட்ஜ்
Gomath Lodge

R. S. BUILDINGS

56, பென்ஷனர் ரோடு, திண்டுக்கல்-624001.

தந்தி: Good Luck போன்: 4561&4562

ஊர்ப் பெரியவர் சிதம்பரம் உண்மையான கவலையோடு பேசிக்கொண் டிருந்தார்.

''ஒரு வெசனமான சூழ்நிலையில் இந்த நிமிஷம், இந்தக் கோயிலுக்கு முன்னாடி ஊர்ச்சனம் பூராவும் ஒக்காந்திருக்கோம். சோத்துக்குப் பஞ்சம் வர்றதைப் பார்த்திருக்கோம். கட்டிக்கிற துணிமணிக்குப் பஞ்சம் வர்றதைப் பாத்திருக்கோம். ஆனா, குடிக்கிற தண்ணிக்குப் பஞ்சம் வந்திருக்கிறதை இந்தக் கலியுகத்துலதான் பாத்திட்டிருக்கோம். எனக்கு வெவரம் தெரிஞ்ச இந்த எண்பது வருஷத்துலே ஒரு வோட்டி கூட நம்ம ஊர்க் கெணறு வத்திப் போய் நான் பார்த்ததில்லே. நம்ம ஊர்க் கெணறு கெங்காநதி ஊத்து மாதிரி; அப்பேர்ப்பட்ட கெணறு வத்திப்போச்சு. கறிக்குழம்புச் சட்டியைக் கழுவின மாதிரி தண்ணி கலங்கலாக் இருக்குது. ஆகாசம் வாயைத் தொறக்காமப் போனதாலே நம்ம ஊர்க் கெணறும் பட்டுப்போச்சு. அடுத்த வேளை வாய்த் தண்ணிக்கு நாம இப்ப என்ன பண்ணப் போறோங்கிறதுதான் பிரச்னே.''

அந்தப் பெரிய ஆலமரத்துக்குக் கீழே, கிராம ஜனங்கள் மொத்தமும் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

பார்வைகளின் ஒளிப்புள்ளிகள் ஊர்ப் பெரியவரின் வாயசைப்பில் பதிந்திருந்தது. முகங்களில் அதிகப்படியான கவலையும், தீவிரமும் தெரிந்தன. சிமெண்ட் மேடையில் பஞ்சாயத்துப் பிரிசிடெண்ட் மாணிக்கமும், ஊர் மணியம் தெய்வ சிகாமணியும், மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா சிவசாமிப் பிள்ளையும் சப்பணமிட்டு உட்கார்ந்திருந்தார்கள். உச்சி நேரத்துச் சூரியன் சித்திரை வெயிலை அமிலமாய்க் கொட்டிக்கொண் டிருந்தாலும், ஆல மரத்தின் ஆயிரக்கணக்கான தளிர் இலைகள் உஷ்ணத்தைச் சிரத்தையாய்ச் சுமந்துகொண்டு கீழே நிழலைத் தூவியிருந்தது.

ஊர்ப் பெரியவர் சிதம்பரம் தம் கழுத்தைச் சுற்றியிருந்த ஜரிகை அங்கவஸ்திரத்தை நாசுக்காய்த் தளர்த்திக்கொண்டு நரைக் கொத்து மீசையை இடக்கை விரல்களால் கோதிக்கொண் டிருந்தார். தம் அருகில் உட்கார்ந்திருந்த ஊர் மணியத்திடம் கேட்டார்: ''என்ன செய்யலாம்? சொல்லுங்க.''

ஊர்மணியம் தொண்டையைக் கனைத்தார். ''பெரியவர் சொன்ன மாதிரி பிரச்னை பெரிசுதான். அந்தப் பிரச்னையை ரெண்டு வழியில தீர்த்துக்கலாம். மொத வழி, நாளையிலிருந்து இங்கிருந்து ஆறு கிலோ மீட்டர் தூரம் போயித் தொண்டமுத்தூர் கெணத்துலேருந்து தண்ணி சேந்திட்டு வரணும். ரெண்டாவது வழி, ஆறு கிலோமீட்டர் தூரம் போயித் தண்ணியைக் கொண்டுட்டு வர முடியாதவங்க நம்ம ஊர் எல்லையில இருக்கிற சேரிக்கெணத்துலே தண்ணி சேந்திட்டு வரணும்.''

ஊர்மணியம் இந்த வார்த்தைகளைச் சொன்னதும் கூட்டத்தில் குபீரெனத் தீப்பற்றிய மாதிரி உணர்ச்சி.

''சேரிக் கெணத்துல போய் நாம தண்ணியச் சேந்தறதா?''

கூட்டத்தில் சளசளவென்ற பேச்சொலி கிளம்பியது. முன்வரிசையில் உட்கார்ந்திருந்த கோயில் பூசாரி பொன்னம்பலம் விசுக்கென்று தலைக் குடுமி அவிழ எழுந்தார்.

''மணியம் ஐயா, தாம் என்ன பேசறோங்கிறதைப் புரிஞ்சுட்டுத்தான் பேசறீரா? சேரித் தண்ணியச் சேந்தி நாம வாயை நனைக்கிறதா?''

சிதம்பரம் கையமர்த்தினார்; ''பூசாரி ஐயா! உங்க கோபம்

நியாயமானதுதான், ஒத்துக்கறேன். சேரி ஜனத்துக்குச் சொந்தமாயிருக்கிற கெணத்துல நம்ம மாதிரி இருக்கிற சாதி சனம் தண்ணி எடுக்கிறது சரியில்லைதான். ஆனா ஒரு விஷயத்தை நீங்க யோசிச்சுப் பாக்கணும். வைகாசி மாசம் பொறக்கிறவரை மழை வர்றது நிச்சயமில்லே. அதுவரைக்கும் நாம வாயை நனைக்கத் தண்ணி வேணுமின்னா சேரி கிணத்துக்குத்தான் போவணும். இந்தச் சுத்துவட்டார அத்தினி கிணறும் வத்திப்போச்சு. சேரிக்கிணத்தில மட்டும் குபுகுபுன்னு தண்ணி சுரந்துகிட்டிருக்கு. கிணத்துல நல்ல ஊத்துக்கண்ணு இருந்தா தான் இப்படித் தண்ணி ஊறும். பக்கத்துல இருக்கிற இந்தக் கிணத்தைவிட்டா நாம ஆறு கிலோ மீட்டர் தூரம் போயி பேரூர்ல தான் தண்ணி சேந்திட்டு வரணும். நம்ம ஊரு பொம்பளைகளால இது முடியற காரியமா? யோசிச்சுப் பாருங்க!''

பூசாரி மௌனமாகி உட்கார்ந்தார்.

சிதம்பரம் தொடர்ந்தார்: ''தண்ணிக்கு எந்த இடத்திலும் தோஷமில்லேன்னு சாஸ்திரம் சொல்லுது. எப்படியோ கொஞ்ச நாளைக்கு நாம சேரிக் கிணத்தை உபயோகப் படுத்திக்க வேண்டியதுதான். செமத்தியா ஒரு மழை அடிச்சாக்கூடப் போதும், நம்ம கிணறு ரொம்பிடும்'' என்றார் சிதம்பரம்.

கூட்டத்தின் நடுவேயிருந்து ஒருத்தன் எழுந்தான். வெற்றுடம்பு. பரட்டைத் தலை. பவ்ய குரல்.

''ஐயா! ஒரு சந்தேகம்...?''

''ம். கேளு!''

''சேரி சனம் யாருமே நம்ம ஊர்க் கிணத்துல தண்ணி எடுக்கக் கூடாதுன்னு நாம கட்டுப்பாடு போட்டிருக்கோம், இல்லீங்களாய்யா?''

''ஆமா.''

''இப்போ நம்ம ஊர் கெணறு பூராவும் வத்திப்போச்சு. சேரிக் கிணத்துல தண்ணி இருக்கு. நாம தண்ணி சேந்தப்போனா அவங்க ஒத்துக்குவாங்களா?''

சிதம்பரம் சட்டென்று முகம் சுளித்தார். ''அதெப்படி அவங்க ஒத்துக்காமப் போவாங்க? தண்ணி சேந்தக்கூடாதுன்னு எந்தப் பயலாவது பல்லுமேல நாக்கைப்போட்டுப் பேசிடுவானா? அத்தினி தகிரியம் எந்தப் பயலுக்காவது இருக்கா? அவங்க நம்மகூடக் கலந்துடக்கூடாதேங்கிறதுக்காகத்தான் அவங்களுக்குத் தனியா கெணறு வெச்சுக்கச் சொன்னோம். அந்தக் கிணத்துல நமக்கும் பங்கு இருக்கு.''

தர்மகர்த்தா தலையசைத்தார்:

''சிதம்பரம் ஐயா சொன்னது சரியான வார்த்தை. அவங்க சனம் யாரும் மறுத்துப் பேசிடமாட்டாங்க. இருந்தாலும் நம்ம தண்ணி தேவைக்கு அவங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லிடறது நல்லது. நாளைக்குப் பின்னாடி சச்சரவு வராம இருக்கும்.''

சிதம்பரம் இடப் பக்கமாய்த் திரும்பி, மேடைக்குக் கீழே முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த தலையாரியைப் பார்த்தார். ''செங்காணி, நீ போய்ச் சேரியில இருக்கிற அந்த இசக்கிக் கிழவனை ஊர்ப் பஞ்சாயத்து கூட்டிட்டு வரச்சொன்னதாச் சொல்லிக் கூட்டிட்டு வா.''

தலையாரி எழுந்தான்.

பஞ்சாயத்துத் தலைவர் மாணிக்கம் சொன்னார்: ''அந்த இசக்கிக் கிழவன் வீட்ல இருக்கமாட்டான். எங்கியாச்சும் சாராயக் கடையிலியோ, கள்ளுக்கடையிலியோ படுத்திட்டிருப்பான். போயி எழுப்பிக் கூட்டிட்டு வா.''

''சரிங்கையா.''

தலையாரி செங்காணி எழுந்து வேகமாய்ச் சேரிப்பக்கமாய்ப் போனதும், பஞ்சாயத்து மேடையில் உட்கார்ந்திருந்தவர்கள் தம்தம் தாம்பூலப் பெட்டிகளைத் திறந்தார்கள். கூட்டத்தில் இருந்த இளவட்டங்கள் காதுகளில் செருகியிருந்த பீடித் துண்டுகளோடு மரத்துக்குப் பின் பக்கமாய்ப் போக, தலை நரைத்த பெரிசுகள் மடியை அவிழ்த்துப் புகையிலைக் காம்புகளைக் கிள்ள ஆரம்பித்தன.

எல்லாரும் இசக்கிக் கிழவனுக்காகக் காத்திருந்தார்கள்.

''இசக்கி!''

மரச்சட்டத்தை இழைப்பு உளியால் செதுக்கிக்கொண்டிருந்த இசக்கிக் கிழவன் குரல் கேட்டுத் தலையை உயர்த்தினான். தலையாரி செங்காணி குடிசைக்கு வெளியில நின்றிருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் வெளியே வந்தான்.

''கும்புடறேன் தலையாரி ஐயா!'' கைகளை உயர்த்திச் சேவித்தான். அக்கம் பக்கத்துக் குடிசைகளில் இருந்தவர்கள் மெல்ல வந்து தலையாரியைச் சூழ்ந்து கொண்டார்கள். தலையாரி யாரையும் பொருட்படுத்தாமல் இசக்கியை நேர்ப் பார்வை பார்த்துக்கொண்டு சொன்னான்:

''இசக்கி! ஊர்ப் பஞ்சாயத்து ஆலமரத்து மேடையில குந்தியிருக்கு. உன்னைக் கையோடு கூட்டிட்டு வரச் சொன்னாங்க. உம்... புறப்படு!''

''எதுக்கோசரம் தலையாரி ஐயா?'' முகம் மாறிப் போய்க் கேட்டான் கிழவன்.

''விவரம் சொன்னாத்தான் வருவியா?''

இசக்கிக் கிழவன் அவஸ்தையாய்ச் சிரித்தான். ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை இதோ வர்றேன்!'' கிழவன் புறப்பட ஆயத்தமாகிச் செங்காணியோடு நகர, சுற்றி நின்றிருந்த கும்பலில் ஒருவன் கட்டிய லுங்கியோடும், லேசான சாராய நெடியோடும் முன்னால் வந்தான். ''பாட்டையா நில்லு. விபரம் என்னான்னு தெரிஞ்சுகிட்டுக் கூடப் போ. கூப்பிட்டா நீபாட்டுக்குப்போயிடறதா?''

தலையாரி கோபமாய் அவன் பக்கம் திரும்பினான். ஆத்திரத்தோடு ஏதோ சொல்ல முற்பட்டவனை அந்த லுங்கிப்பேர்வழி கையமர்த்தினான்.. ''அந்த மிரட்டலையும், உருட்டுக் கண்ணையும் உன்னோட ஊர் எல்லையோட நிப்பாட்டிக்க. எங்க சைட்ல வெச்சுக்காதே. பஞ்சாயத்து எதுக்கோசரம் குந்தியிருக்கு? எங்க பாட்டையாவை எதுக்கோசரம் கூப்பிட்டுப் போறே? இந்த ரெண்டு கேள்விக்கும் பதிலைச் சொல்லிட்டு அடுத்த அடி எடுத்து வைய்யி. இல்லேன்னா, நீ இங்கிருந்து போக மாட்டே!''

தலையாரி செங்காணி சுற்றி நின்றிருந்த கும்பலைப் பார்த்ததும் நிலைமையை உணர்ந்து ஜாக்கிரதையானான். முகத்தை விறைப்பாக வைத்துக்கொண்டு சொன்னான்: ''கெணத்துத் தண்ணி விஷயமா ஏதோ பேசணுமாம். அதுக்கோசரம் உங்க சாதிப் பெரிய மனுஷனைக் கூப்புட்டு வரச் சொன்னாங்க.''

லுங்கிப் பேர்வழி கெக்கலித்தான். ''ஓ..ஹோய்ய்..! தண்ணி விஷயமா? பாட்டையா கேட்டியா கதைய? நான் அன்னிக்கு உங்கையில சொன்னது நெசமாயிடுச்சுப் பார்த்தியா? ஊர்க் கிணறு வத்திக்கிட்டே போவுது, அதுல தண்ணி வறண்டு போனா நம்ம கெணறுமேல அவங்க கண்ணு விழும்னு சொன்னது சரியாப் போச்சு. நம்ம கெணத்துத் தண்ணிய பங்கு போட உன்னைக் கூப்பிடறாங்க. தரமுடியாதுன்னு கண்டிஷனாச் சொல்லிடு. ஒனக்கு அப்படிச் சொல்லத் திறவெட்டு இல்லேனா, நட, நான் உன் கூட வர்றேன். நான் வந்து சொல்றேன்.''

இசக்கிக் கிழவன் அந்த லுங்கி வாலிபனின் தோள்மேல் கையை வைத்தான். ''டேய், தவசி! வீணாத் தகராறு எதுக்கு? அவங்களுக்கு வேண்டிய தண்ணிய எடுத்துக்கிட்டுப் போகட்டுமே. அவங்க பக்கக் கிணறு வத்திப்போனா அவங்க என்ன பண்ணுவாங்க?''

''ஏய், கிளவா நீ பேசாமே கம்முன்னு கெட! நான் பஞ்சாயத்துக்குப் போறேன். அந்தப் பெரிய மனுஷங்களுக்கு நான் பதில் சொல்லிட்டு வர்றேன். தலையாரி முன்னாடி போ; நான் பின்னாடி வர்றேன்.''

செங்காணி நகர்ந்தான்.

தவசி கூட்டத்தைப் பார்த்துக் கத்தினான்: ''நெஞ்சுக் கூட்ல தகிரியம் இருக்கிற ஆம்பிளைங்க மட்டும் எம்பின்னாடி வாங்க. மத்தவங்க இங்கிய இருங்க.''

சுமார் இருபது பேர் தவசியின் பின்னால் திரண்டார்கள்.

கும்பலாய் ஊர் எல்லைக்குள் நுழைந்து, பஞ்சாயத்து மேடையை நோக்கி நகர ஆரம்பித்தான்.

பஞ்சாயத்து மேடையும், ஊர் ஜனமும் திகைத்தது.

''மணியக்காரரே, இதென்ன இப்படி வர்றாங்க? இசக்கிக் கிழவனைக் கூப்புட்டு வரச்சொன்னா, இந்தச் செங்காணி ஒரு படையையே கூப்புட்டு வர்றானே?'' அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

Phone : 491 Grams : "YESYES"

SWAMINATHAN SILKS

(Mg. Partner: S. PRAKASAM, Kanchipuram)

52, Sundara Mudali Street, Kosappalayam

ARNI (N. A. Dt.)

Popularly acclaimed as the latest fashion

creators for each and every season

Renowned for high tradition

for quality manufacture and supply of

HANDLOOM PURE SILK SAREES

of exquisite finish, tasteful designs

and delightful colours

With the best compliments from

Nagalakshmi Flour Mills Private Limited

Manufacturers and Suppliers of Quality WHEAT PRODUCTS
UNDER THEIR FAMOUS

"KOVIL BRAND"
Maida & Sooji

REGISTERED OFFICE
Mills & Sales Department
No. 1, Trichy Road
DINDIGUL - 624 009
Phone: 4571

"STEAMER BRAND"
Atta & Bran

PRINCIPAL OFFICE
377, Suryanarayana Street
MADRAS-600 081
Phone: 552672

Gram: FLOURMILL

கல்யாணப் பட்டு ஜவுளிகளுக்கு

RM.K. விஸ்வநாத பிள்ளை & சன்ஸ்

வடக்கு ரத வீதி
திருநெல்வேலி டவுன்

தவசி நெஞ்சுக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு பஞ்சாயத்து மேடைக்கு முன்பாக வந்து நின்றான். மெல்லிய குரலில் சொன்னான்:

''பெரியவங்களுக்கு வணக்கம்.''

தவசியின் வணக்கத்தைப் பொருட்படுத்தாத சிதம்பரம் செங்காணியைப் பார்த்துச் சீறினார்: ''இசக்கிக் கிழவனைக் கூப்புட்டு வரலையா? செங்காணி?''

செங்காணி பதில் சொல்வதற்குள் தவசி முந்திக்கொண்டான்: ''எங்க பாட்டையாவுக்குப் பதிலாத்தான் நான் வந்திருக்கேன். நீங்க பாட்டையா கிட்ட என்னத்தைப் பேச நெனைச்சிங்களோ, அதை என்கிட்டப் பேசலாம். என்னோட சாதி சனம் சார்பா நான் வந்திருக்கே. நீங்க கேக்க வேண்டியதை என்கிட்டக் கேக்கலாம்.''

''உம் பேரென்னடா?'', தர்மகர்த்தா எரிந்து விழுந்தார்.

தவசி சிரித்தபடி சொன்னான்: ''தவசி.''

''தகராறு பண்றதுக்காகவே ஆளுங்களைக் கூப்புட்டு வந்திருக்கியாடா தவசி?'' ஊர் மணியம் கோபமாய்க் கேட்டார்.

''நாங்க எதுக்கோசரம் தகராறுக்கு வர்றோம்? அநாவசியமா நாங்க யார் வம்புக்கும் போறதில்லை. வலிய வர்ற வம்பையும் என்னன்னு கேக்காமே விடறதில்லை. எங்க சாதி பாட்டையாவை எதுக்கோசரம் பஞ்சாயத்துக்குக் கூப்பிட்டீங்க? அத மொதல்லே சொல்லுங்க.''

ஊர்ப் பெரியவர் சிதம்பரம் சில விநாடிகள் தவசியை உற்றுப் பார்த்தார். அவனுக்குப் பின்னால் ஆவேசமாய் நின்றிருக்கும் அந்த அழுக்கான முரட்டுக் கும்பலையும் பார்த்தார். பிறகு தொண்டையைச் செருமிக்கொண்டு மெல்லிய குரலில் சொன்னார்.

''கேட்டுக்கடா தவசி! ஊர்ல இருக்கிற கெணறு வத்திப் போச்சு. சேந்தினாச் சேறும் சகதியுமா வருது. ஊர் ஜனங்க வாய் நனைக்கத் தண்ணியில்லே. அதனால ஒரு மழை பெஞ்சு ஊர்க்கெணறு ரொம்பற வரைக்கும் உங்க சேரிப்பக்கமா இருக்கிற கெணத்துல தண்ணி சேந்திக்கப் போறோம். காத்தாலே அஞ்சு மணியிலிருந்து மத்தியான்னம் ஒரு மணி வரைக்கும் எங்க ஜனங்களுக்குக் கெணத்தை உட்டுடணும். மத்தியான்னத்துக்கு மேலே உங்க சாதி சனம் தண்ணி சேந்திக்கலாம்.''

சிதம்பரம் பேசப் பேசத் தவசி பேச்சில் குறுக்கிட்டான்.

''ஐயா ஒரு நிமிடம்!''

''என்னடா?''

''உங்க ஊர்க் கெணத்துல தண்ணி இருந்தப்ப, எங்க கெணத்துத் தண்ணியைத் தீட்டுப்பட்ட தண்ணியா நெனைச்சுக் கேவலமாப் பேசியிருக்கீங்க; ஞாபகமிருக்குங்களா?''

''டேய், எப்பவோ பேசின பழசையெல்லாம் கிளறிட்டிருக்காதே! நாளைக்கு ஊர்ச்சனம் தண்ணிக்கு வந்தா மரியாதையா வழியை விட்டு நில்லுங்க.''

''ஐயா! மிரட்டி மீன் பிடிக்கிற இந்த வேலையெல்லாம் எங்ககிட்ட வெச்சுக்காதிங்க. நயமாச் சொன்னாத் தண்ணி தர்றோம். அப்பிடித் தண்ணி தந்தாலும் ஒரு கண்டிஷன் பேர்லதான் தண்ணி தருவோம்.''

''என்னடா பெரிய கண்டிஷன்?''

தவசி கொஞ்சம் குரலை உயர்த்திக்கொண்டான்; ''மழை பெஞ்சு உங்க கெணறு ரொம்பிப் பின்னாடி, ரெண்டு கெணத்தையும் ஊர்ப்பொதுவுக்கு உட்டுடணும். உங்க சனம் எங்க கெணத்திலேயும் சேந்திக்கலாம். அதே மாதிரி எங்க சனம் உங்க கெணத்திலேயும் தண்ணி எடுத்துக்கலாம். இந்தக் கண்டிஷனுக்கு நீங்க ஒத்துக்கணும்.''

கூட்டம் ஒரு விநாடி ஸ்தம்பித்தது.

ஊர் மணியம் ஆவேசமாய் எழுந்தார். ''ஏண்டா பன்னி தின்னும் பயலே! என்ன பேச்சுடா பேசறே? மண்டையிலே மூளை புரண்டுபோச்சா? ஒரு ஆத்திர அவசரத்துக்குத் தண்ணி கேட்டா உன்னோட சாதி நெலமையை மறந்துட்டு உறவு கொண்டாட வர்றியா? எத்தினி கொழுப்புடா உனக்கு?''

தவசி லுங்கியை மேலேற்றிக் கொண்டான்: ''ஐயா, வார்த்தையை நிதானமா அளந்து பேசுங்க. நாக்கு நல்லா வளையுதுங்கறதுக்காக எதையும் பேசிடாதிங்க. எங்களுக்கும் நாக்கு வளையும்.''

''டேய்!''

''ஐயா! நல்லா யோசிச்சுப் பாருங்க! ஆறு மாசத்துக்கு முன்னாடி எங்க கெணத்துல யாரோ ஒருத்தி விழுந்து செத்துப் போனப்ப பொணம் அந்தக்கெணத்துல இருந்த ஒரு நாள் பூராவும் தண்ணி எடுக்க முடியாமே தத்தளிச்சோம். தண்ணி சேந்த உங்க கெணத்துக்கு வந்த எங்க சாதிப் பெண்டுகளைக் கல்லெடுத்து அடிச்சு விரட்டினீங்க. தலைக்கு ஒரு குடம் தண்ணி குடுக்கும்படியாக் கால்லே வுழுந்து கெஞ்சினோம். அப்ப உங்கள்ல யாருமே மசியல்ல! இதெல்லாம் உங்களுக்கு மறந்து போயிருக்கும். ஆனா நாங்க மறக்கல்லை.''

''ஓஹ்ஹோ? அந்தப் பேச்சை ஞாபகம் வெச்சுக்கிட்டுத்தான் இந்த ஆட்டம் போட்றியா? முடிவா இப்போ நீ என்னடா சொல்றே?''

''தண்ணி தர்றோம். ஆனா, கண்டிஷனுக்கு ஒத்துக்கணும்.''

''ஒத்துக்காட்டி?''

''எங்க கெணத்திலிருந்து ஒரு சொட்டுத் தண்ணிகூட ஒங்களுக்குக் கெடைக்காது.''

''பாத்துடலாமா?''

''பாத்துடலாம்.''

கூட்டம் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது. சிலர் தவசியை நோக்கி ஆவேசமாய் நகர்ந்தார்கள்.

''பொறம்போக்கு நெலத்துல குடிசையைப் போட்டுக்கிட்டு எச்சில் சோறு சாப்பிடற நாய்களுக்குத் தகரியம் பார்த்தியா? அவனைக் கொஞ்சம் மேஞ்சு உடுடா.''

''அடிச்சுச் சாகடிடா.''

''கண்டிஷன் போடறான், களுதப்பய.''

கூட்டம் தவசியையும் அவனோடு வந்தவர்களையும் நெருக்கமாய்ச் சூழ்ந்துகொள்ள, தவசி பயப்படாமல் நின்றான். கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான்: ''எங்க பத்துப் பேரை உங்க சாதிசனம் சுலபமாக் கொன்னு போட்டுடலாம். ஆனா அது ஒங்களுக்கு வீரமில்லே. ஒங்களுக்கு நெசம்மாலுமே வீரமிருந்தா நாளைக்குக் காத்தாலே பத்து மணிக்கு எங்க கெணத்துக்கு வந்து தண்ணி சேந்திக் காட்டுங்க, பார்க்கலாம்.''

ஊர் மணியம் கூட்டத்தைக் கையமர்த்தினார்.

''அந்தப் பசங்களைப் போகவிடுங்க. நாளைக்கிக் காத்தாலே பத்து மணிக்கு அவங்க கெணத்துக்குப்போய் அவங்க முன்னாடியே தண்ணியைச் சேந்தி அவங்க தலையிலே ஊத்திக் காட்டுவோம். ஒரு அப்பனுக்கும், ஒரு ஆத்தாளுக்கும் பொறந்தவன் யாராவது வந்து தடுக்கட்டும் பாக்கலாம்! போங்கடா, களவாணிப் பசங்களா. போயிக் கெணத்தைச் சுத்திக் காவல் போடுங்க. நாளைக்குக் காத்தாலே சரியாப் பத்து மணிக்குத் தாம்புக் கயித்தோடும், குடத்தோடும் வர்றோம்.''

தவசி சிரித்தான். ''வாங்க. நாளையோட ஆயுசு முடிஞ்சவனெல்லாம் தண்ணி சேந்த வாங்க! கெணத்து மோட்டைச் சுத்தியும் தலைங்க சிதறிக் கிடக்கறதைப் பார்க்க ஆசைப்படறவங்க வாங்க! எவனாவது எங்க கெணத்து ராட்டையில தாம்புக் கயித்த போட்டு ஒரு குடம் தண்ணி சேந்திட்டான்னா, அவன்தான் மீசை மொளைச்ச ஆம்பளை!''

தவசி சொல்லிக்கொண்டே நடையைக் கட்டினான்.

அவனுடைய ஆட்கள் அவனைத் தொடர்ந்தார்கள்.

மறுநாள் காலை பத்துமணி.

சித்திரை வெயில் சுள்ளென்று உறைக்க, அதைப் பொருட்படுத்தாமல் சேரிக் கிணற்றைச் சுற்றிலும் ஆட்கள் நின்றிருந்தார்கள். ஒவ்வொருத்தன் கையிலும் குறைந்தபட்சம் இரண்டு ஆயுதங்கள் இருந்தன. வீச்சரிவாள், ஆட்டை வெட்டுகிற கசாப்புக்கத்தி, முயலை வேட்டையாடப் பயன்படுத்துகிற குத்திட்டி, பன்றியை அடித்து விழ்த்த உபயோகப்படுத்துகிற இரும்புத்தடி.

தவசி ஆக்ரோஷமாய்க் கூட்டத்தைச் சுற்றி வந்தான். ''கிணத்து மோட்டை எந்தக் கொம்பன் மெதிச்சாலும் சரி, ஒரே போடாப் போட்டுடுங்க. வெட்டு எங்க வுழுந்தாலும் சரி. ஒருத்தன் தலை சாஞ்சதுமே அடுத்தபடி கெணத்து மோட்டை மெதிக்கப் பயப்படணும்.''

கள்ளைக் குடித்துவிட்டு மிதப்போடு நின்றிருந்த ஆட்கள் எல்லாரும் தலைகளை அசைத்தார்கள்.

''தவசி, அங்க பாத்தியா?''

ஒருத்தன் ஊர்ப் பக்கமாய்க் கையைக் காட்ட, தவசி நெற்றி மேட்டில் வலக் கையைக் கவிழ்த்துப் பார்வையை ஓட்டினான்.

புற்றீசல் மாதிரி ஒரு கூட்டம் வந்துகொண்டிருந்தது. கூட்டத்தின் முன்பாக முதல் ஆளாய் ஊர் மணியம் வேஷ்டியைத் தூக்கிக் கட்டியபடி வந்துகொண்டிருந்தார். கையில் தாம்புக் கயிறும், தகரக் குடமும். பின்னால் வந்துகொண்டிருந்த கூட்டத்தில் கைகளில் விதம் விதமாய் ஆயுதங்கள், கம்புகள், குண்டாந்தடிகள்.

''டே, சன்னாசி, வர்றானுக, அவனுக. கையிலேயும் கத்தி சமாச்சாரம் நெறைய இருக்கும் போலிருக்கு. நாம உஷாராயிருக்கணும்.''

கூட்டம் நெருங்கிக் கொண்டிருந்தது. தவசி பீடி யொன்றை வாயில் பொருத்தித் தீக்குச்சியைச் சரக்கென்று கிழித்து, தீப்பிழம்பால் பீடியின் தலையைப் பொசுக்கிப் புகை விட்டபடியே ஊர்ந்து வரும் கூட்டத்தைப் பார்த்தான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பின்னால் ஊர் மணியம் தம் கூட்டத்தோடு கிணற்று மேட்டுக்கு இருபதடித் தொலைவில் நின்றிருந்தார்.

இரண்டு தரப்பிலும் நிசப்தம்.

மௌனமான, ஆத்திரம் நிறைந்த பார்வைகள்.

அனலாய்ப் பெருமூச்சுக்கள்.

தவசி பீடியைச் சுண்டியெறிந்து விட்டு மணியத்தைப் பார்த்துக் கோணலாய்ச் சிரித்தான்.

''ஏன் அங்கியே நின்னுட்டீங்க? வெத்தலை பாக்கு வெச்சாத்தான் தண்ணி சேந்த வருவீங்களா?''

''டேய், இந்தக் குறும்புப் பேச்செல்லாம் என்கிட்ட வேண்டாம். தண்ணியைச் சேந்தத்தான் போறேன்: தடுங்கடா பாக்கலாம்.''

ஊர் மணியம் இடக் கையில் குடத்தோடும், வலக் கையில் தாம்புக்கயிற்றோடும் அடியெடுத்து வைக்க ஆரம்பித்தார். கிணத்து மேட்டைநோக்கிநிதானமானநடை.

''மணியக்காரரே, ரோசனை பண்ணி அடுத்த அடி எடுத்துவையுங்க. வூட்ல இருக்கிற பொண்டாட்டிக்கும், தோப்பு வூட்ல இருக்கிற வெப்பாட்டிக்கும் ஒரு ஆம்பிளைத் தொணை இல்லாமப் பண்ணிக்காதிங்க. ராட்டையில கயித்தைப் போடற நேரம் ஒங்க கழுத்துல கத்தி வுழுந்துடும்.''

ஊர் மணியம் தயக்கம் இல்லாமல் கிணற்றுமேட்டை நோக்கி நடந்தார். கிணற்றைச் சுற்றிலும் நின்றிருந்தவர்களின் கரங்களில் ஆயுதங்கள் ஒரு முறை அசைந்தன. மணியத்தின் கழுத்துப் பரப்பை ஒட்டு மொத்தமாய்க் குறி வைத்தன.

பத்தடி தூரம்.

ஆயுதங்கள் ஆயத்தமாயின.

ஐந்தடி.

கிணற்றுமேட்டைத் தொட்டார் ஊர்மணியம்.

''போடுங்கடா, வெட்டிப் போடுங்கடா!'' தவசி ஆக்ரோஷமாய்த் தன் கூட்டத்தைப் பார்த்துக் குரல்கொடுத்தான். அடுத்த விநாடி கத்தி சமாசாரங்கள் சரேலென உயர்ந்து செயல்பட முயல, கிணற்றுமேட்டுக்குப் பின்புறமிருந்து அந்த நடுக்கமான குரல் ஆவேசமாய் எழுந்தது.

''டேய் தவசி!''

எல்லாரும் திரும்பினார்கள்.

இசக்கி, கிழவன் நின்றிருந்தான்.

அவ கத்தினான்.'' பாட்டையா, நீ எதுக்கோசரம் இங்க வந்தே? நீ போயிடு!''

கிழவன் தீர்க்கமாய் நடந்து முன்னால் வந்தான்.

''தவசி, அவுங்களைத் தண்ணி சேந்த உடு.''

தவசி, கோபமாய் இசக்கிக் கிழவனைப் பார்த்தான். ''பாட்டையா, ஒனக்கென்ன, மூளை பிசகிப்போச்சா? நம்ம ஜனம் தண்ணிக்குத் தவிச்சு நின்னப்ப, இவனுக அவுங்க கெணத்துல தண்ணி சேந்த உட்டானுங்களா? இப்ப மட்டும் நாம எதுக்கோசரம் நம்ம கெணத்துல அவுங்களுக்குத் தண்ணி சேந்த உடணும்?''

''அவுங்க அப்படிச் செஞ்சா நாமளும் அப்பிடிச் செய்யணுமா? கத்தி கம்பை வெச்சிட்டிருக்கிறவனையெல்லாம் அப்பாலே போகச் சொல்லு. அவுங்கதண்ணி எடுத்துட்டுப்போவட்டும். அவங்க கெணறு ரொம்பியிருந்தப்ப நம்மகெணத்துத் தண்ணி அவுங்களுக்குத் தீட்டாத்தெரிஞ்சுது. இப்போ வேற வழியில்லாததனால் இந்தச் சேரித் தண்ணி கெடைச்சாக் கூடப் பரவாயில்லேன்னு நினைச்சு வந்திருக்காங்க. இந்தப் பக்கமா வர்றதையே பாவமா நெனைச்சிட்டிருந்த பெரிய மனுஷங்களெல்லாம் இன்னிக்கு நம்ம சேரி மண்ணை மெதிச்சிருக்காங்க. இதிலேயே நாம ஜெயிச்சுட்டோம். அவங்க தண்ணிய எடுத்துக்கிட்டுப் போகட்டும் விடு.''

நெஞ்சுக் கூடு உலைத் துருத்தியாய் உப்ப உப்ப ஆவேசமாய் பேசிய இசக்கிக் கிழவனைப் புறங்கையால் தட்டிவிட்டான் தவசி.

''பாட்டைய்யா, நீ போயி உன்னோட தச்சு வேலையைக்கெவனி. நான் இவங்களைக்கவனிச்சுக்கறேன்; அத்தினி பேச்சுப் பேசின பின்னாடி இவங்களுக்குத் தண்ணியக் குடுத்தா அப்புறம் என்னை மாதிரிக் கொறக்குசும்பன் வேற எவனும் கிடையாது.''

''டேய் தவசி, நீ இப்ப அவுங்களைத் தண்ணி சேந்த உடப் போறியா, இல்லையா?''

''உடாட்டி என்ன பண்ணுவே?''

கிழவன் நயந்த குரலில் தவசியை ஏறிட்டான். ''தவசி, நான் சொல்றதக் கேளு: தண்ணிக்காக அநாவசியமாச் சண்டை போட்டுக்கிட்டுச் சாகிறது சரியல்ல. தண்ணிக்காக ரெத்தத்தைச் சிந்தறது முட்டாள்தனம்.. ஜனங்க இப்படியெல்லாம் மனுஷத் தன்மை இல்லாமே நடந்துக்கிட்டே போனா, இனிமே அந்தக் கெங்கா நதிகூட வத்திப்போயிடும். ஒரு மழை பெஞ்சாப் போதும். அவங்க பழையபடி திரும்பவும் அவுங்க கெணத்துக்குப் போயிடுவாங்க; அது வரைக்கும் அவுங்க தண்ணி சேந்திக்கிட்டுப் போகட்டும்..''

''நான் ஒத்துக்கமாட்டேன்.''

''என்னைப் பாத்துச் சொல்லுடா.''

''உன்னோட மூஞ்சியப் பாத்துத்தான் சொல்றேன். அவுங்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணிகூட விட மாட்டேன்..''

ஊர் மணியம் கோபமானார். ''கிழவா, நீயொண்ணும் எங்களுக்கோசரம் அந்தப் பயகிட்ட வக்காலத்து வாங்கிப் பேசாதே. நாங்க நினைச்சா ரத்தத்தைக் கொட்டியாவது தண்ணிய எடுத்துக்கிட்டுப் போயிடுவோம்; மரியாதையா எல்லாரையும் நகர்ந்துக்கச் சொல்லு; ஊர்ல பொணம் விழக்கூடாதுன்னு பாக்கறோம்.''

இசக்கிக் கிழவன் முன்னால் ஓடி வந்தான்.

தவசி சிரித்தான்: 'யோவ்! பெரிசா நீ அந்தப் பக்கமாத் தள்ளிப் போயிடு. அந்தப் பெரிய மனுஷங்களை நான் பார்த்துக்கறேன், டேய், வாங்கடா எல்லாரும்..''

தவசி கிணற்று மேட்டைவிட்டுக் கீழே இறங்கினான்.

இசக்கிக் கிழவன் தவசியை மறித்தான்.

''தவசி, போகாதே!''

''போவேன்!''

''நான் சொல்றதக் கேளு.''

''கேக்க மாட்டேன். நீ அப்பாலே போயிடு!..''

''அப்படீன்னா இதத் தவிர வேற வழியில்ல. இன்னும் கொஞ்ச நேரத்துல இங்க சிந்தப் போற ரெத்தத்தைத் தடுக்கணும்னா..''

இசக்கிக் கிழவன் சொல்லிக் கொண்டே, விசுக்கென்று கிணற்றுச் சுவர் மீது தாவி ஏறினான். மற்றவர்கள் நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்து தடுப்பதற்குள்,

கிழவன் கிணற்றில் செங்குத்தாய்க் குதித்தான்.

சில விநாடிகளுக்குப் பிறகு—

''தொபீர்!'' என்ற சத்தம்!

''பாட்டையா!''

தவசி வீரிட்டுக் கத்த, கிணற்றைச் சுற்றிலும் அநேக ஸ்தாயி அலறல்களோடு கும்பல் சூழ்ந்தது. கோப நாக்குகளோடு சுழன்று கொண்டிருந்த இரண்டு பக்கக் கும்பல்களின் உணர்ச்சி சட்டென்று அணைக்கப்பட, அனைவரும் ஒட்டு மொத்தமாய் ஒரு மனிதாபிமானத்தின் நூலிழை உணர்வோடு கையிலிருந்த அரிவாள்களையும், கம்புகளையும் தடிகளையும் எறிந்துவிட்டுக் கிணற்றை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

இனி இசக்கிக் கிழவன் பிழைத்தாலும் சரி, இறந்துபோனாலும் சரி—

அவர்களுக்குள் இனிமேல் யாரும் ரத்தம் சிந்தமாட்டார்கள் என்னும் நம்பிக்கை அங்கே துளிர்விட ஆரம்பித்தது!

*

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

என்றும்

கோபால் பல்பொடி

பாக்கெட் விலை 45 காசுகள்

ஜெட் பல்பொடி

பாக்கெட் விலை 20 காசுகள்

வாங்கி உபயோகியுங்கள்!

தயாரிப்பாளர்கள்: **S. P. S. ஜெயம் & Co.**

மதுரை - 625001.

—மினர்வா

சத்துருக்கனின் வெற்றி



கி. சந்திரசேகரன்

(கைகேயியின் பேராசையால், ராமன் வனம் சென்றதையும் அதனால் தந்தை இறந்ததையும் அறிந்த பரதன் தன் தாயைக் காதைத் துளைக்கும் பாணங்கள் போன்ற சொற்களால் தூற்றிப் புலம்பினான். பின்னர்த் தேவி கௌஸல்யையிடம் குற்றமற்ற தன் நிலையை நிரூபித்துவிட்டு, தனிமையில் சத்துருக்னனிடம் பேசுகிறான்.)

பரதன்: சத்துருக்னா! என் மனம் படும் பாட்டை நீ ஒருவனே நன்கு அறிவாய்.

சத்துருக்னன்: அண்ணா, கடந்தவற்றைப் பற்றித் திரும்பத் திரும்ப நினைத்து உள்ளத்தை வாட்டிக் கொள்வதில் என்ன நன்மை? மேலே செய்வதைக் கவனிப்போம்.

பர: ஆம். நீ கூறுவதிலும் உண்மை இருக்கிறது. என்றுமே எதையுமே பேசிப் பேசிக் காலம் கடத்தாமல், அமைதியுடன் தீர விசாரித்து அல்லற்படாமல் மனத்தைக் காப்பவன் அல்லவா நீ? மறந்தேனே, நீ சுமித்திரா தேவியின் மைந்தன் என்பதையும்.

சத்: இனி நாம் கவனிக்கவேண்டியவை, கோசல நாட்டு அரசு உரிமையை ஆபத்துக்கு இடமாக்காமல் மக்களைக் காப்பாற்றுவது யார் என்பதையும், வெகு காலமாய் இங்கே சேவை செய்துவரும் அமைச்சர் முதலியவர்களுடன் கலந்து ஆலோசித்து முறை தவறாமல் பழையபடியே ராஜ்யத்தை ஆளும் வகை எப்படி என்பதையும் உடனுக்குடனே செய்து முடிக்கவேண்டும். தற்சமயம் அரசு நிர்வாகத்தை ஏற்று, வழி பிறக்கச் செய்வதே தங்கள் கடமையாக வேண்டும். இல்லையேல், இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய தாங்கள் பொறுப்பைக் கைவிட்டவராக மதிக்கப்படுவீர்.

பர: (பரபரப்புடன்) நீயும் வசிஷ்ட மகரிஷியுடன் சேர்ந்துகொண்டு என்னை அரசேற்கச் சொல்லுகிறாயா? அது நடக்கப்போவதில்லை என்பதை அறிவாய். ஞாபகம் இருக்கட்டும்.

சத்: பின் என்ன முடிவுக்கு வருவதாய்த் தங்களது உத்தேசம்?

பர: சொல்லுவேன், கேட்பாய் அப்பனே! உலகிற்கோர் ஆதரிசப் புதுமை என்று போற்றப்படும் உத்தமனை, என் இதய பீடத்தில் சதா ஏற்றி வைத்துள்ள ராமனை, எனது பெருமை எல்லாம் சேர்ந்து ஓர் உருவமாய் அமைந்தவனை, நானே கானகம் சென்று வழிபடுவேன். ராமன் எங்கிருந்தாலும் சிரமமே பாராமல் தேடி அடைந்து இந்தப் பெரும் அரசை அவன் பாதங்களில் சமர்ப்பித்துவிட்டு, மூத்தமகனான அவனுக்குரிய சிங்காதனத்தில் இதுவரையில் குலவழியே வந்தவர்களைப் போல் அலங்கரிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவேன். இது நிச்சயம்.

சத்: எனக்கும் அதில் திருப்தி தான். ஆயினும், ராமன் சம்மதிப்பானா? ஒருவர் சொல்வதையும் கேளாமல், 'தந்தையின் கூற்றைக் காப்பேன்' என்றவன், உங்கள் வேண்டுதலுக்குச் செவிசாய்ப்பானா? சம்மதிக்காவிட்டால் மேற்கொண்டு யோசனை என்ன? அறிய ஆவலாய் உள்ளேன்.

பர: மேற்கொண்டு செய்வதைத் தானே கேட்கிறாய்? இதோ என் பதில். ராமனை விட்டகலாமல் காட்டிலேயே விழுந்து கிடப்பேன். ராமன் என்னை நிராகரிக்க மாட்டான். ஆனால், ஆனால்... எனக்கு ஒன்றுமே தெளிவாய்ப் புலப்படவில்லை. என் செய்வேன் சத்துருக்னா?

சத்: எது தருமம். எதை எப்போது செய்வது நலம் என்பதையெல்லாம் பரிசோதித்துப் பார்ப்பவனாயிற்றே செம்மல்! முனிவர்களும் மேனதகளும் அவனுக்கெதிராக வாதாடத் துணிவு பெற்றதில்லையே! தடை இட்டானானால் அதைத் தாண்டத் தைரியம் வேண்டுமே நமக்கு, அண்ணா!

பர: இல்லை, சத்துருக்னா! நீ சிறியவன். ராமன் என்னிடம் வைத்துள்ள அன்பையும், ஆதரவையும் அறியாய், அப்பனே!

சத்: அறிவேன், அண்ணா. அன்பு செலுத்தப்படாதவர்கள் யாரேனும் ராமனின் சமீபம் இருப்பார்களா?

பர: இல்லை தம்பி; என் விஷயத்தில், ராமனும் கௌஸல்யாதேவியும் என்றுமே அன்பு காட்டுவார்கள். என் தாயின் தான்தோன்றித்தனத்தினால் எதையாவது அவள் செய்வதை நான் குறிப்பாய்க் கவனித்துக் குறை கூறினால், என்னைத் தடுத்து அவளுடைய மதிப்பைப் பெறவே எனக்குப் போதிப்பார்கள். என் தாய், அவள் என்றைக்குச் சுயமதிப்பையே பெரிதாகக் கருதிப் பிறரிடம் அலட்சியம் காட்டாமல் இருந்திருக்கிறாள்? கர்வம் தலைக்கேறியவள் அல்லவோ கேகய நாட்டின் குலக்கொழுந்து?

சத்: தாயை நிந்திப்பதை விட்டுச் சற்று நாம் நடக்க வேண்டியதைக் கவனிப்போம், அண்ணா!

பர: ராமனைக் கண்டபின் நான் அவனை விடமாட்டேன். மறுப்பு எதையும் ஏற்கமாட்டேன். சோறு தண்ணீரின்றி அவனிடமே கிடப்

பேன். அவன் வருகிறேன் என்று சொல்லும் வரையில் கிடப்பேன்.

சத்: ஆனால் அவ்விதம் தாங்கள் அங்கேயே நிற்க நேர்ந்தால், அயோத்தியிலுள்ளவர்களுக்கு என்ன பதில் சொல்வது? சிந்தித்தீர்களா? ராமனும் முதலில் மக்களின் நலத்தைப்பற்றியே யோசனை கூறுவான். பிறகுதான் மற்றவர்களின் நலம் அவன் எண்ணத்தில் உதிக்கும். எனக்கு அதில் சந்தேகம் இல்லை.

பர: பின் என்ன உன் யோசனை? அதையும் நான் கேட்கத் தயார்.

சத்: ராமனைக் காணத் தாங்களும் நானும் மட்டுமே செல்வதைவிட, இங்குள்ள அத்தனை அரண்மனைவாசிகளும், அமைச்சர் பெருமக்களும், இன்னும் முக்கியமான ஊர்வாசிகளும் நம்முடன் கூட வருவதால் ராமன் மனத்தை மாற்றச் செய்யலாம். தன்னை மிகவும் வருந்தி அழைப்பவர்களை முழுதும் காது கொடுத்துக் கேளாமல் இருக்க மாட்டான். தன் தீர்மானம் எதுவாயினும் மற்றவர்களின் யோசனைகளுக்கு மதிப்புக் கொடுக்கும் குணம் அவனிடம் என்றுமே உள்ளது. ஒருகால், ஒருகால்தான், அவன் மனம் மாறுவதற்குத் நம்முடன் தேவி கைகேயியையும் அழைத்துச் சென்றால், அவள் இட்ட கட்டளையை அவளே விலக்குவதாக நினைத்துத் தன் தீர்மானத்தை விடலாம்.

பர: என்ன சத்துருக்னா, இப்படி அந்தக் கேடு கெட்டவளை ஒரு மனுஷியாக நீ மதிக்கத் துணிந்தாய்? அவள் முகத்தில் இனி ராமனா விழிப்பான்? ஒருகாலும் அவ்விதம் நேர நான் இடங்கொடேன். எப்பொழுதும் அவளிடம் கோணாத மனத்துடன் நடந்துகொண்டவனை, துளியும் அன்பே காட்டாமல் அல்லவா வனம் செல்லுவதற்கு அவளுடைய கொடும் நாக்குக் கட்டளை இட்டது? சொந்த அன்னையையும்விடத் தன்னிடம் பரிவு காட்டியவனிடம் ஒரு வார்த்தைகூட அன்பாகச் சொல்லாமல் தானே, 'காட்டுக்குப் போ, போ' என்று விரட்டினாள். அவளையா நம்முடன் அழைத்துச் செல்வது? முடியாது. மற்றத் தேவிமார்கள் நிச்சயம் நம்முடன் வருவார்கள். அவள் மட்டும் தண்டனை பெற்ற குற்றவாளியாய்த் தனியாக அரண்மனையில் பிசாசுபோல் உலாவி வரட்டும். கூட வேண்டுமானால்

அந்தக் கிழக் கூனியைத் துணை தேடட்டும்.

சத்: அண்ணா, சற்று நிதானியுங்கள். நீங்கள் கருதுவதுபோல் ராமனும் தேவி கைகேயியைத் தாழ்த்திவிட இணங்கான். எந்தப் பிழையையும் பொறுத்து மன்னிக்கும் பண்பாளன் அல்லவா ராமன்? ராமனையும் மற்றவர்களையும் கருணைக்கு ஒப்பு நோக்கவா இயலும்? கைகேயியைக் காண்பதனால் ராமனுக்கு நிச்சயம் ஆறுதல் உண்டாகும். தன்னை உண்மையில் அவள் வெறுக்கவில்லை. தன்னிடம் வைத்திருந்த பழைய அன்பையே வைத்திருக்கிறாள் என்று எண்ணி, ராமன் அதே மதிப்பைக் காட்டுவான்.

ப: தம்பி, நீ சொல்லும் காரணத்தை நான் இதற்கு முன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அப்படியா? உலகில் இனி எந்த விதமான நன்மதிப்பும் அவளுக்கு ஏற்படாதென்றே அல்லவா நான் நினைத்திருந்தேன்? தேவி என்ற சொல்லுக்கே தகுதியற்றவளாய் அல்லவா என் தாயை நான் கருதுகிறேன்? நீ ஏதோ அவளுக்கு உயர்வு ஏற்படப் போவதாக மனப்பால் பருகுகிறாய். அவ்வளவே!

சத்: கேகேயி தேவி மிகவும் உள்ளம் நொந்துபோயிருக்க வேண்டும். எல்லாருடைய முன்னிலையிலும் தீயைக் கக்கும் தங்களுடைய சொற்களைக் கேட்டடன் அவள் மனம் எப்படித் துடித்திருக்குமோ அறியேன். பிடிவாதங்கள் இனித் தேவியினிடம் புகலிடம் பெரு என்றே நினைக்கிறேன். பச்சாத்தாபத்தின் அனல் சுவாலையில் அவளுடைய மனத்திடமெல்லாம் சாம்பலாகியிருக்கும். ராமனை நேரில் இனிப் பார்க்கையில் தேவியின் உள்ளம் உருகிவிடும். ஐயம் இல்லை. தன்னால்தானே எளிய வாழ்க்கையை ராமனும், அவனுடன் இளவலும், சீதையும் காட்டுக்குப் பிரதேசங்களில் கழிக்க வேண்டி ஏற்பட்டது என்பதை நேரில் பார்த்த பிறகு அவள் வாயும் உள்ளமும் ஊமையாகிவிடும்.

பர: சத்துருக்கனா, நீ என்றுமே பிறர் மனம் நோவாமல் நடந்துகொள்பவன். உன் அடக்கமும் விநயமும் யாரைத்தான் வெல்லாது? உன்னுள்ளேயுள்ள புலன் பகைவர்களையெல்லாம் வென்றவனாயிற்றே! பெயருக்குத் தகுந்தமாதிரி காமக் குரோத லோப மோக மத மாத்ஸர்யங்களைக் கிட்ட நெருங்கவிடாமல்தானே நீ சதா தவம் இருக்கின்றாய்? ஆயிரத்தில் ஒன்று உன் சொல். ராமனைக் கைகேயி காணட்டும் என்றாயே; அதற்கு இப்போதுதான் விளக்கம் கண்டேன். ஆம். புனித கங்கையில் நீராடுவதற்கொப்ப ராமனின் கருணைப் பிரவாகத்தில் சிறிது மிதந்தாலும் யாருக்கும் நற்கதி கிட்டும். உண்மை. ராமன் தரிசனம் கிடைப்பதும் கைகேயியின் மாசுகளைப் போக்க வழி செய்யும். தேவி என்ற மதிப்புக்குரிய பதம் அவளுக்கு இனியும் பெறுவதற்கு வாய்ப்பும் அளிப்பதாகும்.

சத்: யாரையும் முழுவதும் கெட்டவர்கள் என்று நினைப்பதற்கில்லை. கெட்டவர்களின் சேர்க்கைகூட நல்ல எண்ணங்களை விரட்டிவிடும். கூனியின் துர்ப்போதனையைக் கேட்டு அல்லவா தடம் புரண்டுவிட்டாள் தேவி? அதற்கு முன்பு எப்படித் தூய்மை உள்ளம் பெற்றிருந்தாள்! சுயமாக இருந்த ஒழுக்கமும், அன்பும் அவளிடம் மீண்டும் ஏற்படவே நம்முடன் அழைத்துச் சென்று ராமனிடம் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் உலகமும் அவள் செய்த குற்றத்தை மறக்கும்; தேவி கைகேயியும் மறு ஜன்மம் எடுத்தவளாவாள்.

பர: அப்பா, சத்துருகனா? நீ நித்திய சத்துருக்னன்தான். உன்னை இதுகாறும் சரியாக மதிப்பிடாததற்காக நான்தான் வருந்தவேண்டும்.

சத்: வேண்டாம். ஒருவரையொருவர் அளந்து பார்க்கும் நேரம் இல்லை இது. இதோ உடனே சென்று சைன்யங்களையும், முதியோர்களையும், மற்ற மந்திரிகளையும் ஒன்றுசேர ஆணையைப் பிறப்பிக்கிறேன். போகலாம், வாருங்கள்! ✻

அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

★

வருக இராமேசுவரம்

இராமாயண காவியத்துடன் தொடர்பு கொண்ட இராமேசுவரம், இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாகவும், உலகப் பிரசித்தி பற்ற மிக நீண்ட தாழ்வாரத்தையுடையதும், கலையம்சமும், வரலாற்றுச் சிறப்பும் உடையது. தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்று சிறப்பு அம்சங்களைக் கொண்ட இத்திருத்தலம் 12 ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றானதாகும்.

இத்திருக்கோயிலில் நடைபெற்று வரும் கோடி அர்ச்சனைக்கு ரூ. 20 செலுத்தி வெள்ளிக் காசுடன் பிரசாதம் பெறவும். ரூ. 200 முதலீடு செய்வதன் மூலம் சுவாமிக்குக் கங்காபிஷேகம் செய்து பிரசாதம் பெறவும் மற்றும் ருத்ராபிஷேகம், கங்காபிஷேகம், சஹஸ்ரகலச அபிஷேகம் ஆகியவை குறிப்பிட்ட நாளில் நடத்திப் பிரசாதம் தபாலில் பெற முதலீடு செய்யும் வட்டியிலிருந்து நடத்தி அனுப்பி வைக்கப்படும்.

யாத்ரீகர்களின் வசதிக்காகக் குறைந்த கட்டண விகிதங்களில் அறை மற்றும் குடில்கள் உள்ளன. முன்னதாகப் பணம் அனுப்பி முன் பதிவு செய்து கொள்ளலாம்.

யாத்ரீகர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்தும் காணிக்கைகளை நேரிடையாகத் தாங்களே உண்டியலில் செலுத்தவோ அல்லது அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெறவோ கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இத்திருக்கோயிலின் தக்கார் திருமிகு பொ. அன்பழகன், எம்.பி. அவர்களது பெரு முயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் நான்கு வேதங்களைக் குறிக்கும் நான்கு குதிரைகளுடன் கூடிய தங்க ரதம் ஒன்று சுமார் 30 லட்சம் செலவில் தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நன்கொடைகளைப் பொருளாகவோ, பணமாகவோ திருக்கோயில் நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திரு ஆ. ந. பார்த்தசாரதி, பி.எஸ்சி.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

திருமிகு பொ. அன்பழகன், எம்.பி.,
தக்கார்

சுஜாதா

குதிரை

சிலருக்கு லாட்டரியில் பரிசு விழுகிறது. சிலரைப் பஸ் ஸ்டாண்டில் பிரபல டைரக்டர் பார்த்து அடுத்த அமாவாசை ஷூட்டிங்குக்கு வா என்கிறார். இப்படித் திடீரென்று தனிமனிதர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏதோ ஒரு வகையில் பிரசித்தி பெறுகிறார்கள். அம்மாதிரி நானும் பிரசித்தமானேன், என்னை ஒரு குதிரை கடித்ததால்!

'குதிரையா?' என்று வியப்புடன் கேட்கிறீர்கள் அல்லவா?

உங்களுக்குச் சொல்கிறேன். முதலில் என்னைப்பற்றி, அப்புறம் குதிரையைப் பற்றி.

என் பேர் கிருஷ்ணசாமி. அதைக் கிச்சாமி என்று சுருக்கி உங்கள் மனத்தில் ஒரு பிம்பம் ஏற்படுத்திப் பாருங்கள். அதேதான் நான்! தொழில், தோற்றம் எதிலும் எந்த வகையிலும் எனக்குப் பிரத்தியேகம் கிடையாது. தினப்படி காபி குடித்து, பேப்பர் படித்து, துணி மடித்து, பஸ் பிடித்து அங்குலம் அங்குலமாக மாயும் மனித எறும்பு.

மனைவி, குழந்தை, மாமனார், வாடகை வீடு, பாத்ரூமில் பாட்டு, மண் தொட்டியில் ஒன்றிரண்டு மலர்ச் செடிகள், தவணை முறையில் ரேடியோ என்று பிரகாச மற்ற பிரஜைதான் நான். குதிரை கடிக்கும் வரை!

குதிரையும் அவ்வளவு பிரசித்தமில்லாத ஜட்கா வண்டிக் குதிரைதான். எங்கள் வீட்டிலிருந்து அகமத் ஸ்டோர்சுக்கு போகும் வழியில் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதன் வாசலில் வழக்கம் போல இளநீர், காலி பாட்டில்கள் எல்லாம் விற்கும் இடத்துக்கு எதிரே ஒரு குதிரை லாயம் இருக்கிறது. பொதுவாக எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் எதிரில் இந்த லாயம் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இந்த லாயங்களில் மற்றொன்றையும் கவனித்திருக்கலாம். திருச்சி, தென்னூர் போனாலும் பிட்ரகுண்டா போனாலும் ஒரே அமைப்பு. உயரமான கருங்கல் கம்பங்கள்மேல் ஜாக்கிரதையாக ஓடு வேய்ந்து இருக்கும். நடுவே 1938-இல் ஏதோ ஓர் உள்ளூர் நாயுடு உபயத்தில் கட்டப்பட்டது என்று அறிவித்து, ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கும். நகரச் சந்தடியில் ஒரு சோம்பேறித் தீவாக, கொஞ்சம் சேணம், கொஞ்சம் லத்தி, ஈரப்புல் கலந்து நாற்றமடிக்கும். வண்டிக்காரர்கள் சுகமாக எங்கேயோ கவனித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். ஒன்றிரண்டு குட்டிக் குதிரைகள் தென்படும். அவை அழகாக இருக்கும். திடீரென்று குதிரைக் குட்டி உற்சாகம் பெற்று வெறி பிடித்தாற்போலப் போக்குவரத்தின் ஊடே ஓடும். இந்த மாதிரிதான் நான் சொல்லும் இடமும். அதைக் கடந்து சென்று கொண்டிருந்த போது லேசாக மழை பெய்ததால் சற்று ஒதுங்கிக் குதிரைகளின் கிட்டே நடந்து போனேன். சில குதிரைகள் என்னைச் சட்டை செய்யாமல் அவ்வப்போது உடம்பில் எதிர்பாராத இடங்களைச் சிலிர்த்துக் கொண்டு, தெய்வமே என்று வண்டிக்காரன் கொடுத்ததை மென்று கொண்டிருந்தன. எல்லாமே கிழட்டுக் குதிரைகள். முதுகெலும்பு தெரிய, தோள் பட்டையில் தழும்போடு கால்கள் ஜபேட் அடித்து, குதிரையா கழுதை என்று தீர்மானமாகச் சொல்ல முடியாத அளவுக்கு இருந்தன. அவற்றில் ஒன்று என் முழங்கையைக் கடித்துவிட்டது.

நான் நடந்துகொண்டே இருக்கும்போது முழங்கைப் பகுதியில் சுரீர் என்கிறதே என்று பார்த்தால் குதிரை கடித்து முடித்துவிட்டு என்னைப் பார்த்தது. தொளதொள என்ற உதடுகளுடன் சிரித்தது. நான் ஸ்ஸ்ஸ் என்று முழங்கையைப் பார்த்துக்கொண்டே குதிரைக்காரனைத் தேடினால் காணவில்லை. ஒரே ஒரு பையன் எங்கோ பார்த்துக்கொண்டு நின்றான்.

மறுபடி கடித்துவிடப் போகிறதே என்று விலகி வந்து காலை வெளிச்சத்தில் காயத்தை ஆராய்ந்தேன்; லேசாகப் பல்லுப் பட்டிருந்தது.

கிழட்டுக் குதிரையாதலால் பல் ஒன்றும் கூராக இல்லையென்றாலும் ரத்தம் தெரிந்தது. குதிரையை முறைத்துப் பார்த்தேன்.

அது ஒன்றும் நிகழவில்லை போல என் மேல் சுவாரசியம் விலகி போய் எதையோ மென்று கொண்டிருந்தது. என்னை யாரும் பார்க்கவில்லை. 'ச்சே' என்று பொதுப்படையாகத் திட்டிவிட்டு, அடிக்கடி காயத்தைப் பார்த்துக் கொண்டே டெட்டால் போட்டு அலம்பிக் களிம்பு தடவ வேண்டும் என்று எண்ணியபடி வீட்டுக்கு விரைந்தேன். என் மனைவி வாசலில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். கடைக்குப் போன கணவன் குதிரை கடித்து இத்தனை சீக்கிரம் திரும்பி வருவான் என்று எதிர்பார்க்கவில்லை.

''என்ன வந்துட்டீங்க? அகமத் ஸ்டோர் மூடியிருக்கா?''

''இல்லை; வரவழியிலே..''

என்ன ஆச்சு? என்ன கையில?''

''உள்ளே வாயேன் சொல்றேன்.''

''என்ன ஆச்சு? விழுந்துட்டீங்களா?''

''இல்லை; ஆஸ்பத்திரிக்கு எதிர்லே குதிரை லாயம் இருக்கு பாரு. அது வழியா நடக்கறபோது ஒரு குதிரை கடிச்சுடுத்து.''

''என்னது? குதிரையா?''

''ஆமாம்.''

''கடிச்சுதா?'' மாமனார் உள்ளே வர, ''அப்பா, குதிரை எங்கேயாவது கடிக்குமா?'' என்று அவரிடம் கேள்வி.

''எதை?''

''மனுஷாளைப்பா!''

''சேச்சே.''

''இதோ உங்க மாப்பிள்ளையைக் கடிச்சிருக்கு.''

''அப்படியா? ஆச்சரியமா இருக்கே! என்ன மாப்பிள்ளை, எதாவது அதைப் போய்ச் சீண்டனம் பண்ணேளா?''

''இல்லே ஸார்; அந்தப் பக்கமா நடந்து போயிண்டிருந்தபோது லபக்குன்னு கவ்விடுத்து.''

''குதிரை லாயத்துக்கெல்லாம் எங்கே போறேள்? கல்யாணி, நீ ஏதாவது வண்டி கொண்டு வரச் சொன்னையா?''

''இல்லைப்பா. ஸ்டவ்வுத் திரி வாங்கிண்டு வர அகமத் ஸ்டோருக்கு அனுப்பிச்சேன். எதுக்கு நீங்க குதிரைகிட்டெல்லாம் போறேள்? ஐயோ! நன்னாப் பல்லுப் பட்டிருக்கே! ஏதாவது விஷப்பல்லா இருந்துடப் போறது! அப்பா இதைப் பாருங்க.''

மாமனார் கிட்ட வந்து பார்த்து, ''கன்னித்தான் போயிருக்கு. மாப்பிளை, நீங்க எதுக்கும் ராயர்கிட்டக் கொண்டு காட்டிடுங்கோ. கல்யாணி அழைச்சுண்டு போயிடு. ஜட்கா வண்டிக்குதிரையா?''

''ஆமாம்.''

சற்று யோசித்து, ''ஜட்கா வண்டிக் குதிரை கடிக்காதே!'' என்றார். ஜ. வ. குதிரைகளில் டாக்டர் பட்டம் வாங்கினவர் போல்.

''இந்தக் குதிரை கடிச்சது ஸார்! என்ன பண்ண?'' என்றேன்.

''இவருக்கு மட்டும் எல்லாம் ஆகும்பா. கணுக்கால் அளவு தண்ணீர் போதும் இவருக்கு. முழுகிப் போயிடுவார். இப்படித்தான் திருச்சினாப்பள்ளியில உய்யக்கொண்டான் வாய்க்கால்லே..''

''சரிதான் நீ ஆரம்பிக்காதே'' என்று அதட்டினேன்.

''எதுக்கும் டாக்டர் ராவ்கிட்டக் கொண்டு காட்டிடறது நல்லது'' என்றாள். எனக்கும் காயத்தைப் பார்த்ததில் அப்படித்தான் பட்டது. ஆனால் இதை டாக்டரிடம் எப்படிச் சொல்லப்போகிறேன் என்று கவலையாக இருந்தது.

நரஹரி ராவ் எங்கள் குடும்பத்து டாக்டர். அறுபது வயசானாலும் நல்ல ப்ராக்டிஸ். நாங்கள் போனது காலை வேளையாக இருந்தாலும் நல்ல கூட்டம். குழந்தைகளும் தாய்மார்களும் கிளார்க்குகளும் மப்ளர்க்காரர்களுமாக அடைத்துக்கொண்டு காத்திருந்தார்கள். சின்ன இடம்; அதிலே பாதி தடுத்து, நரஹரிராவ் உள்ளே உட்கார்ந்து கொண்டு யாரையோ 'ஆ' சொல்லிக் கொண்டிருப்பது பனிக்கண்ணாடியில் குழப்பமாகத் தெரிந்தது. எங்களுக்கு உட்கார இடம் இல்லை. அடுத்த முறைப்பையன் வெளியே வந்த போது கல்யாணி, ''இந்தாப்பா; டாக்டர் கிட்டச் சொல்லு அவசரமாய்ப் பாக்கணும்'' என்றாள்.

''எல்லாருக்குந் தாம்மா அவசரம்.''

''இல்லேப்பா, இவரைக் குதிரை கடிச்சுடுத்துப்பா! ரத்தமாக் கொட்றது பாரு'' என்றாள்.

ஆனால் இதைக் கேட்டதும் பையன் உடனே உள்ளே போய் டாக்டரிடம் சொல்ல, அவர்

எட்டிப் பார்த்து, ''ஒரு நிமிஷம் கிச்சாமி!'' என்ருர்.

''கல்யாணி, என்ன சொன்னே? சரியாக் காதுல விழலை; குதிரையா?''

''ஆமாம் மாமி. போயும் போயும் குதிரைகிட்டே கடிபட்டுண்டு வந்திருக்கார். என்னத்தைச் சொல்லுமாள?''

''குதிரை வளக்கறீங்களாம்மா?''

''அதுங்கிட்ட எதுக்குப் போனுர்?'' எல்லாரும் என்னையே பார்த்தார்கள்.

''உள்ளே வாங்க கிச்சாமி'' என்ருர் டாக்டர். ''என்னது, குதிரை கிட்டல்லாம் போய் விளையாடிண்டு. இந்த வயசிலே?''

''டாக்டர், அது வந்து, ஆஸ்பத்திரிக்கு எதித்தாப்பலே நடந்து போயிண்டிருந்தேனு?'' டாக்டரிடம் என் கதையைத் தணிந்த குரலில் சொன்னேன். ''டாக்டர், அதுக்கு எதாவது விஷப்பல்லு இருக்குமா?'' என்ருள் கல்யாணி இடையே.

''தெரியலேம்மா. இருக்காது தான். ஆனு, கல்யாணி, நானும் இதே மில்கார்னர்ல முப்பது வருஷமா ப்ராக்டிஸ் பண்ணிண்டிருக்கேன். குதிரை கடிச்ச கேஸை இப்பத்தான் முதல்லே பார்க்கறேன்'' என்ருர்.

''என்ன பண்றது டாக்டர்? ஆக்ஸிடண்ட்டுக்குன்னே பொறந்தவர் இவர். ஸ்கூட்டர் ஓட்டக் கத்துக்கறேன்னு ஸ்கூட்டரை ஸ்டாண்டிலிருந்து எடுக்கறதுக்கு முன்னுடியே ஆக்ஸிடெண்ட் பண்ணிட்டார். தொப்புனு போட்டுண்டு கீழே விழுந்தார். கால்லே பாருங்கோ தழும்பு!''

டாக்டர் காயத்தைக் கவனித்தார்.

''வலிக்கிறதா! இருங்க, கார்ட்டரெஸ் பண்ணிடறேன்'' என்று குட்டியாக இருந்த ஸ்பிரிட் அடுப்பைப் பற்ற வைத்துவிட்டு அலமாரியிலிருந்து தடிமனுன ஒரு புத்தகத்தைப் பிரித்து, அதன் பின் அட்டவணையில் குதிரை, குதிரைக்கடி என்று தேடினுர்.

''ம்ஹூம்! டெக்ஸ்ட் புக்லேயே இல்லே! எதுக்கும் கவலைப்படாதீங்கோ. சீட்டு எழுதிக் கொடுக்கறேன். நேரா ஆஸ்பத்திரிக்குப் போயி இஞ்சக்ஷன் ஒரு கோர்ஸை ஆரம்பிச்சுருங்கோ, இப்பவே'' என்ருர்.

''அந்த இஞ்செக்ஷனை இங்கயே போட்டுண்டுடலாமே, டாக்டர்.''

''எங்க கிட்ட வீரம் கிடையாது. அதுவுமில்லாம டாக்டர் கோபி எல்லாம் தேர்ந்தவர். அவர் பார்த்துத் தேவைப்பட்டுதுன்னுத்தான் ஊசி போட்டுக்கணும். இப்பக் காட்டரைஸ் பண்ணி அனுப்பிச்சுட்றேன்'' என்று சொல்லிவிட்டுக்கொஞ்சநேரம் சிரித்துவிட்டு, 'குதிரை' என்று தமக்குள் சொல்லிக்கொண்டு, ''டாக்டர் கோபிக்கு லெட்டர் குடுக்கறேன். உடனே போம்'' என்ருர்.

ஆஸ்பத்திரியை நோக்கி நடக்கும் போது ஒரு மாடு கிழிசல் பனியனை மென்று கொண்டிருந்தது. ''பாத்து வாங்கோ. இது வேற கடிச்சு வெக்கப் போறது'' என்ருள் கல்யாணி.

''என்ன கல்யாணி சொல்றே? வேணும்னுட்டாக் கடிச்சுப்பா?''

''வேணுமோ வேணுமோ, நம் மாத்திலே மட்டுந்தான் இந்த மாதிரியெல்லாம் நடக்கிறது. டாக்டர் சொன்னுர் பாருங்கோ.''

''எல்லாம் எனக்கும் கேட்டுது. இத பாரு; குதிரை கடிக்காததுதான். என்னைக் கடிச்சுடுத்து. என்ன பண்ணச் சொல்றே? ஏன் கடிச்சேன்னு வேணு விசாரிச்சுண்டு வரட்டுமா?''

''வேண்டாம். மறுபடி கடிச்சு வெக்கப் போறது. கடிக்கறதுன்னு

அந்தப் பக்கம் ஏன் போகணுங்கறேன்?''

''குதிரை கடிக்கும்னு யாருக்குடி தெரியும் மூதேவி?''

நடுரோட்டில் எங்களை வேடிக்கை பார்க்கக் கூட்டம் கூடிவிடவே நாங்கள் கலைந்து நடந்தோம். ஆஸ்பத்திரியில் டாக்டர் கோபிநாத்தைத் தேடிக்கொண்டு சென்றேன். நீண்ட பெஞ்சு போட்டுப் பல பேர் உட்கார்ந்திருந்தார்கள். கல்யாணி இங்கே வந்து, 'குதிரை கடித்து விட்டது' என்று இரைந்து கூறிச் சலுகை கேட்கப் போகிறாளே என்று பயமாக இருந்தது. ஆனால் கல்யாணி பேசாமல்தான் உட்கார்ந்தாள். அங்கே உட்கார்ந்திருந்தவர்களை விசாரித்ததில் பெரும்பாலோர் நாய்க்கடிக்காரர்கள் என்று தெரிந்தது. அங்கங்கே ஒன்றிரண்டு எலி, தேள் இருந்தன. எல்லாருடைய சீட்டுகளிலும் நாய் நாய் என்றுதான் எழுதியிருந்தது. அங்கே இருந்த சிப்பந்தி அவற்றை அடுக்கி வைக்கப் போகும் போது என் சீட்டு வந்தபோது ம்ட்டும் தயங்கினர்.

''குதிரை? இங்கே யாருப்பா கிருஷ்ணசாமி?''

''கிருஷ்ணசாமி நான்தான்'' என்றேன்.

''உங்க டிக்கெட்டில் தப்பாப் போட்டிருக்கு, குதிரைன்னு. கொஞ்சம் திருத்திக்குடுக்கறீங்களா?''

''இல்லை ஸார்; என்னைக் குதிரைதான் கடிச்சிருக்கு.''

இப்போது அத்தனை பேரும் திக்கித்துப் போய் என்னைப் பார்க்க, சிப்பந்தி உடனே உள்ளே போய்க் கோபிநாத்திடம் சொல்ல, ''கூப்பிடு அவரை முதல்லே'' என்றார்.

''வாங்க, உக்காருங்க. ராயர் போன் பண்ணிச் சொன்னர். நீங்கதானு அது? குதிரை எங்கே கடிச்சுது உங்களை?'' என்று விசாரித்தார்.

''ஆஸ்பத்திரிக்கு எதிர்த்தாப்பலே ஸ்டாண்டு இல்லை? அங்கே..''

''அதைக் கேக்கலே. உடம்பில எந்தப் பாகத்திலே?''

நான் என் கைச் சட்டையை வழித்துக் காட்டினேன். ''காட்டரைஸ் பண்ணினரா?'' என்று அலமாரியிலிருந்து தடியான புத்தகம் ஒன்றை எடுத்தார்.

''அந்தப் புஸ்தகத்தில் 'குதிரைக் கடி' கிடையாது, டாக்டர்'' என்றுள் கல்யாணி.

''எப்படிச் சொல்றீங்க?''

''டாக்டர் ராவ் பாத்துட்டார்.''

''மிஸ்டர் கிருஷ்ணசாமி, ஒண்ணு பண்ணலாம். நான் குதிரை கடிச்ச கேஸை இதுவரை ட்ரீட் பண்ணதே இல்லை. எதுக்கு ரிஸ்க் எடுத்துக்கணும்? ஒரு ஷார்ட் கோர்ஸ் ஆரம்பிக்கறேன் சப்க்யூட்டேனியஸ்லா..''

''டாக்டர், உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லையே?''

''சேசே! பயப்படாதீங்கம்மா. மிஸ்டர் கிருஷ்ணசாமி எதுக்கும் ரெண்டு மூணு நாளைக்கு அந்தக் குதிரையை வாட்ச் பண்ணிக்கிட்டு இருங்க. செத்துக்கித்து வெக்குதான்னு? எந்தக் குதிரை கடிச்சுது, ஞாபகம் இருக்குமோல்லியோ?''

''ம்'' என்றேன் சந்தேகமாக.

''மூணு நாளைக்கு எதுக்குப் பாக்கணும்?'' என்றுள் கல்யாணி.

''அதுக்கு வெறி கிறி ஏதாவது பிடிச்சிருந்தாச் செத்துப் போயிடும். அது உயிரோட இருந்தாக் கவலையில்லை. எதுக்கும் பயப்படாதீங்க. ரிஸ்க் எடுத்துக்காம, கோர்ஸை ஆரம்பிச்சுட்டேன். தினம் காலை இந்த வேளைக்கே வந்துடுங்க என்ன?''

''பகவானே, என்ன சோதனை பாத்தீங்களா?'' என்று புலம்பிக்கொண்டே வெளியே வந்தாள் கல்யாணி. வந்ததும் அங்கே உட்கார்ந்திருந்தவர்களிடம் சட்டென்று பேச்சு நின்று போய் ஒரு சிலர் உள்ளங்கையால் வாயை மறைத்துக்கொண்டு பக்கத்தில் இருப்பவரிடம் என்னைக் காட்டிப் பேசுவதைக் கவனித்தேன். முதுகில் கூட அவர்கள் பார்வை பட்டது. திடீரென்று திரும்பி, 'குதிரை கடிச்சா என்னய்யா?' என்று சத்தமாகக் கேட்க நினைத்தேன்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போகும்போதே குதிரையை ஒரு நடை விசாரித்துவிட வேண்டும் என்று கல்யாணி சொன்னள். எனக்கு அது தேவையாகப் படவில்லை. இருந்தும் மறுபடி அங்கே போனேம்.

''குதிரையை ஞாபகம் இருக்கோல்லியோ?'' என்றுள்.

''இருக்குன்னு நெனைக்கிறேன். நெத்தில டைமன் ஷேப்புக்கு வெள்ளையா ஒரு திட்டு இருந்ததா ஞாபகம்.''

லாயத்துக்குப் போனபோது ஏறக்குறையக் காலியாக இருந்தது. சிறுவன் நீட்டும் காலை ஆட்டிக்கொண்டு பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். ''ஏம்பா, எல்லாக் குதிரையும் எங்கே?''

''எல்லாம் சவாரி போயிருக்குதுங்க. கொஞ்சம் இருங்க, வந்துடும். பாடி கொடுத்துட்டாங்களா?''

''பாடியா?''

''இவன் என்ன சொல்றன்?'' என்றுள் கல்யாணி.

''ஏம்பா, இந்த இடத்தில எத்தனை குதிரை இருக்கு?''

''ஏங்க, ஏதாவது எலக்சனு? குதிரைச் சின்னத்தில் நிக்கறிங்களா? ஊர்கோலம் போகணுமா? எத்தனை குதிரை வேணும்?''

''ஒரே ஒரு குதிரைதாம்பா. நெத்தில டைமண்ட் மாதிரி இருக்கும்.''

''கரீம்பாய் குதிரையைச் சொல்றிங்க. இதோ இப்ப வந்துடுங்க: கப்ர்ஸ்தான் போயிருக்குது!''

''அது உயிரோட இருக்கில்லே?''

''இல்லாம, பின்னே?''

''நல்லது'' என்று புறப்பட்டு வந்துவிட்டோம்.

''தினம் ஆஸ்பத்திரிக்கு வருகிற வழியில ஒரு விசை குதிரையை விசாரிச்சுண்டு வந்துடுங்கோ'' என்றுள் கல்யாணி.

மறு தினம் ஆஸ்பத்திரிக்குப் போகிற வழியில் என்னைக் கடித்த குதிரையை மறுபடி சந்தித்தேன். அந்தப் பையன்தான், ''கரீம்பாய்! கல் பூச்சானு ஒ ஆத்மி ஆயா'' என்றுன்.

கரீம்பாய்க்குக் காலையிலேயே கண்கள் கலங்கியிருந்தன. என்னைப் பார்த்து, ''என்ன சாமி, நம்ம சுல்தானைப்பத்தி விசாரிச்சீங்களாமே?'' என்றுன். நான் கிட்டப் போய்ப் பார்த்ததில் என்னைக் கடித்த குதிரை அதுதான் என்று தெரிந்து போய்விட்டது. ''பாய்! இந்தக் குதிரை நல்லாத்தானே இருக்கு? உயிரோடதானே இருக்கு?'' ஜேணம் எல்லாம் கழற்றிப் போட்டு என்ணெய் தேய்த்துக் கொள்வதற்கு முன்பிருக்கும் நங்கைபோல இருந்தது.

''ஏன் சாமி?''

''நேத்திக்கு இது என்னைக் கடிச்சிடுச்சிப்பா. குதிரை உயிரோடதான் இருக்கான்னு தினம் பார்க்கச் சொல்லியிருக்கார் டாக்டர்?''

''கடிச்சுதா? அதெல்லாம் செய்யமாட்டானே நம்ம சுல்தான்! க்யூன் சுல்தான்! ஸாப்கோ காட்டா?''

குதிரை 'பி ஹிர்ர்' என்றது. ''என்னு குதிரைங்க இது?'' என்று அதன் கழுத்தருகில் சொறிந்து கொண்டே சொன்னுன். ''ரேக்ளா ரேஸ்ல எல்லாம் பிரைஸ் வாங்கிருக்கு, க்யூன் சுல்தான்!''

'பி ஹிர்ர்.'

''ஏதோ சௌக்கியமா இருந்தாச் சரி. இதோ பார், முழங்கையைக் கடிச்சுடுச்சு. தினப்படி ஊசி போட்டுக்க வேண்டியிருக்கு. குதிரையைக் கட்டுப்படுத்தி வெச்சுக்கக்கூடாதாப்பா?''

''ஊசி போட்டுக்கறியா?'' என்று சுல்தான்போலவே சிரித்தான்.

''எதுக்கு? குதிரை கடிச்சதுக்கா? இத பாரு!'' என்று தன் கையைக் காண்பித்தான். ''எத்தனை முறை புல் கொடுக்கறப்ப, கொள் கொடுக்கறப்ப, சுல்தான் என்னைக் கடிச்சிருக்கான் தெரியுமா? ஊசியா போட்டுக்கிட்டேன்? க்யூன் சுல்தான்!''

எதற்கும் நான் ரிஸ்க் எடுத்துக் கொள்ளவில்லை. ஆஸ்பத்திரிக்குப் போகும்போதெல்லாம் சிப்பந்திகள், 'குதிரைக்காரர் வந்துட்டாரு' என்று பேசிக்கொண்டாலும் எதிர் வார்டிலிருந்து நண்பர்களை எல்லாம் கூட்டி வந்து என்னைக் காட்டினுலும், வீட்டில் கல்யாணியின் பல உறவினர்கள் பேருக்குப் பேர், ''குதிரை கடிச்சுடுத்தாமே?'' என்று விசாரித்தாலும் மதிக்காமல் பிடிவாதமாகச் சிகிச்சைக்குச் சென்றேன். சில நாட்களில் காயம் ஆறிவிட்டது. ஆனுல் அந்தச் சம்பவத்துக்குப் பின் என் பெயர் மாறிவிட்டது, 'குதிரைக் கிச்சாமி' என்று.

ஊருக்கு ஊர் கிச்சாமி இருக்கிருர்கள். ஆனுல் நாட்டில் ஒரே ஒரு குதிரைக் கிச்சாமி நான்தான் என்பதில் ஓர் அற்பச் சந்தோஷம்! ✳

PHILIPS

பிலிப்ஸ்

இந்த 60W லாம்ப், 100W பல்பு தரும் ஒளியைத் தருகிறது.

மின் கட்டணத்தில் 24 ரூபாய் மிச்சம்.

பிலிப்ஸ் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்.

ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்-தேவையான இடத்திலே அதிக ஒளியைக் குவித்துப் பாய்ச்சும் வகையிலே பனிப்படலம்போல் பூச்சுள்ள சாளரம் கொண்டது. இப்படி குவித்த ஒளிக்கதிர் காரணமாக, 60W ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ், சாதாரண 100W பல்பு தரும் ஒளியினைத் தருகிறது.

நீடித்திருக்கும் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ், உமது மின் கட்டணத்திலே, ஆண்டுக்கு 24 ரூபாய் சேமிக்கிறது. படிக்க, ஓவியம் தீட்ட, வரைய, நிட்டிங் செய்ய மிகச் சிறந்தது இந்த லாம்ப்.

40W மற்றும் 60W வகைகளில் கிடைக்கும்.

பிலிப்ஸ் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்—
100W பல்பின் ஒளிதரும் 60W லாம்ப்.

HTB-PEI-9727

பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

வஸந்த பவன்

"ஏர்கண்டிஷன்
டீலக்ஸ் ரெஸ்டாரெண்ட்"
24, N. S. B. ரோடு,
திருச்சி - 620002.

"வேகா ரெஸ்டாரெண்ட்"
ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்றது.
20, காந்தி இர்வின் ரோடு,
சென்னை - 600 008.

உயர்தரச் சைவ உணவிற்கும், சிற்றுண்டிகளுக்கும், சிறந்த ஸ்வீட்,
காரங்களுக்கும் புகழ்பெற்ற 'திருநெல்வேலி அல்வா'விற்கும் சிறந்த இடம்.

For your travel problems please contact

JANTHA TRAVELS

TIRUCHY - 620 002

National Permit Holders for Deluxe A/C Bus & Car Services

Phones: 27955 & 26112 **Madras Phone: 844083**

—நாகசுந்தரம்

அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

தந்தி: "அம்ருதம்" போன்: 26006, 22623, 30674

ஆரிய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்

366, திருச்சி ரோடு, தலைமை அலுவலகம் கோயமுத்தூர் 641018

மறைந்த மாமேதை ஆரிய வைத்தியன் P. V. ராம வாரியார் அவர்களால்
நிறுவப்பட்டது

36 ஆண்டுகளாக மிகச் சிறந்த பயனளிக்கக் கூடிய ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்தும் சிகிச்சை அளித்தும் வருகின்ற பெயர் பெற்ற ஸ்தாபனம்

சென்னைக் கிளை:
66, கௌடியா மடத் தெரு, ராயப்பேட்டை, சென்னை-600014
போன்: 848752

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

இந்தியாவின் முக்கிய நகரங்களில் 22 கிளைகளும் மேலும் 300க்கும் மேற்பட்ட அதிகாரம் பெற்ற விற்பனையாளர்களும் கொண்ட மிகப் பெரிய ஆயுர்வேத நிறுவனம்.

பிரதம வைத்தியர்:
ஆரிய வைத்தியன் K. S. வாரியர்

மானேஜிங் டைரெக்டர்:
P. V. சந்திரசேகர வாரியர்

மேலும் முழு விபரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

AVP/OSR

தேவநாராயணன் என்னுடைய நீண்டகால நண்பர். எனக்கும் அவருக்கும் வயது வித்தியாசம் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகவே இருந்தாலும் என்னிடம் தோழமை உணர்வோடு பழகுவார். தமக்குச் சமதையாக வைத்து என்னிடம் பல விஷயங்களையும் பேசுவார்.

நாங்கள் இருவரும் நண்பர்களானதே ஒரு சுவையான நிகழ்ச்சிதான். எனக்கு அப்போது வயது இருபத்தைந்து இருக்கலாம். அரசியல், சமுதாய, தத்துவ ஆசிரியர்கள் பலரின் நூல்களையும் படித்துவிட்டு, மண்டை குழம்பிப் போய் மனத்தில் அமைதி இழந்து, இரைச்சலிடும் எண்ணங்களோடு போராடிக் கொண்டிருந்த காலம். நீட்ஷேவும் கார்ல்மார்க்ஸும் எதிரிடையான சித்தாந்தங்களை எழுதியிருப்பதால் இந்த இருவரின் பாதிப்பும் என்னுள் இருந்துகொண்டு என்னை அலைக்கழித்துக்கொண்டிருந்தன.

''தனி மனிதன் ஒவ்வொருவனும் அவனுடைய புத்தியின் கூர்மைக்கேற்ப மாறுபடுகிறான். எனவே எல்லா மனிதரும் சமம் என்பது பேதைமை.'' இது நீஷ்டே. ''பொதுவுடைமைச் சமுதாயத்தில் மனிதர்களுள் ஏற்றத்தாழ்வென்பதே இருக்க முடியாது.'' இது மார்க்ஸ். வாலிப மனத்தைக் குழப்ப இதைவிட வேறு என்ன வேண்டும்?

மயிலாப்பூரில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி கூடத்தில், 'உபநிஷதங்களின் பெருமையும் சிறப்பும்' என்ற தலைப்பில் ஒருவர் உரையாற்றினார். நான் அதைக் கேட்கப் போயிருந்தேன். அன்று என் வாழ்க்கையின் பொன்னான நாள் என்றே எனக்குத் தோன்றியது. என் மண்டையின் குழப்பங்கள் தீர்ந்துபோயின. என்னை அலைக்கழித்த வீண் சந்தேகங்கள் மாய்ந்து போயின. அறிவிலே தெளிவும், பார்வையிலே ஒளியும், சிந்தனையில் கூர்மையும் ஏற்பட்டன; மனிதன் தன்னைத் தானே அறிதலில் உள்ள நுட்பமே எல்லாவித வினாக்களுக்கும் விடை பயப்பதாகும் என்பதைப் புரிந்து அறிந்தேன்.

அன்று என் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்தவர் தேவநாராயணன். பரஸ்பரம் புன்னகை, பின்னர் அறிமுகம் என்று எங்கள் தோழமை வளர்ந்தது.

தேவநாராயணனுக்கு அப்போது நாற்பத்தெட்டு வயதிருக்கும். நடுத்தரமான உயரம். பொன்னிறம். எடுப்பான மூக்கு. காதோரத்தில் சிறிது நரை. கிராப்புத் தலை அடர்த்தியாக இருக்கும். இரண்டு பையன்கள். மூத்தவன் பொறியியல் கல்லூரியிலும், இளையவன் மருத்துவக் கல்லூரியிலும் மாணவர்கள். தேவநாராயணன் அரசு அலுவலகமொன்றில் உயர்ந்த பதவியில் இருந்தார். இதெல்லாம் அவர் சொன்னவை.

அவரிடம் எனக்குப் பழக்கம் ஏற்பட்ட சிறிது காலத்தில் அவருடைய வீட்டுக்கு வந்துபோகுமாறு ஒரு நாள் அழைத்தார். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நான் எனக்கே உரிய அடக்கமான பண்பின் பழக்கத்தினால் சிறிது தயங்கினேன். அவர் மீண்டும் மீண்டும் அழைக்கவே ஒரு நாள் சென்றேன்.

அடையாற்றில் வீடு. நான்கு கிரவுண்டு நிலத்தில் மையமாக, அழகாக இருந்தது. மாடி போட்டுக் கட்டியிருந்தார். தயங்கியபடி உள்ளே நுழைந்தேன்.

என்னைவிடச் சில ஆண்டுகள் இளையவனாக இருந்த ஒரு வாலிபன் எதிர்ப்பட்டான்.

''ஸார் இருக்காரா?'' என்றேன்.

அந்த வாலிபன் என்னைப் பாராமலேயே கேட்டான்: ''எந்த ஸாரு! இங்கே மூணு ஸார் இருக்கோம்.''

எனக்கு என்னவோ போலாகி விட்டது. சமாளித்துச் சொன்னேன், ''தேவநாராயணன் ஸார்!''

''ம். நீங்க யாருனு...?''

''என் பேரு முத்துக்கிருஷ்ணன். திருவல்லிக்கேணியிலிருந்து வரேன்.''

''ம். இருங்க.'' அவன் உள்ளே போனான்.

என்னை உள்ளே வரச் சொல்லாமல் அவன் போனதுகூட எனக்கு ஒரு மாதிரியாகப் பட்டது.

சில நிமிடங்களில் தேவநாராயணனே வந்தார்.

''வாங்க மிஸ்டர் முத்து'' என்றார். அவர் என்னை அப்படித்தான் கூப்பிடுவது வழக்கம். உள்ளே போனோம்.

வரவேற்புக்கூடம் பெரிதாகவே இருந்தது. வண்ணச் சலவைக் கல் பாவிய தரை. சுவரில் இரண்டோர் ஓவியங்கள். ஜப்பானிய ஒகாஸா சுவர்க்கடிகாரம். மணி அடிக்கும்போது இரண்டு குருவிகள் வெளியே வந்து இனிமையாகக் குரல் கொடுக்கும்.

ஒரு கண்ணாடி அலமாரி சுவரில் பதிக்கப்பட்டிருந்தது. அது நிறைய விதம்விதமான பொம்மைகள். தூரத்தில் ஈசான்ய மூலையில் வெண்கல மேசை ஒன்றின்மேல் சிறிய காஷ்மீர விரிப்பு. அதன்மேல் வெண்கல நடராஜர் சிலை. கலையுணர்வும் அழகியல் உணர்வும் அங்கே பரிமளித்துக் கொண்டிருந்தன.

என்னை வரவேற்ற வாலிபனை இப்போது மீண்டும் பார்த்தேன். தேவநாராயணன் சொன்னார்; ''இவன்தான் பிரபாகர். பி.ஈ. பாஸ் பண்ணிட்டான். மேற்படிப்புக்காக ஸ்டேட்ஸ் போகப் போகிறான். சொன்னாக் கேக்கமாட்டேங்கிறான். சின்னவன் அம்பாசங்கர். எம். பி. பி. எஸ். பாஸ் பண்ணிட்டான். அவனும் சீமைக்குப் போகப் போறான். எப்.ஆர்.சி.எஸ். படிக்கப் போறான். இதெல்லாம் எதுக்கு?

சொன்னுக் கேக்கறதில்லே. சரின்னு விட்டுட்டேன்.''

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பிரபாகர் வினைக் குறியாக என்னைப் பார்த்தான். பிறகு கேட்டான்:

''மிஸ்டர் முத்துக்கிருஷ்ணன், என்ன பண்றீங்க?''

''நான் ஒரு ரைட்டர்.''

''ரைட்டர்னு, காபிரைட்டரா, போலீஸ் ஸ்டேஷன்ல ரைட்டரா? என்னது புரியல்லியே!'' பிரபாகர் கேட்டான்.

எனக்கு ஜிவ்வென்று உடலில் உஷ்ணம் ஏறியது.

''இலக்கியவாதி; அதாவது கதை கட்டுரை எழுத்தாளர்.''

தேவநாராயணன் என் உதவிக்கு வந்தார். ''பிரபு, இவர் என் நண்பர். ஓர் அறிவு ஜீவி. நல்ல சிந்தனைவாதி. நம்ம தேசத்தினுடை கலாசாரம், தொன்மைக் கலைகள், சாஸ்திரங்கள் இதிலெல்லாம் ரொம்ப ஈடுபாடுள்ளவர்.''

''பழமைவாதின்னு சொல்லுங்கோ'' என்றான் பிரபு.

நான் அவனையே பார்த்தேன். அவனுக்குச் சரியாகப் பதில் சொல்ல வேண்டும் என்று மனம் சொல்லியது.

''இந்தப் பூமி பழமையானது. மனிதன் பழமையானவன். அவனுடைய அடிப்படை உணர்வுகள் எல்லாமே ரொம்பப் பழசுதான்; இல்லையா?'' என்றேன்.

''இருக்கலாம். நமக்குள்ளே பழங் கதைகளைப் பேசியே நம்ம தேசம் பின்தங்கிவிட்டது'' என்றான் அவன்.

''முன்னேத்தம்னு நீங்க எதைப் பத்திச் சொல்றீங்க, பிரபு?''

''அமெரிக்காவைப் பாருங்களேன்; கம்ப்யூடர் யுகம் பொறந்தாச்சு. நாம இன்னும் கட்டை வண்டியிலேதான் பிரயாணம் செய்ய விரும்பறோம்.''

''மனோபாவம் எப்படி இருக்குங்கறதுதானே முக்கியம்? அங்கே எல்லாமே அவசரம். இங்கே நிதானம். வாழ்க்கையில் எப்படி வாழப் போகிறோம்கிறதும், அதுக்கு அடிப்படையா இருக்கிற மனுஷ மனசோட உணர்ச்சிகளை நாம எவ்வளவு தூரத்துக்கு மதிக்கிறோம்கிறதும் தானே முக்கியம்? வேகமா வாழ்ந்து முடிச்சுட்டாப் போதுமா? வேகமான வாழ்க்கையிலே சுயநலமான எண்ணங்களே மிஞ்சி நிற்கிறதா அமெரிக்கச் 'சிந்தனைவாதிகளே' சொல்றாங்களே!'' என்றேன்.

தேவநாராயணன் சிரித்தார். இப்போது தம் மகனுக்குப் பரிந்து பேசினார்: ''முத்து, ஒவ்வொரு மனுஷனும் அடிப்படையிலே சுயநலமிகளாகத்தான் இருக்க முடியும். அதுதான் இயற்கையுங்கூட. கடும் போட்டியும், வேகமும் நிறைந்த இந்தக் காலத்தில் மனுஷன் அப்படியில்லேன்னா அவனால ;க வாழ்வு வாழ முடியாது.''

''ஸார்! 'ஸர்வே ஜனாஸ் சுகினோ பவந்து'ங்கற தத்துவம் தப்பா?''

''இல்லேப்பா. அது தத்துவங்கிற வரைக்கும் அழகாத்தான் இருக்கு. நடைமுறையிலே கொண்டு வரணும்னு முயற்சி செய்யறப்போதான் பிரச்னையே ஏற்படறது.''

''ஒவ்வொருத்தரும் முயற்சி செஞ்சா முடியாதா ஸார்?''

பதிலுக்கு அவர் சிரித்தார். பிறகு சொன்னார்: ''தத்துவங்களெல்லாம், பொழுது போகாத நேரத்துலே, நம்முடைய சொல்லாற்றலைக் காட்ட, விவாதிக்க உதவும் விஷயங்களே தவிர, நிஜமா எடுத்திண்டு பின்பற்ற அல்ல என்பதைப் புரிஞ்சிக்கணும். அது நமக்குச் சாத்தியப்படாத சமாசாரம்'' என்று முடித்தார்.

எனக்கு எரிச்சலாக இருந்தது. அவருடன் தர்க்க ரீதியாகப் பேசி என் கருத்தை வலியுறுத்த வேண்டுமென்று தோன்றியது. மிகவும் சிரமப்பட்டு என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டேன்.

''எல்லாத்தையும் துறக்கிறது லேசான காரியம் இல்லே. லௌகிக வெற்றி இல்லேன்னு வாழ்க்கையில் நமக்கு அந்தஸ்து ஏற்படுமா? சமுதாயத்துலே நாலு பேர் மதிக்க வாழ முடியுமா? சொல்லுங்க, முத்து; அதனுலதான் சொல்றேன், வாழ்க்கை வேறு, நாம படிக்கிற, தர்க்கிச்சு அலசிப் பார்க்கிற, தத்துவார்த்தங்கள் வேறுன்னு.'' தேவநாராயணன் தம் கருத்தை வலியுறுத்தினார்.

எனக்கு அதற்கு மேலும் அங்கிருக்க முடியவில்லை. உபசாரமாகச் சிறிது நேரம் பேசிவிட்டு விடை பெற்றுப் புறப்பட்டேன்.

திரும்பும்போது பல எண்ணங்கள் மனத்தை அலைக்கழித்தன. சொல் வேறு, வினை வேருக எப்படிச் சிலரால் இருக்க முடிகிறது என்று வியந்தேன். என் மனத்தில் அதுகாறும் உயர்ந்த பீடத்திலிருந்த தேவநாராயணன் என்கிற மனிதரைப் பற்றிய கருத்துப் பிரதிமை தடாலென்று சாந்து கீழே விழுந்து சிதறிப் போனது போல் தோன்றிற்று.

லஸ் வரையிலும் ஒரு பஸ்ஸில் வந்து, அங்கிருந்து காலாற நடக்க ஆரம்பித்தேன.

கிருஷ்ணாம்பேட்டைக்கு வந்ததும் நாலைந்து பசுமாடுகளை மடம் போன்றிருந்த ஓர் இடத்துக்குள் ஒருவன் ஓட்டிச் செல்வதைப் பார்த்தேன்.

“இது என்ன இடம்?”

“பிஞ்ஜராபோல்” என்றான் அவன்.

“அப்படீன்னா?”

“பசுக்களைச் சம்ரட்சிக்கிற இடமுங்க.” மேலும் தொடர்ந்து அவன் சொன்னான்: “சில மார்வாடிங்க இதை நடத்தறாங்க. கறவை நின்னுபோன வயசான பசுமாடுகளை அடிமாடா அனுப்பாமே இங்கே ஓட்டிட்டா, அவங்க அதுகளுக்குத் தீனி போட்டுக் காப்பாத்துவாங்க. அதுங்களாச் செத்துப்போற வரைக்கும் காப்பாத்துவாங்க” என்றான்.

‘இந்த நாட்டில் வயது அதிகமான பசுக்களுக்குக்கூட மரியாதை தரும் பண்பு இன்னமும் இருக்கிறதே’ என்று எண்ணி மகிழ்ந்தேன்.

அந்த ஒரு நாள் தேவநாராயணன் வீட்டுக்குப் போய்வந்த பிறகு என் வாழ்க்கையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுப் போயின.

எனக்குத் திருமணம் நடந்தது. வயிற்றுப் பிழைப்புக்கு எழுத்தையே தொழிலாகக் கொள்வது முடியாத காரியம் என்கிற பேருண்மை புலப்பட்டது. வேலை நிமித்தம் வெளியூர் சென்றுவிட்டேன்.

நான் தேவநாராயணனை மறந்தே போனேன்.

எங்கள் கம்பெனியில் எனக்கு விளம்பரப் பிரிவில் வேலை. விதவிதமாக விளம்பரங்கள் செய்வது எப்படி என்று யோசனை சொல்ல வேண்டும். மேலும் தனியார் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றுக்கும் சென்று அவர்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும்.

மீண்டும் நான் சென்னைக்கு அனுப்பப்பட்டேன்.

எங்கள் கம்பெனியின் முக்கியத் தொழிலே விளம்பரமாக இருந்தபடியால் எனக்கும் பல விதமான மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. எதிர்பாராத விதமாக ஜோஸப் ஜான் அலிவர் என்ற கிறிஸ்துவ நண்பரின் பழக்கம் ஏற்பட்டது.

“ஹல்லோ மிஸ்டர் முத்து!”

“வாங்க, அலிவர். என்ன சேதி?”

“நேத்து ஒரு பெரிய காண்டிராக்ட் கிடைச்சது. டெல்லியிலிருந்து இன்னிக்குத்தான் பிளேன்லே வந்தேன். முப்பது லட்ச ரூபாய் காண்டிராக்ட். இதிலே எனக்குக் கமிஷனாச் சில ஆயிரங்கள் கெடைக்கும். ஆனா இந்தக் காண்டிராக்டைப் பிடிக்க என்னவெல்லாமோ செஞ்சேன். நெனைச்சால் சில நேரங்களிலே நம்ம காரியங்கள் நமக்கே அருவருப்பா இருக்கு.”

நான் புன்னகை செய்தேன்.

“ஒருசதவிதம் கமிஷன். முப்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும். அதுக்காக நான் டெல்லியிலே இரண்டு அதிகாரிகளுக்கு மதுவும், மங்கையும் தரவேண்டியிருந்தது. சே! என்ன பிழைப்பு! இது இப்போ சர்வ சாதாரணமா நடக்குது. இதைக் கொஞ்ச காலத்துக்கு முன்னாடி அங்கே ஆரம்பிச்சு வச்சவர் மெட்ராஸ்காரர்தான். பெரிய அதிகாரி. நிறையப் பைசா செஞ்சாரு. பையன்களையெல்லாம் வெளிதேசங்களுக்கு அனுப்பி நல்லா படிக்க வச்சாரு.”

“யார், ஸார்?”

“தேவநாராயணன்னு பேரு.” நான் திகைத்துப் போனேன்.

அலிவர் மேலும் சொன்னார்: “அவர் நம்ம மாதிரி கம்பெனிகளுக்குச் சலுகை காட்ட, அரசாங்க விளம்பரங்களைத் தர, இவ்வளவுன்னு தொகை நிர்ணயம் பண்ணி வாங்கிடுவாரு. வேதாந்தம் பேசுவாரு. ஆனா கடைசியிலே என்ன ஆச்சு? அவருக்கு விரோதிங்க ஏற்பட்டாங்க. சமயம் பார்த்துக் காண்பிச்சுக் கொடுத்துட்டாங்க. ரிடையராகறதுக்கு ஒரு வருஷம் இருக்கும்போது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவரை வீட்டுக்கு அனுப்பிச்சிட்டாங்க. அவருக்குப் பின்னாலே வந்திருக்கிறவங்களுக்கு அவர் நூறு மடங்கு தேவலாம். பாவம்! மனுஷர் ‘இப்போ எங்கே இருக்காரோ தெரியல்லே” என்றார் ஜான் அலிவர்.

எனக்கு மனத்தின் ஒரு மூலையில் வலி ஏற்பட்டதுபோல் இருந்தது. எனக்குத் தேவநாராயணனைத் தெரியும் என்று சொல்லிக்கொள்ளவே கூச்சமாக இருந்தது.

“முத்து! நாளைக்கு நாம ரெண்டு பேரும் ஒரிடத்துக்குப் போகிறோம். நீங்களும் வாங்க.”

“சரி!”

“நானே உங்க இடத்துக்கு என் வண்டியிலே வந்து அழைச்சிட்டுப் போறேன்.”

அந்த இடம் வனப்பு மிகுந்த ஒரு சோலையாக இருந்தது. காம்பவுண்டுச் சுவரில் ‘சாந்தி வனம்’ என்ற பெயர் பொறித்திருந்தது. உள்ளே பெரிய மாந்தோப்பு.

“இடம் எப்படி இருக்கு?” அலிவர் கேட்டார்.

“தூய்மையா, அமைதியா, மனசுக்கு நிறைவு தரும்படியா இருக்கு ஸார். பரபரப்பும், வேகமும் மிகுந்த நகரத்தோட அவசர வாழ்க்கையிலேருந்து விலகி மனசுக்குச் சந்துஷ்டி தர்ற இடத்துக்கு வந்திருக்கோம்னு தோணுது.”

“சரியாச் சொன்னீங்க முத்து. என்னோட தூரத்து உறவுக்காரர் ஒருத்தர் இங்கே இருக்கார். அவருக்கு இப்போ வயசு எழுபது. அவர் ரிடையரானதும் தன் பிராவிடென்ட் ஃபண்ட் பணத்தை இவங்ககிட்டே குடுத்திட்டு, கடந்த பன்னிரண்டு வருஷமா இங்கேயே இருக்காரு. நான், முடிஞ்சபோதெல்லாம், இங்கே வர்றது வழக்கம், புள்ளைங்க இல்லாதவங்க, புள்ளைங்களால ஒதுக்கப்பட்டவங்க, இவங்கள்ளாங்கூட இங்கே இருக்காங்க. அங்கே எந்த மதச் சின்னமும் கெடையாது. தனியாகவோ இல்லே, மத்தவங்களோட சேர்ந்தோ பிரார்த்தனை செய்யலாம். நல்ல இடம்.”

மண் கப்பிச் சாலை. அரைப் பர்லாங்கு நடந்து போனதும் சிறு சிறு வீடுகள் தென்பட்டன. சில முதியவர்கள் உலவிக் கொண்டிருந்தனர். அலிவரின் தூரத்து உறவுக்காரர் எங்களைப் பார்த்ததும் வேகமாக எங்களை நோக்கி வந்தார்.

“குட் ஈவினிங், அங்கிள்.”

“குட் அலிவர் மை ஸன். எப்படியிருக்கே? எல்லோரும் சௌக்கியமா?”

“கர்த்தர் அருளால் எல்லாரும் சௌக்கியம் அங்கிள்.”

“இவர் என் நண்பர். எழுத்தாளர் முத்துன்னு பேரு.”

“வாங்க முத்து! உங்களுக்கு எழுத நிறைய விஷயம் இங்கே கிடைக்கும்.” சொல்லிவிட்டு நிறுத்தினார். அப்போது எங்களைக் கடந்து அறுபதுக்குச் சற்றுக் கூடுதலான வயதுடைய ஒருவர் சென்றார்.

“மை ஸன்! முத்து. இப்போ போனாரே ஒருவர், பார்த்தீங்களா?”

“இம். பார்த்தேன்.”

“அவரோட கதையைக் கேட்டா நாவலே எழுதலாம். பெரிய உத்தியோகத்தில் இருந்தவரு. பையன்களைப் பெரிசாப் படிக்க வக்கக் குறுக்கு வழிகளிலே பணம் சம்பாதிச்சாராம். இவரோட மனைவி இறந்துபோன பிறகு இவருடைய மகன்கள் இவரை ஒரு சுமையா நெனைக்க ஆரம்பிச்சாங்களாம். ஒருத்தன் இன்ஜினியர். அவன் அமெரிக்கா போயிட்டானாம். இன்னொருத்தன் டாக்டர். டாக்டர் மனைவி கிழவரை வெளியே அனுப்பினாத்தான் குடும்பம் நடத்துவேன்னு பிடிவாதம் பிடிச்சாளாம். புள்ளை இவரை இங்கே கொண்டுவந்து சேர்த்திட்டுப் போயிட்டான்.”

“அங்கிள், அவர் பேர்?”

“ஆம்! தேவநாராயணன்னு நினைக்கிறேன். மிஸ்டர் முத்து, நீங்க அவரைச் சந்திக்கிறீங்களா?”

எனக்குத் தலைசுற்றல் ஆரம்பித்தது. சில விநாடிகள்தாம் சுதாரித்துக்கொண்டேன்.

“தேவையில்லீங்க” என்றேன்.

அலிவரும் நானும் பரஸ்பரம் புரிந்துகொண்ட பாவனையில் தலையசைத்தோம்.

லௌகிக வெற்றியில் சுயநலம் மிகுந்துதான் இருக்கும்! ‘ஆனால் தேவநாராயணன் அந்தத் தத்துவத்துக்குத் தாமே ஒரு நாள் ஆளாக நேரிடும் என்று எண்ணியிருக்கவே மாட்டார்.

ஏனோ என் மனத்தில் அந்தத் தருணத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னர்க் கிருஷ்ணாம்பேட்டையில் பார்த்த ‘பிஞ்ஜராபோல்’ நினைவுக்கு வந்தது. *

The spark of an idea... the light to the future.

Creativity is the key word—and that's what Carborundum Universal is all about...creative technology at its best. Evolving new techniques to serve industry...making scarce materials go farther, anticipating tomorrow's needs. There aren't many like us around.

CARBORUNDUM UNIVERSAL LTD.

Manufacturers of Bonded and Coated Abrasives, Abrasive Grains, Calcined Bauxite, Super Refractories and Electrocast Refractories.

MADRAS • CALCUTTA • BOMBAY • NEW DELHI

Service-conscious suppliers of basic tools for industry

OBM 3903

With best compliments from

Prentice-Hall of India Private Limited

M-97, Connaught Circus, New Delhi-110001

REASONABLY PRICED FOR THE STUDENT COMMUNITY PRENTICE-HALL'S EASTERN ECONOMY EDITIONS INCLUDE REPRINTS OF OUTSTANDING AMERICAN TEXTS AS WELL AS ORIGINAL CONTRIBUTIONS OF INDIAN AUTHORS.

With the best compliments of

King Flour Unit (P) Ltd.

Regd. Office: 18, Sub-Jail Road, Tiruchi-620 008
Telephone: Off: 25469, Res: 85269/85298
Telegram: KING
Factory: Mathur-622 510 (Pudukkottai Dt.)

Mfrs. of

Rock Fort Brand Wheat Products
Maida, Sooji, Atta, Rough Bran & Flakes

(R. Nagasundaram)

துறவு

அனுராதா ரமணன்

படித்துறையில் ஜன சஞ்சாரமே இல்லை. சாதாரணமாய் இரவு ஏழு மணிக்கே ஓசை அடங்கிவிடும் கிராமம். அதுவும் ஆற்றுப் பக்கம், அந்த நேரத்தில் ஆள் நடமாட்டமே அபூர்வம்.

சுப்புணி, படித்துறையில் அம்மாவுக்குக் காவலாக உட்கார்ந்திருக்கிறான். அம்மா அதோ கூப்பிடு தூரத்தில், மார்பளவுத் தண்ணீரில் தலையை முங்கிக்கொண்டிருக்கிறாள்.

அம்மாவுக்குப் பதினைந்து வயசுச் சுப்புணி துணை. சற்றுமுன் அந்தப் பக்கம் வந்த சிவன் கோயில் குருக்கள் கூட அவனைக் கேட்டார்:

''இந்த நேரத்துல இங்கே என்னடா பண்ணிண்டிருக்கே?''

''அம்மாவுக்குத் துணையா வந்தேன் மாமா.''

இருட்டில் கூடக் குருக்களின் முகத்தில் இளக்காரம் வழிவது, சுப்புணிக்குத் தெரிந்தது.

''அம்மாவுக்கு நீ துணையா? பேஷ், பேஷ்!''

அவனுக்கு அழுகை முட்டுகிறது. கண்களில் உப்பு நீர் 'சுள்'ளெனக் கரிக்கிறது. சூம்பிய வலது காலை ஒரு கையால் நீவி விட்டுக் கொள்கிறான்.

நிஜமாகவே அவளுக்கு அவன் துணையாக முடியாதுதான்.

ஆமாம். அம்மாவை எதுவும் அசைக்க முடியாது. மெல்லிசாய், மஞ்சள் பழுப்பேறிய முற்றிய மூங்கில் போன்ற அந்தத் தேகத்துக்கு எப்படித்தான் அத்தனை சக்தி உண்டாயிற்றோ?

இந்த அம்மாவுக்குத் துணை வேண்டாம். அவள்தான் தன் புருஷனுக்கு, புருஷனின் வயசான தாய்க்கு, தான் பெற்றுப் போட்ட ஐந்து குழந்தைகளுக்குப் பெரும் துணையாக இருக்கிறாளே!

அவள் இப்படி அத்தனை பாரத்தையும் தன் தோளில் சுமப்பதினால்தானோ என்னவோ, அப்பா சுவரோடு சுவராய், திண்ணையோடு திண்ணையாய் நிச்சிந்தையாக உட்கார்ந்திருக்கிறார்.

இதுல கொஞ்ச நாளாப் புதுசா ஒரு மிரட்டல், நான் சாமியாராப் போயிடப் போறேன்னு.

நினைத்துப் பார்த்த சுப்புணிக்கு, சற்று முன் நெஞ்சை அழுத்திய துக்கம் மறைந்து 'பக்'கெனச் சிரிப்பு வருகிறது. வாய்விட்டுச் சிரிக்கிறான்.

''என்னடா?''

அம்மா ஈரப் புடைவையைப் பிழிந்து கொண்டே கரை யேற, அவன் அவளுடைய கைகளைப் பிடித்தபடி எழுந்து நிற்கிறான்.

''ஒண்ணும் இல்லே.''

''இல்லே. ஒண்ணுமில்லாத விஷயத்துக்குச் சிரிக்கறவா ஒண்ணு ஞானியா இருக்கணும்; இல்லே பைத்தியமா இருக்கணும். நீ எதுல சேர்த்தி?''

'அம்மா சிரிக்கிறாளோ?' சுப்புணி அம்மாவை அண்ணாந்து பார்க்கிறான். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

''அதுக்கு முன்னாடி எனக்குப் பதில் சொல்லு. அப்பா ஞானியா? பைத்தியமா?''

அவனது கேள்வி, அம்மாவின் கால்களைக் கட்டிப் போட, அவள் நின்று அவனைக் கூர்ந்து பார்க்கிறாள்.

''என்னடாது திடீர்னு?''

''திடீர்னு இல்லே. அப்பா. போன நவராத்திரியின்போது, வக்கீலாத்துப் பூஜையில 'கடகட'ன்னு சிரிச்சாரே; அதுலேருந்து எனக்கும் இதே சந்தேகந்தான்.''

''......''

''ஏம்மா, ஒரு வேளை, பாட்டி சொல்றது போல, அப்பாவைக் காத்து, கருப்பு அடிச்சிருக்குமோ?''

''காத்தையும் கருப்பையும் இவர் அடிக்காம இருந்தாப் போறாதா?''

அம்மா தனக்குள் முனகிக் கொள்கிறாள்.

வீட்டிற்குள் நுழையும் பொழுதே அப்பாவின் கர்ஜனை தெரு வரையில் கேட்கிறது.

''என்ன, அந்தச் சேரிச் சிறுக்கிக்குப் பிரசவம் பார்த்து முடிச்சாச்சா?''

''உம்! உம்!''

அம்மா ஈரப் புடைவையுடன் அவசரமாய்ச் சமையலறைக்குள் போய்ப் புகுந்து கொள்கிறாள். சுப்புணி, முற்றத்துத் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொள்கிறான். அப்பா தமக்குள் சொல்லிக் கொள்வது போல இரைந்து கத்துகிறார்:

''ஊருல இருக்கற ஒவ்வொருத்தியும் உன்னை நம்பித்தான் புள்ளையுண்டாறாளாக்கும்! காசா, பணமா, ஜாதியா, ஜனமா? இடுப்பு வலின்னு காதுலே கேட்டவுடனே விழுந்து அடிச்சுண்டு ஓடு. அதுவும் அந்தச் சிறுக்கி திமிர் புடிச்சவ.''

அம்மா பதிலே பேசவில்லை. பதிலாகப் பாட்டிதான் கத்துகிறாள்.

''பிரசவ சமயத்துலே பொண்ணு என்ன? மாடு, நாய் மாதிரி அஞ்சறிவு மிருகமானு என்ன? எல்லாம் ஒண்ணுதான். சும்மா கத்தாதே, சிவராமா!''

''கத்தாம எப்படி இருக்கறது? இன்னிக்கு என்ன நாள் தெரியுமா? பிரதோஷம்; கோவிலுக்குப் போயிட்டு வந்து, பாராயணம் பண்ணிட்டு, பலகாரத்துக்காக ரெண்டு மணி நேரமா, தபஸ் கிடக்கேன். சே! ஒரு மனுஷன் ராத்திரி பன்னெண்டு மணிக்கா பலகாரம் பண்ணுவான்?''

சுப்புணிக்கு மறுபடியும் சிரிப்புப் பொத்துக் கொண்டு வருகிறது.

'அல்பப் பலகாரத்துக்காகத் தபஸ் பண்ணுகிற நிலையையே கடக்காத இந்த அப்பாவா, சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறார்?'

பதினைந்து வயசுதான் என்றாலும் சுப்புணிக்குக் கேள்வி ஞானம் அதிகம். துறவைப் பற்றியும், சந்நியாசத்தைப் பற்றியும் அவனும் கொஞ்சம் அறிவான்.

''அப்பாவால் எப்படி எல்லாப் பற்றையும் உதற முடியும்? முதல்லே இந்தக் கோபத்தை உதற முடியறதோ?''

அம்மா சற்று முன் பிரசவம் பார்த்த பெண் சரோஜி மேலேயே அப்பாவுக்குக் ஏகக் கோபம்.

அவர் சொல்வது போல, சரோஜி, திமிர் பிடித்தவள் இல்லை.

போன வருடம் அம்மா வக்கீல் வீட்டில் ராதா கல்யாணத்துக்காகச் சமைக்கப் போன போது, சரோஜி பற்றுப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தாள். சின்னப் பெண். கல்யாணமான புதுசு.

''அம்மா, அய்யமாருங்க எல்லாரும் எதுக்காவ வீடு வீடாப் பாடிட்டே போய்ப் பிச்சை வாங்கறுங்க?''

அவள் அன்று, சுப்புணியின் எதிரில்தான் அவன் தாயைக் கேட்டாள்.

''கிருஷ்ண பரமாத்மாவுக்குக் கல்யாணம்னு, அதுலே எல்லாருக்கும் பங்கும் இருக்க வேண்டாமாடீ? வீடுவீடா, அவன் பேரைச் சொல்லிப்

பிச்சை கேட்டு, அந்த அரிசியையும், கல்யாணச் சமையல்லே சேர்த்துட்டா. எல்லாருக்கும் அந்தப் புண்ணியத்துலே பங்குதானே?''

அம்மா சொன்னதில், சரோஜிக்கு என்ன புரிந்ததோ? கைக்காரியத்தை அப்படியே போட்டுவிட்டு, பக்கத்திலிருந்த தன் குடிசைக்கு ஒரே ஓட்டமாய் ஓடினாள். சின்ன அலுமினியக் குவளையில் அரிசியை எடுத்து வந்து, யாரும் எதிர் பார்க்காத வண்ணம், வக்கீலின் தோளில் தொங்கிக்கொண்டிருந்த உஞ்சவிருத்திச் செம்பில் போட்டு விட்டாள்.

அதே நிமிஷம், அந்தப் பஜனைக் கோஷ்டியில் பின்னால் வந்து கொண்டிருந்த சிவராமன், 'ஹா ஹா'வெனச் சாமியாடத் துவங்கிவிட்டார்.

சிவராமனுக்கு அருள் வாக்கு வந்ததென்றால், சுற்றி நிற்பவர்கள் அத்தனை பேருக்குமே குலை நடுக்கந்தான்.

அன்றைக்கும் பெரிய ரகளை நடந்து விட்டதுதான்.

''சரோஜி, செஞ்சது தப்புன்னு சாமி காலிலே விழுந்து கும்பிடு.''

யாரோ அதட்ட, அவள் வணங்கி மன்னிப்புக் கேட்க மறுத்தாள்.

''என்னாத்துக்கு? நான் இப்ப என்ன தப்புச் செஞ்சேன்?''

''அடியம்மா, இது பெரியவங்க ஆசாரமாச் செய்யற காரியம். இதுல நீ கலந்துக்கக் கூடாது.''

''நான் கலந்துக்கிடல்லே. என் அரிசிதானே கலந்துக்கிட்டுது? அரிசியிலே ஏது ஆசாரம்?''

அன்று அவள் இப்படிக் கேட்டபோதும், சுப்புணிக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''பேஷ்! நன்னாத்தான் கேட்கறா.''

அவன் தனக்குள் சிலாகித்துக் கொண்டிருந்த போதே, சிவராமன் 'சடசட'வெனப் பொரியத் தொடங்கிவிட்டார்.

''இவளுக்குக் கெட்ட காலம் வந்தாச்சு. விநாச காலே விபரீத புத்தி. அடுத்த ராதா கல்யாணத்துக்குள்ளே இவளுக்கு ஏதோ கெடுதல் நேரப்போறது.''

அத்தனை பேரும் நடுங்கியபடி அவரையே பார்க்க, சரோஜி சர்வ அலட்சியமாய் முன்றானையை ஒரு உதறல் உதறிக்கொண்டு போய் விட்டாள்.

அப்பாவுக்கு அது முதலே அவள் மீது எரிச்சல். அவளுக்குப் பிரசவம் பார்க்கப் போன அம்மாவின் மீதும் எரிச்சல்.

யோசித்துப் பார்க்கையில் அம்மாவிடம் அப்பாவுக்கு நிறைய விஷயங்களில் கோபம் இருக்குமென்றே தோன்றுகிறது, சுப்புணிக்கு. அதுவும் தன் புதுப் பக்தி பரவசத்தை அவள் மதிக்கவில்லையே என்பதில் நிறைய ஆத்திரம் அவருக்கு.

சுப்புணிக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக அம்மாதான் அந்த வீட்டில் சம்பாதிக்கும் நபர்.

பாவம்! அவள் நாலு வீடுகளில் சமையல், எடுபிடி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். இருபதிலும், பதினெட்டிலுமாய் இரு பெண்கள் தன் தோளுக்கு மேல் வளர்ந்தபிறகு மேற்கொண்டு என்ன செய்து அவர்களைக் கடைத்தேற்றலாம் என இரவு முழுக்கத் துக்கம் வராமல் தவித்துக் கொண்டிருக்கிறாள். பிள்ளைகளில் மூத்ததும் இப்படிக் கால் விளங்காமல் போயிற்றே எனப் பெருமூச்சு விட்டு, உள்ளுக்குள் உருகிக் கொண்டிருக்கிறாள். 'அடுத்த ரெண்டு சிறிசுகளாவது நாலு பேருக்கு முன் நெஞ்சை நிமிர்த்தி நிற்க வேணுமே' என ஏங்கிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால், அந்த ஐந்தடி உயரத் தேகத்துக்குள் அத்தனை கவலை இருப்பது முகத்தில் தெரியவே தெரியாது. வெண்கலக் குத்து விளக்கைத் தேய்த்து, பொட்டு வைத்து, தீபமேற்றியது போல அத்தனை தேஜஸ்!

'எத்தனை நாட்களாய் அவரை இந்தச் சந்நியாசப் பித்துப் பிடித்தது?'

அப்பாவுக்கு என்றுமே வேலை செய்யப் பிடிக்காது. ஆனால், சாப்பிட்டாக வேண்டும். அக்கம் பக்கத்தில் எங்காவது ராதா கல்யாணமென்றால், ஆஞ்சநேய ஜயந்தி என்றால், நவராத்திரி உற்சவம் என்றால் அங்கே 'சாது சிவராமன்' அவசியம் இருப்பார்.

சுப்புணியின் அப்பா பெயர் சிவராமன்தான். 'சாது' சமீப காலமாய் ஒட்டிக்கொண்ட பட்டம்.

இன்றைக்கு நடந்தாற் போல இருக்கிறது சுப்புணிக்கு. போன வருடம் நவராத்திரியின் போது நடந்த சம்பவம்:

அம்மாவுக்கு, வக்கீல் சங்கரன் வீட்டில் வேலை. பெரியவள் மீனாவும், அடுத்தவள் லட்சுமியும் அம்மாவுக்குக் கூடமாட ஒத்தாசை. சுப்புணி, வக்கீல் வீட்டுக் கூடத்தில் ஒரு மூலையில்.

சிவராமன், அதே கூடத்தில் விரித்திருந்த கல்யாண ஜமுக்காளத்தில் அமர்க்களமாய் உட்கார்ந்திருந்தார். வருடம் வருடம் வக்கீல் சங்கரன் வீட்டில் நவராத்திரிப் பூஜையும், அதையொட்டித் தேவீ பாகவதமும் படிக்கப்படும். இரண்டு வேளையும் சுமங்கலிகளுக்கும் ஆஸ்திகர்களுக்கும் வடை பாயசத்துடன் சாப்பாடும் உண்டு.



இது மாதிரியான காரியங்களுக்குச் சுப்புணியின் அம்மாவை விட்டால் அந்த ஊரில் வேறு ஆள் இல்லை: சிவராமன் சாப்பாட்டு நேரத்தில் வந்து உட்கார்ந்து கொள்வார். அன்றும் இப்படித்தான்.

பாகவதம் முடிந்து, அதே கூடத்தில் இலை போட்ட பொழுது சிவராமன் தமக்கு வசதியான ஒரு மூலையை வசமாய் ஆக்கிரமித்திருந்தார்.

''இந்தா, சிவராமா, எல்லாரும் சாப்பிடத்தான் போறோம். வாயிலே என்ன மந்திரம் நுழையறதோ இல்லையோ, சர்க்கரைப் பொங்கலும் வடையும் நமக்கெல்லாம் தாராளமா நுழையறது. லலிதா ஸகஸ்ரநாமம் சொல்லலேன்னு அம்பாள், எழுந்து வந்து அடிக்கப் போறதில்லே. வாய் நெறையச் சுலோகம் சொன்ன பாகவதாளை உபசரிக்கிற புண்ணியமாவது வரட்டுமே! எழுந்திரு. 'மளமள'ன்னு அவாளுக்குத் தீர்த்தம் வை. பந்திப் பாயை விரி.''

வக்கீல் சங்கரன்தாம் அதட்டினார்: தன் அப்பாவையே பார்த்துக்கொண்டிருந்தான் சுப்புணி.

இப்பேர்ப்பட்டவரை வேலை ஏவ, சங்கரன் ஒருவரால்தான் முடியும். அந்தக் கணத்தில் முக மாறுதலை வெளிக் காட்டாமல் அவர் சொன்ன வேலையைச் செய்த மனிதர், மறு நாளே அவரைத் தம் காலில் விழ வைத்து விட்டாரே!

நிஜந்தான். மறு நாள் பூஜையின் போது சிவராமன், ஆவேசம் வந்து குதிகுதியெனக் குதித்தார். பாகவதம் படித்த பெரிய மனிதரிலிருந்து, அம்மா வரை அத்தனை பேரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

''ஆசாரம் போராத வீட்டுலே அம்பாள் இருப்பாளாடா?''

சிவராமன் கேட்ட கேள்வியில் கூடமே ஸ்தம்பித்தது.

''அடாடா! நான் எந்தத் தப்பும் பண்ணலையே!''

சங்கரன், பட்டு உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு, கண்ணீர் மல்கச் சொன்னார்.

''ஏண்டா டேய், ஸகஸ்ர நாமமா படிக்கறே நீ? சாயந்தரம் மூணு மணிக்கு என்ன செஞ்சே?''

''என்ன, என்ன செஞ்சேன்?''

சங்கரனுக்கு ஏற்கனவே ரத்தக் கொதிப்பு உண்டு. சிவராமனின் கேள்வியில், அவருக்கு நெஞ்சே வெடித்து விடும் போல ஆகிவிட்டது.

''மது பானத்தை ஸ்பரிசிச்சவனுக்கு, என்னைப் பூஜை செய்ய என்ன யோக்யதை இருக்கு? உன்னை இந்த மட்டோட சும்மா விடறேன்னு, அது உன் பூர்வ ஜன்ம புண்ணியம்.''

சங்கரன் சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்துவிட்டார். ஏதோ மாலை நேரத்தில் மருந்து மாதிரி மிதமாக அவர் குடிப்பது வழக்கந்தான். அது, நாலு பேர் நடுவில் இப்படிச் சதிர்க்காயாக உடைபடும் என்று அவர் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை.

இதற்குப் பின், சிவராமனுக்கு ஆரத்தி காட்டி, அத்தனை பேரும் விழுந்து விழுந்து வணங்கிய பன்தான், அவரை ஆட்கொண்டிருந்த அம்பாள் மலையேறினாள்.

இத்தனையையும் விழியகலப் பார்த்தபடி, கரண்டியும் கையுமாய் நின்றுவிட்டாள் சுப்புணியின் தாய். அவள் மனசுக்குள் ஆயிரம் சிந்தனை.

முதல் நாள் மாலை மூன்று மணி சுமாருக்கு அவள், சங்கரன் வீட்டில், சுண்டலைத் தயாரித்துக்கொண்டிருக்கையில் சிவராமன் வந்து, எதற்கோ பணம் கேட்ட அதே சமயத்தில் வேலையாள் காத்தமுத்து, கையில் சோடா பாட்டிலுடன் மாடிக்குப் போனான்.

''என்னடா? அய்யாவுக்குப் பண்டிகைச் சாப்பாடு ஒத்துக்கலையா?''

இப்படிச் சிவராமன் அவனிடம் இடக்காகக் கேட்டான்.

''அதில்லீங்க. இது வேற'' என்று கூறிக் காத்தமுத்து, கண் சிமிட்டிச் சிரித்தபடியே மாடியேறினான்.

அவருக்கு எல்லாமே புரிந்து விட்டது.

அன்றிரவு சுப்புணியின் அருகில் தன் படுக்கையை உதறிப் போட்டுக் கொண்டே அவள், தன் புருஷனைப் பார்த்து, 'சுருக்'கென ஒரு கேள்வி கேட்டாள்.

''அம்பாள், ரொம்ப உக்கிரமா வந்தாப்பலே இருக்கு?''

சுப்புணி அப்பாவின் முகத்தையும் அம்மாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி படுத்திருந்தான்.

அம்மாவின் முகத்தில் அம்பாளே ஆரோகணித்திருப்பது போல ஒரு தகதகப்பு. அப்பாவின் முகத்திலோ ஏய்த்துவிட்ட ஏளனச் சிரிப்பு; பழி வாங்கி விட்ட பூரிப்பு.

''அவர் குடிக்கறாரோ, கூத்தடிக்கறாரோ? மனசாலே ரொம்ப நல்லவர். உத்தமர். ஏதோ, இந்த மட்டும் பக்தி சிரத்தையா செய்யறாரேன்னு இல்லாம, அவரை, இப்படியா நடுங்க வைக்கணும்?''

''நானடி நடுங்க வச்சேன்? எனக்கென்ன தெரியும்? எல்லாம் அந்த அம்பாளோட வேலை.''

அதற்கு மேல் அவள் பேசவேயில்லை, அன்று அம்மா சொன்ன வார்த்தைகள் இன்றளவும் பசுமையாய் இருந்தன.

கிராம்டன் கிரீவ்ஸ் எந்திரங்கள் அளிக்கும் உத்தரவாதம்
குறைந்த மின்சாரத்தில் நிறைந்த நீரோட்டம்
* மின்சாரத்தில் கணிசமான மிச்சம்
* பயிர்களுக்குத் தாராளமான நீரோட்டம்
* அனைத்திலும் சிறந்த தரமுள்ள எந்திரங்கள்

மோனேப்ளாக் பம்ப்செட்

* உறுதியான கட்டமைப்பு
* இணையற்ற செயல்திறன்
* 15 கிலோவாட் (20 ஹெச் பி) வரை

கப்பிள்ட் பம்ப்செட்

* ஆட்டம் கொடுப்பதில்லை
* பேரிங் மீது அழுத்தம் பாதிப்பதில்லை
* 22 கிலோவாட் (30 ஹெச் பி) வரை

ஸ்டாண்டர்ட் மோட்டார்

* உறுதியான கட்டமைப்பு கொண்ட அருமையான மோட்டார்
* விசேஷமான வலுவான டெர்மினல்-பாக்ஸ்
* தொடர்ந்து சூடேறாமல் ஓடவல்லது

டி.ஓ.எல். ஸ்டார்டர்

* மின்சார ஏற்ற இறக்கங்களைத் தாங்கக் கூடியது
* கூடவே 'ஸிங்கிள் பேஸிங் ப்ரிவென்டர்'
* 5·5 கிலோவாட் (7.5 ஹெச் பி) வரை

ஸ்டார்-டெல்டா ஸ்டார்டர்

* எங்கும் பிரசித்தி பெற்ற குவாலிட்டி
* எல்லாத் தொழில்களுக்கும் ஏற்றது
* 22 கிலோவாட் (30 ஹெச் பி) வரை

ஸ்விட்ச்-ஃப்யூஸ்

* மண்-தூசு புகாமல் பாதுகாப்பு
* சிறந்த போர்ஸலேன்-ஃப்யூஸ்
* 200 ஆம்ப் வரை

இரிகேஷன் பேனல்

* மண்—தூசு புகாமல் பாதுகாப்பு
* கர்வு போகும் பயமில்லை
* ஓடுகிறதா இல்லையா என்று காட்டும் ஒளியமைப்பு

கெப்பாஸிடர்

* மின்சாரத்தின் முழு உபயோகம் மற்றும் மிச்சம்
* த்ரி-பேஸ் மற்றும் ஸிங்கிள்-பேஸ் களில்

ஃபுட்-வால்வு

* மின்சார செலவில் 15% வரை மிச்சம்
* 15% வரை கூடுதல் தண்ணீர்
* ப்ரைமிங்கைச் சரியானபடி வைக்கிறது

ஒன்றைவிட ஒன்று நன்று !

உபரி உறுப்புகள் எங்கும் கிடைக்கும்.
அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடம் கிடைக்கும் துரிதமான பணிச் சேவை வாய்ப்பு

கிராம்டன் கிரீவ்ஸ்
லிமிடெட்

மெஷின் டிவிஷன், டாக்டர். இ. மோசஸ் ரோட் வொர்லி, பம்பாய்- 400 018

கிளைகள் : வடக்குப் பிராந்தியம் : புது டில்லி, ஜெய்ப்பூர், ஜலந்தர் ஸிட்டி, லக்னோ
கிழக்குப் பிராந்தியம் : கல்கத்தா, கௌகாட்டி, பாட்னா, புவனேஸ்வர்
மேற்குப் பிராந்தியம் : பம்பாய், ஆமதாபாத், இந்தூர், நாக்பூர்
தெற்குப் பிராந்தியம் : சென்னை, பெங்களூர், கொச்சி, செகந்தராபாத்

ULKA-R-22-83-TAM

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அப்பா அடியோடு மாறிவிட்டதைச் சுப்புணி புரிந்துகொண்டான்.

இது நாள் வரையில் வீட்டில் மட்டுமே தம் அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருந்தவர், வெளியிலும் இதே விறைப்புடன் நடந்துகொள்ள ஆரம்பித்தார். அவருக்கு எந்தச் சுலோகமும் தெரியாது. ஆனால், யார் என்ன அட்சரசுத்தமாய்ச் சுலோகத்தைச் சொன்னாலும் கிண்டல் செய்யத் தெரிந்துகொண்டார்.

எந்த உற்சவத்திலும் இவருக்கு முதல் மரியாதை, அலங்கரிக்கப்பட்ட சாமியை விடவும். அகங்காரம் மிகுந்த அவரது குரலுக்கே ஜனங்கள் பயப்பட்டார்கள். பஜனையில் சாமி வந்து ஆட ஆரம்பித்து விடுவார். இல்லாவிட்டால் சமாதியில் ஆழ்ந்து விடுவார். திடீரெனக் காரணமில்லாமல் 'கட கட'வெனச் சிரிப்பார். கண்களை உருட்டி எதிராளியை மிரளச் செய்வார்.

இந்த வேஷமெல்லாம் போதாதென்று, இப்பொழுது புதுசாய்ச் சந்நியாச மோகம் வேறு.

அம்மா இவரது எல்லாப் பேச்சுக்களையும் கேட்டுக்கொண்டு, கல்லாய், மரமாய், ஜடமாய் இருப்பாள்.

சிவராமனைப் பெற்றவள்தான். தனது எண்பது வயசுக்கும் பிள்ளை மீதுள்ள அக்ஞானம் தாளாமல் 'ஓ'வென ஒப்பாரி வைப்பாள்.

''அடேய்! வேண்டாம்டா. சின்னஞ் சிறுசுகளை அநாதையா விட்டுட்டுப் போயிடாதேடா!''

''இத பாரு! நீ என்ன சொன்னாலும் என் காதுல ஏறுது. நேத்து ராத்திரி எனக்கு உத்தரவு கெடைச்சுடுத்து. 'இன்னும் எத்தனை நாள்தான் இந்தச் சமுத்திரத்துல கிடந்து உழலப் போறே? கிளம்புடா சிவராமா'ன்னு பத்ரகாளி என் கனவுல வந்து சொன்னா.''

அவர் இப்படிச் சொல்லும்போது குழந்தைகள் பயத்தில் உறைந்து போய் நிற்பார்கள். கிழவி பேய்க் குரலைக் காட்டுவாள். அம்மா மட்டும் முகத்தில் எந்த வித மாறுதலும் இல்லாமல் நிற்பாள். இல்லாவிட்டால், ''போகணும் போகணும்னு சொல்லிண்டு எதுக்காக இங்கே நிற்கணும்? சந்நியாசிக்கு அழகு சொல்லாமல் கிளம்பறதுதான்'' எனச் சிரித்தபடி சொல்லி விடுவாள்.

இந்தத் தடவை அப்பா, உண்மையாகவே சொன்னபடி செய்து விடுவார் போலத்தான் சுப்புணிக்குத் தோன்றியது.

அம்மாவின் முகத்தில் சலனமேயில்லை. எல்லாவற்றையும் கவனித்தபடி அவள் பாட்டுக்கு வளைய வருகிறாள்.

அப்பாவினால் அவளுக்குச் சல்லிக் காசுக்குப் பிரயோசனமில்லைதான். இருந்தாலும் அக்காளுக்குத் தாலி கழுத்தில் ஏறும் வரையிலாவது அப்பா என்றொரு மனிதர் அந்த வார்த்தைக்கு அடையாளமாய், பந்தலில் இருக்க வேண்டாமோ?

நினைக்க நினைக்க ஆறவில்லை அவனுக்கு.

இந்த அம்மாதான், புருஷனுக்காகவும், அந்தக் குடும்பத்துக்காகவும் எத்தனை செய்திருக்கிறாள்!

அடுப்படியில் 'திகுதிகு'வென எரியும் நெருப்பைப் பார்த்துக்கொண்டே, பச்சைக் கர்ப்பூரமும் ஏலக்காயும் முந்திரியுமாய் மணக்கும் பாயசத்தைச் சுவாசித்துக்கொண்டே தன்னைச் சுற்றிப் பல வித வர்ணங்களில் பட்டுப் புடைவைகளையும், வைர நகைகளையும் சுமந்த பெண்மணிகளின் உல்லாசப் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

அம்மா, இந்த அப்பாவைப் போல அமர்க்களமாகப் பூஜை புரஸ்காரங்களில் ஈடுபட்டது இல்லை. அவ்வளவு ஏன்? உதட்டுக்குள் சின்னதாய் ஒரு சுலோகத்தை முணுமுணுத்துக்கூட அவன் பார்த்ததில்லை.

இத்தனைக்கும் அவள் படிப்பறிவே இல்லாத தற்குறி அல்ல. ஏதோ ஓரளவுக்குப் படித்திருக்கிறாள்.

சிவராமனை மணந்த போது, அவளிடமும் கணிசமான நகை நட்டுக்கள் இருந்தனவாம். அவர்தாம், வியாபாரம் செய்து என்னவோ பெரியதாய்ப் புரட்டப் போவதாகச் சொல்லி, நகைகளை வாங்கிக்கொண்டாராம். இதைப் பாட்டி அவனிடம் அடிக்கடி சொல்லுவாள். இன்று வரையில் அந்த நகைகளில் ஒரு சின்னத் திருகாணியைக் கூட அப்பா மீட்டுத் தரவில்லை. அம்மாவும் இதுபற்றி அவரிடம் கேட்டதே இல்லை.

ஒவ்வொரு பெண்ணைப் போல மாமியார்க் கிழவியைக் குற்றம் சொல்லும் பழக்கமும் கிடையாது. பார்க்கப் போனால், அம்மாவுக்குத் தன் மாமியாரிடம் ஏகப்பட்ட மரியாதை; விசுவாசம்.

''அப்பா! உன் மாப்பிள்ளை டெல்லிலேருந்து நைட்ஃப்ளைட்லே வராரும். தந்தி வந்திருக்கு!''

''விநாயகா! உனக்கு 1008 மைசூர்பாகு உடைக்கிறேன். அந்த விமானத்தை ஆபத்தில்லாம அப்படியே ஹைஜாக் பண்ணுடு!''

அகன்று, 'ஹ்ரீம்' என்கிற ஓசையுடன் ஓடும் காவேரியைப் பார்த்தபடி அமர்ந்திருந்த சுப்புணி, அம்மா தங்களுக்காகவும், தன் புருஷனுக்காகவும் இதுவரையில் துறந்த சின்னச் சின்னச் சந்தோஷங்களை விரல் விட்டு எண்ணிப் பார்த்தான். எண்ணி மாளாது போலத் தோன்றுகையில் ஸ்தம்பித்துப் போனான்.

அப்பாவுக்கு சர்க்கரை வியாதி. இருந்தும் அவரால் தம் நாக்கை அடக்க முடியாது. பொது இடத்தில் இலையில் வகை வகையாகப் பரிமாறப்படும் பொழுது வளைத்துக் கட்டி விடுவார்.

ஆனால் அம்மாவோ, கை விரல்கள் சர்க்கரையிலும், நெய்யிலும் புழங்கினாலும் சின்னதாய் ஒரு விள்ளலைக்கூடத் தன் வாயில் போட்டுக்கொண்டதில்லை. சுப்புணிக்குத் தெரிந்து, அம்மா இலை முன் உட்கார்ந்து சாப்பிட்ட நாட்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

ஒரு பிடி சோற்றை, மிஞ்சிய ரசத்திலோ, புளித்த மோரிலோ கரைத்து, 'மடக்'கெனக் குடிப்பதுடன் அவள் சாப்பாடு முடிந்துவிடும்.

''அம்மா, ரசம் ஊசிப் போன மாதிரி இல்லே?''

கடைக்குட்டி உமா முகத்தைச் சுளித்தபடி கேட்கையில் அம்மாவின் முகத்தில் மெல்லிய முறுவல் படரும்.

''அப்படியா? நான் சாப்பிட்டேனே. எனக்குத் தெரியலையே.''

''என்னால வாயில வைக்க முடியல்லே?''

''உமா, நீ குழந்தை. உனக்கு இப்போ சொன்னாப் புரியாது. இருந்தாலும் சொல்றேன். பசிக்குத்தான் ஆகாரமே தவிர ருசிக்கு இல்லே. நாக்கு இருக்கே, அது ரொம்பப் பொல்லாதது. வளர விட்டா அடக்க முடியாது.''

அம்மா சொன்ன வார்த்தைகள் சிறுமிக்குப் புரிந்ததோ இல்லையோ, முற்றத்துத் தூணோடு சாய்ந்திருக்கும் சுப்புணிக்குப் புரிந்தது. அதுமட்டுமல்ல; அப்பாவின் வாயில் நுழையாத, தப்புத் தப்பான உச்சரிப்புடன் கூடிய சுலோகங்களை விட அம்மா தன் கைக்காரியத்தைக் கவனித்தபடி, பெண், பிள்ளைகளுக்குச் சொல்லும் உபதேசங்கள் மிக எளிமையானவையாக, அர்த்தமுள்ளவையாகச் சுப்புணிக்குத் தோன்றின.

''மீனு, பெரியவாளை விட்டெறிஞ்சு பேசாதேம்மா. அவாளை அலட்சியப்படுத்திட்டு, அப்புறம் ஆயிரம் கோவிலுக்குப் போறதுல பலனே இல்லை.''

''பதினெட்டு - இருபது வயசிலே எல்லா விதமான சபலங்களும் வர்றது சகஜந்தான். வக்கீல் பொண்ணு பட்டுப் புடைவை கட்டிண்டிருக்காளே, நமக்குக் கந்தலுக்குக் கூட விதியில்லையேன்னு

அலுத்துக்காதே. அதுக்குப் பதிலா உன் கிட்ட இருக்கற மத்த விஷயங்களை நெனைச்சுச் சந்தோஷப்படு. ஏதோ, பகவான் இந்த மட்டுமாவது நல்ல நெலமையில வச்சிருக்காரேன்னு நெனைச்சுக்கோ.''

''சாண் அகலச் சரிகை போட்ட புடைவையே உடம்புலே சுத்திக்கறதால அந்த உடம்புக்கு மட்டுந்தான் பெருமை. மனசு முழுக்க நல்ல நெனைப்புகளைச் சுத்தி்ண்டு பாரு, உனக்கே பெருமையா இருக்கும்.''

''இந்தா, சாதி வித்தியாசம் பார்க்காதே. அவாளும் மனுஷாதான். பார்க்கப்போனா, நம்மை விடவும் நமக்காக உழைக்கவே ஜன்மம் எடுத்திருக்கற மனுஷா.''

''சுப்புணி, வலது காலைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடாதேடா. இடது காலாவது நன்னாயிருக்கேன்னு சந்தோஷப்படு. இருந்த இடத்துலேயிருந்தே ஞானத்தைத் தேடு. பள்ளிக்கூடத்துக்கு நடக்கத்தான் கால் வேணும். படிக்கறதுக்குப் புத்தி வேணும். அறிவு முடமானாத்தான் அழணும்.''

அம்மாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கற்கண்டாய்த் தேனாய் இனித்தன.

'இது மாதிரி ஒரு வார்த்தை பேசத் தெரியுமோ அப்பாவுக்கு?'

காவேரியைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த சுப்புணிக்குச் சிரிப்பு வந்தது. அடக்க மாட்டாமல் சிரித்தான். அதே சமயத்தில் அவன் இருக்கும் இடத்தைத் தேடி, மூச்சு முட்ட ஓடி வந்தாள் உமா.

''அண்ணா?''

''என்னடி!''

''அப்பா சந்நியாசம் வாங்கிண்டுட்டார்!''

''என்னது?''

அவன் குலுங்கி நிமிருகிறான். மனசுக்குள், அடுப்பு அக்கினி முன் ஹோம குண்டத்திலிருந்து தெறித்து விழுந்த நெருப்புத் துணுக்குப் போல அம்மாவின் முகம் கனிந்து, தகதகத்தது.

தங்கையின் கரத்தைப் பற்றியவாறு, காலை இழுத்து இழுத்து நடந்த சுப்புணி, சிவன் கோவில் வாசல் முன் நின்ற கூட்டத்தைக் கண்டு தயங்கி நின்றான்.

சிவராமன் காவி உடையில் நின்றார். அவருக்குத் தீட்சை அளித்த மற்றொரு பெரியவர். பக்கத்தில் இவர்களைச் சுற்றிச் சிறு கும்பல்.

வக்கீல் சங்கரன் இவர்களைத் தம் வீட்டில் பிட்சை ஏற்கும்படி வேண்டிக் கொண்டிருந்தான்.

அம்மா வெகு தூரத்தில், யாரோ ஒருவரது வீட்டுத் திண்ணையில், தன் மாமியாரை நெஞ்சில் சார்த்தி, சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

'அம்மா அழுகிறாளோ?'

'இல்லை அழவில்லை. அவள் அழவும் மாட்டாள், அவனுக்குத் தெரியும்.'

''சுப்புணி, இனிமே அவர் உனக்கு அப்பா இல்லே.''

வக்கீல் சங்கரன்தான் அவனது முதுகைத் தடவியபடி சொல்கிறார்.

''தெரியும் மாமா.''

''பெரியவாளைச் சுத்தி வந்து நமஸ்காரம் பண்ணு.''

அவர் சொன்னதும் சுற்றி நின்ற கூட்டம் பிளந்து, சுப்புணிக்காக வழி விட்டது.

சுப்புணி அவர்கள் யாருமே எதிர்பாராத வகையில், தன் தாய் நின்றிருந்த இடத்துக்குக் காலைத் தேய்த்தபடி நகர்ந்தான். கைகள் இரண்டும் தலை மீது குவிய, கண்கள் ஆறாய்ப் பெருகியது.

எப்பொழுதோ, வக்கீல் வீட்டு நவராத்திரிப் பூஜையில், யாரோ பாடிய பாட்டு மனசுக்குள் பதிந்து, இப்பொழுது பீறிட்டுக் கிளம்ப, இரைந்து பாடியபடி அம்மாவைச் சுற்றி வந்து, தேகம் நடுங்கத் தரையில் விழுந்து வணங்குகிறான் அவன்.

''உள்ளம் உருகி உன்னடி
போற்றுவார்க்கு
உள்ளத்தில் உருக காட்டி உப
தேசம் செய்பவளே!''

சுப்புணியின் குரல், அழுகையில் கரைகிறது. ✻

டெட் கட்டியில் மட்டுமே
உள்ளது ஸால்வெண்ட் பவர்
இது துணிகளுக்கு முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கிறது
புதிய ஸால்வெண்ட் பவர்
பிசுக்கைக் கரைக்கும் சக்தி
அழுக்கை அகற்றும் சக்தி
முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கும் சக்தி
NEW SOLVENT POWER
det
detergent washing cake
Shilpi DM/31 A/81 Tam
வேறெந்த டிடர்ஜெண்ட் கட்டியும் பாரும் இதற்கு இணையில்லை பாரும்

இடைவெளி

லக்ஷ்மி

ரஞ்சிதாவின் வீட்டுக்குப் போய் வந்தபின் அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி கொஞ்சநஞ்சமல்ல.

அப்பாவின் மீது அவள் கொண்டிருந்த மதிப்பு, அம்மாமீது வைத்திருந்த அன்பு, அண்ணன் அண்ணி இருவரிடம் அவள் வைத்திருந்த பாசம் எல்லாம் தடாலெனச் சரிந்து மண்ணைத் தொட்டுவிட்டன போன்ற பிரமிப்பில் அவள் வீட்டுக்குள் வளைய வந்துகொண்டிருந்தாள்.

உண்மையை அவள் கட்டாயம் தானே கண்டறிய வேண்டும் என்ற ஆவலை மட்டும் அடக்க முடியவில்லை.

யாரிடம் கேட்பது? எப்படிக் கேட்பது என்பதுதான் சட்டென்று விளங்கவில்லை.

அன்று மாலை அவள் கல்லூரியிலிருந்து வந்ததும் அம்மாவும் வேலைக்காரியும் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்கள். படிப்பில் கெட்டிக்காரி, பார்க்க அழகான பெண் என்பதோடு இல்லாது, வீட்டை நிர்வகிப்பதிலும் மகள் மாதங்கி நிரம்ப பொறுப்பானவள் என்பது பற்றி அம்மா சுமதிக்கு மிகவும் பெருமை.

''மாதங்கி, சாவிக்கொத்தை நீயே பத்திரமாக வச்சுக்க. புடைவைக் கடை எதிலாவது நான் மறந்துவிட்டுட்டு வந்தால் திண்டாடிப் போயிடுவேன். தீபாவளி நெருக்கத்திலே கடைகளில் ரொம்பக் கூட்டம். திரும்பிவர முன்பின் ஆகும். அவுட்டவுஸிலே படுத்துக் கிடக்கிற தாயம்மா அங்கிருந்து மணியடிச்சுத் தொந்தரவு செய்யறதுக்குள்ளே அதுக்குச் சாப்பிட ஏதாச்சும் சமையற்காரம்மாகிட்டே கொடுத்தனுப்பிடு. மணி அடிக்க பட்டன் வச்சுக் கொடுத்தாலும் கொடுத்தேன், அந்தக் கிழவியின் தொணதொணப்புச் சகிக்கலே.'' அம்மா முணுமுணுத்தபடி காரில் கடைத்தெருவுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

உடலில் தெம்பு இருந்தவரை உண்மையான கடும் உழைப்பை அந்தக் குடும்பத்துக்குத் தந்தாள் தாயம்மாள். சமையலிலிருந்து குழந்தைகளைப் பார்த்துப் பராமரிப்பது வரை ஓடாக உழைத்துத் தேய்ந்த உண்மை உணர்வு மிக்க நல்லதொரு வேலைக்காரி அவள். பாட்டி காலத்திலிருந்து அந்த வீட்டில் பணிபுரிந்து வயதும் தள்ளாமையும் காரணமாக ஓய்வாக, அநாதையாக, அவர்கள் பங்களாவில் அவுட் ஹவுஸின் அறை ஒன்றில் அடைந்து கிடப்பவள். பாட்டி இறக்கும்போது சொல்லிவிட்டுப் போயிருந்தாள். 'தாயம்மாளைக் கடைசிவரை வைத்துக் காப்பாற்றி, கைச் செலவுக்கு மாதம் இருபது ரூபாய் தரவேண்டும்' என்று உத்தரவிட்டிருந்தாள். வைத்தியச் செலவோ, வேறு எந்தச் செலவோ வைக்காது, தன்பாட்டில் ஒரு புறம் ஒதுங்கிக் கிடந்த அந்தக் கிழவிக்கு ஒரு பிடி சோறு போட அம்மா முணுமுணுத்ததை அவள் இதுவரை பாராட்டியதே இல்லை. இன்று அதன் அர்த்தமே அவளுக்கு வேறுகத் தொனித்தது. மணம் வேண்டும்போது உபயோகித்துக்கொண்டு, வேண்டாதபோது இலை ஓரத்தில் ஒதுக்கிவைக்கும் கறிவேப்பிலையைப் போலத் தாயம்மாள் இப்போது குடும்பத்துக்கு வேண்டாதவளாகிவிட்டாள்.

அம்மாவின் கொத்துச்சாவி இடையில் கனத்தது. சமையலறையை ஒருமுறை எட்டிப் பார்த்துவிட்டு முன்னறை விளக்கைப் பொருத்திவிட்டு வாசலில் கூர்க்கா காவல் இருப்பதைக் கண்டுவிட்டு, துணிவுடன் அவள் மாடிப்பக்கம் விரைந்தாள்.

பெற்றோர்களின் படுக்கை யறைக்குள் புகுந்து அவள் எதையும் அநாவசியமாகத் தொட்டதில்லை. ஆனால் இன்று அவள் மிகவும் துணிவுடன் அறைக் கதவை உட்புறம் சாத்திக்கொண்டு அம்மாவின் ஸ்டீல் பீரோவைத் திறந்தாள்.

மாதங்கிக்கு அம்மாவின் பழக்க வழக்கமெல்லாம் நன்ருகத் தெரியும். எதையும் அம்மா ஒழுங்காக வைத்திருப்பது வழக்கம். வெளியே உடுத்

திச் செல்ல சில சேலைகள் பெட்டி போடப்பட்டு, ஏற்ற ரவிக்கைகளுடன் பீரோவின் கம்பியில் வரிசையாக ஒருபுறம் தொங்கிக் கொண்டிருந்தன. தட்டுகளில் பல பட்டுப் புடைவைகள் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. லாக்கரில் அம்மா தன் அன்றாட உபயோகத்துக்கு என்று சில நகைகளையும், முக்கிய தஸ்தாவேஜுகள் சிலவற்றையும் வைத்திருந்தாள். அவர்கள் வீட்டில் உள்ள அத்தனை பேர்களுடைய புகைப் படங்களையும் சேகரித்து அம்மா அவற்றைத் தனித்தனியான ஆல்பங்களில் குழந்தைப் பருவத்திலிருந்து எப்போது எடுக்கப்பட்டன என்ற தேதி விவரத்துடன் ஒட்டிக் கீழ்த்தட்டில் அடுக்கி வைத்திருந்தாள்.

பிரபலத் தொழில் நிறுவனத்தைச் சேர்ந்த அவர்களது குடும்பத்தைப்பற்றி யாராவது சரித்திரம் எழுதக்கூடும், அப்போது தேவைப்படும் என்பது அம்மாவின் கனவு; அப்படி யாரும் எழுத முன்வரவில்லை. ஆனால் அந்தப் புகைப்படத் தொகுதி அவளுக்கு இப்போது தேவைப்பட்டது. கீழே தரையில் அமர்ந்துகொண்டு 'ஜகதீசன் அவர்களின் படங்கள்' என்று அம்மாவின் கையெழுத்தைக் காட்டிய பெரிய ஆல்பத்தை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினாள்.

மூன்றுமாதக் குழந்தையாகத் தரையில் தவழ்ந்ததிலிருந்து அப்பாவின் போட்டோக்கள், அவரது வளர்ச்சியையும் வாழ்க்கை நிலையையும் பிரதிபலித்தபடி பக்கங்களை நிரப்பிக் கொண்டிருப்பதைக் கண்டாள். திடீரென்று ஒரு பக்கம் வந்ததும், அவள் திகைப்புடன் விழித்தாள். அதே புகைப்படக் கடையில் எடுத்த படம், வேறு ஒரு கோணத்தில் அப்பா உட்கார்ந்திருப்பதுபோல எடுக்கப்பட்டிருந்ததைத் தவிர, பின்னால் தொங்கிய திரைச்சீலைகூட அதேதான். அடியில் அம்மாவின் கையெழுத்து, தேதி, ஆண்டு முதலியவற்றைப் பார்த்தாள். இருபத்தைந்து வருஷத்துக்கு முன் அப்பா இளைஞராக, அரும்பு மீசையுடன் கூடிய அந்தப் படத்தைப் பார்த்ததுமே மகிழ்ச்சிக்குப் பதில் மனத்தை ஒரு பயங்கர இறுக்கம் அமுக்குவதை உணர்ந்தாள்.

அந்தப் படத்தை மெல்ல ஆல்பத்திலிருந்து பெயர்த்து எடுத்துக் கொண்டு ஆல்பத்தை இருந்த இடத்தில் வைத்துப் பீரோவைப் பூட்டிக் கொண்டு தன் அறைக்குள் வந்து மேசையறையில் ஒரு புத்தகத்துக்குள் அதைச் செருகிவிட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

இரவுச் சாப்பாட்டுக்குத் தயார் செய்துகொண்டிருந்த சப்பாத்திக்குத் தொட்டுக்கொள்ளச் சப்ஜியா, தக்காளிச் சட்டினியா என்ற தீவிரப் பிரசனையில் இருந்தாள் சமையற்கார அம்மாள்:

''ஏதாவது ஒண்ணு செய்யுங்கோ. பசியா வருகிறவங்களுக்கு ருசியா தெரியப்போவுது?'' என்று கூறிவிட்டு முன்னறைக்கு வந்தாள் மாதங்கி. இங்கும் இடம் மாறி உட்கார்ந்து பத்திரிகைகளைப் புரட்டியபடி இருந்தாள். மனம் அலைபாய்ந்தது.

''சந்தேகமேயில்லை. அந்தப் போட்டோவை அப்பா பலவிதக் கோணங்களில் ஒரே நாளில் அந்தப் புகைப்படக் கடையில் எடுத்திருக்கிறார். அதில் ஒன்றைத்தான் அவள் அன்று ரஞ்சிதா வீட்டில் பார்த்தாள். அப்படியென்றால்?''

ரஞ்சிதாவும் அவளும் கல் விரித் தோழிகள். பி. ஏ. இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருந்தார்கள். கல்லூரியில் சேர்ந்த முதல் நாள். வீட்டிலிருந்து வரும் மாணவிகள் பகல் வேளை சாப்பிட அமைக்கப்பட்டிருந்த கட்டிடத்துக்குள் நுழைந்து டிரைவர் வீட்டிலிருந்து கொண்டுவந்து மேஜைமீது வைத்த டிபன் செட்டைத் திறக்க முயன்றபோது, எதிரே இன்னோர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்ட பெண்ணை அவள் கவனித்தாள். காகிதப் பொட்டலத்தைத் திறந்து அதினுள்ளிருந்த புரசு இலையில் சுருட்டப்பட்ட தயிர் சாதத்தை அவள் பிரித்துக் கொண்டிருந்தாள். எங்கேயோ பார்த்த முகம்போல் தெரிந்த அந்தப் பெண்ணை முதல் நாளே மாதங்கிக்குப் பிடித்துவிட்டது.

''ரஞ்சிதான்னு பெயரா? என் குரூப்பேதானா? பலே பலே. தயிர் சாதத்தைப் பார்த்தாலே என் வாய் ஊறிப் போகுதே! எனக்கும் கொஞ்சம் கொடேன்'' என்று கையை நீட்டி மாதங்கி கேட்டபோது, ரஞ்சிதாவின் முகம் செவேலென்று ஆகியது. ''ரொம்ப ருசியா இருக்கே'' என்று சப்புக் கொட்டினாள் மாதங்கி.

''என் பாட்டி சமையலில் ரொம்பத் திறமைசாலி. ஏனென்றால் அவங்க ஒரு வீட்டில் பல வருஷங்களாகச் சமையல் வேலை செய்து கொண்டிருக்காங்க. என்னைப் படிக்க வைக்கக்கொஞ்சம் சிரமப்படுறாங்க.''

அனுதாபமோ, அன்போ இனம் காணாத உணர்வில் மாதங்கியின்

மனம் அவள்பால் ஈர்ப்புற்றது.

கள்ளம் கபடின்றி உள்ளதை உள்ளபடி பேசிய அவளிடம் மிகவும் நெருங்கிப் பழகத் தொடங்கினாள். ஒருவர் வீட்டு உணவை மற்றவர் பகிர்ந்துகொண்டு சாப்பிட்டு, பாடங்களைப் பற்றிப் பேசி, படித்ததைப்பற்றிச் சொல்லிக் கொண்டு மிகவும் அன்போடு பழகித் தோழிகளாக இணைந்துவிட்டனர்.

''இத்தனை நெருக்கமா நாம் பழகுகிறோம். என் வீட்டுக்குக் கூப்பிட்டா நீ வரமாட்டேங்கிறே? உன் வீட்டுக்கும் என்னை அழைச்சிட்டுப் போக மறுக்கிறே. இது என்ன பிடிவாதம்?'' ரஞ்சிதாவை அவள் ஒரு நாள் அதட்டினாள்.

ரஞ்சிதா அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''மாதங்கி, உங்களைப் போன்ற உயர்ந்தவர்கள் விட்டுக்கு வர எனக்கு அந்தஸ்துப் போதாது. உன்னை என் வீட்டுக்கு அழைக்க நான் தகுதியில்லாதவ. நாங்க ஒண்டுக் குடித்தனத்திலே வசிக்கிறோம். நீ பங்களாவில்.''

''சே! இவ்வளவுதானா உன் அறிவு? நட்புக்கும் காதலுக்கும் முன் பணம், அந்தஸ்து இதெல்லாம் தூசிக்குச் சமம் இல்லையா? குசேலரும் கண்ணனும் எப்படித் தோழர்களாக இருந்தார்கள் என்பதைச் சின்ன வயதிலிருந்தே கதைகளில் படித்திருக்கிறோமே! அதுகூட உனக்கு மறந்து போச்சா? இன்னிக்கு நம் கல்லூரியில் ஒரு பட்டிமன்றம் இருக்கு. அது முடிய நேரமாகும். போகும் போது உன்னை உன் வீட்டில் எங்கள் காரில் விட்டுட்டுத்தான் போகப் போறேன். நீ மறுக்க முடியாது.'' வற்புறுத்தலாக அடித்துப் பேசினாள் மாதங்கி.

திருவல்லிக்கேணியிலிருந்த அந்த அகன்ற தெருக்களின் இடையே உள்ளே ஓடிய குறுகலான நாச்சியப்பன் தெருவுக்குள் போக டிரைவருக்குச் சிரமமாக இருந்தது. ''தெரு ஓரத்திலே வண்டியை நிறுத்திக்கிறேன். நீங்க போய்விட்டு வாங்க'' என்று முணுமுணுத்தார்.

மாதங்கிக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. ரஞ்சிதாவின் கையைப் பற்றிக்கொண்டு இறங்கி, மற்றொரு கரத்தால் புடைவை ஓரத்தைத் தூக்கிப் பிடித்தபடி தெருவுக்குள் நடந்தாள். தெரு மிகவும் சிறியது. குப்பையும் அசிங்கங்களுமாக மிகவும் அருவருப்பைத் தந்தது.

பாவம்! ஏழையாக இருப்பதால் தானே இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரஞ்சிதா வசிக்கிறாள் என்று அனுதாபப்பட்டபடி, அந்த ஓட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். முன்பக்கப் பகுதியில் ரஞ்சிதாவும், பாட்டியும் வசித்தனர். பின்னால் மூன்று குடித்தனங்கள். அரை அம்மணக்கோலத்திலே சில குழந்தைகள். எல்லோருக்கும் பொதுவான முற்றத்தில் இறங்கி இரும்பு வாளியில் வைத்திருந்த தண்ணீரில் கை கால்களைக் கழுவிக்கொண்டு தோழிக்கும் அந்த உபசரணையைத் தந்தாள் ரஞ்சிதா.

தங்கள் பகுதியை முற்றத்திலிருந்து மறைக்க உதவிய சாக்குப் படுதாவை இழுத்துவிட்டு ரஞ்சிதா, மாதங்கியைக் கூடத்தில் கிடந்த ஒரு பெஞ்சின்மீது உட்காரவைத்தாள்.

''பாட்டி வர நேரமாகும். ஆனால் எனக்குச் சாப்பிட டிபன் எடுத்து வச்சிருப்பாங்க. பார்க்கிறேன்'' என்று உள்ளே சென்றாள். இரவு படுக்கை யறையாகவும், பகலில் ஒரு மூலையைச் சமையல் அறையாகவும் உபயோகித்த அந்த அறைக்குள்ளிருந்து ஒரு தட்டை எடுத்து வந்தாள்.

''பாட்டி எனக்குச்சாப்பிட இரண்டு அடைகளைத் தட்டிவச் சுட்டுப் போயிருக்காங்க. உனக்கு ஒண்ணு, எனக்கு ஒண்ணு. இரு, குடிக்கத் தண்ணீர் கொண்டு வறேன்' 'என்று உள்ளே ஓடினாள்.

அடை நிரம்ப நன்றாக இருக்கவே, அதில் ஒன்றை எடுத்துப் பிட்டு, சுவைத்துத் தின்றாள்மாதங்கி. மற்றொன்றைத் தன்கையில் எடுத்துப் பிட்டு வேகமாகச் சாப்பிட்ட தன் தோழியை ஓரக்கண்ணால் பார்த்தாள். ஓங்கி உயரமாக, ஒடிசலாக, பார்க்கப் பளிச்சென்று இருந்தாள். வெறும் வாயில் புடைவையில்கூட அவள் நிரம்ப அழகாகத் தெரிந்தாள்.

''பி. ஏ. முடிச்சதும் என்ன செய்யப் போறே?'' கேட்டபடி கைகளைக் கழுவி வாயைத் தன் புடைவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள் மாதங்கி.

''டைப் அடிக்கக் கற்றுக்கொண்டு ஏதாவது ஓர் அலுவலகத்திலே வேலை பார்க்க ஆசைப்படறேன். என் தாயார்கூட ஓர் அலுவலகத்தில் கணக்கராக வேலைபார்த்தவங்களாப்,

74 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

- தலைவலி
- ஃப்ளு
- ஜலதோஷம்
- கைகால் வலி

முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து

சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ், டிரக் லைசென்ஸ் உள்ள வியாபாரிகள் எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதவும்

தயாரிப்பாளர்கள்:

ஆர். எஸ். பதி அன் கோ.,

214 & 215, மேலமாசி வீதி—தபால் பெட்டி எண் 99

மதுரை - 625001

‘‘வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் உகந்த தீபாவளி வாழ்த்துக்கள்’’



நெல்-கல்-குருணை-உமி நீக்கிச்
சுத்தமான அரிசி சப்ளை செய்யும்
‘‘ரைஸ் மில் பேன் பாக்ஸ் மிஷின்’’



நிலக்கடலை உடைத்து உமி உறிஞ்சும்
புது மாதிரி ‘‘ஸ்பெஷல் டைப்
நிலக்கடலை உடைப்பு மிஷின்’’

தயாரிப்பாளர்கள்:

ESTD: 1969 போன்: 3876 ஆபீஸ். 3126 வீடு.

G. A. J. நாயுடு & கோ.

மெஷினரி டீலர்ஸ்

128/19, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் 626 001

—L. ரங்கன்

ஆனுல் பாட்டி நான் உடனடியாக் கல்யாணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்கணும்னு விரும்பருங்க.''

''நீ வேலைக்குப் போனுல் குடும்பத்துக்குக் கொஞ்சம் உபகாரமாக இருக்குமே!''

''பாட்டிக்கு இஷ்டமில்லே. நான் பிறந்தவுடனேயே எங்கம்மா இறந்து போயிட்டாங்க.''

''உங்கப்பா என்ன வேலை செய்கிருர்?''

''அவரும் சின்ன வயசிலேயே போயிட்டாராம். நான் என் பெற்ருேர்களின் போட்டோதான் பார்த்திருக்கேன்'' என்று கூறிய ரஞ்சிதா கைகளைக் கழுவிக்கொண்டு விரைந்து வந்தாள்.

''இரு. உனக்குக் காட்டறேன்.'' என்று உற்சாகத்துடன் உள்ளே சென்று தன் தகரப் பெட்டியைத் திறந்து புடைவைகளை நகர்த்திவிட்டு அடியில் கிடந்த இரண்டு புகைப் படங்களை எடுத்து வந்தாள்.

''இவங்கதான் அம்மா. பேர் தேவகி. என்னைப் பெற்றதும் ஜன்னி கண்டு செத்துட்டாங்க'' என்றபடி ஓர் இளம் பெண்ணின் பழுப்பேறிய போட்டோ ஒன்றை அவள் முன் நீட்டினுள்.

''இவர்தான் என் அப்பா'' என்று அவள் அடுத்தபடியாகக் காட்டின புகைப் படத்தைக் கையில் வாங்கியதும் மாதங்கிக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது.'' இவரா உன் அப்பா? பெயர் என்ன?''

''அம்மாவுடைய பழைய புடைவை ஒன்றின் மடிப்பில் இதை நான் ஏதேச்சயாக்கண்டுபிடித்தேன். பாட்டிகிட்டே காட்டினபோது அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. 'இந்தப் பாவிதான் உன் அப்பன். சின்ன வயசிலேயே நம்மையெல்லாம் தவிக்கவிட்டுச் செத்து ஒழிஞ்சு போனுன். அந்தப் போட்டோவைக் கிழிச்சுக் குப்பைத் தொட்டியில் போடு' என்று கத்தினுங்க. ஆனுல் நான் பத்திரமா அவர்களுக்குத் தெரியாம வெச்சிருக்கேன்.''

ஆயிரம் வேல்களைத் தன் நெஞ்சுக்குள் யாரோ செருகி விட்ட வேதனையில் துடிதுடித்துப் போனுள் மாதங்கி.

''சரி நான வரேன்'' என்று விடை பெற்றுக் கொண்டு கிளம்பியவளுக்கு மனத்தில் எத்தனை பெரிய அதிர்ச்சி! உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஒரு துடிப்பு.

பின்னுலிருந்த அவுட் ஹவுஸ் அறையிலிருந்து தாயம்மா மணியடிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

''அதுக்குள்ளே தாயம்மா தந்தியடிச்சுட்டாங்க'' என்று சமையற்காரம்மாள் முணுமுணுத்ததும் மாதங்கி குறுக்கிட்டாள்.

''வேண்டாம். நீங்க அலட்டிக்காதீங்க. தட்டில் எல்லாத்தையும் போட்டுக் கொடுங்க. நான் கொண்டு கொடுக்கிறேன.''

''உனக்கேன் அம்மா இந்த வேலை?''

''ஒரு நாள் நானும் தாயம்மா போல கிழவியாகத்தானே போறேன்? அப்போ பசிவந்தா இப்படித்தானே தவிப்பேன்?''

''உன் இஷ்டம்'' என்றபடி சமையற்கார அம்மாள் ஸ்டீல் தட்டில் சோற்றைப் போட்டுக் குழம்பை ஊற்றிப் பொரியலை ஒருபக்கம் வைத்தாள். ஒரு தம்ளரில் மோரை நிறைத்துக் கொடுத்தாள்.

அவற்றைத் தூக்கிக் கொண்டு தாயம்மாளைத் தேடிப் பின் பக்கம் சென்ருள் மாதங்கி.

மங்கலாக எரிந்த விளக்கொளியில் ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது கிழித்த நாராக ஒரு கிழிந்த பழைய சேலையில் வறுமையும் வயோதிகமும் போட்டியிட்ட நிலையில் அமர்ந்திருந்தாள் தாயம்மா.

''யாரு அது, மாதங்கிப் பாப்பாவா?'' அவளுடைய கண்கள் விரிந்தன.

''நீயா கண்ணு எனக்குச் சோறு கொண்டு வந்தே? கொடு, என் செல்ல ராசாத்தி!'' என்று மகிழ்ச்சியுடன் கையை நீட்டித் தட்டைப் பெற்றுக்கொண்டாள்.

சோறு குழம்பு எல்லாவற்றையும் தன் அலுமினியத் தட்டில் போட்டுக் குழைத்துக்கொண்டு ஆவலுடன் புசிக்கலானுள். மோரைக் குடித்துவிட்டு மாதங்கி ஊற்றிய நீரில் கையைக் கழுவி வாயைத் துடைத்துக் கொண்ட கிழவி, நன்றி பொங்க வீட்டு எஜமானரின் செல்வ மகளை நிமிர்ந்து பார்த்தாள்.

''உன்னைப் பார்ப்போமான்னு நான் நினைச்சுட்டு இருந்தேன். அந்த வேலைக்கார வள்ளிகிட்டே கூடச் சொல்லியனுப்பினேன். அவ சொல்லவேயில்லே போலிருக்கு. நீ இன்னிக்கு வந்தது நல்லதாப் போச்சு. எனக்கு ஒரு உதவி செய்வியா?''

''செய்யறேன் பாட்டி.''

தலையணை அடியில் வைத்திருந்த கற்றை ரூபாய் நோட்டுகளைத் துழாவி எடுத்தாள் தாயம்மாள்.

''எனக்கு மாசம் இருபது ரூபா உங்க வீட்டிலே தராங்க இல்லையா? எட்டு மாசமாச் சேர்த்து வச்ச பணம் இதில் நுாத்து அறுபது ரூபா இருக்கு. பார்த்துக்கோ. இதைக் கொண்டு போய்த் திருவல்லிக்கேணி நாச்சியப்பன தெருவில் ஏழாம் எண் வீட்டில் இருக்கிற பகவதி அம்மா கிட்டே குடுத்துடு. தீபாவளி நெருக்கத்திலே ரஞ்சிதாவுக்கு ஏதாச்சும் வாங்கித் தர உதவும்.''

திடுக்கிட்டுப் போனுள் மாதங்கி. ''அவங்க உங்களுக்கு உறவுக்காரங்களா பாட்டி?''

திடீரென்று தாயம்மாள் தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டு உரத்துச் சிரித்தாள். ''இனி நான் ரொம்ப நாள் உயிரோட இருக்கமாட்டேன். அதனுலே உண்மையை உன்கிட்ட சொல்லிடறேன். தெம்பு இருந்தப்போ எனக்குக் கெடைச்ச இருபது ரூபாயிலே அஞ்சைச் செலவுக்கு எடுத்துக்கிட்டு மீதிப் பதினைஞ்சு ரூபாயை மாசந்தோறும் பகவதி வீட்டுக்குப் போய்க் குடுத்துட்டு வறது வழக்கம். இப்ப முடியலே. பகவதியோ அவ மகளோ எனக்குச் சொந்தமும் இல்லே, பந்தமும் இல்லே. எங்க ஊர்க்காரி; அவ்வளவுதான். உனக்குத்தான் அக்கா உறவு.''

''தாயம்மா, என்ன சொல்றீங்க?'' மாதங்கியின் முகம் சிவந்தது.

''உண்மையைச் சொன்னேன். மனசிலே பூட்டி வச்சுண்டு இந்த ரகசியத்தோட மண்ணுக்குப் போக பிரியமில்லே. பகவதி எங்க கிராமத்திலே ஒரே தெருவில் வாழ்ந்த எதிர் வீட்டுக்காரி. நாங்க தாயா புள்ளையாப் பழகினவங்க. அவளுக்குத் தேவகின்னு தங்கச் சிலையாட்டம் ஒரு பொண்ணு இருந்தா. பக்கத்து டவுன் பள்ளிக் கூடத்திலே பத்தாவது வரை படிச்சா. மெட்ராஸ் வந்தாப் பிழைச்சுக்கலாம்னு, நானும் அவளும் கிளம்பி வந்தோம். நான் உங்க வீட்லே எடுபிடி ஆளா அமர்ந்தேன். அவ ஒரு பெரிய மனிதர் வீட்டிலே சமையல் ஆளா வேலைக்குப் போனு. அந்தப் பெரிய மனுஷன் தயவிலே தேவகிக்கு ஒரு கம்பெனியிலே கணக்கர் வேலை கிடைச்சது. அவரால் ஆன உபகாரத்தை அவர் செய்தார். ஆனு, தேவகி தலை எழுத்து வேருக இருந்ததே. கம்பெனி முதலாளி மகன் அவள் அழகிலே மயங்கிட்டான். கல்யாணம் கட்டிப்பான்னு தேவகியும் நம்பிட்டா. விளைவு? வயித்திலே குழந்தையோடே தாயும் மகளும் கிராமத்துக்கு ஓடி ஒளிய வேண்டி வந்திச்சு. அங்கே ஏதேதோ கதை சொல்லி விஷயத்தை அமுக்கிட்டா பகவதி. ஆனுல் ரஞ்சிதா பிறந்த பத்தாம் நாள் ஜன்னி கண்டு தாய் இறந்துட்டா. பச்சைப் புள்ளையைக் கையில் தூக்கிட்டு, பாவம்,

''பட்டாஸெல்லாம் எங்கிட்டே கொடுத்து, வாசல்லே போய் வெடிடான்னுட்டா அம்மா, அக்காவும், அத்தானும்.''

பகவதி மறுபடி வேலையைத் தேடிப் பட்டணம் வந்தா. எதேச்செயா ஒரு நாள் அவளை நான் பார்த்து விட்டு இரக்கப்பட்டுச் சமையலுக்கு ஒரு இடம் பிடிச்சுக் குடுத்தேன். எனக்கு வந்த பணத்தை அந்தக் குழந்தை படிப்புக்குக் குடுத்து உதவினேன். பகவதிக்கு இந்த வீட்டு முகவரி தெரியாது. நான் வேணுமின்னே கொடுக்கலே. எதுக்கு வீண் வம்புன்னு பேசாம இருந்திட்டேன். எப்படியோ என் மூலமா உன் வீட்டுப் பணம் உன் அக்காவுக்குத் துளி கிடைக்குதே! அது போறாதா?'' கிழவி மூச்சு விடாது பேசிவிட்டு ஆயாசத்துடன் பணத்தை அவள் கையில் வைத்துவிட்டுக் கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

நூற்று அறுபது ரூபாய்களுடன் பல ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தக் கசப்பான சம்பவத்தின் சுமையில்! நெஞ்சு அசைக்க உள்ளே வந்தாள் மாதங்கி.

''இந்தப் புடவைய உனக்குன்னு வாங்கினேன். இந்த ரவிக்கைத் துண்டைத் தேடிப் பிடிச்சு வாங்க ரொம்ப வே அலைஞ்சுட்டேன்.'' அம்மா கலகலவென்று சிரித்ததை அவளால் ரசிக்க முடியவில்லை.

''அட! நம்ப மாதங்கிக்கு இந்தப் புடவை ஜோரரா இருக்கே!''

அப்பா சொல்லிக் கொண்டு அருகில் வந்து வழக்கம் போல அவள் கன்னத்தைத் தடவிக் கொஞ்சியபோது மாதங்கியின் உடல் நெருப்பாக எரிந்தது.

தீபாவளிக்கு முதல் நாள். அம்மா தேள் கொட்டியதுபோல அலறினாள். ரவிக்கைகூடத் தையல் கடையிலிருந்து வந்துவிட்டது. ''மேஜைமேலே வைத்த புடைவைகளில் மாதங்கியினுடையதைக் காணவில்லையே? யார் எடுத்தாங்க?''

''நான்தான் எடுத்துக் கொண்டு கடைக்குப் போய் அதுக்கு ஜோடியாக ரவிக்கைத் துண்டு வாங்கி ரெண்டையும் அக்காவுக்கு தீபாவளிப் பரிசாகக் குடுத்துட்டு வந்தேன்.'' மாதங்கி நிதானமாகச் சொன்னபோது சாப்பாட்டு அறையில் அமர்ந்திருந்த அப்பா திடுக்கிட்டு உள்ளே வந்தார்.

''யார் அந்த அக்கா?'' அம்மாவும் அப்பாவும் ஏககாலத்தில் அதட்டினர்.

''திருவல்லிக்கேணி பகவதி அம்மாவோட பேத்தி. தேவகியின் மகள், என் வகுப்புத் தோழி ரஞ்சிதா. எனக்கு முன் இந்த அப்பாவுக்குப் பிறந்த மகள்.''

''இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?'' அம்மா கோபாவேசமாகக் கேட்டாள்.

''புதைபொருள் ஆராய்ச்சிசெய்து ரெண்டாயிரம் வருஷங்களுக்கு முந்திய நாகரிகத்தைக் கண்டுபிடிப்பது சாத்தியப்படும்போது இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன் நடந்த சில சங்கதிகளைத் தெரிஞ்சுக்க முடியாதா?''

சுற்றும் முற்றும் பார்த்த அம்மா கணவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மகள் பக்கம் சீற்றத்துடன் திரும்பினாள்.

''இதெல்லாம் என்ன?'' அதட்டினாள் அம்மா.

''வயது ஏற ஏற நியாயம் என்பது மறைந்து மனிதர்கள் யந்திரமாக மாறிடறாங்க. சின்னவங்களான நாங்கள் மனிதாபிமானத்தோட இருப்பதால் நியாயத்தை எங்களால் அணுக முடிகிறது. இதைத்தான் தலைமுறை இடைவெளி என்கிறார்கள். என் அக்கா ரஞ்சிதாவுக்குத் தக்க இடத்தில் வரன் தேடி அவளை நன்றாக வாழ வைக்க அப்பா ஒப்புக்கொண்டால் நான் உங்களோட தீபாவளி கொண்டாட ஒப்புக்குவேன். இல்லாட்டா.''

இழுத்து அணைத்துக்கொண்டபடி, ''குழந்தை, நம் வீட்டில் ரஞ்சிதாவும் வந்து தீபாவளியைக் கொண்டாட அனுமதிக்கிறேன்: ஆனால் உண்மை சம்பந்தப்பட்டவர்களோட மட்டும் இருக்கட்டும்... அதுக்கு நீ உதவணும்'' என்ற அப்பா தழுதழுத்தார். மாதங்கி மகிழ்ச்சியுடன் தலையசைத்தாள். ❋

பார்ட்னர்கள்: C. வீராசாமி போன்: 3126 V. ஜனார்த்தனன் போன்: 4455
ஆபீஸ்: 167, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர்- 626001

பக்தையைக் காத்த பரந்தாமன்

வீரமும் நாட்டுப்பற்றும் இறையுணர்வும் மலிந்த ராஜபுத்திர நாட்டு மண்ணில் பக்தி பயிருக்கும் குறைவு இல்லை.

மாதவசிங் என்ற ராஜபுத்திர வீரர்; சிற்றரசர். அவர் மனைவியின் பெயர் குணபாய். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள இரண்டு ஆயாக்களை நியமித்தான் மன்னன். அந்த ஆயாக்களில் ஒருத்தி எப்போதும் 'கிரிதர கோபாலா!' என்று நாமஸ்மரணை செய்தபடி இருந்தாள். இதைக் கண்ட அரசி குணபாய், 'ஒரு வேலைக்காரி, தன் வேலைகளுக்கிடையில் நாமஸ்மரணை செய்வது சாத்தியமானால், நம்மைப் போன்றவர் சிறந்த முறையில் பூஜை செய்யலாமே!' என்று எண்ணினாள்.

திருமகளை மார்பிலே கொண்ட திருமால் விக்கிரகத்தையும், கண்ணன் விக்கிரகத்தையும் வாங்கி, பெரிய பூஜை அறை நிர்மாணித்து, விஸ்தாரமாகப் பூஜையும் நாம சங்கீர்த்தனமும் செய்யத் தொடங்கினாள். அரண்மனைக்குள் நிறையப் பாகவத உத்தமர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

அரசியின் இந்தப் போக்கு மன்னனை வருந்தச் செய்தது. ''அரண்மனையைப் பஜனை மடமாக மாற்றி விடுவாய் போலிருக்கிறதே! அரசிபோல் உடை அணியாமல், இது என்ன கோலம்? அணிமணிகள் எங்கே? எப்போதும் என்ன பூஜை?'' என்று மிரட்டினான்.

''இறைவனை எண்ணி ஸ்மரிப்பதைத் தவிர என் மனத்தில் வேறு எண்ணங்கள் ஆசைகள் உண்டாகவில்லை.''

''இவ்வளவு வைராக்கியம் வந்துவிட்டதா? கணவனை உபசரிக்காமல், குழந்தைகளைக் கவனிக்காமல் என்ன பூஜை? எதற்கும் ஓர் அளவு வேண்டும். எனக்குக் கோபம் வந்தால் என்ன செய்வேன் தெரியுமா?'' என்றான் மன்னன் கோபத்துடன் பயந்து போன குணபாய் கண்களை மூடிக்கொண்டு பகவானைத் தியானித்தாள். சங்கு சக்ர கதாபாணியாய் இறைவன் அவள் அகக் கண்ணில் தோன்றி, ''அஞ்சாதே, உன்னைக் காப்பேன்'' என்று அபயம் அளித்தான். தன்னை அவமதித்தே அவள் கண்ணை மூடிப் பாசாங்கு செய்கிறாள் என்று எண்ணிய மன்னன், ''மேலும் இப்படி நடந்தால், உன் பூஜையறை தரைமட்டமாகிவிடும். யாரும் பாகவதர்கள் உள்ளே வரக்கூடாது'' என்று கூறிவிட்டு அகன்றான். அரண்மனைக் காவலர்களிடமும் யாரையும் உள்ளே விடவேண்டாம் என்று கூறிவிட்டான்.

அதுமுதல் குணபாயே காலையில் குளித்து முடித்து, வாசலுக்குப் போய, பாகவத உத்தமர்களை, சுமங்கலிப் பெண்களை உள்ளே அழைத்து வந்து, பூஜைகளைத் தொடர்ந்தாள்.

மன்னனுக்குத் தாங்காத கோபம். தன் மனைவியைக் கொலை செய்து விடும்படி நான்கு ஆட்களிடம் ரகசியமாகக் கூறிவிட்டு, காட்டுக்கு வேட்டையாடச் சென்று விடுகிறான்.

குண்டர்களான நான்கு பேர் அந்தப்புரத்துக்குள் நுழைகிறார்கள். குணபாய், மலர்களால் இறைவனை அர்ச்சித்துக் கொண்டிருக்கிறாள். வத்தி மணம் பரப்புகிறது. தாமரை மாலை நிலைமாலையாகக் கண்ணைக் கவர்கிறது. அந்தக் காட்சி ஒரு கொலையாளியின் மனத்தை மாற்றி விடுகிறது. ஆனால் மற்ற மூவரும் தயங்காமல், தாங்கள் வந்த காரியத்தை நிறைவேற்ற முன்னேறுகிறார்கள். குணபாய் கர்ப்பூர ஹாரத்தி எடுக்கிறாள். வந்திருக்கும் குண்டர்களைப்பற்றி அவளுக்குத் தெரியவே தெரியாது. கர்ப்பூர ஹாரத்தியில், திவ்யமங்கள ஜோதியாய் விளங்கும் திருமாலை நன்கு பார்க்கிறாள். ஆனால், மின்னல் போல ஓர் ஒளிக்கீற்று விக்கிரகத்திலிருந்து பளிச்சிடுகிறது. வரிப்புலி ஒன்று வாசற்படி அருகில் பாய்ந்து செல்கிறது. அந்தக் குண்டர்களை அறைந்து கொல்கிறது.

இதைக் கவனிக்காத குணபாய், ''ஸ்வாமி! இப்போது சார்தூல வடிவம் எதற்கு?'' என்று வினவுகிறாள் இறைவனை. புலியின் உறுமல் கேட்டு வந்தவர்களும் குணபாயும் திரும்பிப் பார்க்க நால்வர் மாண்டு கிடப்பதைப் பார்க்கிறார்கள். குணபாயின் பக்தி ஊர் முழுதும் பரவுகிறது. வேட்டைக்குப் போன மன்னனுக்கும் தெரிகிறது. ''உன் அருமை தெரியாமல் உன்னைத் தண்டிக்க நினைத்த என் பிழையைப் பொறுத்தருள். உன்னைத் தரிசிக்க இதோ வந்து கொண்டிருக்கிறேன்'' என்று குதிரையாள் மூலம் முன்னதாகவே செய்தி சொல்லியனுப்புகிறான்.

மன்னன் திரும்பும்போது, ஒரு காட்டாற்றைப் படகில் கடக்கும்போது, படகு சுழி ஒன்றில் அகப்பட்டுக் கொள்கிறது. 'பக்தையான மனைவியைத் தரிசிக்காமல் இறந்து விடுவேனோ?' என்று கண்ணீர் மல்க வேண்டுகிறான். அந்தச் சமயத்தில் பக்கத்தே வந்த பெரிய படகில் புதியவன் ஒருவன் உதவியுடன் தாவி உயிர் பிழைக்கிறான்.

அரண்மனை வந்ததும், படகு சம்பவத்தை மனைவியிடம் கூறி, அவள் பக்தியைப் பாராட்டி, தன்னை மன்னிக்கும்படி வேண்டுகிறான். ''கணவன்தான் மனைவிக்குத் தெய்வம். தங்களுக்குச் சேவை செய்தால் இறையருளும் பூர்ணமாகும்'' என்று கூறிக் கணவனை வணங்குகிறாள் குணபாய்.

முன்னைவிடப் பலமடங்கு சிறப்பாய்ப் பூஜைகள் நடக்கின்றன. நிதம் பல பக்தர்கள் பூஜையில் வந்து கலந்து கொள்கிறார்கள். அறுசுவை உணவும் கிடைக்கிறது. அரசனும், தன் ஆட்சியை இரு மகன்களிடமும் கொடுத்துவிட்டு, பரம பக்தனாக மாறுகிறான். குணபாயின் பக்தியையும் குணத்தையும் கண்டு மக்கள் அவளை 'உலக மாதா'வாகவே எண்ணிப் போற்றுகிறார்கள். இந்தப் பக்தையின் கதை அடுத்து வண்ணத்திலே மிளிர்கிறது. *



கலைமகள் - தீபாவளி மலர். 1983



எவ்வகை உணவாயினும்
அதனை முழுமையாக்குவது
டி.எஸ்.ஆர். ஊறுகாய்களே!

புதிய
கிடாரங்காய்
ஊறுகாய்

டி.எஸ்.ஆர்

டி.எஸ்.ஆர். & கோ.
''கோகுல் கார்டன்ஸ்''
கும்பகோணம்.

Criterion T.S.R. 3750

Arasan

TRAILERS

- Low centre of gravity and loading height for greater stability and safety
- Sturdy all welded steel construction to withstand on the roughest farm roads
- Jolt free smooth running and easy turning
- Versatile and readily suits tractors with different hitching heights
- No unwanted weight and saves on fuel too



Arasan

Arasan and Company

Works: 51, High Road, Tirunelveli - 1

Madras - Bangalore - Madurai - Hyderabad

மனைவியின் மாண்பு

மாயாவி

'**த**ங்களிடம் வந்து சில மாசங்களாவது தங்கியிருக்க வேண்டும் என்று கோலாப்பூரில் தொழில் நடத்தி வந்த இளைய மகன் வற்புறுத்திப் பல கடிதங்கள் எழுதியதால் நானும் என் மனைவியும் அங்கே புறப்பட்டபோது, மற்றக் கவலைகளை விடப் பெரிதாக எனக்கு ஏற்பட்ட கவலை, 'பாஷை தெரியாத ஊரில் மாசக் கணக்கில் பொழுதைத் தள்ளுவது எப்படி?' என்பதுதான். ஆனால் அந்தக் கவலையைக் கோலாப்பூரில் அடியெடுத்து வைத்ததுமே போக்கி விட்டார் டாக்டர் கதம்.

ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆட்டோவில் மகன் குடியிருந்த புறநகர்ப் பகுதியான விஜய் நகர் காலனி வீட்டு வாசலில் வந்து இறங்கியதும், ''வருக! வருக! எங்கள் ஒப்பற்ற இலககிய கர்த்தா காண்டேகர் அவர்களுக்கு எங்களை விட அதிகமான பெயரும் புகழும் அளித்த தமிழ் மண்ணின் இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவரே, தங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று அகமும் முகமும் மலர ஆங்கிலத்தில் வரவேற்ற அந்த மராட்டியக் கனவான் யாரென்று தெரியாமல் நான் திகைத்தேன். என் இளைய மகன் வெங்கடேஷ், ''மாமா, (என குழந்தைகள் என்னை அப்படித்தான் அழைப்பார்கள்). இவர் டாக்டர்; இவரும் ஓர் எழுத்தாளர். மராட்டியிலும் ஆங்கிலத்திலும் கதை, கட்டுரைகள், கவிதை எழுதி வருபவர். உங்களைப் பற்றியும் நீங்கள் இங்கே வர இருப்பது பற்றியும் சொல்லியிருந்தேன். இனம் இனத்தைக் கண்டதும் இன்பம் பொங்க வரவேற்கிறது'' என்றான்.

டாக்டர் யஷ்வந்த் ராவ் கதம் சக எழுத்தாளராக இருந்ததோடு என் மகன் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரார். அதே வீட்டின் ஒரு பகுதியை என் மகனுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு, மற்ற இரண்டு பகுதிகளுள் ஒன்றில் தம் டிஸ்பென்ஸரியை நடத்தி வந்ததோடு, மற்றொரு பகுதியில் தம் பெரிய குடும்பத்துடன் வாழ்ந்தும் வந்தார். அதனால் எனக்கு ஓர் இணைபிரியாப் பேச்சுத் துணைவராகவே ஆகிவிட்டார்.

வீட்டுக்குள் நுழைந்ததும் டாக்டர் கதம் சொன்னார்: ''இவ்வூரில் பொழுதை எப்படிப் போக்குவது என்று நீங்கள் கவலைப்பட்டதாக வெங்கடேஷ் சொன்னார். அந்தக் கவலை இனி உங்களுக்கு வேண்டாம். உங்கள் பிள்ளை தொழில் நிமித்தம் வெளியே போய் விட்டாலும் நான் இருபத்து நான்கு மணிநேரமும் இங்கேயே இருப்பவன். இலக்கிய ரசனை உடையவன். உங்கள் தமிழ் இலக்கிய உலகம் பற்றி அறிந்து கொள்ளவும், எங்கள் மராட்டி இலக்கிய உலகம் பற்றிக் கூறவும் விழைபவன். 'டிஸ்பென்ஷரி நேரத்தில் வந்து தொல்லை கொடுப்பதா?' என்று தயங்க வேண்டாம். உங்களிடம் பேசிக்கொண்டோ, அல்லது நீங்கள் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டோ, என் வைத்தியத் தொழிலை நான் செய்வேன்.''

இவ்வளவு தூரம் 'லைசென்ஸ் கிடைத்துவிட்ட பிறகு எனக்கு வேறு என்ன பேறு வேண்டும்? டாக்டர் கதமுடன் அட்டையாக ஒட்டிக் கொண்டேன். இலக்கியப் பரிவர்த்தனையில்பொழுது போனதே தெரியவில்லை.

ஒரு நாள் டாக்டர் கதமின டிஸ்பென்ஸரியில் ஓர் ஓரமாக அமர்ந்து அவருடன உரையாடிக் கொண்டிருந்தேன். அன்று நாங்கள், இந்தப் பாரத மண்ணுக்கே உரிய தனிப்பட்ட மாண்பு பற்றியும், அதை அடிப்படையாகக் கொண்டும், அது வளர்ச்சி பெறும் முறை பற்றி எழுத்தாளர்கள் எழுதி வருவது பற்றியும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்தோம். என்னுடன் பேசியபடி டாக்டர் கதம் நோயாளிகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

போழுது! நண்பகல் பன்னிரண்டு மணியை நெருங்கியது. கடைசி நோயாளியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்தக் கடைசி நோயாளி ஒரு பெண். சமீபத்தில் மகப்பேறு பெற்றவள் போலும்! பச்சைக் குழந்தை ஒன்றைக் கைகளில் ஏந்தியபடி அவளுடைய கணவரும் (அவருக்குக் கால் சற்றே ஊனம் போல் தோன்றியது) உடன் வந்திருந்தார். இந்த நோயாளிப் பெண், டாக்டருக்கு நெருங்கிய பழக்கமுள்ளவளாகவோ, அல்லது கிட்டத்து உறவினளாகவோ இருக்க வேண்டும். ஏனென்றால், சிகிச்சை முடிந்த பிறகும் அவள், அவளுடைய கணவர், டாக்டர் கதம் ஆகிய மூவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் மராட்டி மொழியில் பேசியதால், எனக்குப் புரியவில்லை.

அவர்களை அனுப்பியபின் டாக்டர் என்னை நோக்கி ஒரு புன்சிரிப்பை உதிர்த்தார்.

''ஏன் இந்த மலர்ச்சி டாக்டர்?'' என்று கேட்டேன்.

''நாம் இன்று விவாதித்த பாரத மண்ணின் மாண்புக்கு இந்தப் பெண் ஒரு சிறந்த உதாரணம். இவளுடைய கதை, கற்பனையான நம் கதைகளை விட மிக விசித்திரமானது; பாரத மண்ணின் மாண்பை வெளிப்படுத்துவது! கேட்கிறீர்களா?'' என்ற முன்னுரையுடன் டாக்டர் வினவினார்.

''காத்திருக்கிறேன்'' என்றேன். கரும்பு தின்னக் கசக்கவா செய்யும்?

டாக்டர் கூறத் தொடங்கினார்:

அப்பொழுது நான் இங்கே இந்த வீட்டைக் கட்டவில்லை. டவுனில் ராஜாராம்புரியில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தபடி ஷாஹுபுரியில் மற்றொரு டாக்டருடன் கூட்டாக ஒரு நர்ஸிங்ஹோம் நடத்திக் கொண்டிருந்தேன்.

நானும் என் மனைவி நர்மதாவும் குடும்பக் கட்டுப்பாட்டை அவ்வளவாகப் பொருட்படுத்தாதவர்கள். எனவே அப்போதே எனக்கு

ஏழு குழந்தைகள். என் மனைவியால் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு குழந்தைகளின் படிப்பு விஷயத்திலும் கவனம் செலுத்த முடியவில்லை. எனக்கோ அப்போதெல்லாம் நர்ஸிங்ஹோம் வேலையே சரியாக இருக்கும். ஆதலால் என் குழந்தைகள் படிப்பில் மிகவும் பின் தங்கி இருந்தனர். ட்யூஷன் ஆசிரியரை அமர்த்த நாங்கள் முடிவு செய்திருந்த சமயத்தில், ஒரு பெண் என்னைத் தேடி வந்தாள்.

''நான் ஓர் அநாதை. கணவரின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் அவரைப் பிரிந்து வந்து விட்டேன். ஆசிரியைப் பயிற்சியை முடித்துவிட்டு வேலை தேடிக்கோலாப்பூருக்கு வந்தேன். வேலை கிடைக்கவில்லை. உங்களுக்கு இந்த நகரத்துப் பிரமுகர்கள் பலரைத் தெரியும் என்று கேள்விப்பட்டேன். நான்கு பெரிய மனிதர் வீட்டுக் குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுக்க எற்பாடு செய்து இந்த அநாதை பிழைக்க உதவ வேண்டும்'' என்றாள் அந்தப் பெண்.

நான் அவளை ஒரு தடவை கூர்ந்து நோக்கினேன். இருபது இருபத்தி இரண்டு வயதுடைய அழகிய பெண் அவள். 'இத்தனை இளம் வயசில் கணவனைப் பிரிந்து தனித்து வாழத் துணிந்திருக்கிறாளே! இன்னலின்றி வாழ முடியுமா?' என்ற சிந்தனை என் மனசில் உண்டாயிற்று. ஆயினும் நான் என் மனநிலையைப் பவானியிடம் (ஆம்; அது தான் அவள் பெயர்) வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. என் குழந்தைகளின் படிப்பை மட்டும் கவனித்துக் கொண்டால் போதுமென்று பவானியை வேலைக்கு அமர்த்திக் கொண்டேன்.

இரண்டு தெரு தள்ளித் தனியே வாழ்ந்து வந்த கிழத் தம்பதியர் வீட்டில் வசிக்கவும், அவள் கண்ணியமாக வாழப் போதுமான ஊதியமும் அளித்தேன். பிறகு பவானிக்கும் அவள் கணவனுக்கும் இடையேயுள்ள பிணக்கைத் தீர்த்து வைக்க எண்ணி, மெல்ல மெல்ல நானும் என் மனைவியும் அவளிடம் பேசிப்பழகி அவளுடைய வரலாற்றை அறிய முயன்றோம்.

ஆனால் பவானியுடன் பழகப் பழக அவள், தன் கணவனிடம் பட்ட கொடுமைகள் காரணமாகவோ, என்னவோ, ஆண் குலத்தையே அடியோடு வெறுப்பவள் என்பதே தெளிவாயிற்று. தன் கணவனைப் பற்றி எதுவுமே கூறவில்லை. நிரம்பவும் வற்புறுத்திக் கேட்டால், ''டாக்டர்! அந்த அவலக் கதையைப் பற்றிக் கேட்காதீர்கள். வற்புறுத்தினால் நீங்கள் எனக்குச் செய்த உதவிகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, இப்போதே இந்த வேலையை விட்டுப் போய் விடுகிறேன்'' என்று கூறிவிடுவாள். என் குழந்தைகள் பவானியின் கவனிப்பில் இப்போதுதான் படிப்பில் சிறிது முன்னேறி வந்தார்கள். இந்நிலையில் அவளை விட்டு விட எங்களுக்கு மனம் இல்லை. ஆகவே வாயை மூடிக் கொண்டோம்.

பவானி எங்கள் வீட்டில் ட்யூஷன் வேலையை ஏற்றுக் கொண்டு ஏறக்குறைய இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. அவள் எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே பழகினாள். பகலில் குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்ற பிறகு கூட எங்கள் வீட்டில் தங்கி என் சமனைவிக்கு உதவியாக இருந்தாள். சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஆண்களைத் தாக்கிப் பேசுவாள்.

இந்நிலையில் ஒரு நாள் நான் நர்ஸிங் ஹோமிலிருந்து நண்பகல் சாப்பாட்டுக்குத் திரும்பச் சற்று நேரமாகிவிட்டது.

''ஏன் டாக்டர், இன்று இவ்வளவு தாமதம்?'' என்று என் மனைவியுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த பவானி கேட்டாள்.

''வழக்கம் போல் பதினொன்றரை மணிக்கு நர்ஸிங் ஹோம் வேலைகளை முடித்து விட்டுக் கிளம்பும் சமயம் அவசரக் கேஸ் ஒன்று வந்து சேர்ந்தது. நான்கு மாதக் கர்ப்பிணியான அந்தப் பெண்ணை அவளுடைய கணவன் ஏதோ ஒரு கோப வெறியில் நையப் புடைத்துவிட்டான். பேச்சு மூச்சு நின்று விட்டது. பிறகு அவனே மனம் பதறி அவளைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான். நல்ல வேளையாக அந்

தப் பெண்ணுக்கு அபாயகரமாக எதுவும் ஆகவில்லை. 'அட்மிட்' பண்ணித் தேவையான சிகிச்சைகள் அளித்து, அவள் மயக்கம் தெளிந்து பேசும் வரையில் உடனிருந்து கவனிக்க வேண்டியதாயிற்று'' என்று நான் விளக்கினேன்.

''யார் அந்த மிருகம்? கர்ப்பிணிப் பெண்ணை மூச்சுப் போக அடித்த அந்தக் கிராதகன் யார், டாக்டர்? இந்த ஆண் வர்க்கமே இரக்கமற்ற அரக்கர் குலந்தான்!'' என்று பொரிந்தாள் பவானி.

நான் சிரித்துக் கொண்டே, ''தொடங்கி விட்டீர்களா தாக்குதலை?'' என்றேன்.

''பின், இத்தகைய ஆண்களைத் தாக்காமல் பாராட்டவா சொல்கிறீர்கள் டாக்டர்?''

''இருந்தாலும் பெண்களும் அவ்வப்போது கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டும், பவானியம்மா.''



''பொறுமை பெண்களுக்கு மட்டும் உரித்தானதில்லை டாக்டர். ஆண்களுக்கும் அது வேண்டும்.''

''அவன் மாசம் முழுவதும் பாடுபட்டதற்குரிய சம்பளத்தை வழியில் பறி கொடுத்துவிட்டு மனம் நொந்து வீடு திரும்பியிருந்தான். இந்தச் சமயத்தில் அவன் மனைவி பொறுமையைக் கடைப்பிடித்து அவனுக்கு ஆறுதல் கூற வேண்டாமா? ஆனால் இந்தப் பெண்ணோ சமய சந்தர்ப்பம் பாராமல் அவன் கையாலாகாதவன் என்றும், பொறுப்பு இல்லாதவனென்றும் அவனை இழித்துப் பேசியிருக்கிறாள்.''

''அதற்காக இப்படித்தான், மனைவி கருவுற்றிருக்கிறாள் என்பது தெரிந்திருந்தும் ஆடு மாட்டை அடிப்பது போல் அடிப்பதா? நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள் டாக்டர். பெண்களிடம் இயற்கையாக அமைந்துள்ள பொறுமையைச் சோதிப்பதே உங்கள் ஆண் வர்க்கந்தான். இதுவே ஆண்களின் அடாவடித்தனத்தை அடிக்கோடிட்டுக் காட்டப் போதுமானதாகும். இதுவும் போதாது என்றால் இன்னொரு சம்பவத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். அது என் சிநேகிதி ஒருத்தியின் அவலக்கதை.''

பவானி என் ஆமோதிப்பை எதிர்பாராமலே எதிரேயிருந்த நாற்காலியில் அயர்ந்து அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கி விட்டாள்.

டாக்டர்! என் தோழியின் பெயர் அனசூயா. அண்டை வீட்டுப் பெண். அவள் குடும்பம் ஏழைக் குடும்பம். ஆனால் குடும்பந்தான் ஏழையே தவிர, குழந்தை குட்டிகளுக்குக் குறைவேயில்லை. அவள் பெற்றோருக்கு அவளோடு சேர்த்துப் பதினொரு குழந்தைகள். பதினொன்றுமே பெண்கள். அனசூயாதான் மூத்தவள். தரித்திரம் தாண்டவமாடிய அந்தக் குடும்பத்தில் எப்படியோ எழிலரசியும் இடம் பெற்றிருந்தாள்.

அனசூயாவின் அப்பாவுக்குத் தம் பெண்கள் அழகாக இருப்பதால் அவர்களைக் கொத்திக்கொண்டு போக அரச குடும்பத்தவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள் என்ற எண்ணம். அவருடைய எண்ணம் மற்றப் பெண்கள் விஷயத்தில் பலித்ததோ என்னவோ? அனசூயாவின் விஷயத்தில் பலிக்கத்தான் பலித்தது. பணக்கார இளைஞன் ஒருவன் அவருக்கு எந்தச் செலவும் வைக்காமல் அனசூயாவை மணந்து கொள்ள முன் வந்தான். ஆனால் பணக்காரன் என்றதும் அவர் வாயைப் பிளந்து கொண்டு, மாப்பிள்ளையின் குணங்களை ஆராயாமல் என் சிநேகிதியைப் படுகுழியில் தள்ளிவிட்டார்.

அனசூயாவுக்குத் திருமணம் நடந்து சில மாசங்கள் ஆன பின் எனக்கும் திருமணம் நடந்தது. அனசூயாவின் புக்ககத்து ஊர்க்காரரே என் கணவரும். அந்த ஊரின் மண்வாசியோ என்னவோ? அங்கே இருந்த ஆண்கள் அனைவரும், 'பெண் என்பவள் வெறும் சிலை; ஆண்களின் பிரியம்போல் ஆடவேண்டிய பாவை' என்ற மனப்போக்கு உடையவர்களாகவே இருந்தார்கள்.

அனசூயாவின் இல்லற வாழ்க்கை முழுசாக ஓராண்டுகூட இன்பமாகச் செல்லவில்லை. அதற்குள் அதைச் செல்லரிக்கத் தொடங்கிவிட்டது. அனசூயாவின் கணவன் மால்வங்கர் பெரிய மைனர்ப் பேர்வழி. கெட்டவர்களோடு சேர்ந்து குடி, சூதாட்டம் ஆகியவற்றில் சொத்தைக் கரைத்துவந்தான். அனசூயா கணவனைத் திருத்த மேற்கொண்ட முயற்சிகள் அவர்களுக்குள்ளே பிளவைத்தான் உண்டாக்கின. மனைவியை அறவே புறக்கணித்துவிட்டு மால்வங்கர் ஒரு வேசியின் வலையில் விழுந்தான். வலையில் சிக்கிய பூச்சியின் உதிரத்தை முற்றுமாக உறிஞ்சாமல் எந்தச் சிலந்தியாவது விட்டு விடுமா? மால்வங்கரைத் தன் வலையில் சிக்கவைத்துக் கொண்ட வேசியும் அப்படித்தான் செய்தாள். அவன் பணத்தையெல்லாம் உறிஞ்சிக்கொண்டு, பெரும் கடனாளியாகவும் ஆக்கிய பின் அவன் அவனை அடித்துத் துரத்திவிட்டாள்.

வீடு திரும்பிய கணவனைக் கண்ணகியைப்போல் இன்முகத்துடன் வரவேற்றாள் அனசூயா. ''பணம் போனால் போகிறதடி, பவானி. அவர் என்னிடம் திரும்பி வந்தாரே அதுவே போதும்'' என்று அவள் என்னிடம் சொன்னாள்.

''ஆனால் வாரி இறைத்த கையில்லாதே அனசூயா? எப்படி அவரைக் குடும்ப நிலையை உணரச் செய்யப்போகிறாய்?'' என்று துயரத்துடன் கேட்டேன்.

''வெறுங்கை முழம் போட முடியுமா? இருந்தால்தானே செலவு செய்யப் போகிறார்? இல்லாத போது?''

'ஆமாம்; இல்லாதபோது திருந்தித்தானே ஆகவேண்டும்?' என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். அதற்கேற்றபடி மால்வங்கரின் நடத்தையிலும் சிறிது பொறுப்புணர்ச்சி தென்பட்டது. அவனுடன் சுற்றி, அவனைக் கெட்டழியச் செய்தவர்களுள் ஒருவன் சங்கர் ராவ் தாம்லே என்பவன். தாம்லே அந்த ஊரில் நடந்துவந்த தனியார் வங்கி ஒன்றின் மானேஜர். சொத்து எல்லாம் கரைந்து சம்பாதித்துத்தான் வயிறு வளர்க்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதும், மாவலங்கர் தாம்லேயை அணுகி எப்படியோ அவன் மூலம் அந்தத் தனியார் வங்கியிலேயே காஷியர் வேலையைத் தேடிக்கொண்டான்.'' குடியிருந்த வீட்டை விற்றுப் பழைய கடன்காரர்களுக்கு ஒன்றுக்குக் காலாகக் கொடுத்துத் தீர்த்தான்.

வீட்டைக் காலி செய்வதற்கு முந்தைய நாள் அனசூயா என்னிடம் வந்து கதறி அழுதாள்.

''மனசைத் தேற்றிக்கொள் அனசூயா. அன்று நீயே சொன்னாயே, 'பணம் போகும் வரும்; அவர் திரும்பி வந்தாரே, அதுதான் பெரிசு என்று?' அதை இப்போதும்

Dr. A. மதுரம் குரு மருந்துகள்

100 வருடங்களுக்கு மேல் புகழ் பெற்றது

விரைவில் குணமடையச் சக்தி வாய்ந்த

குரு தைலம் குரு பல்பொடி

பிளாஸ்டிக் டப்பாக்களில் விற்பனைக்குக் கிடைக்கிறது

Dr. B. மதுரம் & சன்ஸ்

குரு மருந்துசாலை திருச்சிராப்பள்ளி-17.

— நாகசுந்தரம்

Grams
COLOR CRAFT

Phone
No 656

The Orient Color Crafts

Post Box No. 192

8-4-152, MUNDAGA NADAR STREET

SIVAKASI-626 123

Specialists in Manufacture of Photo Offset Calendars, Table Calendars, and Special Varieties of Sheeter Calendars and Diaries

நினைத்துக்கொள்'' என்று அவளுக்கு ஆறுதல் சொன்னேன்.

''அதற்காக அழவில்லை பவானி. அந்தத் தாம்லே அவருக்கு இரங்கி இந்த வேலையைக் கொடுத்திருப்பானென்று எனக்குத் தோன்றவில்லை. என்னைக் கவரத்தான்..''

''பைத்தியமா உனக்கு? கடவுள் உன்னைத் தேவைக்கு அதிகமாகவே கஷ்டப்படுத்திவிட்டார். இனி உனக்கு எந்தத் தீங்கும் ஏற்பட விடமாட்டார். தைரியமா இரு'' என்று அவளுக்குத் தைரியம் சொல்லி அனுப்பினேன்.

மறுநாள் பொழுதுகூட இன்னும் சரியாக விடியவில்லை. அனசூயா மறுபடியும் என்னைத் தேடி வந்து, ''என்னை மிகப் பெரிய அபாயம் சூழ இருக்கிறது, பவானி'' என்று அழத் தொடங்கினள்.

மீண்டும் அவளைத் தேற்றி விஷயத்தைக் கேட்டறிந்தேன். அனசூயா யாருக்காகப் பயந்தாளோ, அந்தத் தாம்லேயின் வீட்டுக்கே அவள் கணவன் குடி போகத் தீர்மானித்துவிட்டானும்!

''தைரியமாக அங்கேயே குடி போ. அந்தத் தடியன் எப்போதாவது ஏறுமாருக உன்னை நெருங்கினுல் வீராங்கனையாக நடந்துகொள். கற்பைக் காத்துக்கொள்ளுவதற்காகச் செய்யப்படும் கொலைக் குக்கூடத் தண்டனை கிடையாது'' என்று மறுபடியும் அவளுக்குத் தைரியம் சொல்லி அனுப்பினேன்.

அனசூயா தன் கணவனுடன் தாம்லேயின் வீட்டுக்குக் குடிபோய் இரண்டு மாதம் போல் ஆயின. வாரத்துககு ஒரு தடவையாவது அவள் என்னைச் சந்திப்பாள். தாம்லே தன் கணவனை மறுபடியும் குடியிலும், சூதாட்டத்திலும் ஈடுபடச் செய்து வருவதாகவும், அவர்களிடம் பணப் புழக்கம் ஏகமாகப் பெருகியிருப்பதாகவும், அது எப்படி எங்கிருந்து வருகிறது என்பதைத் தன்னுல் அறிய முடியவில்லையென்றும், தாம்லே இதுவரையில் தன் வழிக்கு வரவில்லையென்ருலும், தன் கணவன் இப்போதெல்லாம் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதுகூட இல்லை என்றும் அவள் செய்திகள் கொண்டு வந்தாள்.

''வருவது வரட்டும்; தைரியமாக இரு; தைரியமாக இரு'' என்று சொல்வதையன்றி வேறு எந்தவிதமான தேறுதலும் என்னுல் அவளுக்கு அளிக்க முடியவில்லை.

மேலும் சில மாதங்கள் சென்றன. அனசூயாவின் கணவன் பழைய போக்கிலேயே சென்று கொண்டிருக்கிருன் என்பதையன்றிப் புதிய செய்திகள் எதையும் அவள் அறிவிக்காததால், இனி அவளுடைய கற்புக்குத் தாம்லேயின் மூலம் ஆபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்று நான் தேறிவிட்டேன். இதை அவளிடம் புரியும்படியாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருக்கையிலேயே அவள் என்னைத் தேடி வந்துவிட்டாள்.

''நேற்று இரவு என் கணவர் வீட்டுக்கு வரவில்லை, பவானி. இன்று காலையிலும் அவர் வராமையால், தாம்லேயிடம் சென்று அவரைப்பற்றிக் கேட்டேன். 'பாங்கு வேலையாகப் பம்பாய் போயிருக்கிருன். திரும்பி வர ஒரு மாசம் ஆகும்' என்று அவன் சொன்னதுடன் என் கையைப்பற்றி இழுத்தான். அவன் பாங்குக்குப் போகும்வரையில் நடுங்கிக் கொண்டு இருந்துவிட்டு, உடனே உன்னிடம் ஓடிவந்தேன. ஒரு மாசகாலத்துக்கு உன் வீட்டில் எனக்குப் புகல் அளிக்கமாட்டாயா, பவானி'' என்று கண்ணீர் சோரக் கெஞ்சினுள் அந்தப் பேதை.

ஆனுல் என் கதை அவளைவிடக் கேவலமாக இருந்ததை அவள் எப்படி அறிவாள்? என் கணவர் அந்தத் தாம்லேக்குச் சற்றும் குறைந்தவரல்ல என்பதை அவள் அறிந்திருந்தால் என்னிடம் தஞ்சம் கோரியிருப்பாளா? எனவே, மெதுவாகப் பேச்சை மாற்றி வழக்கம் போல் அவளுக்குத் தைரிய வார்த்தைகள் சொல்லித் திருப்பி அனுப்பினேன்.

மறுநாள் அதிகாலை நான்கு மணி இருக்கும். வழக்கமாக அந்த நேரத்தில்தான் நான் கட்டபிரபா நதிக்குக் குளிக்கச் செல்வேன். அன்றும் அவ்வாறுதான் சென்று கொண்டிருந்தேன். ஊர் எல்லையைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும், ''பவானி! நில்! நில்!''

''ஏண்டா, எரிஞ்ச புஸ்வாணத்தைக் கையில் வைச்சுண்டிருக்கே''

''மறுபடியும் எரிய வைக்க முடியுமான்னு யோசனை பண்றேன்.''

''உம் மண்டையிலிருந்து கொஞ்சம் எடுத்து அதில் வைடா எரியும்.''

எனற அனசூயாவின் பரபரப்பான குரல் என்னைத் திடுக்கிட்டு நிற்கச் செய்தது. நான் பதற்றத்துடன் திரும்பிப் பார்த்தேன். விடி நிலா வெளிச்சத்தில் அவள் என்னை நோக்கித் தலைவிரிகோலமாக ஓடி வந்து கொண்டிருந்தாள். அருகே நெருங்கியதும்...

'ஐயோ! அது என்ன, அவள் கையில்?'

''அனசூயா! அடி பாவி! என்னடி நடந்தது?''

அனசூயா பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். ''கொன்றுவிட்டேன். என்னைக் கெடுக்க முயன்ற அந்தப் பாவி தாம்லேயை இந்தக் கத்தியால் குத்திச் சாய்த்துவிட்டேன்!'' அவள் ரத்தம் தோய்ந்த கத்தியைத் தூக்கிக் காட்டினுள்.

சூழ்ந்திருந்த அபாயத்தின் விளைவை உணர்ந்து, அவளை ஒரு மறைவான இடத்துக்கு இழுத்துச் சென்று நடந்ததை விசாரித்தேன். அனசூயா பயந்ததே நடந்துவிட்டது. இன்று அதிகாலையில் தாம்லே அவளைக் கெடுக்க முற்பட்டானும். 'வீராங்கனையாக நடந்துகொள்' என்று நான் கூறியதை நினைவில் கொண்டிருந்த அவள் எப்பேதும் தன்னுடன் ஒரு கத்தியை வைத்திருந்தாள். ஆகவே அவன் பிடியிலிருந்து எப்படியோ திமிறிக் கத்தியால் அவனைக் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவந்துவிட்டாள்.

''போ! எங்கேயாவது கண் காணுத் தொலைவுக்கு ஓடி மறைந்துவிடு. இங்கே இருந்தால் நீ கைதாகிவிடுவாய்'' என்று அவளை அவசரத்துடன் முடுக்கினேன்.

''ஓடத்தான் போகிறேன். இந்த ஊரிலிருந்து மட்டுமல்ல; பவானி. இந்த உலகத்திலிருந்தே! அதற்காகத்தான் இந்தக் கத்தியைக் கையோடு கொண்டுவந்தேன்.''

அனசூயாவின் முகத்தில் நிலவிய தீவிரம் என்னைக் கதிகலங்கச் செய்தது. சட்டென்று அவள் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி எட்ட வீசிவிட்டு, ''நீ எதற்காகச் சாக வேண்டும் அனசூயா? நாளைக்கு உன் கணவன் திரும்பிவந்தால்?''

''அடி பைத்தியமே! அவர்தாம் என்னைத் தாம்லேக்கு விலைக்கு விற்றுவிட்டு, கிடைத்த பணத்துடன் பறந்தோடிவிட்டாரே!''

நான் அவளைத் தடுத்து நிறுத்தி, ''நீ வீராங்கனையாகவே உன் மானத்தைக் காத்துக் கொண்டாலும், இப்போது பேரிடியைப்போல் சாக விரும்புகிருயே! இது என்ன நியாயம், அனசூயா? கூடாது. வாழத்தான் வேண்டும். ஒருகால் போலீசார் புலன் விசாரித்து நீதான் தாம்லேயைக் கொன்றவள் என்று கண்டுபிடித்து உன்னைக் கைது செய்தாலும், கோர்ட்டில் நடந்ததைக் கூறி நியாயம் கோரலாம்'' என்றேன்.''

''என்ன சொன்னுய்? நடந்ததைக் கூறுவதா? எதைக் கூறுவது, பவானி? என் கணவர் என்னை வேறொருவனுக்கு விற்றுவிட்டார் என்பதையா?''

''ஏன்? உண்மை அதாக இருக்கும்போது சொன்னால் என்ன?''

''அவர் செய்தது கொடூரமான, கேவலமான தவறுதான். இருந்தாலும் அவர் என் கணவராயிற்றே?''

அனசூயாவின் பதிபக்தி என்னைத் திடுக்கிட வைத்தது. இருந்தாலும் அவளைச் சாகவிட என் மனம் ஒப்பவில்லை. எனவே, இவ்வளவு பதிபக்தியுடைய அவள் அந்தப் பதி உயிரோடிருக்கையில் மரணத்தை நாடுவது முறையல்ல என்றும், என்றைக்காவது அவர் மனம் திருந்தி அவளைத் தேடி வந்து மன்னிப்புக் கோருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதே உண்மையான பத்தினிக்குரிய தர்மம் என்றும் பலவாறு போதித்து, அவள் மனதைக் கரைத்து வெளியூருக்கு ஓடிப் போகச் செய்தேன்.

''டாக்டர், இப்டோது சொல்லுங்கள். பெண்களின் பொறுமை ஆண்களால் எப்படி எப்படியெல்லாம் சோதிக்கப்படுகிறது பார்த்தீர்களா? பெண் பொறுலமயை இழக்கிறாள் என்றால் அதற்குக் காரணம் ஆண்களின் எல்லையற்ற கொடூரத் தன்மைதான் என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்கிறீர்களா?''

பவானி இந்தக் கேள்வியுடன் கதையை முடித்துவிட்டு, பதிலுக்காக என் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

நான் புன்னகை மலர அவளிடம் சொன்னேன்: ''உங்கள் அனசூயாவின் கதை பரிதாபமானதுதான். பவானியம்மா. ஆனால் பாவம்! வாழ்நாள் முழுக்கத் துன்பத்தில் உழன்ற அவளை, ஒருகால் அவளுடைய கணவன் மனம் திருந்தி வந்து ஏற்றுக்கொள்ள விரும்பினாலும், நீங்கள் அவளைத் தன் கணவனுடன் போக அநுமதிக்கமாட்டீர்கள் போலிருக்கிறதே!''

''இல்லை டாக்டர். உண்மையாகவே அவள் எங்கே இருக்கிறாள் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தாலும் என்ன ஆகப் போகிறது?''

''ஆகப்போகிற காரியம் வந்தாலும் வரலாம் அல்லவா? ஒருகால் வராவிட்டாலுங்கூட உங்களிடமே இருக்கும் ஒரு பெண்ணை நீங்கள் எத்தனை காலத்துக்குத்தான் மறைத்து வைத்துக்கொள்ள முடியும்?''

''என்ன? அனசூயா என்னுடன் இருக்கிறாளா?''

''சரியாகச் சொல்வதென்றால் உங்கள் உருவிலேயே இருக்கிறாள்.''

''டாக்டர்!''

''பவானியம்மா! இனி நீங்கள் உங்களை மறைத்துக்கொள்ள முடியாது. உங்கள் சிநேகிதியின் கதையென்று கற்பனையாக ஓர் அனசூயாவைச் சிருஷ்டி செய்து பக்குவமாகக் கதை சொன்னாலும், அந்தக் கதையை ஏற்கனவே அறிந்துவிட்ட என்னால், அந்த அனசூயாதான் இந்தப் பவானி என்பதை ஊகித்துவிட முடியாதா, என்ன?''

''டாக்டர்! என் உள்ளத்துக்கு மட்டுமே தெரிந்த அந்தக் கதையை நான் சொல்லுமுன்பே எப்படி நீங்கள் அறிந்தீர்கள், டாக்டர்?''

''உங்கள் உள்ளத்தில் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருபவர் மூலம் அறிந்தேன் பவானியம்மா. ஆண்களை அறவே வெறுப்பவளாக வேஷம் போட்டாடி வந்தாலும், அத்தனை கொடுமை இழைத்த உங்கள் கணவரே உங்கள் உள்ளத்தில் நிரந்தரமாகத் தங்கியிருக்கிறார் என்பதுதான் இப்டொது தெளிவாகிவிட்டதே!''

''அதிருக்கட்டும் டாக்டர். என் கணவர் மூலம் என் கதையை அறிந்தேன் என்றீர்களே; அவரை நீங்கள் எப்பொழுது சந்தித்தீர்கள்? இப்போது அவர் எங்கே இருக்கிறார்? நலமாக இருக்கிறாரா?''

''உங்கள் கணவர் ஒரு வாரமாக எங்கள் நர்ஸிங் ஹோமில்தான் கிடக்கிறார், பவானியம்மா!''

''கிடக்கிறாரா! ஐயோ! அவருக்கு என்ன உடம்பு, டாக்டர்?'' பவானி எங்கள் நர்ஸிங் ஹோமுக்குப் புறப்பட்டுவிட்டாள். அவளைத் தடுத்து நிறுத்தி நான் சொன்னேன்:

''பயப்படும்படி ஒன்றும் இல்லை. கவலைப்படாதீர்கள், பவானியம்மா. நீங்கள் சற்று முன் கூறிய கதையின் பிற்பகுதியில் நீங்கள் அறியாத விவரங்கள் சில உள்ளன. அவற்றைக் கேட்டுவிட்டுப் போங்கள். பவானியம்மா, உண்மையில் உங்கள் கணவர் உங்களைப் தாம்லேக்கு விற்கவும் இல்லை; ஒன்றும் இல்லை. குடி மயக்கத்திலும், சூதாட்டப் பித்திலும் அவர் உங்களைப் புறக்கணித்தது என்னவோ உண்மை. தாம்லே உங்கள் மீது கண் வைத்திருக்கிறான் என்ற விவரமும் அவருக்குத் தெரியாது. இருவரும் சேர்ந்து வங்கிப் பணத்தை நிறையக் கையாண்டு செலவு செய்துவிட்டார்கள். காஷியர் என்ற முறையில் உங்கள் கணவர் மால்வண்கர் தாம் அதற்குப் பொறுப்பாளி என்று ஒரு நாள் தாம்லே தட்டைத் திருப்பிவிட்டான். தலைதப்ப வேண்டுமானால் எங்கேயாவது ஓடி மறைந்துவிடும்படி அவனே ஆலோசனை கூறி, அவரை விரட்டிவிட்டு உங்களைக் கெடுக்க முயன்றிருக்கிறான்.

''தலைமறைவாயிருந்த உங்கள் கணவர் ஒரு நாள் பிடிபட்டார். நல்லவேளையாகத் தாம்லே கொலை செய்யப்பட்ட அன்று, தாம் வெளியூரில் இருந்ததற்கு அவரால் அத்தாட்சி தர முடிந்தது. எனவே கொலைக் குற்றத்திலிருந்து தப்பினார். ஆனால் வங்கிப் பணத்தைக் கையாடியதற்காக அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது. தண்டனைக் காலம் அவர் கண்களைத் திறந்தது. விடுதலை பெற்றதும் உயிர் வாழ மனமின்றித் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்து ஓடும் கார் ஒன்றின் மீது பாய்ந்தார். ஆயினும் சாவு அவரை அண்டவில்லை. ஒரே ஓர் ஊனம்.''

நான் முடிக்குமுன் பவானி நர்ஸிங் ஹோமுக்குக் கிளம்பிவிட்டாள். ''கொஞ்சம் நில்லுங்கள், பவானி அம்மா. உங்கள் கணவர் இப்பொழுது கால்களை இழந்தவர். அவருடன்...''

அவள் போய்க்கொண்டே என்னை இடைமறித்துச் சொன்னாள்; ''அவர் கல்லாக இருந்தாலும் என் கணவர், டாக்டர்!''

டாக்டர் தம் கதைலய முடித்துவிட்டு, ''பாரத மண்ணின் மாண்பு எப்படிப்பட்டது பார்த்தீர்களா?'' என்று என்னைக் சேட்டார்.

''அதுதான் தெரிந்ததாயிற்றே! ஆனாலும் எனக்கு இந்தக் கதையில் சில சந்தேகங்கள்'' என்றேன்.

''என்னவென்று சொல்லுங்களேன்'' என்றார் அவர்.

''முதல் சந்தேகம், பவானியம்மாளின் கணவர் மால்வண்கர் கால்களை இழந்துவிட்டதாகச் சொன்னீர்கள். சற்றுமுன் அவர் உங்களிடம் விடைபெற்று நடந்து சென்றபோது, சிறு ஊனத்தைத் தவிர வேறு எதையும் அவரிடம் காண முடியவில்லையே!''

''ஓ! அதைச் சொல்கிறீர்களா? அவர் கால்களை இழந்துவிட்டதாக நான் பவானியம்மாளிடம் சொன்னது உண்மையல்ல; இவ்வளவுக்குப் பிறகும் அந்தப் பெண்ணுக்குக் கணவன் மீது ஏதாவது காரணத்தையொட்டிப் பக்தி குறைகிறதா என்பதைச் சோதிக்கச் சும்மா அப்படிச் சொன்னேன்.''

''அது சரி! அடுத்த சந்தேகம், என்ன இருந்தாலும் பவானியம்மாள் ஒரு கொலையைச் செய்தவள். அவள் கணவர் மால்வண்கர் தற்கொலைக்கு முயற்சி செய்தவர். இருவரையும் சட்டத்துக்குப் புறம்பாக இப்படிச் சுதந்தரமாக வாழ விட்டிருக்கிறீர்களே, இது நியாயமா?''

''அவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக வாழ்கிறார்கள் என்று யார் சொன்னது? பவானியம்மாளும் மால்வண்கரும் மீண்டும் ஒன்று சேர்ந்ததும் அவர்களைக் காவல் நிலையத்துக்கு அனுப்பி இரண்டு பேரின் குற்றங்களையும் வலியச் சென்று எழுதிவைக்கச் சொன்னது நான்தான். முறைப்படி வழக்கு நடந்தது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளையொட்டிப் பவானியம்மாளின் குற்றமும் மால்வண்கரின் குற்றமும் மன்னிக்கப்பட்டன. என்ன ஸார், இப்படி ஒரு கேள்வி கேட்டுவிட்டீர்களே என்னைப் பார்த்து? மண்ணின் மாண்பைப் பற்றிப் பிரமாதமாக எழுதும் நானே அந்த மாண்புக்கு ஒரு மாசு ஏற்படுத்தும் காரியத்தைச் செய்வேனா?''

டாக்டர் கதம் இப்படிக் கேட்டபோது, ''அந்த மாண்பு எனக்கும் இருக்கிறதல்லவா டாக்டர்? அதனால்தான் இந்தக் கேள்வியை நான் உங்களிடம் கேட்க நேரிட்டது'' என்று கூறித் தப்பித்துக்கொண்டேன் நான்.

*

With the best compliments from

Nizam Paper and Board Mills Limited

(Manufacturers of Quality Papers)

REGISTERED OFFICE:

Post Box No. 56

OLD PALACE BUILDINGS

PUDUKKOTTAI-622001 (Tamil Nadu)

Grams: NIZAM PAPER

Phone: 2890

Factory Office: Pullanviduthi-622 304
Alangudi Taluk

Phone: 43 & 52

(Vadakadu Exchange)

உங்கள் எதிர்காலத்தைத் தெளிவாக அறிய வாய்ப்பு
இதோ பிரபல ஜோதிடரை அணுகுங்கள்

பொய்யாமொழி ஜோதிட மாத இதழ் சித்தார்த்தி வருடம், மார்கழி மாதம் 16-12-1979 தேதியிட்டு 1-12-1979-இல் வெளி வந்த இதழில் 'திருமதி இந்திராகாந்தியின் எதிர்காலம்' என்ற தலைப்பில் பாராளுமன்ற தேர்தலில் 300 இடங்களுக்கு மேல் பெற்று இந்தியாவின் பிரதமர் ஆவார் என்று உறுதியாகவும் திடமாகவும் வெளியிட்டுத் தமிழ்நாடு காங்கிரஸ் (I) சர்டிபிகேட் வாங்கிய பிரபல ஜோதிடர் தாழ்மையுடன் வெளியிடும் விண்ணப்பம்.

வாழ்க்கை, வித்தை, விவாகம், புத்திர பாக்கியம், புகழ், ஆயுள், தெய்வசித்தி, வீடு, வாகன போகம், பணம் வரும் காலம், கோர்ட்டு விவகாரங்களில் வெற்றி, காதலில் வெற்றி, உடல்நலம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

செய்வினை, ஏவல், பில்லி, பேய், துர்மரணம், கெட்ட கனவு, உடல் ஊனம், கிரகப் பாதிப்புகளிலிருந்து நிவர்த்தி பெறலாம். ஜாதகம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் 5 கேள்விகளுக்கு ரூ. 10 *M.O.* மூலம் அனுப்பித் தெளிவாகப் பதில் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ராஜகுரு

107, வாழைப்பழக் கடைத் தெரு, சிவகாசி-626123

விபரங்கட்கு உடன் தொடர்பு கொள்ளவும்:

வீணை கொடி பிலிம்ஸ் அளிக்கும்
"முன் வினை"
கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள்,
டைரக்ஷன் & தயாரிப்பு:
எம். ராஜகுரு

D. சங்கர்
44, ஸ்ரீராம் பேட்டை
சி.ஐ.டி. நகர்,
சென்னை-35.

வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

கண்ணைக் கவரும் வண்ண வண்ண நவீன பட்டுச் சேலைகள்
மற்றும் பாவாடைகளுக்குச் சிறந்த கூட்டுறவு நிறுவனம்

காஞ்சிபுரம் டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்

KH-4.

88-89, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631501 போன்: 2951

(குளிர் பதனம் செய்யப்பட்டது)

கிளை விற்பனை நிலையங்கள்:

1) *ஸ்ரீஅய்யப்பன் சில்க் கேந்திரா, 231-232 கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட்,* பெங்களூர்-560053
2) *கிரந்தே சில்க் ஹவுஸ், திரு. வி. க. தெரு,* விழுப்புரம்-605602
3) *சாய் சுதா என்டர்பிரைசஸ், 16-3-507, மெயின் பஜார் தெரு,* இந்துப்பூர் A.P. 515 201

பி. பிந்துமாதவன்,
T.C.O./செயலர்

ஒரு மருமகள் வேலைக்குப் போகிறாள்

பி.வி.ஆர்

மூன்று மாதங்களுக்கு முன் சாரதா ஆரம்பித்த பல்லவி அன்று துரித காலத்தில் ஓடி உச்ச கட்டத்தை அடைந்துவிட்டது. எப்போதும் போல அன்றும் அபயம் மௌனமாக உதட்டுச் சிரிப்பால் பதில் சொல்லி மாமியாரைச் சமாளிக்கப் பார்த்தாள். ஒரே பிள்ளையைப் பெற்றெடுத்தவளின் மனம் கோணக்கூடாது, புண்படக்கூடாது என்று அபயம் கடைசி வரை பிடிவாதமாக இருக்கவே, சாரதாவின் வார்த்தைகள் எதிரொலியுடன் திரும்பி வந்தன.

''இதப் பாரு அபயம்! நீ எம்.ஏ. படிச்சிருக்கே. ஃபர்ஸ்ட் கிளாஸில் பாஸாயிருக்கே. நீ புத்திசாலின்னு எனக்கும் தெரியும்! ஊருக்கும் உலகத்துக்கும் தெரியும்.''

இப்படித்தான் மூன்று மாதங்களுக்கு முன் மாமியார் சாரதா தன் பல்லவியை ஆரம்பித்து, அவள் தன் விஷயத்தின் கருவுக்கு வந்தாள்.

''என் புருஷன் பத்து மணிக்குக் குமாஸ்தாவும் ஜூனியர்களும் புடை சூழ ஹைகோர்ட்டுக்கு ஜம்முனு காரில் போறார்னு, உன் புருஷன் காலங்கார்த்தாலேயே எழுந்து ஏழரை மணிக்கே கம்பெனிக் காரில் அம்பத்தூர் போறான். நீ நாள் பூரா வீட்லே அத்தையும் இத்தையும் படிச்சுண்டு மத்தியான்னமெல்லாம் தூங்கிண்டு பொழுதைக் கழிக்கறே. அதனாலே..''

மாமியார் தான் என்ன சொல்ல வருகிறாள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டாள்.

மூன்று மாதங்களுக்கு முன்பு. எதிர்த்துப் பேச வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் அபயம், ''நான் ஒரு வேலைக்குப் போய்த்தான் ஆகணும்னு நீங்க சொல்றேள் இல்லையா?'' என்றாள்.

''ஆமாம். இந்தக் காலத்தில் எந்த இடத்தில் பெண்கள் வேலை செய்யவில்லை? முன்னெல்லாம் நர்ஸா இருந்தார்கள். டெலிபோன் ஆபரேட்டராக இருந்தார்கள். அப்புறம் மெள்ளமெள்ள டைபிஸ்ட், ஸ்டெனோ என்று போக ஆரம்பித்தார்கள். ஆனால் இப்ப? தடுக்கி விழுந்த இடமெல்லாம் உன் மாதிரி படிச்ச பெண்கள் ஐந்நூறு எண்ணூறு ஆயிரம்னு சம்பாதிக்கிறார்கள்.''

''நான் எம். ஏ. தான். ஃபர்ஸ்ட் கிளாஸ்தான். ஆனா, கேட்ட குரலுக்கு உடனடியா எங்கே வேலை கிடைக்கும், மாமி?''

''நீ அதைப்பத்தி விசாரப்படாதே. சாயங்காலம் உன் மாமனார் கோர்ட்டிலேருந்து வரட்டும். அவர்கிட்டே மூச்சு விடறேன். அவருக்குத் தெரியாத கம்பெனி இல்லை. அவரோட கட்சிக்காரர்கள் முக்கால் வாசிப்பேர் கம்பெனிக்காரங்கதான்.''

சாரதாவின் பிடிவாதத்தை அபயம் புரிந்து கொண்டாள். அவள் வீட்டில் வீணாகப் பொழுதைக் கழிப்பது மாமியாரின் கண்ணை உறுத்துகிறது.

ஆனால் அபயம் எந்த வேலையிலும் சேர என்றுமே நினைத்ததில்லை. பிறந்த வீடும் புகுந்த வீட்டைப் போல வசதியான இடந்தான். இங்கே மாமனார் பெரிய அட்வகேட், பிள்ளை பெரிய கம்பெனியில் என்ஜினியர் என்றால், அங்கே அப்பா பெரிய டாக்டர். ஏன், மிகப் பெரிய - அடிக்கடி டில்லி, பம்பாய் கல்கத்தா என்று காலையில் பறந்து போய் மாலையில் பறந்து திரும்பும் - டாக்டர், இங்கே புருஷன் என்ஜினியர் என்றால், அங்கே அண்ணன் சார்ட்டர்ட் அகௌண்டண்ட். ஒரு வேலையில், அது எவ்வளவு பெரிதாகத்தான் இருக்கட்டுமே, சேர வேண்டும் என்ற எண்ணமே அபயத்தின் மனத்தில் உதித்ததில்லை. கல்யாணம் நடைபெறுவதற்கு முன்னால் இந்தச் சாரதா அடிக்கடி அவளுடைய அம்மா சொர்ணத்தைப் பார்க்க வந்திருக்கிறாள். ஆனால் ஒரு நாள் கூட, ஒரு தடவை கூட அவளிடமோ அல்லது சொர்ணத்திடமோ வேலையைப் பற்றிப் பேசியதில்லை.

இப்பொழுது ஏன் இப்படி ஒரு விபரீத எண்ணம்? விபரீத ஆசை? சமையற்காரி, இரண்டு வேலைக்காரிகள், டிரைவர் என்று பல சிப்பந்திகள் மாதம் ஆயிரம் ஆயிரமாக வாங்கிக் கொண்டு போகிறார்கள். டிரைவர் ஒருவனே அறுநூறு ரூபாய் வாங்குகிறான். பொருளாதாரச் செழுமை இந்த நிலையில் இருக்கும்போது, இரண்டாவது யசமானி ஸ்தானத்தில் இருக்கும் அபயம் ஏன் வேலைக்குச் செல்ல வேண்டும்?

சாரதா தான் வாக்களித்தபடி அன்று மாலையே தன் கணவர் கோர்ட்டிலிருந்து திரும்பி வந்து, சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்ததும் மூச்சு விட்டாள், மூச்சுப் பேச்சாகத் தொடர்ந்தது.

''என்ன அபயம், உன் மாமியார் என்னமோ சொல்றாளே! நீ என்ன நெனைக்கறே?'' என்றார் அட்வகேட் திருமூர்த்தி.

''நான் ஒண்ணும் நெனைக்கலே, மாமா. நான் சம்பாதிச்சுக் கொண்டு வரணும் என்கிற எண்ணத்தில் மாமி அப்படிச் சொல்லலை என்கிறது நிச்சயம்'' என்றாள் அபயம்.

''மருமகள் சொல்றதைக் கேட்டாயா, சாரதா?''

''அபயம் சொல்றது நூத்துக்கு நூறு சரி. பணத்துக்காக அவள் வேலைக்குப் போகணும்னு நான் சொப்பனத்திலும் நெனைக்கலை. இப்பச் சொல்லவும் இல்லை.''

''பின்னே என்ன காரணம்?'' என்ற திருமூர்த்தி அடையை விண்டு வெண்ணெயில் ஒற்றினார்.

''இப்ப அவளுக்கு இங்கே ஒரு 'ரொடீனே' இல்லை'' என்று ஆரம்பித்த சாரதா, ''கார்த்தாலே சிவா புறப்படற வரைக்கும் அவனைச் சுத்திச் சுத்தி வர்றா. அதுக்கு அப்புறம் ஹிண்டு, எக்ஸ்பிரஸ், தினமணி எல்லாத்தையும் முழுங்கறா. நீங்க கோர்ட்டுக்குப் புறப்படறப்போ இவ குளிக்கப் போறா. அப்புறம் சுவாமி படத்துக்கு ஒரு அவசர நமஸ்காரம். இதுக்கெல்லாம் நடுவே ஒரு நொறுக்குத் தீனி. தீனின்னா அதோடே நிக்கறதா? ரெண்டாம் டோஸ் காபி'' என்று அவள் தொடர, அட்வகேட் இடைமறித்தார்.

''ரொம்பச் சுவாரஸ்யமா இருக்கு சாரதா, நீ சொல்றதைக் கேட்க. இதெல்லாம் எனக்குத் தெரியவே தெரியாதே! அப்புறம்?'' என்றார்.

''அப்புறம் என்ன, அப்புறம் ஒரு கையிலே புத்தகமும் இன்னொரு கையிலே பாதி பெசைஞ்ச சாதமுமா உட்கார்றா, உட்கார்றா, அப்படி உட்கார்றா. ஏன் அப்படி உட்கார்றான்னு சில நாள் எனக்குப் புரியாமப் போறது. சாப்பாடு ருசியா, இல்லே, புஸ்தகம் ருசின்னு புரியறதில்லை.''

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அபயம் உள்ளூறச் சிரித்துக் கொண்டாள். 'மாமா என்ன சொல்லப் போகிருர் என்று பார்க்கலாமே!'

''அடை நன்னுயிருக்கு கிரைண்டர்லதானே அறைச்சே?''

''யார் அரைச்சா என்ன?.. அடை நன்னுயிருக்கோ இல்லியோ? நான் ஒண்ணு சொல்லிண்டு வரேன்; நீங்க அடையைப் பத்திப் புராணம் பாடறேள்.''

''ஸாரி சாரதா. நம்ம நாக்கு ரொம்பப் பொல்லாதது. ருசியைக் கண்டுட்டாப்போரும், மத்த எல்லாத்தையும் மறந்துடறது. சரி.''

''அப்புறம் மாடி. பெட் ரூம் புஸ்தகம், தூக்கம், சாயங்காலம் சிவா வர்ற போது டீக்கா டிரஸ் பண்ணிண்டு அவனை வாசல்லேயே வரவேற்கிரு.''

''ஆமாம், நீ என்னமோ ஒரு 'ரொடீனும்' இல்லைன்னு சொன்னியே! இதுவும் ஒருவகை ரொடீன் தானே? கிரமமா நடந்தா ரொடீன் தான்.''

அபயம் மனத்துக்குள் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டாள்.

''இது பிடிக்கலை. அவள் இப்படியே போனுச் சோம்பேறியாயிடுவா. பாந்தமா இருக்கிற ஒடம்பு ஊதிப் போகும். நம்ப வீட்லே யாருக்கும் இதுவரை இடுப்புச் சதை வழிஞ்சதில்லை: நம்ப ரெண்டு பொண்களையும் பார்க்கிறீர்களே, எப்படி இருக்கா அவர்கள்?''

''அவர்களும் வேலைக்குப் போகலையே!''

''பம்பாயிலே வேலைக்கே போகாவிட்டாலும் அவர்களுக்கு வீட்டிலேயே இடுப்பை ஒடிக்கிற வேலை இருக்கு. பம்பரமாச் சுத்தரு.''

''நீ சொல்றதும் சரிதான், சாரதா; ஏன் நாம நம்ம வீட்டிலேயே இவள் இன்னின்ன வேலையெல்லாம் செய்யணும்னு ஒரு புரோகிராம் கொடுக்கப்படாது?''

''நீங்க போகாத ஊருக்கு வழி தேடறேள்.''

''நீங்க என்ன, இது கோர்ட்டுன்னு நெனைச்சேளா, வாதம் பண்ண?'' என்ற சாரதா, ''அப்போ ஊர்லே என்னைப் பத்தி என்ன பேசுவாள்னு ஒரு நிமிஷம் யோசிச்சுப் பார்த்தேளா?'' என்ருள்.

''சரி, சரி; இப்ப நான் என்ன செய்யணும்? அபயம், ஒரு பாதி அடை கொண்டாயேன்'' என்ருர் அட்வகேட்.

''கார்த்தாலே ஒன்பதரை பத்து மணிக்கு இவ வேலைக்குக் கெளம்பி, சாயங்காலம் அஞ்சு அஞ்சரை மணிக்கு வரணும்; உங்க ஹைகோர்ட்டுக்குப் பக்கத்திலேயே தான் பெரிய பெரிய கம்பெனியெல்லாம் இருக்கே. நீங்க சீக்கிரம் யார்கிட்டயானும் சொல்லி ஏற்பாடு செய்யுங்கோ.''

அபயம் முழு அடையாகவே கொண்டு வந்து போட்டாள்.

''உன் மாமியார் தன் கட்சியைச் சொல்லிட்டா. நீ என்ன முடிவு பண்ணியிருக்கே?''

''இப்ப நீங்களே ஒரு முடிவு சொன்னுலும் எனக்கு அப்பீல் பண்ண ஒரு இடம் இருக்கு. இல்லியா மாமா?'' என்ருள் அபயம்.

''கேட்டாயா, சாரதா இவ சொல்றதை? இவ வேலைக்குப் போகணும்னு நானும் நீயும் முடிவு எடுத்தாக்கூட, வேண்டாம்னு தீர்ப்புக் கூற ஒரு இடம் இருக்காம். எப்படிப் பேசரு பாரு, இந்தக் காலத்துப் பெண்!'' என்ருர் திருமூர்த்தி. அவருக்குச் சிரிப்பு வந்தது.

''நான் சிவாகிட்டே பேசிக்கிறேன். நான் கிழிக்காட்டாலும் ஒரு கோடு இருக்கிறதா நெனைச்சு, அதைத் தாண்டாத புள்ளை என் புள்ளை.''

''அப்ப இப்போதைக்கு இந்தக் கோர்ட்டுக் கலையலாம், இல்லியா?''

அபயம் மெதுவக நகர்ந்தாள்.

''ஒரு நிமிஷம் அபயம்'' என்ருர் அட்வகேட்,

அபயம் நின்ருள்.

''சாரதா, நீ ரொடீனைப் பத்தி சாங்கோபாங்கமாச் சொல்லியாச்சு; ஆளு உன் ரொடீன் என்னன்னு எனக்கு விளங்க வைக்கலையே!''

''இப்ப, இந்தப் பத்து வருஷமாத்தான் நீங்க பெரிய வக்கீல். முப்பத்தஞ்சு வருஷத் தாம்பத்தியத்திலே இருபத்தஞ்சு வருஷம் இடுப்பு ஒடிய அடுப்படியிலே வெந்தவள் நான். ரேஷனுக்குக் கியூவில் நின்றவன் நான். எலக்ட்ரிக் பில் கட்டியிருக்கேன். குழந்தைகளை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிண்டு போயிருக்கேன்.''

''சாரதா, நான் கேக்கறது உன் கடந்த கால இதிகாசத்தை அல்ல; தற்கால ரொடீனை.''

''இப்ப எனக்கு வயசு அம்பத்தஞ்சு. என். டி. ராமராவ் எடுத்த முடிவின்படி, நான் ரிடையர் ஆயாச்சு.''

கோர்ட்டில் வாதாடிப் பல வெற்றி மாலைகளைச் சூடிய அட்வகேட் திருமூர்த்தி, மனைவியிடம் தோல்வி கண்டார்.

இந்தச் சம்பவமும் பேச்சும் நடந்து மூன்று மாதங்களாகி விட்டன. இன்னும் யாரும் ஒரு தீர்ப்பும் அளிக்கவில்லை.

அன்று மாமியாரின் பல்லவி உச்சக் கட்டத்தை அடைந்தது.

''அபயம், நீ இப்படி வீட்டுக்குள்ளே சுத்திச் சுத்தி வர்றது எனக்குக் கட்டோடே பிடிக்கலை. உன் மாமனர் உனக்குன்னு ஒரு வேலை பார்த்து வச்சிருக்கார். வாயைத் தெறக்காம, சிரிச்சே மழுப்பிண்டு வர்றே நீ. முதல் தேதிக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்கு. பேசாம வேலையை ஒத்துக்கோ. கொஞ்ச நாள் பாரு. இது புடிக்கலைன்ன இன்னொரு இடம் கெடைக்காமல் போகாது.''

அபயம் யோசித்தாள். மாமியார் பொய் சொல்லவில்லை. முந்தின இரவு சிவா அவளை அணைத்துக்கொண்டே, ''அம்மா ஆசைப்படிதான் கொஞ்ச நாள் அப்பா வாங்கித் தர்ற வேலையில் சேரேன்'' என்ருன். அவள் 'உம்' கூடக் கொட்டவில்லை.

அன்று மாலை மாமனர் சிற்றுண்டி சாப்பிடும்போது அபயம் மாடியில் தன் புடைவைகளை மடித்துக்

கொண்டிருந்தாள். கீழே இறங்கி வந்த போது, ''அபயம்!'' என்று அவர் அழைத்தார். அபயம் அவர் முன் போய் நின்ருள்,

''உன் மாமியாருக்குத் திருப்தியா ஒன்ணாந் தேதி அன்னிக்கு நான் சொல்ற இடத்திலே வேலையை ஒத்துக்கோ. மாசம் எழுநூறு ரூபா தான் இப்போதைக்குக் கெடைக்கும்.

''ஒன்ணாந் தேதி அன்னிக்கு நானே என் காரில் உன்னை அழைச்சுண்டு போறேன்.''

''சரி மாமா.''

அபயம் வேலைக்குப் போக ஆரம்பித்து மூன்று மாதங்களாகி விட்டன. மிட்டல் அண்ட் கோ என்ற கம்பெனியில் அவளுக்கு வேலை என்று அறிந்ததில் சாரதாவுக்குத் திருப்தி. அது ஒரு பெரிய கம்பெனி.

சரியாக எட்டரை மணிக்கே சாப்பிட உட்கார்ந்து, ஒன்பது மணிக்கு மயிலாப்பூர் குளத்திலிருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸைப் பிடிக்க அபயம் பறக்கிறபோது, அதைப் பார்க்கும் சாரதாவுக்குப் பெருமையாக இருந்தது. மாலையில் ஐந்தே முக்காலுக்கு அவள் வீடு திரும்பியபோது சாரதாவே சிற்றுண்டியும் காபியுமாக உபசரித்தாள்.

முதல் மாதச் சம்பளத்தை அபயம் சாரதாவிடம் கொடுத்தபோது, மனம் புல்லரிக்க நாத் தழுதழுக்க, ''எனக்கு எதுக்கும்மா பணம்? சுவாமி படத்துக்கு முன்னாடி வச்சு நீயே உன் உபயோகத்துக்கு எடுத்துக்கோ''! என்றாள் சாரதா.

வீட்டில் நிலவும் அமைதியைக் கண்டு அட்வகேட் திருமூர்த்தியும் சிவாவும் பிரமித்துப் போனார்கள். மருமகளுடைய முகத்தில் ஒரு தனிப் பிரகாசம் ஜொலிப்பதைச் சாரதா கண்டாள். அந்த ஜொலிப்புக்கு என்ன காரணம் என்பதும் விரைவிலேயே புரிந்தது.

''நீ இனிமே, பஸ்ஸிலே போக வேண்டாம் அபயம். அப்பா வோடே கார்லே போய், கார்லேயே திரும்பி வா.''

''அது எப்படி மாமி முடியும்? அப்பா பத்து மணிக்கு மேலே புறப்படறார். நாலு நாலரைக்கெல்லாம் திரும்பறார். என் ஆபீஸ் பத்து மணிக்கு ஆரம்பம்.''

''உடம்புக்கு ஏதும் வராதா?''

"ஒண்ணும் வராது மாமி. என் மாதிரி இருக்கிற பெண்களெல்லாம் காரிலா போகிறார்கள்?"

"வளைகாப்பு ஆனதும் லீவ் எடுத்துக்கொள். லீவ் குடுப்பார்கள் இல்லியா?"

"அதுபத்தி நான் இன்னும் யோசிக்கவேயில்லே, மாமி."

"நீ வேலைக்குப் போறது உன் அம்மா அப்பாவுக்குப் பிடிக்கலே, இல்லியா?"

"நான் இங்கே நடக்கறது பத்தி அங்கே பேசறதில்லே."

நாட்கள் ஓடின. வளைகாப்பும் சீமந்தமும் நடந்தன.

சீமந்தத்துக்கு மறுநாள்.

"இனிமே நீ ஆபீஸ் போக வேண்டாம், அபயம்."

"ஏன் மாமி?"

"இனிமேதான் ஓய்வு வேணும்; முழு ஓய்வு எடுத்துக்கொள்ளணும்."

"ரெண்டு நாள் முன்னாலே டாக்டர் விஜயா சொன்னாளே, இன்னும் ஒரு மாசத்துக்கு ஆபீஸ் போகலாம்னு!"

"டாக்டர் ஆயிரம் சொல்லுவா. இது உனக்குத் தலைச்சன். சீமந்தம் ஆனகையோட நீ உன் பொறந்த வீட்டுக்குப் போக வேண்டியவள். பிடிவாதமா ஆபீஸ்தான் போவேன்னு போறே."

"நிச்சயமா ஆபீஸ்லே பிரசவிக்க மாட்டேன், மாமி!"

இதைக் கேட்டுக் கொண்டே வந்த திருமூர்த்தி, "என்ன சாரதா, அபயம் என்ன சொல்றா?" என்றார்.

"நீங்கதானே இவளுக்கு வேலை வாங்கிக் குடுத்தீர்கள்? நீங்களே மிட்டல் கம்பெனி மானேஜிங் டைரக்டர் கிட்டே சொல்லி இவளுக்கு உடனடியா லீவ் குடுக்கச் சொல்லுங்கள். உங்களுக்குப் புண்ணியமா இருக்கட்டும்."

"இப்ப என்னையும் பம்பரமாக் கறே இல்லே?"

"நான் புறப்படறேன் மாமா" என்று அபயம் கைப் பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

சாரதாவுக்குக் கண்கள் கனத்தன.

"நான் செஞ்சது தப்பு மாதிரிப் படறது" என்றாள்.

திருமூர்த்தி பதில் சொல்லவில்லை.

அடுத்த வாரம் ஒரு நாள், ஜட்ஜ் ராமநாதனுடைய மனைவி தேவகி சாரதாவை அழைத்துக் கொண்டு நகை ஒன்று வாங்க நகரத்துக்குச் சென்றாள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட சாரதா, "என் வீட்டுக்காரர் பெரிய அட்வகேட்டுன்னு பேரு. ஆனா ஒரு தடவைகூட அவரை நான் கோர்ட்டுல பார்த்ததில்லே" என்றாள்.

தேவகி சிரித்தாள்.

"இப்ப இந்தக் கடையிலிருந்து நீயும் நானும் எங்கே போகப்போகிறோம்னு நெனைச்சே, சாரதா? ஹைகோர்ட்டுக்குத்தான். இன்னிக்கு ஜட்ஜ் வழக்கத்துக்கு முன்னாடியே புறப்பட்டுட்டார். அவருடைய டிபனும் காபியும் இப்பச் கார்லே இருக்கு."

இருவரும் ஹைகோர்ட்டை அடைந்தார்கள். தேவகி தன் கணவரைப் பார்க்க வேண்டி முதல் மாடியில் இருக்கும் திருமூர்த்தியின் அறையை நோக்கி நடந்தாள். பிற்பகல் ஒரு மணிக்கு மேலாகி விட்டதால் கணவர் நிச்சயமாக அறைக்குத் திரும்பியிருப்பார் என்று சாரதா நம்பினாள்.

நீண்ட அறை. பிரவேசித்ததும் இடப்பக்கமும் வலப் பக்கமுமாக இரு சிறு மேஜைகள். டைப் அடிக்கும் மெஷின்கள் வெறிச்சோடின. குமாஸ்தாவின் மேஜை மீது கேஸ் கட்டுகள் குவிந்து கிடந்தன. அறையின் மறு கோடியில் ஒரு திரை. அவள் அதைத் தாண்டினாள்.

அக்கணமே சாரதா சிலையானாள். சாய்வு நாற்காலியில் அமர்ந்து திருமூர்த்தி, தம் கண்களை மூடிய படியே ஏதோ சொல்லிக் கொண்டு வர, தலை நிமிராமல் அபயம் எழுதிக்கொண் டிருந்தாள்.

இருவரும் தான் வந்திருப்பதைக் கவனிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட சாரதா திரும்பினாள். திரும்புகையில் 'ஸ்க்ரீன்' இடித்தது.

"அட! சாரதாவா?"

"இதான் மிட்டல் கம்பெனியா?"

"எனக்குத் தானுன்னு ஒரு குமாஸ்தா இருந்தான் இல்லியா, சாரதா?" என்று கேட்டார் திருமூர்த்தி.

"கேள்வியை இன்னொரு கேள்வியாலே தாக்காதீங்கோ. இதான் மிட்டல் கம்பெனியா?"

அபயம் லேசாகச் சிரித்தாள்.

"மாமி, உங்களுக்கு வேண்டியது நான் வீட்லே விருதாவாப் பொழுதைக் கழிச்சு, சோம்பேறியா மாறப்படாதுங்கறது தானே? அதனால்தான் நான் வேலைக்குப் போகணும்னு பிடிவாதமா இருந்தீர்கள். தானு என்கிற குமாஸ்தா வேலையை விட்டுப் போனதும் அட்வகேட் என்னை இந்த இடத்தில் நியமிச்சார். நான் இங்கே நாவல் படிச்சுண்டு தூங்கிண்டு இருக்கேனு, இல்லே, குமாஸ்தா வேலை செய்யறேனானு நீங்க மாமாவைக் கேட்க வேண்டாம். அக்கம்பக்கத்துச் சேம்பர்லே விசாரியுங்கோ. ஏன், இந்த ஹைகோர்ட்டையே சுத்திச் சுத்தி வந்து கேளுங்கோ" என்றாள்.

"சாரதா, ஏதோ விளையாட்டா இவளை என்னுடைய சேம்பர்லே வந்து பொழுதைக் கழின்னு சொல்லி உன்கிட்டே நாடகம் ஆடினேன். ஆனா இவ எம். ஏ. புத்திசாலி. இங்கே நேரத்தை வீண் பண்ணாமே குமாஸ்தா செய்யற வேலை யெல்லாம் செய்ய ஆரம்பிச்சாள்."

"நம்ப மாட்டே, கேஸ் கட்டுகளைப் படிச்சுப் படிச்சு, எதை எப்படி எழுதணும்னுகூடக் கத்துண்டுட்டா, இப்பத் தபால் மூலம் சட்டமும் படிக்கறா" என்றார் திருமூர்த்தி.

"நீங்க அப்படிப் பிடிவாதமா என்னை வேலைக்குப் போகத் தூண்டியது இப்ப நல்லதாய் போயிடுத்து மாமி. அட்வகேட் தொழில் எவ்வளவு சிறப்பானது, சுவாரஸ்யமானதுன்னு தெரிஞ்சுண்டேன். இன்னும் மூணு வருஷத்திலே நான் மாமாகிட்டே குமாஸ்தாவா இருக்க மாட்டேன்; ஜூனியர் அட்வகேட்டா இருப்பேன்!"

ஒரு நிமிடங்களுக்குச் சாரதாவால் பேச முடியவில்லை. பின் அவள், "நீ இங்கே இப்படி இருக்கிறது சிவாவுக்குத் தெரியுமா?"

"அவன்தான் சாரதா, இந்த யோசனையையே குடுத்தான். மிட்டல் கம்பெனின்னு கம்பெனியின் பேரையும் அவன்தான் சொன்னான்."

"எல்லாருமாச் சேர்ந்து என்னை ஒரு ஜோக்கரா ஆக்கி விட்டீர்கள்!" என்றாள் சாரதா.

"ஆரம்பத்திலே அப்படி நெனைச்சது உண்மைதான். ஆனா இப்ப நான் நெஜமாவே ஒரு வேலையில் இருக்கேன் மாமி" என்றாள் அபயம்.

"நீ சொன்ன மிட்டல் கம்பெனி தான் உனக்கு இப்போதைக்கு லீவு குடுக்காது. இந்த முதலாளியாவது குடுப்பாரா? என்ன, உங்ககிட்டேதான் கேட்கிறேன். இவ என் மாட்டுப் பொண். உங்களுக்குந்தான். நமக்குப் பிரசாதமாக் கெடைக்கப் போற ஒரு பேரனையோ பேத்தியையோ உத்தேசித்தாவது இவளுக்கு லீவு கொடுப்பேளா?"

"நான் போன மாசமே கொடுத்தாச்சே! இவதான் பிடிவாதமா வந்துண்டிருக்கா. வேணும்னு நீயே இவளைக் கேளு."

"அபயம்!"

"என்ன மாமி?"

"வா, போகலாம்."

"சரி, மாமி."

"ஒரு நன்மையை உத்தேசிச்சு நான் செய்தது எவ்வளவு கொடுமையா விபரீதமா முடிஞ்சுடுத்து! என்னை மன்னிச்சுடு, அபயம்!"

சாரதாவின் தொண்டை தழுதழுத்தது.

"என்ன மாமி, பெரிய பெரிய வார்த்தைகளைக் கொட்டறேள்? சத்தியமாச் சொல்றேன், எனக்கு நீங்க ஒரு பெரிய அஸ்திவாரத்தையே கட்டிக் குடுத்திருக்கேள். என்னையும் மீறி எனக்கு என்னுடைய வேலையில் ஒரு ஆர்வம் வந்து, அது இப்ப அட்வகேட்டா வரணும் என்கிற வெறியையும் உண்டாக்கிவிட்டது."

"நான் இவளை இப்ப அழைச்சிண்டு போறேன். குழந்தை அஞ்சாறு மாசம் வளர்ந்தப்புறம் இவ தன் இஷ்டப்படி உங்ககிட்டே மறுபடியும் வேலைக்கு வரலாம். லாயராகவும் இருக்கலாம்."

இருவரும் படி இறங்கி நடந்தார்கள். சாரதா அபயத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள். என்றும் இல்லாத உற்சாகத்தோடு அவள் மருமகளுடன் காரை நோக்கி நடந்தாள். *

லக்ஷ்மி
அளிக்கும்
தீபாவளி
வாழ்த்துக்கள் !
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
ADWAVE/LMC/2479

To keep pace with the advances in technology, Addison today are equipped with fully automatic computer numerically controlled machines that ensure highest possible accuracies.
The advantages of these machines are :—
' Production rate is assured Operator's fatigue is reduced
' Delivery schedules can be advanced
' Machine downtime is reduced
' Human error is completely eliminated
As leaders in the field, Addison manufacture a comprehensive range of precision Engineers' Cutting Tools — Twist Drills, Threading Taps, Reamers, Milling Cutters, End Mills, etc. — both high speed steel and carbide tipped.
Addison's top of the line technology offers the finest of tools, whatever the machining operation — turning, drilling, reaming, tapping, facing, boring, milling, chamfering, etc., and whatever the material— nimonic steels, alloy steels, cast iron, non-ferrous metals, plastics, etc.
Lower overall machining costs, longer tool life and faster production are the other measurable benefits from Addison tools.
Addison's service engineers work closely with their counterparts at customers' factories, solving machining problems, matching up tools with applications, expediting special requirements ...... and maximising productivity.
Addison–Leaders in cutting tool technology
ADDISON
Addison & Company Limited
(A unit company of the Amalgamations Group
803, Anna Salai, Madras - 600 002
Branches : Ahmedabad, Bangalore, Bombay, Calcutta, Ernakulam, Kanpur, Ludhiana, Madras & New Delhi.
ADDISON
zooming into zero error
MAC/ADD-139

ஓர் அடி

— மு.மு. இஸ்மாயீல்

கம்பனுடைய பாடல் ஒவ்வொன்றிலும் எதுகை மோனைகளுக்காக அழகு சொட்டுவது ஒருபுறம் இருக்க, பொருள் நயத்திலும் ஒவ்வொரு சொல்லும் ஓர் அழகு கொழித்துக் கொண்டிருப்பதை அவன் பாடல்களைக் கூர்ந்து நோக்குபவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

அகலிகையின் சாப விமோசனத்துக்குப் பிறகு, விசுவாமித்திரன் இராம இலக்குவரை மிதிலைக்கு அழைத்துச் செல்கிறான். மிதிலை நகரில் பற்பல வீதிகளின் வழியாகச் செல்லும்பொழுது அவர்கள் கண்ட காட்சிகளைக் கம்பன் அற்புதமாகப் பாடுவான்.

வீதிகளைக் கடந்து அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழியை அவர்கள் நெருங்குகிறார்கள். அப்பொழுது சீதை பேரெழில் பொழிய, கன்னிமாடத்தில் அன்னம் ஆடும் துறையை நோக்கி நிற்கிறாள்.

அப்படி அவள் நிற்கும் பொழுது வீதியில் விசுவாமித்திரன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் நடந்து செல்கிறார்கள். அப்படிச் செல்லும் பொழுது இராமன் சீதையை நோக்குகிறான், சீதையும் இராமனை நோக்குகிறாள். இதைத்தான் கம்பன்,

''எண் அரு நலத்தினாள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றைஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்''

என்று பாடுவான்.

இப்படி ஒருவரை ஒருவர் நோக்கியதன் விளைவினை ஒப்புயர்வற்ற மூன்று பாடல்களில் பாடிவிட்டு, இராமன் சீதையின் பார்வையினின்றும் மறைந்து போனதைக் கம்பன்,

''அந்தமில் அழகனை அணைகிலாமையால்,
பைந்தொடி, ஓவியப் பாவை போன்றனள்,
சிந்தையும், நிறையும், மெய் நலனும், பின்செல,
மைந்தனும் முனியொடு மறையப் போயினான்''

என்று பாடுகிறான்.

கம்பராமாயணம் முழுவதற்கும் உரை எழுதிய 'திரு வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் அவர்கள் தம்முடைய உரையின் நான்காம் பதிப்பு வரையில் இந்தப் பாடலின் பாடத்தை மேற்கண்டவாறே கொடுத்திருந்தார்கள். இப்பாடலுக்கு அவர்கள் கொடுத்திருக்கும் பதவுரையாவது:

''எல்லையில்லாத அழகையுடைய இராமனை, (அப்பொழுது உடனே) தழுவப்பெறாத மனவருத்தத்தால் பசும் பொன்னாலாகிய தொடி என்னும் வளையையுடைய பிராட்டி, (மூச்சுப் பேச்சற்ற) சித்திரப்பதுமை போல, அசைவற்று நின்றாள். (அவளது) மனத்தின் நினைப்பும், மனவுறுதியும், உடம்பின் அழகும் (தன்) பின்னே வரும்படி, இராமபிரானும் விசுவாமித்திர முனிவன் பின்னே கண் மறையச் சென்றான்.''

'கம்பராமாயண சாரத்'தின் ஆசிரியராகிய திரு வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் இந்தப் பாடலின் பாடத்தை இப்படித்தான் கொடுத்திருக்கிறார்கள். இப்பாடலின் கருத்தை அவர்கள் அடியிற் கண்டவாறு எடுத்துக் காட்டுகிறார்கள்:

''கொண்டு கூட்டு — அந்தம் இல் அழகனை அணைகிலாமையால் பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள், (அவளுடைய) சிந்தையும், நிறையும், மெய் (யின்) நலனும் (தனக்குப்) பின் செல்ல, மைந்தன் முனியோடு (கண்) மறையப் போனான்.

பொருள்: எல்லையில்லாத அழகுடையானாகிய இராமனை அடையாமையால் சீதை உயிரில்லாத சித்திரப் பாவையை ஒத்தாள்; அவளுடைய மனமும், கற்பும், தேக சௌந்தரியமும் தன்னைப் பின் தொடர இராமன் விசுவாமித்திர முனிவனுடன் கண் மறையச் சென்றான்.'

திரு ராவ் சாகிப் மு. ராகவையங்கார் அவர்களால் பதிப்பித்து 1942—இல் வெளியிடப் பெற்ற ஆழ்வார் திருநகரி பதிப்பிலும் இப்பாடல் மேற்கண்டவாறே கொடுக்கப் பெற்றிருக்கிறது. அப்பொழுதும், அதற்கு முன்னும் வெளியான வேறு பல பதிப்புகளிலும் இப்பாடல் இவ்வாறே காணப் பெறுகிறது.

வழக்கம் போல, இப்பாடலின் நான்கு அடிகளுக்கும் பல பாட பேதங்கள் உண்டு. நாம் இங்கே காணப் போவது முதலடியின் பாட பேதங்களையே. பின் மூன்று அடிகளுக்கும் பொருள் காண்பதில் சிரமம் இல்லை. இரண்டாம் அடி சீதையைப் 'பைந்தொடி' என்று குறிப்பிட்டு, அவள் ஓவியப் பாவை போல் ஆனாள் என்றுதான் கூறுகிறது:

இங்கும் கூட, 'போன்றனள்' என்ற சொல் அமையப் பெற்றிருப்பதால் திரு வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் அவர்கள் கூறுவது போல, 'சித்திரப் பதுமை போல அசைவற்று நின்றாள்' என்று கூறுவது அவ்வளவு சிறக்காது.

ஆனால், திரு வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கூறுவது, 'சீதை உயிரில்லாத சித்திரப் பாவையை ஒத்தாள்' என்பது ஒருவாறு பொருந்தும்.

என்றாலும், கவிஞன் எந்த நிலையைப் பாடுகின்றானோ, அந்த நிலையில் சீதை சித்திரப்பாவை போன்று ஆனாள் என்று கூறுவதுதான் நலம் சிறக்கும்.

இதில் அடங்கியிருக்கும் பொருள் என்னவென்றால், இந்தப் பாடலில் சீதையினுடைய எந்த நிலையைக் கம்பன் பாடுகிறானோ, அந்த நிலைக்கு முன்னால் சீதை சித்திரப்பாவை போன்று இருக்கவில்லை, இப்பொழுதுதான் சித்திரப்பாவை போன்றவள் ஆனாள். இதன் பொருத்தத்தை முதல் அடியை ஆராயும் பொழுது பார்ப்போம்.

மூன்று, நான்காம் அடிகளின் பொருள் என்னவென்றால், விசுவாமித்திர முனிவரோடு இராமனும், சீதையின் கண் பார்வையினின்றும் மறைந்து போனான்; அப்படிப் போன இராமன் பின்னால், சீதையினுடைய சிந்தையும் மன உறுதியும், உடலழகும் தொடர்ந்து சென்றன.

'நிறை' என்ற சொல்லுக்குக் கற்பு என்ற பொருளோடு, 'மனத்தைக் கற்பு வழியில் நிறுத்துகை' என்ற பொருளும் உண்டு. இங்கே இராமனும், சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கி, இருவர் இதயமும் மாறிப் புக்குக் காதலில் கரந்துவிட்டார்கள். ஆகையால் இராமன் பின்னால் சீதையின் சிந்தையும், மன உறுதியும், உடலழகும் தொடர்ந்து சென்றன.

மூன்றாம் அடியின் இறுதியிலுள்ள 'பின் செல' என்ற சொல்லாட்சியும், நான்காம் அடியின் இறுதியில் இடம் பெற்றிருக்கும் 'போயினான்' என்ற சொல்லாட்சியும் அருமையானவை. இரண்டையும் சேர்த்து நோக்கினும், தனித்து ஆராய்ந்தாலும் சிறப்பு மிகவே செய்யும்.

'போயினான்' என்பதற்கும், 'போனான்' என்பதற்கும் பொருளில் வேறுபாடு இல்லைதான். ஆனால் 'போயினான்' என்ற சொல்லிலேயே ஒரு 'நீட்டல்' இருக்கிறது; தொடர்ந்து நிகழும் நிகழ்ச்சியைக் குறிக்கின்ற ஓர் உணர்வினை அச்சொல் உண்டாக்குகிறது; அதே சமயத்தில், அச்சொல் குறிக்கும் செயலினால் ஒரு வருத்தமும் உண்டாகிறது. சீர் குறித்து இச்சொல் ஆளப் பெற்றிருக்கிறதென்று கொள்ளினும், இச்சொல் காட்டும் சிறப்புக்களை மறப்பதற்கில்லை.

இனி, இப்பாடலின் முதலடியை நோக்குவோம்.

முதலடியின் தொடக்கத்தில் காணப்பெறும் சொற்களுக்கு இருக்கும் பாட பேதங்களாவன:—

1. அந்தமில் நோக்கிமை
2. அந்தமில் நோக்கினை
3. அந்தமில் அழகனை

முதலடியின் பிற்பகுதிக்கு இருக்கும் பாட பேதங்களாவன:—

1. ஆலகிலாமையால்
2. அணுகலாமையால்
3. அணுகிலாமையால்
4. அழகிலாமையால்

இவற்றில் எந்தப் பாடம் பொருந்தும், சிறக்கும் என்று தீர்மானிப்பதற்கு இங்கே இரண்டு உரைகள் இருக்கின்றன. முதலாவது, இந்த முதலடி கொடுக்கும் பொருள். இரண்டாவது, எந்தப் பாடத்தை எடுத்துக் கொண்டால் இரண்டாம் அடியோடு சிறப்பாகப் பொருந்தும் என்பது.

தம்முடைய நான்காம் பதிப்பில் திரு வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் அவர்கள் தம் பாலகாண்ட உரையின் இறுதியில், ஒரு பக்கத்தில் அடங்கிய ஓர் அநுபந்தத்தைச் சேர்த்திருக்கிறார்கள். அந்த அநுபந்தத்தின் தொடக்கத்தில் அவர்கள் அடியிற்கண்டவாறு கூறுகிறார்கள்.

''மிதிலைக் காட்சிப் படலம் 39-ஆம் பாடலில் முதலடிக்குத் திருவாளர் பி. ஸ்ரீ. ஆசார்யர் அவர்கள் 'கம்பனும் பாட பேதங்களும்' என்ற கட்டுரையில் ஏட்டுப் பிரதியிற் கண்டதாக, ஒரு பாடம் குறித்திருக்கின்றனர். அது மிகவும் பொருத்தமானதாகக் காணப்பட்டதால், வாசகர்கள் படித்து மகிழ்வுற வேணுமென்ற கருத்தினால் இங்குக் காட்டப்படுகின்றது. அது, 'அந்தமில் நோக்கிமை அணைகிலாமையால்' என்பது.''

இவ்வாறு எழுதிவிட்டு இப்பாடம் ஏன் பொருத்தமாகக் காணப்பெறுகிறது என்பதற்குத் தாம் கருதிய காரணங்களையும் கொடுக்கிறார்கள்.

1957-இல் வெளிவந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பும், 1958-இல் வெளிவந்த மர்ரே எஸ். ராஜம் பதிப்பும், 1967-இல் வெளிவந்த மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் நூல் நிலையப் பதிப்பும், 1976-இல் வெளிவந்த சென்னை, கம்பன் கழகப் பதிப்பும் முதலடிக்கு இந்தப் பாடத்தையே கொடுக்கின்றன.

இனி முதலடியின் இந்தப் பாடத்தின் பொருத்தத்தைப் பார்ப்போம்:

இந்த முதலடியில் 'அந்தமில் அழகனை' என்பது பாடமாக இருப்பின், அடுத்து வரும் 'அணைகிலாகமையால்' என்ற சொற்றொடருக்கு, இராமனைச் சீதை உடனே தழுவ முடியாததால்' என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

இந்தப் பொருள் எப்படிப் பார்த்தாலும் சிறக்காது என்பது தெளிவு.

வீதியில் போகிறவனோ சக்கரவர்த்தி திருமகன். கன்னிமாடத்தில் நிற்பவளோ அரசிளங்குமரி. அப்படி நின்று கொண்டிருக்கும் சீதையைச் சில அற்புதமான பாடல்களில் கம்பனே வருணிப்பான். அப்படி வருணிக்கும் பொழுது, அவளுடைய அழகை மாத்திரம் அவன் வருணிக்கவில்லை; அவளுடைய உயர்வையும் அந்தஸ்தையும் பலபடப் பாடுகிறான்:

''மலர்மேல் நின்று இம் மங்கை
இவ்வையத்திடை வைகப்
பலகாலும் தம் மெய் நனிவாடும்
படி நோற்றார்,
அலகு ஒவு இல்லா அந்தணரோ
நல் அறமேயோ?
உலகோ? வானோ? உம்பர்கொலோ
ஈது உணரேமால்!''

என்றே பாடி விடுகிறான்,

'இவள் செந்தாமரை மலரின் மேலிடத்திலிருந்து இப்பூவலகத்தில் வைகும் பொருட்டு, பல காலமாய்த் தங்கள் உடம்பினை வாட்டித் தவமிருந்தவர்கள் அளவற்ற அந்தணரோ? நல் அறந்தானோ? இப்பூவுலகமேயோ? விண்ணுலகந்தானோ? எல்லாத் தேவர்களுமேயோ? நாம் எப்படி உண்மையை அறிவோம்?' என்பது கம்பனின் வாக்கு.

சீதையை இப்படிப் பாடியவன், வீதியில் நின்று கொண்டிருந்த இராமனைக் கண்ட மாத்திரத்தில், 'கண்டதும் காதல்' என்பது போல, காதல் உணர்வு பெற்றுவிட்ட போதிலும் அவனை உடனே தழுவிக் கொள்ள வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள் என்று பாடியிருப்பானோ? கம்பன் அப்படிக் கூறியிருப்பானேயானால், அந்தப் பாத்திரத்தின் பவித்திரத்துக்கே பங்கம் விளைவித்தவன் ஆவான் அவன்.

மேலும், எப்படித்தான் சீதை அப்படி ஆசைப்பட்டிருக்க முடியும்? கன்னிமாடத்தின்மேல் நிற்கும் அவள் வீதியில் குதிக்க விரும்பினாளா? அல்லது வீதியில் நடந்து போய்க் கொண்டிருக்கும் இராமன், கன்னிமாடத்தின் மேல் பாய்ந்து ஏறி வரவேண்டும் என்று எதிர்பார்த்தாளா? முனிவன் முன் செல, இளவல் பின்வர, இடையிலே நடந்து போய்க் கொண்டிருக்கும் இராமனால் அப்படிச் செய்யத்தான் முடியுமா? விரக தாபத்தால் சீதையும், இராமனும் பெருமளவு தனித்தனியாகத் தவித்ததைப் பின்னர்க் கம்பன் பாடுவான். ஆனால், அது வேறு விஷயம். அதற்கும் இராமனை உடனே தழுவிக்கொள்ள வேண்டும் என்று சீதை ஆசைப்பட்டாள் என்பதற்கும் சம்பந்தம் இல்லை.

இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இராமனும் சீதையும் இப்படி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட நிகழ்ச்சி வால்மீகத்தில் இல்லை, தமிழரின் அகப்பொருள் இலக்கணத்திற்கேற்ப இதைக் கம்பன் தன் காப்பியத்திலேயே புகுத்தினான், அப்படிப் புகுத்தியவன் தன்னுடைய புதுமையால் காப்பியமும், காப்பியப் பாத்திரங்களும், மேலும் சிறக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தியே இருப்பான், இராமனை உடனே தழுவிக்கொள்ள வேண்டுமென்று சீதை விரும்பினாள், ஆனால் அது முடியாமற் போயிற்று என்று கம்பன் பாடியிருப்பானேயானால், கம்பனின் இந்த நோக்கம் நிறைவேறாது. ஆகையால், 'அந்தமில் அழகனை' என்ற பாடம் இந்த முதலடிக்குப் பொருந்தாது.

இப்பொழுது, முதலடியை, 'அந்தம் இல் நோக்கு இமை அணைகிலாமையால்' என்று கொண்டு அதன் பொருளைப் பார்ப்போம். 'அந்தம்' என்ற சொல்லுக்கு, 'முடிவு' என்றுதான் பொருள். ''நோக்கு' என்ற சொல்லுக்குப் 'பார்வை' என்ற பொருளும் உண்டு. 'கண்' என்ற பொருளும் உண்டு. 'இமை' என்ற சொல் 'கண்ணிமை'யைத்தான் குறிக்கும். இப்பொழுது இந்த முதலடியின் பொருள், 'முடிவில்லாத கண்களின் இமைகள் ஒன்றையொன்று தழுவிக் கொள்ளாததால்' என்றாகும். அதாவது 'கண்கள் திறந்தவை திறந்தபடி இமைக்காமல் இருந்ததால் என்று பொருள்.

இந்தப் பொருள் இரண்டாமடியோடு அழகாகப் பொருந்துவதைப் பார்க்கிறோம். இரண்டாமடியில் சீதை 'ஓவியப் பாவை போன்றனள்' என்று கவிஞன் கூறுகிறான். முதலடி அதற்கான காரணத்தைக் கொடுக்கிறது. அது தான், 'கண்கள் இமையாமை.'

ஓவியப் பாவையினுடைய சிறப்புப் பண்பு என்னவென்றால், அசைவற்றிருத்தல் ஓவியப் பாவையின் கண்கள் விழித்தபடியே இருக்கும். இங்கே, இராமனைக் கண்ட சீதை கண் இமைகளை மூடாமல், அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அது காரணமாகவே அவள் ஓவியப் பாவை போலானாள்.

இங்கே கவனிக்க வேண்டியது இன்னும் ஒன்றே ஒன்றுதான்: கண்களை 'முடிவற்ற கண்கள்' என்று சொல்வது பொருந்துமா என்பது தான் அது.

பெண்களின் கண்களை 'நீண்ட பெரும் கண்கள்' என்று குறிப்பிடுவது தமிழ் இலக்கிய வழக்கு, உண்மையில் சீதையின் அழகினை இராவணனிடத்தில் வருணிக்கப் போந்த சூர்ப்பணகை, சீதையினுடைய கண்களை, 'கடலினும் பெரிய கண்கள்!' என்று வியப்பித்துக் குறிப்பிடுவாள். கண்கள் கடலினும் பெரியனவாக இருப்பின், அந்தக் கண்களை 'அந்தமில் கண்கள்' என்று சொல்வது தவறாகாது.

'நோக்கு' என்ற சொல்லுக்குப் 'பார்வை' என்ற பொருளும் உண்டு என்பதைக் கண்டோம். அந்தப் பொருளில் இந்த முதலடியை ஆராய்ந்தால், ஓர் அற்புதமான நாடகக் காட்சியைக் காணலாம். ஒரு சொல்லைக் கொண்டே ஒரு நாடகக் காட்சியைப் படைத்துவிடக் கூடியவனல்லவா கம்பன்? இமை என்பதற்கே, 'கண்ணிமை' என்று பொருள் இருப்பதால், நோக்கு' என்பதற்கு, 'பார்வை' என்ற பொருளைக்கொள்ளும் பொழுது, 'நோக்கு' என்ற சொல்லுக்கும் 'இமை' என்ற சொல்லுக்கும் இடையே, 'கண்'

என்ற சொல்லை வருவித்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமற் போய்விடுகிறது.

இப்பொழுது, அந்தக் காட்சியைக் காண்போம். கன்னிமாடத்தின் மேல் சீதை நிற்கிறாள், கீழே வீதியின் ஒரு புறத்திலிருந்து விசுவாமித்திரன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் வெளிப்பட்டுக் கன்னிமாடத்தைக் கடந்து வீதியின் மறு புறத்துக்கப்பால் போய்விடுகிறார்கள். மேலே நின்று கொண்டிருந்த சீதை அவர்கள் வீதிக்குள் நுழைந்த உடனேயே அவர்களைப் பார்த்து விட்டாளா? அல்லது அவர்கள் கன்னிமாடத்தின் பக்கத்தில் போகும் பொழுதுதான் அவர்களை அவள் பார்த்தாளா? அவர்கள் கன்னிமாடத்தின் பக்கத்தில் போகும்பொழுது அவர்களை அவள் பார்த்தாள். அதிலிருந்து இராமன் வீதியின் மறுபக்கம் சென்று கண் பார்வையிலிருந்து மறையும் வரையில் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள் என்பது தெளிவு. அதற்கு முன்னாலேயே அவர்களை அவள் பார்த்து விட்டாளா என்பதுதான் கேள்வி.

பொழுது போக்காகவும், வேடிக்கை பார்ப்பதற்காகவும் மாடியில் நின்று கொண்டு தெருவினைப் பார்க்கும் ஆண்களும், பெண்களும் நமக்குப் பழக்கமானவர்கள். அவர்கள்

AMCO
HEARTIEST
DEEPAVALI
GREETINGS
AMCO Batteries Limited
Bangalore


Deepavali Greetings
INORGANIC CHEMICALS
BLEACH LIQUOR
CAUSTIC SODA
(Commercial & Rayon
grade: lye, solid and flakes)
STABLE BLEACHING POWDER
HYDROCHLORIC ACID
LIQUID CHLORINE
ALUMINIUM SULPHATE
POTASSIUM CHLORATE
CALCIUM CHLORIDE
SILICON TETRACHLORIDE
BROMINE
ORGANIC CHEMICALS
METHYL CHLORIDE
METHYLENE CHLORIDE
CHLOROFORM
CARBON TETRACHLORIDE
CHLORINATED PARAFFIN WAX
ETHYL SILICATE-40
THE METTUR CHEMICAL &
INDUSTRIAL CORPORATION LTD.
Mettur Dam R. S. 636402, Salem District, Tamil Nadu

தெருவின் இருபுறத்தையும் பார்த்துக் கொண்டிருப்பது இயற்கை; ஏனெனில், அதற்காகவே அவர்கள் அங்கே நிற்கிறார்கள். இங்கோ, சீதை கன்னிமாடத்தின் மேல் அப்படி நிற்கவில்லை. அவள் நின்றதை,

''பொன்னின் சோதி, போதினின்
நாற்றம், பொலிபூவின்
தென் உண் தேனின் தீம்சுவை,
செஞ்சொற் கவி இன்பம்
கன்னிம் மாடத்து உம்பரின்
மாடே, களிபேடோடு
அன்னம் ஆடும் முன் துறைக் கண்டு,
அங்கு அயல் நின்றாள்''

என்று கம்பன் பாடுகிறான்.

அதாவது, கன்னிமாடத்து உம்பரில் முன் துறையில் அன்னம் ஆணும் பெண்ணுமாக மகிழ்ச்சியோடு ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவள் அங்கே அருகில் நின்றாள்.

ஆகையால், வீதியின் இருபுறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை அவளுக்கில்லை. எனவே, விசுவாமித்திர, இராம இலக்குவர் தூரத்திலிருந்து வீதிக்குள் நுழைவதை அவள் கண்டிருக்க முடியாது.

ஆனால் அவர்கள் மூவரும் வீதியில் கன்னிமாடத்தின் அருகில் நடந்து சென்றபொழுது, இராமனும் அவளை நோக்கினான்; அவளும் இராமனை நோக்கினாள். அப்பொழுது அவள் கண்ணில் அகப்பட்ட இராமன், வீதிக்கு அப்பாற் சென்று அவள் கண் பார்வையினின்று மறையும் வரையில் சீதை கண் இமைக்கவில்லை; இராமனும் அவள் கண்களை விட்டு அகலவில்லை. இப்படியாக, இராமனைப் பின் தொடர்ந்து சீதையினுடைய பார்வை எல்லையில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. கண்கள் இமைக்காமலேயே நின்று விடுகின்றன. கண் பார்வையினின்றும் இராமன் அகல்கின்ற வரையில் இப்படியாகச் சீதையின் நிலை ஓவியப்பாவையின் நிலையாக ஆயிற்று. 'மறையப் போயினான்' என்ற நான்காம் அடியிலுள்ள சொல்லாட்சியும் இதனை வலியுறுத்தும்.

இப்படிப் பார்க்கும் பொழுது, 'அந்தமில் நோக்கு' என்ற சொற்றொடரிலுள்ள 'நோக்கு' என்ற சொல்லுக்கு, 'பார்வை' என்று பொருளைக் கொடுத்து, ஒரு நாடகக் காட்சியையே கண்டுவிடுகிறோம். வீதி வழியே சென்று கொண்டிருந்த இராமனை, அவன் வீதியைக் கடந்து சென்ற பிறகுங்கூட விழித்த கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருக்கும் சீதையாகிய ஓவியப் பாவையை நாமும் பார்த்துக் கொண்டு நின்று விடுகிறோம்.

சீதையினுடைய இந்தச் செயல் இராமனுக்குப் பொருந்தாது; இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது என்பதென்னவோ உண்மை. ஆனால் இராமனையே

மாக்லாக்:
காந்த சக்தி வாய்ந்த நம்பர் பூட்டு. சாவித் துவாரம் கிடையாது. எனவே எந்தத் திருடனோ கள்ளனோ மற்றொரு சாவி அல்லது கம்பி அல்லது மற்றொரு காந்த சக்தி வாய்ந்த சாவி கொண்டுகூடத் திறக்க முடியாது. ஒரு மாக்லாக்கை ரம்பமோ வெட்டு கத்தியோ கொண்டுகூட அறுக்க முடியாது

ஒவ்வொரு மாக்லாக்கிற்கும் அதற்கே உரிய தனிப்பட்ட சங்கேத எண் கொண்ட காந்த சக்தியுள்ள சாவி இருக்கிறது. 5000-க்கும் மேற்பட்ட வெவ்வேறு சாவி எண் இணைப்புகள்...சின்னஞ்சிறு செராமிக் காந்தக் கற்களை வெவ்வேறு இடங்களில் அமைத்துத் தயாரிக்கப் படுகின்றன. மறு சாவி வேண்டுமாயின், ஒவ்வொரு சாவியின் சங்கேத எண்ணையும் தெரிந்துகொண்ட பின்னர் தயாரிப்பாளர்களால் மட்டுமே தயாரிக்க முடியும் எனவே உங்களுடைய மாக்லாக்கின் சங்கேத எண்ணைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.



டெலமாக்:
உங்கள் தொலைபேசிக்கான காந்த சக்தி வாய்ந்த நம்பர் பூட்டு...எனவே மற்றவர்களால் உங்கள் டெலிபோனை பில் அதிகரிக்காது.

திறக்க: காந்தச் சாவியை பக்க-வெட்டில் வைத்து பூட்டு வளையத்தை தூக்கவும் ஒரு மாகலாக்கை அதன் சொந்த காந்தச் சாவியால் மட்டுமே திறக்க முடியும்.

விற்பனைக்கு விடுப்போர்:
மாக் என்டர்ப்ரைஸஸ்
105, ஏ-3, தன்ராஜ் இண்டஸ்ட்ரீஸ்
எஸ்டேட், சன்மில் லேன், லோயர் பரேல், பம்பாய் 400 013.
போன்: 890760, 393614, 896544, 896907

Mechanix-PI-3/83/222 Tam

பார்த்துக் கொண்டிருக்க, சீதையால் முடிந்தது; சீதையையே பார்த்துக் கொண்டிருக்க இராமனால் முடியாது; காரணம்: சீதை ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கிறாள். இராமனோ அவளுடைய பார்வையினின்றும் விலகிப் போய்க் கொண்டிருக்கிறான். ஆனால் வீதியின்வழியே நடந்துபோய்க்கொண்டிருக்கும் இராமனுக்குத் தன் முகத்தைத் திருப்பித் திருப்பிச் சீதையைப் பார்த்துக்கொண்டுபோவது பொருந்தவும் பொருந்தாது; முடியவும் முடியாது. அவனுடைய பாத்திரத்தின் தன்மை இதற்குப் பொருத்தத்தைக் கொடுக்காது. முன்னால் செல்பவன் முனிவன், பின்னால் வருபவன் இளவல். இடையிலே வரும் இராமன் கன்னிமாடத்தின் மேல் நின்று கொண்டிருக்கும் பெண்ணைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போக முடியாது.

'நோக்கு' என்ற சொல்லுக்கு, 'பார்வை' என்ற பொருளைக் கொடுத்து ஒரு பரந்த கருத்தையே கண்டு விடவும் முடியும்; ஏனெனில், எல்லாப் பார்வையுமே முடிவற்ற பார்வைதான்.

ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறோம்; அந்தப் பார்வைக்கு எல்லையோ, முடிவோ உண்டா? ஆகாயம் அந்தப் பார்வைக்குக் குறுக்கே வரும்பொழுது அந்தப் பார்வையைத் தடுத்து விடுகிறதே தவிர, பார்வைக்கு எல்லையில்லை. உண்மையில் ஆகாயம் என்பதே எல்லையற்ற வெளிதான்.

ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது விமானம் ஒன்று பறந்து செல்லுமாயின் அந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த விமானம் பார்வைக்கும் ஆகாயத்துக்கும் இடையே செல்லுமே தவிர, பார்வைக்கு எல்லை வகுத்துவிடாது. அந்த இடத்தைக் கடந்து விமானம் சென்ற பிறகு, ஆகாயத்தில் அது மறைந்த பகுதியை நாம் மீண்டும் காண முடியும்.

அதுபோலவே, கடற்கரையில் நின்று கொண்டு கடலைப் பார்க்கும் பொழுது வெகு தூரத்தில் கடலை ஆகாயம் தொடுவதைப் போன்ற ஒன்றைக் காண்கிறோம். அதுவும் பார்வைக்கு ஒரு குறுக்கீடாகுமேயன்றி, பார்வையின் எல்லையோ, முடிவோ ஆகாது. விமானத்தைப் பற்றிக் கூறியது கடலிலே செல்லும் கப்பலுக்கும் பொருந்தும். இந்த நோக்கில் எந்தப் பார்வையுமே எல்லையற்றதுதான். சீதையின் பார்வையையும் இந்தக் கருத்தில்தான் கம்பன், 'அந்தமில் நோக்கு' என்று குறிப்பிட்டான் என்று கொள்வதும் பொருத்தமேயாகும்.

இப்பொழுது 'நோக்கு' என்ற சொல்லுக்கு 'கண்' என்ற பொருளைக் கொடுத்தும், 'பார்வை' என்ற பொருளைக் கொடுத்தும், இந்தப் பார்வையை விடாமல் இராமனைத் தொடர்ந்து சென்றது காரணமாக, 'அந்தமில் நோக்கு' என்று கம்பன் கூறினான் எனக் கருத்துக் கொண்டும், பார்வைக்கு என்றுமே முடிவில்லை என்ற பரந்த கருத்தில், 'அந்தமில் நோக்கு' என்ற சொற்களைக் கம்பன் ஆண்டிருக்கக் கூடும் என்று கருத்துக் கொண்டும் பாடலை மீண்டும் படித்து ஆனந்தமும், மகிழ்ச்சியும் அடைவோமாக:

"அந்தமில் நோக்குஇமை அணைகிலாமையால்
பைந்தொடி, ஓவியப் பாவை போன்றனள்,
சிந்தையும், நிறையும், மெய்ந் நலனும், பின்செல
மைந்தனும், முனியொடு மறையப் போயினான்." ✻

OUR HEARTY DEEPAVALI GREETINGS

PCF

THE PALGHAT CHIT FUNDS PRIVATE LIMITED

Regd. Office. No. 16, Nana Street, T. Nagar, Madras-600 017.

ESTD. 1947. NEW CHITS INCD. 1951

Phone: 442583

Branch	Group	Capital Rs.	Monthly Rs.	Duration
T. Nagar, Madras. Phone: 442583	CL	50,000/-	500/-	100
George Town Madras. Phone: 23651	GTA	20,000/-	200/-	100
Ayanavaram, Madras. Phone: 615090	AMF AMB	25,000/- 10,000/-	500/- 100/-	50, 100
Hyderabad Phone: 35935	HDF	25,000/-	500/-	50,
Coimbatore Phone: 22491	CBC CBH	5,000/- 5,000/-	50/- 100/-	100 50,

Other Offices: Purasawalkam-Phone: 662315: Palghat-Phone-4403 and Arani-Phone: 46

Prize amounts are released on Securities only and not on personal sureties

38 Years Standing in Chit Business.

A.S.P. AYYAR
Managing Director

L. R. Swami—P. P.

PALAYAKAT COY. PVT. LTD.
MADRAS MADRAS
REGD. TRADE MARK
பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
CHARI
மதராஸ் பளயகாட் கம்பெனி (பி) லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001. போன்: 23040

தேவிபாரடைஸ் 70MM A-C • அபிராமி • பாரத்
தினசரி 3 காட்சிகள்
கமலா பகல் 11-30 மணி
சத்யா மூவீஸ்...
தங்கமகன்
கலர் [ஜெமினி]
A. ஜெகந்நாதன் B.A
இளையராஜா
S. ஜெகதீசன்
விஸ்வம்நடராஜ்
K.R. கிருஷ்ணன்
V. தமிழழகன்
G. தியாகராஜன்

கோமதி ஸ்வாமிநாதன்

மூன்றும் கோபாலன்

காட்சி—1

[வாசல் வராந்தாவில் பரமேசுவரன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார்.]

பரமேசுவரன்: (வேகமாகப் பத்திரிகையை மடக்கிவிட்டு) கமலா, கமலா!

[பரமேசுவரனின் பெண் விமலா வருகிறாள்.]

விமலா: என்னப்பா! கூப்பிட்டீங்களா?

பரமேசுவரன்: நான் கமகத்தைச் சரியாகத்தானே பிரயோகித்தேன்? கமலாவுக்குப் பதிலா விமலா வந்து நிற்கிறாயே!

விமலா: பத்திரிகையிலே சங்கீத விமரிசனம் படித்துக் கொண்டிருந்தீர்களா? அரைகுறையாக் கமகம், காந்தாரம், நிஷாதம்னு ஆரம்பிக்கிறீர்கள்! அம்மாவை வரச் சொல்றேன்.

பர: ஒரு நிமிஷம் நில். ஒரே குழப்பம். கமலா! விமலா! உன் பேரை மாத்தி வச்சுக்க, விமலா.

விமலா: கொஞ்சம் இப்படியே இருங்கோ. நான் பக்கத்து வீட்டிலே போய்த் தொட்டிலை இரவல் வாங்கிண்டு வந்து அதில் உட்கார்ந்து கொள்கிறேன். புதிசா எனக்கு ஒரு பேர் சூட்டுங்கோ! உங்க கொள்ளுப் பாட்டி பேரை யாருக்குமே வக்கலேன்னு குறைப்பட்டுக் கொள்வீர்களே! முத்து வெங்கட லட்சுமியா? அதை வச்சு ஒரு மீட்டர் நீளத்திலே என் பேரை அளக்கலாம்!

பர: உங்கம்மா, சமையலுக்குப் பாதி நேரம் தாளிச்சுக் கொட்ட மறந்து விடுகிறாள். நீ அநேகமா என்னோடு பேசற பேரதெல்லாம் தாளிச்சுக் கொட்டறே! ம்! மறந்தே போயிட்டேன். விமலா, இன்னிக்கு வியாழக்கிழமைதானே?

விமலா: ஆமாம்.

பர: நீ இன்னிக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுடு.

விமலா: எதுக்கு?

பர: அதைச் சொல்றதுக்குத்தான் உங்க அம்மாவைக் கூப்பிட்டேன். கொஞ்சம் வரச் சொல்லேன்.

விமலா: அம்மா! அம்மா! இங்கே கொஞ்சம் தலையை நீட்டு!

பர: விமலா, உங்க அம்மாவை இன்னிக்குக் கொஞ்சம் குஷிப்படுத்தி வச்சுக்கொள். அவள் உற்சாகமாய் இன்னிக்கு ஒத்துழைக்கணும்.

விமலா: அதுக்குத்தான் என்னை லீவு போடச் சொன்னீர்களா? அம்மா என்ன, தொட்டிலிலே படுத்திருக்கும் குழந்தையா? ஃபீடிங் பாட்டிலை வச்சுண்டு தாலாட்டுப் பாடணுமா?

பர: உனக்குத் தொட்டில், பீடிங் பாட்டில், தாலாட்டு எல்லாம் நெனைவுக்கு வரும் நேரம் எப்பவோ வந்தாச்சு அம்மா! எனக்குத் தெரியும். அதற்கான முயற்சிகள் நடந்துண்டிருக்கு. ஆனா ரொம்ப ஸ்லோவா, நொண்டி நொண்டி நடக்கிறது.

விமலா: என்னைப் பொண் பார்க்க வரவாளெல்லாம், உங்க பணப் பலத்தைச் சுண்டிச் சுண்டிப் பார்க்கிறார்கள்.

பர: விமலா, அவர்கள் பார்வையில் நான் செல்லாத கரன்சி. இந்தச் சமாசாரந்தான் அம்மா எனக்குத் திடீர்னு ஞாபகம் வந்தது. அதற்காகத்தான் உன்னை ஆபீசுக்கு லீவு போடச் சொன்னேன். இன்னிக்குப் பகல் பதினொரு மணி அளவுக்கு என் சிநேகிதன் பலராமன் இங்கே ஒரு பரந்த நோக்குடைய குடும்பத்தைக் கூட்டி வருவதாகச் சொல்லியிருக்கான்.

விமலா: போச்சுடா! வீட்டிலே இருக்கிற ரவைக்கும் சர்க்கரைக்கும் காபிப் பொடிக்கும் ஆபத்தா? அம்மா அதை இன்னிச் சாயங்காலத்துக்குச் சேமிச்சு வச்சிருப்பாள். பாவம்!

பர: இல்லேன்னா இப்பவே வாங்கி வச்சுடறேன்.

விமலா: அதுக்குச் சொல்லலே, அப்பா! இன்னிக்குச் சாயங்காலம் அம்மாவுக்குத் தெரிஞ்ச ஒரு குடும்பத்தின் மூலம் என்னைப் பொண் பார்க்க ஆறு மணிக்கு மேலே, யாரோ வரப் போறாளாம். என்னை, ஒரு மணி நேரம் பெர்மிஷன் போட்டுட்டு வந்தாப் போதும்னு சொல்லியிருந்தாள்.

பர: இன்டர்வெல் நெறைய இருக்கே! என்ன, உங்க அம்மா ஏற்பாடு பண்ணியிருக்காளா? எனக்கு ஒரு தகவல் கிடையாது! அக்ரமமாயிருக்கே! எங்கே அவ கமலா? கமலா!

விமலா: ஏன் அப்பா இப்படி வாசல் வராந்தாவிலிருந்து ஊரைக் கூட்டறேள்? உங்களுக்குச் சாப்பாடு போடற போது சொல்லிக்கலாம்னு இருப்பாள்.

பர: உங்கிட்டே சொல்லத் தோணியிருக்கு; என்கிட்டே சொல்ல மறந்து போச்சோ? எல்லாம் அலட்சியம்! வரட்டும், அவளைத் தோற்கடிக்கிறேன் பார்!

விமலா: அம்மாவுக்கு ஒரு விளையாட்டும் தெரியாது, பாவம்!

பர: இது விளையாட்டு விஷயமில்லை விமலா; சீரியஸ். பகல்லே வந்து பார்க்கிற குடும்பத்துக்கு உன்னைப் புடிச்சுப் போச்சுன்னா, சாயங்காலத்திலே சொஜ்ஜி, பஜ்ஜி, காபிக்கு இடம் இருக்காது பாரு.

அப்போ உங்க அம்மாவுக்குத் தோல்விதானே?

விமலா: உங்க சிநேகிதர் பலராமனின் அறிமுக வீட்டார், முப்பது பவுன் நகையும், பதினையாயிரம் ரூபாயும் கேட்டால் சரின்னு சொல்லி விடுவேளா?

பர: அப்போ சாயங்காலம் வர்றவா நாற்பது பவுன் நகையும் இருபதினாயிரம் ரூபாயும் கேட்கவேணும். ஆண்டவனேன்னு வேண்டிக்கொள்வேன். அப்பத்தானே அது கான்ஸல் ஆகும்? அந்த வகையிலே உங்க அம்மாவுக்குத் தோல்வி தானே?

விமலா: போங்கப்பா! உங்கள் போட்டா போட்டிகளைக் கவனிச்சுண்டே கொஞ்சம் காலத்தை ஓட்டினால் அப்புறம் ரிட்டயர் ஆயிடுவேன். அம்பத்தெட்டு வயசு ஆயிடும். அப்புறம் ஆபீசுக்கு லீவு, பெர்மிஷன்னு அநாவசியமாப் போடவேண்டாம்பாருங்கோ.

பர: ஹும்! சவுக்காலே அடிக்கற மாதிரிதான் பேசறே! எனக்கு வலிக்கிறது. வலிக்கு மருந்துதான் சுலபமாகக் கெடைக்க மாட்டேன்கிறது. நானே உள்ளே போய்க் கமலாகிட்டே பேசறேன்; நீ தயவு செஞ்சு இன்னிக்கு லீவு போடு! ப்ளீஸ்!

[இருவரும் உள்ளே போகிறார்கள்]

காட்சி—2

[பரமேசுவரன் வீட்டுக் கூடம். சிறிது நேரம் கழித்து.]

கமலா: உச்சி வேளையிலே பொண் பார்க்க ஒரு கோஷ்டி வரப்போறதுன்னு திடுதிப்புன்னு சொல்கிறீர்கள் என்றால், என்ன ஏற்பாடு செய்ய முடியும்?

பர: ஏற்பாடு என்ன ஏற்பாடு? பழைய ஜமுக்காளத்தை விரிக்க வேண்டியது. வர்றவாளை வாங்கோ, உட்காருங்கோன்னு சொல்ல வேண்டியது. விமலான்னு ஒரு குரல் குடுத்தால் அவள் உள்ளேயிருந்து வந்து மொத்தமாக ஒரு நமஸ்காரத்தைப் பண்ணிட்டு, கரெக்டா மூணு நிமிஷம் ஒரு பக்கமா நின்னுட்டு உள்ளே போயிடணும். அப்புறம் நான் பேசிக்கொள்றேன்.

கமலா: அப்படியானால் அவர்கள் வந்து உட்கார்ந்தவுடன் நான் கோவிலுக்குக் கெளம்பிப் போறேன். அவர்கள் கெளம்பிப் போன பிறகு திரும்பி வர்றேன். எனக்கு என்ன வேலை?

விமலா: அம்மா சொல்றதும் கரெக்ட்தான். அப்பா 'விமலா' ன்னு கூப்பிடுவார். அம்மா வந்து நிற்பாள். வந்தவர்கள் பயந்து போவார்கள். அப்பா! நீங்க சொல்றது திரைப்பட நகைச்சுவைக் காட்சிக்குச் சீனரியோடு எழுதற மாதிரி இருக்கு. நீங்க ரெண்டு பேரும் இப்போ கொஞ்சம் சீரியஸாப் பேசப் போறேளா இல்லை, நான் ஆபீஸுக்குக் கெளம்பவா?

பர: கோவிச்சுக்காதே! எல்லாம் உனக்காகத்தான். மண்டையை உடைச்சுக்கறோம். கமலா சிம்பிளாக் காபிக்கு மாத்திரம் ஏற்பாடு பண்ணு. பதினொரு மணிக்கு வருபவர்களுக்கு அது போரும். ரெண்டுக் கெட்டான் நேரம்.

கமலா: அவாளுக்கு அந்த நேரந்தானா கிடைச்சுது?

பர: நான் என்னத்தைக் கண்டேன்? அவர்கள் காலைக் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் டில்லியிலிருந்து வர்றாளாம். பிற்பகல் இரண்டே காலுக்கு வைகை எக்ஸ்பிரஸில் திருச்சிக்குப் போகிறாளாம். பலராமன்தான், இந்தச் சான்ஸை விட்டுடக் கூடாதுன்னு ஏற்பாடு செய்யறான். அவர்கள் ரொம்பத் தங்கமானவர்களாம்.

விமலா: தங்கக் கணக்கிலேயே நிற்பார்களோ?

பர: உஷ்! சீரியஸாப் பேசிகிட்டு இருக்கோம்.

கமலா: பையனைப் பத்தி உங்கள் சிநேகிதர் பலராமன் என்ன சொன்னார்?

பர: அவனுக்கு அந்தப் பையனைத் தெரியுமாம். விமலாவுக்கு நன்னாப் பொருந்தக் கூடிய பையனாம். பேர் கூட ஏதோ ராஜகோபாலன்னு சொன்னான்.

கமலா: சரி! காபிக்கு ஏற்பாடு பண்ணிடறேன். டிபன் காபியைச் சாயங்காலம் ஆறு மணிக்கு மேலே வர்றவாளுக்கு வச்சுக்கொள்ளலாம். அவர்க்ள் எந்த எக்ஸ்பிரஸையும் புடிக்க ஓடமாட்டார்கள்.

பர: நீ எனக்கு அந்த இடத்தைப்பத்தி ஒண்ணுமே சொல்லவில்லை. ஏதோ மர்மமா இருக்கு.

கமலா: அது மர்மம் இல்லை. நீங்க துப்பறியவும் வேண்டாம். கோவிலிலே நான் அடிக்கடி சந்திக்கும் ஜானகிக்குத் தெரிஞ்ச எடமாம். பையன் கல்கத்தாவிலிருந்து லீவிலே வந்திருக்கானாம். பொண் பார்த்து. எல்லாம் அமைஞ்சால் நல்ல இடம்னு அவளே அழைத்து வரப் போறாள். பையன் பெயர் கூட வேணுகோபாலனோ என்னவோ சொன்னாள்.

விமலா: அப்பா! ஒரு சின்ன யோசனை; சொல்லலாமா?

பர: பேஷாச் சொல்லலாம்! நீதானே ஹீரோயின்?

விமலா: பதினொரு மணிக்கு டில்லிப் பார்ட்டி வரா. சாயங்காலம் ஆறு மணிக்கு மேலே கல்கத்தாப் பார்ட்டி வரா. மாலை மூணு மணிக்கு மேலே அஞ்சு மணிக்குள்ளா..

பர: ஓரிடமும் நீ இன்னிக்கு வெளியே போய் வர வேண்டாம். சிநேகிதிகளை இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்.

விமலா: நான் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கலே.

பர: சொல்லு.

விமலா: சாயங்காலம், வேறே யாராவது லோக்கல் பார்ட்டி, நந்தகோபாலன்னு வச்சுக்குங்களேன், இருந்தால் வரச் சொல்லுங்களேன்! நான்தான் லீவு போட்டிருக்கேன். முழு நேரத்தையும் இந்தச் சுயம்வரத்துக்குச் செலவழிக்சலாமேன்னு தோண்றது. 'இண்டிபெண்டன்ஸ் டே', 'ரிபப்ளிக்டே' இங்கறமாதிரி 'பெண் பார்க்கிற டே'ன்னு நான் வருங்காலத்திலே கொண்டாடலாமே!

பர: ரொம்பக் காரமாத் தாளிச்சுக் கொட்டறியே, விமலா! எந்த நல்ல எடத்தையும் நாங்க விட்டுடத் தயார் இல்லை.

விமலா: அந்த எடங்கள் தான் நம்மை விட்டு விடறதாக்கும்?

பர: நீ ஏதோ நந்தகோபாலன்னு சொன்னியே.. அப்படி யாராவது..



விமலா: நிச்சயமா அப்படி யாரும் எனக்குத் தெரிஞ்சவா கெடையாது. நீங்க பயப்படவேண்டாம். அப்படியெல்லாம் காதலிச்சுட எனக்குத் தகுதியுமில்லே. தைரியமும் இல்லே.

கமலா: என்னம்மா, நானும் கவனிச்சுண்டுதான் இருக்கேன். பெரியவாள் முன்னுலே மரியாதையாய்ப் பேசு. நாளைக்கு மாமனுர் மாமியார் முன்னுலேயும் இப்படிப் பேசினுல் எங்க மேலேதான் பழி வரும். உள்ளே போ. மணி பத்தரையாறது. காபி டிகாக்ஷனைத் தயார் பண்ணு.

(போகிருர்கள்.)

காட்சி—3

பரமேசுவரன் வீடு.

அன்று மாலே ஐந்தரை மணி சுமார்.

[பரமேசுவரன் வேகமாக வெளியே இருந்து வருகிருர்].

கமலா: யார் உங்களைப் பக்கத்து விட்டுப் போனிலே கூப்பிட்டார்கள்?

பர: எல்லாம் அந்தப் படுபாவி பலராமன்தான்.

கமலா: இத்தனை நேரம் மாய மாய்த் தலைமறைவாப் போன ஆசாமி, இப்போ திடீர்னு எங்கேயிருந்து முளைச்சாராம்?

பர: அதைச் சொல்லத்தான் கூப்பிட்டானும். இன்னிக்குப் பார்த்துக் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் லேட்டாம். சாயங்காலம் நாலு மணிக்குத்தான் வந்ததாம்.

கமலா: அதனுலே அவங்க புரொக்கிராம் கான்ஸல்டா?

பர: அபஸ்வரம்! அவசரமாக உளருதே! அவர்கள் திருச்சிக்கு ராத்திரி ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸிலேதான் போருளாம். அதனுலே ஆறு மணிக்கு மேலே இங்கே கூட்டிண்டு வருனும்.

கமலா: அட ராமசந்திரா! ஆறு மணிக்குத்தானே என் சிநேகிதி அந்தக் கோஷ்டியைக் கூட்டி வர்ரதாகச் சொல்லியிருக்காள்?

பர: வரட்டுமே! ரெண்டு பார்ட்டிகளையும் ஒரேயடியா உட்கார்த்தி வைக்கலாமே! **நம்ப விமலாவுக்கு ஒரு நமஸ்கார எக்ஸர்ஸைஸ் குறையும்.**

கமலா: ரொம்பப் புத்திசாலித்தனமாகப் பேசறதா நெனைப்பான்னு கேக்கறேன்.

பர: ரொம்ப அலக்காதே. ரெண்டு மாசத்துக்கு முன்னுலே கோயம்புத்தூர்ப் பையன் ஒருத்தன் நம்ப விமலாவைப் பொண் பார்க்க வந்தானே! பாங்க் ஆபீஸர். அன்னிக்கு அவன் விமலாவை மாத்திரம் பொண் பார்க்க வரலே. டைம் டேபிள் போட்டுண்டு நாலு இடங்களுக்குப் போய்க் காபி டிபன் சாப்பிட்டிருக்கிருர்கள். அப்புறந்தான் எனக்குத் தெரிஞ்சது இந்த விஷயம்.

கமலா: புள்ளை வீட்டார் அப்படிச் செய்யலாம். பொண் வீட்டார் இப்படி ரெண்டு குடும்பங்களை ஒரே நேரத்தில் வரவேற்கப்படாது. விமலா தமயந்தியும் இல்லே, சீதையுமில்லே, சுயம்வரம் நடத்த.

பர: சரி! இப்படிப் பண்ணுவோமே! டில்லிக்காரர்களுக்கு நாம் **வரவேற்புப் பத்திரம் வாசிக்கும் போது கல்கத்தாக்காரர்கள் வந்துட்டால், அவாளை அப்படியே செத்தெ நேரம் மொட்டை மாடியிலே உட்கார்த்தி வைக்கலாம்.** நல்லவேளை! நம்ப வீட்டிலே மாடிப்படி வெளியே இருக்கு. இப்போ சென்ட்ரல் ஸ்டேஷன்லே, பிளாட்பாரம் ரெடியாகல்லேன்னு ஒரு வண்டியைப் பேசின் பிரிட்ஜிலே போட்டுடருன், இல்லியா? அது மாதிரி நம் வீட்டு மொட்டை மாடி பேசின் பிரிட்ஜாக இருக்கட்டுமே!

காட்சி—4

[அன்று இரவு ஏழு மணி சுமார். பரமேசுவரன் வீடு.]

பர: டிபன் எல்லாம் ஆறிப் போச்சு. தமிழ்நாடு எக்ஸ்பிரஸைக்யும் காணும்; ஹௌரா மெயிலேயும் காணும்! பிளாட்பாரம் காலி.

கமலா: கொஞ்ச நேரமானுல் நாமே டிபனைக் காலி பண்ணிடலாம். உங்க பலராமன் அப்புறம் டெலிபோன் பண்ணினுரா?

பர: உன் சிநேகிதி வீட்டுக்கு ஆளனுப்பினையே; என்ன ஆச்சு?

கமலா: வீடே பூட்டியிருக்காம்.

பர: ஒரு வேளை ஊரை எல்லாம் வேடிக்கை பார்த்துண்டு சாவகாசமா நடந்து வருளோ என்னவோ? பதினெரு மணிக்காவது வந்துடலாம்.

விமலா: (வந்து கொண்டே) அப்பா! உங்களை யாரோ தேடிண்டு வந்திருக்கா. யாருன்னு அந்தப் பெரியவர்கிட்டே கேட்டேன்! வெங்காய வெடின்னு சொல்லச் சொன்னுர். வெடின்னு சொன்னுரா, வடைன்னு சொன்னுரா தெரியலே. மனுஷன் கொஞ்சம் லொடலொடன்னு பேசருர். என் பேரு, உறவு, க்வாலிபிகேஷன், வேலே, எல்லாத்தையும் அங்கே நின்னுண்டே கேக்கருர்.

பர: வெங்காய வெடியா? ஆமா வெங்காய வெடி வெங்கடராமன். என் கிளாஸ்மேட். அந்தக் காலத்திலே, மூணும் கிளாஸ் படிக்கற போது தீபாவளி சமயத்திலே வெங்காய வெடியை, மிட்டாய்னு

அறுசுவையின் அடிப்படை சுவை
அம்பீஸ் சுவையே!
மனம் மகிழ நன்கு உண்ணுங்கள்
அம்பீஸ் துணையுடன்...
இட்லி தோசையுடன்
பூரி சப்பாத்தியுடன்
பிரட்
ஸாண்விச்சுடன்
உங்கள் கற்பனைக்
கேற்றவாறு
அம்பீஸ் ஊறுகாய் வகைகள்:
ஆவக்காய், மாங்காய், வடு மாங்காய், மாங்காய் தொக்கு, எலுமிச்சை, கோங்கூரா, பச்சை மிளகு, வெஜிடபிள் ஊறுகாய், நெல்லிக்காய், பச்சை மிளகாய், பூண்டு ஊறுகாய் மற்றும் பல வகைகள்.
அம்பீஸ் சுவை,
ஆவலைத் தூண்டும்
சுவை
Ambis
3869
FPO
அம்பீஸ் பிக்கிள்ஸ்
அண்ட் காண்டிமெண்ட்ஸ்
ஆப் இந்தியா
ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ்,
(இந்தியா) பிரைவேட் லிட்
19. நீலகண்ட மேத்தா தெரு, தி. நகர். தொலைபேசி: 447355
APRC

நெனைச்சுக் கடிச்சுட்டான்: வாய்க்குள்ளே வெடிச்சுது. நல்ல வேளை! ஒரு பல்லோ ரெண்டு பல்லோ நஷ்டம். வேறே பலத்த காயம் இல்லே. ஆனுக்க, அந்தச் சின்ன ஆக்ஸிடென்டுக்கு அப்புறம் அவன் நெறையப் பேச ஆரம்பிச்சுட்டான். அவன் பேருக்கு முன்னாலே வெங்காய வெடின்னு பட்டமும் ஒட்டிண்டுது.

கமலா: மனுஷன் வாசலில் நிக்கறார். நீங்க இங்கே வெங்காய வெடி மகாத்மியம் பத்திச் சொற்பொழிவு நடத்தறீங்க!

பர: மறந்தே போயிட்டேன்! கூப்பிடு அவனை உள்ளே. இல்லே; இல்லே: நானே போய்க் கூப்பிட்டுக் கொண்டு வறேன்.

(வாசலுக்குப் போய், வெங்கடராமன், மற்றும் ஒரு வாலிபன் பின் தொடர உள்ளே வருகிறார்.)

வெங்: பரமேசுவரா, உன்னைப் பார்த்து ரொம்ப வருஷங்களாச்சு. நீ இங்கே இருக்கேன்னு நம்ப ராமசாமி சொன்னான். பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். உன் பொண்ணா இது? நன்னா வெடுக்கு வெடுக்குன்னு பேசறாள்.

பர: வெங்கடராமா, நீ வெங்காய வெடி. உன்கூட, வெடுக்கு வெடுக்குன்னுதானே பேசணும்? கமலா, காபி கொண்டு வா, சௌக்கியமா இருக்கியா? இவதான் என் பொண் விமலா.

வெங்: நீங்கள் எல்லாம் யாரையோ எதிர்பார்த்துக் காத்துண்டு இருக்கீங்க போலிருக்கு? இந்த நேரத்திலே கரடி மாதிரி நான் நொழைஞ்சு பழங்கதை பேசறதை உன் சம்சாரம் விரும்பமாட்டாள். இன்னொரு சமயம் சென்னை வரும்போது சாவகாசமாக ..

பர: எவன் எவனோ முன் பின் தெரியாதவன் வந்து காபி டிபன் முழுங்கணும்னு காத்துக்கிண்டு இருக்கிற போது நீ வந்தது எவ்வளவு சந்தோஷமா இருக்கு, தெரியுமா? யார் வந்தாலும், வெயிட் பண்ணட்டும். இது யாரு கூட வந்திருக்கிறது?

வெங்: என் புள்ளை; பம்பாயிலே வேலை பார்க்கிறான்.

பர: உன் பாடு தேவலை. போற எடமெல்லாம் சொஜ்ஜி பஜ்ஜி கெடைக்கும்!

வெங்: எங்களுக்கு அந்த ரெண்டும் பிடிக்காது. அது சரி. ரொம்பச் சலிப்பாப் பேசிண்டு போறயே; நாம் ஒரே ஊர்க்காரங்க; பரஸ்பரம் தெரிஞ்சவங்க. எனக்குச் சம்பந்தி ஆகச் சம்மதமா?

பர: ரொம்பச் சுலபமாகச் சொல்லிட்டே. நீ கேட்கறதெல்லாம் எனக்குச் சம்மதமாகஇருக்கவேண்டாமா? நான் குடுப்பதெல்லாம் உனக்குச் சம்மதமா இருக்க வேண்டாமா? விமலா கிராஜுவேட், வயசு

கிராமத்துப் பெண்: டாக்டர் அம்மா, எனக்கு அஞ்சு புள்ளைங்க இருக்குங்க. இனிமே பொறக்காம இருக்க என்னம்மா செய்யணும்?

டாக்டர்: ஒண்ணுமே செய்யாம இருந்தா அதுவே போதும்.

இருபத்துநாலு, எம்ப்ளாய்ட். பிரைவேட் செக்டார். ஆயிரத்து முந்நூறு சம்பளம்.

வெங்: நிறுத்து. ராமசாமி எல்லாம் எங்கிட்டே சொல்லியிருக்கான். என் பையனுக்கு அவளைக் காட்டிலும் வயசு ரெண்டு தான் கூட. மத்ததெல்லாம் டபிள், தெரிஞ்சுக்கோ.

பர: தெரிஞ்சுக்கறேன். என்ன பிரயோசனம் எனக்கு?

வெங்: நீ அந்த நாளிலேயே விஷயத்தைச் சட்டுனு புரிஞ்சுக்க மாட்டே. இப்பவும் புரிஞ்சுக்கல்லே, விமலா என் மருமகளா வந்தால் போரும். நீ என் சம்பந்தியா வந்தால் போரும். வேறே ஒண்ணும் உன் கணக்கிலிருந்து வர வேண்டாம்.

பர: உன் கணக்கிலேயிருந்து இப்படி அன்பு மழையாகப் பெய்யறதே வெங்கட்ராமா? என் காது கண்டிஷன்லே தான் இருக்கா? பையன் பெயர் கோபாலன் இல்லையே?

வெங்: வெறும் கோபாலன் இல்லே; ஜய கோபால்!

பர: இன்னிக்கு நம்ப வீட்டு டிபன் ஒரு கோபாலன் குடும்பத்துக்குத்தான்னு நெனைச்சேன், நடந்துடுத்து. ஜயகோபால்! ஜெயம் எனக்கு! விமலா எதுக்கும் சம்பிரதாயத்தை விடாமல் ஒரு நமஸ்காரத்தைப் பண்ணிட்டு டிபனை எடுத்துண்டு வா. எல்லாருக்கும்...

வெங்: வேண்டாம்! அப்புறமா மருமகளா என் வீட்டுக்கு வந்த பிறகு குனிஞ்சு நிமிரட்டும். பரமேசுவரா, நான் ஜாதகம், அது இதுன்னு பார்க்கறதில்லே.

பர: சம்பந்தி, இனிமேல் சுதந்திரமா வெங்காய வெடின்னு கூப்பிட முடியாதே!

வெங்: எனக்கு அப்ஜெக்ஷன் இல்லே.

கமலா: வாசலிலே எதிரும் புதிருமாக ரெண்டு டாக்ஸிகள் வந்திருக்கு.

பர: ராஜகோபாலன்! வேணுகோபாலன் கம்பெனியா? அப்படியே எதையாவது சொல்லி அனுப்பு கமலா! விமலா சினிமாவுக்குப் போயிட்டான்னு சொல்லிடு. ஆமா! வெங்கடராமா! தப்பு, தப்பு! சம்பந்தி, உனக்குச் சௌகர்யமான முகூர்த்தம் எனக்கும் சௌகர்யந்தான். கமலா இங்கே வா. முறைப்படி அறிமுகப்படுத்தறேன். இவர்தான் என் சம்பந்தி. மிஸ்டர் வெங்கடராமன். இவர் என் மாப்பிள்ளை, மிஸ்டர் ஜெயகோபால். அபிமானத்திலே இவரை நான் தாதா எக்ஸ்பிரஸ் என்றுகூடக் கூப்பிடுவேன்.

கமலா: விமலா, நீ வாம்மா உள்ளே. உங்க அப்பா யாரோ மாமிகிட்டே பேசிண்டிருக்கா; 'என் மாப்பிள்ளை! என் சம்பந்தி'ங்கறார்.

வெங்: பரமேசுவரா, என் சம்பந்தியம்மாவைக் கூப்பிடு.

(சிரிப்பொலி எழுகிறது.) ❋

"செத்த பிறகு உயிரோடு வாழ முடியுங்கறதுல உனக்கு நம்பிக்கை உண்டா?"

"நிச்சயமா முடியாது ஸார்."

"நேத்துக்கு, தாத்தா செத்துட்டார்னு லீவு வாங்கிட்டுப் போனே! அவரை இன்னிக்குக் காலையில பஸ் ஸ்டான்ட்ல பார்த்தேனே!"



இருபுறமும் கலைவாழுத மாங்கனிகள் சிந்தியே
இனிமையை விரித்து நிற்க;
இந்திரன் தேசத்துப் பசுவந்து பூசனை
எழிலுறச் செய்து நிற்க;
உருவளரும் வராகமலை மேவிருந் தம்பிகையின்
அருளினல் பெருகிவிடும்
உயர்வுடைய ஆம்பிரா வதிநதியின் புனல்வளந்
தொலியமுத இசைமு ழங்க
திருவளரும் கருவூரின் அருகிலகும் பதியாகத்
திகழ்அப்பி பாளையத்தில்
தெய்வநெறி பிறழாத வேட்டுவர் மரபிலோர்
சிறுமியென யான்பி றந்தேன்
ஒருகணமும் மறவாமல் உருகியுனை நாடினேன்
உன்மனம் என்ன கல்லோ!
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

வீரருள் வீரராம் வேட்டுவர் தலைவராய்
விளங்கியுள் அன்ப ராகி
வெற்றிகள் ஆயிரம் பெற்றுயர்ந் தோங்கிய
சுந்தர மனத்தர் தந்தை!
பாருலக கனைத்தையும் காத்திடும் காளியின்
பக்தையே பெற்ற அன்னை!
பகைவர்கள் அஞ்சிடச் சிலம்பம் சுழற்றிடும்
பராக்கிரமன் என்றன் பாட்டன்!
சீருயர் காமாட்சி அம்மனைச் சிந்தையில்
சேர்த்தவள் எனது பாட்டி!
சீலமும் செம்மையும் திகழ்ந்திடும் சிவநெறிக்
குடும்பமே என்கு டும்பம்!
ஓரிளம் பெண்ணுயிர் வீணிலே அழிவதோ?
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

முன்னம்நீ நற்கரு வூர்த்தேவ ரோங்கிட
முன்வந்து கருணை செய்தாய்!
மும்மலம் கழுவியுன் பொன்னடி நினைந்துசெந்
தமிழ்அவர் மொழிந்த தாலோ?
மன்னிய கலையெலாம் வழுவறக் கற்றுநான்
மறைகளும் உணர்ந்து சைவ
மதவழி சென்றுவாழ் நாளெலாம் யோகமாம்
மகிமையில் திளைத்த தாலோ?
பன்னரும் ஞானநல் ஒளியினைப் போகர்பால்
பழுதறப் பெற்று நூல்கள்
பற்பல ஆய்ந்துநின் நற்புதச் சித்திகள்
பாங்குற உற்ற தாலோ?
உன்னிடம் என்னை தந்துளேன் ஆயினும்
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

பித்தரென் றுலகினர் பேசிடும் வண்ணமுன்
பேரிலே தனியி முந்து
பருவீதி தனிலவர் சுற்றித் திரிந்திட்ட
பெற்றியால் அருள்பு ரிந்தையோ?
அத்தனுன் கோயிலில் அஷ்டபந் தனமீது
சரிவர இறுக வைத்தே
அழகுடன் குடமுழுக் காட்டிட உதவிய
அருமையால் அருள்சு ரந்தையோ?
நித்தமும் உன்னரும் நினைவினை நெஞ்சளே
நிறுத்தியே நின்ற தாலோ?
நெடிதுயர் மலைகளில் வனங்களில் துறவியாய்
நீளவே நடந்த தாலோ?
உத்தமா நின்பதம் ஒருகணம் மறந்திலேன்
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

நாட்டியம் ஆடியே அண்டங்கள் இயக்கிடும்
நாதனென் றுனைப்பு கல்வார்.
நானுன்றன் அற்புத நடனங்கள் பார்த்திடும்
நல்லநாள் என்று வருமோ?
வீட்டிலே எரிகின்ற விளக்கொளி மங்கியே
மறைவாகி விலகி நிற்க
விமலனுன் பேரொளி விரிவாகி யானதில்
விட்டிலாய் என்று மடிவேன்?
ஒட்டமாய் ஓடியே சௌந்தர நாயகி
உள்ளநல் இல்லம் ஏகென்(று)
உரைப்பையேல் அறவுரு வானநின் காலையும்
நொடியினில் அடைந் திடாதோ?
ஓட்டாண்டி யாகநீ உலவிடும் தன்மையால்
உனமனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பாவையே
ஓம்நமசிவாய பரமே!

வந்திங்கு யானுற்ற பொல்லாத பிறவியை
வாஞ்சையால் அறுக்க மாட்டாய்?
வார்த்தைக்குள் அடங்காமல் மறைநான்கும்
அறியாமல்
வளர்கின்ற தேவ தேவே!
இந்தென்ற சீபைகளை உடையவா அவைகளில்
ஒருசபைக் கென்னை யழைக்காய்!
ஆதார மாகியே பூதங்கள் ஐந்தையும்
ஆட்டுவிக் கின்ற தலைவா!
சிந்தையே நிறைந்திட ஐந்தெழுத் ததனையான்
தெளிவுற ஓதி நிற்பேன்!
தேசோம யானந்த எழுத்தாக அவைமாறிச்
சிரித்திதய மெங்கு மொனக்கும்!
உந்தியெமு மந்திர ஒலிஉயர் வறியாத
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே,
ஓம் நமசி வாய பரமே!

கல்லாலின் கீழாகச் சனகாதி யர்க்குநீ
கனிந்தருள் சொரிந்து நின்றாய்!
கனிதரும் மாமரச் சோலைசூழ் ஆம்பிரா
நதிப்புறம் நிதங்கி டக்கும்

கருவூர்ப் பசுபதீசுவரர் தேவி சௌந்தரநாயகி

நல்லதோர் கல்லதன் அடிப்புறம் இருக்கின்ற
நங்கையார் உய்ய ஒட்டாய்!
நான்மறைக் குதிரைகள் இழுத்திடும் தேரமர்
நாயகா! கயிலை வாசா!
எல்லையில் ஞானநல் ஒளியெனக் குதவியே
என்னையோர் குதிரை யாக்கி
ஏறிடும் தேரிலே பூட்டிநீ ஊர்வலம்
எழிலுறச் செல்ல எண்ணாய்;
ஒல்லையில் யான்படும் இன்னல்கள் போக்கிடாய்;
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

ஐந்தெழுத் தாகிய வித்தினை இதயமாம்
ஆழ்நிலம் நட்டு வைத்தேன்!
அன்பெனும் பக்திநீர் ஊற்றியே நித்தமும்
அமுதினைப் போற்றி நின்றேன்!
சந்ததம் ஐந்தெழுத் தின்சுவைக் கனியதன்
சாற்றினைச் சுவைத் துணர்ந்தேன்!
சங்கர மரத்தினைச் சார்ந்தவோர் கொடியெனத்
தரணியில் வாழ்ந்தி ருந்தேன்!
சிந்தையே சிதைவுற்ற பிச்சியென் றுலகினர்
சிரித்தெனைத் தூற்று கின்றார்!
தெய்வமே! ஐந்தெழுத் தருமையை முற்றும்
தெளிந்ததால் பிச்சி ஆனேன்!

உந்துநீ யன்றிவே றுரெனக் குதவுவார்
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே
ஓம்நமசி வாய பரமே!

நானொரு வேட்டுவ நங்கையா யினமையால்
என்னைநீ நாட விலையோ!
நாயகன் நீயுமிக் குலத்திலே முந்தைநாள்
நற்பிறப் பெடுக்க விலையோ?
வானும் வையமும் போற்றிடும் அர்ச்சுனன்
வாழ்த்திடக் காட்சி தந்தாய்!
வனிதையென் அன்பிலே என்குறை கண்டனை
வந்தருள் செய்ய இல்லாய்!
ஆனவோர் பாசுபத் தாஸ்திரம் அளிப்பையேல்
ஐம்புல வேடர் தம்மை
அரைநொடிப் பொழுதிலே அழித்துநல் அமைதிசேர்
வாழ்வினைப் பெற்று யர்வேன்!

ஊனுயிர் இரண்டுமே உன்னுடைய தல்லவோ
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே;
ஓம்நமசி வாய பரமே!

நல்லதோர் மந்திர தந்திர யந்திர
நாட்டமும் உற்ற தில்லை!
நாதனே, நின்பெயர் ஓதுவேன் வேறெதும்
நான்செயக் கற்ற தில்லை!
கல்வியும் கேள்வியும் கல்லாத வேட்டுவக்
கன்னியாய் உள்ள தாலே
கருதியே வேள்விகள் புரிந்திடத் தெரியாது
காலத்தை ஓட்டு கின்றேன்.
கொல்புலித் தோலுடை உடுத்தியே சுடுகாட்டில்
கூத்தாடி மகிழ்வு கொள்வாய்!
கோதையென் இதயமும் ஆசையைச் சுட்டநற்
காடுதான் நடன மாட!
நல்கியே செல்லுதல் உனக்கழ காகுமோ?
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே;
ஓம்நமசி வாய பரமே

அரக்கர்குல குருவான சுக்கிரா சாரியார்
ஆனிலை ஈசன் உன்னை
அன்புடன் வணங்கிநின் றமிர்தசஞ் சீவினி
மந்திரம் அறிய லானார்!
சுரக்குமுயர் பக்தியால் உனைத் தொழுது முசுகுந்தர்
சொர்க்கவீ டெய்த லானார்!
சோழர்குல மன்னவர் புகழ்ச்சோழர் உன்னரும்
தொண்டருக் குறுது யர்க்குச்
சிரத்தினைத் தந்திட முன்வந்து பரிகாரம்
தேடவே முயன்று நின்றார்!
செருவினில் ஒருசடைத் தலையறு பட்டதால்
தீக்குளித் துயர்வு கொண்டார்!
உரத்தொடே உன்பெயர் ஓதினேன்; பாடினேன்!
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே;
ஓம்நமசி வாய பரமே!

பெற்றவர் என்னிலை யறியாது யானொரு
பிச்சியென் றெண்ணி விட்டார்!
பேசாமல் இருவென்று தனியாக அறையிலே
வைத்தெனைப் பூட்டி விட்டார்!
மற்றுமோர் மணமகன் தேடியே திருமணம்
முடித்திட விரும்பு கின்றார்.
மங்கையான் கூண்டிலே அடைபட்ட கிளியாக
மனம்நொந்து வாடுகின்றேன்!
பற்றினால் உன்னையே பதியென வரித்தபின்
எவர்க்குநான் மாலை யிடுவேன்?
பாவியேன் எவ்விதம் உயிர்தரித் திடுவனோ?
பரமனே இரக்கம் இலையோ?
உற்றவர் துன்புறச் செய்வதும் நீதியோ?
உன்மனம் என்ன கல்லோ?
ஒருதரம் விழிதிறந் தருள்மழை பொழிவையே;
ஓம்நமசி வாய பரமே!

இந்த ஒரு குரல்கேட்டுத் தந்தையார் கனவிலே
ஈச்வரன் தோன்றி எங்கும்
எழில்மிக்க நறுமலர் தெளித்துள்ள வேளையில்
இனியநற் சௌந்த ரத்தை
வந்துநற் கடிமணம் புரிவதாய்ச் சொல்லிய
வண்ணமோர் மாற்ற மின்றி
வந்துயர் பங்குனி உத்தரம் ஏழுலே
மாலையிட் டருள்பு ரிந்தார்!
தந்தையும் தாயரும் சுற்றமும் ஈசனின்
தண்ணருள் வியந்து நின்றார்!
தரணியோர் இறைவனை எண்ணுவார் உயர்வுறும்
சத்தியம் அறிந்து ணர்ந்தார்!
சிந்தனை ஒன்றியே சிவாய நமஎனச்
செப்பிநற் கரங்கள் கூப்பித்
தெய்வத் திருப்பதம் தொழுபவர் யாவரும்
சீருயர்ந் தோங்கு வாரே!

சௌந்தரா கைலாசம்



This is an
IPL POWER PAK
piston assembly
just what your
engine needs
INDIA PISTONS LIMITED, MADRAS
MAC/IP-1022

வந்த சுவடு

விக்கிரமன்

அம்மா, யாரோ உங்களைத் தேடிண்டு வந்திருக்காங்க. உங்க பேரைச் சொல்லி, 'இருக்காங்களான்னு' கேக்கிறாங்க'' என்று வேணி கூறிக்கொண்டே வாசலிலிருந்து, நடுக்கூடம், முற்றம் இவற்றைத் தாண்டிக் கொண்டு கிணற்றங்கரைக்கு வந்தாள்.

நீலாம்பிகை துவைத்த துணிகளைக் கொடியில் உலர்த்திக் கொண்டிருந்தவள் அங்கிருந்தே வாயிலை நோக்கினாள். அழுக்கடைந்த கோட்டும், தோளில் ஒரு பையும், மற்றொரு கரத்தில் ஒரு தோல் பையுமாக நின்றிருப்பவர் அங்கிருந்து பார்க்கும்போதே தெளிவாகத் தெரிந்தார். ஆனால், வாசலிலிருந்து பார்ப்பவர்களுக்குக் கொல்லைப்புறம் இருப்பவர்கள் நிழலுருவமாகத்தான் தெரிவார்கள்.

ஒரு கணம் நீலாம்பிகைக்குத் திக்கென்றது. அடிவயிற்றைக் கலக்குவது போன்ற உணர்ச்சி; மார்பைச் சற்று மெல்ல அழுத்திக் கொண்டாள். நெற்றியில் துளிர்த்த வேர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

''வேணி, யாரென்று போய்ப் பாரும்மா. திண்ணையிலே உட்காரச் சொல்லு'' என்று கூறிய தாயைப் பார்த்து, ''நான் அவரைக் கேட்டு விட்டேன்; உங்களைத்தான் பார்க்க வேண்டுமாம். 'இப்போது பார்க்க முடியாது; பார்வையாளர் நேரம் காலை எட்டு முதல் பத்து வரை, பிறகு மாலை ஐந்து முதல் ஆறு வரை' என்று குறிக்கும் அறிவிப்புப் பலகையைக் காட்டட்டுமா? அந்த ஆளின் அசட்டுச் சிரிப்பும், பார்வையும் சகிக்கவில்லை'' என்று கூறினாள் மகள்.

''வருகிறவர்கள் எல்லாரும் என்னைத்தான் பார்க்க வேண்டும் என்கிறார்கள். அவர்கள் கஷ்டத்தை எடுத்துச் சொல்கிறார்கள். சிபாரிசு கேட்டு வருகிறார்கள். இவர் எவ்வளவு தொலைவிலிருந்து வருகிறாரோ பாவம், உட்காரச் சொல்'' என்று கூறி மகளை அனுப்பிய நீலாம்பிகை, 'அவராக இருக்குமா? ஊகும், இருக்காது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு அவராவது, வருவதாவது?' என்று தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். உடனே குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிப் புடைவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு, உள்ளே வந்து முற்றத்துத் தூணுக்கு அருகே சற்று நின்றாள். வேணி புதியவருடன் பேசிக்கொண்டிருந்தாள்.

''நீலாம்பிகை இருக்காங்களா?''

''நீங்க யாரு?''

''நான் யாரென்று உனக்குச் சொல்றது குழந்தை? உன் பெயர் கிருஷ்ணவேணிதானே?''

''இல்லை, வேணி.''

''சரி, பெயரைச் சுருக்கி வைத்துக் கொண்டாயா?''

''நான் வைத்துக் கொள்ளவில்லை. அம்மாதான் வைத்தார்கள். அதைப் பற்றி என்ன? நீங்கள் யாரென்று சொல்லுங்க. உள்ளே போய்ச் சொல்றேன். நிக்கறீங்களே, உக்காருங்க.''

''உன் தம்பி, அகோர மூர்த்தி உள்ளே இருக்கானா?''

''அகோர மூர்த்தியா? ஐயையோ! கோரமாயிருக்கே பேரு. அது இல்லை, என் தம்பி பேர், மூர்த்தி.''

''மூர்த்தியா? அவன் எங்கே?''

''கிரிக்கெட் விளையாடப் போயிருக்கான்.''

''கொளுத்தும் வெயில்லியா?''

வெளியே வெயில் சாயவில்லை; கொளுத்திக் கொண்டிருந்தது. வேர்த்துக் கொட்டியதால் அந்தப் பழைய கோட்டு முதுகுப்புறம் நனைந்திருந்தது. அடர்ந்து வளர்ந்திருந்த தாடியை அடிக்கடி அவர் சொறிந்து கொண்டார். பாதி நரைத்திருந்த தலைமயிரை அழுத்தமாக வாரிவிட முயன்றும் கட்டுக்கடங்காமல் புரட்சி செய்த சிகை, நெற்றியின் வலப் புறம் ஆழமான வடு. இன்னும் கன்னத்தில் ஏதாவது வடு, மச்சம் இருக்கலாம். கறுப்பு வெளுப்பான ரோமம் முகத்தின் பாதியை மறைத்திருந்தது.

வேணி உள்ளே போக முயன்றாள். மறுபடியும் அவள் கேட்டாள்: ''உங்கள் பெயர் என்ன?''

அடர்ந்த தாடி மீசைக்குள்ளே அவர் மெல்ல நகைப்பதை அவள் புரிந்து கொள்ளவில்லை.

''கேசவன் வந்திருக்கேன்னு போய்ச் சொல்லம்மா'' என்று அவர் கூறும்போதே அந்தக் குரலில் வாஞ்சையிருந்தது. அந்த வீட்டுக்கு வருபவரின் குரலில் ஒலிக்கும் வாஞ்சை, அன்பு, மரியாதை புகழ்ச்சி எல்லாம் வேணிக்குப் புதிதல்ல. அம்மாவைப் பார்க்க வருபவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் காரியம் நிறைவேற அம்மாவை வானளாவப் புகழ்வதை நிறையக் கேட்டிருக்கிறாள்.

''அம்மா, நீங்க நல்லாயிருக்கணும். என் பொண்ணு எட்டாவது படிச்சிருக்கா; டிரையினிங்லே சேத்துட்டிங்கன்னா அவள் படிச்சு, எப்படியோ பொழைச்சுப்பா! விளக்கேத்தி வையுங்கம்மா.''

''அம்மா, உங்களைத் தெய்வம்னு எல்லாரும் புகழறாங்க. பெண் குலத்துச் சங்கடங்கள் புரிஞ்சு கொண்டு நீங்க என் பொண்ணுக்கு ஒரு வழி காட்டுங்கம்மா. கல்யாணமான ரெண்டாம் வருசமே புருஷன் செத்துப் போயிட்டான். ஏதாவது தையல், கை வேலை கத்துண்டா பொழைச்சுப் போவாம்மா. நீங்க தலைவராயிருக்கிற சமூக சேவை சங்கத்திலே சேத்துக்கங்கம்மா!'' என்று வயதான ஒரு பெண் நீலாம்பிகையின் காலில்

விழுந்து கும்பிடாத குறையாக வேண்டிக் கொண்டாள்.

"அம்மா, மகராசி, ஊரு உலகத்து அநாதைங்களுக்கெல்லாம் வாழ்வு தரதா அத்தினி பேரும் புகழுறாங்கம்மா. என் தங்கை கதையைக் கேளு, தாயே! மனசுக்கு இஷ்டப்பட்டுத்தான் கல்யாணம் கட்டிக்கிட்டா. அந்தப் பாவி ரெண்டு கொழந்தைய கொடுத்திட்டப்புறம் புடிக்கலேன்னு தள்ளி வச்சுட்டாம்மா. கொழந்தைங்களோட என் வீட்டுக்கு வந்துட்டா. நானு என்னம்மா செய்வேன்? நீங்கதான் வழிகாட்டணும். நல்ல குணவதின்னு எல்லாரும் சொல்றாங்க" என்று மற்றொரு பெண் கண்ணீருக்கிடையே புகழ்மாலையுடன் சேர்ந்த கோரிக்கையைச் சமர்ப்பிப்பாள்.

இவற்றை எல்லாம் கேட்டதும் நீலாம்பிகையின் மெய் சிலிர்க்கும். 'கணவனால் கை விடப்பட்டவள், கணவனை இழந்தவள், குடிகேடனான கணவனை மணந்து துன்பப்பட்டவள்' என்று பெண் குலத்து வேதனையை நாள்தோறும் கேட்கும் போதெல்லாம் நீலாம்பிகையின் உள்ளம் குலுங்கிக் குலுங்கி அழும். 'பெண்ணாகப் பிறந்து விட்டால் மிகப் பிழை இருக்குதடி தங்கமே தங்கம்' என்று நன்றாகத்தான் பாடிச் சென்றார் மகாகவி என்று எண்ணும்போது ஒரு கணம் நீலாவுக்கு மலைப்பாக இருக்கும். அடுத்த கணமே பெண் குலத்துத் துயரைத் துடைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன் என்று அவள் நிமிர்ந்து நிற்பாள்.

நீலாம்பிகையின் சமூகசேவையைப் பாராட்டி ஜனாதிபதி விருது கிடைக்கப் போவதாகப் பேசிக் கொண்டார்கள். சமூக சேவை செய்யும் பெண்களைப் பற்றி முதுகுப் பக்கம் கிண்டலும் கேலியுமாகப் பேசுபவர்கள் கூட நீலாவைப் பற்றி மூச்சு விடுவதில்லை.

"அவர்களைப் பற்றி முழுசா ஒண்ணும் அறிஞ்சுக்க முடியலே. நெத்தியிலே பொட்டு இருக்கும். ஆனா, கழுத்திலே சரடு இல்லே. விவரம் ஒண்ணும் தெரிஞ்சுக்க முடியலே. இப்படி அப்படின்னு ஒரு வார்த்தைக்கூட அப்பழுக்காப் பேச முடியாது. நெருப்பு அவங்க" என்று ஒரு மனதாகப் பேசிக் கொண்டார்கள்.

சந்திரபானு தெரு முதல் சந்தில் நீலா குடியேறி, மூர்த்திக்குள்ள வயசாச்சு. வேணியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, ஒரு வயசுக் குழந்தையான மூர்த்தியை இடுப்பில் வைத்துக்கொண்டு ஒரு தோல் பையுடன் ஒரு வெயில் வேளையில் அந்த வீட்டுக்குக் குடி வந்தாள். பிறகு அந்த வீட்டையே வாங்கி விட்டாள். பழைய கால மோஸ்தர் வீடு. புதுமை தெரியுமாறு செப்பனிட்டிருந்தாள்.

"நீலாம்பிகை — தலைவி, சமூக நற்பணி மன்றம்" என்ற சிறிய பெயர்ப் பலகை சற்று மங்கிப் போய் இருந்தாலும், நீலாவின் பெயரும் புகழும் பளிச்சென்று தெரிய ஆரம்பித்தன.

கனிவான பேச்சு, சொன்ன சொல் தவறாமை, ஒழுக்கமான வாழ்க்கை ஆகியவை நீலாவை அந்தப் பேட்டையிலேயே உயர்ந்து நிற்கச் செய்தன. "கார்ப்பரேஷன் தேர்தல் நடந்தால் அம்மாதான் இந்தத் தொகுதி கவுன்சிலராக ஜெயிப்பாங்க" என்பார், ஓர் அரசியல் கட்சிக்காரர்.

"தேர்தலுக்கு நிற்காமலேயே நியமன உறுப்பினராக்க, முதல் அமைச்சருக்குச் சிபாரிசு செய்து விடலாம்" என்று மற்றொரு கட்சிப் பிரமுகர் நீலாவின் எதிரிலேயே பேசிக்கொள்வதைக் கேட்டு, "பதவி பட்டம் எனக்கு எதுக்குங்க? என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கூறிப் புன்முறுவல் மாறாமல் இருப்பாள் நீலா.

"அம்மா, என் அப்பாவின் பெயர் என்னம்மா?"

"பெயரை மட்டும் சொல்லு, போதும்."

"அப்பா சின்ன வயசுலேயே செத்துட்டாரா அம்மா?"

இந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல் நீலாம்பிகை சிறிது யோசனைக்குப் பிறகு, "ஆமா ஆமாம்" என்று தலையசைத்தாள். அதற்குமேல் அவளும் பதில் சொல்லவில்லை. அம்மாவின் முகக் குறிப்பறிந்து வேணியும் கேட்கவில்லை. குழந்தைகளை அவ்வளவு பண்புடன் வளர்த்திருந்தாள்.

சமூகத் தொண்டில் உடன் பணியாற்றுபவர்கள் கூட நீலாம்பிகையின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ள முடியவில்லை.

"பாவம், நீலா. உன் தியாகத்தை நினைக்கும் போது உன்னைத் தெய்வமாகவே எண்ணத் தோன்றுகிறது. இப்போ வேணிக்குப் பதின்மூன்று வயதிருக்குமே? இந்த வீட்டுக்கு வரும்போது வேணிக்கு ஐந்து வயதிருக்குமா? உனக்கு இருபதிலே கலியாணமாயிருக்கும் இல்லே?" என்று நெருங்கிய தோழி கேட்பாள்.

"பதினெட்டிலேயே?"

"அடாடா! உங்களவர் காலமாகிறச்சே இருபத்து மூணு வயசுதானா உனக்கு? இவ்வளவு சீர்திருத்த மனப்பான்மை உடைய நீ இன்னொரு கல்யாணம் செஞ்சிண்டிருக்கலாம். வாழ்க்கை என்பது ஒரு பூங்கொடி. காலமறிந்து நீருற்றி வளர்க்க வேண்டும். கொடியைக் காய்ந்து போக விடக் கூடாது" என்று நீலாவுடன் நெருங்கிப் பழகும் மஞ்சுளா உபதேசம் செய்திருக்கிறாள். கணவனை இழந்த பிறகு மறுமணம் செய்து கொண்டவள் அவள். முதல் கணவர் மூலம் ஒரு குழந்தை. இப்போது இரண்டு குழந்தை!

மெல்ல நகைத்துவிட்டு, "மஞ்சு, மறு விவாகம் என்பது அவரவர்கள் மனசைப் பொறுத்தது. அதில் நிர்ப்பந்தமோ, சட்டதிட்டமோ கட்டளையோ கூடாது. என்னைப் பொறுத்தவரை என் வாழ்க்கைக் கொடி பூத்துக் குலுங்கி மணம் வீசிக் கொண்டுதான் இருக்கிறது. மறு விவாகம் செய்து கொண்டிருந்தால் நான் சமூகத்துக்கு இவ்வளவு தூரம் சேவை செய்திருக்க முடியாமல் போயிருக்கலாம்" என்று கூறியதை மஞ்சுவால் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. தலையசைத்தாள்.

வேணி அருகே வந்தாள். "கேசவன்னு பேராம். என் பெயர், தம்பி பெயர் எல்லாத்தையும் அவர் சரியாய்ச் சொல்றார். வேணி, மூர்த்தி என்றெல்லாம் ஏன் சுருக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று கேட்கிறார். யாரோ நமக்கு நெருங்கிய உறவு போல் தோன்றுகிறார்."

வேணி, தாயின் முகத்தை நோக்கினாள்.

"வேணி அவரை அழைத்துக் கூடத்துச் சோபாவில் உட்காரச் சொல்லு. மறக்காமல் ஃபேனைப் போடு."

"அம்மா, அவரை உனக்குத் தெரியுமாம்மா?" வேணி கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தலையசைத்துவிட்டு, "ஒரு வேளை நான் மறந்து போயிருக்கலாம். அவரைத் திண்ணையில் உட்கார வைத்து விசாரிப்பது சரியாயிருக்காது."

கேசவன், நிலைப்படியில் தலையிடிக்காமல் குனிந்து வந்து, கூடத்துச் சோபாவில் உட்கார்ந்தான். மின்விசிறியின் சுழற்சியில் ஏற்பட்ட மெல்லிய காற்று கோடையிலே இளைப்பாறிக் கொள்ள இதமாக இருந்தது. கூரையின் இடையே இருந்த தட்டு ஓட்டின் கண்ணாடி வழியே கூடத்தில் வெளிச்சம் பளிச்சென்று பரவியிருந்தது. கூடத்துச் சுவரில் வரிசையாகப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. கவர்னருடன், முதல்வருடன், பெரிய மாநாடுகளில் சொற்பொழிவாற்றும் போது எடுக்கப்பட்ட படங்கள், டில்லியில் இந்திரா காந்தியுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்.

ஒரு பெரிய வாழ்த்து மடல் அகலமான பிரேம் போட்டுப் பாதிக் கூடத்தை அடைத்துக்கொண்டிருந்தது. 'சமூக சேவா ரத்னா' என்ற பட்டம் தங்கப் பிரேமில் பளபளத்தது. இரண்டு யானைகள்; நடுவிலே தாமரைப் பூ. ஒரு நினைவுப் பரிசு போலும்!

புன்சிரிப்புடன் கூடிய வேணியின் மார்பளவு போட்டோ. ஓ! நீலாவும் அந்தக் காலத்தில் இப்படியே அச்சடித்தாற் போல்தான் இருப்பாள்.

வேணி ஒரு தட்டில் வைக்கப்பட்ட கண்ணாடி டம்ளரில் மோர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, ஓரக் கண்ணால் கேசவனை அளந்துவிட்டுச் சென்றாள்.

"ஏம்மா, டீசண்டா ஒரு டிரஸ் செஞ்சுண்டு வருவோம்கிறதே தெரியாம இருக்காங்களே! முக்கியமான உதவி ஏதாவது கேட்க வந்திருப்பாருன்னு நினைக்கிறேன். குளிச்சு வருஷக் கணக்கா ஆகியிருக்கும்



போலத் தோணுது. கந்தையா இருந்தா என்ன, கசக்கிக் கட்டக் கூடாதா? சே! சீக்கிரம் பேசி அனுப்பிச்சுடும்மா. வீட்டையே அளந்து விடறாப்பல அவரு ஒவ்வொரு படமா, இடமா, பார்க்கறாரு. அதுதான் 'பெட் ரூமா'ன்னு கேக்கறாரு. சே, சே, சுத்த பண்பாடே தெரியாதவர்னு தோணுது'' என்று வேணி அம்மாவிடம் சலித்துக் கொண்டாள்.

வேணியை ஒரு தடவை பார்த்தாள் நீலா. அவள் நெற்றியில் நெளிந்திருந்த கூந்தல் கற்றையை மெல்ல ஒதுக்கிவிட்டு, ''ஏம்மா வேணி, நீ இந்தக் குட்டைப் பாவாடையை மாற்றித் தாவணி மேலாக்கு எப்பப் போட்டுக்கப் போறே?'' என்று பேச்சை மாற்ற முயன்றாள்.

''உடையிலே என்னம்மா இருக்கு? உங்க காலத்திலே தாவணி மேலாக்கு நாகரிகம்; இந்தக் காலத்திலே முழங்கால் தெரியற ஸ்கர்ட்தான். உங்க மாதிரி பண்பாடு, பேரு, புகழோட நான் வாழ்ந்து காட்டுவேம்மா!'' என்று சொல்லிவிட்டுச் சென்ற வேணியையே பார்த்துக்கொண்டே நின்றாள் நீலாம்பிகை. ''இறைவா! என்னை மதிக்கும் இந்தக் குழந்தைகள், என்னை உயர்வாக நினைக்கும் இந்தச் சமூகத்தின் எதிரே தலை குனிய வைத்துவிடாதே'' என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டு, கூடத்தில் அமர்ந்திருந்த கேசவனை நோக்கிச் சென்றாள்.

எவ்வளவு பெரிய மனிதர் என்றாலும் நீலாம்பிகை வந்து விட்டால் எழுந்து வணக்கம் தெரிவிக்காமல் இருக்கமாட்டார். முப்பது வயதைத் தான் தாண்டியிருந்தாலும் அநுபவம், கவலை இவற்றால் சற்றே நரை கண்ட கூந்தலை அள்ளிச் செருகியிருந்த அந்தத் தோற்றம் காண்பவர் மனத்தில் ஒருவித மரியாதையை அளிக்கும்.

நீலாம்பிகை கேசவன் எதிரே வந்து அமர்ந்தாள். கேசவன் எழுந்து நின்று வணக்கம் தெரிவிக்கவில்லை. கண்கள் எதையோ தன்னிடம் தேடுவதை உணர்ந்த நீலாம்பிகை மேல் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு, ''வணக்கம்'' என்றாள்.

கேசவன் வணக்கம் கூறவில்லை.

''என்னைத் தெரிகிறதா?'' அவன் சிரிக்க முயல்கிறானா, சிரிக்கிறானா?

வாயைத் திறக்காமல் தலையை மட்டும் அசைத்தாள் நீலா. பிறகு, வாயிற்புறம் நோக்கி வேணி வருகிறாளா என்று ஒருமுறை பார்த்தாள்.

''எங்கே மறந்திருப்பாயோன்'னு நெனைச்சுட்டேன்.''

நீலாம்பிகை முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை.

''மறந்திருந்தாலும் தவறு இல்லை. நீ இப்போ சமூகத்திலே மிக உயர்ந்த ஸ்தானத்திலே இருக்கே.''

எல்லாம் கேசவனே பேசினான். நீலாம்பிகை 'உம்' கூடக் கொட்டவில்லை.

''இங்கே உள்ள போட்டோக்களைப் பார்த்தேன். அப்பாடி! இந்திரா காந்தியுடன் எடுத்துண்டிருக்கற போட்டோவிலேதான் நீ எவ்வளவு கம்பீரம்!

12 கிராம், 24 கிராம் பாட்டில்களிலும் மற்றும் 5.25 கிராம் சிறிய டப்பாக்களிலும் கிடைக்கிறது.

''கடைத் தெருவிலே, போஸ்ட் ஆபீசிலே விசாரிச்சேன். உன் பெயர் சொன்னவுடனேயே 'டக்'குனு உன் விலாசத்தைச் சொல்லிட்டாங்க.

''என்ன பேசிக்கிருங்கன்னு மெல்ல நோட்டம் விட்டேன். அப்பாடி, ரொம்பப் புகழ்ச்சிதான். ஆண் துணையில்லாம இருக்கற ஒரு பொம்பிளைக்கு நல்ல பெயரைச் சமூகம் கொடுக்கறது கஷ்டம். ஆமாம்: ஒன்னே ஒன்னு கேட்க றேன், நீலாம்பிகை கேசவமூர்த்தினு என் பேரையும் சேத்து வெளிப் போர்டிலே போட்டுக்கக் கூடாதா? என்னதான் நான் தப்பு செஞ்சிருந்தாலும் அதற்காகக் கட்டிய கணவனை இப்படியா உதாசீனம் செய்யணும்?''

நீலாம்பிகை முகத்தில் கடுமை; பரவியது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். வேணி அந்தப் பக்கம் வருவது நிழலாடியது.

''சரி சரி, நேரமாகிறது. வந்த காரியத்தைச் சொல்லுங்க.'' சொல்லிலே கடுமை தொனித்தது.

வேணி அந்தப் பக்கமாகப் போகும் போது சற்று நின்று, ''அம்மா பால் கார்டைக் கொடு, பால் வாங்கி வரேன்'' என்றாள்.

வேணி போவதைப் பார்த்துக் கொண்டிருந்த கேசவன், ''நீயும் இவள் வயசில் இப்படியேதான் இருந்தே. உன்னுடைய ஒவ்வோர் அங்குல வளர்ச்சியையும் நான் ரசித்து வந்தேன். பதினெட்டு வயது உனக்கு ஆகிறவரைக்கும் நான் பொறுத்துக் கொண்டதே பெரிய காரியம். இப்ப நெனைச்சாலும் ஒரு பக்கம் சிரிப்பு வரது. ஒரு பக்கம் வெட்கமாகக் கூட இருக்கு. உன் அம்மாவுக்குத் தெரியாம உன்னைத் திருப்பதிக்குக் கூட்டிப் போய் அங்கே திருச்சானூரிலே கல்யாணத்தை ரொம்ப எளிமையா முடிச்சுட்டேன். உன் அம்மா எப்படியெல்லாம் சாபமிட்டாங்க? ஒரு புனிதமான காதலைப் புரிஞ்சுக்காதவ! அவங்க இருக்காளா?''

நீலாம்பிகை இப்பொழுது சீறினாள். ''மிஸ்டர்; அம்மாவைப் பத்தித் தவறாகப் பேசாதீங்க. எந்த அம்மாவும் தன் பொண்ணைப் பாதுகாக்க அப்படித்தான் செய்வாங்க. இதோ, வெளியே போனாளே எம் பொண்ணு; திரும்பி வரலேன்னா போலீஸ்லே புகார் கொடுக்காமக் கோயில்லே போய் அர்ச்சனையா செய்வா ஒரு தாய்? ஒரு நாள் ரிமாண்டிலே இருந்தீங்க. 'நான் விரும்பித்தான் அவரோட போனேன்' என்ற எனது வாக்குமூலம் மட்டும் இல்லாட்டா மைனர் பெண்ணைக் கடத்திய குற்றத்துக்காக எவ்வளவு வருஷத் தண்டனை உங்களுக்குக் கெடச்சிருக்கும் தெரியுமா? அத்துடன் கன்னிப்பெண்ணைக் கெடுத்த தண்டனை வேறு சேர்ந்திருக்கும். இப்ப அதைப் பத்தி எல்லாம் பேசாதீங்க; எனக்கு நேரமாவுது. இப்ப எதுக்கு வந்திங்க? பன்னிரண்டு வருஷம் காணாமல் போன நீங்க, இப்ப ஏன் வந்திங்க?'' நீலாம்பிகை சீறினாள்.

மீண்டும் யாரோ வரும் சப்தம். வீணை வகுப்பு நடத்த வருபவர், இடத்தைத் திறக்க சாவி கேட்டு வந்தார். சாவியைக் கொடுத்து விட்டு, ''நீங்க போங்க, பின்னாலேயே வேணி வந்துடுவா? ஆண்டு விழாதானே! பாலசந்தரே வரேன்னுட்டார். விவரம் வந்து சொல்லறேன், போங்க'' என்று கூறி விட்டுக் கேசவன் பக்கம் திரும்பினாள்.

''சரி, சரி, பழைய கதையெல்லாம் வேண்டாம். சீக்கிரம் சொல்லுங்க. நீங்க சொல்லாவிட்டாலும் நான் புரிஞ்சுண்டிருக்கேன். என்னைக் கோடம்பாக்கத்திலே விட்டுட்டு ஓடிப் போயிட்டிங்களே! அப்புறம் எங்கெங்கோ திரிஞ்சு, ஏதாவது கெட்ட வியாதியெல்லாம் வாங்கிண்டு கடைசிக் காலத்தைக் கழிக்க என்னைத் தேடி வந்திருப்பீங்க. கந்தலுடையும் காய்ந்த முகமும், சே, சே, உங்க தீவினை உங்களைப் போட்டு வறுத்தியிருக்கும். என்னிடமிருந்து ஏதாச்சும் பணம் வாங்கிண்டு போகலாம்னு வந்தீங்களா? சீக்கிரம் சொல்லுங்க. நீங்க நினைக்கிற மாதிரி நான் பணம் காசு சேத்துக்கல்லே. பேரும், ஊரிலே மரியாதையுந்தான் சேத்திண்டிருக்கேன். அதைத் தட்டிப் பறிக்க வந்திருக்கீங்களா?''

கேசவன் அதிர்ந்து விட்டான். பன்னிரண்டு ஆண்டுக்கு முந்திய கேசவன் என்றால் இந்தச் சுடுசொல்லுக்குப் பளீர் என்று கன்னத்தில் வீசியிருப்பான்.

அந்தக் காலத்திலே கேசவன் செய்தது தவறுதான். நீலாவின் அழகில் மயங்கிக் காதலித்து, அவளை இழுத்துக் கொண்டு ஓடிப் போய்க் கல்யாணம் செய்து கொண்டது உண்மைதான். ஆசையை அப்படியே பொழிந்து வேணியைப் பெற்றெடுத்தது உண்மைதான். பிறகு அவளையும் அழைத்துக் கொண்டு சீர்காழிக்குச் சென்று பலகாரக் கடை வைத்ததும் உண்மைதான். பலகாரக் கடையிலே நீலா மாவரைச்சு உழைச்சதை மறக்க முடியுமா? அந்த வறுமை நிலையில் பிறந்தவன் தான் அகோரம். பலகாரக் கடையிலே நஷ்டம் வரவே இரவோடு இரவாக நீலாவை அழைத்துக் கொண்டு சென்னை வந்த பிறகே கேசவன் போக்கில் பெரும் மாற்றம். நிறையச் சம்பாதிக்க நினைச்சு சினிமாத் தொழிலில் பிரவேசிக்கத் துணிந்தான். நீலாவின் நகைகள் ஒவ்வொன்றாக அடகுக் கடைக்குப் போனதுதான் மிச்சம். குழந்தை அகோர மூர்த்திக்குப் பால் டப்பா வாங்கிக் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் தவித்த போதுதான், நீலா அதைச் சொல்லிக் காட்டி வருத்தப்பட்ட போதுதான் கேசவனுக்கு அந்த ஈன புத்தி தோன்றியது!

''நீலா, நீ சினிமாவிலே நடிக்கிறயா?''

''சே. உங்களுக்கு ஏங்க இந்தப் புத்தி?''

''பெரிய வேஷம் கிடையாது. சிறு சிறு வேஷம். ஒரு நாளைக்குப் பத்துப் பதினைஞ்சு கிடைக்கும்.''

''நீங்க என்ன செய்யப் போறீங்களாம்? நாலு காசு சம்பாதிக்க உங்களுக்கு யோக்கியதை அத்துப் போச்சா?''

''இத பாரு நீலா, எனக்குந்தான் உதவி டைரெக்டர் வேலைன்னு பேரு. டிபன், காபி சிகரெட்டு எல்லாம் கெடைக்குது. சில்லரையை மட்டும் கண்ணாலே பார்க்க முடியல்லே. ஆனா எக்ஸ்ட்ரா நடிகைன்னா உடனே கைமேலே காசு. என்னா அவ பொம்பளே!..'' இப்படிக் கூறி அவன் இளித்தபோது நீலாவுக்குப் பற்றி எரிந்தது.

''இதைவிட எழும்பூர் ஸ்டேஷன் வாசலில் அகோர மூர்த்தியைக் கிடத்திப் பிச்சை எடுத்துக் கொண்டாரேன்.''

நிலைமை அப்படித்தான் ஆகிவிடும் என்று தோன்றியது. கேசவன் மிகக் கேவலமாக நடந்து கொண்டான். பெரிய டைரெக்டர் என்று ஒருவனை வீட்டுக்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்தினான். நீலா எரிமலையானாள். இரவெல்லாம் கடுமையான யுத்தம். எப்படித்தான் அவளுக்கு ஆத்திரம் வந்ததோ?

''நீலா, பழசை எல்லாம் நினைவுப்படுத்தாதே. அதை நினைக்கவே எனக்குக் கூச்சமாக இருக்கிறது. கட்டிய பெண்டாட்டியை விற்கத் துணிஞ்ச நீசனுக்கு என்ன தண்டனை வேண்டுமோ அதைக் கடவுள் கொடுத்து விட்டார். ஆனால் இப்போது நான் புடம் போட்ட பொன்னாக வந்திருக்கிறேன்.''

கேசவன் குரலில் அநுபவத்தின் கசப்பு இருந்தது. நீலா எழுந்து நின்றாள். கை கூப்பினாள். ''ஐயா, கேசவரே! வணக்கம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் அதிகாலையில் குழந்தைகளோடு என்னைத் தவிக்க விட்டுப் ஓடிப் போனீர்களே; உங்கள் மட்டமான யோசனைக்குச் சம்மதிக்காததால்! உங்களைச் சமூகம் ஒன்றும் சொல்லவில்லை. அதே நிலையில் நான் குழந்தைகளை விட்டு விட்டு ஓடியிருந்தால்..? 'சமூக சேவா ரத்னா' என்ற பட்டமா கொடுத்திருப்பாங்க? ஓடுகாலி, புருசனைக் குழந்தைகளுடன் தவிக்க விட்டு ஓடியவள்னு பகிரங்கமா ஏசியிருப்பாங்க. நான் சமூகத்தின் கண்களுக்குக் குற்றவாளியாக நிற்காமல் நிமிர்ந்து நிற்கத் துணிந்தேன். மதுரைக்கு வந்தேன். கௌரவமாப் பிழைக்க எவ்வளவோ வேலைகள் நாட்டில் இருக்கின்றன: சுலபமாகப் பிழைத்திருக்க முடியும்; ஒரு ஹோட்டல் முதலாளிக்கோ, மளிகைக் கடைக்காரருக்கோ ஆசை நாயகியாய்ச் சின்ன வீட்டு ராணியாகி இருக்கலாம்; வயிறாரச் சாப்பாடு, புடைவை, நகை, வீடு எல்லாம் கிடைச்சிருக்கும்: ஆனா, என் அருமைச் செல்வங்கள் வேணியும், மூர்த்தியும் என்ன நிலையடைந்திருப்பார்கள்? அவர்கள் யாரை அம்மா என்று அழைத்திருப்பார்கள்?''

கேசவன் உதடுகள் துடித்தன. "இப்போது மட்டும் அவர்கள் நிலை என்ன? அவர்கள் அப்பா ஓடிப் போனவர் என்ற பெயருடன்தானே வாழ்கிறார்கள். சமூக சேவா ரத்தினத்தின் வாழ்க்கை வர்ணனை எழுதப்பட்டால் ஓடிப் போன மோசக்காரக் கணவனின் மனைவி என்றுதானே சொல்லப்படும்?"

நீலா சீறினாள்: "இல்லை, இல்லை, என் அருமை வேணிக்கும், மூர்த்திக்கும் அப்பா இல்லை. அவர்கள் அப்பா அவர்களுடைய சிறு வயதிலேயே செத்துப் போயிட்டார். 'சமூக சேவா ரத்னம் நீலாம்பிகை அம்மையார் ஒரு விதவை. இளம் வயதிலேயே கணவனை இழந்து, மறுமணம் புரிந்து கொள்ளாமல் சமூக சேவையைச் செய்து வரும் பண்புள்ள பெண்' என்று சமூகத்தால் மதிக்கப்படுபவள். நீலாம்பிகை ஓர் அமங்கலியாகவே இருக்கட்டும். மீண்டும் அவளுடைய பூர்வாசிரம நிகழ்ச்சிகளை மீண்டும் புதுப்பித்து, கணவன் இருக்கிறான், விட்டுவிட்டு ஓடிப் போன கணவன் வந்து விட்டான். இவ்வளவு நாட்களாக, தான் கணவனை இழந்தவள் என்று பொய் சொல்லி ஏமாற்றிய வேடதாரி' என்ற பெயர் எனக்கு ஏற்பட வேண்டாம். மிஸ்டர் கேசவமூர்த்தி! தயவு செய்து மீண்டும் என் வாழ்க்கைத் தடாகத்தில் கல்லை வீசிச் சலனத்தை உண்டாக்காதீர்கள்; போய் விடுங்கள், வந்த சுவடு தெரியாமல் போய் விடுங்கள்."

நீலாம்பிகையின் கண்களில் நீர் துளும்பியது. கேசவன் திக்பிரமை பிடித்தவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேணி உள்ளே வந்து கொண்டிருந்தாள். கேசவன் மெல்ல எழுந்தான். கை கூப்பி வணங்கினான். "நான் போய் வருகிறேன், நீலா" என்று சொல்ல வாயெடுத்தவன், "போய் வருகிறேன் அம்மா" என்றான்.

"ஏம்மா, அவருக்கு என்ன வேண்டுமாம்?"

"சமூகத்தில் மறுபடியும் பெரிய அந்தஸ்து வேண்டுமாம்."

"அதற்கு நீங்க என்ன செய்ய முடியும்? ஆண் பிள்ளைகளுக்குக் கூட உங்களால் வேலை வாங்கித் தர முடியுமா?"

"முடியாது. முடியாது என்று சொல்லி விட்டேன். அதனால்தான் புறப்பட்டுப் போகிறார்."

"உங்கள் கண்கள் ஏம்மா கலங்கியிருக்கின்றன?"

"அதுவா! பாவம்! ஆண்களுக்குள்ள கஷ்டத்தை உணர்ந்து, அதுவும் அந்த மனுஷனின் கதையைக் கேட்டுக் கலங்கி விட்டேன்."

கேசவன் வீட்டுப்படி இறங்கிக் கொண்டிருந்தான். அப்போது மிகப் பெரிய மாலைகளுடன் சிலர் காரில் வந்து இறங்கினர். கேசவன் வழிவிட்டு ஒதுங்கி நின்றான். உள்ளே குரல் கேட்டது.

"அம்மா! இன்று நடந்த கமிட்டிக் கூட்டத்தில் பெண்கள் பண்பாட்டு உயர்மட்டக் குழுவின் கௌரவத் தலைவியாக உங்களை நியமிக்க முடிவெடுத்து விட்டோம். வாழ்க! நீலாம்பிகை அம்மையார் வாழ்க!"

கேசவன் வந்த சுவடு தெரியாமல் சென்று கொண்டிருந்தான். அவனுடை தோளில் அந்தப் பைமட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. கொண்டு வந்த மற்றொரு தோல் பை சோபாவின் அருகே அப்படியே இருந்தது.

எப்போது அதைத் திறந்து பார்ப்பார்களோ அம்மையார். திறந்தால் அதில் நூறு ரூபாய் நோட்டுக்களாக ஆயிரம் இருந்தன. ஒரு சிறிய துண்டுக் கடிதமும் இருந்தது.

"பன்னிரண்டு ஆண்டுகளாக நான் செய்த தொழிலில் மிச்சப்படுத்திச் சேமித்த பணம் இது. ஒரு வேளை உன்னைச் சந்திக்க முடியாமல் போனால் என்ன செய்வது என்றே இந்தத் துண்டுக் கடிதம். இதுவரை செய்த தொழில் பம்பாய் நகரத்தில் இரவு பகலென்று பாராமல் பிச்சை எடுத்தது. ஏற்கவும், கேசவன்." ✳

கலைகளின் தலைநகர் மதுரையில்
தலைசிறந்த தையலகம்....
G.Tex®
TAILORS
AIR-CONDITIONED
ALAGAR KOIL ROAD MADURAI 625002 PHONE: 32222
UNIQUE

Happy and Prosperous Diwali

அடக்க முடியாத ஆவலைத் தூண்டுவது!



ORKAY **திடீர் குலாப்ஜாமூன் மாவு:**

எச்சமயத்திலும், வீட்டில், சுவை மிக்க குலாப்ஜாமூனைத் தயாரிப்பது சுலபம். 200 கிராம் பாக்கெட் ஒவ்வொன்றிலிருந்தும் நாவில் நீர் ஊறச் செய்யும் 50 குலாப்ஜாமூனைச் செய்யலாம். அருகிலுள்ள கடையில், இன்றே ஒரு பாக்கெட்டை வாங்குங்கள். முதல்தரமானதைச் சுவைத்து மகிழ்வீர்கள். இட்லி, வடை, தோசை, ஜிலேபி, சாம்பார்-ரசம் ஆகிய பொடி வகைகளும் கிடைக்கும். தயாரிப்பாளர்கள்: ஸ்ரீ ராமகிருஷ்ணா டெய்ரி, பெங்களூர்.

ORKAY ஆவலைத் தூண்டும் உணவு வகை

Dattaram-RD 1/83

தேவை ஒரு வீடு!

ஏ. நடராஜன்

[சங்கரும் அவன் மனைவி கஜலட்சுமியும் முதல் இரவுக்காகத் தனி அறையில் உள்ளனர்.]

சங்கர்: அடே! கதவு தாழ்ப்பாள் போட்டு எவ்வளவு நேரமாவுது? நீ பாட்டுக்கு அங்கேயே நின்னுக்கிட்டு இருக்கியே? வா, சும்மா வெக்கப் படாம வா.

கஜ: உக்கூம். (சிணுங்குகிறாள்.)

[பணத்தை எண்ணிக் கையில் உள்ள டைரியில் எழுதிக் கொண் டிருக்கிறான் சங்கர். அதே இடத்தில் கஜலட்சுமி நின்றுகொண் டிருக்கிறாள்.]

சங்: என்னது, அங்கேயே நின்னு தபஸ் பண்றியா?

கஜ: போங்க; எனக்கு வெக்கமாவும் இருக்கு; கோபம் வேறே வருது.

சங்: சரிதான். 'டூ இன் ஒன்' மாதிரி வெக்கம், கோபம் ரெண்டும் கலந்து வருது உனக்கு. அவசரப் படாம ஒவ்வொண்ணு வரட்டும். நான் சமாளிக்கிறேன்.

கஜ: உக்கூம். இப்படியெல்லாம் பேசினா எனக்கு வெக்கம் வராதாக்கும்? முதலிரவு எப்போ வரும், கிண்டலாப் பேசலாம்னு காத்துக்கிட் டிருந்தீங்களா?

சங்: சரி; வெக்கம் வந்ததுக்குக் காரணம் தெரிஞ்சு போச்சு. முதல் இரவு அன்னிக்குப் பொண்ணுக்கு வெக்கம் வந்தே தீரணும். கோவம் எதுக்கு வந்ததாம்?

கஜ: நான் ஒருத்தி கையிலே பால் சொம்போடு நின்னுக்கிட்டே யிருக்கேன். அதைக் கவனிக்காமே நீங்க பாட்டுக்கு டைரி எழுதறீங்களே!

[சங்கர் எழுந்து போய் அவள் கையைப் பிடித்துப் படுக்கைக்கு அழைத்து வருகிறான்.]

சங்: கோவிச்சுக்காதே கஜா. நீ என்னைச் சாதாரணமான கணவன்னுதானே நெனைச்சே?

கஜ: இல்லேங்க. நீங்க அசாதாரணமான கணவர். இல்லேன்னு லட்டு மாதிரி நான் இங்கே கால் கடுக்க நிக்கறேன்.

சங்: லட்டா? எங்கே, குலோப் ஜாமூன், ஜாங்கிரி, அல்வா, பாசந்தி, பால்கோவா எல்லாம்?

கஜ: சரியான சாப்பாட்டு ராமனு இருப்பீங்க போல இருக்கே!

சங்: அந்த ரகசியம் உனக்கு எப்படித் தெரிஞ்சுது?

கஜ: முதலிரவு அன்னிக்கு மனைவியை அருகிலே வச்சுக்கிட்டுப் பலகாரத் தட்டை எண்ணிப் பார்த்துட்டு இருக்கீங்களே; அதைப் பார்த்தாலே புரிஞ்சுபோச்சு, நீங்க பெரிய சாப்பாட்டுப் பிரியர்னு.

சங்: நீ... நீ... நான் என்ன பண்ணணும்னு சொல்றே?

கஜ: கையைப் புடிச்சு இதமா அழைச்சு வந்து, அன்பா நாலு வார்த்தை பேசுவீங்கன்னு எதிர் பார்த்தேன். நீங்க என்னடான்னு இடிச்ச புளி மாதிரி உக்காந்திருக்கீங்க.

சங்: என்ன இது? உன் கழுத்திலே மூணு முடிச்சுப் போட்டு இன்னும் இருபத்து நாலு மணி நேரம் கூட ஆகல்லே. அதுக்குள்ளாரச் சாப்பாட்டு ராமன், இடிச்ச புளி, அப்படீன்னு சரமாரியா விளாசறே!

[கஜலட்சுமி கண்ணைக் கசக்குகிருள்.]

சங்: கஜா! கண்ணைக் கசக்காதே. அப்புறம் உன் கண்ணிலே இருக்கிற ஒரு வண்டி மையும் கரைந்து உன் முகம் பூராப் பரவி, அதைப் பார்த்து நான் பயந்து அலறி அடிச்சுக்கிட்டு இந்த அறையை விட்டு ஓடினு, அது அவ்வளவு நல்லா இருக்காது.

கஜ: ஓஹோ! அதுக்குள்ளார நான் உங்களுக்குத் திகட்டிப் போயிட்டேனு?

சங்: கஜாக் கண்ணே! சும்மா தமாஷுக்காக உன்கிட்டே விளையாடினேன். நெஜம்னு நெனைச்சுக் கோவிச்சுக்காதே. அப்புறம் முதல் இரவிலேயே சண்டை போட்ட தம்பதிகள் நாம்தாங்கற பட்டம் நமக்குக் கெடைச்சுடும்.

கஜ: பால் ஆறிப்போவுதுங்க.

சங்: இதுவரைக்கும் சுமார் நீ எத்தனை சினிமா பாத்திருப்பே?

கஜ: உங்களைவிடக் கம்மியாத் தான் பாத்திருப்பேன்.

சங்: அதெப்படி அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?

கஜ: உங்க அக்கா நேத்துச் சொன்னுங்க.

சங்: அக்கா எல்லாத்தையும் உன்கிட்டே சொல்லியாச்சா?

கஜ: பதருதேங்க. உங்க அக்கா எல்லாத்தையும் என்கிட்டே சொல்லலே. நீங்க சினிமாவுக்குப் போகாத முதல் இரவு இதுதான்னு சொன்னுங்க.

சங்: இது முதல் இரவாச்சே! அப்புறம் எப்படிச் சினிமாவுக்குப் போக முடியும்?

கஜ: நல்ல வேளை! இது முதல் இரவுங்கற நெனைப்பு இப்பவாவது உங்களுக்கு வந்ததே! பால் ஆறிப் போவுதுங்க.

சங்: நான் சினிமாவைப் பத்திக் கேப்பதுக்குக் காரணம் என்ன, தெரியுமா?

கஜ: சொல்லுங்க.

சங்: எத்தனை சினிமாவிலே முதல் இரவுக் காட்சியைப் பாத்திருப்பே?

கஜ: போங்க; வெக்கமா இருக்கு.

சங்: என்னது, வெக்கமா இருக்கா? எப்பவோ சினிமாவிலே பார்த்த முதல் இரவுக் காட்சியை நெனைச்சு இப்ப வெக்கப்படறியா?

கஜ: சும்மா, பேசிக்கிட்டே இருக்காதீங்க. பால் ஆறிப் போவுதுங்க.

சங்: சும்மா, கிளிப்பிள்ளை மாதிரி பால் ஆறிப் போவுதுங்கன்னு சொல்லிக்கிட்டிருக்காதே. வேணும்னா நீ குடிச்சுடு.

கஜ: ஐயே! நீங்க சினிமாப் பார்த்த லட்சணம் இதுதானு?

சங்: நீ என்ன சொல்ல வாரே?

கஜ: நீங்க கொஞ்சம் குடிச்சுட்டு மீதியை என்கிட்டே குடுக்கணும். அதை நான் குடிக்கணும்.

சங்: கொஞ்சம் நான் குடிக்கணும். மீதி சொம்பு நிறைய இருக்கறதை நீ குடிக்கணுமா? இப்பவே குண்டா இருக்கே. சொம்பு சொம்பாப் பால் குடிச்சா அப்புறம் அதிபயங்கரமாப் பெருத்துடுவே. ஆமா, நான் குடிச்சதுக்கு அப்புறந்தான் நீ குடிக்கணுங்கிற விவகாரமெல்லாம் யார் சொல்லிக்குடுத்தா?

கஜ: எல்லாம் சினிமாவிலே பார்த்த அநுபவந்தாங்க.

சங்: சினிமாச் சரியா பார்த்திருந்தின்னு அறைக்குள்ளார நொழைஞ்சதுமே என் காலிலே விழுந்து வணங்கியிருக்கணுமே!

கஜ: மன்னிச்சுடுங்க. மறந்து போச்சுங்க. இதோ இப்பவே விழுந்து கும்பிடறேன்.

சங்: உம். மெதுவா, மெதுவா; எழுந்திரு.

கஜ: அப்புறம்?

சங்: 'அத்தான் என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?' அப்படின்னு கேக்கணும்.

கஜ: போங்க!

சங்: 'போயிடுவேன்' கதவு தாழ்ப்பாளைப் போட்டுட்டியே.

கஜ: அழகாப் பேசறீங்க.

சங்: நான் லட்சியவாதியாச்சே.

கஜ: ஐயையோ, லட்சியவாதியா? பெரிய பெரிய வார்த்தையா இப்படிச் சொல்லிப் பயமுறுத்தாதீங்க.

சங்: இப்படிப் பக்கத்திலே உட்காரு; சொல்றேன்.

கஜ: உக்கார மாட்டேன். புருஷன் எதிரிலே மனைவி நிக்கறது தான் பழக்கங்க.

சங்: இப்ப அப்படித்தான் சொல்லுவே. இன்னும் கொஞ்ச நாள் போச்சுன்னு உனக்குக் கால் வலிக்கும். 'என்னங்க கொஞ்சம் காலைப் புடிச்சுவிடுறீங்களா'ன்னு சொல்லுவே. எதுக்கு வம்பு? இப்பவே உக்காந்திடு.

கஜ: ஆஹா! அருமை... [illegible] அபூர்வமான புத்தி உங்களுக்கு. என் அப்பா அப்பவே சொன்னாரு.

சங்: என்ன சொன்னாரு?

கஜ: மாப்பிள்ளையைப் பார்த்தா அசமஞ்சம் மாதிரி இருந்தாக்கூட அவர் முகத்திலே நிறையத் தேஜஸ் இருக்குன்னு சொன்னாரு.

சங்: என்னைப் பார்த்தா அசமஞ்ச மாட்டமா இருக்கு?

கஜ: பின்னே? முதலிரவு அன்னிக்கு இப்படித் தொணதொணன்னு பேசிக்கிட்டு இருக்கிறவரு அசமஞ்சமாத்தானே இருக்க முடியும்?

சங்: சரி, சரி! மறுபடியும் பால் ஆறுதுன்னு சொல்லாதே. இங்கே குடு.

கஜ: அடே, என்ன ரோஷம்? எனக்குக் கொஞ்சம் மிச்சம் வையுங்க. ஆமா, ஏதோ லட்சியவாதின்னு சொன்னீங்களே; அப்படீன்னு?

சங்: அதை நாளைக்குச் சொல்றேன்.

கஜ: சரி, நேரமாச்சு; அணைங்க.

சங்: அதைக்கூட நீ எனக்குச் சொல்லித் தரணுமா? உன்னை அணைக்கத் தான் போறேன்.

கஜ: ஐயே! நான் விளக்கை அணைக்கச் சொன்னேன்.

சங்: சரி. முதல்லே விளக்கு; அப்புறம்...

[கலகலவென்று சிரிப்பொலிச் சங்கமம்.]

காட்சி—2

[திருமணம் ஆகி ஒரு வாரம் ஆகிறது. அலுவலகத்திலிருந்து அலுப்புடன் வருகிறுன் சங்கர்.]

கஜ: என்னங்க, உங்க முகம் ஒரு மாதிரியா இருக்கு?

சங்: உன் முகத்தைவிட ஒண்ணும் மோசமில்லே என்னுது. போயி, கண்ணாடியைப் பாரு.

கஜ: ஏன், வந்ததும் வராததுமா எரிஞ்சு விழறீங்க? உங்களுக்குப் புடிக்குமேன்னு கட்லட் பண்ணியிருக்கேன்.

சங்: ஆமா. எனக்குப் புடிக்குமோ இல்லியோ? நீ பாட்டுக்குக் கண்டதைச் சமைச்சுக் காசை வீணுக்கு. அப்புறம் என் லட்சியம் என்னுகிறது?

கஜ: ஆமா! பிரமாத லட்சியம்!

சங்: கஜா, என்னை என்ன வேணுமோ சொல்லு. ஆனு என் லட்சியத்தைக் கிண்டல் பண்ணுதே.

கஜ: உங்க லட்சியந்தான் என்ன? வெவரமாச் சொல்லுங்களேன்.

சங்: எனக்கு இந்த வாடகை வீடுகள்லே இருந்து அலுத்துப் போச்சு. எப்படியும் சொந்தமா ஒரு வீடு வாங்கி, அதுலே ஆனந்தமா வாழ்க்கை நடத்தணும். இதுதான் என் லட்சியம். அதுக்காகத்தான் பைசா பைசாவாச் சேக்கறேன். முதலிரவு அன்னிக்குக்கூட டைரியிலே கணக்கு எழுதி, மொய் வச்சவங்க பேரெல்லாம் குறிச்சு வைச்சுக்கிட்டேன். அதனுலே நீயும் அநாவசியமாச் செலவு செய்யாதே.

கஜ: இந்த ஜன்மத்திலே இது நடக்கப் போறதில்லே.

சங்: ஏய், அச்சான்யமாப் பேசாதே.

கஜ: உங்க சம்பளத்திலே எதை மிச்சம் பண்ணி வீடு கட்டறது?

சங்: அநாவசியச் செலவுகளைக் குறை 'ஓவர்டைம்' செஞ்சு சம்பாரிக்கிறேன். நீ என்ன செய்யறே?

கஜ: சொல்லுங்க.

சங்: உனக்குத்தான் கதை எழுதத் தெரியுமே! பத்திரிகைகளுக்குக் கதை எழுது. புகழுக்கு புகழ், பணத்துக்குப் பணம்.

கஜ: இது எத்தனே வருஷத் திட்டம்?

சங்: குறைஞ்ச பட்சம் உன் பொறந்த வீடு மாதிரி ஒரு சின்ன வீடு வாங்கிடணும்! ஆமா, உங்க அப்பா அம்மாவுக்குத்தான் ஆண் புள்ளே கெடையாதே! அந்த வீடு நமக்குத் தானே வந்து சேரும்?

கஜ: உக்கூம். ரத்னு இருக்கறதை மறந்துட்டீங்களா?

சங்கர்: எப்படி மறக்கறது? உன்னே விடப் பாக்கறதுக்கு அவ கொஞ்சம் நல்லாவே இருக்கா. உங்க அப்பா கிட்டே சொல்லி அவளேயும் எனக்குக் கட்டி வச்சுடச் சொல்லு. வீடாவது முழுசாக் கெடைக்கும்.

கஜா: உக்கூம். உங்க மூகத்துக்கு இன்னொரு பொண்டாட்டி அவசியந்தான்!

சங்கர்: என்ன அப்படிச் சொல்றே? நேத்து ராத்திரிகூட மன்மதன் மாதிரி இருக்கீங்கன்னு நீ செல்லமாக் கொஞ்சலே?

கஜா: போதும்; சத்தமாப் பேசாதீங்க. பக்கத்து வீட்லே யாரும் கேட்டாச் சிரிக்கப் போருங்க.

சங்: கஜா, இப்பவே சொல்லிட்டேன். பக்கத்து வீடு, எதிர்த்த வீடு அப்படின்னு வந்து ஓசியா அல்லது கடனு எதுவும் கேட்டாக் குடுத்துடாதே.

கஜா: அவுங்க கிட்டே பேசலாமா? அதுவும் கூடாதா?

சங்: எதுக்காக வெட்டியாப் பேசிப் பொழுதைப் போக்கறே? புஸ்தகம், மேகஸின் படியேன்.

கஜா: நம்ம கல்யாணப் பத்திரிகையைத் தவிர வேறு எந்தப் பத்திரிகை நம்ம வீட்டிலே இருக்கு?

சங்: பேப்பர்க்காரப் பையன் கிட்டே சொல்லி வேணுங்கற பத்திரிகை வாங்கிக்க.

கஜா: ரொம்ப நன்றிங்க.

சங்க: ஆனு, ரெண்டு கண்டிஷன்.

கஜா: சொல்லுங்க.

சங்: பத்திரிகைகளே ஓசி குடுக்கக் கூடாது. பழைய பேப்பர்க் கடையிலே போடும்போது நான் 'செக்' பண்ணுவேன்.

கஜா: ரெண்டாவது கண்டிஷன்.

சங்: பத்து ரூபாய்க்குப் பத்திரிகை வாங்கினு, கொறைஞ்ச பட்சம் பதினஞ்சு ரூபாயாவது கதை எழுதிச் சம்பாதிக்கணும்.

சஜா: இவ்வளவு கண்டிஷனும் வீடு வாங்கறதுக்குத்தானே?

சங்: ஆமா! ஆமா!

கஜா: பூம் பூம் மாடு மாதிரி தலையை ஆட்டாதீங்க. எப்டியும் எங்க அப்பா அம்மா காலத்துக்குப் பெறகு எங்க வீட்டிலே பாதி நமக்குக் கெடைக்கப் போவுது.

சங்: ஆமா. உங்க வீடு பெரிய பங்களா! அதிலே பாதி கெடைச்சா ஆயிரம் ரூபா வாடகை வரும்? இருக்கறதே துளியூண்டு வீடு; அதிலே ரெண்டு பாகம்; அதுவும் உங்க அப்பா அம்மா காலமாகிறதுக்குள்ளே நான் குடுகுடு கிழவனுயிடுவேன்,

கஜா: உங்களுக்கு வீடு வேணுங்கறதுக்காக எங்க அப்பாவும் அம்மாவும் சீக்கிரமே இந்த உலகத்தை விட்டுப் போகணுமாக்கும்!

சங்: நல்லா, தீர்க்காயுசா இருக்கட்டும். நாம எப்படியும் வீடு வாங்கியே தீரணும்.

கஜா: சரி, உடையை மாத்திக்கிட்டு வாங்க. அல்வாவும், கட்லட்டும் பண்ணியிருக்கேன்.

சங்: என்ன விசேஷம்?

கஜா: சாயங்காலம் எங்க அப்பா வந்திருந்தார்.

சங்: இதுக்குத்தான் உள்ளூர்லே பொண் எடுக்கக் கூடாதுன்னு சொல்லுவாங்க. எதுக்கு வந்தார் உங்க அப்பா?

கஜா: என்னேப் பார்க்கத்தான் வந்தார், உங்களுக்கும் ஒரு பொண் பொறந்தா அப்புறம் பாசம்னு என்னன்னு புரியும்.

சங்: ரத்னுவும் வந்திருந்தாளா?

கஜா; அவ வரலே. இந்தாங்க; அவளேச் சும்மா மொறைச்சு மொறைச்சுப் பாக்காதீங்க. இந்த அத்தான் என்ன சுத்த அச்சுப்பிச்சுவா இருக்குன்னு நெனேச்சுக்கப் போறு. அவ ஒரு மாதிரி 'சென்சிடிவ் டைப்.'

சங்: உன் தங்கை பெரிய அப்சரஸ். நான் மொறைச்சுப் பாக்கற அளவுக்கு அவகிட்டே என்ன அழகு இருக்கு? நீ கொஞ்சம் மாநிறமா இருந்தாலும் உன் முகத்திலே இருக்கற லட்சுமி களே அவ முகத்திலே இருக்கா? நீயே சொல்லு.

கஜா: நெஜம்மாவா சொல்றீங்க.

சங்: நெஜமாலுந்தான் கஜா, உன் அழகிய கண்ணுலே என்னேப்பாரேன்,



அம்மாநான் சொன்மாலை தொடுக்கின்றேன் நீதான்
ஆர்க்கணிய என்கின்றாய் அறியாயோ தோழி
இம்மாலை அம்பலத்தே எம்மானுக் கன்றி
யார்க்கணிவேன் இதைஅணிவார் யாண்டைஉளார் புகல்நீ
செப்மாப்பில் உரைத்தனைஇச் சிறுமொழிஎன் செவிக்கே
தீநுழைந்தால் போன்றதுநின் சிந்தையும்நின் நாவும்
பன்மாலைத் தத்துவத்தால் அன்றிநும் பொன்றாலே
படைத்ததுனைப் பழக்கத்தால் பொறுத்தனன்என் றறியே.

அருட்சோதித் தலைவர்எனக் கன்புடைய கணவர்
அழகியபொன் மேனியைநான் தழுவிநின்ற தருணம்
இருட்சாதித் தத்துவங்கள் எல்லாம்போ யினவால்
எங்கணும்பேர் ஒளிமயமாய் இருந்தனஆங் கவர்தாம்
மருட்சாதி நீக்கிஎனைப் புணர்ந்தஒரு தருணம்
மன்னுசிவா னந்தமயம் ஆகிநிறை வுற்றேன்
தெருட்சார்பில் இருந்தோங்கு சமரசசன் மார்க்கத்
திருச்சபைக்கண் உற்றேன்என் திருக்கணவர் உடனே.

- திரு அருட்பா

விளம்பர உதவி

ஏ. பி. டி. பார்சல் சர்வீசு

10-11, காளிங்கராயன் வீதி

ராம் நகர், கோயம்புத்தூர்-641009

கஜா: போங்க; வெக்கமா இருக்கு.

சங்: வெக்கப்பட்டது போதும். போயி டிபனைக் கொண்டா.

(கஜலட்சுமி துள்ளி ஓடுகிறாள். சங்கர் டிபன் சாப்பிடத் தயாராகிறான்.)

கஜா: அல்வா எப்படி இருக்குங்க?

சங்: ஆகா! அல்வாவா இது?

கஜா: கட்லட்.

சங்: ஓஹோ! கட்லட்டா இது?

கஜா: நல்லா இருக்கா?

சங்: பேஷா இருக்கு!

கஜா: அப்பாடி! நான் பட்ட கஷ்டம் வீண் போகலே. இவ்வளவு சிரமப்பட்டுச் செய்யறமே, உங்களுக்குப் பிடிக்கணுமேன்னு நெனைச்சேன்!

சங்: உன்னுடைய கையே கை. எங்கே கையை நீட்டு.

(கையில் முத்தமிடுகிறான்.)

கஜா: போங்க. கையை நீட்டுன்னு சொல்லவும் ஏதோ புதிசா வளையல் வாங்கிட்டுப் வந்திருக்கீங்களாக்கும்னு நெனைச்சேன்.

சங்: சரிதான். கையை நீட்டினு வளையல், காதைக் காண்பிச்சாக் கம்மல், மூக்கைத் தொட்டா மூக்குத்தி. கழுத்தை நீட்டினு நெக்லஸ். தலையைத் தொட்டாப் புதுச் சவுரி;- இப்படி எதிர்பார்ப்பே போல இருக்கே! நமக்குக் கட்டுப்படியாகாது, தாயே!

கஜா: மறுபடியும் கணக்குப் பார்க்க ஆரம்பிச்சுட்டீங்களா?

சங்: ஆமா. நான் கணக்குப் பாக்கறவன்தான். ஆயுசுக்கும் சில பேர் சம்பாரிச்சுக்கிட்டே இருப்பாங்க. கடைசியிலே பாத்தா ஓய்வு பெத்த துக்கு அப்புறம் மூக்குப் பொடிக்குக் கூடக் காசு இருக்காது.

கஜா: என்னங்க, உங்களுக்குப் பொடிப் பழக்கங்கூட உண்டா?

சங்: சே! சே! ஒரு பேச்சுக்குச் சொன்னேன். மது, மாது, புகை எதுவும் தொட்டது கெடையாது.

கஜா: அதனால்தானே எங்க அப்பா உங்களைப் பிரமாதமாப் புகழுறாரு?

சங்: அப்படியா? என்ன சொன்னார்?

கஜா: 'மாப்பிள்ளை எவ்வளவு படிச்சிருக்கார்? ஒரு கெட்ட பழக்கம் கெடையாது. பரம சாதுவா இருக்கார்'னு புகழ்ந்தார். நான் அதைக் கேட்டுப் பூரிச்சுப் போயிட்டேன்.

சங்: ரொம்பவும் பூரிக்காதே. ஏற்கனவே நீ கொஞ்சம் குண்டு. இந்த ஒரு வாரத்திலே இன்னும் கொஞ்சம் பருத்திட்டே. இப்படியே போனா..

கஜா: என்னைக் கலாட்டாப் பண்ணலேன்னா உங்களுக்குப் பொழுது போகாது. காபி சாப்பிடுங்க.

சங்: ஆமா, இந்த டிபனுக்கு எவ்வளவு செலவாச்சு?

கஜா: நெய், சர்க்கரை, பாதாம் பருப்பு, உருளைக் கெழங்கு, பச்சை மிளகாய், வெங்காயம் ..

சங்: கஜா, நிறுத்து. பணம் எவ்வளவு ஆச்சுன்னு, நீ பாட்டுக்குப் பட்சணம் செய்யறதுக்கு வேண்டிய சாமான் லிஸ்டைப் படிக்கறயே?

கஜா: ஏறக்குறைய நூறு ரூபா இருக்கும்.

சங்: என்னது? நூறு ரூபாயா? துளியூண்டு அல்வா, துக்கடாவா ஒரு கட்லட்; அதுக்கு நூறு ரூபாயா? ரெண்டு ரூபாய்க்குக் கெடைக்குமே ஹோட்டல்லே.

கஜா: (செல்லமாகக் கோபித்துக் கொண்டு) ஹோட்டல்லே கெடைக்குமுன்னு என்னை ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க? (விசும்புகிறாள்.)

சங்: (குழைந்து) அதுக்கு இல்லே கஜா. என்ன இருந்தாலும் இந்த அல்வாவுலே, கட்லட்டிலே உன்னோட 'டச்' இருக்கத்தான் செய்யுது. இருந்தாலும் நூறு ரூபாங்கறது கொஞ்சம் அதிகமா .. (இழுக்கிறான்)

கஜா: எங்க அப்பாவுக்குக் குடுத்தேன். நான் சாப்பிட்டேன். உங்களுக்கு வெச்சேன். வேலைக்காரிக்குக் குடுத்தேன். டிபன் காரியர்லே அம்மாவுக்கும், ரத்னாவுக்கும் அனுப்பிச்சேன். இவ்வளவுக்கும் நூறு ரூபாதான் ஆச்சு.

சங்: சமர்த்துக் கண்ணு நீ! இன்னிக்குப் போகட்டும். இனிமே இந்த மாதிரி அநாவசியச் செலவு எல்லாம் செய்யாதே. (சற்று யோசித்து) இதபாரு; பொறுப்பை உன்கிட்டேயே விட்டுடறேன். செலவு செய்யறது, சேமிக்கறது எல்லாம் உன்னோட பொறுப்பு. நான் தலையிடவே மாட்டேன். பாங்குக் கணக்கு வழக்கு எல்லாத்தையும் நீயே பாத்துக்க. ஒரு வருஷம் கழிச்சுக் கணக்குப் பார்ப்பேன்.

கஜா: நல்லாப் பாத்துக்குவேன். ஒரு வருஷம் கழிச்சுப் பாருங்க. அப்படியே தெகைச்சுப் போயிடுவீங்க. எங்க வீட்லே கூட வீட்டுக்கணக்கு நான்தான் எழுதுவேன். சுத்தமா எழுதுவேன். ஒரு பைசாக் கூட அதிகமாகவோ, குறைவாகவோ இருக்காது. (சங்கர் மகிழ்ந்து போய் அவளுடைய முந்தானையைப் பிடிக்கிறான்).

கஜா: போங்க. யாரும் பார்க்கப் போறாங்க. முந்தானையை விடுங்க.

சங்: விடமாட்டேன்!

கஜா: என்னங்க! (கொஞ்சுகிறாள்.)

சங்: சொல்லும்மா.

கஜா: பக்கத்துத் தியேட்டர்லே தான் ஓடுது.

சங்க: என்னது?

கஜா: 'முந்தானை முடிச்சு'. இப்பப் புறப்பட்டாச் சரியா இருக்கும்.

சங்: போச்சுடா! முந்தானையைப் புடிச்சதுக்கு எனக்குத் தண்டனையா? சரி, புறப்படு.

காட்சி—4

(கஜலட்சுமி உற்சாகமாக இருக்கிறாள். சங்கர் களைத்துப் போய் வருகிறான்).

கஜா: வாங்க, வாங்க.

சங்: என்ன ரொம்ப உற்சாகமா இருக்கே? மனுஷன் 'ஓவர்டைம்' செஞ்சு களைச்சுப் போய் வரான். நீ பாட்டுக்கு ஜாலியா உடம்பு அசங்காம உக்கார்ந்திருக்கே.

கஜா: காலண்டரைப் பாருங்க.

சங்: ஏன்? அதுலே என்ன புதுமை?

கஜா: தேதியைப் பாருங்க.

சங்: அதான் கொட்டை எழுத்திலே போட்டுருக்கே! உனக்குத் தெரியலையா? சரிதான்; கண் டாக்டரிடம் போகணுமா? அது வேறே செலவு.

கஜா: எப்போ பாரு, செலவு செலவு! அதுவே உங்க புராணமாப் போச்சு. நாளைக்கு நம்ம கல்யாண ஆண்டு விழா.

சங்: அடடே! ஒரு வருஷம் ஓடிப் போச்சா? மறந்தே போச்சு.

கஜா: நீங்க இப்படி மறந்து போய்டுவீங்கன்னுதான் ஆச்சரியமா இருக்கட்டும்னு நானே போயி, பட்டுப் புடைவை உங்களுக்கு உடை எல்லாம் வாங்கிட்டு வந்துட்டேன்.'

சங்: (கிண்டலாக) சமத்துக் கண்ணு! செலவு செய்யறதிலே உன்னை மிஞ்ச ஆளே கெடையாது. நான் மறந்து போச்சுன்னு சொன்னது என்னன்னா, ஒரு வருஷம் கழிச்சு வரவு செலவைச் செக் பண்ணுவேன்; வீடு வாங்கக் கணிசமான தொகை சேர்ந்திருக்கும் இல்லியா? அதை அப்படியே 'ஃபிக்சட் டிபாசிட்'டுலே போட்டுடுவோம். கணக்கு நோட்டு, பாங்க் பாஸ் புஸ்தகம் எல்லாத்தையும் எடுத்திட்டு வா. என்னோட களைப்பு எல்லாம் பஞ்சாப் பறக்கணும்.

கஜா: முதல்லே காபி சாப்பிடுங்க.

சங்: காபி, டிபன் எல்லாம் அப்புறந்தான். முதல்லே நான் சொன்னதைச் செய்.

கஜா: வந்து.. வந்து..

சங்: ஏன் முழுங்கறே? சொல்ல வந்த விஷயத்தைச் சட்டுனு சொல்லு.

கஜா: ஏன்தான் இப்படி வெடுக்கு வெடுக்குன்னு பேசறீங்களோ? இந்த மாதிரி சந்தர்ப்பத்திலே நீங்க என்கிட்ட அன்பா ஆதரவா நடந்துக்கணும். பக்கத்து வீட்டு மாமி சொன்னாங்க.

சங்: (ஆச்சர்யத்துடன்) அடி சக்கை! அப்படியா விஷயம்? என்கிட்டே சொல்லவே இல்லையே! எத்தனை மாசம்?

கஜா: (செல்லமாக) போதுமே கொஞ்சல்! அப்பாவாப் போறீங்க. கொஞ்சங்கூடப் பொறுமை கெடையாது.

சங்: நாம பொறுமையாத்தானே இருந்திருக்கோம்? ஒவ்வொருத்தருங்க கல்யாணமான பத்தாம் மாசமே கொழந்தையைப் பெத்துக்கறாங்களே!

கஜா: நீங்கதான் எல்லாத்துக்கும் கணக்குப் பாக்கறவராச்சே!

சங்: ஆமாமா! கணக்காப் பெத்துக்கிட்டாக் கஷ்டமில்லே பாரு. சரி, சரி, கணக்கு நோட்டை எடு.

கஜா: நீங்க புடிச்சாப் புடிச்சது தான். இன்னிக்கு நான் எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கேன்! நீங்க கணக்கு நோட்டைப் பாத்துட்டு என்னைத் திட்டப் போறீங்க. அதை நெனைச்சு எனக்குப் பயமா இருக்கு.

சங்: என் கண்ணுல்லே! திட்ட மாட்டேன்; எடுத்து வா.

கஜா: சத்தியமா?

சங்: (அவள் கன்னத்தை மெதுவாகக் கிள்ளி) நிச்சயமாத் திட்ட மாட்டேன்.

கஜா: கிள்ளாதீங்க. உங்க புள்ளைக்கு வலிக்கும்.

சங்: அடி. கள்ளி! உன் கன்னத்தைக் கிள்ளினா வயத்திலே இருக்கும் புள்ளைக்கு வலிக்குமா?

கஜா: இந்தாங்க கணக்கு நோட்டு, இந்தாங்க பாஸ் புஸ்தகம்.

(கணக்கு நோட்டை முதலில் ஆராய்கிறான்.)

சங்: அடடா! கணக்கு முந்தானை முடிச்சிலிருந்து ஆரம்பிக்குதா?

கஜா: ஆமா. சினிமாப் பார்த்ததை எந்தக் கணக்கிலே எழுதறது?

சங்: முத்து முத்தா, ரூபா பைசா எவ்வளவு சுத்தமா எழுதியிருக்கே! அதுக்கே உன் கைக்கு ஒரு முத்தம் குடுக்கலாம். (கையைப் பிடிக்கிறான். அவள் செல்லமாக அவன் முடியை அலைகிறாள்)

கஜா: என்னங்க?

சங்: (சொக்கிப் போய்) என்ன?

கஜா: பாங்க் பாலன்ஸ்?

சங்: சமத்துக் கண்ணுச்சே! என் கணக்குப் படி பத்தாயிரம் இருக்கணும். அதுக்கு மேலேயே நீ சேத்து வைச்சிருப்பே.

கஜா: இல்லீங்க. இப்போ பாங்க் பாலன்ஸ் மினிமந்தான் இருக்குங்க.

சங்: (அதிர்ந்து போய்) கையை விடு. என்ன சொல்றே நீ?

கஜா: ஆமாங்க.

சங்: விளையாடுறியா?

கஜா: இந்த ஒரு வருஷத்திலே எவ்வளவு செலவு வந்திருக்கு? ஞாபகப் படுத்திப் பாருங்க. மாவு ஆட்டிக் களைச்சுப் போறேன்னு கிரைண்டரும் மிக்ஸியும் வாங்கிக்கச் சொன்னீங்களே! பொழுது போகலேன்னு சொன்னேன். டி. வி. வாங்கிக்கன்னு சொன்னீங்க. அப்புறம் பக்கத்து வீட்டு மாமி கட்டியிருக்கிற பட்டுப் புடைவை நல்லா இருக்குன்னு ஒரு நாள் சொன்னீங்க.

சங்: அதே மாதிரிப் புடைவை நீ ஒண்ணு வாங்கிட்டியா?

கஜா: ஆமாங்க.

சங்: இதென்ன ரெண்டாயிரம்? ஒண்ணும் போடாம எழுதியிருக்கே?

கஜா: அது எங்கப்பா கைமாத்து வாங்கினது.

சங்: உங்கப்பனுக்கு வேற வேலையே கெடையாதா? பொண்ணைக் குடுத்துட்டுக் கைமாத்துவேற வாங்க வந்துட்டாரா?

கஜா: சும்மா வெரட்டாதீங்க. ரத்னா ஒரு ஜிமிக்கி வேணும்னு கேட்டா. நான்தான் அத்தான் ஒண்ணும் சொல்லமாட்டாருன்னு பணம் குடுத்து வாங்கிக்கச் சொன்னேன். நீங்க இவ்வளவு பெரிய கருமின்னு அவுங்களுக்குத் தெரியாது. (கண்ணைக் கசக்குகிறாள்)

சங்: சரி, சரி, அழாதே. இதென்ன வரவு காலத்திலே என் வருமானம் தவிர எதையும் காணோம்? நீ கதை எழுதிப் பதிலே எதுவும் வரலியா?

கஜா: புஸ்தகந்தான் அனுப்பினாங்க. பணம் எதும் வரல்லே.

சங்: மாசம் நூறு ரூபாய்க்குப் பத்திரிகை வாங்கியிருக்கே. அதைப் பழைய பேப்பருக்குப் போட்ட வருமானம் எங்கே?

கஜா: பாதிப் பத்திரிகை ரத்னா ஓசி வாங்கிப் போயிருக்கா. மீதி பக்கத்து வீடுகள்லே குடுத்திருக்கேன். ஏங்க, திருப்பி வாங்கி வந்துடட்டுமா?

சங்: வேண்டாம்! நீ பெரிய கர்ணனோட பரம்பரைச் சேர்ந்தவ.

கஜா: ஏங்க! மகிழ்ச்சியா இருக்க வேண்டிய நேரத்திலே இப்படி என்னை வதைக்கறீங்க?

சங்: என் லட்சியம் என்ன ஆவது?

கஜா: அதான் அப்பாவா ஆகப் போறீங்களே!

சங்: ஆமா! அதுவா என் லட்சியம்! தேவை நமக்கொரு வீடு.

கஜா: குட்டிப்பய பொறந்தாத்தானே வரும் அதிர்ஷ்டம். எங்க அப்பா அன்னிக்கே சொல்லிட்டாரு; அவர் வீட்டை ரெண்டாக்கி உங்களுக்கு ஒரு பாகம் தரப் போறாராம்.

சங்: சரிதான் அங்கே போய் ஒண்டுக் குடித்தனம் இருந்தா நாம ஒட்டாண்டியா ஆக வேண்டியதுதான். வேண்டாம் அந்த வம்பு.

கஜா: எங்க வீட்டாரைக் கண்டாலே உங்களுக்கு வேப்பங்காயாக் கசக்குது.

சங்: ஆக மொத்தம் பாலன்ஸ் ஏதும் இல்லே. ஒரு வருஷம் உழைச்சது, 'ஓவர்டைம்' செஞ்சது பூரா வீண்.

கஜா: குத்திக் குத்திப் பேசாதீங்க. நான் உண்டாயிருக்கிற இந்தச் சமயத்திலே..

சங்: கஜா, கண்ணைக் கசக்காதே. கணக்கு நோட்டை எடுத்து வை. ஒரு பத்து ரூபாயாவது இருந்தாக் குடு, ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கி வைக்கலாம். பரிசு கெடைச்சா வீடு வாங்கலாம். ✻

புகையிலை போடுபவர்கள் விரும்புவது

தங்கபஸ்பம் புகையிலை

காரைக்குடி - 623001

நரசூஸ்
அளிக்கும்
உளங்கனிந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
தீவினை அகன்றிட தீப
ஒளிதனை ஏற்றிடுவோம்.
மன நிறைவு பெற
"நரசூஸ்" அருந்திடுவோம்.
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ்
"தெர்மலோ" காபி!
நரசூஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NCC/2480

இந்தியக் காபியின் வரைபடம்.

COFFEE BOARD

▩ தற்போதுள்ளது

▩ எதிர்பார்க்கப்படுவது

தனித் தன்மையும், தனிச் சுவையும் கொண்ட இந்தியன் காபி, வளமான மண், சீதோஷ்ணம், இந்தியப் பண்பாடு ஆகியவற்றிலிருந்து சிறப்பான மணத்தைப் பெறுகிறது.

கிழக்குப் பக்கம் வரையில் வியாபித்திருக்கும், மேற்கத்திய மலைத் தொடரின் நிழல் மிகுந்த மலைச் சரிவுகளில் பயிரிடப்பட்டு உயர்தரமான காபி வளர்வதற்கு ஏற்ற சுற்றுச் சூழலில் இந்திய காபிச் செடிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்தியாவில், முதல்தரமான காபியின் திட்டமிட்ட உற்பத்தி அளவு 1,35,000 டன்கள். 99,802 எஸ்டேட்டுகள், 2,08,269 ஹெக்டேர் பரப்பில் காபிச் செடியை விளைவிக்கின்றன. இவற்றுள் பத்து ஹெக்டேருக்கும் குறைவாயுள்ள எஸ்டேட்டுகள் 4,599, பத்து ஹெக்டேருக்கும் மேலே உடைமையுள்ளவை 2,093. எல்லாமாகச் சேர்ந்து இந்த எஸ்டேட்டுகளில் 2,76,749 பேர் அன்றாடக் கூலிகளாகப் பணியாற்றுகிறார்கள்.

இந்தியக் காபித் தொழிலின் வளர்ச்சிக்காகவும், அபிவிருத்திக்காகவும் இந்தியக் காபி போர்டு உழைக்கிறது. கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் மாவட்டத்திலுள்ள பாளேஹொன்னூர் என்ற நகரில் மத்தியக் காபி ஆராய்ச்சி நிலையம் அமைந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள காபித் தோட்டங்கள் விஞ்ஞான முறையில் வளர்ச்சி பெற இந்த ஆராய்ச்சிப் பிரிவு உதவுகிறது.

விளையும் காபியைப், பதப்படுத்துவது அல்லது பக்குவப் படுத்தவேண்டும். நம் நாட்டில், காபியைப் பக்குவப் படுத்தும் நிலையங்கள் 33 இருக்கின்றன. பக்குவப் படுத்தும் இந்த முறைகள் எல்லாம் இந்தியக் காபியின் தரம் உயர உதவுகின்றன. காபிப் பழத்தைக் கவனமாகப் பறித்தல், விஞ்ஞான முறைப்படி பதப்படுத்துதல், நிர்ணயித்துள்ள தரத்துக்கும், தன்மைக்கும் ஏற்பப் பக்குவப் படுத்துதலுமே, முதல் தரக் காபிக் கொட்டையை ஏற்றுமதி செய்ய வகை செய்திருக்கின்றன.

1982-83-ல், காபியின் ஏற்றுமதி மூலம் 201.63 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்நியச் செலாவணி கிடைத்திருக்கிறது.

திடீரென்று கலக்கும் இந்தியக் காபி பௌடர் மிகவும் பிரபலமடைந்து வருகிறது. இந்திய 'திடீர் காபிப்' பௌடர் 1516.56 டன்னுக்கும், காபிக் கொட்டை 24,000 டன்னுக்கும் ரஷ்யாவுக்கு அனுப்ப ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது.

அதிகரித்துவரும் ஏற்றுமதியையும், உள்நாட்டுத் தேவையையும் சமாளிக்கும் முறையில், வழக்கமாக விளையும் பிரதேசத்தில் காபி உற்பத்தியைப் பெருக்குதல், புது இடங்களில் காபிச் செடியைப் பயிரிட ஊக்கமளித்தல் போன்ற முயற்சிகளை இந்தியன் காபி போர்டு மேற்கொண்டிருக்கிறது.

பொன்னிறக் காபியின் புன்னகை!

காலையில் எழுந்ததும் ஆவி பறக்கும் காபியை உதட்டில் வைத்துச் சுவைத்துப் பருகினால் தான் சுறுசுறுப்பே உண்டாகிறது. மற்றக் காரியங்களில் கவனத்தைச் செலுத்த மனம் செல்கிறது. ஒரு நாள் பால் வரக் கொஞ்சம் தாமதமாகிவிட்டால், அப்பா அம்மாவிடமும், அம்மா குழந்தைகளிடமும் எரிந்து விழுவார்கள். பாத்திரங்களைப் போட்டு உடைப்பார்கள், முணுமுணுப்பார்கள். வயசானவர்களாக இருந்தால் குளித்து முழுகிப் பூஜை செய்ய மனம் வராது. ஊழிக் காற்றில் சிக்கிய துரும்பு போல் உம்மணா மூஞ்சியாக மூலையில் ஒடுங்கிக் கிடப்பார்கள்.

வேலை பார்க்கும் பையனும், பெண்ணும் காப்பியின் மணத்தை நுகராமல் படுக்கையை விட்டே எழுந்திருக்க மனம் இல்லாமல் கிள்ளிப் போட்ட இலையாய்ச் சுருண்டு கிடப்பார்கள்.

ஃபில்டரில் காபித் தூளை நிரப்பி, கொதிக்கும் நீரை அதன் தலையில் ஊற்றியதும், ஙொய் என்று நுரைத்துக் கொண்டு ஒரு மணத்தை வீடு முழுவதும் அது பரப்பும். எல்லாருடைய மனத்திலும் புத்துணர்ச்சி அப்போது பிறக்கும். உடலை நெளித்து வளைத்துக் கொண்டு எழுந்திருப்பார்கள். சமையலறையை எட்டிப் பார்த்து



விட்டு, காபி கிடைக்குமென்ற நிம்மதியுடன் பற்பசையை எடுக்கப் போவார்கள். மற்றவர்கள் பல் துலக்கிக் காபி குடிக்கத் தயாராக வந்து 'கியூ'வில் நிற்பதற்குள், தனியாக நூறு மில்லி பாலைக் காய்ச்சி முதல் முதல்ல் சொட்டுச் சொட்டாக இறங்கியிருந்த டிகாக்ஷனை விட்டுக் கள்ளிச் கொட்டாகக் காபியைக் கலந்து, வாயால் ஊதி ஊதி, உதட்டில் பட்டும் படாமலும் அதை உறிஞ்சிச் சாப்பிட்டுவிடுவாள் அம்மா. முதல் மிடறு காபி உள்ளே இறங்கியதுமே, அவள் உடம்பிலும் உள்ளத்திலும் புதுத் தெம்பும் புத்துணர்ச்சியும் பிறந்துவிடும். வீட்டு வேலை அத்தனையையும் ஒரே மூச்சில் அலுக்காமல் சலிக்காமல் பம்பரமாகச் சுழன்று செய்துவிடுவாள். உடம்பில் சூடு பிடித்துவிடும்.

இல்லத் தலைவி சாப்பிட்டதைப் போன்ற 'திக்' காபி சில பேருக்குத்தான் கிடைக்கும். நாழி ஆக ஆக டிகாக்ஷனும் இரண்டாந்தரம், மூன்றுந்தரம் ஆகிவிடும்; பாலிலும் கங்கை சங்கமமாகியிருப்பாள்.

மனித வாழ்வில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காபியைப் போன்ற வேறு பானம் எதுவும் இல்லை. மும்



மூர்த்திகளைப் போல், பாலும் டிகாக்ஷனும் சர்க்கரையும் கலந்த முப்பொருள் பானம் சோர்வை விரட்டியடிக்கும். கவலையை மறக்கச் செய்யும். உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டும். கனிவாகப் பேசச் செய்யும். சம்பாஷணைக்குக் கவர்ச்சியை அளிக்கும். இரண்டு பேரை இணைத்து வைக்கும். அலுப்பையும் சலிப்பையும் விரட்டியடித்து, உடம்பில் யானைப் பலம் புகுந்து விட்டதைப் போல் உவகை எய்தச் செய்யும். காதலர்களிடையே நெருக்கத்தை வளர்க்கும். விருந்தினர்களைக் காபி கொடுத்து உபசரிப்பது நாகரிகப் பண்பு, காபி வர நேரமாகி விட்டால் சம்பந்திகள் கூச்சல் போடுவார்கள். சில சமயங்களில் எலியும் பூனையுமாக இருக்கும் அப்பா அம்மாக்களை ஆச்சரியப்படும் முறையில் இணைத்து வைக்கும். நல்ல காபி, சம்பந்திச் சண்டையைத் தீர்த்துவைக்கும். காபியின் பெருமையை இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நம் வாழ்வின் உயர்வு தாழ்வுடன் ஒன்றி இணைந்திருக்கும் காபியின் கதை மிகச் சுவாரசியமானது. மனத்துக்கு மணம் ஊட்டி மகிழ்விக்கச் செய்வது.



சுகந்தமும் நறுமணமும் கொண்ட காபிக் குமரி இந்தியாவில் விஜயம் செய்தது 1600 - ஆம் ஆண்டு வாக்கில்தான். கர்நாடகத்திலுள்ள சந்திரகிரி மலைச் சரிவில் காபிக் கன்னி வாழ்வைத் துவக்கினாள். பாபு புதான் என்பவர்தாம் இந்தத் துவக்க விழாவுக்குக் காரணம்.

அதனால் அந்தக் குன்றுகளைப் பாபு புதான் குன்று என்றே அழைக்கின்றனர். ஆனால் காபியின் உபயோகமும் பயிரிடும் விஸ்தீர்ணமும் ஒரு நூற்றாண்டுக்குள்தான் பிரம்மாண்டமாக வளர்ந்திருக்கின்றன.

கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் காபிப் பயிர் அதிகமாக வளர்க்கப்படுகிறது. இந்தியாவின் மண்வளம், சீதோஷ்ண நிலை காரணமாக இந்தியக் காபிக் கொட்டைக்கு வெளி நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆனால் உலகச் சந்தையில் இந்தியா அளிக்கும் காபிக்கொட்டையின் அளவு இரண்டு சதவீதந்தான். உலகத் தேவையில் 64 சதவீதத்தை லத்தீன் அமெரிக்காதான் பூர்த்தி செய்கிறது. உலகத்திலேயே மிக அதிகமாகக் காபி விளைவிக்கும் நாடுகள் பிரேஸிலும் கொலம்பியாவுமே.

காபியின் முக்கிய வகைகளான அராபிகா, ரோபஸ்டா, லிபரிகா ஆகிய மூன்று வகைகளும் இந்தியாவிலும் பயிராகின்றன. லிபரிகா வகை மிக மிகக் குறைவு. 62 சதவீதம் அராபிகாவும், மீதி ரோபஸ்டாவுமே பயிராகின்றன. காபிச் செடிக்கு அதிக நீர்ப்பிடிப்போ, வெயிலோ உகந்ததல்ல. அதனால்தான் மலைச் சரிவுகளில் நிழல் தரும் மரங்கள் அடர்ந்த சூழ்நிலையில் காபிச் செடியைப் பயிரிடுகிறார்கள்.

சிறிய தூற்றலுக்குப் பிறகு மார்ச், ஏப்ரலில் காபிச் செடி பூக்கத் தொடங்கும். பிறகு பிஞ்சு காயாக மாறிப் பழுக்க ஒன்பது அல்லது பத்து மாதங்கள் ஆகும். இலைக் கணுக்களில் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கும். ஒரே கொத்தில் பிஞ்சு, காய், செங்காய், பழம் எல்லாம் இருக்கும். காய் பச்சையாக இருக்கும். பச்சை













இலைகளுக்கிடையே காணப்படும் செக்கச் சிவந்த காபிப் பழத்தைப் பார்க்கக் கவர்ச்சியாக இருக்கும். பழங்களாகப் பார்த்துப் பெண்கள் செடியிலிருந்து பறித்து எடுப்பார்கள். எத்தனை கவனமாகக் கொய்தாலும் செங்காயும் பிஞ்சும் கனியாத பழங்களும் கூட வந்து விடும். அதனால் அவற்றைத் தனித் தனியாகப் பிரித்து எடுப்பார்கள்.

இரண்டு முறையில் பழத்தின் தோலை அகற்றுகிறார்கள். சுழலும் தொட்டியில் விட்டுக் கலக்கி, தோலை அப்புறப்படுத்துவது ஒரு முறை. வெயிலில் காய வைத்துத் தோலை அகற்றுவது மற்றொரு முறை. எந்த முறையில் தோலை அகற்றினாலும், காபிக் கொட்டையை நன்றாகச் சலித்துப் புடைத்துத் தர வாரியாகப் பிரித்துக் கோணிகளில் நிரப்புவார்கள். அராபிகா, ரோபஸ்டா, பீபெரி போன்ற காபிக் கொட்டை வகைகளைக் கோணிகளில் நிரப்பித் தைத்துத் தனியாக அடுக்கி விடுவார்கள்.

இந்திய அரசு, காபித் தொழில் அபிவிருத்திக்காக அமைத்திருக்கும் காபி போர்டு, மாதம் மாதம் தர வாரியாகப் பிரித்துள்ள கொட்டையை ஏலம் விடுவார்கள் உள்நாட்டுத் தேவைக்கான காபிக் கொட்டையை நரஸுஸ் போன்ற நிறுவனங்கள் ஏலத்தில் எடுத்து, தங்கள்





தங்கள் செய்முறைப்படி வறுத்து அரைத்துச் சில்லறைக் கடைகளுக்கு அனுப்புகிறார்கள்.

விருந்தினர்கள் எந்தச் சமயத்தில் வந்தாலும் உடனே காபி கலந்து கொடுக்க வசதியாக, 'திடீர் காபி'ப் பௌடர்களைப் பல தனியார் நிறுவனங்கள் தயாரித்தளிக்கின்றன. என்ன இருந்தாலும் ஃபில்டர் காபிக்குள்ள மணமும் ருசியும் அலாதிதான்.

இந்தியாவில் எல்லாவகைக் காபியும் சேர்ந்து 2,08,269 ஹெக்டேர் பரப்பில், 1,35,000 டன் காபிக் கொட்டை (82-83) விளைகிறது. இதில் 53,990 டன் காபி உள்நாட்டுத் தேவைக்குச் செலவாகிறது. பாக்கி ஏற்றுமதியாகிறது. இதன் மூலம் சுமார் 200 கோடிக்கு மேல் அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கிறது.

வாழ்வில் மணத்தையும் உற்சாகத்தையும் மனத்தில் துள்ளலையும் ஊட்டும் காபியை, வறுத்து அரைத்துக் கொடுக்கும் கடைகளில்தான் அன்றாடம் எத்தனை கூட்டம்! (ஏமன் மலைச்சரிவுகளில் வளர்ந்திருந்த காபிச் செடி இலைகளைக் கடித்துத் தின்ற ஆடுகள் களி வெறி கொண்டு துள்ளி விளையாடியதாம். இந்த நிகழ்ச்சியே காபிப் பயிரைப்பற்றி உலகம் அறியக் காரணமாயிற்றாம்.)

காபிக் கொட்டையை வறுப்பதும் அரைப்பதுங் கூட ஒரு கலைதான். பொன்னிறமாக வறுக்கவேண்டும், பதமாக வறுக்காவிட்டால் காபிப் பொடி கசக்கும். அளவாக வறுப்பதில்தான் காபியின் மணமும் ருசியும் கூடுகின்றன என்று சொல்கிறார்கள்.



டப்பா நிறையப் புதுமணம் குறையாமல் காபிப் பௌடர் இருந்தாலே இல்லத்தரசிகளுக்கு உற்சாகம் கரை புரளும். காலையில் எழுந்ததும், டிகாக்ஷனுக்குத் தண்ணீரைக் காயவைத்து விட்டு, குளித்து முடித்துக் கோடாலி முடிச்சுடன், கள்ளிச் சொட்டாய் நிறைந்திருக்கும் டிகாக்ஷனை ஒரு டம்ளரில் கொட்டி வைத்துவிட்டுப் பாலையும் காய்ச்சி முதல் காபியைக் கலக்கும்போது, அந்த மணத்தில் அவர்கள் மூக்கு விரியும்,

பொன்னிறக் காபியில் புன்னகை பிறக்கும். கசப்பும் இனிப்புமாகக் காபி நாக்கில் பட்டவுடன் உற்சாகம் பொங்கும். இந்த இல்லத்தரசியைத்தான் பாருங்களேன் முதல் காபியைச் சுவைக்கப் போகும் முறுவலும் பெருமிதமும் முகத்தில் தெரியவில்லையா? கோயிலில் விசுவரூப தரிசனத்தை அதிகாலையில் செய்கிற பக்தர்களுக்குக்கூட இவ்வளவு மகிழ்ச்சி இருக்குமா என்று கேட்கத் தோன்றுகிறது.

என்ன இருந்தாலும் அவ்வப்போது அரைத்துக் காபி போட்டுக் குடித்தால் அதன் ருசியே அலாதி தான். வறுத்த காபிக் கொட்டையைக் கையளவு போட்டு, இடது ஆள் காட்டி விரலால் கொட்டையைத் தள்ளிவிட்டுக் கொண்டு அரைக்கும்போது, கமகமக்கும் காபியின் மணமும் சுவையும் உள்ளத்தில் உற்சாகப் பெருக்கெடுக்கச் செய்யும். சோம்பேறித்தனத்தினால் இந்த நாளில் இந்த யந்திரத்தை யாரும் அதிகமாக உபயோகிப்பதில்லை. பலர் பரணில் தூக்கிப் போட்டு விட்டார்கள். இப்போது 'மிக்ஸி' யுகம் வந்துவிட்டது.

காபியை அருந்திக்கொண்டே தொடங்கும் சம்பாஷணையில் சூடு பிடிக்கும். காளிதாசனையும் மிஞ்சும் கற்பனைகளும் உல்லாச எண்ணங்களும் பெருக்கெடுக்கும். வெள்ளிக் கூஜாவில் காபியைப் பார்த்தாலே கலைஞர்களுக்குக் குஷி பிறந்துவிடும். கூட்டங்கள் நடக்கும் போது, பேச வந்தவர்களுக்குச் சூடாக ஒரு கப் காபி கொடுத்தால் அவர்களுடைய பேச்சில் விறுவிறுப்பு ஏறும்.

பின்மாலைப் போதில் அரைத் தூக்கத்தில் மெத்தையில் படுத்திருப்பதைப் போன்ற சுகம் வேறு இல்லை. அந்தச் சுகத்தையும் மிஞ்சிவிடும் இளம்மனைவி தரும் 'பெட்காபி.'

வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்துவிட்ட இந்தப் பெரியவரைப் பாருங்கள். காலையில் ஸ்நானம் செய்து, திருநாமம் தரித்துக் கொண்டு கையில் பத்திரிகையுடன் உட்கார்ந்திருக்கிறார். மனைவி தரும் காபியில் வீசும் மணத்தைவிட வாழ்ந்து சுகித்த இன்ப உணர்வுகளின் இனிய நினைவுகளும் உள்ளார்ந்த அன்பும் பெரியவரின் மனத்துக்கு இதமாக இருக்கின்றன.

இந்தியன் காபியின் மணமும் சுவையும் மாறாமல் ''குடியர்'களை மகிழ்விக்கவும், வெவ்வேறு சூழ்நிலையில், தட்ப வெப்ப நிலையில் வளர்ந்த காபியின் தரத்தை நிர்ணயிக்கவும் காபி போர்டின் 'சுவைஞர்கள்' (காபி டேஸ்டர்கள்) அவ்வப்போது, டிகாக்ஷனைச் சுவைத்துத் தர நிர்ணயம் செய்கிறார்கள். காபிக்கொட்டையின் தன்மை, அதிலுள்ள ஈரப் பதத்தைப் பொறுத்து அமைகிறது என்பதால், அந்த அளவையும் அவ்வப்போது சோதனை செய்து பார்க்கிறார்கள். அராபிகாவுக்கு 9. 5. உம் ரோபஸ்டாவுக்கு 11.0 உம் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் காபி போர்டு நடத்தும் ஏலத்தில், காபிக்கொட்டையை வாங்கி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். 'எக்ஸ்போர்ட் ஆக்ஷன்' என்றே இதைச் சொல்வார்கள்.

பொழுது விடிந்து பொழுது போகும் வரை, ஏன், அதற்கு மேலும், காபி நம் வாழ்வில் நீக்கமற நிறைந்திருக்கிறது. ஒரு வேளை அல்ல, இரண்டு வேளை அல்ல; அதற்கு மேலும் பல தடவை காபி குடிக்கும் பக்தர்கள் இருக்கிறார்கள். தலைவலியும் காபியும் பாம்பு கீரிபோல. காபியும் ஆஸ்பிரினும் தோஸ்துகள்; 'காபி பானம் மனத்தைத் தூண்டிச் சுறுசுறுப்பாக்கி, உடம்பில் புதுப் பலத்தைத் தோற்றுவிக்கிறது. கூச்சமில்லாமல் படு குஷியாகப் பேசச் செய்கிறது' என்று ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார். புரதம், வைட்டமின்-ஏ, நிக்கோடினிக் அமிலம், கலோரிச் சத்து ஆகியவை காபிப் பானத்தில் அடங்கியுள்ளதாகக் கூறுகிறார்கள்.

''ஸாருக்கு, ஒரு ஸ்ட்ராங்'' என்ற குரலைக் கேட்டதும், நடுக்கும் குளிரிலும் நம் முகத்தில் எத்தனை பிரகாசம் பளிச்சிடுகிறது! பொன்னிறக் காபி குடும்பத்திலுள்ள அனைவருடைய முகத்திலும் புன்னகையை வருவித்து, வாழ்வில் சுகந்தத்தை வீசச் செய்கிறது.

வாழ்க காபி! 'குடியர்கள்' பெருகுக! ❋

போட்டோ: டி. வி. விசுவநாதன்
காபி போர்டு,
நரஸுஸ் காபி.

வாழ்வின் வசந்தத்திற்கு
ஓர் அடையாளம்
சாரதா'ஸ்
பட்டுப் புடவைகள்
திருமணம் மற்றும்
எல்லா
சுப நிகழ்ச்சிகளுக்கும்!
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077.
SARATHA'S
MADRAS & TRICHY



ராம்கோவின் தீபம் இன்று பல்லாயிரம் இல்லங்களில் ஒளிர்விடுகிறது
ஒரு சிறிய நெசவாலையாய்த் துவங்கி இன்று பல ஆலைகள், தொழிற்சாலைகள், கல்விக் கூடங்கள் மற்றும் பல தர்ம ஸ்தாபனங்களை தன்னகத்தே கொண்டுள்ள ராம்கோ குரூப் பல்லாயிரம் குடும்பங்களின் நல்வாழ்க்கைக்கு ஒளி விளக்காய் திகழ்கிறது.
ராம்கோ குரூப் நிறுவனங்கள் :
ராஜபாளையம் மில்ஸ் லிட்.
மதராஸ் சிமெண்ட்ஸ் லிட்.
ஸதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிட்.
கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்
ராமராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிட்.
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ் லிட்.
ஜயராம் மில்ஸ் லிட்.
பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக்
சின்மயா வித்யாலயா பி.ஏ.சி. ராமசாமி ராஜா மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல்
பி.ஏ.சி. சின்னைய ராஜா ஞாபகார்த்த மேல்நிலைப்பள்ளி
பி.ஏ.சி.ஆர். அம்மணி அம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
பி.ஏ.சி. ராமசாமி ராஜா கல்வி அறக்கட்டளை
ராஜா அறக்கட்டளை

APRC/R3/83

இராஜ மரியாதை

கௌதம நீலாம்பரன்

இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் அன்று ஒரே குதூகலம். நாடெங்கும் மாக்கோலங்களும் மாவிலைத் தோரணங்களுமாய் மங்கலப் பொலிவு பெற்றுத் திகழ, ஒவ்வொரு தமிழன் வீடும் அன்று கல்யாணக் களை பெற்றிருந்தது.

கண்டி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்க பூபதிக்கு அன்று இரண்டாம் கல்யாணம்; அதுவும் இரட்டைக் கல்யாணம். இரண்டு அரச குமாரிகளை மணந்துகொள்கிறார்.

அரசர்களின் அந்தப்புரங்களில் தினந்தோறும் கூடப் புத்தம் புது மலரனைய இளம் பெண்கள் சேர்க்கப் படுவார்கள். அதில் சில அரசியல் நிர்ப்பந்தங்களால், திருமணம் என்ற பெயரால் நிகழும். ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் ஏதோ தங்கள் வீட்டிலேயே ஒரு திருமணம் நிகழ்கிற மாதிரி குதூகலங்களும் கொண்டாட்டங்களும் ஏன்?

கண்டி மன்னர் விக்கிரமராஜ சிங்கர், முன்பு ஒரு சிங்களப்பெண்ணை- முதலமைச்சன் பிலிமைத்தலாவின் மகள்—மணந்து கொண்டிருந்தார். இப்போது மணந்து கொள்ளப் போவது மதுரை இளவரசிகள் இருவரை. மன்னர் இரண்டு தமிழ்ப் பெண்களை மணந்து கொள்வதற்காக மட்டுமல்ல, மக்கள் மகிழ்ச்சியுறுவது. அந்தச் சூழ்ச்சி மிக்க சிங்கள அமைச்சனின் பிடிகளை விலக்கிக்கொண்டு, அவனது சதிகளிலிருந்து தம்மைக் காத்துக்கொண்டு தாம் ஒரு தமிழ் மன்னர் என்பதை நிரூபித்துவிட்டாரே! அந்த மகிழ்ச்சி தான் அவர்களுக்கு.

சிங்கள அமைச்சன் பிலிமைத்தலா, எவ்வளவு பயங்கரமானவன் என்பதை நாடே அறியும். இலங்கையில் உள்ள ஒரே தமிழ் அரசான கண்டி அரசவம்சத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். மீண்டும் சிங்களராட்சியைத் தோற்றுவிக்கும் நாளே பொன்னாள் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவன் செய்த சதிகள் ஒன்றா இரண்டா?

விக்கிரமராஜசிங்கருக்கு அவன் தன் பெண்ணை மணம் செய்து வைத்ததே, அவள் பட்டத்தரசியாக வருவாள் என்ற எதிர்பார்ப்பில்தான். ஆனால் அது பொய்த்துப் போனதும் பிலிமைத்தலாவுக்கு மன்னரின் மீது மிகுந்த சினம் ஏற்பட்டது. ஒரு முறை அவன் இதுபற்றி மன்னரிடம் நேரடியாகவே பேசிப் பார்த்தான். காலஞ் சென்ற கண்டி மன்னர் இராசராசரின் இரண்டாம் மனைவியின் தம்பியாகிய இந்தக் கண்ணுச்சாமியை ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கா என்னும் பட்டப் பெயருடன் அரியணையில் ஏற்றப் பிலிமைத்தலா தான் மிகவும் பாடுபட்டான். முதலமைச்சர் பதவியில் அவன் இருந்ததால்தான் அது சாத்தியமாயிற்று. இதையெல்லாம் அவன் மன்னனிடம் நினைவுபடுத்திப் பார்த்தான்.

ஒன்றும் பயனில்லை, சபை நடுவே, நாலு பேர் முன்னிலையில் விக்கிரம ராஜசிங்கர் மந்திரியைக் கோபித்துக்கொண்டு கண்டித்தார். ''நீ சூழ்ச்சிப் புத்திகளோடு நடமாடுகிறாய். எனக்கு உன் மகளை மணம் செய்து கொடுத்து விட்டதன் மூலம் இந்த நாடே உனக்கு அடிமைப்பட்டு விட்டது என்பது போன்ற சிந்தனை உன்னை ஆட்டிப் படைக்கிறது. மன்னனாகிய என் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நீ அப்படிச் செய்யாமல் நான் உன் ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்பதையே பெருமையாக நினைக்கிறாய். என்னை ஆட்டிப்படைக்கலாம் என்ற உன் கனவு ஒருபோதும் பலிக்காது. ஆன வயதுக்கு அடையாளமாக, சூழ்ச்சி அரசியலைச் சுத்தமாக ஒதுக்கிவிட்டு ஓய்வெடுத்துக் கொள். உனக்குத் தேவையான வசதிகளை நான் அளிக்கிறேன்'' என்றும் கூறினார்.

அதன் விளைவுதான், அந்தச் சிங்கள முதலமைச்சன் பிலிமைத்தலா, மன்னரைத் தீர்த்துக்கட்ட எடுத்த முடிவு.

மன்னரின் சயன அறைக்காவலர்களாகத் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிபவர்களில் சிலரை நியமித்தான். ஒருநாள் இரவு சதித் திட்டத்தை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டது.

மறுநாள் காலையில் மன்னரின் மெய்காவலன் பதறியடித்துக் கொண்டு அமைச்சரிடம் ஓடிவந்தான். ''அமைச்சர் பிரானே! நம் மன்னர் கொலையுண்டு கிடக்கிறார்'' என்று தெரிவித்தான்.

அமைச்சன் கொதித்து எழுந்தவாறு, ''எப்படி நடந்தது இது? கவச உடை அணிந்த மெய்காவலனான நீ இரவும் பகலும் மன்னரைக் கண்காணித்துக்கொண்டிருக்கும்போது, அரண்மனைக்குள், அதுவும் சயன அறைக்குள், மன்னர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றால் நான் எப்படி நம்புவது?'' என்று வினவினான்.

மெய்காவலன் அமைச்சரிடம் மன்றாடினான். ''நான் எந்தத் தவறும் செய்யவில்லை. வழக்கம்போல மன்னர் சயன அறைக்குள் சென்ற பின்னர் வாயில் காவல்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பரிசோதித்தேன். காவலர்களில் சிலர் வேற்று முகங்களாகத் தெரியவே, யார் என்று அவர்களை விசாரித்தேன். புதிதாக வேலைக்குச் சேர்த்திருப்பதாகவும், அமைச்சர்தாம் இந்த வேலைக்கு நியமித்துள்ளதாகவும் கூறினர். அவர்கள் தங்கள் பெயரைக் கூறியதால் நான் சமாதானம் அடைந்து, என் இருப்பிடத்தில் சென்று அமர்ந்திருந்தேன். பிறகு குடிக்கிற நீரில் எனக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகே இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்'' என்று கூறினான்.

அமைச்சன் பிலிமைத்தலா, ''இதையெல்லாம் யாரும் நம்ப மாட்டார்கள். நான் உனக்கு ஒரு வேலை தருகிறேன். நீ கண்காணாமல் சென்றுவிடு'' என்று கூறினான்.

''இல்லை அமைச்சரே, நான் இங்கேயே இருக்கிறேன். மன்னரைக் கொன்றவர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்று நம்புகிறேன்'' என்றான் மெய்காவலன்.

''அப்படியானால் சரி. முதல் குற்றவாளியாக நான் உன்னைத்தான் சந்தேகிக்கிறேன். இன்று அவையில் உன்னை விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறி, அவையைக் கூட்டினான். ''இதோ, இவன்தான் மன்னரைக் கொன்றவன். இவனுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்'' என்று அறிவித்தான்.

அவையினர் கொந்தளித்து அதை ஆமோதித்த வேளையில் மெய்காவலன் தன் கவச உடைகளைக் களைந்தான். ஆ! அங்கே அரசரல்லவா நின்றுகொண்டிருக்கிறார்?

ஆம், விக்கிரமராஜ சிங்கர் தாம் மெய்காவலனாக மாறு வேடம் பூண்டிருந்தார். அவர் நடந்த உண்மைகளை அரசவையில் எடுத்துரைத்து, அமைச்சனின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தினார். பிலிமைத்தலாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

கண்டி அரண்மனையின் மேன்மாடத்திலுள்ள சயன அறை. தந்தத்தால் இழைத்த கட்டிலில் தங்கத்தால் வடித்த சிலையன்ன அழகுப் பதுமையாக வீற்றிருந்தாள், மதுரை இளவரசி. கடந்த காலத்தில் நடந்து போன சம்பவங்களை அவளுக்கு எடுத்துரைத்தார் விக்கிரமராஜசிங்கர்.

மதுரை இளவரசிக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றியது. அன்று திருமணம் முடிந்ததும் சயன மண்டபத்தில் மன்னர் தம் இருதேவிமாருடனும் காட்சியளித்தார். உயர் அதிகாரிகளும் அரசவைப் பிரமுகர்களும் நிலக்கிழார்களும் மன்னருக்குத் தங்கள் வாழ்த்துக்களையும் திருமணப் பரிசுகளையும் அளித்துக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் எலிலப்பொல என்ற உயர் அதிகாரி ஒருவன் வாய்விட்டுக் கடகடவென்று நகைத்துக் கொண்டிருந்தான். பணிவும் பண்புமற்ற அந்தச் செயல் மன்னருக்குச்

சினத்தை ஏற்படுத்தியது. அவர் அவனை அழைத்துக் கடுமையாகக் கண்டித்தார். ''அவன் அவமானத்துடன் அவையை விட்டு வெளியேறினான். அதைப்பற்றித்தான் வினவினாள் மதுரை இளவரசி.

''பிரபு, என்ன இருந்தாலும் தாங்கள் அந்த எகிலப்பொலவை அப்படி அவை முன்னர்க் கண்டித்திருக்கக் கூடாதோ என்று எனக்குத் தோன்றுகிறது. அவன் சிங்களவன்: சினவயப்பட்டு அவனும் பிலிமைத்தலா செய்தது போன்றே ஏதேனும் தீய முயற்சியில் ஈடுபட்டு விடுவானோ என்ற அச்சம் என் உள்ளத்தை வதைக்கிறது. என் திருமண நாளில் இப்படியொரு புது விரோதம் தங்களுக்கு ஏற்பட வேண்டுமா?'' என்றாள்.

''தேவி, நீ இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். இந்த எகிலப் பொல ஏற்கனவே நடந்த சதியில் ஓரளவு பங்குள்ளவன் தான்: நான் சிங்கள அதிகாரிகளை உடனே தண்டித்து விடுவதில்லை. நேரம் பார்த்து அவசியமான வேளைகளில் அச்சுறுத்தி வைக்கிறேன். இல்லையென்றால், பிலிமைத்தலா என்னை அவனுடைய கைப்பொம்மையாக நினைத்தது போல் ஒவ்வொரு சிங்கள அதிகாரியும் எண்ணத் தொடங்கிவிடுவான். இந்த மேன்மாடத்தை ஐம்பது மலேயா நாட்டு வீரர்களும் இருநூறு தமிழ் நாட்டு வீரர்களும் காவல் புரிகின்றனர்: அதிகாரிகளை அடிக்கடி இடம் மாற்றிவிடுகிறேன் நான்: தேங்கிய குளத்தில் பாசி படிவது போல், ஒரே இடத்தில் ஓர் அதிகாரி இருக்கும் போதுதான் தீய சக்திகளுக்குத் துணை போக நேருகிறது. நான் எச்சரிக்கையோடிருப்பதால் நீ அஞ்சாமலிரு'' என்றார் மன்னர்.

அதன்பிறகு அந்த இரவு, ஆனந்த சாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் அழகைத் தேடியெடுக்கும், தேகப் படகுகளின் இன்பப் பயணத்தில் கழிந்தது.

பிள்ளையில்லாத சிங்கள மன்னன் நரேந்திர சிங்கன் என்ன எண்ணத்தோடு இந்த நாட்டைத் தமிழனுக்குத் தானமாகக் கொடுத்தானோ, அன்று முதல் இன்று வரை இந்த அரசபீடம் பிள்ளையில்லாச் சொத்தாக இருக்க வேண்டுமென்பது ஒரு சாபக்கேடு போலாகி விட்டது. இதை நினைத்து மன்னர் விக்கிரமராஜ சிங்கர் பெரிதும் வருந்தினார். அவரே காலஞ்சென்ற மன்னர் இராசாதி ராசருக்குப் பிள்ளை இல்லாது போகவே, அவருடைய மைத்துனர் என்ற உரிமையில் தாமே இந்த ஆட்சி உரிமையைப் பெற்றிருக்கிறார். தமக்கேனும் ஒரு வாரிசு பிறக்க வேண்டுமென்று தவியாய்த் தவித்தார். அதற்காகத்தானே மதுரை அரச வம்சத்தைச் சார்ந்த இரண்டு பெண்களை மணந்திருக்கிறார்?

அந்த இரண்டு இளம் பெண்களோடும் இன்பமாக மன்னர்பொழுது போக்கிக் கொண்டிருந்த வேளையில் விதி, எகிலப்பொலவின் உருவில் அவருக்கு எதிரான சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டிருந்தது.

எகிலப்பொல மீது சில குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. அவன் நிர்வாகத்திலிருந்த பாளையத்தில் ஊழல்கள் மலிந்து விட்டதாக அரசவைப் பிரமுகர்கள் சிலர் மன்னரிடம் தகவல் தெரிவித்தனர். இதைப் பற்றியெல்லாம் விசாரிக்க எகிலப்பொல உடனே அரண்மனைக்கு வந்து சேர வேண்டுமென்று மன்னர் உத்தரவிட்டார். ஆனால் எகிலப்பொல அதை அலட்சியம் செய்து விட்டான். அதன் விளைவு, மன்னர் விக்கிரமராஜ சிங்கர் அரசவையைக் கூட்டி எகிலப் பொல ராஜத்துரோகி என்று அறிவித்தார். மொலிகொடை என்ற சிங்கள அதிகாரியை அழைத்து, ''எகிலப்பொலவின் அதிகாரத்தின் கீழ் உள்ள சப்பிரமுகவா, ஏழு கோரளை, நாலுகோரளை, உடுநுவர, எட்டி நுவர போன்ற பிரதேசங்களுக்கு உன்னை உயர் அதிகாரியாக நியமிக்கிறேன்: படை வீரர்களை அழைத்துச் சென்று அவ்விடங்களைக் கைப்பற்றி, எகிலப்பொலவைச் சிறைப்பிடித்து இழுத்து வா'' என்று உத்தரவிட்டார்.

கண்டி மன்னரின் கடுமையான நடவடிக்கையைக் கண்டு கதிகலங்கிப் போன எகில்ப்பொல ஆங்கிலேயரின் உதவியை நாடினான். அது உரிய வேளையில் கிடைக்காது போகவே தலை தப்பினால் போதுமெனத் தப்பித்து ஓடினான்.

விக்கிரமராஜ சிங்கர் அனுப்பிய மொலிகொடை, எகிலப்பொலவின் மனைவி மக்களைச் சிறைப்படுத்தி வந்தான். அவர்களுக்கு விடுதலை வேண்டுமென்றால் எகிலப்பொல

மன்னரிடம் சரணடைந்து விட வேண்டுமென்று கூறப்பட்டது. ஆனால் எகிலப்பொல மன்னரை நம்பவில்லை. ஆங்கிலேயப் பிரதிநிதியான ராபர்ட் பிறவுண்ரிக்கிடம் சென்று சரண் புகுந்தான். ஆங்கிலேயருக்குக் கண்டியைப் பிடிக்க வேண்டுமென்றிருந்த ஆசைக்குத் தூபமிட்டுத் தூண்டிவிட்டான் அவன்.

எகிலப்பொல ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டு தமக்கு எதிராகச் சதி செய்வதை உணர்ந்த விக்கிரம ராஜ சிங்கர், எகிலப்பொலவின் மனைவி மக்களைக் கொன்று விட்டார். ஆங்கிலேயர்களின் வேவுகாரர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பத்து வியாபாரிகளின் மூக்கையும் காதுகளையும் அறுத்தெறியவும் உத்தரவிட்டு விட்டார். அந்தத் தண்டனைக்கு உள்ளான வெள்ளையரில் சிலர் இறந்தும் விட்டனர்.

இவற்றை ஆங்கிலேய ஆளுநன் ராபர்ட் பிறவுண்ரிக்கால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. எகிலப்பொலவின் சார்பில் நீதி கேட்டுப் போர்ப் பிரகடனம் செய்து விட்டான் அவன். ஆங்கிலேயப் படைகள் கண்டியை முற்றுகையிட்டன.

சிங்களவர்களைப் பாதுகாப்பதும், அவர்களின் பூர்விக நாடான கண்டியைத் தமிழர்களிடமிருந்து மீட்டுத் தருவதும் தன் இலட்சியம் என்று அந்த ஆங்கிலேயன் அறிவித்தது, சிங்களவர்களை ஒரணியில் திரட்ட மிகவும் உதவியது. விக்கிரமராஜசிங்கர் மக்கள் உதவியை இழந்தார். சிங்கள அதிகாரிகளும் ஒருவர் பின் ஒருவராக ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். விக்கிரமராஜ சிங்கர் பெரிதாக நம்பிய மொலிகொடையுங் கூட ஆங்கிலேயர் வசம் சென்று விட்டான்.

மன்னர் விக்கிரமராஜ சிங்கர் குடும்பத்தினரோடு கோட்டையின் இரகசிய வழியின் மூலம் வெளியேறித் தப்பிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவாயிற்று. ஒரு தோப்பு மாளிகைக்குச் சென்று தங்கிய அவர், அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றிய யோசனையில் இருந்தார்.

அப்போது, எகிலப்பொலவின் தம்பி எக்னெலி கொட, சில வீரர்களுடன் இந்த இடத்தைக் கண்டறிந்து வந்து விட்டான். மன்னரின் பாதுகாவலர்களுக்கும், எக்னெலி கொடவின் வீரர்களுக்குமிடையே சிறியதொரு போர் நடந்தது. ஆனாலும் அது மன்னரைக் காக்கப் போதுமானதாக இல்லை. எக்னெலி கொட ஆவேசமாகக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தான். வெறிபிடித்த அந்தச் சிங்களவனை எதிர்த்து மன்னர் விக்கிரமராஜ சிங்கர் போராடினார். அதுவும் பயனற்றதாயிற்று.

மூர்க்கத்தனமான அந்த மோதலில் மன்னர் காயமுற்றார். அவரைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டுச் சித்திரவதைகள் செய்ய முயன்றான் அந்தச் சிங்கள வெறியன். ஆனால் ஆங்கிலேய அதிகாரிகள் தக்க சமயத்தில் வந்து காத்தனர்.

விக்கிரமராஜ சிங்காவுக்கு ராஜ மரியாதைகள் அளிக்கப்பட்டன. மன்னரைப் புரவியிலும், ராணிகளைப் பல்லக்குகளிலும் ஏற்றி அழைத்துச் சென்றனர் ஆங்கிலேயர்.

அதன் பிறகு விக்கிரமராஜ சிங்கர் அரசுரிமையைக் கௌரவமாக ஆங்கிலேயரிடம் விட்டுக் கொடுத்தார்.

ஆங்கிலேயர்கள் கண்டி மன்னனை மேலும் அரசனாக இருக்க அனுமதிக்க விரும்பவில்லை. ஆனால் ராஜ மரியாதைக்குரியவனாக இருக்கமட்டுமே அனுமதிக்க விரும்பினார்கள்.

கண்டியை ஆண்ட கடைசித் தமிழ் மன்னனின் வரலாறு இப்படி முடிந்தது.

*

"Our Hearty Deepavali" Greetings
to all our Customers & well wishers

West Ponnurangam Road, R. S. Puram, **COIMBATORE-641 002**

சுத்த சன்மார்க்கம்

நா. மகாலிங்கம்

இவ்வுலகில் என்றும் அழியாமல் வாழ்வதே மரணமில்லாமல் வாழ்வது. இதைச் சிரஞ்சீவி வாழ்க்கை என்று சொல்வார்கள். பெரியவர்கள் இளைஞர்களுக்கு வாழ்த்துக் கூறும்போது, ''என்றும் சிரஞ்சீவியாக இருந்து வாழ்க!'' என்று கூறுவார்கள்.

சித்தர்கள் தங்கள் உடலை அப்படியே வைத்துக்கொண்டு உயிர் வாழ்பவர்கள். தங்கள் உடலை அழியாமல் பாதுகாத்துக்கொள்ளும் வித்தையில் சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்கள் இன்னும் இருக்கிறார்கள்; இமாலயப் பகுதிகளிலும் ஆற்றை ஒட்டிய காடுகளிலும் வாழ்கிறார்கள்.

சித்தர்கள் என்றால் அருள் அறிவுடையவர்கள் என்று அர்த்தம்; சித்தம் என்றால் அறிவு. இதிலிருந்து தோன்றியதுதான் சிந்தை. சிந்தையிலிருந்து சிந்தனை பிறக்கிறது. அழியாத சிந்தனா சக்தி படைத்தவர்கள் சித்தர்கள். தங்கள் சிந்தனையின் மூலமாகப் பல உண்மைகளைக் கண்டு உலகம் முன்னேறுவதற்கு உதவிக்கொண்டு இருப்பவர்கள் சித்தர்கள்.

அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் பதினெட்டுச் சித்தர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் மனித குலத்தின் ஒற்றுமைக்காக உழைத்தவர்கள்; மனித குலத்தில் குடி புகுந்திருந்த மூட நம்பிக்கைகளைப் போக்கப் பாடுபட்டவர்கள். இதைச் சித்தர்கள் பாடல்களில் இன்றும் காணலாம்.

மனிதன் மரணமில்லாமல் வாழ முடியுமா? வாழ முடியும் என்று சொல்கிறார், சித்தர்களில் தலைசிறந்த சித்தரான திருஅருட்பிரகாச வள்ளலார்.

தாம் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றதாகச் சொல்கிறார். வள்ளலார் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவர். முத்தேக சித்தி பெற்று வாழ்ந்து வருபவர். இதைச் சுத்த சன்மார்க்கிகள் நம்புகிறார்கள்.

''உள்ளம் தளர்ந்திடச் சாகா
வரம் கொடுத்து, என்றும்
தடைபடாச் சக்திகள் எல்லாம்
அளித்தனை'' என்று இறைவனைப் போற்றுகிறார் வள்ளலார்.

'என் மனம் மகிழ்ச்சி அடையும்படி நான் பணியாற்றும் வரத்தை எனக்குக் கொடுத்தாய்; என்றும் அழியாமல், மரணமிலாப் பெருவாழ்வில் வாழும் உடலையும் எனக்குக் கொடுத்தாய். இந்தச் சித்திகளைக் கொண்டு உயிர்க் குலத்துக்குப் பணி புரியும் சக்திகள் அனைத்தும் அளித்தாய்' என்று இறைவன் தமக்கு அளித்த பேற்றைச் சொல்கிறார் வள்ளலார்.

''என் மார்க்கம் எனக்களித்து
என்னையும் மேலேற்றி
இறவாத பெருவரம் ஈந்த
மெய்ப் பொருளே!''
என்று இறைவனை வணங்குகிறார் வள்ளலார்.

''நான் எண்ணிய சன்மார்க்க நெறியில் செல்லும்படியான சக்தியை எனக்கு அளித்தாய்! என்னை உயர்ந்தவனாகச் செய்தாய்! நான் உயிர்க்குலத்துக்குப் பணியாற்றும்படி எனக்கு மரணம் இலாப் பெருவாழ்வை அளித்தாய்!'' என்று இறைவனை நன்றிப் பெருக்குடன் வணங்குகிறார்.

''கருணை நெறி உற்றேன் எக்
காலமும் சாகாமல்
ஓங்கும் ஒளிவடிவம் பெற்
றேன்.''

''உயிர்க்குலத்தை எல்லாம் ஒன்று எனக் கருதி அவற்றுக்குப் பணி செய்யும் ஜீவகாருண்ய வழியைப் பெற்றேன். இதனால் எக்காலமும் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்து உயிர்க்குலத்துக்குப் பணி புரியும் ஆற்றலைப் பெற்றேன்'' என்று சொல்கிறார்.

''சித்தாடுகின்றனன்; சாகாவர
மும் சிறக்கப்பெற்றேன்;
இத்தரணியில் எனக்குஇணை
யார் என்று இயம்புவனே!''
என்கிறார் வள்ளலார். ''இறைவன் அருளால் எல்லாச் சித்துக்களையும் பெற்றேன். இயற்கை உண்மையாகிய இறைவனை அநுபவிக்கும் பேறு பெற்றேன். இதனால் மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்றேன். இந்த உலகில் எனக்கு யார்தான் இணை?'' என்று மற்றவர்கள் எண்ணும்படி செய்த இறைவனுக்கு மிகுந்த பெருமிதத்துடன் வணக்கம் செலுத்துகிறார் வள்ளலார்.

திரு அருட்பிரகாச வள்ளலார் தாம் பெற்ற மரணமிலாப் பெருவாழ்வைப் பற்றிய அநுபவத்தை அவரே கூறியவை இவை.

''ஒவ்வோர் உயிரிலும் இறைவன் இருக்கிறான். சிறப்பாக மனிதனிடம் தன் முழு ஆற்றலுடன் இருக்கிறான். இந்த உண்மையை உணராமல் மனிதர்கள் இயந்திரம் போல, உயிர் இல்லாதவர்கள்போல, இறை உணர்வு இல்லாமல் செயல்

பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இறை உணர்வில்லாமல் செயல்பட்டுக்கொண்டு இருக்கும் மனிதர்களை வெறும் உயிர் அற்ற இயந்திரம் போன்ற மனிதர்களுக்குச் சமம்'' என்று சொல்லுகிறார் வள்ளலார்.

''துஞ்சிய மாந்தரை எழுப்புக!
நலமே சூழ்ந்த
சன்மார்க்கத்தில் செலுத்துக!''
என்று வலியுறுத்துகிறார்.

''இறைவன் தம் உள் இருக்கும் உணர்வில்லாமல் இயந்திரம்போல இயங்கிக்கொண்டும், உணர்வில்லாமல் தூங்கிக்கொண்டும் இருக்கும் மக்களை எழுப்புங்கள். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து உயிர்க் குலத்துக்குப் பணிபுரியும் சன்மார்க்கத்தை மேற்கொள்ளும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்'' என்கிறார்.

''செத்தார் எழுந்தனர். சுத்த சன்மார்க்கம் சிறந்தது! தம் உள் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து விழித்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஜீவகாருண்யப் பணியால் சுத்த சன்மார்க்கம் பரவத் தொடங்கிவிட்டது'' என்கிறார்.

''இன்பால் உலகங்கள் யாவும்
விளங்கின;
துன்பால் இறந்தவர் துன்
புற்றுத் தோன்றினர்.''

''இன்பத்தை அடையும் சன்மார்க்கத்தைக் கண்டு, அதைப் பின்பற்றி இன்பம் அடைய ஆரம்பித்து விட்டதால் உலகம் எல்லாம் சிறந்து காணப்படுகின்றன. இதுவரையில் துன்பப்பட்டுக்கொண்டு, இறந்து போனவர்கள்போல இருந்தவர்கள் இப்போது இறை உண்மையை உணர்ந்து, இறை அருளைப் பெற்றுத் துன்பம் இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்'' என்று கூறுகிறார்.

''மடம்பெற்ற மனிதர்கள் மதி
பெற்று வாழ்கின்றனர்
திடம் பெற்றே எழுகின்றனர்
செத்தவர் தினம் தினம்''

என்று மிகுந்த நம்பிக்கையுடன் பேசுகிறார் வள்ளலார்.

''உயிர் அற்ற இயந்திரம்போல உழைத்துக்கொண்டிருந்த மனிதர்கள் இயற்கை உண்மையாகிய இறை தம் உள் இருக்கும் இரகசியத்தை உணர்ந்து திடம் பெற்று நாள்தோறும் எழுந்துகொண்டு இருக்கிறார்கள். ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வாழ்க்கையில் மேற்கொண்டு வாழத் தொடங்கிவிட்டார்கள்.''

''புல் ஒழுக்கம் எல்லாம் புணர்
இடைப் போய் ஒழிக!
நல் ஒழுக்கம் ஒன்றே நலம்
பெறுக — இல்ஒழுக்கில்
செத்தவர்கள் எல்லாம் திரும்ப
எழுந்து மனம் ஒத்தாராய்
வாழ்க உவந்து!'' என்று சொல்கிறார் வள்ளலார்.

''மக்கள் இடையில் இருந்தகொடும் செயல்கள், கெட்ட நடத்தைகள் எல்லாம் கடலில் விழுந்து ஒழியட்டும். மக்கள் எல்லாரும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான நல்ல ஒழுக்கங்கள் ஒன்றே அவர்களிடம் நிலைபெற்று நின்று உலகம் உயர்வு பெற்று விளங்கட்டும். இல்லற வாழ்க்கையில் இறை உணர்வு இல்லாமல் உயிர் அற்ற இயந்திரம்போல் உழன்று கிடந்தவர்கள் எல்லாம் மீண்டும் இறை உணர்வைப் பெற்று ஊக்கத்துடன் எழுந்து செயல்படுவார்கள். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்து மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்'' என்று தம்முடைய அனுபவத்தை எடுத்துச் சொல்கிறார் வள்ளலார்.

மரணமில்லாத வாழ்வு என்று வள்ளலார் எதைச் சொல்கிறார்? நம்முள் இருக்கும் இறைவனை உணர்ந்து அவனை அடைந்து அனுபவிக்கும் வாழ்க்கையையே வாழ்க்கை என்கிறார்; மரணமிலாப் பெருவாழ்வு என்கிறார்.

நம் உள் இறைவன் போல எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்த உயிர்க் குலத்துக்கு உழைப்பதனால் ஏற்படும் வாழ்வே மரணமிலாப் பெருவாழ்வு என்கிறார்.

''சத்திய ஞானசபை என்னுள்
கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான்
பெற்றுக் கொண்டனன்.
நித்திய ஞான நிறைஅமுது
உண்டனன்,
நிந்தை உலகியல் சந்தையை
வின்டனன்''

என்று தாம் பெற்ற மரணமிலாப் பெருவாழ்வை விளக்கிச் சொல்கிறார்.

''என் உள்ளத்தில் இறைவன் இருக்கும் சத்திய ஞானசபையைப் பார்த்துவிட்டேன். அதனால் சன்மார்க்க சித்தியை, அதாவது மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்று இருக்கிறேன். நிந்தனைக்கு இடமாக, சிந்தையைப்போல இதுவரை இருந்து வந்த உலகில் ஞான நிறை அமுதான அருட்பெரும் ஜோதியின் அருளை நாள்தோறும் பெற்று வருகிறேன்'' என்கிறார்.

உலகத்தில் ஒன்றுபட்ட சமுதாயம் தோன்றுவது உறுதி என்று அழுத்தமாகக் கூறுகிறார் வள்ளலார். அவர் உலக மக்களை, சாதி, மத பேதமற்ற புதிய சமுதாயத்தில் சேரும்படி அழைக்கிறார்.

''ஆடாதீர்! சற்றும் அசையாதீர்
வேறுஒன்றை
நாடாதீர்! பொய் உலகை
நம்பாதீர்!—வாடாதீர்!
சன்மார்க்க சங்கத்தைச் சார்
வீர்! விரைந்து இனி இங்கு
என்மார்க்கமும் ஒன்றாமே!''

என்று அறை கூவுகிறார் வள்ளலார்.

''வஞ்சகர்கள் வார்த்தைகளைக் கேட்டுத் தடுமாற வேண்டாம். சிறிதும் அசைய வேண்டாம். சன்மார்க்கத்தைத் தவிர வேறு ஒன்றையும் தேடவேண்டாம். உலகில் உள்ள பொய்மைகளை நம்ப வேண்டாம். எதற்கும் துன்பம் அடைய வேண்டாம். சன்மார்க்க சங்கத்தில் சேருங்கள். விரைவில் உலகில் உள்ள எல்லா மார்க்கங்களும் சன்மார்க்கம் என்னும் ஒரே மார்க்கமாகிவிடும். இதை நம்புங்கள்'' என்று முழங்குகிறார் வள்ளலார்.

தம்மைப்போலவே மக்கள் எல்லாரும் மரணம் இல்லாமல் இருக்கும் பேற்றைப் பெறலாம் என்கிறார்.

''உள்ளத்திலே துணிவு கொள்ளுங்கள். கவலையை விட்டு ஒழியுங்கள். சன்மார்க்க சங்கத்தைச் சேருங்கள். சத்தியமாகச் சொல்கிறேன். நீங்கள் அனைவரும் இப்போதே இன்பமும் அமைதியும் பெற்று உலகில் ஓங்கி விளங்குவீர்கள்'' என்று சொல்கிறார் வள்ளலார்.

உலக மக்கள் அன்புடன் ஒன்றுபட்டுச் சுத்த சன்மார்க்க நெறியில் வாழும் காலம் உருவாகிக் கொண்டு இருக்கிறது. சுத்த சன்மார்க்க வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இன்பத்துடன் வாழ்வோம். *

''போடா, மக்கு! பட்டாசெல்லாம் நீ வெடிக்கக் கூடாது. சின்னப் பையன் நீ.''

''நீ மட்டும் பெரிய மனுஷியோ?''

''பெரிய மனுஷியாட்டம் நான் பேசறேன்னு பாட்டி வாய்க்கு வாய் சொல்றாளே! உன் காது செவிடாவா போச்சு?''

அனைவருக்கும் எமது உளங்கனிந்த 'தீபாவளி' நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ தேவி

கோல்டு கவரிங்

பவுன் கவரிங்

நகைகள் வியாபாரம்

போன்: 23749

40-A, சொக்கப்ப நாயக்கன் தெரு.
தெற்கு கோபுர வாசல், மதுரை-1

மதுரையில் வாடிக்கையாளர்களின்
நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்

—ஸ்ரீநாராயண பப்ளிஸிடீஸ்

Grams: "ANGUVILAS" Phone: 71
Red. Nos. 12700 & 149348 Estd: 1925

ஸ்தாபகர்:
அங்கு விலாஸ் M V.முத்தையா பிள்ளை
திண்டுக்கல்

அங்குவிலாஸ்

M.V.முத்தையா பிள்ளை,
(பர்ம்)
வாசனைப் புகையிலை
தாம்பூலத்துடன்
சுவைப்பதற்கு
தின்பண்டம்
போன்றது

★

ANGU VILAS Scented Tobacco stands foremost in India. If a little of this Scented Tobacco is chewed with Betel leaves, nut and Chunnam and spit out, it will go on refreshing your mind and Body.

Angu Vilas M. V. MUTHIAH PILLAI (Firm)

Scented Tobacco Factory
DINDIGUL (South India) Tamil Nadu

ஆர்க்கிடெக்ட்ஸ்

இன்டீரியர் டெக்கரேட்டர்ஸ்

ஃபைவ்-ஸ்டார் ஓட்டல்கள்

இல்லத்தரசிகள்

இவர்கள் அனைவருக்குமிடையே நிலவும் ஒற்றுமையான கருத்து...

சானிட்டரிவேர் என்றால் பாரிவேர் மாத்திரமே

பல்லாண்டுகளாக, ஒரே சீராக உயர்தரமாக உருவாகிவரும் பாரிவேர் சானிட்டரி படைப்புகள், பாரிவேரின் பெயரை பிரபலம் அடையச் செய்துவிட்டன.

எல்லா பாரிவேர் தயாரிப்புகளும் ஐ.எஸ்.ஐ. முத்திரை பதிக்கப்பெற்றவை. தூய்மையான வெண்மையாகவும், மனங்கவரும் மற்ற வண்ணங்களிலும் உருவாகின்றன.

Parryware VITREOUS

ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிட்.
செராமிக்ஸ் பிரிவு
'டேர் ஹவுஸ்', சென்னை 600 001

எங்கள் தயாரிப்புகளின் தரம் ஒன்றே—உயர்தரம்

EID PW 3700 TAM


அருணை அளித்த அவதார புருஷர்



முக்தி தரும் ஏழு தலங்களில் முதன்மையானது ஸ்ரீகாஞ்சி. அன்னை காமாட்சி அருளாட்சி புரியும் திருநகரம். சங்கர பகவத்பாதர், ஸர்வக்ஞபீடம் நிறுவித் தாமே முதல் பீடாதிபதியாய், ஜகத்குருவாய் விளங்கிய புண்ணிய பூமி. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளையும் கொண்ட காஞ்சியில், சீலமும் பக்தியும் சாஸ்திர ஞானமும் நிரம்பிய குடும்பம் ஒன்று புராதனமாக வாழ்ந்து வந்தது. அதைக் காமகோடி வம்சம் என்று சொல்வார்கள். மகரிஷிகளைப் போன்று வாழ்ந்த உத்தம அந்தணர்கள்; ஸ்ரீவித்யா உபாசனையில் ஈடுபட்டு எம்பெருமாட்டியின் திருவருள் கடாட்சம் பெற்றவர்கள். அத்தகைய மரபிலே 1790-இல் காமகோடி சாஸ்திரிகள் என்ற மகான் அவதரித்தார். ஆஹிதாக்னியாக விளங்கிய இவர், தர்க்கம், சாஸ்திரம், வியாகரணம், மீமாம்ஸை, ஜோதிடம் ஆகியவற்றிலும் துறைபோயிருந்தார். காந்தர்வ வேதம் என்ற சங்கீத சாஸ்திரம் இவரிடம் தஞ்சம் அடைந்திருந்தது. மணியிடைப் பவளமாகப் பக்தி ரசம் இவருடைய கீர்த்தனைகளில் ஒளி வீசும்.

காமகோடி சாஸ்திரியாரின் மேதைக்கு ஏற்ப, நல்லொழுக்கமும் நுண்ணறிவும் வாய்ந்த மரகதம் என்ற பெண்ணும் வாய்த்திருந்தாள். தமக்குத் தெரிந்த கலைகளைத் தம் புதல்விக்குக் கற்பித்திருந்தார். திருமணப் பருவம் எய்திய தம் மகளுக்கு ஏற்ற வரனை, சேஷாத்திரி ஜோஸியர் என்ற காமகோடி வம்சத்தையே சேர்ந்த ஒருவரின் மகனை வரதராஜனைத் தேர்ந்தெடுத்தார். சாஸ்திர முறைப்படி மரகதம் வரதராஜனின் திருமணம் ஏழு நாள் நடந்தது. சோதிடத்தில் இந்தக் குடும்பத்தினர் யாவருமே தேர்ந்தவர்கள் என்றாலும் வரதராஜன் மிகவும் சிறந்தவர். இவருக்குத் தம்பி ஒருவர் இருந்தார்; ராமசாமி ஜோஸியர் என்று பெயர்.

தம் பெண்ணுக்குப் புத்திரப் பேறு ஏற்படாமை காரணமாக, காமகோடி சாஸ்திரியார் குல தெய்வமான காமாட்சியிடம் வேண்டிக் கொண்டார். சக்கரநாயகியாகிய காமாட்சி ஒரு நாள் இரவு சாஸ்திரியார் கனவில் தோன்றி, ''நவநீதம் கொடு; ஞானக்கலை உதிக்கும்'' என்று திருவாய் மலர்ந்தருளினாள். சந்தோஷம் தாங்காமல் மறுநாள் காலையில் பசுவெண்ணெயில் அம்பிகையின் பீஜாட்சரங்களை ஜபித்து, மகளுக்கும் மருமகனுக்கும் கொடுத்தார்.

அன்னையின் அருளால், 1870-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ஆம் நாள், ஹஸ்த நல்லோரையில் சனிக்

கிழமையன்று சோஷாத்திரி சுவாமிகள் அவதரித்தார். குலத்தின் மூதாதையர் பெயர் என்பதால் சேஷாத்திரி என்ற திருநாமத்தைக் குழந்தைக்குச் சூட்டினார்கள்.

''விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்பதுபோல, சேஷாத்திரி இரண்டு மூன்று வயது பாலகனாக இருந்த போதே செய்த லீலைகள் பார்த்தவரை வியப்பில் ஆழ்த்தின. வரதராஜர் கோயிலில் வைசாக உற்சவம் நடந்தது. வழக்கம் போல் தாயுடன் சேஷாத்திரியும் கோயிலுக்குச் சென்றான். உற்சவத்தை முன்னிட்டுப் பலர் சந்நிதித் தெருவில் கடைகளைப் போட்டிருந்தனர். வெண்கல வார்ப்பில் செய்த நவநீத கிருஷ்ணனை ஒரு வியாபாரி ஆயிரக் கணக்கில் கொட்டி வைத்திருந்தார்.

''கிருஷ்ணனைப் பூஜை செய்யவேண்டும். ஒரு நவநீத கிருஷ்ணன் பொம்மை வாங்கிக் கொடு'' என்று சேஷாத்திரி, தாயை வேண்டினார். குழந்தையின் முகப் பொலிவும் பேச்சழகும் வியாபாரியைக் கவர்ந்தன. ''காசு வேண்டாம் அம்மா; குழந்தைக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் வியாபாரி. மகிழ்ச்சி தாங்காமல் சேஷாத்திரி, அந்தக் குவியலில் கைவிட்டு ஒரு பொம்மையை எடுத்துக்கொண்டார்.

மறுநாள் காலையில் மரகதம், பிள்ளை சேஷாத்திரி, மற்றும் உறவினருடன் வரதராஜர் கோயிலுக்குப் போன போது, அந்த வியாபாரி, மரகதத்தின் காலில் விழுந்து வணங்கி, சேஷாத்திரியின் குஞ்சுக் கரங்களைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, ''தங்கக் கை, தங்கக் கை!'' என்று நாத்தழுதழுக்கக் கூறி, ''இந்த உற்சவத்தில் நூறு பொம்மைகள் விற்றால் அதிகம், தாயே! ஆனால் நான் கொண்டு வந்த இரண்டாயிரமும் நேற்று ஒரு நாளிலேயே விற்றுவிட்டன. உங்கள் குழந்தை சாதாரணக் குழந்தை அல்ல. அசல் வரதராஜனேதான்'' என்று கண்ணீர் மல்கக் கூறினார். 'தங்கக்கை' என்பது அடைமொழியாகப் பெயருடன் இணைந்தது. இந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை இன்றும் சுவாமிகளின் தம்பி பூஜித்து வருகிறார்.

காமகோடி சாஸ்திரியார், தம் பேரனுக்கு ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்வித்தார். ஒரே மாதத்தில் அமரத்தில் மூன்று காண்டங்களையும் சேஷாத்திரி உருப் போட்டுவிட்டார். சம்பு, நாடகம், அலங்காரம் போன்ற சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றார். தாயாரிடத்தில் சங்கீதத்தைப் பயின்றார். கோயில் சாஸ்திர பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர்களாக இருந்த மாசிலா

மணி முதலியார், வேங்கடாசல முதலியார் என்பவர்களிடமும் நன்னூல், நைடதம், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற தமிழ் இலக்கியங்களைக் கற்றார். ஆறு வயதிலேயே பெரியவர்கள் நிறைந்த சபையில் கூச்சமில்லாமல் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மாறி மாறி விளக்கம் கூறிப் பார்த்தவர்களை வியக்கச் செய்தார்.

ஒன்பது வயதில் சாஸ்த்ரோக்தமாக உபநயனம் நடந்ததும், தாத்தாவின் உபதேசப்படி, வேதாத்தியயனம் செய்யப் பாடசாலை செல்லத் தொடங்கினார். கிரமாந்தம் வேதத்தைக் கற்றதும் காமகோடி சாஸ்திரியார், தாம் மந்திர சித்தி பெற்று உருவேற்றியிருந்த மந்திர ரகசியங்களைப் பேரருக்குப் போதித்தார். தாய் தந்தையரைச் சுற்றி நமஸ்கரித்து விட்டுத்தான் தினம் பாடசாலைக்குப் போவார் சேஷாத்திரி.

தமக்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்த வரதராஜன், தம் இரண்டாவது மகன் நரசிம்மனைத் தம் தம்பி ராமசாமி வேண்டிக்கொண்டபடி தத்துக் கொடுத்துவிட்டு, மூத்த மகன் சேஷாத்திரி மகானாக விளங்கப் போகிறான் என்ற திருப்தியுடன், மனைவி மரகதம் கதற, இறைவனடி சேர்ந்துவிட்டார். கணவனை இழந்த தம் பெண்ணையும் பதினான்கு வயதான சேஷாத்திரியையும் அழைத்துக் கொண்டு, தாம் வசித்து வந்த வழூருக்கு (வந்தவாசி தாலுக்கா) வந்துவிட்டார் காமகோடி சாஸ்திரியார். ஒரே ஆண்டில் சேஷாத்திரி, தாத்தாவின் உபதேசத்தால் சகல சாஸ்திரங்களிலும் ஸ்ரீவித்யையிலும் தேர்ந்து மகத்தானவராகப் புகழ் பெற்றார்.

வந்தவாசியில் தாசில் உத்தியோகம் பார்த்துவந்த வேங்கடசுப்பையர் (ஸர். ஸி. பி. யின் மாதாமகர்) ராமாயண பாகவத உபந்நியாசம் செய்ய, காமகோடி சாஸ்திரிகளை வருந்தி வேண்டி அழைத்தார். தள்ளாமையால் வருந்திய சாஸ்திரியார் தம் பேரர் சேஷாத்திரியை அழைத்துக்கொண்டு போனார். சேஷாத்திரியின் உபந்நியாசம் தாத்தாவையும் பெருமையடையச் செய்தது. ஓர் ஆண்டு இந்த உபந்நியாசம் தொடர்ந்து நடந்தது.

காமகோடி சாஸ்திரியாரும் இறைவனடி சேர்ந்தார். சிற்றப்பாவான ராமசுவாமி ஜோஸியரே சேஷாத்திரியையும் அண்ணி மரகதத்தையும் காப்பாற்றினார்: சேஷாத்திரி எப்போதும் பூஜை, மந்திர உருவேற்றுதல் என்றே காலங்கழித்தார். பதினேழு வயது நடக்கும்போது, உறவினர் ஓர் அம்மாள், சேஷாத்திரிக்குத் தன் பெண்ணைக் கொடுக்க முன்வந்தாள். ராமசாமி



ஜோஸியரோ, சேஷாத்திரியின் ஜாதகத்தைப் பார்த்து விட்டு, 'பையனுக்குச் சம்சார யோகம் கொஞ்சமும் இல்லை; சந்நியாச யோகந்தான் நிறையக் காண்கிறது'' என்று சொல்ல, பெண் கொடுக்க வந்தவள், வருத்தத்துடன் திரும்பி விட்டாள். கொழுநன் ராமசாமி இப்படிச் சொன்னது, மரகதத்துக்கு இடி விழுந்தது போலாயிற்று. கோயிலிலிருந்து திரும்பிய சேஷாத்திரி, தாயின் வருத்தத்தை அறிந்து அவளைத் தேற்ற வகையறியாமல் தவித்தார். இந்தப் பேரிடியிலிருந்து மரகதம் மீளவில்லை. தாயின் விருப்பப்படி 'அம்ப நீவே' என்ற கீர்த்தனத்தைச் சேஷாத்திரி பாட அன்னை மரகதம் அரிதுயில் கொண்டாள்.

தாயின் மறைவுக்குப் பிறகு சேஷாத்திரியின் பூஜையும் மந்திர உச்சாரணமும் தீவிரமாயின. திருவண்ணாமலையைப் போலவே ஒரு படத்தை ஐந்து சிகரங்களுடன் ஓர் அட்டையில் வரைந்து, பூஜிக்கத் தொடங்கினார். காமாட்சி படத்தையும் ராமர் படத்தையும் மணிக்கணக்கில் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு பூஜித்தார். துர்க்கா ஸூக்தத்தை விடிய விடிய ஜபித்துக் கொண்டே இருப்பார். ஊண் உறக்கம் இன்றி இப்படிப் பூஜிப்பதை வீட்டிலுள்ளோர் தடுக்கவே, கோயிலில் சக்கரத்தாழ்வார் சந்நிதியில் மணிக் கணக்கில் உட்கார்ந்து ஜபம் செய்யத் தொடங்கினார்; நினைத்த நேரத்தில் ஸ்நானம் செய்வார், கையில் தீர்த்த பாத்திரத்துடன் தெருவில் உலவுவார். வாய் எதையாவது முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். நூற்றுக் கணக்கான தடவை காமாட்சி திருக்கோயிலை வலம் வந்து கொண்டே இருப்பார். பெண்களைக் கண்டால் ''தேவி, அம்பிகை'' என்று கூறிச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவார். பசி எடுத்தால் வங்கீபுரம் சீனிவாசையங்கார் வீட்டுக்குத்தான் போவார். அவர் வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடுவார், உப்பு மூட்டை சுமப்பார்; திருமணம் நடப்பதைப் போல் மேளம் கொட்டி வாயால் நாயனம் வாசிப்பார்; மாலை மாற்றுவது போல் நடிப்பார்.

இவற்றையெல்லாம் தூக்கியடிப்பது போல், இரவு வேளையில் மயானத்தில் போய் அமர்ந்து ஜபம் செய்யத் தொடங்கியது, சிற்றப்பாவையும் சித்தியையும், உறவினர்களையும் பெரிதும் வருத்தியது. சாம தான பேத முறைகளை உபயோகித்து அவர்கள் தடுத்துப் பார்த்தார்கள். சேஷாத்திரியோ கொஞ்சமும் மசியவில்லை. பிள்ளையின் போக்கைக் கண்டு சித்தி கண்ணீர் விட்டாள்;

சிற்றப்பா ராமசாமி ஜோஸியர் அறைக்குள் தள்ளிப் பூட்டி வைத்தார். திருமணம் செய்து வைத்தால் சரியாகிவிடும் என்று முயற்சி செய்தார்கள். அதை அறிந்த சேஷாத்திரி, ''திருமண முயற்சி செய்தால் வீட்டைவிட்டே ஓடிவிடுவேன்'' என்று கர்ஜித்தார். ''ஓடி விடாதே அப்பா. கண்ணில் பட்டுக்கொண்டிருந்தாலே போதும்'' என்று சேஷாத்திரியைக் கட்டிக் கொண்டு அழுதாள் சித்தி.

ஸர்வ தீர்த்தக் கரையிலுள்ள விசுவநாத சுவாமி ஆலயத்தில் இறைவனே துறவுருக் கொண்டு நிற்பது போல் ஒரு கௌட சந்நியாசியைத் தரிசித்தார் சேஷாத்திரி. தட்சிணமூர்த்தியே போல் விளங்கிய அந்தச் சுவாமிஜியிடம் நயன தீட்சை பெற்றார் சேஷாத்திரி. பாலாஜி சுவாமிகள் என்ற பெரியார், மனமுவந்து சேஷாத்திரிக்கு, ஸர்வ தீர்த்தக் கரையிலேயே உபதேசம் செய்தருளினார். இந்த உபதேசத்துக்குப் பின் வீட்டுக்கே போகாமல், ஜீவன் முக்தரைப்போல் கோயிலிலேயே அமர்ந்திருந்தார்.

சேஷாத்திரியின் தகப்பனார் சிராத்த தினம் வந்தது. தம்பி நரசிம்மன் செய்தார். ஆனால் சேஷாத்திரியைக் கட்டி இழுத்துவந்து, ''சிராத்தம் முடியும் வரையில் வெளியில் போகக் கூடாது'' என்று அறைக்குள் தள்ளிப் பூட்டி விட்டார் சிற்றப்பா. சிராத்தம் முடிந்து அறையைத் திறந்து பார்த்தால், சேஷாத்திரியைக் காணவில்லை. எல்லாரும் திடுக்கிட்டனர்.

அதே சமயத்தில் சேஷாத்திரி, காஞ்சி வாசத்தை முடித்துக் கொண்டு, அருணாசலத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டார். திருவண்ணாமலையில் காலடி வைத்தபோது அவருக்கு வயது பத்தொன்பது. அதிலிருந்து நாற்பது ஆண்டுகள் அண்ணாமலைதான் சேஷாத்திரியைப் பெரிய மகானாக, ஜீவன்முக்தராக, அவதார புருஷராக மாற்றி விளங்கச் செய்தது.

அருணை போகும் வழியில், காவேரிப்பாக்கத்திலுள்ள முக்தீசுவரர் திருக்கோயிலுக்குப் போனார் சேஷாத்திரி. அவருடன், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரனும் கோயிலுக்குள் சென்றான். உட்பிராகாரத்தில் பிரதட்சிணம் வந்தபோது, தல விருட்சமான புன்னை மரத்திலிருந்து சரசரவென்று இறங்கி வந்த பெரிய சர்ப்பம் ஒன்று, ''சேஷாத்திரி வா'' என்று அழைக்க, அவர்மேல் ஏறிக் கழுத்தைச் சுற்றிக்கொண்டு படத்தை விரித்துத் தலைமேல் குடை பிடித்தது. இதைப் பார்த்த

சகோதரன் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி ஊர் மக்களைத் திரட்டிக்கொண்டு வந்துவிட்டான். சிற்றப்பா சித்திக்கும் தெரிந்து சேஷாத்திரியின் மகிமையை அறிந்து வந்து தரிசித்தனர். அருணை சேரும் வரையில் வழியிலுள்ள ஊர்களில் எல்லாம் பல அற்புதங்கள், அவர் அறியாமலேயே நடந்தன.

''இங்கேதான் இரண்டு பேரும் (சுவாமியும் அம்பாளும்) தம் குழந்தைகளை 'வா வா' என்று அழைத்து மோட்சம் அளிக்கிறார்கள்'' என்று சேஷாத்திரி சுவாமிகள், அருணைச் சிறப்பைப் பற்றிக் கூறும்போது அடிக்கடி சொல்வது வழக்கம். உடல், உணர்வு, பசி, தாகம் என்ற உணர்வுகளே அற்ற ஜீவன்முக்தரைப் போல், யாருக்கும் புரியாத, மாமனிதரைப் போல் சுவாமிகள் இங்கேதான் வாழ்ந்தார். எந்த இடத்தில் உட்கார்வது, எதைச் சாப்பிடுவது, எப்போது உறங்குவது, விழிப்பது, யார் யாரை வணங்குவது என்ற கட்டுப்பாடுகளே இல்லாத, எல்லாவற்றையுமே பரமாத்ம சொரூபமாக எண்ணி வழிபடும் தவயோகியாக விளங்கினார். மக்களும் இவருடைய மகிமையை உணர்ந்தார்கள்.

கடைத் தெரு வழியே சுவாமிகள் சென்றால், 'நம் கடைக்கு வரமாட்டாரா? கல்லாவிலிருந்து காசை எடுத்துத் தெருவில் வீசமாட்டாரா? தின்பண்டங்களை எடுத்து உண்ண மாட்டாரா?' என்றே கடைக்காரர்கள் எண்ணுவார்களாம். சுவாமிகள் தொட்டால் அன்று நரிமுகத்தில் விழித்த வியாபாரந்தான். கல்லாவிலிருந்து கை நிறையக் காசை அள்ளி எடுத்துப் பாதியைத் தெருவில் எறிவார்; மீதியை ரெயில் வண்டித் தொடர் போல் அடுக்கிக் கொண்டே போவார். அண்டாவையும் தூக்கி எறிவார், பீஸ் பீஸாகத் துணிகளையும் எடுத்துக் கிழித்துத் தானம் செய்வார். கடைக்காரர்கள் வைத்த கண் வாங்காமல் பக்தியுடன் வாய்பொத்தி நிற்பார்கள்.

ஒரு நாள் காலை. சிவகங்கைத் தீர்த்தத்தில் வேங்கடாசல முதலியார் நீராடிக் கொண்டிருந்தார். அருகிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் மூலையிலுள்ள பாதாள ஈசுவரன் கோயிலினுள் சில இளைஞர்கள் கல்லை விட்டெறிந்து அட்டூழியம் செய்தனர். அதைப் பார்த்த சுவாமிகள் ஓடோடி வந்து, அந்தச் சிறுவர்களை அடித்துத் துரத்தினார். நீராடி ஜபம் முடித்து வந்த முதலியாரை அழைத்து, ''என்னோடு வாரும். என் தம்பியைக் காட்டுகிறேன். ஜோதியைத் தரிசிக்கலாம்'' என்று கூறி இரு

ளடைந்த பாதாள குகைக்குள் சுவாமிகள் இட்டுச் சென்றார். கர்ப்பக் கிருகத்தின் பின்னால் வட்டமான ஒரு ஜோதிமட்டும் தெரிந்தது. மெய்சிலிர்க்க முதலியார் அருகில் சென்று பார்த்தார். கட்டைபோல் சமாதியில் ஆழ்ந்திருந்த ரமணரைத் தரிசித்தார் முதலியார். இதற்குப் பிறகே ரமண பகவான் ஜோதி உலகெங்கும் ஒளி வீசத் தொடங்கியது.

ஞான நிலையில் இருவரும் ஒருவரே என்றாலும் சுவாமிகள், பகவானைவிடப் பத்தாண்டுகள் மூத்தவர்; பகவானுக்கு முன்பே அருணையை வந்தடைந்தவர். 'பகவானும் தாமும் ஒன்றே' என்ற கருத்தை வலியுறுத்தும் பல நிகழ்ச்சிகளை இருவரும் நிகழ்த்தி, பக்தர்களுக்கு இந்த உண்மையை உணர்த்தினார்கள்.

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாகிய எஃப்.டி. பீட்டரும் அவருடைய மனைவியும் சுவாமிகளின் பக்தர்கள். பீட்டரின் மைத்துனனுக்கு ஒரு குட்ஸ் வண்டி விபத்தில், ஸ்டேஷன் மாஸ்டர் வேலை போய்விட்டது. அந்தக் குட்ஸில் பொருள் அனுப்பிய குஜராத்திக்காரர், தமக்கு லட்ச ரூபாய் பெறுமான பொருள் போய்விட்டது என்று எம். எஸ். எம். ரெயில்வே கம்பெனி மீது வழக்குப் போட்டார். 'குட்ஸ் விபத்துக்கு ஸ்டேஷன் மாஸ்டரான தம் கவனக் குறைவு காரணம் இல்லை' என்று கூறும் தஸ்தாவேஜுகளைக் காணவில்லை. பீட்டர் துரை, தம் மைத்துனனைக் காப்பாற்ற, சுவாமிகளிடம் சமாசாரத்தைக் கூறியதும் சுவாமிகள், 'புஸ் புஸ் புஸ்', 'குப் குப் குப்!' என்று சத்தம் போட்டு, ''அப்படிப் போச்சு, இப்படி வந்துவிட்டது, போ!'' என்றாராம். ரெயிலில் சென்ற தஸ்தாவேஜுகள் கிடைத்து, பீட்டரின் மைத்துனர் தப்பித்துக்கொண்டார்.

நல்ல களையான முகத்துடன், திருநீறு அணிந்து நிதம் கோயிலுக்கு வரும் சிறுவன் வேங்கடராமன் சுவாமிகளின் அருளுக்குப் பாத்திரமானான். அவனைத் தம் அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டு, ''கண்ணை மூடிக்கோ, ஜகஜ்ஜோதி தெரியும் பார்'' என்று கூறினார். உடனே சிறுவன் உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. ''அம்மா தாயே! ஈசுவரி'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. ''அவதான், புடிச்சுக்கோ, விடாதே! அபீதகுசாம்பா அவ'' என்று கூறிச் சிரித்தபடியே வெளியில் ஓடிவிட்டார் சுவாமிகள்.

சில பக்தர்கள், சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்வித்து அலங்காரம் செய்து தரிசிக்க விரும்பினார்கள்,



தலை, தாடை எல்லாம் நன்றாக மழித்து, பன்னீரால் அபிஷேகம் செய்தார்கள். தூணைப் போல் சுவாமிகள் அமர்ந்திருந்தார்கள். குடம் குடமாகத் தண்ணீரை விட்டு அபிஷேகம் செய்தார்கள். பிறகு பட்டுத் துணி உடுத்தி, அலங்காரமும் செய்தார்கள். அன்னையின் திருவடிக் கமலத்தை அடையச் சுவாமிகள் தீர்மானித்த பிறகு, இந்தப் பூதவுடலுக்கு என்ன செய்தால் என்ன? ஆனால் குளிர் ஜுரம் பூதவுடலைத் தாக்கியது. சுவாமிகளின் திருவுடல் இளைத்துத் துரும்பாகியது. சின்னக் குருக்கள் வீட்டுத் திண்ணையில் திண்டும் தலையணைகளும் அன்பர்கள் போட்டு உபசரிக்க, அன்பர்களுக்கு இரங்கி, சுவாமிகள் அவற்றில் படுத்துக்கொண்டார். மக்கள் திரளாக வந்து தரிசித்தனர். கண்ணீரை மாலையாகத் தொடுத்து அவருக்கு இட்டனர். சென்னையிலிருந்து தேர்ந்த மருத்துவர்கள் அருணையில் தங்கி, தங்கள் திறமையைக் காட்டினர்.

மார்கழி மாதப் பனி, குளிர்; மூன்று நாளாய்த் தொடர்ந்து மழை வேறு. அன்பர்களின் தொல்லை தாங்காமல் வீராவேசமாகச் சுவாமிகள் எழுந்து கோயிலை நோக்கி நடந்தார். வழியில் சிவகங்கைப் பிராகாரத்தின் அருகிலுள்ள இரண்டு இலுப்பை மரங்களின் இடையில் தேங்கியிருந்த மழை நீரில் அப்படியே படுத்து ஜலஸ்தம்பனம் செய்யத் தொடங்கிவிட்டார். தொடர்ந்து வந்த மக்களெல்லாம் ஸ்தம்பித்து விட்டனர். இரவு எட்டு மணிக்குப் படுத்தவர், கூட்டம் எல்லாம் கலைந்த பிறகு, விடியற்காலை மூன்று மணி சுமாருக்கு எழுந்து, சின்னக் குருக்கள் வீட்டுத் திண்ணையில் போய் நனைந்த துணியுடன் படுத்துவிட்டார். யோக நித்திரையில் ஆழ்ந்தவர் போல் சுவாமிகள் அப்படியே கிடந்தார். கர்ப்பூர ஆரத்தி எடுத்து அன்பர்கள் எல்லாரும் சுந்தர காண்ட பாராயணத்தைத் தொடர்ந்தனர். 4—1—1929. பரிபூரணனுடன் கலந்து பூர்ணமாகிவிட்டார், சேஷாத்திரி சுவாமிகள். ரமண பகவான், தம் தமையன் திவ்ய யாத்திரை புறப்பட்டதை அறிந்து, சரியான சமயத்தில் அங்கே வந்து சிறிது நேரம் தங்கியிருந்தார்.

நினைக்க மோட்சம் அளிக்கும் அருணாசலம் இரண்டு ஜீவன்முக்தர்களை வழங்கி மேலும் சிறப்புப் பெற்றது. ஊஞ்சலூர் அதிஷ்டானத்தில் வைதிக முறையில் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ள ஆசிரம யோக சமாதியிலிருந்து அம்ருதமாக அருளை வழங்கி வருகிறார் சேஷாத்திரி சுவாமிகள்.

—ஹஸ்தம்

உ

"தீபாவளி நல்வாழ்த்துக்கள்"

K.T.R.

80 ஆண்டுகள் அனுபவமிக்க நறுமணப் பொருட்கள் தயாரிப்பாளர்

- கோபுர மார்க் பன்னீர்
- சந்தனாதி, அரைக்கீரை விதை,
- பொன்னாங்கண்ணி தைலங்கள்
- குல்குந்து, ஓமத்தநீர்
- சுண்ணாம்பு, தசாங்கம்
- சந்தனப் பவுடர் மாத்திரை, பில்லைகள்
- சர்பத், பத்தி வகைகள்
- ஜவ்வாது பவுடர், அரகஜா
- பாத்திங் பவுடர்

K. T. R. Perfumery Industries

Tiruvarur - 610 001 Tamil Nadu

Phone: 218 **P.B. No. 3**



ULIP

உங்கள் குடும்ப நலனைக் கருதி நான்கு நன்மைகள் பயக்கும் முதலீட்டுத் திட்டம்

யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் ப்ளான் (ULIP) பற்றித் தெரிந்து கொள்ள இதுவே சமயம்!

நீங்கள் முதலீடு செய்யும் தொகைக்கு வரிச்சலுகை கிடைக்கிறது.

இலக்குத் தொகைக்குச் சமமாக உங்களுக்கு ஆயுள் இன்சூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கிறது. மருத்துவ சோதனை தேவையில்லை.

மேலும் ரூ. 15,000 பெறுமான விபத்து இன்சூரன்ஸ் பாதுகாப்பும் உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் முதலீடு அதிக வருவாயைத் தருகிறது.

ULIP அளிக்கும் நன்மைகளை நீங்களே பாருங்கள்.

சேமிப்புக் காலம்	ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகை	இலக்குத் தொகை	முடிவில் பெறும் தொகை
	ரூ.	ரூ.	ரூ.
10 வருடங்கள்	1200	12,000	19,000
15 வருடங்கள்	800	12,000	24,500

உங்கள் வயது 18 லிருந்து 45½ வரை இருந்தால் நீங்கள் ULIP திட்டத்தில் சேரலாம். உங்கள் இலக்குத் தொகை குறைந்தபட்சம் ரூ. 3000 ஆகவும் அதிகபட்சம் ரூ. 12,000 ஆகவும் இருக்கவேண்டும். சேமிப்புக் காலம் 10 வருடமோ அல்லது 15 வருடமோ இருக்கலாம். நீங்கள் இத்திட்டத்தில் சேர்ந்த மூன்று வருடத்திற்குப் பிறகு ரூ. 12,000 பெறுமானமுள்ள மற்றும் ஒரு ULIP திட்டத்தில் சேரலாம்.

இதர விபரங்களுக்கு எங்கள் ஏஜெண்டுகள், தலைமைப் பிரதிநிதிகள் மற்றும் பாங்க் ஆஃப் பரோடாவின் கிளைகளை அணுகுங்கள்.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா
(ஒரு பொதுத் துறை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம் : பம்பாய்.

பிராந்திய செயலகம் : ரெஜினா மான்ஷன்,
46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001 போன் : 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள் :

- கோவை, பெரியார், நீலகிரி மாவட்டங்களுக்கு :
  திரு. ஏ. தனபால், 10-ஜே, ஹுஸூர் ரோடு,
  கோவை-641 018. போன் : 34776 (அலு)
- மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு :
  திரு எம். இராமமூர்த்தி, 30 எல். ஐ. சி. காலனி,
  மதுரை-625 002 போன் : 30160 (அலு)
- சேலம் மாவட்டத்திற்கு : திரு என். கே. இங்கர்சால்,
  155, சுவர்ணாம்பிகை தெரு, அன்னதானப்பட்டி,
  சேலம்-636 002 போன் : 64302 (வீடு)
- தஞ்சை மாவட்டத்திற்கு : திரு கு. முத்துசாமி,
  52-ஏ, வ. உ. சி. நகர், தஞ்சை-613 007
  போன் : 1224 (வீடு)
- நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு :
  திரு எம். எம். காஜா, பாக்காலி பில்டிங் அனெக்ஸ்,
  41, திருவனந்தபுரம் நெடுஞ்சாலை,
  பாளையங்கோட்டை-627 002. போன் : 4520 (அலு)
  5395 (வீடு)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

Sista's. UTI. 152. 83. TM B

விமலாவின் நெஞ்சு தவித்தது. உள்ளூறப் பரவிய அச்சம் விசுவ ரூபமாக விரிந்தது. மனம் படபடத்துக் கண்களில் நீர் கோக்க ஆரம்பித்து விட்டது.

மகாதேவன் அலுவலகம் விட்டு இன்னும் வரவில்லை. எப்போதுமே கணவன் வர அரைமணி தாமதமானால் போதும்; 'ஏதாவது விபத்தில் சிக்கிக் கொண்டாரோ என்னவோ?' என்று அஞ்சுபவள் அவள்.



தவிப்பின் கணங்கள்

கோமகள்

சுவர்க் கடிகாரம் ஏழுமுறை அடித்தது. மகாதேவன் இரண்டு மணி நேரம் தாமதம்.

குழந்தை கீதா குப்புறப்படுத்துக்கொண்டு தன் 'ஒன்றங்கிளாஸ்' பாடப் புத்தகத்தை வைத்துக்கொண்டு, ''ரெயின், ரெயின் கோ எவே; கம் ரெயின் அனதர் டே'' என்று மழலை கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

நிலைகொள்ளாமல் தவித்த விமலா பூஜை விளக்கைப் பார்த்தாள். அதன் சுடர் காற்றிலசைந்து அணைந்து விடுவேன் என்று பயமுறுத்தியது. ஓடிச் சென்று அதைத் தூண்டிவிட்டு மேலும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றிவிட்டு வந்தாள்.

இதற்குள் குழந்தை கீதா தன் புத்தகத்திலே கவிழ்ந்து படுத்துத் தூங்கிவிட்டிருந்தாள்.

விமலாவின் காதுகள் கூர்மையாயின. அந்தக் காலடியோசைகள்! ஓ! மகாதேவன் வருகிறான். நம்பிக்கையோடு நடந்தவள் அப்படியே நின்றாள். மாடிப் போர்ஷன் சங்கரன்தான் வந்து கொண்டிருந்தான். இவள் முகத்தைப் பார்த்தவுடனேயே, ''மகாதேவன் இன்னும் வரல்லியா?'' என்று அனுதாபத்துடன் கேட்டான்.

''ஊ ஹூம்!'' என்ற முணுமுணுப்பைப் பதிலாக்கிவிட்டுத் திரும்பினாள் அவள்.

முன்பு ஒருமுறை அப்படித்தான் இரவு ஏழுமணிக்கு அவன் திரும்பி வந்தபோது, அவள் வழக்கம்போல் அழுது, ஆவி சோர்ந்து போய், நாலைந்து சுமங்கலிகளுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுத் தெய்வங்களை வேண்டியவாறே, கோயிலே இனி கதி என்று அங்கே ஓடிச் சந்நிதியில் கண்ணீரும் கல்பலையுமாக வேண்டி உருகினாள்.

மகாதேவன் பசியோடு திரும்பி வந்து காத்திருந்தான். எங்கே ஒழிந்து போனாள் என்று குதித்தான். அடுத்த வீட்டுத் தாத்தா வந்து நடந்தவற்றைக் கூறியபோது தலையில் அடித்துக் கொண்டான் அவன்.

''சனியன்? சனியன்! என்ன பிரகிருதியோ? அரை மணி தாமதமானால் பதற்றம், இரண்டு மணி தாமதமானால் ஆபத்து என்று தீர்மானம்.

''இப்படி இவள் கலாட்டா பண்ணினால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள் தாத்தா, பஸ் ஒரு நாள் போல், ஒரே நேரத்தில் கிடைத்துவிடுமா? இல்லே, ஆபீஸ் வேலைகள்தான் சொல்லி வச்ச மாதிரி அஞ்சு மணிக்கே முடிஞ்சுடுதா?''

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, தாத்தாவின் பேத்தி கல்யாணி ஓடிப் போய்க் கோயிலில் பழி கிடந்த விமலாவை அழைத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

ஆவேசமாக மகாதேவனின் காலில் விழுந்து பாதங்களை முகத்தில் ஒற்றிக் கொண்டு கண்ணீர் மழை பொழிந்தாள்.

மற்றவர்களுக்கு உருக்கமான காட்சியாக இருந்தது என்னவோ

உண்மைதான். மகாதேவனுக்கு எரிச்சலாகவும் அவமானமாகவும் இருந்தது.

''எதிர்பாராமல் ஒரு நண்பனைப் பார்த்தேன். அவன் ஓட்டலுக்குக் கூப்பிட்டான். கொஞ்ச நேரம் அவனோடு பேசிவிட்டு, டிபன் காபி சாப்பிட்டு வந்தேன். இதை எல்லாம் பெரிசாக்கி அக்கம்பக்கத்து வீடுகள், ஏன், இந்தத் தெருவே சிரிக்கும்படி நீ ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாயே விமலா? இப்படி எல்லாம் நீ கோழையாக இருக்கறதாலே எனக்கு நெர்வஸ் ஆயிடுது'' என்று சமாதானக் குரலில் கூறினான் மகாதேவன்.

''சரி, அன்னிக்குத்தான் சிநேகிதர் வந்தார், இன்னிக்கு என்ன வந்தது தெரியலையே!'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட போது வாசலில் மகாதேவன், கூட ஒருவருடன் நுழைந்துகொண்டிருந்தான்.

அப்பாடி! மனசிலிருந்து ஒரு பாரம் வடிந்தது. ஆனாலும் இத்தனை நேரத்திய படபடப்பு, ஆவல் எல்லாமாகச் சேர்ந்து தேம்பலாக வெளிப்பட்டன. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள்.

விமலாவைப் பார்த்த நிமிடமே அவள்பதற்றத்தைப்புரிந்துகொண்ட மகாதேவன் பொறுமை இழந்தான். ஆயினும் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''விமலா, இவன் என்னோட கல்லூரிச் சிநேகிதன் பரசு. இவள் என் மனைவி'' என்று ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தான்.

விமலா செய்து வைத்திருந்த மைசூர்ப்பாகையும், காராப்பூந்தியையும் தட்டில் வைத்து இருவருக்குமாக வைத்தாள்.

தூங்கிப் போன சீதாவை எழுப்பி ரசஞ்சாதம் ஊட்டிப் படுக்க வைத்தாள்.

பரசு டிபன் சாப்பிடும்போது, ''மைதிலியை ஞாபகம் இருக்கா உங்களுக்கு?'' என்று விமலாவைப் பார்த்துக் கேட்டான்; ''நாகையில் உங்கள் பக்கத்து வீட்டில் இருந்தாளே!''

''அட! மைதிலி என் கிளாஸ்மேட் கூட. நாங்கள் இருவரும் உயிர்ச் சிநேகிதிகளாக இருந்தோம்.''

''சாட்சாத் அந்த மைதிலிதான் என் மனைவி!''

''அப்படியா? மைதிலி எப்படி இருக்கிறாள்?''

''மைதிலிக்கு என்ன? நன்றாக இருக்கிறாள். ஒரு பையன்யூ.கே.ஜி., படிக்கிறான். மகாதேவா, உன் மனைவியை அழைச்சுக்கிட்டு வீட்டுக்கு ஒரு நாள் வா. இவங்களும், மைதிலியும் சந்திச்சுப் பேசட்டும்.''

''அடுத்த ஞாயித்துக்கிழமை வரேன்.''

''ஆனால் என்னோட மனைவி இத்தனை அழகாய் வாயில் கரையற மாதிரி டிபன் பண்ண மாட்டாள். வீட்டையும் இவ்வளவு நறுவிசாக வச்சுக்கொள்ளமாட்டாள். முதலிலேயே சொல்லிட்டேன்.''

மகாதேவன் இவளுக்குக் கண்களாலேயே சபாஷ் கூறினான்.

இந்தச் சின்னச் சின்ன மகிழ்ச்சிகள் கூட மகாதேவன் நேரத்தோடு வீட்டுக்கு வரும் வரைதான் மனத்தில் தங்கியிருக்கும்.

அன்று வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு ஈரத்தலையை விரித்துக் கொண்டு மின்விசிறியின் அடியில் அமர்ந்திருந்தாள்.

அப்போதுதான் தபால்காரர் ஒரு கடிதத்தை அவளிடம் தந்துவிட்டு நகர்ந்தார். அம்மா எழுதியிருக்கிறாள் என்ற மகிழ்ச்சியோடு, கடிதத்தைப் பிரித்தாள் விமலா.

எதற்கோ ஜாதகங்களைப் பார்த்தார்களாம். மாப்பிள்ளை, பெண் ஜாதகத்தையும் காட்டினார்களாம். 'அடி விமலீ! மாப்பிள்ளைக்குச் சனியின் வக்ர பார்வை இருக்கு, அதனால் ஏதேனும் ஆபத்து நேரலாமாம். ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கோ. வெள்ளிக்கிழமை தோறும் அம்பாள் கோயிலுக்குப் நெய்விளக்குப் போடு, தவறும லலிதா சகஸ்ரநாமம் சொல்லு. மஞ்சள் துணியிலே ஒரு ரூபாயை முடிந்துவிட்டு ஏழுமலையானுக்கு நேர்ந்துக்கோ. தாலியை உண்டியல்லே போடறேன், தாலி பலம் வேணும்னு வேண்டிக்கோ.'

கடிதத்தைப் படிக்கும் போதே குற்றுயிராகி விட்டாள். கலவரத்தில் வியர்த்து மயக்கம் வரும்போல் ஆகிவிட்டது.

மெல்ல எழுந்து, தலையை முடிந்து கொண்டு தெய்வத்துக்கு நேர்ந்து கொண்டு பணத்தை முடிந்து வைத்தாள். அப்போது பீதியின் படபடப்புத் தணியவில்லை. கிலியும் திகிலும் கவ்விக் கொண்டன. அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

மாலையில் மகாதேவன் வீட்டுக்கு வந்த போது தன்னைக் கலகலப்பாக்கிக் கொள்ள முயன்றாள் விமலா. ஆனால் அவன் அவளுடைய பதற்றத்தைக் கண்டுகொண்டான்.

''என்ன, என்னவோ போல் இருக்கிறாய் விமலா?''

''ஒன்றும் இல்லை, தலைவலி.''

''அதானே பார்த்தேன்? நான் வீட்டுக்கு வர அஞ்சு நிமிஷம் தாமசமாகிப் போச்சேன்னு பயம் எனக்கு'' சிரித்தான் அவன்.

அவள் பதில் பேசவில்லை.

இரவு உணவு முடிந்தபின் மகாதேவன் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தான். விமலா வேலை முடிந்து வந்த போது அவன் கூறினன். ''உம்! சொல்ல மறந்துட்டேனே! இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுக்கறதாக யோசனை பண்ணியிருக்கேன். சரிதானே?''

இப்படிச் சொன்னதன் மூலம் அவளை நடுநடுங்க வைத்துவிட்டோம் என்பதை உணராதவனக, தான் எடுக்கப் போகும் பாலிஸி விவரங்கள், பணம் கட்ட வேண்டிய கால அளவு, நடுவில் இறந்தால் கிடைக்கும் மொத்தப் பணம் எல்லாவற்றையும் விவரிக்க ஆரம்பித்தான்.

''ஐயோ! இப்ப்டிச் சொல்ருரே! என்னிக்கும் இல்லாமல் இன்னிக்கு என்ன இன்ஷ்யூரன்ஸ் யோசனை? ஒரு வேளை வரப்போகிற ஆபத்துக்கு அறிகுறியா? இவர் வாயாலேயே சொல்கிருரே தெய்வமே!'' அவள் பூஜையறைக்கு ஓடிக் கை கூப்பினள்.

நல்ல வேளை! அப்போது மகாதேவன் புத்தகத்தில் சுவாரஸ்யமாக ஈடுபட்டிருந்ததால் இந்தக் காட்சி அவன் கண்களில் விழாமல் தப்பியது.

எப்போதும் போல் குளித்து முழுகி, தலை சீவி, பூ வைத்து, பொட்டிட்டுத் தன்னை அவள் அலங்கரித்துக் கொண்டாலும், அவள் முகத்தில் முறுவல் இல்லை. பீதியும் அச்சமுமே அவளை அலைக்கழித்தன.

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

ஆபீஸ் விட்டு வந்ததும் வராததுமாக, ''விமலா, விமலா!'' என்று அழைத்தான் மகாதேவன்.

''நல்லவேளை விமலா! ஒரு ஸ்கூட்டர் 'சர்'ரென்று என்ன வேகமாய் வந்ததுங்கறே? நான் நடுங்கிட்டேன், அப்படியே கண்மண் தெரியாமல் என்னருகே..''

''ஐயோ!'' என்று அலறினள் விமலா.

''நீ ஏன் அந்தக் காட்சியைக் கண்டது மாதிரி நடுங்கறே? பாவம்! அவன் விழுந்துட்டான். பில்லியன்லே அவனோட மனைவி. நல்ல வேளை அவளுக்கு அடிபடவில்லை.''

''உங்களுக்கு ஒன்றும் அடிபடலியே? அதை முதல்லே சொல்லுங்க.''

''என்ன விமலா, நான்தான் முழுசா உன் எதிர்லே நின்னு நடந்த கதையைச் சொல்றேனே!''

அவள் பதில் பேசவில்லை. மனத்துக்குள் தியானத்தில் மூழ்கிவிட்டாள் என்று பொருள்.

'சரியான சோகநாயகி! ஒரு சந்தோஷம், சிரிப்பு, ஒரு ஜோக், ஒண்ணும் கிடையாது. எந்த நேரமும் நான் செத்துப் போய்விடுவேனே என்றுதான் பயம். சே! என்ன பெண் இவள்! இவளிடம் நிதானமாக இதுபற்றி ஒரு நாள் பேச வேண்டும்.'

இப்படிச் சமயம் பார்த்து அவளிடம் சாவகாசமாகப் பேசி அவளை மாற்ற வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தபோதுதான், அவன் அலுவலகக் கட்டிடத்துக்குப் பக்கத்தில் கட்டிக் கொண்டிருந்த ஐந்தடுக்கு மாளிகை, வேலையாட்கள் பணிபுரிந்துகொண்டிருந்தபோதே நறநறவென்று நொறுங்கி விழுந்தது. அதனுள் சிக்கிக்கொண்ட பணிபுரிவோரும், சூபர்வைசர், காண்ட்ராக்டர், என்ஜீனியர் யாவரும் கூக்குரலிட்டு, ஈனசுர முனகலோடு மயங்கி விழுந்து அடிபட்டுத் துடித்தனர். கைகால்கள் சிதைந்தும், மூளை சிதறியும், எலும்புகள் நொறுங்கியும் பல பேர் இறந்து விட்டனர். அங்கே சூபர்வைசராக வேலை பார்த்து வந்த நண்பன் பரசு என்ன ஆனனே என்ற தவிப்போடு ஓடிச் சென்று பார்த்தான் மகாதேவன்.

இடிபாடுகளை அகற்றும் பணிகள் உடனுக்குடன் நடந்தாலும், கம்பிகள், காரைகள் யாவும் அழுத்திக்கொண்டிருந்ததால் மாண்டவர் போக, குற்றுயிராகத் தவித்தவர்கள் உடலையும் உடனே வெளியே எடுக்க முடியவில்லை. நிமிஷத்தில் கிரேன்களும் வெல்டிங் மெஷின்களும் ஓடி வந்தன. மருத்துவர்களும் உதவியாளர்களும் குழுமினர்.

பரிதாபமான காட்சிகளைக் கண்டு மனம் வருந்தியவாறே சுற்றிச் சுற்றித் தேடியபோது, ஓரிடத்தில் ஈனசுர முனகல் ஒலி கேட்டு, மருத்துவர்களையும் வெல்டிங் ஆட்களையும் அழைத்தான். இடிபாடுகளைச் சற்று அகற்றியபோது பரசுராமனின் முகம் தெரிந்தது. 'தண்ணீர் தண்ணீர்!' என்ற முனகலும் 'ஊம்' கொட்டலுமாக அவன் குரல் கேட்டது. ஸலைன் கலந்த குளுகோஸ் நீரைக் கொஞ்சம் கொஞ்ச

மாக வாயிலிட்டனர். அவனுக்குப் பேசும் தெம்பு வந்தது.

''என் வயிற்றின்மேல் இரும்புக் கம்பிகள் அழுத்துகின்றன. வல் உயிர் போகிறது'' என்று பரீசு சொன்னதும், மீட்புப் பணியாட்கள் அவனருகே வந்து கான்கிரீட் பாளங்களை விலக்க முயன்று தோற்றனர். கிரேன் சுற்றிலுமுள்ள கான்கிரீட் பாளங்களை அகற்றிய பிறகே, பரீசுவின்மேல் அழுத்தும் பாளங்களை அகற்ற முடியும் என்று கண்டதும், அவன் அருகில் ஒரு பணியாளை நிறுத்தி, மயக்கம் வராமல் அவ்வப்போது க்ளுகோஸ் தண்ணீர் தரும்படி ஏற்பாடு செய்தனர். பரசுராமன் தன் மனைவியை நினைத்து வருந்தினன்.

''நான் மெல்ல உன் மனைவியிடம் கூறி இங்கு அழைத்து வருகிறேன்'' என்று மகாதேவன் புறப்பட்டபோது, வெள்ளி விளக்குகள் சுற்றிச் சூழ நிறுவப்பட்டுவிட்டன.

மணி ஏழாகிவிட்டதை உணர்ந்த மகாதேவன் திடுக்கிட்டான்.

இத்தனை நேரம் இடிபாடுகளில் சிக்கித் தவிக்கும் நண்பன் பரசுவை விடப் பல மடங்கு வேதனையுடன், நம்பிக்கையின் இடிபாடுகளில் தகர்ந்து போயிருப்பாளே விமலா.

ஓர் ஆட்டோ வைத்துக்கொண்டு வீட்டுக்குப் பறந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே முகம் வீங்கி, கண்கள் சிவந்து, மூக்கை உறிஞ்சிக் கொண்டு காத்திருந்தாள் விமலா.

''உனக்கு எவ்வளவோ பொன்னகை போட்டு அனுப்பினார்கள் உன் பெற்றோர். ஒன்றைத்தான் மறந்து போனார்கள். ஒரு புன்னகையையும் அணிவித்து, அனுப்பாமல் விட்டு விட்டார்கள்!''

''ஓ! உங்களுக்குச் சிரிப்பாய் இருக்கிறதா?'' சினந்தாள் அவள்.

''பின்னே என்ன? ஒரு நாள், ஒரே ஒருநாள் சிரிப்போடு என்னை வரவேற்றிருக்கிறாயா? உன்னை அநேக பொழுதுகள் அழுகையும், துக்கமுமாகவே பார்க்கிறேன்.''

''நீங்கள் ஒரே ஒரு நாளாவது டாண் என்று ஐந்தரை மணிக்கு வீடு திரும்பியிருக்கிறீர்களா? போகட்டும், இன்னிக்குத் தாமசமானதுக்கு என்ன காரணம் சொல்லப் போகிறீர்கள்?''

''எங்கள் ஆபீஸுக்குப் பக்கத்திலுள்ள ஐந்தடுக்கு மாளிகை விழுந்து விட்டது.''

''அங்கே வேடிக்கை பார்க்கப் போனீர்களா? ஒரு போன் பண்ணியிருக்கலாமில்லையா? பப்ளிக் பூத் இல்லையா? அடுத்த வீட்டிலே எனக்கு போன் இல்லையா?''

''ஐயோ விமலா! டெலிபோனில் பேச முயன்றேன். நீ பயப்படுகிற மாதிரி நான் சுவர்க்கத்துக்குப் போயிருந்தாலும் போன் பண்ணியிருக்க முடியும். இந்தச் சென்னை நகரத்தில் போன் அடிக்கடி சரியாக வேலை செய்வதில்லையே! சரி, சரி, நீ புறப்படு. நாம் உடனே அந்த இடிந்த கட்டிடத்துக்குப் போகணும். டாக்சி பிடித்து வருகிறேன்.''

''ஒண்ணும் வேண்டாம். டாக்சி பிடித்துக்கொண்டு போய் அந்த இடிபாட்டை வேடிக்கை பார்க்கணும்னு எனக்கு ஆசை இல்லை.''

''பைத்தியம் மாதிரி உளறுதே. காரணமாகத்தான் சொல்றேன். அந்த இடிபாடுகளில் சிக்கிக்கொண்டு பரசு அவஸ்தைப்படுகிறான்.''

''என்னது? உங்கள் நண்பர் பரசுவா? மைதிலியோட கணவர் பரசுவா?''

''அவனேதான். போகும்போதே மைதிலியையும் அழைத்துக்கொண்டு அங்கே செல்கிறோம்.''

''நல்ல வேளை! நீங்கள் நண்பரோடு பேசறதுக்கு அந்த நேரத்துக்குப் போகாமல் இருந்தீங்களே!'' தாலியைக் கண்களில் ஒற்றிக்கொண்டு மௌனமாய்ப் பிரார்த்தித்துக் கண்களை மூடிக்கொண்டாள்.

''ஆனாலும் நீ ரொம்பச் சுயநலமி விமலா! பரசுவுக்காக இல்லாவிட்டாலும், உன் சிநேகிதி மைதிலிக்காகவாவது நீ பதறவில்லையே! என்னைப் பற்றிய பயம் மட்டுந்தான் உனக்கு. நானும் ஆபீஸ் போனதும் உன்னைப் போலவே ஸ்டவ் வெடித்து விமலாவுக்கு ஏதேனும் ஆகிட்டதோ, திருடன் நுழைந்து விமலாவைக் கத்தியால் குத்தி விட்டானோ என்றெல்லாம் அஞ்சலாமே: ஒரு தன்

னம்பிக்கை, மனோதைரியம் வேண்டாம்? நடப்பது நடந்தே திரும் என்ற தெய்வ நம்பிக்கையும் உன்னிடம் இல்லை, பார்: என்னை வறுத்து எடுத்து விடுகிறாய்.''

விமலா தன் மொழிகளைச் செவிமடுத்தாளா, இன்னும் பிரார்த்தனையிலேயே இருக்கிறாளா என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

மைதிலி பரசுவைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் சட்டெனக் கதவைப் பூட்டிக்கொண்டு வந்து காரில் ஏறினாள். ''எப்படியிருக்கே விமலா?'' என்று ஒரு சின்னச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''ரொம்ப தேங்க்ஸ் அண்ணா! அவருக்கு உயிருக்கு ஆபத்தில்லையே?'' என்று கேட்டாள்..

''இல்லை; உடம்பு தேற நாளாகலாம்.''

மைதிலி மௌனமானாள்.

விமலாவுக்கு அவள் செய்கைகள், மௌனம் யாவும் ஆச்சரியத்தைத் தந்தன. எப்படி இவளால் பதற்றப்படாமல் கண்ணீர் விடாமல் இருக்க முடிகிறது.

வாய்விட்டே கேட்டுவிட்டாள்

''அழுதாலும், கண்ணீர் விட்டாலும், நடந்த நிகழ்ச்சி மாறிவிடப் போகிறதா? இனி நடக்க வேண்டியதைத்தானே யோசிக்கவேண்டும்?''

''பணத்துக்காகப் பார்க்க வேண்டாம். பரசுவை நர்ஸிங் ஹோமில் சேர்த்து விடுவோம்.''

''உங்கள் உதவியை மறக்க மாட்டேன் அண்ணா. நண்பருக்கு நீங்கள் எப்படி உதவ நினைக்கிறீர்களோ அதையே செய்யுங்கள்.''

டாக்சி நின்றதும், மைதிலி நிதானமாக மகாதேவனைத் தொடர்ந்தாள்.

இவள் கத்தி, ஊர்கூட்டி ஆர்ப்பாட்டம் பண்ணுவாள் என்று எதிர்பார்த்த விமலா ஏமாந்து போனாள்.

வயிற்றில் இரும்புக் கம்பிகளையும், கான்கிரீட் இடிபாடுகளையும் தாங்கமுடியாமல் தவித்த பரசு மைதிலியைப் பார்த்துத் தலையசைத்தான்.

''வலிக்கிறதில்லையா?'' வருத்தத்துடன் கண்கலங்கினாள் மைதிலி.

''தைரியமாக இரு. மீட்டு விடுவார்கள்.''

''நான் தைரியமாக இருக்கிறேன். நீங்களும் தைரியத்தை இழந்து விடாதீர்கள்.''

''இங்கே நீ இருந்து ஆகக் கூடியது எதுவும் இல்லை, மைதிலி! மிஸஸ் மகாதேவன், நீங்கள் இருவரும் புறப்படுங்கள். மகாதேவன் வேண்டுமானால் உங்களை வீட்டில் விட்டு விட்டுத் திரும்பி வரட்டும்.''

''நாங்கள் இருவரும் டாக்சியில் சென்று விடுவோம். நீங்கள் இங்கேயே இருங்கள். ஆனால் உங்களுக்குச் சிரமம் அதிகம் அண்ணா!'' என்றாள் மைதிலி.

''அப்படியெல்லாம் இல்லை. ஆனால் ......'' என்றவாறே விமலாவை நோக்கினான் மகாதேவன்.

''நீங்கள் இங்கேயே இருங்கள். நாங்கள் புறப்படறோம். இன்னிக்கு இரவு மைதிலிக்குத் துணையாக அவள் வீட்டிலேயே தங்கிவிட்டு, காலையில் நம் வீட்டுக்குப் போகிறேன்.''

விமலாவின் மொழிகளைக் கேட்கக் கேட்க, இவளா பேசுகிறாள் என்று விந்தை ஏற்பட்டது மகாதேவனுக்கு.

''நீங்க டாக்ஸியிலே வரபோது சொன்னீங்களே, அதனாலேதான் என் மனசு மாறிட்டதுன்னு நெனைக்க வேண்டாம். மைதிலியின் நிதானத்தையும், துயரச் செய்தியை அமைதியாக ஏற்ற விதத்தையும், பதற்றமின்றிக் கணவனுக்குத் தைரியம் கூறியதையும் கண்டு நான் அசந்து போனேன். இந்த நிலையிலும் உங்கள் நண்பர் பரசு மனைவியைத் தைரியமாக இருக்கும்படி தேற்றுவதைப் பார்த்ததுந்தான், நான் தைரியம் இல்லாமல் ஒவ்வொருநாளும் உங்களை அலைக்கழிச்சதை நெனைச்சு வெட்கப்பட்டேன். எனக்கு இப்போதான் என்னைச் சுற்றிய உலகம் புரிகிறது.''

தனது இத்தனை நாளைய அறியாமை விலகினாற் போல், மெல்ல மெல்ல விமலா, மாறிய மனத்தை விண்டுரைத்தபோது, மகாதேவனின் கண்கள் இரண்டு அன்பு மலர்கள் கனிந்து அவளைச் சரணடைந்தன. அவளிடம் படர்ந்த நாணப் புன்னகை, அவளுடைய பொன்னகைகளை எல்லாம் தூக்கியடித்து விட்டு முகமெல்லாம் ஒளிர்ந்தது. ❋

டான்டெக்ஸ்® எகானமி



சிறப்புத்தரம்...
உங்களுக்கு ஏற்ற விலையில்

வகைவகையான
வண்ணங்களில்.

tt தயாரிப்பு

Imageads M-1797 Tam

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Imageads M-1807 Tam

அப்பு மேலே ஆணை

எஸ் ஏ கே

"அப்புக்குட்டி, அப்புக் கண்ணு! நீ எங்கேடா இருக்கே?" என்று அம்மா யானை கூப்பிடும் போதெல்லாம் அப்பு யானைக்குட்டிக்கு ஆத்திரம் பொங்கும்.

அப்புவிடம் ஏதாவது வேலை ஆக வேண்டுமானால் அம்மா இப்படித்தான் செல்லம் கொஞ்சுவாள். இந்த அம்மாவுக்கு வேறு என்னதான் வேலை?

அம்மாவுக்கு ஏற்ற அப்பா! வீட்டிலே வயசு வந்த பிள்ளை ஒன்று இருக்கிறதே, அவனுக்கும் வேணும் என்கிறதை எல்லாம் வாங்கித் தருவோம் என்ற எண்ணமே கிடையாது.

"அம்மா கறிவேப்பிலைத் தழை கேட்டாளே; கொண்டு போய்க் கொடுத்தியா? விளாங்காய் கேட்டாளே, பச்சடி வைக்க. பறிச்சுக் கொண்டு வந்தாயா? பக்கத்துத் தோப்பிலே குண்டு மாம்பழம் பழுத்துச் சொரிகிறதே; வெறுமே வாசனை பிடிச்சுண்டு நின்னால் ஆச்சா? போக வர ஒரொரு பிடி அள்ளினால்தான் சமர்த்து. நம்ம வீட்டுப் பிள்ளை எதுக்கும் லாயக்கு இல்லாத மக்கு .. இம்.. இப்!" என்றாள் சீதா. இதே மாதிரி எப்போதும் அங்கலாய்ப்பது அவள் வழக்க.

அப்பு யானைக்குட்டிக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. போன வருஷக் கடைசியில் புதுதில்லியில் ஆசிய விளையாட்டுக்கள் எல்லாம் நடந்தபோது, 'அப்பு! அப்பு!' என்று ஊர் உலகம் எல்லாம் கொண்டாடிற்று.

அப்பு மார்க் சட்டை, அப்பு மார்க் பனியன், அப்பு மார்க் நிக்கர்! அப்பப்பா! அவ்வளவோடு போச்சா?

அப்பு மார்க் ஸ்வீட்டுகள், பிஸ்கோத்துகள்; சோடா, கலர் தினுசுகள். இந்த வருஷமோ எல்லாம் நேர் எதிரிடையாக இருந்தன. எங்கும் ஒரே வறட்சி, வறுமை, பஞ்சப்பாட்டு.

அப்பு யானை இப்படி மனம் போன போக்கில் சிந்தித்தபடி, கால் போன போக்கில் நடந்தது.

"என்ன அப்பு! ஆளையே காணுமே! ரொம்ப இளைச் சுட்டியே?" என்று கேட்டது எதிரே வந்த அம்முக்குட்டி யானை.

"நான் இளைச்சா என்ன? எனக்கும் சேர்த்துத்தான் நீ ரெண்டு சுத்துப் பருத்துட்டியே! கொஞ்சம் தீனியா திங்கறே?" என்றது அப்பு.

"கண் போடாதே!"

அம்முக்குட்டி யானை அப்புவின் சொந்த மாமாவுக்கு ஒரே செல்லக் குட்டி.

"ஆமா, எப்பவுமே நான் கொஞ்சம் குண்டுன்னு! உனக்குக் கேலிதான். இருக்கட்டும். ஒரு நாள் இல்லேன்னால் இன்னொரு நாள் நீயும் என்னைப் போல ரெண்டு சுத்துப் பருக்கத்தான் போறே!" என்றது அம்முக்குட்டி.

"அது கிடக்கட்டும். இப்போ எங்கே கெளம்பினே நீ?" என்று கேட்டது அப்பு யானை.

"அதுவா? அது ஒரு ரகசியம். வெளியே டாம் டாம் போடக் கூடாதுன்னு அப்பா, அதாவது உன்னோட மாமா, சொல்லியிருக்கார்."

"ஐயே! என் ஆண்டு நிறைவுக்குத் தங்கத்திலே அரை ஞாண் கொடி பண்ணிப் போடாத இவரெல்லாம் ஒரு மாமா! பேசறியே!" எனறு சீறிற்று அப்பு.

"அதென்ன அப்பு, அப்படிச் சொல்லிட்டே? போன வருஷம் நீ ஏஷியாடுக்கு டில்லி புறப்படும்போது, உனக்குத் தங்கத்திலே மைனர் செயின் போட வந்தாரே, நீதான் இதெல்லாம் போட்டுக்கறதில்லேன்னு மறுத்திட்டியே!" எனறு பதிலுக்குச் சீறிற்று அம்மு.

"ஆமாம்! நானும் என் மருமானுக்குச் செயின் பண்ணிப் போட்டேன்னு பேர் பண்ணினார் மாமா. வெகு மெல்லிசா என் கழுத்துக்குப் போதும் போதாமல் ஒரு சங்கிலி. விரலால் தொட்டாலே கண்ணி கண்ணியா அறுந்துடும் போல இருந்தது. அப்புறம் தொட்டவர் மேலே பழி வேண்டாம்னுதான், சங்கிலியும் வேண்டாம் பிங்கிலியும் வேண்டாம்னு மறுத்துட்டேன். இதெல்லாம் சைக்கிள் செயின் சைஸிலே பண்ணணும்."

"சும்மா உங்க மாமாவை ஏசாதே அப்பு. அவர் உன் மேலே எவ்வளவு ஆசை வைச்சிருக்கார், தெரியுமா? இதோ பார், இந்தத் தீபாவளிக்குப் புதிசாப் பட்டாஸ் பிஸினஸ் ஆரம்பிச்சிருக்கார். இதுதான் லைசென்ஸ். படக் கடைக்குக் கொண்டு போய்க் கண்ணாடி போட்டுக் கொண்டு வரத்தான் கிளம்பினேன்" என்று பெரிய காகிதச் சுருள் ஒன்றை எடுத்து நீட்டியது அம்மு.

சிறுவர் பகுதி

அப்பு சுருளைப் பிரித்துப் பார்த்தது. அவ்வளவுதான். அந்தக் காடே கிடுகிடாய்க்கும்படி ஒரு பிளிறல் பிளிறிற்று.

"என்ன நினைச்சுக்கிட்டிருக்கார் இந்த மாமா? எதுக்கெடுத்தாலும் என் பேர் ஒண்ணுதான் அகப்பட்டதா? நான் என்ன கிள்ளுக் கீரையா? அப்பு மார்க் பட்டாஸாம், வெடியாம், வாணமாம்! மத்தவங்க என் மனசு தெரியாம என்னை நோக அடிக்கிறாங்கன்னா சொந்த மாமா கூடவா இப்படி நடந்துக்கணும்?"

அப்பு போட்ட இரைச்சலைப் பார்த்து அம்மு பாவம் நடுநடுங்கி விட்டது! 'அப்பு மார்க் என்றால் ஊர் உலக மெல்லாம் பிரபலம் ஆச்சே; அப்பாவுக்குத் தொழிலிலே நெறைய லாபம் வந்தால், எல்லாம் இந்த அம்முவுக்கும் அப்புவுக்குந்தானே? ஏன் இது ம டையிலே ஏறமாட்டேன் என்கிறது?'

''சரி அப்பு! அந்த லைசென்ஸ் தாளைக் குடு. மழை வரும்போல இருக்கு. நான் உடனே போய் அதுக்குக் கண்ணாடி ஃபிரேம் போட்டுண்டு வீடு திரும்பணும்'' என்று சிணுங்கிற்று அம்முக்குட்டி.

''அதெல்லாம் லைசென்ஸ் என் கிட்டேயே இருக்கட்டும். நானே நல்ல ஃபிரேமாப் போட்டுண்டு வர்றேன்னு மாமா கிட்டே சொல்லு. இப்போ நீ என்னோடு வாயாடாமே நேரே உங்க வீட்டுக்குப் போ. பாக்கியெல்லாம் நான் பார்த்துக்கறேன்'' என்று அதட்டியது அப்புக்குட்டி.

'அப்பு யானை பொல்லாதது ஆச்சே! பட்டாஸ் லைசென்ஸை அதன் கையிலேயே விட்டுட்டுப் போகிறோமே! ஆதிமூலமே, அப்பு அதை நல்லபடியாக ஃபிரேம் போட்டு வரவேணும்,' என்று வேண்டிக்கொண்டு அம்முக்குட்டி வீட்டுக்குப் போயிற்று.

வாசல்படி ஏறும்போதே மாமா பிடித்துக் கொண்டார்.

''எங்கேடி லைசென்ஸ்? ஃபிரேம் போட்டுக்கொண்டு வா என்றேனே; வெறும் கையை வீசிண்டு சாவகாசமாய் வரியே!''

''இல்லே அப்பா, வழியிலேயே நம்ம அப்புவைப் பார்த்தேன். அதுதான் என் கையில் இருந்த லைசென்ஸ் காகிதத்தை வாங்கிப் பார்த்தது. 'மழை வரும்போல இருக்கு. நானே ஃபிரேம் போட்டுண்டு வர்ரேன். நீ நேரே வீட்டுக்குப் போ' என்றது. சித்தே பொறுத்து அப்படியே எடுத்துண்டு வரும்'' என்றது அம்மு.

''அப்பு கையிலேயா லைசென்ஸைக் குடுத்தே? அவன் ஆயிரத்தெட்டான் ஆச்சே! அவனுக்குப் போனால் போன இடம், வந்தால் வந்த இடம். நல்ல படியாய் அந்தப் பிள்ளை லைசென்ஸைக் கொண்டு வருகிற மட்டும் வயித்தலே நெருப்புத்தான்.'' மாமா யானை அங்கலாய்த்தது.

மாமி யானை இடைமறித்தது.

''எப்போ பார்த்தாலும் அந்தப் பிள்ளையாண்டானைக் கரித்துக் கொட்டறதே உங்க தொழிலாப் போச்சு. நாளைக்கு நமக்கும் நம்ம அம்முக்குட்டிக்கும் அவனை விட்டா வேறு யாரு?''

''ஆமாமா. நம்ம அம்முக்குட்டியை அப்புவுக்குக் கட்டி வச்சால் வேறே வினையே வேண்டாம். யானை தன் தலையிலே தானே புழுதியை வாரிப் போட்டுக்குமாம். அந்தக் கதைதான்!''

''சும்மா நிறுத்துங்க அப்பா! அப்புவுக்குத் தெரியாமல், அவன் பேரை உபயோகப்படுத்திப் பட்டாஸ் வியாபாரம் பண்றீங்களே, அது மட்டும் நியாயமா? கேட்கிறேன்'' என்று அம்முக்குட்டியும் இன்னொரு பக்கம் கொக்கி போட்டது.

''அம்மாவும் பொண்ணும் என்னிக்கும் ஒரு கட்சி தானே? எப்படியோ உருப்படாமல் போங்கள்!'' என்றது மாமா யானை.

''சாபம் விடறீங்களா?'' என்று கேட்டுக்கொண்டே அப்போது அப்பு யானை உள்ளே நுழைந்தது. நெற்றியிலே செவேலென்று 'ஏஷியாட்' பொட்டு. அதன் கையிலே பட்டாஸ் வியாபாரத்துக்கான லைசென்ஸ் தாள் சட்டம் போட்டுத் தயாராய் இருந்தது.



''ஆகா! அப்புன்னா அப்புதான்! மட்டை என்று சொல்வதற்குள் மரத்தையே பேர்த்துக்கொண்டு வருவானே!'' என்று பாராட்டிற்று மாமி யானை.

''வாடா ராஜா! அந்த லைசென்ஸ் படத்தைச் சாமி அலமாரியிலே வச்சுச் சந்தனம் குங்குமம் இடு. நாலு பூவைச் சாத்திக் கர்ப்பூர ஆரத்தி காண்பிப்போம்'' என்றது மாமா யானை.

''அதுக்கு முந்தி என்னோட விவகாரத்தை நீங்க தீர்த்தாகணும், தெரியுமா?'' என்றது அப்பு யானை.

''உனக்கும் எனக்கும் என்னடா விவகாரம்? பெரிய வார்த்தை எல்லாம் போடறியே! பலகாரம் வேணும்னாக் கேள், கூடை கூடையாத் தர்றேன்'' என்றது மாமா யானை.

''உங்க ஊசப் பலகாரம் இங்கே யாருக்கு வேணும்? ஏன் உபயோகமத்த உங்க பட்டாசுக்கு எல்லாம் என் பேரைப் போட்டு வியாபாரம் பண்ணறீங்க. உகந்த சரக்குக்கு என் பேரை வச்சாலும் ஒழியட்டும்னு விடலாம்'' என்றது அப்பு யானை.

''டேய், டேய், என்னைப் பத்தி என்ன வேணாலும் சொல்லு. என் சரக்கைப் பத்தி மட்டமாப் பேசாதே! வெளி நாட்டுக்கெல்லாம் ஏத்துமதி பண்ண ஆர்டர் வாங்கியிருக்கேன், தெரியுமா?''

''நீங்கதான் பெரிய தில்லுமுல்லுக்காரர் ஆச்சே! எந்தப் பழி பாவத்துக்கும் அஞ்சமாட்டீங்க. கல்லையும் மண்ணையும் ஏத்துமதி பண்ணி, மத்த நல்ல வியாபாரிங்க பேரையும் கெடுப்பீங்க.'' மாமி யானையும் பிடித்துக் கொண்டது.

''அடே அப்பு. நான் திட்டத் திட்டத் திண்டுக்கல்லு, குட்டக்குட்டக் குண்டுக்கல்லுன்னு இருக்கறவன்தான். நான் இப்போ சுத்தமாத் திருந்திட்டேன். என் அருமை அம்முக்குட்டி மேலே ஆணை! நான் கெடங்கு நெறையக் குவிச்சு வைச்சிருக்கறது எல்லாம் அசல் சரக்கு. அப்பழுக்குச் சொல்ல முடியாது.''

''உங்க அம்முக்குட்டி மேல ஆணை வச்சாப் போதாது. அவளுக்கு ஆயிரம் செல்லப் பேரு இருக்கும். அப்பு மேலே ஆணைன்னு சொல்லுங்க!''

''அட பாவி! விட்டேன் சொல்லு, விட்டேன் சொல்லு. உங்க தாய் தகப்பனுக்கு நீ ஒரே புள்ளை'' என்றது மாமி யானை.

அப்பு யானை முரண்டிற்று.

''மாமா, இதப் பாருங்க, என் கையிலே உங்க பட்டாஸ் கடை லைசென்ஸ் இருக்கு. அதை அப்படியே தூக்கிப் பாழுங் கெணத்திலே போட்டுடுவேன். உடனே உங்க கெட்டங்கிலே இருக்கிற பட்டாசுகளையும் வாண வெடிகளையும் மரியாதையா எங்கிட்ட ஒப்படைச்சிடுங்க, ஆமாம்.''

''சரிடா அப்பு! கடையை உன் பேருக்கே எழுதி வக்கறேன்; நீயே எல்லாத்தையும் நல்லபடியா வித்துக்கோ'' என்றது மாமா யானை.

''நான் விற்பேன்; வெறுமே வாரி விடுவேன், அது என் இஷ்டம். ஏன் என்கிட்டே முன் அனுமதி கேட்காமல் அப்பு மார்க் பட்டாஸ், வாணம், வெடின்னு போட்டீங்க?''

''தப்புடா அப்பு, தப்பு, தப்பு! இந்தக் காலத்துப் பிள்ளைகளே தனி ரகம். முன்னேயும் போக விடமாட்டாங்க; பின்னேயும் போக விடமாட்டாங்க'' என்று அலுத்துக் கொண்டது மாமா யானை.

''அந்தப் பிள்ளையாண்டான் கேட்கிறது நியாயந் தானே? எல்லா வாண வெடிகளையும் மத்தாப்புகளையும் பட்டாசு வகைகளையும் உங்க மருமான்கிட்டே ஒப்படையுங்க.'' மாமி யானை அதட்டியது.

''நீங்க பேசாம இருங்க மாமி. எல்லாத்தையும் மரியாதையா அவர் என்கிட்டே ஒப்படைக்கலேன்னு என்ன ஆகும் தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு அப்பு யானை ஒரு பிளிறல் பிளிற்று.

அவ்வளவுதான். தொடர்ந்தாற்போல் அடுத்தடுத்து நாலு திசைகளிலிருந்தும் ஏராளமான யானைக் குட்டிகளின் பிளிறல்கள் கிளம்பின.

அப்போதுதான் மாமா யானை அசைந்தது. அப்புவுக்கு வெட்டின குழியிலே அதுவே விழுந்துவிட்டது. ஆனாலும் விடாமல், ''கெடங்குச் சாவியை எங்கேயோ மறந்து வச்சுட்டேனே! நாளைக்கு வாயேன். சாவகாசமாய் எல்லாத்தையும் வாரிண்டு போகலாம்'' என்றது மாமா யானை.

''சாவி எல்லாம் அம்மா இடுப்பிலே பத்திரமா இருக்கு அப்பா. நான் கொண்டு வந்து குடுக்கறேன்'' என்றது அம்முக்குட்டி.

மாமா யானைக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

''இந்த அப்பு மேல் ஆணை! இனிமேல் இந்த மாதிரி அக்குறும்பு எல்லாம் பண்ண மாட்டீங்களே? சொல்லுங்க மாமா! இல்லே, ஒரு வத்திக் குச்சியை உரசிப் போட்டுட்டு ஓடட்டுமா?'' என்று வசமாய் வளைத்துக் கொண்டது அப்பு.

மாமா யானை மிரள மிரள விழித்தது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், ''இனிமே எல்லாம் நீ எப்படிச் சொல்றியோ அப்படித்தான்டா, அப்பு'' சரணாகதி அடைந்தது.

அப்புறம் கேட்பானேன்? அப்பு காட்டிலே அமோக மழை!

அந்தக் காடே அதிர அப்பு மார்க் பட்டாசும் மத்தாப்பும் வாண வெடிகளும் விட்டு, ''நம்ம அப்புவா? எம்டன் ஆச்சே!'' என்று மற்ற யானைக்குட்டிகள் எல்லாம் அப்புவைத் தலைக்கு மேல் தூக்கித் தட்டாமாலை ஆடின.

அம்முக்குட்டிக்கும் ஆனந்தம் அள்ளிக்கொண்டு போயிற்று. அப்புவின் பிரதாபம் கேட்கக் கேட்க அதன் முறக் காதுகள் இரண்டும் அகல விரிந்தன. ✳

மதுரையிலே திருவிழா

லெமன்



ஆட்டக் குதிரை வருகுது;
அழகர் குதிரை வருகுது;
நாட்டும் புகழ்ச் சோலைமலை
நாதர் குதிரை வருகுது.
துள்ளித் துள்ளி வருகுது;
தூள் பரப்பி வருகுது;
கள்ளழகர் ஏறும் பரி
கால் கிளப்பி வருகுது.
மதுரையிலே திருவிழா;
மங்கை மீனாள் மணவிழா;
புது வெள்ளம் வைகையிலே
புரள்வது போல் பெருவிழா;
கல்யாணச் சீர் செய்நேர்த்தி
கள்ளழகர் கொணர்கிறார்;
உல்லாசமாய்க் குதிரை ஏறி
ஊர் வளப்பம் காண்கிறார்;
அக்கரையில் கள்ளழகர்
ஆற்றில் இறங்கி வருகிறார்;
இக்கரையில் கூடலழகர்
இஷ்டம் போலச் செய்கிறார்.
மீனாட்சி தன் கல்யாணம்
விமரிசையாய் நடக்குது;
காணாத நம் கள்ளழகர்
காதில் சேதி வடிக்குது;
அதே விசையில் குதிரை ஏறி
அழகர் மலைக்குத் திரும்புகிறார்;
மதுரையிலே தங்கை மீனாள்
மனம் நொந்து வெதும்புறாள்;
சொக்கட்டான் ஆடிடவே
சொக்கநாதர் அழைப்பதாய்ப்
பக்கத்திலோர் பச்சைக்கிளி
பகர மீனாள் சிரிக்கிறாள்;

தலை தப்பிக்குமா? முடி பறக்கிறதே!



மந்த 'காலம்'

HEARTY DEEPAVALI GREETINGS

36th year of our dedicated service to the nation

G.E.M

FULFILS ALL YOUR ELECTRICAL NEEDS



GANAPATHY ENGINEERING MANUFACTURERS PRIVATE LIMITED

POST BOX NO. 2006 ● GANAPATHY POST ● COIMBATORE-641006

PHONE: 23024 & 30808 ● TELEX No. 855 - 338 GEM.

—B.P.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



40 வருடங்களுக்கு மேலாக நம்பகமான சேவை

- ★ மானோ பிளாக் பம்பு
- ★ பெல்ட் பம்பு
- ★ டொமெஸ்டிக் பம்பு
- ★ ஆயில் இன்ஜின் பம்பு
- ★ ஜெட் பம்பு
- ★ மோட்டார் பம்பு
- ★ மின்சார மோட்டார்
- ★ கரும்பு ஆலை
- ★ மின்சங்கு (Siren)
- ★ சப்மெர்சிபிள் (Submersible) பம்பு

நீடித்த உழைப்புக்கும், சிறந்த சேவைக்கும் "சுப்பையா" பம்புகளையும், மோட்டார்களையும் வாங்கிப் பயனடையுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

சுப்பையா பவுண்டரி

(ஸ்தாபிதம் 1944)

பாப்பநாயக்கன்பாளையம்

கோயமுத்தூர் - 641 037.

தந்தி: பவுண்டரி" ★ போன்: 22935, 35390

Subbiah Foundry,
Coimbatore 641 037.

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

—B.P.

பாம்பு 1: "உங்க தாத்தா அடிக்கடி புற்றிலே போய் முடங்கிக்கிறரே; என்ன விஷயம்?"

பாம்பு 2: "பாவம்டா, அவருக்குப் புற்று நோய் போல இருக்கு."

அம்மா தேள் (குட்டியிடம்) : ஏன்டா, உனக்குத்தான் கொடுக்கு நல்லா வளர்ந்தாச்சே! இன்னும் எத்தனை நாளைக்குப் புள்ளைப் பூச்சியா இருப்பே? போய் ரெண்டு பேரைக் கொட்டிட்டு வா!

எண்ணிப்பார்!

'3025' என்ற எண் கொண்ட ஓர் அட்டை வில்லையை வைத்து ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது, அந்த வில்லை 30 25 என்று இரு பகுதிகளாகக் கிழிந்து போய்விட்டது. இவ்விதம் இரு வேறு எண்கள் கொண்ட துண்டுகளைச் சற்று நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தபோது இதில் ஒரு புதிர் அடங்கியிருப்பதாகத் தோன்றியது. அது என்ன தெரியுமா?

ஒரு துண்டில் உள்ள 30, இதனுடன் மற்றொரு துண்டில் உள்ள 25 இரண்டையும் கூட்டுங்கள். 55 வருகிறதல்லவா? 55 இன் வர்க்கம் என்ன? 55 × 55 = 3025; அதாவது வில்லையில் முதலில் இருந்த முழு எண்.

இதேபோல நான்கு ஸ்தானங்களில் உள்ள வேறோர் எண்ணை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதன் முன்னிரண்டு எண்களுடன் பின்னிரண்டு எண்களைக் கூட்டி, வருகிற தொகையின் வர்க்கமானது நீங்கள் கண்டுபிடித்த எண்ணாகவே இருக்கும்.

விடை (9801)

Trichy Steel Rolling Mills Limited

Use TSRM TISCON/TORSTEEL (Cold Twisted Deformed Bars)
Tested to IS: 1786 for your Building Constructions
and save 40% in Steel Costs

For your requirements please contact your nearest TSRM Dealers or write to:
The Commercial Manager
TRICHY STEEL ROLLING MILLS LIMITED
Senthannipuram, Tiruchirapalli-620 004
Tamilnadu (India)

Phone: 25301 (4 lines) Grams: ROLMILL

Manufacturers of:
Tiscon/Torsteel, Mild Steel Reinforcing Round Bars, M S Flats, M S Angles, M S Squares, Gate Channels, Special Steel Rounds and Steel Castings

Selling Agents for:
'LAKSHMI' WELDED WIRE MESH

Registered Office & Madurai Sales Office:
290, West Masi Street. MADURAI-625 001
Phone: 24385

—R. Nagasundaram

எண்ணங்களைப் பேசும் வண்ணக்கலை
இல்லங்களில் வீசும் மகிழ்ச்சி அலை
ஏஷியன் பெயிண்ட்ஸ்
Adroit-246-TAM

தீபாவளி
வாழ்த்துக்கள்
MAFATLAL
INDUSTRIES
மபத்லால்
இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
MAFATLAL
FINE
தி மபத்லால் ஃபைன்
ஸ்பின். அண்ட் மேன்யு. க. லி.

முகங்கள், மனங்கள்!



கோமளா வரதன்

புதியதாக நாமகரணம் செய்யப் பெற்றாலும் அந்தப் பழைய அரசு மருத்துவமனை வழக்கம் போல் அவலமாகவே காட்சியளிக்கிறது. புதிய வர்ணம் அடிப்பதற்காக நாலு நாளாய்ச் சுரண்டிப் போட்ட பழைய சுண்ணாம்புப் புழுதி பறந்து கொண்டிருக்கிறது. அதை மிதித்து நடந்து பாழாகிய தரையும், வந்து போனவர்கள் வீசிய குப்பை செத்தையும், அவற்றில் மேய்ந்து கொண்டிருந்த பூச்சி இனங்களும், நோயாளிக் கும்பலும், பாத்ரூம்களிலிருந்து குப்குப்பென்று வீசிய வாடையும்: அப்பப்பா, மருத்துவமனையாகவா இருக்கிறது? நரகம்!

மூக்கைப் பிடித்துக் கொண்டு விரைகிறேன். அம்பு அப்படியே போட்டது போட்டபடியே படுத்திருக்கிறாள். பதினாறு வயது இளமை வாடித் துவண்டிருக்கிறது. பார்க்கையில் வயிற்றில் பள்ளம் பறிந்து ஜில்லென்று ஊறுகிறது; பயம்!

இன்று கட்டாயம் ராமராஜுவிடம் எப்படியாவது விஷயத்தைக் காதில் போட்டுவிட வேண்டும். அவன் ஒரு வார்த்தை சொன்னால் இங்கே கேட்பார்கள். இப்படி அம்போ வென்று விடாமல் கவனித்து வைத்தியம் செய்வார்கள். எப்படியாவது ராஜுவிடம் சொல்லிவிடவேண்டும்.

குலாடியின் முகந்தான் கிங்கரன் போல் கண்முன்னால் வருகிறது. அவன்தான் ராஜுவுக்குக் கையாள், மெய்யாள் எல்லாம். அனேக சமயங்களில் பொய்யாள். ராஜு வீட்டிலிருந்தாலும் வேண்டாத 'விஸிட்டர்'களுக்கு 'இல்லை'யென்று சொல்லித் திருப்பி அனுப்புவதிலிருந்து சிக்கலான எந்தச் சமாசாரத்திலும் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கும் சாமர்த்தியமான நெளிவு சுளிவுகளில் கைதேர்ந்தவன். அந்த வீட்டிலேயே மூன்று வருடமாக வேலை பார்க்கிறேன். கடந்த நாலு நாளாக இந்த அம்புவைப் பற்றி, ஆஸ்பத்திரியைப் பற்றி ஒரு வார்த்தை ராஜுவின் காதில் போடவிடாமல் அதிகார நந்தியாட்டம் குறுக்கே நிற்கிறானே!

"ஐயாவை இப்போ பார்க்க முடியாது. சமயம் பார்த்து நானே சொல்றேன்" என்பதிலிருந்து, "ஆமாம்' பொண்ணை ஆஸ்பத்திரியிலே சேத்திருக்கறதுக்கு அவரு என்ன பண்ணுவாரு? அப்பிடியே அவர் சொன்னாலும் டாக்டர் திருப்பிக் கேக்க மாட்டாரா. 'ஏய்யா, எங்க வேலையைப் பார்க்க எங்களுக்குத் தெரியாதா? இதுலே கூடவா நீங்க அரசியல்வாதிங்க தலையிடணும்'னு? என்ன, சொல்றது தெரியுதா, பண்டிட்ஜீ?" என்பதுவரை ஏதாவது ஒன்றை வகையாய் அடுக்கி என்னைத் தடுத்து விடுகிறான். நான் போட்டிருக்கும் இந்தப் பூணூலுக்காகத்தான் அந்தப் 'பண்டிட்'ஜீயே தவிர, எனக்கு எந்தவித மரியாதைக்காகவும் இல்லை. பஞ்சாபியிலேயும் வாட்ட சாட்டமான பஞ்சாபி. முழு நீளம் மூஞ்சி. நினைத்தால் என்னை அலாக்காகத் தூக்கி அப்பளமாக அடித்து விடலாம். எங்கிருந்துதான் ராஜு இவனைப் பிடித்தாரோ?

இங்கே, இந்த ஜனங்கள் மத்தியில் பழந்தின்று கொட்டை போட வேண்டுமானால் இந்தமாதிரி குலாடிகளும் அவசியம்போலிருக்கிறது. அவனையும் மீறி ராஜுவின் காதில் எப்படியாவது விஷயத்தைப் போட்டுவிட வேண்டும். பக்கத்திலுள்ள பணியாள் விடுதியில் இருக்கும் பூரன் கூடச் சொன்னானே. "பண்டிட்ஜி, ஏன் யோசிக்கறே? உங்க ஸாப் கிட்ட சொல்லி, பெரிய டாக்டர்கிட்ட பேசச் சொல்லு. இங்கெல்லாம் சிபாரிசுதான் பேசும். வேறே ஒண்ணும் செல்லாது" என்று.

நிஜந்தான். நானும் நாலு நாளாய்ப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஏன் பாவி என்று கேட்பாரில்லை, அம்புவை. எப்பொழுதோ ஒரு நர்ஸ் வந்து இரண்டு மாத்திரையை வாயில் போட்டுத் தண்ணீரைக் கொடுத்துவிட்டுப் போகிறாள். கேட்டால், "வலி குறையும்" என்கிறாள். இரண்டு மூன்று நாள் அம்பு சுருண்டு சுருண்டு படுத்துக் கொண்டது. வயிற்று வலி, வயிற்று வலியென்று புழுப்போல் துடித்தது எல்லாம் பார்க்கச் சகிக்காமல் பூரனுடைய உதவியோடு ஆட்டோ ரிக்‌ஷாவில் இங்கே கொண்டு வந்து காட்டியபோது, டாக்டர்களுக்கே ஒன்றும் பிடிபடவில்லை போலிருக்கிறது. "சேர்த்துவிட்டுப் போங்க. ஆப்சர்வேஷனில் இருக்கட்டும்" என்றார்கள். மறுநாள், "பெரிய டாக்டர் வந்து பார்க்க வேண்டும்" என்றார்கள். அப்புறம், "சோதனையெல்லாம் செய்ய வேண்டும்" என்றார்கள். "ரிஸல்டைப் பார்த்தே வைத்தியம் நிர்ணயம் பண்ண வேண்டும்" என்று நேற்றுச் சொன்னார்கள். எல்லாம் எந்த மட்டில் இருக்கிறது, டாக்டர் வந்தாரா, சோதனை பண்ணி முடிவு வந்ததா என்று தாக்கல் மோக்கலா இல்லாமல் நான்கு நாள் ஓடி விட்டன. குழந்தையோ கண்ணையே திறக்காமல் போட்டது போட்டபடியே கிடக்கிறாள். ஒழுங்காய் ஒரு படுக்கை இல்லை. வார்டில் இடம் இல்லையென்று சொல்லி, வெளியே வராந்தாவில் வசதி செய்து விட்டிருக்கிறார்கள். பட்டப் பகலிலேயே சுண்டெலி காலை இடறிக்கொண்டு மேலே ஏறி ஓடுகிறது.

பூதாகாரமாய் மேட்ரன் அசைந்தாடிக் கொண்டு வருகிறாள். சட்டென்று எழுந்து அவளைக் கேட்கிறேன்: "மருந்தெல்லாம் ஒண்ணும் கொடுக்கலியாமே? குழந்தை கண்ணைத் தொறக்காம படுத்துண்டிருக்காளே!"

"ஆஸ்பத்திரிப் படியை மிதிச்ச உடனே 'டக்'குனு குணமாயிடும்னு எதிர்பார்த்தீங்களா? பார்த்துத்தான் மருந்து குடுப்போம்." வெடுக்கென்று பொரிந்துவிட்டு அவள் போகிறாள்.

"ம்..ம் சார் பஜே விஸிட்டிங் டைம்." பின்னாலேயே வந்து எச்சரிக்கிறாள் ஆயா.

அம்புவின் தலையை வருடிக் கொடுத்துவிட்டு, போர்வையை இழுத்துச் சரிசெய்துவிட்டுக் கிளம்புகிறேன். வீட்டிலும் ஏகப்பட்ட வேலை. ஓயாத விருந்தாளிகள்.

வீட்டில் நுழைந்ததும் முதலில் கிழவர்தாம் கண்ணில் படுகிறார். ராமராஜுவின் அப்பா தசரதராஜ நாயுடு. பின்னை அரசியலில் புகுந்து அட்டகாசமாய் விளையாடுவதற்குத் தோதாக ஆஸ்தியைப் பெருக்கி வைத்தவர் இவரே. இவரால்தான் நான் டெல்லிக்கு வந்ததும், நேற்றுயில்

நாமம், பூணூல் சகிதம் ப்ரம் ஆசாரம். வேங்கடாசலபதி குலதெய்வம். சுத்த சைவம். பூண்டு, வெங்காயம் கூடச் சமையலில் சேர்க்கக்கூடாது. ஐயர்தாம் சமைக்கவேண்டும் என்று நியதி. அந்த நியதியைக் காப்பாற்றத்தான் ராஜு என்னை இங்கே வரவழைத்திருக்கிறான்.

''என்ன, ஐயரே, ஆஸ்பத்திரிலேர்ந்து வர்றியா? போ, குளிச்சுட்டு அப்புறமா எனக்குச் சாப்பாடு எடுத்து வை'' என்கிறார்.

குழந்தை எப்படியிருக்கிறாள் என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. குளித்துவிட்டு வருகிறேன். சாப்பாடு பரிமாறிக் கொண்டே அவரிடம் சொல்கிறேன்.

''அதான் ஆஸ்பத்திரிக்குப் போற அவசரத்திலே குழம்பைச் சரியாவே கொதிக்க வைக்கலே. போறது'' என்றதோடு நிறுத்தியவர், ஏதோ தோன்றி மறுபடியும் சொல்கிறார். ''சின்ன வயசிலே உடம்பிலே இல்லாத சக்தியா? கவலைப்படாதே, எல்லாம் சரியாப் போயிடும். நானும் அவன் கிட்டச் சொல்லி, சொல்லச் சொல்றேன். ஒரு ரெண்டு நாள் பொறு. என்னவோ அவனை மந்திரியாப் போடறதாப் பேச்சு மும்முரமா இருக்காம். அதுக்குத்தான் தலைவருங்க, பார்ட்டி ஆளுங்க, அது இதுன்னு பம்பரமா அலைஞ்சுட்டிருக்கான். பணம் பாட்டுக்குச் செலவழிஞ்சிக்கிட்டிருக்கு. இவனை மட்டும் இப்ப மந்திரியாக்கிட்டாங்க, கல்யாண உற்சவம் பண்ணி வெக்கறேண்டாப்பானு நான் திருப்பதிக்கு வேண்டிக்கிட்டிருக்கேன். நீயும் வெள்ளியிலே வவுறு வாங்கிப் போடறதா வேண்டிக்கோ.''

பரிமாறிய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு உள்ளே போகிறேன்.

எசமானியம்மாள், ராஜுவின் மனைவி கேட்டுக்கொண்டே வந்து விட்டாள் போலிருக்கிறது.

''அவரு இப்பத்தானே பொண்ணைப் புதுசாப் பார்க்கறாரு. அதான் ஏன் ஐயரே, பிள்ளைங்கன்னு இருந்தா தலைவலி, காய்ச்சல், வவுத்துவலின்னு வராதா? இதுக்கெல்லாமா போயி இப்படி அரண்டு போவாங்க?''

''அவ நெலைமையெ நேரில பார்த்தா, சொல்லமாட்டிங்கம்மா. அநாதையாட்டம் கெடக்கறா. அங்கே ஆஸ்பத்திரியிலே கவனிக்கவே மாட்டேங்கறாங்க. ஏதானும் சேட்டா, சின்னானு விழறா. அதுக்குத்தான் ஐயா கொஞ்சம் சிபாரிசு செஞ்சாரானா..''

மேலே பேசத் தெரியவில்லை. மௌனமாக மேஜையைத் துடைக்கிறேன்.

''மேலும் இப்ப நாம போய் நம்ம வேலையைச் சொல்லிக்கற மாதிரியா இருக்காரு அவரு? எத்தனை பேரு அவரைப் பாக்கறதுக்கு வராங்க? அவரு எத்தனை பேரைப் பாக்கறதுக்குப் போறாரு! பாக்கறீங்க இல்லே, என்ன பரபரப்பிலே இருக்காருன்னு? இப்பப் போயி அவரு கிட்ட வேறே சமாசாரம் பேச முடியுமா? எல்லாத்துக்கும் சமயம் பாக்கவாணும்? அப்படி உங்க பொண்ணை விட்டுடுவமா ஐயரே! ஆப்ஸர்வேஷன்லே தானே வெச்சிருக்காக? எல்லாம் பார்த்து இன்னதுன்னு ஒரு முடிவுக்கு வரட்டும். அதுக்குள்ளே ஐயாவுது சமாசாரமும் தெரிஞ்சுடும். எம்.ஏ. கிட்டயே பேசச் சொல்லலாம்.''

விசுக் விசுக்கென்று கொண்டையும், அதில் செருகிய ஒற்றை ரோஜாப்பூவும், முதலைத் தோல் கைப்பையுமாகப் போகிறாள் அவள்.

இவளால்தானே அம்புவை டெல்லிக்கு வரவழைத்தேன். எந்த வேளையில் வந்தாளோ இப்படி நாதியற்றுக் கிடக்கிறாள் என் கண்மணி. அவளை அப்படிக் காப்பாற்றுவேன், இப்படி வளர்ப்பேன் என்று கையடித்துச் சொன்னேனே, அவள் அம்மா மரணப் படுக்கையில் இருந்தபோது! இப்போது? கிராமத்தில் பாட்டியிடம் இருந்தவரையில் அவள் ராஜாத்தியாகத்தான் இருந்தாள். புத்தி கெட்டுப் போய்ப் போன வருஷம் ஏன் இங்கே வரவழைத்தேன்?

''எனக்கு வயசாயிடுத்து. உன் பொண்ணும் பத்தாவதுமுடிச்சுட்டா. இனிமே உன் பாடு, உன் பொண் பாடு'' என்று ஊரிலிருந்து அம்மா எழுதிவிட்டாள்.

அவளுக்கு ஒரு பையனைப் பார்த்து, கல்யாணத்தை நடத்திவிட்டால் பொறுப்புத் தீர்ந்தது. நானும் டெல்லிக்கு வந்து இரண்டு வருடமாகி விட்டதால் ஊருக்கும் ஒரு நடை போய் வரவேண்டுமென்று இவளிடந்தான் பிரஸ்தாபித்தேன்.

''ஏன் ஐயரே, பொண்ணுக்கு என்ன வயசு?'' என்றாள்.

''பதினஞ்சு ரொம்பிடுத்துன்னு நெனைக்கிறேன்மா.''

''பதினெட்டுக்குக் கீழே பண்ணக் கூடாதுன்னு இப்பச் சட்டம் வந்துடுச்சுன்னு தெரியுமோல்லியோ?''

தலையைச் சொறிந்தேன். ''அம்மாவுக்கு வயசாயிடுத்து.''

''வாஸ்தவந்தான். அதுக்காவ? பேசாம இங்கே வரவழைச்சுடுங்க. வயசு வந்த பொண்ணு வேறே எங்கேயும் இருக்க முடியாது. பாட்டிகிட்டே இல்லேன்னா, இங்கே அப்பா கிட்ட தான் இருக்கணும். எனக்கும் கொஞ்சம் கூடமாட இருக்கும்'' என்று சொன்னவளே இவள்தான்.

ஊரிலேயே இருந்திருந்தால் அவளைத் தலைமேல் தாங்கிக் கவனித்துக் கொண்டிருப்பாள் பாட்டி. பக்கத்துத் தெருவிலேயே டாக்டர். லொட லொடவென்று பேசினாலும் கைராசிக்காரர். நாளுக்கு மூன்று தரம் வந்துபார்த்து மருந்து கொடுத்திருப்பார்.

இரவு சாப்பாட்டின்போது, எதிர் பார்த்தது நடக்கவில்லை. கட்சியின் மேலிடத்திலிருந்து யாரோ வந்திருந்தனர். ராமராஜு அவர்களோ சாப்பிட முடியாமல், பெரியவர் தனியாக முதலில் சாப்பிடும்படி ஆயிற்று. பெரிய ஏமாற்றம் என்னை அழுத்திக் கொண்டிருந்தபோதுதான் எதேச்சையாய் அந்த வாய்ப்புக் கிட்டியது. வழக்கமாய்க் குலாடிதான் இரவில் ராஜுவுக்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பான். இன்று அவனைக் காணோம். இரவு பத்து மணிக்கு அவனை வெளியே அனுப்பியிருக்கிறாராம் ராஜு, என்ன சமாசாரமோ? நான் பாலை எடுத்துக்கொண்டு போனேன். எல்லோரையும் அனுப்பி விட்டுத் தனியாகத்தான் இருந்தார் ராஜு.

சட்டென்று ''நீங்க.... நீங்கதான் பெரிய மனசு பண்ணி அங்கே யாரானும் பெரிய டாக்டரண்டே சொல்லணும். நான் சொல்றேன்னு வாணாம். நீங்களே நேர ஒரு நடை வந்து உங்க கண்ணாலே பாருங்கோ. அங்கே எல்லாம் எப்படி நடக்குறதுன்னு தெரியும்.''

''நானா? நான் என்ன டாக்டரா? பாத்து மருந்து கொடுக்கப் போறேனா?''

''வந்து பாத்தேள்னாத் தெரியும். நீங்களாகவே உடனே சிபாரிசு பண்ணுவேள் குழந்தை.. குழந்தை'' மேலே பேச முடியாமல் குரல் தழுதழுக்கத் திரும்பி விடுகிறேன்.

காலையில் இருப்பே கொள்ளவில்லை. எட்டு மணிக்கெல்லாம் பூரணைக் கூப்பிட்டு, ''பிரெட்டோ பழமோ வாங்கி வைத்து நீ ஒப்பேற்றிக் கொள். நான் போயே ஆகவேண்டும். அம்மாவிடம் சொல்லி விடு'' என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டேன். எசமானியம்மாள் கண்ணிலேயே படவில்லை, உத்தரவு வாங்கிக்கொள்ள.

ஆஸ்பத்திரியில் அம்பு இன்னும் நைந்து போயிருப்பதுபோல் பட்டது. ஓடிப் போய் வார்ட். நர்ஸிடம் சொல்கிறேன்.

''இப்போ டாக்டர் வந்து விடுவார். இன்னிக்குப் பெரிய டாக்டர் கூட வருவாரு'' என்கிறாள் அவள்.

கொஞ்ச நேரமாகிறது. 'சரி, எதுவானாலும் துளிப் பால் கொடுப்பதில் தப்பிருக்காது. இப்படிக் காய்ந்திருக்கிறாளே' என்று அவள் தலையைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, கையோடு கொண்டு போயிருந்த பாலில் ஒரு ஸ்பூனை எடுத்து வாயில் விடுகிறேன். உள்ளே இறங்கவில்லை. மாறாகக் கழுத்தருகில் விசுக்கென்று ஒரு வெட்டு வெட்டுகிறது.

''அம்பு! அம்பு'' என்று நான் போட்ட கூச்சலில் நர்ஸோடு மேட்ரனும் ஓடி வருகிறாள். குனிந்து பார்த்துவிட்டு நர்ஸுக்குக் கட்டளையிடுகிறாள். அவள் ஓடுகிறாள். ஒரு டாக்டரோடு வருகிறாள். அவர் பரிசோதிக்கிறார். ஏதோ உத்தரவிடுகிறார். அடுத்த கணம் அம்புவை ஸ்ட்ரெச்சரில் வாரிப் போட்டு வேறு ஒரு வார்டுக்குக் கொண்டு போகிறார்கள். இன்ஜெக்ஷன் போடுகிறார்கள். க்ளுகோஸ் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

விறுவிறென்று வருபவர் பெரிய டாக்டராகத்தான் இருக்க வேண்டும். நேராக வந்து இமையை விலக்கிப் பார்க்கிறார். உள்ளங் காலில் பிராண்டிப் பார்க்கிறார். இன்னும் என்ன என்னவோ தட்டிக்கொட்டிப் பார்க்கிறார். சள்ளென்று எரிந்து விழுகிறார். ''ஏன் என் கவனத்திற்கு

முன்னமேயே கொண்டு வரவில்லை?'' என்கிறார்.

மென்று விழுங்குகிறார்கள் மற்றவர்கள்.

குனிந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்தவர் எழுந்து நின்று என்னைப் பார்த்தபோதே எனக்குப் புரிந்து போகிறது. மெள்ள அருகில் வந்து என் தோளில் தட்டிக் கொடுக்கிறார். அம்புவுக்கு இனி யார் தயவும் தேவையில்லை: ராஜுவின் சிபாரிசோ, டாக்டரின் மருந்தோ வேண்டாத இடத்துக்குப் போய் விட்டாள். போயே விட்டாள்.

மனமும் உடலும் மரத்து அப்படியே சமைந்து சரிகிறேன். சமைகிறேன். நேரம், காலம் தெரியவில்லை.

எல்லாக் காரியங்களையும் அப்படியே முடித்துவிட்டு, மறு நாள் மத்தியானமாய் ராஜுவின் வீட்டுக்குப் போகிறேன்.

நுழையும்போதே வீட்டில் மாற்றங்கள் தெரிகின்றன. புதியதாய் ஒரு கார், டிரைவர், புதியதாய் சேவகனோ, யாரோ ஒருத்தன் தவிர நாலைந்து பேர் வராந்தா நாற்காலிகளில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தாண்டி, கூடத்துப் பக்கம் மெள்ள எட்டிப் பார்க்கிறேன். பெரிய சோபாவில் நடுநாயகமாய் ராஜுவும் மனைவியும் வீற்றிருக்கின்றனர். மற்றச் சோபா நாற்காலிகளிலெல்லாம் வந்தவர்கள் கொண்டு வந்த செவ்வந்தி மாலைகள், பழங்கள் தட்டுத் தட்டாக. கையையும் முகத்தையும் ஆட்டி ஆட்டிக் கொண்டு உற்சாகமாய் அவள் விவரித்துக் கொண்டிருக்கிறாள்.

''இவராலே நிமிஷம் சும்மாயிருக்க முடியாதே! நேத்திக்குச்

சாயங்காலம் ராஷ்டிர்பதி பவன்லே பதவிப் பிரமாண விழா ஆச்சா? உடனே அந்த 'ஃபயர் ஆக்ஸிடென்ட்' பத்திக் கேள்விப்பட்டு நேரே அங்கே போயிட்டாரு. வீட்டுக்குக் கூட வரல்லே. சில நண்பருங்கள்ளாம் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருந்தாங்க, அதுக்கும் போவல்லேன்னுப் பாத்துக்குங்க. ரோடிலே தார் போடற கூலி ஜனங்களை, ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போனதும் அங்கேயும் போயிட்டுப் பார்த்து விசாரிச்சுட்டு, ராத்திரிதான் ஒரு முட்டாத் திரும்பி வந்தாரு. இளகின மனசுங்க. அதுவும் ஏழைங்களுக்கு ஒரு கஷ்டம்னு...'' சொல்லிக் கொண்டே வந்தவளின் பார்வை தற்செயலாய் என்மேல் விழவும் 'டக்'கென்று பேச்சு நிற்கிறது. மனைவியின் பேச்சை வெகுவாய் ரசித்து 'ம்' கொட்டிக் கொண்டே வந்த ராஜு அவள் நிறுத்தினது ஏனென்று அறியத் திரும்பிப் பார்க்கிறார். எங்கள் பார்வை சந்திக்க அவர் முகம் மாறிப் போகிறது. ஒரே கணந்தான்.

அடுத்த கணம், ''வா, ஐயரே! எப்படியிருக்கா உன் பொண்ணு? அடடே! சமயத்திலே மறந்து போச்சு. இல்லேன்னு நேத்துச் சாயங்காலம் ஆஸ்பத்திரிக்கு வந்தேனே, வந்து பார்த்திருப்பேன் அது கெடக்கட்டும், சொல்லு.. ரிஸல்டெல்லாம் வந்துதா? டாக்டர் என்ன சொல்றாரு, நம்ம பி.ஏ.வை விட்டு ஒரு போன் அடிச்சு விசாரிக்கச் சொல்லட்டா?'' என்றான்.

நான் அயர்ந்து போகிறேன்: 'கொஞ்சமும் தயக்கமில்லாமல் இவனாலே எப்படி இந்த மாதிரி பேச முடிகிறது?

மெள்ளச் சுதாரித்துக் கொண்டு தலையை ஆட்டுகிறேன்: ''தேவையில்லீங்க. உங்க சிபாரிசு தேவைப்படாத இடத்துக்குப் போயிட்டா! அவ.''

''ஐயையோ என்ன சொல்றீங்க ஐயரே?'' என்கிறாள் அவள்.

''என்னது இது ஐயரே? நிசமாவா? எப்போ? எப்படி?''

திடீரென்று வெடித்துக் கொண்டு வருகிறது அழுகை எனக்கு.

''ஐயரே, ஐயரே!'' என்று அவர்கள் கையைப் பிசைய, மற்றவர்கள் விவரமறியாமல் விழித்தார்கள்.

குலாடி உள்ளே வருகிறான், கையில் கொத்துப் பேப்பர்களுடன்.

''ஸாப், எல்லாப் பேப்பரும் ரெண்டு ரெண்டு காப்பி வரவழைச்சட்டேன். உங்க பதவிப் பிரமாணம் வந்திருக்கு. தவிர, உங்க ஹாஸ்பிடல் விஸிட் பத்தித் தனியா நியூஸ் போட்டாங்களே, அந்த நாலு பேப்பரும் எக்ஸ்ட்ராவா ரெண்டு ரெண்டு வரவழைச்சிருக்கேன். போதுமா? நீங்க பாத்திங்களா?'' என்று ராமராஜுவின் பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் பேப்பரை நீட்டிவிட்டுத் திரும்பியவன் என்னைக் கவனிக்கிறான். ''அரே, பண்டிட்ஜி, இந்த ஒரு நாள் பொறுத்துக்க முடியலியா உனக்கு? நான்தான் சொல்லியிருக்கேனே!''

அவ்வளவுதான், பொத்துக்கொண்டாற் போலப் பீறிடுகிறது எனக்கு. சீறுகிறேன். ''இன்னும் நான் பொறுத்துக்கணுமா? யாருக்காக? நேத்து ஏன் அவங்களைப் பொறுத்துக்கச் சொல்லலே? ஓடியிருக்கீங்களே ஆஸ்பத்திரிக்கு! கூலி ஜனங்களோ, அதுக்கும் கடைப்பட்டவங்களோ விபத்து, வெள்ளம், வறட்சின்னு நீங்க தயங்கமாட்டீங்க. போட்டி போட்டுட்டு ஓடுவீங்க. ஏன்னா, அது பெரிய விஷயமாயிடறது. ராமராஜுவின் ஆஸ்பத்திரி விஜயம்னு, இல்லே பார்வையிட்டார்னு நியூஸ் போட்டுப் பேப்பர்லே போட்டோவும் போடறான். துடிக்கறவங்க பக்கத்திலே நீங்களும் போட்டோவுக்குப் போஸ் குடுத்துட்டு நிக்கறீங்க. நான் உங்களுக்காகவே நாயா உழைச்சாக் கூட, அம்பு சமாசாரம் அந்த மாதிரியா? 'அவரென்ன டாக்டரா? வந்து பார்த்து மருந்து கொடுக்கப் போறாரா'ன்னியே, நேத்திக்கு எந்த மூஞ்சியோட போனீங்க? இப்போல்ல எனக்கு விஷயம் புரியுது? ஏழைங்களோ அவங்க வேதனையோ கூட உங்களுக்குப் பப்ளிசிடிக்குப் பயன்படுமனு அப்போ அதிலே உங்களுக்குக் கரிசனம் வருது. அக்கறை காட்டி, ஏழை பங்காளனாயிடறீங்க. அம்மா, ஏம்மா, நெஞ்சிலே கை வெச்சுச் சொல்லுங்க, நான் சொல்றது நெஜமில்லேன்னு. சே!'' அத்தனை பேரும் திக்கித்து நிற்க, பொங்கும் கண்ணீரோடு கேவிக் கொண்டே விறுவிறென்று வெளியேறுகிறேன் நான். ❋

உங்கள் குடும்ப டாக்டர் போன்ற சர்வரோக நிவாரணி

ஸ்ரீராம் வலி நிவாரணி

Sri Ram Pain Balm

ஜலதோஷம், தலைவலி, இருமல், தசைவலி, காயங்கள், இரத்தக்கட்டு, விரல் சுற்று, தோல்வியாதி, மூலம், முதுகு வலி முதலிய அனைத்திற்கும் டாக்டர்கள் சிபார்சு பெற்ற ஓர் அற்புத ஆயுர்வேத சஞ்சீவி

பற்களுக்கும் ஈறுகளுக்கும் ஓர் வரப்பிரசாதம்

ஸ்ரீராம் தந்தபிரகாஷ் ஆயுர்வேத பற்பொடி

புகை, தாம்பூலம் உபயோகிப்பவர்களுக்கு ஓர் அபூர்வ தயாரிப்பு. கிராம்பு மற்றும் பல உயர்ந்த ஆயுர்வேத மூலிகைகள் சேர்ந்தது. வாய் மணத்திற்கும், பற்களின் பாதுகாப்பிற்கும் நிகரற்றது. குழந்தைகளும் விரும்புவது. பிரஷ்-க்கு ஏற்றது. மிக மலிவானது.

Mfrs. **Sri Ram Products,**

THIRUVAIYARU-613204

அனுபவமிக்க ஏஜெண்டுகள் தேவை

நிஜாம் பாக்கு

ஒரு ரூபாய் பாக்கெட்

5 பைசா

10 பைசா

உரிமையாளர்கள்

ஆபீஸ்: 2601
போன்:
பாக்டரி: 2981

தந்தி : DARBAR

S. A. சபியுல்லா & கோ.,

தபால் பெட்டி எண் 14
புதுக்கோட்டை - 622 001

மறு பிறவி

தில்லைநாதன்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன், அன்று இரவு மணி பத்து அடித்துவிட்டது. அப்போது தான் ஸ்ரீ காஞ்சி ஆசார்யர்கள் தங்கியிருந்த அந்த இடத்துக்குத் தாயும் மூத்த மகனும் வந்து சேர்ந்தார்கள். வரும்போதே வழியில், 'இன்றைக்கு இத்தனை நாழிகைக்கு மேல் எங்கே பெரியவர்களின் தரிசனம் கிடைக்கப் போகிறது' என்று எண்ணியபடி வந்தார்கள். ஆனால் மடத்துக்குள் நுழைந்ததும், அப்போது தான் பெரியவர்கள் மூன்றாவது கால பூஜைக்கு வந்தமர்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. அவர்களுக்கு அதுவே பெரும் ஆறுதலாக இருந்தது. பூஜை முடிந்ததும் தரிசனம் செய்துகொண்டார்கள். அதிகக் கும்பல் என்று சொல்ல முடியாது.

''நீ எப்போது வந்தாய்?'' என்று சுவாமிகள் அந்த மூத்த மகனைக் கேட்டார்கள்.

''இப்போதுதான் வந்தேன். அம்மாவும் வந்திருக்கிறாள். நாங்கள் வருவதற்கும் பூஜை ஆரம்பமாவதற்கும் சரியாக இருந்தது.''

இருவரும் நமஸ்காரம் செய்து எழுந்தார்கள். ''அம்மா ரொம்பவும் கவலையோடு வந்திருக்கிறாள். கடைசித் தம்பியைக் கொஞ்ச நாளாகக் காணோம். எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை'' என்றான் மூத்தவன்.

பெரியவர்கள் அபயம் அளிப்பது போலக் கையைக் காட்டிவிட்டு, மற்றவர்களுக்கும் தரிசனம் அளித்துப் பிறகு உள்ளே சென்றுவிட்டார்கள்.

இனிக் காலையில்தான் பெரியவர்களைப் பார்த்து விவரமாகச் சொல்ல வேண்டும் என்று எண்ணி மடத்திலேயே தங்கியிருந்தார்கள் தாயும் மகனும்.

அரை மணி கழிந்திருக்கும். பெரியவர்கள் அவர்களை அழைப்பதாகச் சொல்லி, மடத்துச் சிப்பந்தி ஒருவர் அவர்களைச் சுவாமிகள் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். சுவாமிகள் ஓலைப் பாயில் அறையின் மூலையில் படுத்திருந்தபடியே அந்த அம்மாள் சொன்ன கதையைக் கேட்டார்கள்.

''கிராமத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் இந்த ஆண்டு மிகவும் விமரிசையாக நடந்தது. எல்லாவற்றையும் கடைசிப் பையன் மணிதான் பொறுப்பேற்றுக்கொண்டு நன்றாக நடத்தினான். கடைசி நாள் ஆஞ்சநேயர் உற்சவம். அன்றைக்கு அவன் மீது சுவாமிகூட வந்தது. கர்ப்பூர ஆரத்தி காண்பித்து, 'ஆஞ்சநேயா! நீதான் எல்லாரையும் நல்லபடி காக்கவேண்டும்!' என்று கூட எல்லாரும் வேண்டிக்கொண்டோம். அன்றும், இரவு விடிய விடியப் பஜனை. கீர்த்தனைகளையெல்லாம் எவ்வளவு அழகாகப் பாடினான் அவன்!

''மறுநாள் காலை. நான் சும்மா இருக்கக்கூடாதா? என் வாக்கில் ஏதோ சனி புகுந்து கொண்டது போல் இருக்கிறது. 'இவ்வளவு படித்துவிட்டு, இப்படிக் கிராமத்திலேயே சோம்பேறியாகப் பொழுதைக் கழிக்கிறாயே? உன் அண்ணன்களெல்லாம் இல்லையா? அதுபோல் நீயும் ஒரு வேலைக்குப் போனால் என்ன? எவ்வளவு கௌரவமாக இருக்கும்? உங்க அப்பா இருந்த வரை இப்படித்தான் கிராமத்தை விட்டு நகரமாட்டார். அவருக்கு வாரிசு நீ வந்திருக்கிறாய். எத்தனை நாளைக்கு இப்படித் தண்டச் சோறு தின்னப் போகிறாய்? கல்யாணம் கார்த்தி ஒன்றும் வேண்டாமென்கிறாய். எத்தனை நாளைக்கு நான் பொங்கிப் போட்டுக்கொண்டு உன்னோடு இருப்பது? பக்கத்து வீட்டிலே அவர்கள் ஆறு மாசத்துக்கு ஒரு தடவை யாத்திரை கிளம்பி எத்தனை க்ஷேத்திரங்களுக்குப் போகிறார்கள்? எனக்கு அப்படி ஆசை இருக்காதா?'' என்று திட்டினேன். இது போல் எத்தனையோ நாள் திட்டியிருக்கிறேன்.

''அன்றுமட்டும் அவனுக்கு ஏன் ரோஷம் பிறந்ததோ தெரியவில்லை. மத்தியான்னம் சரியாகச் சாப்பிடக்கூட இல்லை. மாலை நான்கு மணிக்கெல்லாம் ஊருக்குக் கிளம்பினான். ஒரு பையில் சில துணிமணிகளை எடுத்துக்கொண்டு சென்னை போவதாகச் சொல்லிப் போனவன் தான். வேலை கிடைத்த பிறகுதான் வருவேன் என்றான். மாசம் இரண்டாகிவிட்டது. சென்னையில் உறவுக்காரர்களோ, நண்பர்களோ அவனைப் பார்த்ததாகவே சொல்லவில்லை. எங்கே போனான் என்றே தெரியவில்லை. வேறு இடத்திலுள்ள உறவினர்களுக்கும் எழுதிக் கேட்டுவிட்டேன். ஒரு தகவலும் இல்லை.''

அதற்குமேல் அந்த அம்மாவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. குரல் தழுதழுக்கக் கண்ணீரைச் சொரிந்தாள். சற்று நேரம் மௌனம் நிலவியது.

''அம்மா, பெரியவர்கள் கண்ணயர்ந்துவிட்டார்கள். எழுந்திரு. போகலாம்'' என்றான் மூத்த மகன்.

அதே சமயம் பெரியவர்கள் எழுந்து உட்கார்ந்து, ''ஒன்றும் கவலைப்படாதே! நல்லபடியாக அவனே வந்துவிடுவான்'' என்று சொல்லி ஆசீர்வதித்தார்கள்.

அந்த வார்த்தையே அவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. வீடு வந்து சேர்ந்தார்கள். அந்தக் குடும்பமே பரம்பரையாக மடத்துக்குக் கைங்கர்யம் செய்துவந்த குடும்பம். பெரியவர்கள் சொன்னால் தெய்வ வாக்குப் போல் அவர்களுக்கு.

விளையாட்டுப் போல மேலும் மாதங்கள் ஆறு ஓடிவிட்டன. யாராவது 'உன் மகனைப் பார்த்தேன்' என்று சொல்லமாட்டார்களா என்று ஏங்கியிருந்த தாய்க்கு ஒரு நாள் எதிர்பாராமல் கடிதம் ஒன்று வந்தது. அந்தக் கடிதத்தைக் கடைசி மகன்தான் எழுதியிருந்தான். ஆனால் அதைப் படிக்கப் படிக்க அவளுக்கு ஓவென்று கதறி அழ வேண்டும் போல ஆகிவிட்டது.

''அன்புள்ள அம்மா,

நமஸ்காரம். நான் ஊரிலிருந்து கிளம்பி, மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். எனக்கு எந்த உறவினர் வீட்டுக்கும் செல்ல விருப்பம் இல்லை. தன்மானம் என்னை அப்படி யார் வீட்டுக்கும் போகவிடாமல் தடுத்து நிறுத்தியது. யோசித்தபடி அங்கே ஓர் ஓட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டுவிட்டு ஊரைச் சுற்றினேன். முன் இரவு தூக்கம் வேறு இல்லையா? வழியில் சாலை ஓரத்தில் பெரிய மரம்

ஒன்றின் அடியில் கையிலிருந்த பையைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு தூங்கினேன். எத்தனை நேரம் தூங்கினேனோ எனக்கே தெரியாது.

''யாரோ தலைமாட்டில் இருந்த பையை வெடுக்கென்று பிடுங்கவே, தூக்கிவாரிப் போட்டபடி எழுந்திருந்தேன். அப்போதுதான் தெரிந்தது, பையைப் பிடுங்கினது, பெரிய மந்திக் குரங்கு என்று. அது பையோடு மரத்தில் பாய்ந்து ஏறிவிட்டது. அந்தப் பையில்தான் என் ஆஸ்தியாக வைத்திருந்த பணமும் இருந்தது. சும்மா விட்டுவிட முடியுமா? நானும் கீழிருந்தபடியே விரட்டினேன். அது கிளைக்குக் கிளை பாய்ந்து, பக்கத்துக் காம்பவுண்டு மீது குதித்து உள்ளே ஓடிவிட்டது. நானும் விடாமல் சுவர்மீது ஏறி உள்ளே குதித்தேன். அப்போது மதிய நேரம். பங்களாவுக்கு வெளியே நின்றிருந்த இரண்டு அதிகாரிகள், ராம லட்சுமணர்போல் நாமம் போட்டுக்கொண்டு ஆஜானுபாகுவாக இருந்த அவர்கள், கூர்க்காவிடம் சொல்லி என்னைப் பிடித்துவரச் சொன்னார்கள். நான் அவனிடம் நடந்ததைச் சொல்லிக் கெஞ்சினேன். இதற்குள் பையில் குரங்குக்கு வேண்டியது ஒன்றும் இல்லாமல் போகவே அதை விசிறிவிட்டுப் போய்விட்டது. அந்தப் பையுடன் கூர்க்காவைத் தொடர்ந்து, அதிகாரிகளிடம் செல்ல நேர்ந்தது.

''அவர்கள் நல்ல குணம் படைத்தவர்கள். என் நிலையைக்கண்டு பரிதாபப்பட்டார்கள். பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் அலுவலகம் அது. உலகப் போர் நடந்து வந்த சமயம். நானும் வாட்டசாட்டமாக இருந்ததுடன் நல்ல படிப்பும் இருந்ததால் அவர்கள் சொன்ன புத்திமதிப்படி ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன்.

''பெங்களூரில் நான்கு மாசம், பிறகு சண்டிகரில் நான்கு மாசம் பயிற்சி முடிந்தது. நான் இப்போது ஒரு (பட்டாலியன் லீடர்) குழுவின் தலைவன். எனக்கு மோட்டார் சைக்கிள், ஜீப் வசதிகள் தந்திருக்கிறார்கள். இப்போது இந்தியாவின் கிழக்கு எல்லையில் பர்மியப் போர் முனையில் கடும் யுத்தம் நடந்து வருவது உனக்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். என்னைக் குழுவுடன் எந்தச் சமயமும் போர்முனைக்கு அனுப்பிவைக்கலாம். அங்கே தேசத்துக்காக என் உயிரையும் தியாகம் செய்ய வேண்டியும் வரலாம். அப்போது தேசத்தாய் என்னை அணைத்துக்கொள்வாள். பகவான் கீதையில் சொல்லும்போது, 'வீரன் ஒருவன் போரில் மாண்டுபோனால் அவனுக்கு வீர சொர்க்கம் கிடைக்கிறது. உயிரோடு திரும்பி வந்தாலும் மக்கள் மத்தியில் புகழோடு வாழ்கிறான்' என்கிறார்.

''சில சமயம் உன் நினைவு எனக்கு வரும். அப்போது மனம் சற்றுச் சஞ்சலப்பட்டாலும் தைரியத்தை இழக்கமாட்டேன். அதற்கு

முக்கியக் காரணமும் உண்டு. ராணுவத்தில் சேருவதற்கான அலுவலகத்துக்கு என்னை வலுவிலே இழுத்து வந்தது சாதாரணக் குரங்கு அல்ல. ஆஞ்சநேயர்தான் எனக்கு இந்த வழியைக் காட்டியிருக்கிறார் என்று இப்போது தோன்றுகிறது.

மற்றொன்று. காஞ்சிப் பெரியவர்களின் சொற்படி இங்கே போர்வீரர்களுக்கெல்லாம் ஓய்வு நேரத்தில் ஹநுமான் சாலீஸ், ஆஞ்சநேயருடைய ஸ்தோத்திரப் பாடலைப் படிக்கும்படி கொடுத்திருக்கிறார்கள். நானும் அதைப் படித்து வருகிறேன். வெற்றி வீரரின் தோத்திரத்தைப் படிக்கும் எங்களுக்கெல்லாம் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. ஆஞ்சநேயருடைய உற்சவத்தில் பாடிய 'ராம ராம இதி ஸதா ஜபந்தம், வந்தே ஸந்தம் ஸ்ரீ ஹநுமந்தம்' என்ற வரிகள் என் காதுகளில் எப்போதும் ரீங்காரம் செய்துகொண்டிருக்கின்றன. உன் பிரார்த்தனை வீண் போகாமல் ஆஞ்சநேயர் என்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. நான் உன்னைக் காண்பதும் காணாததும் எல்லாம் அவருடைய கையில். அவரை வேண்டிக்கொள்.

—மணி''

கடிதத்தைப் படிக்கப் படிக்க அவளுக்குக் கை கால்கள் ஓடவில்லை. ஓவெனக் கதறி அழுதாள். அவளும் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக்கொண்டாள்.

மாதங்கள் உருண்டோடின. அதற்குப் பிறகு அவனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அடுத்த ஆண்டு ஸ்ரீராம நவமி உற்சவமும் வந்தது. ஊரார் அனைவரும் சேர்ந்து வழக்கம்போல விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஆயினும் சென்ற ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்திய மணி அங்கே இல்லாதது எல்லாருக்கும் குறையாகத்தான் இருந்தது. ஊரே அவனைப் பற்றிப் பேசியது. இதைக் கேட்கக் கேட்க அவனைப் பெற்ற தாயும் மிகவும் வருந்தினாள்.

கடைசி நாள். ஆஞ்சநேயர் உற்சவம்; இரவு பஜனை ஆரம்பித்துக் கோலாகலமாக நடந்து வந்தது. நடுவில் சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒருவர் மீது ஆஞ்சநேய சுவாமி வந்துவிட்டார். ஆவேசம் வந்து ஆடினார். எத்தனை பேர் பிடிக்க முயன்றும் கட்டுக்கொள்ளவில்லை. கற்பூரத்தைக் கொளுத்தி அவருக்கு ஆரத்தி எடுத்தார்கள். பிறகு ஒருவாறு அடங்கி வீராசனத்தில் அமர்வதுபோல் உட்கார்ந்தார். முகத்தைப் பார்க்கும்போது ஆஞ்சநேயரே நேரில் வந்ததுபோல் தோன்றியது. மணியின் தாயாரும் அங்கே ஒருபுறமாக ஒதுங்கி நின்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்தாள். உடனே அந்த அம்மாளைக் கூப்பிட்டு வாக்கிட்டார் ஆஞ்சநேயர். ''பயப்படாதே! உன் மகனை உன்னிடம் கொண்டுவந்து சேர்ப்பது என் பொறுப்பு. கவலைப்படாமல் இரு. அவன் என்னுடைய பக்தன். அவனைக் காப்பாற்றுவது என் கடமை. இன்னும் ஒரு மாதத்தில் அவன் உன்னை வந்தடைவான்'' என்றார்.

அதேபோல மூன்று வாரங்கள்தான் முடிந்திருக்கும். அதற்குள் மணி வந்து சேர்ந்துவிட்டான். தாய், மகனைக் கட்டி அணைத்துக்கொண்டாள். தாய் மட்டுமா? ஊரே இந்தச் செய்தியறிந்து அந்த வீட்டில் கூடிவிட்டது. மகிழ்ச்சியை அவரவர் தெரிவித்துக் கொண்டார்கள்.

அவன் தன் கதையைக் கூறக் கேட்டு அனைவரும் மெய் சிலிர்த்துப் போனார்கள்.

''அம்மா, நான் உனக்குக் கடிதம் எழுதினேன் இல்லையா? அதன்

பிறகு அடுத்த வாரமே எங்கள் குழுவுடன் என்னையும் போர் முனைக்கு அனுப்பிவிட்டார்கள். போர் என்றால் கடுமையான போர். எப்போதும் பீரங்கிச் சத்தம் காதைத் துளைக்கும். ஒவ்வொரு நாளும் நேச நாடுகளின் வெற்றியை லட்சியமாகக் கொண்டு உயிரைத் திருணமாக மதித்துத்தான் கிளம்புவோம். எங்கள் குழுவின் வீரச் செயல்களை அதிகாரிகளே வாய் விட்டுப் பலமுறை பாராட்டியிருக்கிறார்கள். நாங்கள் மேலும் மேலும் முன்னேறி வந்தோம். அப்போதெல்லாம் நாங்கள் ஒவ்வோர் அடியாக முன்னேறும்போதும் பல விபத்துக்களைச் சந்திக்க வேண்டிவரும்.

"அன்றொரு நாள் காலையில் போர் முனைக்குக் கிளம்பத் தயாராக இருந்தோம். ஆனால் திட்டமிட்ட நேரத்தில் கிளம்பவில்லை. அரை மணி தாமதமாகிவிட்டது. எனவே குறிப்பிட்ட முனைக்கு அனுப்பாமல் எங்கள் படையை வேறு முனைக்கு அனுப்ப நேர்ந்தது. மாலையில் வெற்றியோடு திரும்பி வந்தோம். ஆனால் அப்போது எங்களுக்குக் கிடைத்த வேறொரு செய்தி எங்களைத் திடுக்கிட வைத்தது. காலையில் முதலில் செல்லவிருந்த முனையில் எதிரிகள் குண்டுகளைப் பொழிந்து எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டார்கள் என்பதுதான் அது.

"மறுநாள் காலை எதிரிகள் தோல்வியை ஏற்றுச் சரணடைந்து விட்டதால் எங்கும் போர் நிறுத்தப் பிரகடனம் செய்துவிட்டார்கள்.

"அன்று காலையில் ஏன் தாமதம் நேர்ந்தது? அது காரணமாக எங்களை வேறு முனைக்கு அனுப்பினார்கள் என்பது யாருக்குத் தெரியும்? அன்றைக்குத் திட்டமிட்டபடி நாங்கள் சென்றிருந்தால் இன்றைக்கு என்னை நீ காண முடியாது. இதற்குக் காரணம் உன்னுடைய பிரார்த்தனைதான். என்னை ராணுவத்திலே சேரும்படி செய்ததும் குரங்கு உருவத்திலே வந்த ஆஞ்சநேயரின் செயல்தான். இன்றைக்கு உன் முன்னே வெற்றி வீரனாக நிற்பதும் அவருடைய அருள்தான்!

"பொதுவாக நேச நாடுகளின் வீரத்துக்கு முன்னே எதிரிகளால் நிற்க முடியவில்லை. ஆரம்பத்தில் சில வெற்றிகளை அடைந்தாலும் முடிவில் எதிரிகள் எல்லா முனைகளிலும் தோல்வியையே ஏற்க நேர்ந்தது. கடைசியில் நம்முடன் சமாதானம் செய்துகொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள் என்ற செய்தியை அறிந்ததும் நேச நாடுகள் எங்கும் வெற்றி விழாக் கொண்டாடினார்கள்.

"போரை முன்னிட்டுக் குறுகிய காலப் பயிற்சி அளித்து அவசரமாகத் திரட்டிய படையிலே நான் சேர்ந்திருந்ததால் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டவுடன் எங்களுக்கெல்லாம் ஓய்வு அளித்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். பின்னர்த் தேவைப்பட்டால் அவர்கள் கூப்பிடும்போது போக வேண்டும். இப்போது வேலை வாய்ப்பு உள்ள இடங்களிலே 'எக்ஸ் ஸர்விஸ்மேன்' என்ற சலுகை எங்களுக்கு உண்டு. உடனடியாக நல்ல வேலை கிடைக்கும். இனி நான் சோம்பேறியாக உனக்குச் சிரமம் கொடுத்துக்கொண்டு ஒரு நாளும் கிராமத்தில் இருக்க மாட்டேன்!"

தாய் அவனை அப்படியே கட்டித் தழுவிக்கொண்டு, "அப்பா, இது உனக்கு மறுபிறவி. ஆசாரிய சுவாமிகளும் ஆஞ்சநேயருந்தான் உனக்கு உயிர்ப் பிச்சை அளித்து என் முன்னே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய அருள்தான் உன்னைக் காப்பாற்றியிருக்கிறது" என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

முன்பெல்லாம் மடம் என்றாலே அவனுக்குப் பிடிக்காது. அந்தக் குடும்பத்தினர் எல்லாரும் சுவாமிகளைத் தரிசிக்கச் செல்லும்போதும் அவன் ஒதுங்கியே நிற்பான். பிறகு அதற்கு நேர்மாறாக மடமே கதியென்று அங்கேயே தங்கியிருக்க விருப்பம் கொண்டான். அந்தச் சூழ்நிலை அவனுக்கு மன அமைதி தருகிறது போலும்!

ஆஞ்சநேயரிடம் அவனுக்கு இருந்துவந்த பக்தி இப்போது மேலும் பன்மடங்கு பெருகியிருக்கிறது. ❋

'SUN' ROLLING SHUTTERS
AND
GRILLS
DURABILITY AND TROUBLE-FREE
PERFORMANCE

MANUFACTURERS:

Don Industry

K-1. UNIT INDUSTRIAL ESTATE
NAGAPATTINAM

CUSTOM HOUSE AGENT
A TRUSTED NAME FOR
40 YEARS

M|s Asia Corporation (P) Ltd.

2nd LINE BEACH
NAGAPATTINAM-611 001

நிறுவனம் 1936 தொலை பேசி: 108.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

நிறுவனர்: அமரர்
S. பெத்தண்ண நாடார்

குளிப்பதற்கோர் குளுமை

வெண் சங்கு சீயக்காய்த் தூள்
(ஸ்பெஷல்)

5 காசு, 10 காசு, 100 கிராம், 200 கிராம்

பாக்கெட்டுகளாகக் கிடைக்கும்.

தினசரி குளிப்பதற்கும், பாத்திரங்களைப் பளிச்சிட வைப்பதற்கும்

அமர்ஜோதி பிராண்ட்
அரப்புத் தூள்

அறிமுகம்
எங்களது புதிய தயாரிப்பு!
உயர்வானது!

வெண்சங்கு கிளீனிங் பவுடர்

உரிமையாளர் :

S. பெத்தண்ணன் செல்லதுரை (செல்வம்)
கீழவாசல், தஞ்சாவூர் 613001

ராலிஃபேன் விசிறிகளின் உள்ளமைந்த மேம்பாடு இதற்கு உத்தரவாதம் உண்டு



முற்றிலும் சமநிலைப் படுத்தப்பட்ட இயந்திர நுணுக்கம் மிக்க வடிவமைப்பின் காரணமாக, ராலிஃபேன் ஸூப்பர்ஸ்டார் தொல்லையின்றி ஓடுகிறது

தொல்லையற்ற ஓட்டம் என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கிறபோது, ராலிஃபேன் ஸூப்பர் ஸ்டார் இணையற்று விளங்குகிறது. டபுள் பால் பேரிங்குகள் இருப்பதால் மோட்டார் நீண்ட காலம் உழைப்பதோடு, இரைச்சலற்ற ஓட்டம் கிடைக்கிறது, பிளேடுகள் மிக நுணுக்கமாக சமநிலைப்படுத்தப் பட்டிருப்பதால், சீரான காற்றோட்டம் அளிக்கிறது. ஆல்-மெட்டல் ரெகுலேட்டர் என்பதால் நீடித்த உழைப்பு நிச்சயமாகிறது. ஆகவே பணியில் ஈடிணையற்ற விசிறி உங்களுக்குக் கிடைக்கிறது. ஸூப்பர்ஸ்டார் மீது நம்பிககை வையுங்கள். இதன் செயல்திறனுக்கு இணையே இல்லை.

ராலிஃபேன்

தரமோங்கிய தயாரிப்புகளுக்கு

R ராலீஸ்

மல்டி-டெக்னாலஜி க்ரூப்

ULKA-RFC-2-TAM

60-லும் ஆசை வரும்!

எஸ். வி. ரமணி

“இப்படியே காலத்தை ஓட்டிடலாம்னு நெனைக்கிறயாடா?”

“நீங்க இருக்கறபோது எனக்கென்ன கவலே?”

“நான் என்ன சாசுவதமா?”

“அப்படி நெனைச்சுத்தானே எல்லாம் செய்யறீங்க? இல்லாட்டா இந்த வயசுல இப்படி..”

“தறுதலையா! நீ சுத்தறதைப் பார்த்து, நீ செய்யற அநியாயத்தைப் பார்த்து, உன்னால கதறித் துடிக்கிற பெண்களைப் பார்த்துத்தான்டா இந்த முடிவுக்கு வந்தேன். இனிமேலாவது நீ ஒழுங்கா நடந்துக்கறதா இருந்தா சரி; இல்லாட்டா..”

“இல்லாட்டா என்ன செஞ்சுடுவீங்க? சும்மா மிரட்டாதீங்க. உங்க மிரட்டலைக் கண்டு பயப்பட நான் ஒண்ணும் பாப்பா இல்லே. அதிகமாப் போனா, ‘வூட்ல இருக்காதே; வெளில போடா’ன்னு வெரட்டுவீங்க. அதுக்கும் தயாராத்தான் இருக்கேன். நீங்க செஞ்சிருக்கிற அக்கிரமத்தை என்னாலுந்தான் பொறுத்துக்க முடியலே. நேருக்கு நேராக் கேட்டு ஒரு முடிவு கட்டிடலாம்னுதான் வந்திருக்கேன்.”

“என்னடா நீ முடிவு கட்டப் போறே? நானல்ல முடிவு கட்டணும்? அந்தப் புண்ணியவதிக்காகப் பாக்கறேன். இல்லாட்டா என் னிக்கோ உன்னைத் தொலைச்சுத் தலைமுழுகியிருப்பேன். முப்பது வயசாச்சு. இன்னும் ரெண்டு காசு சம்பாதிக்க வக்கில்லே. ஊரான் காசில மைனராத் திரியறே. முடிவு கட்டப் போறானும் முடிவு?”

“கொஞ்சம் அடக்கிப் பேசுங்க. என் அக்காவுக்காகப் பாக்கறேன். இல்லாட்டி உங்களை, இப்படிச் சொன்னதுக்கு என்ன செய்வேன்னு தெரியாது. கெழவியைக் குளிப்பாட்டி மணையில வைச்சாங்கற கதையா, நீங்க செய்யற அக்கிரமத்தை விடவா, நான் செஞ்சுட்டேன்?”

“போடா வெளியே! இங்க நின்னுக்கிட்டு மேல ஒரு வார்த்தை பேசினே, அப்புறம் நான் உன் மாமா இல்லே; ஆமாம். கொலையாளியா மாறிடுவேன்.”

“டேயப்பா! பேச்சைப் பாரு: புது ரத்தம் கலந்திருக்குல்ல; உடம்பு துள்ளுது போலிருக்கு.”

“டேய், என்னடா சொன்னே? உன்னைப்போல ஊர்சுத்தி இல்லேடா நான். அந்தப் புண்ணியவதி எப்படித்தான் உனக்கு அக்காவா வாய்ச்சாளோ? அந்தப் புண்ணியவதி போய் இருபது வருஷம் ஆச்சுடா. அங்கே இங்கே திரும்பி யாரையாவது பாத்திருப்பேனா? ஒரு தப்பு என்மேலே சொல்ல முடியுமாடா? யாராவது சொல்லுவாங்களாடா? ‘என் தம்பி அருணாசலம் அநாதைங்க. அவனை வளர்த்து ஆளாக்கி, கல்யாணம் கார்த்தி செஞ்சுவைச்சு மனிசனா வாழவைங்க’ன்னு உன் அக்கா, சாகறத்தே கேட்டாளே; சரின்னு ஒத்துக்கிட்டேனே; அதுக்காக, உன் அக்கிரமங்களை இத்தனை நாளாச் சகிச்சுக்கிட்டிருந்தேன். இனிமே என்னாலேயும் தாங்க முடியலே. எனக்கும் வயசாயிடுச்சு. உன் அக்காவுக்காக, ஏன் என்னுடே பத்து வருஷம் வாழ்ந்த என் மனைவிக்காக, திருந்துவே, திருந்துவேன்னு உன் போக்கிலே போய்ப் பார்த்தேன். பிரயோசனமில்லே. கணிசமா என் பணம் போனதுதான் மிச்சம். ‘அமிர்தலிங்கத்தின் வளர்ப்பு மகன் அருணாசலம் கயவாளிப் பயல்னு, கண்ட பொம்பளையோட சுத்தறவன்’னு பேசாத ஆள் இல்லே, இத்தனை பெரிய பட்டணத்தில. கர்மம், கர்மம்!”

“படபடன்னு நெறையப் பேசிட்டீங்க. நான் வாலிபப் பையன், தப்புப் பண்ணிட்டேன்னு ஊர்ல சொல்றாங்க. உங்களுக்கு வயசாயிடுச்சு. பணம் காசோட வாழறீங்க. வாய் எப்பவும் சிவன் நாமத்தையே சொல்லுது. இந்தப் போர்வையிலே உங்க வண்டவாளம் வெளியிலே தெரியலே; இல்லே, தெரிஞ்சும் உங்க வேஷத்துக்காக உண்மையைச் சொல்லப் பயப்படறாங்க. இல்லையா, மாமா? நாலு செவத்துக்குள்ளே தனியா எங்கிட்டயாவது ஒத்துக்குங்களேன். மனசு திருப்தியா உங்களுக்கு இடைஞ்சலா இல்லாம, உங்களுக்கு ஒரு ‘குட் பை’ வச்சுடறேன்.”

“நாக்கு அழுகிப் போயிடுண்டா, படுபாவி! என்னைப் பார்த்தாடா இப்படி எல்லாம் பேசறே? நீ உருப்படுவியாடா? கல்யாணி, பாத்துக்கோ, உன் தம்பியை. இம்!”

“எங்க அக்காதான் போய் இருபது வருஷம் ஆயிடுச்சே! அவுங்களை எதுக்குக் கூப்பிடறீங்க? வயசுக்குத் தகுந்த காரியமாச் செய்யலே. ஆனா ஒண்ணு எனக்குப் புரியுது. இது மாதிரி இந்த வயசுல இளமை திரும்பினா, புதுசா இளம் பொண்ணைக் கட்டிக்கிட்டா, வூட்ல வேற யாரும் வாலிபப் பையன் இருக்க மனசு பொறுக்காது. வயசானவங்களுக்கே வர்ற குறைபாடுதான் இது. இம்! எப்படியோ போங்க; எனக்கு அவசரமா..”

“டே அருணாசலம், போடா வெளியே! நின்னே, நின்னே..”

''குடலைப் புடுங்கி மாலையாப் போட்டுக்கிவிங்களோ? இம், சரி, சரி. அவசரமா எனக்குப் பத்தாயிரம் ரூபா வேணும். தூக்கி எறிங்க, பேசாமப் போயிடறேன்.''

''பத்தாயிரமா? எதுக்குடா? உங்க அப்பன் சம்பாதிச்சு வச்சுட்டுப் போயிருக்கானுடா?''

''எங்க அப்பன் இல்லே. எங்க அக்கா புருஷன் திருவாளர் அமிர்தலிங்கம்.''

''உங்க அக்காவே போயி இருபது வருஷம் ஆச்சுடா. இன்னும் என்னடா மாமன், மச்சான் உறவு வேண்டிக்கிடக்கு? போடா, பைசாக் காச கொடுக்கமாட்டேன்.''

''வீணாத் தொந்தரவை வரவழைச்சுக்காதிங்க. புதுப் பொண்ணு வந்து ஒரு வாரமாகல்லே. அதுக்குள்ளே பிரஷர் ஏறி இருதயம் நின்னுடப் போவுது. சத்தம் இல்லாமே கொடுத்திடுங்க. இனிமே உங்க வழிக்கு வரமாட்டேன்.''

''உஸ். நீ செஞ்ச அக்கிரமத்துக்கு வடிகால்டா அது பாவி! இப்போ குடுத்துட்டா இனிமே ஆயுசுக்கும் இந்தப் பக்கம் வரமாட்டியா? சொல்லு; தொலைக்கறேன்.''

''அப்படி எல்லாம் பாண்டு எழுதிக் குடுக்க முடியாது. நிச்சயமா ஆறு மாசம் ஒரு வருஷத்துக்கு வரமாட்டேன்.''

''அப்போ எல்லாம் பொண்டாட்டியின் தம்பியாச்சேன்னு குடுத்தேன். இப்போ தண்டத்துக்கு அழறேன். இந்தப் பணத்தோடே இனிமே இங்கே வராதே. கண்காணும எங்கேயாவது போய்த் தொலை.''

''இருபது வருஷமாச் சிவலிங்கத்தைக் கட்டிண்டு மாரடிச்ச உங்களுக்கே அறுபதிலே ஆசை வந்தா, முப்பதிலே நான் செய்யறதிலே என்ன தப்பு? சொல்லுங்க. யோசிச்சு பாருங்க. நியாயம் புரியும்.''

''போடா போக்கத்தவனே! கேட்ட பணத்தைத்தான் தொலைச்சுட்டேனே! இன்னும் இங்கே ஏன் நின்னு தொலைக்கறே? என் முகத்துல விழிக்காம போய்ச் சேரு.''

''உங்க பேரு, மரியாதை, பூசை எல்லாத்தையும் கப்பல் ஏத்திப்புடுவேன். உங்க வண்டவாளம் எல்லாம் தெரியும். ஏதோ என் ''அக்கா புருஷனு இருந்திங்களே என்கிற நெனைப்பிலே இதோட வுட்டுட்டுப் போறேன். இப்போ போய்ட்டு வரேன்.''

''வராமப் போடா; திரும்பாமப் போடா.''

அமிர்தலிங்கத்துக்கு ரேஸ் ஓடிய குதிரை மாதிரி மூச்சு வாங்கியது. இந்தப் பத்தாயிரத்தைப் போலப் பல பத்தாயிரங்களை அருணாசலத்துக்காக வீசி இறைத்திருக்கிறார். தம் சிபாரிசில் ஒரு விளம்பர நிறுவனத்தில்; அருணாசலத்துக்குக் காஷியர் வேலை வாங்கிக் கொடுத்திருந்தார். பத்தாயிரம் டிபாஸிட்டும் கட்டியிருந்தார். நாலே மாதத்தில் அந்த நிறுவனத்து டைப்பிஸ்ட் சுகந்தியையும் இருபதாயிரம் ரூபாயையும் அருணாசலத்தையும் காணவில்லை. கம்பி எண்ண வேண்டிய நெருக்கடி வந்ததும், காதும் காதும் வைத்தாற்போல் முப்பதாயிரம் வரை செலவு செய்து, சுகந்தியையும் நிறுவனத்துப் பாக்கியையும் சரி செய்து, அருணாசலத்தை மீட்டார். அருணாசலத்துடன் 'மறைந்தது' சுகந்தியின் முதல் நிகழ்ச்சியாக இல்லாததால், அமிர்தலிங்கம் சுகந்தியைச் சமாளித்து விட்டார்.

அமிர்தலிங்கம் படாத பாடுபட்டு, அருணாசலத்தின் நல்ல நடத்தைக்குத் தாமே அத்தாட்சி சொல்லி, நாலைந்து இடங்களில் வேலை வாங்கிக் கொடுத்தார். வயசுக்கேற்ற வெளி விவகாரங்களில் இருந்த முனைப்பு, வேலை பார்ப்பதில் அவனுக்கு ஏற்படவில்லை. சம்பாதிக்காமல் செலவு செய்யும் வித்தைகளில் பல அவனுக்கு அத்துப்படியாயிற்று.

வட்டிக்கடை அமிர்தலிங்கம் தம் முப்பதாவது வயதில் பெற்றோர் இல்லாத கல்யாணியை மட்டும் மணந்து, வீட்டுக்கு அழைத்து வரவில்லை; அவளுடைய பத்து வயதுத் தம்பியையும் தம் பொறுப்பில் அழைத்து வந்தார். நோஞ்சானாக, நல்ல வளர்ச்சி இல்லாமல் இருந்த அருணாசலத்தைப் பார்த்த சிலர், ஏழெட்டு வயதுப் பையனுடன், கல்யாணி, அமிர்தலிங்கத்தை மயக்கி மணந்து வந்திருக்கிறாள் என்று கிசுகிசுத்தனர்.

வட்டிக்கடையையும் சிவபஞ்சாயதன பூஜையையும் தவிர, ஊர் வம்பில் அகப்பட்டுக் கொள்ளாத அமிர்தலிங்கம், இந்தக் கிசுகிசுப்



யைப் பற்றிக் கவலைப்படவில்லை. தாம் பூசிக்கும் பரமேசுவரன் சாட்சியாகத் தவறு செய்யாமல் இருந்தால் போதும் என்ற நம்பிக்கை வேரூன்றிய மனநிலை அவருக்கு.

மைத்துனன் அருணாசலத்தை மிகவும் அன்புடன் வளர்த்தார். வட்டிக்கடை வருவாய், நெய்யாகவும் பாலாகவும் மாறி அவனுக்குப் புஷ்டியை அளித்து, பத்து வயதில் நோஞ்சானாக இருந்தவன் பதினைந்து வயதில் இருபது வயதுக் காளையாக மாறிவிட்டிருந்தான். படிப்பைத் தவிர, மற்ற விவகாரங்களை மிக எளிதில் புரிந்து கொண்டான். 'வட்டிக்கடையை நடத்த அதிகப் பள்ளிப் படிப்பு வேண்டாம்' என்று அமிர்தலிங்கம் தம் அநுபவத்திலிருந்து புரிந்துகொண்டிருந்தார். அதனால் அருணாசலம் பள்ளிக்கூடம் செல்கிறானா, மாட்டினி சினிமா போகிறானா என்று கவலைப்படவில்லை.

இரண்டுமூன்று வருஷத்தில் அருணாசலத்துக்கு ஒரு 'கால்கட்டை'ப் போட்டு வட்டிக் கடையில் உட்கார வைத்துவிட்டு, மனைவி கல்யாணியுடன் அமர்நாத், பதரியாத்திரை போகலாம் என்று திட்டமிட்டிருந்தார். அந்த அதிகப்படிச் செலவைச் சமாளிக்கவே, வட்டி விகிதத்தையும் கொஞ்சம் உயர்த்தியிருந்தார். அநியாய வட்டி வாங்கியவன் யார் உருப்பட்டான்?

வட்டிக் கடையை மூடிக்கொண்டு மடி நிறைய நோட்டுக் கற்றையுடன் வீட்டுக்கு வந்தார். கணவனுக்குக் குடிக்க வெந்நீர் கொண்டு கொடுத்த கல்யாணி, ''ஐயோ! திடீர்னு மாரை வலிக்குதுங்க''என்று அலறியபடி கீழே உட்கார்ந்தாள்; மயக்கமாகி விழுந்தாள். அமரநாதர் அஞ்சு நிமிஷத்தில் அவளுக்கு அமரருலக வாழ்வைக் கொடுத்துவிட்டார். ''அருணாசலம், அநாதை'' என்ற வார்த்தைகளே அவள் கடைசியாகக் கூறியவை. அதைப் புரிந்துகொண்ட அமிர்தலிங்கம், ''உன் தம்பியைக் காப்பாற்றுகிறேன்'' என்று சடலத்துக்கு முன் சத்தியம் செய்தார். பக்கத்து ஊரில் போய் நாடகம் பார்த்துவிட்டு மறுநாள் காலையில் வந்த அருணாசலம், அக்கா திவ்யதேச யாத்திரை புறப்பட்டு விட்டதை அறிந்து திடுக்கிட்டான். மாமா பேரில்கூட அவனுக்குச் சந்தேகம் வந்தது.

கல்யாணி போனதும் அமிர்தலிங்கத்துக்கு வாழ்க்கையே வெறிச்சோடிவிட்டது. நிலுவையை வசூலித்துக் கொண்டு ஆறே மாதத்தில் வட்டிக் கடையை இழுத்து மூடினார். பணம் பாங்கு லாக்கரிலும் வீட்டு இரும்புப் பெட்டியிலும், சுவருக்குள் இருந்த ரகசியப் பெட்டியிலும் மானாவாரியாகக் கிடந்தது. அதனால் அரைகுறையாகச் செய்து வந்த சிவ பஞ்சாயதன பூஜையை முறைப்படி உபதேசம் பெற்றுக்கொண்டு, முழுமூச்சாக அதில் ஈடுபட்டார். பூஜை, சாப்பாடு, தூக்கம், இருவேளை ஸ்நானம் என்ற நியதிக்குப் பழகிவிட்டார். வட்டி இல்லாமல் நிரம்ப வேண்டியவர்களுக்குக் கடன் கொடுக்கும் அளவுக்கு மனசு மாறியிருந்தது.

இருபது வருஷங்கள் ஓடிவிட்டன. அதற்குள் வீட்டில் சமையலுக்கு வந்த சமையற்கார அம்மாள் பத்துப் பேர் மாறிவிட்டனர். அருணாசலத்தின் திருவிளையாடல் ஒரு காரணம். தனிக்கட்டையான அமிர்தலிங்கத்தைக் கையில் போட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வந்த சிலர், அது பலிக்காமல், 'இந்தப் பழம் புளிக்கும்' என்று தாமாக நழுவியவர்கள் சிலர். இந்தத் தொந்தரவு வேண்டாம் என்று தூரத்து உறவான ஒரு கிழவரைச் சமையலுக்கென்று அழைத்து வைத்துக்கொண்டார்.

தாம் விரும்பியபடி அருணாசலத்தின் நடத்தை இல்லை என்று தெரிந்தும், தம் மனைவியின் சடலத்துக்குச் சத்தியம் செய்த பாவத்துக்காகப் பல அக்கிரமங்களைப் பொறுத்துக்கொண்டார். நெருக்கடிகளைச் சமாளித்தார். பெண்ணாசை, பொன்னாசை இரண்டுக்கும் தம் மனத்திலிருந்து 'டாடா' கொடுத்தனுப்பினார். ஆனால் அருணாசலம், 'அவருக்கு இரண்டிலும் ஆசை பெருகியிருக்கிறது. பூசை எல்லாம் வேஷம்' என்று டமாரம் அடித்ததுடன், சில சிக்கல்களிலும் அவரைச் சிக்க வைத்தான்.

மனைவியின்மேல் எத்தனை அன்பு இருந்தால், அவள் இறந்ததும், மறுமணம் செய்துகொள்ளாமல்

இருபது வருஷத்தை ஒட்டியிருப்பார்! அந்த அன்பு காரணமாகத்தான், அருணாசலம் அக்கிரமங்கள் செய்வது அறிந்தும் மன்னித்து வந்தார். அவனைத் திருத்தும்படி இறைவனை வேண்டி வந்தார். பலன்?

''ஒரு மனிசனுக்குத் திடீர்னு ஆசை வந்திடாது. அப்பப்போ இருந்திருக்கும். இப்போ வெடிச்சுடுத்து. அறுபதிலே ஆசை வந்திருக்கு. ஆசை வந்தது தப்புன்னு சொல்லமுடியாது. ஆனா சொந்தப் புள்ளையைப் போல வளர்த்த அருணாசலத்துக்கே போட்டியாவா வரணும்?''

''அவர் பூசை செய்யற சிவன் கிட்டே உத்தரவு வாங்கிட்டுத்தான் துணிஞ்சாராம். எதெதுக்கெல்லாம் சாமிகிட்டே கேக்கணுங்கறதுக்கே வகை துகை இல்லாமப் போச்சு!''

''அமிர்தலிங்கம் அழிச்சாட்டிய லிங்கமா மாறிட்டார். வயசுப் புள்ளை.பாவம் ,அவமானம் தாங்காம எங்கயோ ஓடிப்போயிட்டான்.''

''சொத்துக்கு வாரிசு வேணுமில்லே? என்ன இருந்தாலும் அருணாசலம், வேத்தாள் தானே? கட்டினவளே போனபொறவு மச்சானாவது மாமனாவது!''

ஊர் வாய்க்குப் பூட்டுப் போட முடியுமா?

''உள்ளே வந்து பாருங்க ஸார், குழந்தையை.''

மருத்துவமனையின் வராந்தாவில் குட்டிபோட்ட பூனைபோல உலாவிக் கொண்டிருந்த அமிர்தலிங்கம் 'சிவ சிவ' என்று முணுமுணுத்தபடியே, தனியறைக்குள் போனார். சத்துவ குணம் மிகுந்த யோகி தியானத்தில் ஆழ்ந்திருப்பதைப் போல, அந்தச் சின்னஞ் சிறு சிசு தொட்டிலில் விழிதனை மூடித் துங்கியது. குழந்தையைத் தடவிப் பார்க்கக் கை நீட்டிய அமிர்தலிங்கம், திடீரென்று கையை எடுத்துக்கொண்டார்.

திடீரென்று விசும்பல் ஒலி அதிர்வேட்டாகக் கேட்கவே, அமிர்தலிங்கம் திடுக்கிட்டுப் பார்த்தார். உலகத்து மக்கள் தொகையில் மேலும் ஒன்றைச் சமீபத்தில் உயர்த்திய பெருமைக்குரியவளை ஏறிட்டுப் பார்த்தார்.

''அழாதே அழகம்மா. காலம் வரும். இறைவனை நம்பு.''

''எங்கேயோ பிறந்து, யாருக்கோ உடலைக் குடுத்து, யாருக்கோ பாரமா, எங்கேயோ ஒரு ஊர்லே இப்படிக் கெடக்கேனே?''

''யாருக்கோ இல்லேம்மா. கவலைப்படாமே இரு. தங்க விக்கிரகம் போல் புள்ளைக் குழந்தை பொறந்திருக்கு!''

''தங்க விக்ரகமா! இம். என்னால உங்களுக்கு எத்தனை அவமானம்! ஊரை விட்டு ஓடிவந்து ஆறு மாசம் ஆகப் போவுதுங்களே! என்னை ஏன் காப்பாத்தினீங்க? காசியில செத்தாப் புண்ணியம்னு சொல்வாங்களே! அந்தத் தங்க விக்கிரகத்துக்கும் எனக்கும் அந்தப் புண்ணியத்தைத் தேடிக்கறேங்க. என்னை வுட்டுட்டுப் போயிடுங்க.''

''எங்கேம்மா நான் போறது? அருணாசலத்தை வளர்த்த பாவத்தைப் போக்கத்தானே காசிக்கே வந்தேன்? ஊரார் பழிக்கு அஞ்சி ஓடிவந்தேன்னு நெனைக்கறே? இல்லேம்மா. நான் பூசை செய்யற ஆண்டவன் ஒருத்தனுக்குத்தான் பயப்படுவேன். அவன் கட்டளைப்படிதான் எல்லாம் நடக்குது. அதுக்குப் பணிஞ்சு நடந்துக்கிட்டாத்தான் நமக்கு நல்லது. வீணா அழாதே. சந்தோஷமா இரு.''

''என் வாழ்க்கையிலே இனிமே சந்தோஷம் எப்படிங்க வரும்? ஊர்லே மட்டும் இல்லே. 'பணக்காரக் கிழம் போல இருக்குது, ஆசைநாயகியைப் பிரசவத்துக்குப் புது ஊருக்குக் கூட்டி வந்திருக்குது'ன்னுதாங்க இங்கேயும் பேசிக்கிறுங்க.பாவம்! என்னாலே உங்களுக்கு அவமானம் தொடர்ந்து வருதே!''

''அதைப் பத்திக் கவலைப்படாதே, அழகம்மா. நானே கவலைப்படலே. ஊரு நாக்கு நாலுந்தான் பேசும். அதைப் பார்த்தா உலகத்துல வாழ முடியுமா?''

''என்னுங்க இவ்வளவு தெளிவாப் பேசறீங்க? எனக்கு நாக்கைப் புடுங்கிக்கிட்டுச் சாகலாம் போல இருக்குங்க.''

''நீ சாக நெனைச்சியே, உன்னால முடிஞ்சுதா? ஆண்டவன் அப்போ காப்பாத்திட்டானே! அதை நெனைச்சுப் பார்.''

''இம். நீங்கன்ன காப்பாத்தினீங்க? ஆண்டவன் இரக்கமே இல்லாமன்ன நடந்துக்கிட்டான்?''

''நான் இல்லேம்மா. என் மூலமா ஆண்டவன் தன் கருணையை நிறைவேத்திக்கிட்டான்.''

''இன்னுமா ஆண்டவனை நம்பறீங்க? மச்சான் சாதவியை அமிர்தலிங்கம் கடத்திக்கிட்டுப் போயிட்டார்னு ஊர்ல உலகத்துல அபாண்டமாச் சொல்றுங்க. அவுங்களை அந்த ஆண்டவன் ஒண்ணும் கேக்கல்லே. என்னுங்க, இந்த வேதாந்தமும் நம்பிக்கையும்?''

''ரெண்டுந்தான், அழகம்மா நம்ப சொத்து. இந்த ரெண்டும் இல்லாமத்தான் மேல்நாட்டிலே தவிக்கிறுங்க. நெருக்கடி வந்தாச் சமாளிக்க முடியாம, தூக்க மாத்திரையைத் தேடறுங்க.''

''ஸார், அதிகமாப் பேசித் தொந்தரவு கொடுக்காதீங்க. வீட்டுக்கு வந்தாத்தான் ராப்பகலா பேசிக்கலாமே!'' என்று விகண்டையாகக் கூறினள், அப்போது அங்கே வந்த தாதிப் பெண்.

''என்ன அப்படிச் சொல்றே அவரை?'' என்று கோபத்துடன் கேட்டாள் அழகம்மா.

''அவுங்களைக் கோவிச்சுக்காதே, அழகம்மா. அவுங்க சொல்றது நியாயந்தானே? பச்சை உடம்பு, அதிகமாப் பேசறது தப்புத்தானே?'' என்றார் அமிர்தலிங்கம்.

''வயசுக்கேத்தாப்பல நடந்துக்கிட்டா நல்லது'' என்று பட்டும் படாமலும் வார்த்தைகளால் குத்தினள் அந்தத் தாதிப்பெண்.

''மன்னிச்சுக்கோ. வர்றேம்மா.'' கனத்த உள்ளத்துடன் அமிர்தலிங்கம் அந்த அறையை விட்டு வெளியில் வந்தார்.

ஆறு மாசத்துக்கு முன்பு. அமிர்தலிங்கம் பூஜையறையில் மனம் ஒன்றிச் சிவபுராணம் பாடிக் கொண்டிருந்தார். திடீரென்று பூஜையறையை அடுத்த கூடத்தில் தடாலென்று விழுந்த சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தார். அலங்கோலமாக ஒரு பெண் விழுந்து கிடப்பதை உணர்ந்தார். பதறிப் போய் எழுந்து வந்து பார்த்தார். மயங்கிக் கிடந்ததை அறிந்து, பூஜைத் தண்ணீரைத் தெளித்து ஆசுவாசப்படுத்தினர்.

அந்தப் பெண்:

''என்னங்க, மூணு மாசமா இந்தப் பக்கமே காணலே? மாமாவைக் கேட்டுக்கிட்டு வர்றவரா நீங்க? இன்னிக்கு உங்களை வுடமாட்டேன். வாங்க, நானும் வர்றேன்; உங்க மாமாகிட்ட, கேட்டுடலாம்.''

''யார் நீ, பைத்தியம் மாதிரி பேசறே? எங்க, எதுக்கு வர்றே?''

''ஓஹோ! என்னை யார்னு தெரியலேயா? பைத்தியமா நான்? பார்க்லேயும் பீச்சிலேயும் பூங்காவிலேயும் என்னோட நாயாச் சுத்தினப்போ மட்டும் என்னைத் தெரிஞ்சுதா? ஐயா மனசு இப்போத்தான் புரியுது வடிகட்டின அயோக்கிய..''

''என்ன சொன்னே?'' பளாரென்று ஒரே அறை. கிர்ரென்று தலையைச் சுற்றியது.

''ஏய், கையை நீட்டி என்னையா அடிச்சே?''

''நடுத்தெருவிலே தடுத்து நிறுத்திக் கண்டபடி பேசின அடிக்காமக் கொஞ்சுவானா?''

''கண்டபடி நானா பேசறேன்? உன்னை நம்பி என்னை ஒப்படைச்சேன் பாரு, அது என் முட்டாள்தனம். உன் பணத்திலேயும் பேச்சிலேயும் மயங்கினேன் பாரு, அதுக்குத் தண்டனை. மூணு மாசமா உன் பாவம் என் வயித்திலே..''

''சீ; இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதே. யார் கிட்டப் போனியோ? யார் கொடுத்தாங்களோ?''

''யாரைடா பார்த்து அப்படிக் கேட்டே? தெரு நாய் போல நீதான்..''

அவள் ஆக்கிரோஷம் செயலாகப் பரிணமிக்கு முன், தெரு நாய் வாலை ஆட்டிக் கொண்டு சந்து பொந்துகளில் ஓடி மறைந்துவிட்டது.

உடல் பதற, கண்கள் சிவக்க, அவள் ஒரு நிமிஷம் அப்படியே ஆடிப் போய்விட்டாள். வயிற்று வேதனை ஒரு நிமிஷம் அவளைச் சுருட்டி எடுத்தது. நடுத்தெருவில் வேடிக்கை பார்க்கப் பத்துப் பேர் கூடிவிட்டார்கள். மேலும் அங்கே நிற்க விரும்பாமல் சமாளித்துக் கொண்டு, வீராவேசத்துடன் கணவனை இழந்த கண்ணகி போல், தெரு நாயின் மாமாவீட்டை நோக்கி நடந்தாள். 'வாழ்வா? சாவா?'

வீட்டினுள் கமகமத்த வத்தி வாசனையும் மல மணமும் பன்னீர்ச் சுகந்தமும் அவளைத் திணற வைத்தன. 'இந்தத் தெய்வ சந்நிதானத்தில் எச்சில் இலை விவகாரத்தைக் கூறி முடிவு காண வேண்டுமா? இந்தச் சந்நிதானத்தில் வளர்ந்தவனா

நிஜாம்லேடி
ஸ்பெஷல் புகையிலை
நிஜாம்லேடி
ஸ்பெஷல்
வாசனை
பன்னீர்
புகையிலை
NET Wt 10gm
ஹாஜி A.M.A.&CO.
த.பெ.எண்.4.புதுக்கோட்டை
MFrs:Hajee.A.M.A&Co.P.B.No.4.PUDUKKOTTAI-1

அப்படியொரு அருணாசலம்?' கண்ணைச் சுழற்றியது. அந்த வீடு சுற்றியது, ஒரு பேரொளி கண்ணைமூடச் செய்தது. அவ்வளவுதான் தெரியும்.

"யார் அம்மா நீ? எங்கே வந்தே? ஏன் இப்படித் திடீர்னு மயக்கமா விழுந்துட்டே?"

"கன்றை இழந்த பசு நியாயம் கேட்டு வந்த மாதிரி நான் வந்திருக்கேங்க. என் பேர் அழகம்மா. உங்க அருணாசலம்.."

"அருணாசலம் என்ன செஞ்சான்? உடனே சொல்லும்மா. இப்பவே அவனைக் கூப்பிட்டுக் கேக்கறேன்."

"பெரியவங்க நீங்க. உங்க கிட்டச் சொல்லி உங்க மனசைப் புண்படுத்த விரும்பல்லே. இங்கே வந்ததே தப்புங்க. வர்றேங்க." மெதுவாக எழுந்து புறப்பட்டவளை, அமிர்தலிங்கம் தடுத்து நிறுத்தினார்.

"நீ இங்கேருந்து போக முடியாது. எதுவாக இருந்தாலும் சொல்லு. எங்கிட்டச் சொல்றதா நெனைக்காதே. ஆண்டவன் சந்நிதியிலே வந்து சொல்லு. அவன் தீர்த்து வைப்பான்."

கண்களில் நீர் திரள அவள், அந்தப் பூஜையறையை எட்டிப் பார்த்தாள். மெய் சிலிர்த்தது. "ஆண்டவா!"

அந்த அவமானத்தை, அருணாசலத்தின் காதலியாக வாழ்ந்ததையும், அவன் பேச்சை நம்பி உள்ளத்தையும் உடலையும் ஒப்படைத்ததையும், அதன் பலனாக மூன்று மாசமாக முழுகாமல் இருப்பதையும், அந்தத் தெய்வத்தினிடத்தில் கூறினாள்.

"அப்பாடி. ரொம்பச் சந்தோஷம், அம்மா. ஆண்டவன் கருணை காட்டிவிட்டான். இதுதான் உன் வீடு. இனிமே எங்கேயும் போகக் கூடாது. அருணாசலம் வந்ததும், ஊரறிய ஒரு தாலியைக் கட்டச் சொல்லிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்றார் அமிர்தலிங்கம்.

உடனே உள்ளே ஓடி, கட்டிச் சூடத்தைக் கொளுத்தி, கணகணவென்று மணியடித்து இறைவனுக்கு ஆரத்தி காட்டினார். அழகம்மா தீக் கொழுந்தை அள்ளி எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

நாட்கள் உருண்டு மாதங்களாக ஓடின. அருணாசலம் வீட்டுப் பக்கம் தலை காட்டவில்லை. எங்கெங்கோ விசாரித்தார். தன் காதலியை மாமா தம் மனைவியாக்கிக் கொண்டு விட்டார் என்று அவன் பரப்பிய செய்திதான் அவர் காதுகளில் வந்து தாக்கியது. செய்தி கேட்டு அப்படியே ஒரு நிமிஷம் ஆடிப் போனாலும், அடுத்த நிமிஷம் அந்த அபாண்டத்தையும் இறைவனிடமே சமர்ப்பித்து விட்டார்.

அழகம்மா மருத்துவ மனைக்குச் சென்றிருந்த போது, ஒரு நாள் வீட்டுக்கு வந்து, அமிர்தலிங்கத்திடமே அந்த அபாண்டத்தை அவனே கூறி, பத்தாயிரம் ரூபாயுடன் ஓடிப் போனவன்தான்.

வெளியில் தலை காட்டினாலே, இந்த அபாண்டத்தின் தீக்கங்கு தன்னைத் தகிப்பதையும், பெரியவரைப் பாதிப்பதையும் கண்டு கூனிக் குறுகிப் போனாள் அழகம்மா. இந்த நிலையில் மாசமும் ஆக ஆக, உடல் உபத்திரவமும் சேர்ந்து கொண்டது. ஒவ்வொரு கணமும் புழுப்போல் துடித்தாள்; ஊண் உறக்கமின்றி, "என்னைச் சாக விடுங்கள்; என்னைச் சாகவிடுங்கள்" என்று அரற்றிக்கொண்டே இருந்தாள்.

இந்த நிலையில், அவதூறு சொல்லும் ஊரில் வாழாமல், சிறிது காலம் புது ஊரில் போயிருப்பது அழகம்மாவின் மனசுக்கு இதமாக இருக்கும் என்று, செய்த பாவத்தைக் கரைப்பதற்கு உதவியாக, காசிக்குப் போய்த் தங்கினார்.

கங்கையில் மூழ்கி எழுந்து, அப்படியே ஈரத் துணியுடன் காசிவிசுவநாதர் கோயிலில் சிவபுராணத்தையும் அன்னபூர்ணாஷ்டகத்தையும் மனம் உருகப் பாடினார் அமிர்தலிங்கம். பக்கத்தில், குழந்தையை மடியில் கிடத்திக்கொண்டு, சுருதி போட்டபடி அழகம்மாவும் அவருக்கு இணையாகப் பாடினாள். தமிழ் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் யாவரும், அந்த உருக்கத்தில் கரைந்தார்கள். அன்றாடம் காலையிலும் மாலையிலும் அந்த உருக்கத்தைக் கோயிலுக்கு வருகிறவர்கள் அநுபவித்தார்கள். 'ஒரு வாசகத்துக்கும் உருகாதவர் திருவாசகத்துக்கு உருகுவார்' என்ற பழமொழிக்கேற்ப, அமிர்தலிங்கமும், அழகம்மையும் திருவாசகத் தேனை அன்பர்கள் அருந்தித் திளைக்க உதவினர்.

ஒரு நாள் காலை. அன்ன பூர்ணேசுவரியைத் தரிசித்துவிட்டு வந்த ஓர் அன்பர், இந்தத் திருவாசகத் தேனைச் சுவைத்துவிட்டு, "ஸார், இந்த உருக்கம் என் மனத்தைக் கரைக்கிறது. மருத்துவமனையில் நோயாலும் அறுவைச் சிகிச்சையாலும் அணுஅணுவாகத் துடித்துக் கதறும் நோயாளிகள் இதைக் கேட்டால், சற்று நேரமாவது அமைதியாக இருப்பார்கள். உங்களால் முடியுமா?" என்று கேட்டார்.

அமிர்தலிங்கம், அவர் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "என் பாக்கியம், சுவாமி. இறைவனைப் பூஜித்ததற்குக் கைமேல் பலன் கொடுத்து விட்டான். எப்போது வரவேண்டும்? சொல்லுங்கள்" என்றார்; கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

"இப்போது வேண்டுமானாலும் வரலாம். சௌகரியப்படுமா?"

"ஓ, தாராளமாக. வாம்மா, அழகம்மா."

அமிர்தலிங்கம், அழகம்மையுடன் காரில் மருத்துவ மனைக்குச் சென்றார். மருத்துவமனையில் பிரார்த்தனைக் கூடம் போல் இருந்த 'பெரிய அறையில் உட்கார்ந்து கண் மூடி மெய் சோரப் பாடினார் அமிர்தலிங்கம்.

தாயிற் சிறந்த தயாவான தத்துவனின் கருணையை அகம் குழையப் பாடினாள் அழகம்மை. சிறந்த வீணை வித்துவானின் கமகம் அறையெங்கும் நாதத்தை நிரப்புவது போல், இறையுணர்வின் சுகந்தம் அந்த மருத்துவமனையில் நிரம்பியது. நோயாளிகள் தங்களை மறந்து ஆடாமல் அசையாமல் கேட்டனர்.

கோயிலில் பாடுவதைவிட மருத்துவமனையில் பாடுவதில் அமிர்தலிங்கம் அதிக இன்பத்தை உணர்ந்தார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியாகச் சென்று மருத்துவமனை ஊழியர்களுக்குத் தொந்தரவு இல்லாமல், தம் பணியைச் செய்தார். ஊர் அபாண்டம், அவதூறு போன்ற நச்சரவங்கள் தீண்டிக் கறுத்த அடையாளங்கள் கூட இப்போது மறைந்து விட்டன.

ஒருநாள் புற்று நோய்ப் பகுதிக்குப் போய்ப் பாடினார்கள். அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு, அவஸ்தைப்படும் நோயாளிகள் மதுர கீதத்தைக் கேட்டு, சற்று நேரம் அமைதியாக இருந்தார்கள்.

திடீரென்று ஒரு நோயாளி, தம் படுக்கையினின்று தட்டுத் தடுமாறி எழுந்து 'கர்புர்' என்று சப்தம் செய்ததைக் கேட்டுத் தாதிப் பெண் ஓடிப் போய் விசாரித்தாள். அந்த நோயாளி அமிர்தலிங்கத்தின் பக்கம் கையை நீட்டிக் காட்டினார். "சத்தம் சிரமமாக இருக்கிறதா? நிறுத்தச் சொல்லட்டுமா?" என்று தாதிப் பெண் கேட்டதும், அந்த நோயாளி அவர்களை அருகில் அழைத்து வரும்படி சைகை காட்டினான்.

தோளில் குழந்தையைச் சாத்திக்கொண்டு அழகம்மையும் அமிர்தலிங்கமும் அந்தக் கட்டில் அருகில் போனதும் அப்படியே ஸ்தம்பித்து விட்டனர். அந்த நோயாளி பேச முடியாமல் தத்தளித்தான். கண்ணில் நீர் கொட்டியது. கையெடுத்துக் கும்பிட்டான்.

"அவருக்குத் தொண்டையில் புற்று நோய் இருந்து ஆபரேஷன் செய்திருக்கிறது, ஸார். கழுத்து ஓட்டை வழியாகத் தான் மூச்சு விடவேண்டும்; பாவம்!"

"வாழ்க்கை முழுதும் பேச முடியாதா, ஸிஸ்டர்?"

"முடியாது, அம்மா. ஏன் அவரு உங்களுக்குத் தெரிஞ்சவரா?"

அதற்குள் அந்த நோயாளி, தாலி கட்டிய கணவன் என்பது போல் ஜாடை காட்டினான்.

"அருணாசலம், உன் வாழ்க்கையிலே நீ பேசினது போதும்னு கடவுள் தீர்மானிச்சுட்டார்." அமிர்தலிங்கம் கல்லாய்ச் சமைந்தார். கண்கள் கூடக் கொஞ்சம் கலங்கியது.

நடுக்க வியாதி வந்தவன்போல் கைநடுங்க அழகம்மையின் கையிலிருந்து குழந்தையை வாங்கி முத்தமிட்டான். எல்லாருக்கும் தெரியும்படியாக, 'என் குழந்தை, என் குழந்தை' என்பது போல் குழந்தையையும் தன் மார்பையும் தொட்டுக் காண்பித்தான்.

அமிர்தலிங்கத்துக்கு அறுபதிலும் ஆசை வந்தது; மீண்டும் வட்டிக் கடையைத் திறக்க, பேரனுக்குச் சொத்து சேர்த்து வைக்க. ✻

முதலை





முதலை, கண்ணீர்விட்டுப் பார்த்திருக்கிறீர்களா? முதலைக் கண்ணீர் என்று சொல்லிக் கேட்டாவது இருக்கிறீர்களா? 'பட்டுப் புடைவைக்கும் முயலுக்கு மூன்று கால் என்று சாதிப்பதற்கும் சில சகோதரிகள் அருவியாகக் கொட்டும் பாசாங்குக் கண்ணீர்தான் அது. பார்ப்பதற்கே பயங்கரமாகவும் அருவருப்பாகவும் தோற்றம் அளிக்கும் முதலை இனம், மனித இனத்துக்கும் முற்பட்டதாம். மனிதன் தோன்றுவதற்கு 14 கோடி ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலவுலகில் வாழத் தொடங்கிய மூத்த குடி. அழகிய தோல் பைகளுக்காகவும் உணவுக்காகவும், முதலைகளைக் கருணையின்றி உலகில் பல பாகங்களில் கொன்று வந்தனர். தன்னலம் மிகுந்த மனித இனம், தான் வாழ முதலை இனத்தை அழித்துவந்தது.

இந்த நிலை நீடித்தால் முதலை இனமே பூண்டற்றுப் போய்விடும் என்று, அதனைக் காப்பாற்றி வளர்க்கப் பல நாடுகளில் சட்டம் இயற்றியுள்ளனர். 1958-இல் முதலைகள் 'காக்கப்பட்ட இனம்' என்று இந்தியாவில் அறிவித்தார்கள். தொடர்ந்து 1972-இல் வனவிலங்குக் காப்புச் சட்டம் அமலில் வந்தது. இதன்படி முதலைகளைக் கொல்லுவது, தோல் உரிப்பது, பதப்படுத்துவது, வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டன.

உலகில் மொத்தம் இருபத்திரண்டு வித முதலை இனங்கள் இருக்கின்றன. அவற்றுள் இந்தியாவில் சாதாரணமாகக் காணப்படுபவை மூன்று இனங்கள். மிக நீளமாக வளரும் கடல் நீர் முதலை (Salt water Crocodile), கங்கை நீர்ப்பரப்பில் காணப்படும் நீண்ட வாய்ப்பகுதி கொண்ட கரியால், சகதி நிறம் கொண்ட மார்ஷ் அல்லது மக்கர். இந்த மூன்று இனங்களில் கடல் நீர் முதலை மிகவும் பயங்கரமானது. வாயைப் பிளந்தாலே, மந்திரவாதிக் குகையைப் பார்ப்பது போல இருக்கிறது. சுமார் இருபத்தைந்து அடி நீளம் வளரக்கூடியது. இதன் ஆயுள் சுமார் நூறு ஆண்டுகள்.

கரியால் நீண்ட வாய் அமைப்புடன், அதிகமாக நீரிலேயே இருக்கக்கூடியது. கரியால் இனத்தில் மட்டும் ஆண், பெண் இன வித்தியாசத்தை அறிய முடியும். நீண்ட வாய் நுனியின் மேல் ஆண் கரியாலுக்கு மட்டும் பூங்கொத்துப் போன்ற சதை காணப்படும். மற்ற இனங்களில் குட்டிகள் பெரிதாகிப் பக்குவம் அடைந்து, முட்டை போட்டால் தான் இனப் பாகுபாடு தெரியும்.

ஆற்றில் வாழும் முதலைகளைக் காப்பாற்றுவதுடன், தகுந்த சூழ்நிலைகளில் அவற்றைக் காத்து வளர்த்தால் தான், அந்த இனம் விருத்தியடையும் என்பதால் ஐக்கிய நாட்டுச் சபையின் உதவியுடன் இந்தியாவில் பல காப்பகங்கள் உள்ளன.



மகாபலிபுரம் செல்லும் வழியில், வடநெம்மேலி என்ற கிராமத்தில் பதினைன்கு ஏக்கர் பரப்பளவில் முதலைகள் இனவிருத்தி—பாதுகாப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. இந்தியாவில் காணப்படும் மூன்று இனங்களும் இங்கே இருக்கின்றன. காப்பக நிலப் பரப்பில், மரங்கள் அடங்கிய சூழலில், பதின்மூன்று குட்டைகளில் அல்லது செயற்கைக் குளங்களில் இவற்றை வளர்த்து வருகின்றனர். அவ்வளவு பெரிய உடலை இழுத்துக் கொண்டு, பக்கெட் சத்தம் கேட்டதும் மாமிச ஆகாரத்துக்காக அவை பாய்ந்து வருவதைக் காணப் பரிதாபமாக இருக்கிறது. வெயிலில் காய்ந்து கொண்டிருக்கும் அவை ஏதாவது சத்தம் கேட்டால் யானைபோல் உடலை வளைத்துக் கொண்டு நீருக்குள் படையெடுக்கின்றன.

சென்னையிலுள்ள முதலைக் காப்பகம், சென்னை ஸ்நேக் பார்க் டிரஸ்டின் ஆதரவில் இயங்குகிறது. இதன் இயக்குநராக விளங்கும் திரு ஆர். விட்டேகர், முதலைகளின் ஜாதகத்தை விரல் நுனியில் வைத்துக் கொண்டிருக்கிறார். எந்தக் குட்டையில் எத்தனை முதலைகள் இருக்கின்றன, குட்டிகள் எவ்வளவு, இன விருத்தி எப்படிச் செய்கின்றன என்பனவெல்லாம் அற்றுப்படி. இந்தக் காப்பகத்தில் மூன்று இனமும், குழந்தை குட்டிகள் பெற்றோருடன் சேர்ந்து 1107 உள்ளன. இரண்டு வயதுக் குட்டியை, அருமை பெருமையாக வளர்த்த குழந்தையைப் போல், கையில் தாங்கியிருக்கிறார், பாருங்கள் திரு விட்டேகர்!

முதலையின் காதல் விளையாட்டுக்கள் மிகவும் ருசியானவை. மூன்று நான்கு வயதில் பால் உணர்வு தோன்றத் தொடங்கும். சாதாரணமாக நவம்பர், டிசம்பர் மாதங்கள்தான் அவற்றின் காதல் களியாட்டங்களுக்கு ஏற்ற பருவம். அதிகமாகத் தண்ணீரிலேயே வாழும் கரியால் இனத்துக்குக் காம வேட்கை ஏற்பட ஒன்பது மீட்டர் ஆழமாவது நீர் இருக்கவேண்டும். மற்ற இந்திய முதலைகளுக்கு இரண்டு மீட்டர் அளவு போதுமாம். தண்ணீர் அதிகமாச் சேரும் சகதியுமாக இருக்கக் கூடாது. இந்தச் சூழ்நிலைகளைக் காப்பகக் குட்டைகளில் ஏற்படுத்துகிறார்கள். முதலில் ஆண் முதலையும் பெண் முதலையும் ஒன்றோடு ஒன்று தலைப் பக்கத்தைச் சிறிது நேரம் உரசிக்கொள்ளும். (முத்தம் கொடுத்துக் கொள்ளுமோ!) பிறகு ஆண் முதலை தனித்துப் போய்த் தலையை உயர்த்தி உரக்கக் கூச்சலிடும். நீரில் அமிழ்ந்துபோன பெண் முதலை தலையை மட்டும் தூக்கிப் பதில் குரல் உரக்கக் கொடுக்கும். இந்தச் சங்கேதக் குரல் கிடைத்ததும் ஆண் முதலை தாவிப் போய்ப் பெண் முதலையுடன் நீரில் அமிழ்ந்துவிடும்.

சூல் தரித்ததும் இரண்டே மாதத்தில் முட்டை இட்டுவிடும். தரையில் குழி பறித்து, ஒவ்வொரு தடவையும் இருபதிலிருந்து எண்பது முட்டைகள் வரையில் இடும். மூன்று மாதத்தில் முட்டையிலிருந்து குட்டி வெளிவரும்.



முட்டைக்குள் குட்டி வளர்ச்சி பெற்றவுடன் முட்டையிலிருந்து மெல்லிய உறுமல் சத்தம் கேட்கும். தானாக முட்டையை உடைத்துக் கொண்டு வெளி வராவிட்டால் பெண் முதலையே, தன் பல்லால் அதுக்கிக் குட்டி வெளிவர உதவும். முதலைக் காப்பகங்களில், முட்டைகளைச் சேகரித்து, சரியான சீதோஷ்ண நிலையில், தனிப் பெட்டிகளில் வைத்துக் காப்பாற்றுகிறார்கள். உறுமல் சத்தம் கேட்கத் தொடங்கியதும், இவர்களே மெதுவாக முட்டையை உடைத்துக் குட்டியை வெளிவரச் செய்து, தண்ணீரில் கொண்டுவிடுகின்றனர். பெற்றுப் போட்டதுடன் தாயின் பொறுப்புச் சரி, குட்டிகளே உணவைத் தேடிக்கொள்ள வேண்டியது தான்.

இந்தியாவில்தான் முதலை இனத்தைக் காப்பாற்றுவதற்காகக் காப்பகங்களில் வளர்க்கிறார்கள். மேல் நாடுகளில் நிலைமை அப்படி அல்ல.

நல்ல தீனிபோட்டு ஆட்டைக் கொழுக்க வைக்கிற கதைதான். முதலைத் தோல் மிகவும் உயர்வானது. அதனால் பை, மணிபர்ஸ், சிறிய பெட்டிகள் செய்கிறார்கள். பாங்காக்கில் மிகப் பெரிய முதலைக் காப்பகம் ஒன்று இருக்கிறது. அமெரிக்கன் அலிகேட்டக் கெய்மென் போன்ற இனங்களும் அங்கே இருக்கின்றன. பாங்காக், முதலைக் காப்பகத் தலைவர் முதலைச் சவாரி செய்கிறார் பாருங்களேன்! எத்தனை முதலைக் குட்டிகள் வரிசை வரிசையாய்த் தவம் செய்கின்றன!

மாமல்லபுரம் போகும் வழியிலுள்ள முதலைகள் இனவிருத்தி - காப்பகத்துக்குப் போய் அவற்றைக் கண்டு களியுங்கள். உங்கள் வருகை அவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். *

Photo: Krishnan, Quick Photo Service.
Sreedhar, Sreedhar Photographics.





பட்டு சேலைகள், வேஷ்டிகள்
எல்லா வித ஜவுளிகள்.
உயர்ந்தரகம், ஒரேவிலை.

நல்லி சின்னசாமி செட்டி

பட்டு ஜவுளி வியாபாரம்

பனகல் பார்க் எதிரில், தியாகராயநகர், சென்னை-600 017
போன், 444115, 445657.

MEENA ADS

லைட்ரூ:ப்
அறிமுகப்படுத்தும்
எக்ஸ்போ '10'
கூரையின் தேவைக்கு...
ஆலைகள் இல்லங்கள் அரங்குகள்
என எண்ணற்ற பயன்கள்...
நாங்கள் - எல்லாத் தேவைகளுக்கும் ஏற்ற தரமுயர்ந்த, 10 வளைவுகளைக் கொண்ட எக்ஸ்போ '10' கூரைத் தகடுகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்துகிறோம். சிக்கனமானது, நீடித்து உழைப்பது வளைந்து கொடுக்கும் தன்மையுடையது
செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் சிறந்த பயனை அளிக்கவல்ல கூரைத்தகடு.
உங்கள் தேவைக்கு இன்றே கேளுங்கள்... லைட்ரூஃப் எக்ஸ்போ '10'.
LR
மற்ற விவரங்களுக்கு தொடர்பு கொள்க :-
லைட் ரூ:பிங்ஸ் லிமிடெட்
அஸ்:பால்டிக் கூரைத்தகடுகள் தயாரிப்பில் முன்னோடி நிறுவனம்
பதிவு அலுவலகம் : 226, லாயட்ஸ் சாலை, சென்னை-600 086
பிராந்திய அலுவலகங்கள் : டெல்லி ● பம்பாய் ● கல்கத்தா
Imageads-M-1786

நிறுவனர் : அமரர் S. சண்முகம்

தமிழகத்திற்குப் பெருமையுடன் அறிமுகப்படுத்துகிறோம்

சலவைக்குச் சிறந்தது தரத்தில் உயர்ந்தது

NET WT. 125 GMS. PRICE Re. 1.00

ஆனந்தா சோப் பாக்டரி

கும்பகோணம்-612001

தந்தி : AMAITHI போன்: 485

வெள்ளியின் விந்தை

டாக்டர் நீ.ரா. ஸ்ரீநிவாஸன்

பளபளவென்று மின்னிக்கொண்டு வெண்மையாகத் திகழ்வது வெள்ளி. பண்டைக் காலம் முதல் உலகின் பல நாடுகளிலும் நாணயமாகவும் மற்றும் பலவாகவும் உபயோகப்பட்டு வந்திருப்பது இந்த உலோகம். வெண்மையையும் ஜொலிக்கும் தன்மையையும் தன்னகத்தே கொண்டமையால் வெள்ளிக்கு லத்தீன் மொழியில் 'ஆர்ஜெண்டம்' என்ற பெயர் கொடுக்கப்பட்டது, சம்ஸ்கிருதத்தில் வெள்ளியை 'ரூப', 'ரஜதம்' என்று அழைத்தனர். சந்திரனை யொத்த வெண்மையுடன் வெள்ளி பிரகாசிப்பதால் அதனை ஹிந்தியில் 'சாந்தி' என்று சொல்லுகின்றனர். தமிழில் வெள்ளியென்ற பெயரே நெடுங்காலமாகத் துலங்குகின்றது. இவ்வாறுச் பல பெயர்களால் விளங்கும் வெள்ளி, அன்றுதொட்டு இன்றுவரை மனிதனுக்குப் பல வகைகளில் பணி புரிந்து, உயர்ந்து விளங்கிவருகிறது. இன்றைய உலகில் வெள்ளியின் மவுசு சொல்லிலடங்காது.

பண்டைப் பெருமை: ஆதிகாலம் தொட்டுக் கல் தோன்றிய காலத்தே வெள்ளியும் இவ்வுலகில் தோன்றியிருக்கிறது. பண்டைச் சமுதாயங்கள் பல, வெள்ளியைக் கண்டெடுத்துப் பயன்படுத்தியிருப்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர்ச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வெள்ளி நகைகளும் பாத்திரங்களும் பழக்கத்திலிருந்து, அரசர்களின் கல்லறைகளில் வைக்கப்பட்டிருந்தன; இன்று கண்டெடுக்கப்பெற்றுள்ளன. சுமார் கி. மு. 3600-இல் எகிப்தை ஆண்ட மன்னர் மெனஸ் என்பார் வெள்ளியைப் பற்றிய விவரங்களைத் தமது புத்தகத்தில் குறித்துள்ளார். உலகிலே முதல் முதலில் எகிப்தில்தான் தங்கத்துக்கும் வெள்ளிக்கும் இடையே உள்ள மதிப்புக் கடைப்பிடிக்கப்பட்டது. கி. மு. மூவாயிரத்தில் எகிப்தில் நிர்ணயிக்கப்பட்ட கோட்பாட்டின்படி ஓர் எடை பொன்னுக்கு இரண்டரை எடை வெள்ளி சமம் என்று கணிக்கப்பட்டது.

உலகின் நாணய வளர்ச்சியில் இது அடிப்படையானதாகக் கருதப்படுகிறது. சுமேரியாவில், கி. மு. 3000 சகாப்தத்தில், வசித்த ராணி பூ—ஆபி என்பவளுடைய கல்லறையில் அவள் உடல் வெள்ளியும் தங்கமும் கலந்த ஆடையால் போர்த்தப்பட்டு, ஆடையின்மேல் பல ரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன. பின்னர், கிறிஸ்து காலத்தில் வெள்ளி வெகுவாக அமலில் இருந்ததற்குச் சான்றுகப் புனித பைபிளில் பலவிடங்களில் வெள்ளி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் மின்னிய வெள்ளி பாரத தேசத்திலும் பிரகாசித்திருக்கிறது. வேத காலத்திலிருந்தே வெள்ளியைப் பற்றி நம்மவருக்கு நன்கு தெரியும். நான்மறைகளில் முதலாவதான ருக் வேதத்தில், வெள்ளியின் உபயோகம், தானம் கொடுத்தல் ஆகிய விவரங்கள் அடங்கியுள்ளன.

அன்று தொட்டு நம் நாட்டில் வெள்ளி வெகுவாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. பண்டை நாகரீகத்தின் சிகரமெனத் துலங்கிய 'கிரேக்க—ரோம சாம்ராஜ்யத்தில் பொற்காலம்' எனப்படுவது சுபிட்சத்துக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது என்று கொள்வர். அவர்கள் கணக்குப்படி மனிதன் நேர்மையினின்றும் வழுவி, உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட்டு, கடவுட் பற்றை மறந்தால், அதுவே பொற்காலத்தின் முடிவு என்றனர். நேர்மை குலைந்த நிலையை, 'வெள்ளிக்காலம்' என்று குறிப்பிட்டனர். ஆனால் உலகில் இன்று இருக்கும் அவல நிலைமையைப் பார்த்தால், அந்நாளைய வெளிக்காலம் எவ்வளவோ மேல் என்றுதான் சொல்லத் தோன்றும். இத்தகைய பண்டைப் பெருமை படைத்த வெள்ளியெனும் உலோகம், எங்கே எவ்வாறு கிடைக்கின்றது, அதனை எப்படி உற்பத்தி செய்கின்றனர் என்பதனைச் சற்றே காண்போம்.

வெள்ளி அங்கி சேவை

வெள்ளி வேட்டை: வெள்ளி பொன்னைப் போல் மின்னும் தன்மையுடையது. சாதாரண வெப்பம், நீராவி ஆகியவைகளால் மாசு படாதது. ஆகவே, இயற்கையன்னையின் மடியில் வெள்ளி ஒரு தனி உலோகமாகத் திகழ்கிறது. கற்பாறைகளுக்கு நடுவில் வெள்ளி தோய்ந்து கிடக்கும். பாறையை வெட்டி வெள்ளியை வெளிக் கொணர வேண்டும். பொதுவாக வெள்ளி, சிறு துகள்களாகவும், சில்லாகவும் காணப்படும். ஆயினும் சில சமயங்களில் இயற்கையின் லீலா விநோதத்தால் பெரும் வெள்ளிப் பாளங்களும் கிடைத்திருக்கின்றன.

உதாரணமாக, நார்வேயில் சுமார் 1,500 பவுண்டு, அதாவது முக்கால் டன் எடையுள்ள ஒரு பிரம்மாண்டமான வெள்ளிப் பாளம் கிடைத்தது. பதினாறும் நூற்றாண்டில், தென் அமெரிக்காவில் ஏராளமான வெள்ளி கொட்டிக் கிடக்கின்றது என்று கேள்விப்பட்டு, ஸ்பெயின் தேசத்தவர் அந்நாட்டைப் படையெடுத்தனர். என்ன ஆச்சரியம்! பெரு, ஆர்ஜண்டைனு, பிரேஸில் போன்ற நாடுகளில் பெருவாரியாக வெள்ளி கிடைத்தது. ஆர்ஜண்டைனு என்னும் நாட்டுக்கு வெள்ளியினாலேயே வெள்ளி நாடு என்ற பெயர் சூட்டப்பட்டது. முதல்முதலில் சென்ற பலர் குபேரர்கள் ஆனார்கள். சுமார் 250 வருடங்களுக்குத் தென் அமெரிக்காதான் உலகத்துக்கு வெள்ளியை வழங்கியது. சுமார் 1860-இல் அங்கே வெள்ளி குறைந்து விட்டது.

இயற்கையில் வெள்ளி பொன்னுடன் சேர்ந்து ஒரு கலப்பு உலோகமாகவும் பரிணமிக்கும். இதற்கு 'எலெக்ட்ரம்' எனப் பெயர். இதனினின்றும் வெள்ளியையும் தங்கத்தையும் பிரித்தெடுக்கின்றனர். மேலும், பெரும்பாலும் இயற்கையில் வெள்ளியானது, செம்பு, காரீயம், துத்தநாகம் ஆகிய உலோகங்களின் கந்தகம் தோய்ந்த கனிமப் பொருள்களுடனே சிறிதளவு கலந்து காணப்படுகிறது. இவைகளில் உள்ள வெள்ளி மிகக் குறைந்த அளவே. எனினும், இவ்வுலோகங்களைப் பிரித்தெடுக்கும் தொழிலில், வெள்ளி ஓர் உபரிப் பொருளாகக் கிடைக்கின்றது. இன்று, இம்மாதிரி வெள்ளி கிடைப்பதைக் கொண்டே, உலகில் வெள்ளி உற்பத்தி நடக்கிறது.

வெள்ளி மலை: காரீய உலோக உற்பத்தியின்போது கிடைக்கும் உபரிப் பொருளான வெள்ளியே உலகில் கணிசமான அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. உதாரணமாக,

TWO EASY
FOR WORDS!

Easy to use.
Easy to carry.
Easy on your budget.
But not so easy to choose between.

Let's start with the only difficult decision you'll have to make...

Should you choose Hot Shot 110 or Hot Shot 35?

Well, they have a lot in common that's not-so-common in cameras.

With both cameras, the fun is in. The problems are definitely out!

With both Hot Shots, there's no focussing. No checking exposures. No timings. No fuss.

And yes. You even get a free roll/cartridge of Piccolo colour negative film with both.

Both are small — just try your pocket for size!

Price-wise, both fit that pocket too.

Now, now, we caught you! You're beginning to wonder just where the difference is.

Let's tell you.

Hot Shot 110 comes in the popular 110 format. There are 3 models with prices starting at Rs. 200* You can get Hot Shot 110 without a flash. With a flash. And with a flash and a telephoto lens.

Now look at Hot Shot 35. A camera in the full-frame 35 mm format. It's got a built-in flash. And a special Universal Focus Lens System. What's that? Well, from 1.2 metres to infinity (yes infinity) your focussing problems are taken care of.

Hot Shot 35 is yours (with a free leather case) for just Rs. 765* That's unbelievable for a full-frame 35 mm camera.

Now, if you still can't choose between them (mind you, we don't blame you) we have one suggestion...

Don't!

At their price, it's easy to take them both.

Your family will love you for your generosity.

And, as for the fact that you couldn't make a decision, let's keep that a secret.

Just between you and us!



HOT SHOT 35 & 110
Just aim. And shoot!

Made by Photophone Limited

*Maximum price. Local taxes extra.

Sista's-CMS-450/83

உலகிலே ஒரு பெரிய காரீய உற்பத்தி ஸ்தலமாகிய ஆஸ்திரேலியாவிலுள்ள பிரி துறைமுகத்தில், உபரியான வெள்ளி பிரித்தெடுக்கப்பட்டு, ஒரு சிறு குன்றைப் போல் குவிந்திருக்கும். இந்த வெள்ளி மலையைப் பார்ப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

நம் நாட்டில் காரீய உற்பத்திக் கேந்திரமான, பிஹாரிலுள்ள டண்டு என்னுமிடத்தில் வெள்ளி உற்பத்தி நடைபெறுகிறது. ராஜஸ்தானில் ஜாவர் என்னும் இடத்தில் திகழும் துத்தநாகக் கனிமத்திலிருந்தும், வெள்ளி உபரியாகக் கிடைக்கிறது. தேபலி என்னும் இடத்திலுள்ள ஆலையில் வெள்ளி பிரித்தெடுக்கப்படுகிறது. மேலும், பொன்னுடன் எப்பொழுதும் இயற்கையில் ஒரு சிறிது வெள்ளியும் கிடைக்கிறது. புகழ்பெற்ற மைசூர்க் கோலார் தங்கவயல், மற்றும் ஹட்டி ஆகிய இடங்களிலிருந்து தங்கத்தை எடுக்கும்பொழுது, வெள்ளியைப் பிரித்தெடுக்கின்றனர். கடைசியாக, தாமிர உற்பத்தியிலும் வெள்ளி உபரியாகப் பரிணமிக்கிறது.

பிஹாரிலுள்ள கட்சிலாவில் தாமிரக் கனிமத்திலிருந்து வெள்ளி கிடைக்கிறது. இவ்வாறு நம் நாட்டில் வருடம் ஒன்றுக்குச் சுமார் 12 அல்லது 13 டன் வெள்ளி உற்பத்தி செய்யப்படுகிறது. உலகிலோ வருடம் ஒன்றுக்குச் சுமார் 14,000 டன் வெள்ளி உற்பத்தியாகிறது. உலகநாடுகளில் வெள்ளி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது மெக்சிகோ. அடுத்து வரும் நாடுகள் ரஷியா, பெரு, கானடா, அமெரிக்கா ஆகும்.

கடத்தலும் குபேரர்களும்: நம் நாட்டில் வெள்ளி உற்பத்தி வெகு கொஞ்சமே எனினும், மக்களின் வெள்ளி மோகத்தால் பெருவாரியான 'வியாபாரம்' நடக்கிறது. பாரதத்தில் வெகு காலமாகத் தங்கிப் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிற வெள்ளி எவ்வளவு தெரியுமா? சொன்னால் மலைப்பீர்கள்! சமீபப் புள்ளி விவரத்தின்படி நாட்டில் பதுங்கியிருக்கும் வெள்ளியின் எடை சுமார் 15 லக்ஷம் டன்! இவ்வளவு வெள்ளியையும் ஒருங்கே சேர்த்தால் ஒரு வெள்ளி மலையே தோன்றும். இந்த வெள்ளி மலையின் மதிப்பீடு சுமார் அறுபதாயிரம் கோடி ரூபாய் ஆகும்! இவ்வாறு பதுங்கியுள்ள வெள்ளி கொஞ்சம் கொஞ்சமாக, நமது எல்லை வழியாக அரபு நாடுகள் முதலிய வெளி நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படுகிறது. ஏன்? இந்தியாவில் நிலவும் வெள்ளி விலை வெளிநாடுகளில் காணும் விலையைவிடப் பன்னிரண்டு சதவீதம் குறைவு; அதாவது வெளிநாடுகளில் சுமார் எட்டிலொரு பங்கு விலை அதிகம். எனவே, வெள்ளி விலையை உத்தேசித்து, கடத்தல் மன்னர்கள் ''தொழில்'' புரிகின்றனர். இந்திய அரசாங்கம் முன்னர் வெள்ளி ஏற்றுமதியை அனுமதித்தது. ஆனால் இப்பொழுது தடை விதித்துள்ளது. என்றாலும் கடத்தல் மன்னர்களுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? கடத்தல் கலையில் கைதேர்ந்தவர்களன்றோ?

இரகசியமாக வெள்ளியை விற்ற பணத்தை என்ன செய்கின்றனர்? வெளிநாடுகளில் பொன்னின் விலை இந்தியாவை விட 16 சதவிகிதம் கம்மி; அதாவது நம் நாட்டில் பொன்னின் விலை வெள்ளியைவிடச் சற்றேறக்குறைய ஆறில் ஒரு பங்கு அதிகம். ஆகவே, வெளியே தங்கத்தை வாங்கி, இந்தியாவுக்குள் கடத்திக்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் இம்மாதிரி நம் நாட்டுக்குள் கடத்திக்கொண்டு வரப்பட்ட தங்கம் சுமார் 60 டன் இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கின்றனர். இத்தங்கத்தின் விலை என்ன தெரியுமா? சுமார் ஆயிரத்து நூறு கோடி ரூபாய்! அடே அப்பா என்றுதான் சொல்லத் தோன்றும். கடந்த ஓராண்டில் கடத்தல் மன்னர்களின் லீலையால் அவர்கள் வெளியே விற்ற வெள்ளியின் மதிப்பு சுமார் 130 கோடி ரூபாய்; பொன்னால் கிடைத்த நிகர லாபம் சுமார் 170 கோடி ரூபாய். இக்கடத்தல் வியாபாரத்தால் பலர் கண்ணிமைக்கும் நேரத்தில் கோடீசுவரர்கள் ஆகியிருக்கின்றனர். இதனால் நாட்டுக்குப் பெரு நஷ்டம் என்பது எல்லோரும் அறிந்த உண்மையே; எனினும், கடத்தல் சக்கை போடு போடுகிறது. சமீப காலத்தில் வெள்ளியின் விலை விஷம்போல் ஏறியிருக்கிறது. தற்பொழுது மிகச் சுத்தமான, ஆயிரத்தில் 999 பங்கு சுத்தமான வெள்ளி, கிலோ சுமார் 3,710 ரூபாய்க்கு விற்கிறது.

சில உபயோகங்கள்: நாம் சாதாரணமாக வெள்ளியைக் கடைகளில் காண்கின்றோம்; நாணயமாகச் செலாவணியில் உள்ளது. எனினும் உலகிலே வெள்ளியின் முக்கிய உபயோகம் புகைப்படச் சுருள்கள், காகிதங்கள் செய்வதாகும். வெள்ளியின் மொத்த உபயோகத்தில் சுமார் 30 சதவிகிதம் புகைப்படத் தொழிலுக்குப் பயன்படுகிறது. 'டெலிவிஷன் காஸ்ஸெட்டு'களிலும் வெள்ளி ரசாயனப் பொருள்கள் பயன்படுகின்றன. அடுத்த படியாக வெள்ளியும், மற்ற உலோகங்களும் கூடிய கலவைகள் மின்சார, எலெக்ட்ரானிக் தொழில்களில் பணிபுரிகின்றன. தாமிர வெள்ளிக் கலவைகள் பல கலப்பு உலோகங்களை ஒட்டி இணைக்க உதவுகின்றன. வெள்ளிக் காரீயக் கலவைகள், மோட்டார், ஆகாய விமானம் செய்தல் போன்ற தொழில்களில் சில பாகங்களாக அமைகின்றன. வெள்ளியைக் கொண்டு அதிகச் சக்திவாய்ந்த 'பாட்டரிகள்' செய்யலாம். அடுத்து, நாணயங்கள் செய்ய வெள்ளி தேவைப்படுகிறது. ஆனால், நாம் அறிந்த வெள்ளியின் உபயோகம், பாத்திரங்கள், அணிகள் செய்வதேயாகும். மேலும் மருத்துவத்திலும் வெள்ளி உதவுகிறது. முறிந்த எலும்புகளை

உடலில் கட்டவும், இணைக்கவும் வெள்ளித் தகடுகள் பணிபுரிகின்றன. 'ஸில்வர் நைட்ரேட்' என்னும் ரசாயனப்பொருள் கண் மருந்தாகிறது. சமீப காலத்தில் சென்னை அரசாங்கம் பருவ மழையின்மையின் கொடுமையை நீக்கிச் செயற்கை மழை தோற்றுவிக்கும் முயற்சியில் மிக்க அக்கறை காட்டி வருகிறது. மேகங்களைத் துண்டி நீரைப் பொழியச் செய்யப் பல ரசாயனப் பொருள்கள் பயன்படுகின்றன. அவற்றில் ஒன்று வெள்ளியின் ரசாயனப் பொருளான 'ஸில்வர் அயோடைட்' எனப்படும்.

ஓர் அவுன்ஸே எடையுள்ள இந்த ரசாயனப் பொருள் மேகத்திலிருந்து மூன்று மில்லியன் காலன் அளவுள்ள செயற்கை மழையைப்பொழிய வல்லது. இவ்வாறாக, 'என் கடன் பணிசெய்துகிடப்பதே' என்பதற்கொப்ப, வெள்ளி உலகத்துக்குச் செய்யும் சேவை மகத்தானது.

இறை வழிபாடு: இந்துக்களின் இறைவழிபாட்டில் விக்கிரக வழிபாடு முக்கியமானதாகும். ஆகம விதிப்படி வார்க்கப்பட்ட கடவுளின் சிலைகளைக் கோயில்களில் முறைப்படி பிரதிஷ்டை செய்து வழிபடுவது நமது தொன்றுதொட்ட மரபு. இவ்வழிபாட்டில் மூலச் சிலைகள் பெரும்பாலும் கல்லில் செதுக்கப்பட்டு, நிரந்தரமாக வைக்கப்படும். விழாக்களில் வெளியே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் விக்கிரகங்களும் உள. இவைகளில்சில பொன்னாலானவை; சில தாமிரத்தாலானவை. எஞ்சியவை ஐந்து உலோகக் கலவையில் தோன்றியவை. இந்த உலோகக் கலப்பில் வெள்ளியும் இருக்கும். மேலும், முழு வெள்ளியாலே செய்யப்பட்ட சிலைகளும் உண்டு. பல கோவில்களில் வெள்ளி விக்கிரகங்கள் உள்ளன. உதாரணமாக, பெரிய அளவில் தவழும் கிருஷ்ண விக்கிரகம் மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமி கோயிலில் இருக்கிறது. குடத்தை வைத்துக்கொண்டு, இக்கண்ணனை, நன்கு அலங்காரம் செய்து வெண்ணெய்த் தாழியன்று ஊர்வலமாக எடுத்து வருவார்கள். அவ்வமயம் கண்ணன்மேல் பக்தர்கள் வீசும் வெண்ணெயுடன் பரந்தாமன் பேரானந்தக் காட்சியளிப்பான். சில புத்த விகாரங்களிலும் வெள்ளியாலான பெரிய புத்தபகவான் காட்சி தந்து கொண்டிருப்பார்.

இறைவனுடைய மூர்த்திகளைச் சுமந்து பவனிவரும் வாகனங்கள் பல. இவை பெரிய அளவில் அழகாகச் செய்யப்பட்டிருக்கும். செல்வம் படைத்த கோயில்களிலே வாகனங்கள் அநேகமாக வெள்ளியிலே செய்யப்பட்டிருக்கும். கனமான வெள்ளித் தகட்டைக் கொண்டு செய்யப்பட்டவை அவை. பார்க்கப் பளபளப்பாக இருக்கும். வைணவக் கோயில்களிலே யானை வாகனம், குதிரை வாகனம், கருட வாகனம், அனுமார் வாகனம் போன்றவை இருக்கும். சிவனுக்கு ரிஷப வாகனம், துர்க்கைக்கு ஸிம்ம வாகனம். மயில்வாகன முருகன். மூஷிக வாகன கணபதி ஆகியோரும் உண்டு. தென்னகத்தில் பல பாடல் பெற்ற தலங்களில் வெள்ளி வாகனங்களில் இறைவன் உலா வருவது பக்தர்களுக்கோர் தெவிட்டாத காட்சி. ஒரு சில உதாரணங்கள்: கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலையில் வெள்ளி இந்திர விமானம், ரிஷப வாகனம், ரதம், குன்றக்குடி வெள்ளி ரதம், தை மாதத்தில் சென்னைக் கந்தஸ்வாமி கோயில் வெள்ளி ரதம், மாசியில் திருச்செந்தூர் வேலவனின் வெள்ளி ரதம், கஞ்சி காமாட்சி அம்மனின் வெள்ளி ரதம், கும்பகோணம் ஆதி கும்பேசுவரரின் வெள்ளிக் கைலாச வாகனம் ஆகியவை விசேஷமானவை. வரதனின் கருடசேவை டார்ப்போரை மெய்ம்மறக்கச் செய்யும். இன்னும் பல உள.

பல கோவில்களிலே, வேலைப்பாடமைந்த பெரிய கதவுகளின் மேல், கனத்த வெள்ளித் தகடுகள் அமைக்கப் பெற்றிருக்கும். அது போல, முக்கியப் படிகளிலும் வெள்ளி வேயப்பட்டிருக்கும். உள்ளே சென்றால் கர்ப்பக் கிருகத்தில் பூஜைக்கு உதவும் பல பாத்திரங்கள் வெள்ளியாலானவையே. மக்களை ஈர்க்கும் சக்தி வாய்ந்த தெய்வங்கள் இலங்கும் ஸ்தலங்களாகிய திருப்பதி, காஞ்சீபுரம், திருவரங்கம் போன்ற கோயில்களிலே, பகவானை அபிஷேகம் செய்ய நீர் நிறைக்கும் பெரும் கங்காளங்கள் வெள்ளியாலானவை. நீர் சுமந்துவரும் குடங்கள், வெள்ளிச் செம்பு, பேலா, தட்டு, வட்டில், உத்தரணி எல்லாம் வெள்ளி. சாமரமும், விசிறியும் வெள்ளியே. வைணவ வழிபாட்டின்படி, பூஜை முடிந்து, கர்ப்பூர ஆரத்தி எடுத்த பின்னர், இறைவனின் திருவருள் பக்தர்களுக்குக் கிட்டுவதைக் காட்ட, திருவடி திகழும் 'சடாரி'யைப் பக்தர்களின் தலைமேல் வைக்கின்றனர். அதுவும் வெள்ளியாலானதே.

கல்யாணம் கார்த்திகை: கல்யாணம் கார்த்திகை போன்ற வைபவங்களுக்கும், மற்றும் சாதாரணமாக வீட்டிலும் பயன்படுவது வெள்ளி. சீர் இல்லாமல் கல்யாணம் உண்டா? சட்டம் வேறு; சம்பிரதாயம் வேறு. செல்வர்களின் கல்யாணங்களிலே, வெள்ளிக்குடம், வெள்ளிக் குத்து விளக்கு, செம்பு, போசி, தட்டு, டம்ளர், ஸ்பூன் என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். வெள்ளியில் சந்தனப்பேலா, பன்னீர்ச்செம்பு, குங்குமச் சிமிழ், வெற்றிலைத் தட்டு என்று வேறு. மிகவும் செயலுள்ளவர்களானால் வெள்ளியிலே வெற்றிலைச் செல்வமே இருக்கும். விளையாட்டுச் சாமான்கள் இருக்கும். பொடிடப்பா வெள்ளியிலே உண்டு. சிகரெட் டப்பாவும் உண்டு. ஆனால் இவை சீர்வகையில் சேர்க்கப்படுவதில்லை. மணத் தம்பதியின்

வெள்ளித் தட்டில் மஞ்சள் குங்குமம்

முதலிரவுக்கு வெள்ளிப் பால்செம்பு, டம்ளர் அவசியம். மாப்பிள்ளைக்கு ஆடிப்பால் வழங்க வெள்ளி டம்ளர் தேவை. கார்த்திகைக்கு வெள்ளிக் குத்துவிளக்கு, வெள்ளி அகல் விளக்கு வேண்டும். இப்படிப் பல. என்றாலும், இன்று வெள்ளி விற்கிற 'ஆனை விலை குதிரை விலை' யில், மாமியாரை வள்ளிசாக வெள்ளியால் திருப்திப்படுத்துவது இயலாத காரியம். 'பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வை' என்பதற்கிணங்க, கொஞ்சமாவது வெள்ளி இல்லாது திருமணம் நடவாது.

ஒரு காலத்தில் செல்வர்கள் பலர் வீட்டிலும் வெள்ளித் தட்டில்தான் சாப்பிடுவார்கள். வெள்ளிச் செம்பு, டபரா, டம்ளர் என்று பல சாதாரணப் பொருள்களாகத் திகழ்ந்தன. ஆனால் அதிக விலை, திருட்டுப் பயம், 'ஸ்டெயின்லஸ் ஸ்டீல்' ஆதிக்கம் என்று ஏற்பட்ட பின் வெள்ளி பின்நோக்கி நடை பயின்றது. எனினும், இன்னும் சிலர் ஆசாரம் என்ற பெயரால் வெள்ளியையே உபயோகிக்கின்றனர்.

மேலும், வீட்டிலே மக்கள் கடவுளை வழிபடுவதற்கெனத் தேவையான பூசைப் பாத்திரங்கள் பல இல்லங்களில் வெள்ளியாலானவையாகவே இருக்கும். ஆகவே, வெள்ளிக்கு வீட்டிலும் ஒரு நிரந்தர இடம் உண்டு. புழக்கத்தில் இல்லாவிட்டாலும், பத்திரமாக வங்கியின் பெட்டகத்தில் பூட்டி வைக்கப்பட்டிருக்கும்.

நகைநட்டு: மனித சமுதாயம் தோன்றிய காலத்திருந்தே மனிதனுக்கு நகைநட்டின்மேல் மோகம் இருந்து வந்திருக்கிறது. இப்பழக்கம் ஆதி மனிதனுக்கு, சுமார் 40,000 ஆண்டுகளாக இருந்தது என்பது சான்றோர் கணிப்பு. முதன் முதலில் இயற்கையாகக் கிடைத்த கிளிஞ்சல், கூழாங்கல் போன்றவற்றை மனிதன் அணிந்தான். காலப்போக்கில் தங்கம், வெள்ளி, செம்பு என்று உலோகங்கள் கிடைத்த பின் அவற்றைப் பொருளாக்கி அணிந்து மகிழ்ந்தான். மொகெஞ்ஜோதாரோவில் வதிந்து இந்திய சமுதாயமானாலும்சரி, தென்னமெரிக்காவில் பெருவில் வாழ்ந்த இன்கா சமுதாயமானாலும் சரி, இவர்கள் நகையின் மோகத்தில் ஈடுபட்டது என்றே தெரியவருகிறது. இந்த நகைகளில் வெள்ளி பெரும்பாலான இடம் பெற்றது. ஆதிக்குடி மக்கள் என்று சொல்லப்பட்டு இன்றும் நம்மிடையே வசிக்கும் பல ஜாதியினர் அழகான வெள்ளி நகைகளை விரும்பி அணிகின்றனர். உதாரணமாக, பிஹார், வங்காளம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஸந்தால் எனும் வகுப்பினர், கெட்டியான காப்பு, கொலுசு, காதணி, மாலை முதலியவைகளை அணிகிறார்கள்.

ஒரிஸ்ஸாவில் வாழும் கோண்ட என்பவரும் இவ்வாறே. மத்தியப்பிரதேச ஜாதியும் விதவிதமான வெள்ளி நகை யணிவர். உதக மண்டலத்தில் வசிக்கும் மிகத் தொன்மை வாய்ந்த குடிமக்களான தோடர்கள் அழகான வெள்ளி நகைகளை அணிவதுடன், வேலைப்பாடமைந்த அணிகளைத் தாங்களே செய்கின்றனர். இமாலய மலைப்பிராந்தியங்களான திபெத், பூடான், சிக்கிம், நேபாளம் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் கனமான வேலைப்பாடமைந்த பல வெள்ளி அணிகலன்களால் அலங்கரித்துக் கொள்ளுகின்றனர்.

இந்தியாவின் பல பாகங்களிலும் பெண்டிர் வெள்ளி நகைகளை விரும்பி அணிகின்றனர். பெரிய மனிதர்கள் வெள்ளி நகைகளைச் சீண்ட மாட்டார்கள். ஆனால், சாதாரண மக்கள் பொன்னுக்கு விங்க முடியுமா? வெள்ளியிலேயே திருப்தியடைய வேண்டியதுதான்! வெள்ளியில்தான் எத்தனை நகை வகைகள்! கடையில் நுழைந்தால் தலையே சுற்றும்! தலையையே முதலாக எடுத்துக் கொண்டால், தலை அணிகளில் எத்தனை வகை! தலை அணி, நெற்றிப் பொட்டு, காதணி, மூக்குப் பொட்டு போன்றவை உள. கழுத்துக்கு விதவிதமான மாலை. வெள்ளிக் கம்பியால் இழைக்கப்பட்டனவும், பட்டியால் வேயப்பட்டனவுமான பல நேர்த்தியான மாலைகள் இருக்கின்றன. இடுப்புக்கு வெள்ளி ஒட்டியாணத்தில்தான் எத்தனை வகை! கைக்குக் காப்பு, விரலுக்கு மோதிரம், காலுக்குக் கொலுசு. சிறு பெண் குழந்தைகளுக்கு அரசிலை போன்ற ஆபரணங்கள். இன்னும் எவ்வளவோ. தற்காலத்தில் மெல்லிய வெள்ளிக் கம்பியால் செய்யப்பட்ட, ''பிலிகிரி'' எனும் வகை நகை மிகவும் பெயர் பெற்று விளங்கி ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. இவ்வேலைக்குச் சிறப்பிடங்களாகத் திகழ்வன, கட்டாக்கும் ஹைதராபாத்தும் ஆகும். வெள்ளி நகையின் மவுசு இன்று ஓங்கியிருக்கிறது.

கலைப்பொருள்கள்: வெள்ளி கலைப் பொருள்கள் செய்வதற்கோர் ஏற்ற உலோகம். பளபளவென்று மின்னும். சுலபமாகத் தகடாக அடிக்கலாம். கம்பியாக இழுக்கலாம். சிறிதே செம்பு சேரின் கடினமாகும். இப்பண்புகள் பெற்றமையாலும், மாசு படியாததாலும் கலைப் பொருள்கள் தோற்றுவிக்கும் பணியில் வெள்ளி பெரிதும் பயன்படுதல் கண்கூடு. நம் நாட்டிலல்லாது பிற நாடுகளிலும் அழகுப் பொருள்கள் செய்யப்படுகின்றன. வெள்ளியில். ஒரு காலத்தில் நமது தேசத்தில் வசித்த பிரபுக்கள், குறுநில மன்னர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், நவாபுகள் முதலியோர் தங்களது செல்வச் செழிப்பைக் காட்டவும், படாடோபத்தைப் பறைசாற்றவும், வெள்ளியாலான பல அழகிய கலைப் பொருள்களைச் செய்வித்தனர். இவர்களால் ஆசாரிகளுக்கு நல்ல பேராதரவு கிட்டிவந்தது. மன்னர்கள் காலம் மறைந்துவிட்டது; ஆயினும் அவர்களுடைய வெள்ளிச் சாமான்கள் விலைக்கு வெளிவந்தன. பல ஏற்றுமதியும் செய்யப்பட்டன. மாளிகைகளிலே அழகே உருவான வெள்ளிக் கன்னிகளின் சிலைகள் இருந்தன. படிகளிலே ஏறும்பொழுது பார்க்குமிடத்தில் பிரமிக்க வைக்கும் விலங்குகளான சிங்கம், புலி இவைகளின் உருவங்கள், மற்றும் பெரிய அளவில் யானை, குதிரை, நாய் போன்ற மிருகங்களின் உருவங்கள் அலங்கரித்தன. பறவை, பாம்பு, தேள் போன்றவற்றின் வெள்ளி உருவங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன.

இவற்றைத் தவிர, வெள்ளி வீரர்களும், வேட்டைக்குச் செல்வோரும், வாள் ஏந்தியவர்களும் நின்றனர். காலஞ்சென்ற ஹைதராபாத் நைஜாமின் கலைப்பொக்கிஷக் குவியல்களில், வைரம் தங்கம் தவிர, வெள்ளிப் பொருள்கள் ஏராளம் இருந்தன. இவைகளை ஏலம் விடக்கூடாதென்று இந்திய அரசாங்கம் தடை விதித்தது. சமீபத்தில் காஷ்மீர் மகாராஜாவின் பொக்கிஷம் கண்டெடுக்கப்பட்டு, அரசாங்கத்தால் தொகுக்கப்பட்டு வருகிறது. இதிலும் நிறைய வெள்ளிப் பொருள்


ஒளிமயமான எதிர்காலம்
கூட்டுறவால் உருவாகும்
30 வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா
14-11-83 முதல் 20-11-83 வரை
தமிழ்நாடு
கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹேடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்!
ரண
சிகிச்சையையும்
தடுங்கள்!

சரும நோய்களுக்கு
வயப்படுபவரா ?



சுகம்தரும் லிச்சென்ஸா சருமக் களிம்பு
தீங்கில்லாத, துரிதமான நிவாரணம்
அளிக்கும்

தீவிரமில்லாத, நம்பகமான லிச்சென்ஸா களிம்பு 6 சக்தி வாய்ந்த மருந்துப் பொருட்களைக் கொண்டது. இவை வெட்டுக் காயம், ஊமைக் காயம், இரணங்கள், முகப் பருக்கள் போன்ற எந்த விதமான சரும நலன் கேடுகளிலிருந்தும் உடனடி நிவாரணம் கொடுக்கும்.

சரும நோய்களின் முதல் அறிகுறியிலேயே லிசென்ஸா உபயோகியுங்கள். தீங்கில்லாத துரிதமான நிவாரணம் பெறுங்கள்.

லிச்சென்ஸா சருமக் களிம்பு

7549.TM

கள் இருந்தன என்று தெரியவருகிறது. வெள்ளியில் செய்யப்பட்ட சிறிய அளவில் உள்ள கலைப் பொருள்கள் பலவாம். இவற்றில் விளையாட்டுச் சாமான்கள், வேடிக்கைப் பொருள்கள் என்று பல உண்டு.

மற்றொரு ரகம், கடவுளரின் சிறு சிலைகள். பூஜைக்கன்றி அழகுச் சாதனங்களாக வைக்கப் பயன்படுபவை. இவை கண் கவர் தோற்றத்துடன் திகழ்கின்றன. உதாரணமாகப் பிள்ளையாரிலிருந்து ஆரம்பிக்கலாம். எத்தனை வகை விநாயகர்! சாதாரணமாகக் காணும் அமர்ந்த ஆனை முகன், மூஷிக வாகனன், நின்ற கோலத்தில் விக்னேச்வரர், நடனமாடும் கணபதி, மேலும் எவ்வளவோ நிலைகள். அன்னவரின் தந்தையோவெனில், தவமியற்றும் பரமசிவன், சந்திரனைத் தலையில் சூடிய சசிதரன், கங்காதரன், பாம்பணிந்த பினாகபாணி என்று பலப் பல. நாகக்குடையின் கீழ் அமர்ந்திருக்கும் லிங்கஸ்வரூபியையும் காணலாம். உமையொருபாகனின் சிலை ஓர் அற்புதக் கலைக் களஞ்சியம். கண்ணுக்கோர் விருந்து.

ஸிம்ம வாகினியாய், பதினாறு கரங்களுடன், மகிஷாசுரனை வதம் செய்யும் துர்க்கை. இன்னொரிடத்தில் நந்திகேச்வரர் அமர்ந்திருக்கிறார். அழகுக்கோர் அழகு செய்வது போல் லக்ஷ்மிதேவியின் திருத்தோற்றம் ஓர் அமரக்கலைச் சிகரம். பத்மாஸனத்தில் அமர்ந்த நிலையிலும் நின்ற நிலையிலும் லக்ஷ்மி காட்சி தருகிறாள். லக்ஷ்மீ நாராயணர் ஒருபுறம் அருள் பாலித்துக்கொண்டிருக்கிறார். தவழும் கிருஷ்ணனின் அழகை என்னவென்று சொல்வது! காளிங்க நர்த்தனக் கண்ணனோ தெவிட்டாத காட்சி. இந்தக் கலைப் பொருள்களைக் காணுங்கால், கலைவடிவில் இறைவன் நம்மை மெய்ம் மறக்கச் செய்கின்றான். இதுவும் ஒரு கடவுள் ஆராதனையே ஆகும்.

வெள்ளிமுலாம்: தங்கத்தைப் போல் விலை உயர்ந்ததாக இல்லாவிட்டாலும், வெள்ளியை வாங்க முடியாதவர், வெள்ளி முலாம் பூசிய பொருளையாவது வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். வெள்ளி முலாம், சில காலம் வரை பளபளப்பாக இருக்கும்; பிறகுதான் பல்லை இளிக்கும். என்றாலும், இருந்தவரை போதுமே என்றே நினைக்கின்றனர்.

விளையாட்டிலோ அல்லது போட்டியிலோ வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் வெள்ளிக் கோப்பைகள், பதக்கங்கள் ஆகியவை; பெரும்பாலும் முலாம் பூசப்பட்டவைதாம். வெள்ளிக் கோப்பைக்கு மதிப்பும், கௌரவமுமே உண்டு; விலை இல்லை.

வெள்ளியைப்போல் பளபளப்பான உள்ள சில உலோகக் கலவைகளும் உள்ளன. உதாரணமாக, ஜெர்மன் ஸில்வர். இது இந்நாளில் அவ்வளவாகப் புழக்கத்தில் இல்லை. துணி இழையின்மேல் வெள்ளிப் பூச்சுப் போட்டு வெள்ளி ஜரிகை தயாரிக்கின்றனர். நல்ல தங்க ஜரிகையில் வெள்ளிக் கம்பியின்மேல் தங்கப் பூச்சு இருக்கிறது. உயர் ரக ஜரிகைப் பட்டுப் புடைவைகளை நெய்ய உபயோகப்படுகிறது. நல்ல ஜரிகை செய்யும் தொழில் குஜராத் மாநிலத்தில் நடக்கிறது. புடைவை நைந்து போனால், ஜரிகையை உருக்கினால் வெள்ளி கிடைக்கும். உபயோகமான படப்பிடிப்புச் சுருள்களிலிருந்தும் வெள்ளியைப் பெறமுடியும்.

வெள்ளி நாணயம்: பண்டை உலகிலே கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, உலோகங்கள் நாணயமாகச் செய்யப்பட்டு நடைமுதலில் இருந்தன என்று தெரியவருகிறது. முதல்முதலில் தோற்றுவித்த நாணயங்கள் வெண்கலத்தால் ஆனவையாம்.

கி. மு. 640-இல் எகிப்தில் அரசு புரிந்த லிடியன்ஸ் மன்னர்கள் இயற்கையில் கிடைத்த வெள்ளித் தங்கக் கலப்பு உலோகமான, 'எலெக்ட்ரம்' என்பதனைக் கொண்டு நாணயங்களைச் செய்தனர். பாரசீகத்தில் ஆய்கிமெனிட் எனும் சக்கரவர்த்திகள், தனி வெள்ளியிலிருந்து ''ஸிகோஸி'' என்னும் நாணயத்தை உருவாக்கினர்; தனித் தங்கத்திலிருந்து 'டேரிக்' என்ற நாணயத்தையும் செய்து வழங்கினர்.

இங்கிலாந்தில் முதலாம் எட்வர்டு மன்னர்தாம் முதல் முதலில் வட்ட வடிவமான 'பென்னி' என்ற வெள்ளி நாணயத்தைச் செய்வித்தார். நம் நாட்டில் வெகு காலமாக வெள்ளி நாணயம் உபயோகப்படுத்

தப்பட்டிருக்கிறது. ரூப என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்தே ரூபயா என்ற சொல் எழுந்துள்ளது. மௌரிய சாம்ராஜ்யம் செழித்தோங்கிய காலத்தில் வெள்ளி நாணயங்கள் உலவி வந்தன. கௌடில்யர் என்ற புகழ் பெற்ற ராஜ நீதியறிந்த நிபுணர் நாணயத்துக்கு ஒரு கோட்பாடு வகுத்துப் 'பண' என்று பெயரிட்டார். அவர், அரசாங்கமே நாணயம் அச்சிட வேண்டுமென்றும், அதற்கென்று வெள்ளி நாணயப் பொறுப்பேற்கும் அதிகாரிக்கு 'ரூபதர்சக' என்றும் பெயரிட்டார்.

தென்னகத்திலே, புதுச்சேரியை யடுத்த அரிக்கமேடு என்ற இடத்தில் கிடைத்த தொல்பொருள்களிலிருந்து, கி. பி. முப்பதாம் ஆண்டு வாக்கில் அங்கே ரோமானிய நாணயங்கள் கிடைத்ததன் பேரில், பெரு வணிகம் திகழ்ந்தது என்று கண்டு பிடித்துள்ளனர்.

நம் நாட்டில் பல பாகங்களை ஆண்ட மன்னர்கள் வெள்ளி, தாமிர நாணயங்களை அச்சிட்டு வழங்கினர். கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை வென்று ஆண்ட ஆரம்ப காலத்தில் ரூபாய் வெள்ளி நாணயங்களை இங்கிலாந்தில் அச்சிட்டு இங்கு வழங்கினர். பின்னரே ஆங்கில அரசாங்கம் உள் நாட்டிலேயே நாணயங்கள் அச்சிடுவதைக் கைக்கொண்டது. ராணி விக்டோரியா, எட்வர்டு, ஜார்ஜ் மன்னர்கள் தலைகளைக் கொண்ட வெள்ளி ரூபாய்களை வெளியிட்டது. பழைய வெள்ளி ரூபாயில் அசல் வெள்ளியிருந்தது; கலப்பு மிகக் குறைவு. எனவே மதிப்பு அதிகம். உங்களிடம் பழைய ரூபாய் நாணயம் கிடைத்தால் கவனக் குறைவாக இருக்காதீர்கள். பழைய ஒரு ரூபாய்க்கு இன்றைய மதிப்பு சுமார் நாற்பது ரூபாய். எனவே ஜாக்கிரதை. ரூபாயைத் தவிர வெள்ளியில் அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய் என்றும் நிலவின. இன்றைய வெள்ளி நாணயங்களில் வெள்ளி பேருக்குந்தான் இருக்கிறது.

வெள்ளிப் பனிமலை: பால் பொழியும் முழு நிலவைப் போன்று வெண்மையானது வெள்ளி. வெண்மைக்கோர் எடுத்துக் காட்டாக வெள்ளியைச் சொல்லுகின்றனர். அமரகவி பாரதியார், பனி தோய்ந்து கதிரவனின் ஒளியால் பிரகாசிக்கும் 'ஹேமகிரி' என்று சொல்லும் வட இமயத்தைக் குறிக்குங்கால், "வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்" என்று பாடுகிறார்.

வடமொழி, தென்மொழி இலக்கியங்களிலே, தூய வெண்மைக்கு, வெள்ளியையே உதாரணமாகக் காட்டியிருக்கின்றனர். ஆங்கில இலக்கியத்திலே செல்வச் செருக்கைக் காட்டவும், செல்வாக்கைச் சொல்லவும் வெள்ளியை உதாரணமாகக் காட்டும் சொற்றொடர்கள் உள்ளன. ஒருவன் பரம்பரைப் பணக்காரன் என்று காட்ட, "வாயிலே வெள்ளி ஸ்பூனுடன் பிறந்தவன்" என்று சொல்லுகின்றனர். நாவன்மை, மெல்லிய வாக்கு இவை பெற்ற ஒருவரை, "வெள்ளி நாவுடையோன்" என்று குறிப்பிடுகின்றனர்.

பிற மொழியாகிய ஆங்கிலத்தில் மேதாவிலாசம் பெற்று, நாவன்மையிலும் மென்மையான பேச்சிலும் ஈடு இணையற்றவர் என்று ஆங்கிலேயராலேயே போற்றப் பெற்ற ரைட் ஆனரபிள் வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியாருக்கு, 'வெள்ளி நாவு படைத்த பேச்சாளர்' என்ற புகழ் தோய்ந்த அடைமொழி சூட்டப்பட்டது.

மண வாழ்க்கையிலோ, ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியிலோ இருபத்தைந்து ஆண்டு நிரம்பினால், அதனை வெள்ளிவிழா என்று கொண்டாடுகின்றனர். இருபத்தைந்தாண்டுகள் கண்ட ஸ்தாபனங்கள் எண்ணிலடங்கா; இவையெல்லாம் விமரிசையாக வெள்ளி விழாக் கொண்டாடின. வெளி நாட்டவர் இல்வாழ்க்கையில் 25 ஆண்டுகள் சேர்ந்திருந்து குப்பை கொட்டுவது ஓர் அரிய நிகழ்ச்சியாகவே கருதப்படுகிறது. ஏனெனில், விவாகரத்து மலிந்து காணும் வெளிநாடுகளிலே 25 வருட ஒற்றுமை அபூர்வமென்பதாலேயே 'வெள்ளி மணவிழா, எடுக்கின்றனர்.

சூரினும் என்னும் நாட்டில் தம்பதியர் இருபது வருடம் சேர்ந்து குடித்தனம் செய்தாலே போதும். இந்த நிறைவைக் கொண்டாட, 'வெள்ளி

Join at Once

EFFICIENT POSTAL TUITION

1. M.B.A., M.B.M., D.B.A., A.M.I.B.A., B.G.L., M.A., M.COM., (FOR DEGREE HOLDERS)
2. D.COM., I.COM., B.COM., B.COM(HONS) M.COM., ALL ONE SITTING. (S.S.L.C./H.S.C./P.U.C./INTER PASSED OR FAILED ARE ALLOWED)
3. OSMANIA B.A., B.COM (ONE SITTING) (FOR P.U.C./INTER H.S.C. CANDIDATES)
4. B.A., B.COM., M.A., (M.U.) (NO PREVIOUS QUALIFICATION REQUIRED)
5. A.M.I.E., A.M.I.MECH.E EQUIVALENT TO B.E., (FOR S.S.L.C./P.U.C./H.S.C./CANDIDATES)
6. ALLOPATHY
7. E. HOMOEOPATHY
8. S.S.L.C., 9. H.S.C.,

POPULAR AND EFFICIENT INSTITUTE IN THE WORLD

FOR FULL PARTICULARS SEND Rs.3/- BY M.O.

SRI MURUGAN TUTORIALS

(ESTD; 21-3-1952 GOVT.REGD.NO, 3072)
H.O. : RISHIVANDIYAM-606 205 (T.N.)

R.O. : 41, ARCOT ROAD
KODAMBAKKAM, MADRAS 600 024

விருநது' வைக்கின்றனர். நமது நாட்டிலோ ஆணின் அறுபது வயது பூர்த்தியைக் கொண்டாடுகின்றனர். பழுத்த தம்பதிகளான கணவனும் மனைவியும், அப்போது சாங்கோ பாங்கமாகச் சடங்குகளுடன் மணவிழாக் கொண்டாடுகின்றனர்.

வெண்மையைப் பெற்றமையாலே பெயருடன் வெள்ளியை அடைமொழியாகச் சேர்க்கப்பட்ட உயிரினங்களின் பெயர்கள் பல உள. இங்கிலாந்தில் வெண்பட்டை போர்த்துக் காணப்படும் மரங்களுக்கு, வெள்ளி ஒக், வெள்ளி பெர்ரீ, வெள்ளி பிர் என்று பெயர். ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு வகைப் புல்லுக்கு வெள்ளிப் புல் என்று பெயர். அமெரிக்காவில் காணும் நரிக்கு வெள்ளி நரி எனப் பெயர். வெள்ளிபில் என்பது வெள்ளை மூக்குடைய பறவை. தென்னமெரிக்காவில் வாழும் ஒரு முரட்டுப் பறவைக்கு வெள்ளிப் புள்ளி என்று பெயர்.

வெள்ளிக்கடல்: வெள்ளி தொன்மையானதோர் உலோகம். வெண்மையானது; தண்ணொளி வீசுவது; மனித வாழ்க்கைக்குப் பல துறைகளில் பணிபுரிவது. ரூபா எனும் நாணயம் மிகத் தேவை. நாணயம் இல்லாவிட்டால் வாழ்க்கை என்னும் சக்கரம் சுழலாது. இறை வழிபாட்டில் வெள்ளிக்குத் தூய பங்கு உண்டு. இலக்கியத்திலும் வெள்ளி மிளிர்கிறது. வெள்ளி செல்வத்துக்கும் செழுமைக்கும் எடுத்துக்காட்டு. மனிதன் இல்வாழ்விலும் பரவாழ்விலும் பேரின்பப் பெருவெள்ளத்திலே திளைக்க விரும்புவது இயல்பே.

வெள்ளிப் பனிமலையாம் ஹேமகிரியின் புதல்வியான ஹேமலதை என்னும் பனிக்கொடியாம் கன்னியைக் கைப்பற்றித் தென்னகத்தே இருத்திக் கொண்ட உமையொரு பாகனையும், வெள்ளியைப் போல் குளிர் பிரகாசத்தையுடைய திருப்பாற் கடலிலே அரவணைமேல் நீண்டு கிடந்து, அகல கில்லேன் என்று அலர்மேல் உறைமார்பனும் லட்சுமிநாதனையும், வெள்ளி மனத்துடன் வணங்கி இன்பம் பெறுவோமாக! ❋

பொய்கைக் கரை

'மஹி'

முன்னையொரு பொழுதில் மாலைமயக்கில்—உன்னைப்
புன்னை மரத்தடியில் பாங்கியருடன்—பந்தில்
என்னை எறிந்ததுவும் ஏங்கியதுவும்—இன்று
பின்னல் நினைவுதரப் பேதலிக்கிறேன்.

மின்னல் விழிசெலுத்தி மேனிகொளுத்திப்—பின்னர்
கன்னல் மொழிநலத்தில் கட்டியிருந்தே—உன்றன்
மென்னகை யாடுமிதழ் மோகனங்கண்டேன்;—இன்று
சன்னத்த மாகமனம் சஞ்சலிக்கிறேன்.

ஆம்பல் இதழ்விரிக்கும் அந்திப்பொழுதில்—இமை
கூம்பும் மயக்கில்மனம் கொள்ளைகொடுத்தேன்;—உளம்
தேம்ப எனைவிடுத்தே சென்றுவிட்டனை;—இன்று
சாம்பிப் புலம்பலுடன் சோர்ந்து நிற்கிறேன்.

கைகள் உனையணையக் கண்கள் இணையச்—செயும்
செய்கை தனைமறந்தோம்; சொர்க்கமடைந்தோம்;—அந்தப்
பொய்கைக்கரைப் புதுமை போதைநிலையே—இன்று
வைகைப் புதுப்பெருக்காய் வைத்தலைக்குதே!

வசந்தங்க ளெத்தனையோ வந்துசென்றன—எனில்
நிசத்தில் உனதுருமுன் நின்றதில்லையே!—என்றன்
வசத்தில் வருகுவையேல் வாழ்வுமுழுதும்—ஒன்றி
உசரப் பறந்துநம் துயிர்கலைப்போம்.

ஓர் அரிய வாய்ப்பு

ஜோதிடம் கற்கலாம்

தம்முடைய முப்பதாண்டுகளுக்கும் மேலான ஜோதிட அநுபவமும் பரம்பரைக் கலைஞானமும், பலருக்கும் பயன்படும் முறையில், தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கியிருக்கிறார். இம் முறையில் ஜோதிடம் பயில 15 மாதங்கள் பிடிக்கும். மாதம் ஒன்றுக்கு 24 பக்கம் அச்சடித்த பாடங்கள் வீதம் 15 மாதங்கள் பாடங்கள் தபால் மூலம் அனுப்பப் படும்.

5 மாதத்துக்கு ஒருமுறை, அதுவரை அனுப்பிய பாடங்களின் வினாத்தாளும் சேர்த்து அனுப்பப்படும். 15 மாத முடிவில் 'கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்' என்ற ஆராய்ச்சி அமைப்பின் சார்பில் சான்றிதழ் வழங்கப்படும்.

புகுமுகக் கட்டணம் ரூ 5 சேர்த்து மொத்தக கட்டணம் ரூ. 190.

மூன்று தவணைகளாக 5 மாதங்களுக்கு ஒரு முறை கட்டுவதானால் ஒவ்வொரு தவணைக்கும் கட்டணம் ரூ. 70 (புகுமுகக் கட்டணம் சேர்த்து முதல் கட்டணம் ரூ. 75) கட்டணத்தை Kadalangudi Research Centre க்கு டிராப்ட் அல்லது செக்., M.O. மூலம் அனுப்பவும்.

எக்காரணம் கொண்டும் கட்டிய கட்டணம் வாபஸ் செய்யப்படமாட்டாது.

டிசம்பர் ஒன்றும் தேதி 1983 அன்றுமுதல் பாடம் அனுப்பிவைக்கப்படும், உடன் அட்மிஷன் பாரங்களுக்கு 0.50 பைசா ஸ்டாம்பு ஒட்டிய சுயவிலாசமிட்ட கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Kadalangudi Astrological Research Centre
38, Natesa Iyer Street, Madras-600 017
Phone : 443406

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருச்செந்தூர் - 628215

ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடாகிய திருச்செந்தூர், மன்னார்வளைகுடா கடலின் கரையோரத்தில் கிழக்கு மற்றும் வடக்கு கிரிபிராகாரங்களில் கடல் அலைகள் வந்துமோதும் இயற்கை எழில் மிகுந்த ஓர் பழம்பதியாகும். செந்தமிழ்க் கடவுளாம் கந்தவேள் சூரபத்மனை வென்று வாகை சூடி, சிவ பெருமானை வழிபட்டு அமர்ந்தருளும் பதி இது. சூரபத்மனை வதம் செய்து முருகப்பெருமான் வெற்றி வாகை சூடிய கந்தஷஷ்டித் திருவிழா, ஐப்பசி (அக்டோபர் - நவம்பர்) மாதத்தில் இத்திருக்கோயிலில் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

அகநானூறு, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் போன்ற நூல்களில் இடம் பெற்ற இத்திருக்கோயிலில் கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த போத்திகளால் மூலவருக்குப் பூஜைகள் செய்யப்படுவதும் 9 கால பூஜைகள் தினசரி நடைபெறுவதும் சிறப்பு அம்சமாகும்.

கோவில் திறந்திருக்கும் நேரம்:

தினசரி காலை 5 மணிக்கு நடை திறந்து
பகல் 12-30 மணிக்கு நடை சாத்தப்படுகிறது.
பின்னர் மாலை 4 மணிக்கு நடை திறந்து இரவு
10 மணிக்கு நடை சாத்தப்படுகிறது.

பூஜை நேரங்கள்:

விஸ்வரூப தரிசனம் காலை 5-30 மணி
உதய மார்த்தாண்ட அபிஷேகம் காலை 6 மணி
உச்சிக்கால அபிஷேகம் காலை 10-30 மணி
உச்சிக்கால தீபாராதனை பகல் 12-30 மணி
சாயரட்சை தீபாராதனை மாலை 5 மணி
இராக்கால அபிஷேகம் இரவு 8-30 மணி
இராக்கால தீபாராதனை இரவு 9-15 மணி.

முக்கிய திருவிழாக்கள்:

1. மாசித் திருவிழா — பிப்ரவரி—மார்ச்
2. வைகாசி விசாகம் — மே—ஜூன்
3. ஆவணித் திருவிழா — ஆகஸ்ட்—செப்டம்பர்
4. ஸ்கந்த சஷ்டித் திருவிழா — அக்டோபர்—நவம்பர்.

சிறப்பு பூஜா கட்டண விவரங்கள்:

1: தங்கத் தேர் இழுப்பதற்குக் கட்டணம் ரூ. 500/- (ஐந்நூறு ரூபாய்)
2. இத்திருக்கோவில் மூலமாகச் சண்முகார்ச்சனை செய்ய கட்டணம் ரூ. 600/- (அறுநூறு ரூபாய்)
3. மாதாந்திர கிருத்திகையன்று ஜெயந்திநாதர் சிறப்பு அபிஷேகம் செய்ய கட்டணம் ரூ. 1,500/-
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்-70.

தங்குமிட வசதி விவரங்கள்:

குளியலறை மற்றும் இதர நவீன வசதிகளுடன் கூடிய பல்வேறு ரகங்களிலான அறைகள் மற்றும் சிறு குடில்கள் நியாயமான வாடகைக்குக் கிடைக்கும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்-71.

தொலைபேசி எண்கள்: அலுவலகம் 21; கோவில் (உள்துறை) 70; சத்திரம் (செந்தில் ஆண்டவன் விடுதி) 71.

ச. பெ. முனிசாமி,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

எஸ். ஆர். சுப்ரமண்ய ஆதித்தன்,
தக்கார்

ஒவ்வொரு இந்துவின் இல்லத்திலும் இருக்கவேண்டிய ஆன்மீக மாத இதழ்

இந்துமதம் அழைக்கிறது

ஆசிரியர்: பி. சி. கணேசன்

வெளியிடுபவர்: 'சுபோதயா' தர்மராஜன்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

நிர்வாகி,
'இந்துமதம் அழைக்கிறது'
'சுபோதயா பில்டிங்'
192, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை-600 004

ஆண்டு சந்தா: ரூ. 36
மூன்றுண்டு சந்தா: ரூ. 105
தனிப் பிரதி விலை ரூ. 3

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை

சுபோதயா
சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிட்.

14, J. C. Road,
BANGALORE.

112, CALAVAI SUBBAROYA CHETTY ST.,
PONDICHERRY.

தலைமை பதிவு அலுவலகம்:—சுபோதயா பில்டிங்
எண்: 192, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மயிலாப்பூர், சென்னை 600 004. போன்: 76708
கிளைகள்: பெங்களூர் & பாண்டிச்சேரி.

கீழ்க்கண்ட நீண்டகால சீட்டுகளுக்கு நபர்கள் சேர்க்கப்படுகின்றனர்

குருப்புகள்	மாதங்கள்	மாதாந்தரத் தவணைகள்	சீட்டுத் தொகை மதிப்பு
LTG	50	ரூ. 2000	ரூ. 100000
LTF	50	,, 500	,, 25000
LTB	40	,, 250	,, 10000
LTC	40	,, 125	,, 5000
LTD	40	,, 50	,, 2000

மஞ்சரி

சிறந்த தமிழ் டைஜெஸ்ட்

36 ஆண்டு சேவை

பல மொழிகளிலிருந்து சிறந்த கதை, கட்டுரைகள்

விலை ரூ. 1 ஆண்டு சந்தா ரூ. 12

மஞ்சரி காரியாலயம், த. பெ 604, மயிலாப்பூர், சென்னை-600 004.

கண்ணால் கண்டதும் நினைவில் நின்றதும்

வாசகர்களுக்கு

மாதந்தோறும்

அதிர்ஷ்ட போட்டி

ஏராளமான பரிசுகள்

விபரங்களுக்கு

தினமலர்

பாருங்கள்

சொந்தம் கொண்டாடி பறந்திடுவீர் வெளிநாட்டிற்கு!

நீங்கள் அறிந்தவரோடு பறந்திடுதல் அறிவார்ந்த செயல். ஏர்-இந்தியா, நீங்கள் அறிந்ததே. உங்களை வரவேற்றுபசரிக்கும் ஏர்லைன். இந்திய மரபினின்று வழுவாத உபசரிப்பின் உன்னதம் உங்களை வரவேற்கிறது. நமது விமான பணிப்பெண்கள்—உங்கள் மொழி பேசி, உங்கள் தேவை புணர்ந்து பணியாற்றும் பாங்கு; உங்கள் குழந்தைகளையும், முதியோரையும் சிறப்புடன் கவனிக்கும் கனிவு; நாச்சுவைக்கு விரும்பியவாறு சைவ, அசைவ உணவுகள். வீட்டை விட்டகன்றதாகவே உணரமாட்டீர்கள். சொந்த மனிதரோடு பறக்கும் உணர்வுகள் உங்களுக்கு.

ஏர்-இந்தியா, பறக்கப் பரம சுகம். ஏனெனில், உங்களைப் புரிந்துகொள்ள எங்களால் மட்டுமே இயலும்.

ஏர்-இந்தியா

AIR-INDIA

இம்பெருங் கண்டங்களினூடே அரும்பெரும் இந்திய உபசரிப்பு

Telephone: 81777 & 81825
Telex: 41-7761-ADJ
Telegram: JEYSARATHY

A. D. Jeyaveerapandia Nadar & Bros.

And other Associate Firms, Exporters, Importers,

Stevedoring, Clearing and Transport Contractors

H.O.: No. 37, Anna Salai, Madras-600 002

Offices at:

Nagapattinam - Tuticorin - Madurai -

Cuddalore - Pondicherry - Bombay.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உங்கள் வளமைக்கு யூனியன் வங்கி உதவுகிறது

- உங்களுக்குக் குதிரைப் பந்தயத்திலே ஜாக் - பாட் கிடைத்திருக்கிறதா, அல்லது மாநில லாட்டரிகளில் மாபெரும் தொகை வென்றிருக்கிறீர்களா? நிலபுலம், சொத்து ஏதேனும் விற்றிருக்கிறீர்களா, அல்லது ஆயுள் இன்சூரன்சு உரிமைத் தொகையைப் பெற்றிருக்கிறீர்களா?
- பேணிக் காப்பதற்கு உங்களுக்கென ஒரு குடும்பம் இருக்கிறதா? பாசத்துடன் திட்டமிட்டு முன்னேற்பாடாகப் பாதுகாப்பு வசதி செய்து வைப்பதற்கென உங்களுக்கு இளவயதுக் குழந்தைகள், பேரக் குழந்தைகள், மருமகன் அல்லது மருமகள் இருக்கிறார்களா?
- நலல எதிர்காலமுடைய ஒரு கம்பெனிக்கு நீங்கள் அதிபரா? வருங்காலத்தை முன்னிட்டு உங்கள் நிறுவனத்தையும் ஊழியர்களையும் பேணிக்காத்திட ஒரு கடன் கழிவு நிதியோ, கிராச்சுடி நிதியோ, வேறுவித நிதியோ ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்களா? இவ்வினைக்களுக்கு 'ஆம்' என்பது உங்களது விடையானால், இதோ உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது; யூனியன் பாங்க் டெபாசிட் மறுமுதலீட்டுத் திட்டம்.

உங்கள் முயற்சிக்கு நாங்கள் உதவுகிறோம்

யூனியன் பாங்க் ஆப் இந்தியா

(இந்திய அரசு நிறுவனம்)



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மற்றுமோர் சிறப்பான பேருந்து சுற்றுலா

வார இறுதி சுற்றுலா

சென்னை-தஞ்சாவூர்-வேளாங்கண்ணி-நாகூர்-திருநள்ளார்-பூம்புகார்-வைதீசுவரன் கோயில்-சிதம்பரம் (இரவு தங்குதல்)-பிச்சாவரம்-பாண்டிச்சேரி-சென்னை.

வெள்ளிக்கிழமை தோறும் இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு, ஞாயிறு இரவு 7.30 மணிக்கு திரும்பும்.

தனி அறை வசதியுடன் ரு. 175/- இருவர் அறை ரு. 150/-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்ற பேருந்து சுற்றுலாக்கள் :

★ 7-நாள் தமிழ்நாடு சுற்றுலா ★ 7-நாள் தென்னிந்திய சுற்றுலா

தனி அறை வசதியுடன் ரு. 750/- இருவர் அறை ரு. 680/-

தினசரி சுற்றுலா திருப்பதி சென்று திரும்ப, காலை சிற்றுண்டி மற்றும் திருமலையில் தங்கும் வசதி (தனிக் கட்டணம் இல்லாமல்)

கட்டணம்: சொகுசு பேருந்து ரு. 105/-

குளிர்சாதன பேருந்து ரு. 130/-

(சிறப்பு தரிசனத்துக்கானரு. 25/- உட்பட)

தினசரி சுற்றுலா காஞ்சிபுரம்-திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம்

கட்டணம் : சொகுசு பேருந்து ரு. 40/-

குளிர்சாதன பேருந்து ரு. 55/-

சென்னை நகர சுற்றுலா கட்டணம்: ரு 25/-

திருவேற்காடு-மாங்காடு சுற்றுலா ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி, ஞாயிறு நாட்களில். கட்டணம்: ரு. 15/- (சிறப்பு தரிசனம் உட்பட)

குழந்தைகளுக்கும் குழுக்களுக்கும் சிறப்பு சலுகை

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்

1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக விற்பனை அலுவலகம், 143, அண்ணா சாலை, சென்னை-600 002. தொலைபேசி: 849803
2) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விற்பனை கவுண்டர், விரைவு பேருந்து நிலையம், சென்னை-600 001. தொலைபேசி: 25982

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட்
ஷிவாலயா பில்டிங்
16, கமாண்டர்-இன்-சீப் சாலை, சென்னை 600 105.
தொலைபேசி: 89581/1/3. கேபிள்: தமிழ்டூர். டெலக்ஸ்: MS 7575

ARIES/DIPR/471/83

எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

ஸ்பெஷல்

புலி மார்க்

வாசனை சீயக்காய்தூள்

நீராடி மகிழ
நேர்த்தியான
சீயக்காய்தூள்

மயில் மார்க் நிலையம்
சென்னை - 21

வாடிக்கையாளர்களுக்கு எங்கள் உளம் கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

திரு A. முருகேச முதலியார்
ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி
பிளாக் மேக்கர்ஸ் &
நியூடன் டைப் பவுண்டரி

ஆப்டோன், லைன்,
மூவர்ணப் பிளாக்குகளுக்குத்
தென்னிந்தியாவில்
புகழ்பெற்ற ஸ்தாபனம்.

குறித்த நேரத்தில் திருப்தியான முறையில் பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன.

கலைமகள் மலரில் வெளியாகியுள்ள
லைன் - இரண்டு கலர் லைன்
பிளாக்குகள் எல்லாம்
நாங்கள் செய்து அளித்தவை.

விவரங்களுக்கு:

நியூடன் அண்டு கம்பெனி

56, வாலாஜா ரோடு, மதராஸ் 600 002

டெலிபோன்: ஆபீஸ் 842832
வீடு: 843879

ஸ்தாபகம்: 1932

With Best Compliments

From

POND'S (INDIA) LIMITED

ஒளி மிக்கத் திருநாளில்
எங்கள் பணிகளை
நினைவு கூறுகிறோம்
எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மதருஸ் ரிஃபைனரீஸ், நாட்டின் தொழில் வளத்திற்கு தன் பங்கினை அளித்துப் பெருமிதம் அடைகிறது. மகிழ்ச்சி பொங்கும் இத்தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் தன் நல்வாழ்த்துக்களை பணிவன்புடன் சமர்ப்பிக்கிறது.
MRL
மதருஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்
மணலி, சென்னை
17-17-17
MRL
SAA/MFL/3826

எஸ். வி. எல்.

எஸ். வி. எல். அளிக்கும் வீட்டுமனைகளை
எப்போதுமே மக்கள் போட்டி போட்டு
வாங்குகிறார்கள். காரணம், அத்தனையும்
அருமையான இடங்கள்! வில்லங்கம்
ஏதுமற்ற பத்திரங்கள்! விரைவான
பத்திரப் பதிவு! குறைந்த விலை! மற்றும்
மக்களின் நம்பிக்கை!

நாங்கள் எப்போதுமே இலவசமாக
அழைத்துச் சென்று மனைகளைக் காட்டுகிறோம்.
உங்கள் நெஞ்சங்களின் இனிய
கனவுகளை-நனவாக்க எஸ்.வி.எல். அளிக்கும்
மனைகள் அத்தனையும் தங்கம் நிகர் மனைகள்!

எஸ். வி. எல். ரியல் எஸ்டேட்ஸ்,

18, மேட்லி ரோட், தி. நகர், சென்னை - 600017
(தி. நகர் பஸ் நிலையம் அருகில்) போன்: 443347

★ எஸ். வி. எல்.-வீட்டு மனை விற்பனைத்
துறையில் மிகவும் நம்பகமான பெயர்

—நாகசுந்தரம்


To millions the world over
a refrigerator means
Kelvinator
sold and serviced in over 140 countries
fitted with the
world's most efficient
and trouble-free
compressor
that is now warranted for
seven years.
Kanara
Upright Deep Freezer 275 Litres
Upright Deep Freezer 85 Litres
Chest Type Deep Freezer 425 Litres
Kelvinator refrigerators are available in five sizes : 286 & 165 (with automatic defrost system), 135, 90 and 65 litre capacities.
Kelvinator Deep Freezers are available in three sizes: 425, 275 and 85 litre capacities.
Sold & Serviced by :
Expo Machinery Limited
Pragati Tower, 6th Floor
26 Rajindra Place,
New Delhi-110008.
East Coast Building 553-D, Mount Road Teynampet Madras-600 018 Ph: 442073

தீபாவளி

தீநெறியை அழித்து நன்னெறி
கொண்ட வெற்றியைக்
கொண்டாடிடும் மகிழ்ச்சித்
திருநாள். பழையனவைகளைக்
களைந்து புதிய கணக்கினை
துவக்கிடும் ஒளித்திருநாள்.

நாட்டுக்கும், மக்களின் சுபிட்சத்திற்கும் திருமகளின் வாழ்த்துக்களைப் பெற, பிராத்தனை செய்திடும் பொன்னாள்.

பாங்க் ஆப் தஞ்சாவூர் இப்புனித நன்னாளில் மக்களின் பிராத்தனையில் கலந்து கொண்டு தங்களது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், அபிமானிகளுக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

SERVICE · SECURITY · STABILITY
ESTD : 1901

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்

(பதிவு அலுவலகம் : 1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்-613 001)
தமிழ்நாடு

S. சொக்கலிங்கம்
ஜெனரல் மானேஜர்

B.K. மாதவன்
சேர்மன்

santha

TILTING TYPE WET GRINDERS

Patent Pending





சிறப்பு அம்சங்கள்:

கிரைண்டரை சாய்த்து மாவை கை படாமல் எடுக்க வசதி உள்ளது.

குறைந்த நேரத்தில் அரைப்பதால் மின் செலவு குறைவு

அதிக சுகாதாரம், அரவை செய்யப்படும் பகுதியின் உட்பாகங்களை எளிதாக எடுக்கும்படி தயாரிக்கப்பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாக கழுவ வசதி உள்ளது.

உட்பாகங்கள் அனைத்தும் துருப்பிடிக்காத (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) எவர்சில்வரினாலானது.

அரவை செய்யும் கீழ்பகுதியும், மேல் பகுதியும் சேர்ந்து சுழல்வதால் தேய்மானம் இல்லை.

குறைந்த எடை, சப்தமில்லாத ஓட்டம்.

உதிரி பாகங்களின் அளவுகள் நிர்ணயிக்கப் பட்டவை.

அளவுகள்:

- $\frac{1}{4}$ லிட்டர் முதல் 1 லிட்டர் வரை
- $\frac{1}{2}$ லிட்டர் முதல் 2 லிட்டர் வரை

சாந்தா இண்டஸ்ட்ரியல்ஸ்

158, அவினாசி ரோடு, பீளமேடு,
கோயமுத்தூர் 641 004.
போன்: 32429

ANUREKHA

**REGD. DESIGN NOS.
152396, 152397 & 152398**

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்:

• R.M.S. கார்ப்பரேஷன், திருச்சி, போன்: 29592 • ஸ்ரீ லக்ஷ்மி பர்னிச்சர், திருச்சி, போன்: 29592 • ரங்கா எலக்ட்ரிகல்ஸ், மதுரை, போன்: 22986 • அனிதா இண்டஸ்ட்ரியல் ஏஜன்சீஸ், பெங்களூர், போன்: 224394 • ரேஜியோ டிரேடர்ஸ், வேலூர், போன்: 21646 • சாந்தா இண்டஸ்டிரியல் (கிளை) பெங்களூர், போன்: 228507 • விக்ரமா இன்ஜினியரிங் கம்பெனி சென்னை, போன்: 24642 • சேகர் எலெக்ட்ரிகல்ஸ், சென்னை-1 • சந்திரா ஏஜன்சீஸ், சென்னை-1 போன்: 27286 • ஆல்கோ இண்ட்ஸ்டிரீஸ், சென்னை-1 போன்: 27003 • ஸ்ரீ ராம் இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ், சென்னை-1 • ஜோதி ஏஜன்சி, சென்னை-6, போன்: 88730 • தினேஷ் டிரேடர்ஸ், திண்டுக்கல், போன்: 4979 • S.M.B. மாணிக்கம் நாடார், திண்டுக்கல், போன்: 5106 • எக்யூப்மெண்ட் ஏஜன்சீஸ், கோயமுத்தூ போன்: 34084 • மஞ்சு எலக்டிரிகல் ஏஜன்சீஸ், மயிலாடுதுறை, போன்: 705 • பிரிஸ்மா ஏஜன்சீஸ் ஹைதராபாத், போன்: 221349 • சாந்தா இண்டஸ்டிரியல் ஏஜன்சீஸ், கோயமுத்தூர், போன்: 33967 • ஜே இன்ஜினியரிங் ஏஜன்சீஸ், கோயமுத்தூர், போன்: 24579 • ஸ்வராஜ் ஏஜென்சீஸ், புவனேஸ்வர் • M.M. இஸ்மாயில் & கோ., திருவனந்தபுரம், போன்: 257 • அரவிந்த் பர்னிச்சர், கரூர், போன்: 1433 • ஹைடாக்கர் அசோசியேட்ஸ், கோழிக்கோடு, போன்: 72577 • மணிப்பால் இண்டஸ்டிரீஸ் லிமிடெட், உடுப்பி, போன்: 8702 • ராம்ஜாம் பேன்ஸி பஜார், தேனி, போன்: 2281 • பாண்டியன் எலக்டிரிகல்ஸ், நாசரத், போன்: 60 • லோகநாயகி டிரேடர்ஸ், தென்காசி, போன்: 2237 • ஃபேர் டீல்ஸ், வாரங்கல்


வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலையெறியும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப் மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்.LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

COLOUR MATCHING -- A SPECIALITY...

-- FOR Excellence in printing, by Letterpress or Offset--
For a fine range of printing inks, matched against specific requirements, and backed by on the Spot Service

NATIONAL INKS ---

NATIONAL PRINTING INK CO.

G. 3, Ambattur Industrial Estate,
Madras-58 Ph: 632686

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஓம்

பரிசுத்தமான

கோபால்

கற்பூர பில்லைகள்

வைரத்தைப்போல் பிரகாசிக்கும்
ஆண்டவன் அருளையும் கூட்டிவைக்கும்.

அழகிய அட்டை
பெட்டிகளிலும் பிளாஸ்டிக்
டப்பிகளிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:

ஆர். கோபாலகிருஷ்ணன் & சன்

கோபால் கேம்பர் ஒர்க்ஸ்
90, தெலுங்கு பிருமணாள்தெரு
கோயமுத்தூர்-641 001

ஏஜென்சி இல்லாத ஊர்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்

தலைவலி பலவகை உண்டு

சிகிச்சை ஒன்றே ஒன்று!

அனுஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது—அனுஸின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனுஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி மருந்து

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd. GM-2-83 TM

தீபாவளி வாழ்த்துக்கள்



SHARDLOW

ஷார்ட்லோ இந்தியா லிமிடெட்
''ஹுஸூர் கார்டன்ஸ்'', செம்பியம்,
சென்னை-600 011

"எல்லோருக்கும்
எங்களுடைய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்"

இதோ! இதுதான்...

உடலைத்தழுவிடும்
ஆடையழகு,
சுகம்-இவற்றின்
முழு உருவகம்:

ஷேப்®

பனியன் & அண்டர்வேர்

கேயெம் நிட்டிங் கம்பெனி,
தபால் பெட்டி எண்: 3766,
சென்னை-600 002

UIPC: KKC: 176

உங்களுக்கொரு
தலைசிறந்த
பேனா நண்பன்.

ராவ்லான்

ராவ்லான்.
இந்த ஜாட்டர் ரீ:பில்லில் இறக்குமதி
செய்யப்பட்ட ஸ்விஸ் டங்ஸ்டன்
கார்பைடு முனை உள்ளது, எனவே கீறல் விழாது
மழமழப்பாக எழுத உறுதியளிக்கிறது.

ராவ்லான்.
அதன் விசேஷ இங்க் சீராகப் பாய்கிறது.
குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர்
தங்கு தடையின்றி மசித்திட்டு விழாமல்
எழுத உத்தரவாதமளிக்கிறது.



ஒரு
ஆர்.என்.மாத்ரே
தயாரிப்பு.

விற்பனைக்கு விடுப்போர்:
மாக் எண்டர்ப்ரைஸஸ்,
105, ஏ-3, தன்ராஜ் இண்டஸ்ட்ரியல்
எஸ்டேட், சன்மில் லேன்,
லோயர் பரேல், பம்பாய் 400 013
போன்: 890760, 393614, 896544, 896907

Mechanix PP-6/83/314 Tam-R1

அன்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

ஆண்-பெண் நல்வாழ்வு வாழ அழைக்கின்றோம்

பிரபல பழனி வைத்திய திலகம், வைத்தியராஜ் அரிமா வட்டாரப் பெருந்தலைவர்,
அரிமா சங்கங்கள், 324—B,.

டாக்டர் எஸ். காளிமுத்து, RMP (IND) V.V.C A.M.I.H.

அவர்களிடம் சிகிச்சை பெற்று குணமும், மகிழ்ச்சியும் அடையுங்கள்.

சித்த வைத்தியத்தில், இந்தியாவின் சுற்றுப்பயணத்தில் தனிச் சிறப்புப் பெற்றவர். சித்த வைத்திய மாமன்னன், சித்த வைத்தியச் செம்மல், சித்த வைத்தியக் கலைவேந்தன், வைத்தியத் திலகம், வைத்தியராஜ், பல பாராட்டுப் பட்டங்களும், மெடல்களும், பதக்கங்களும் பெற்றவர். பல தலை முறைகளாக வைத்தியக் குடும்பத்தின் ஒரே வாரிசாகத் திகழ்பவர். முன்னால் சென்னை நாட்டு வைத்தியக் கல்லூரியில் வி. வி' கோர்ஸ், சித்த வைத்தியமும், ஆங்கில வைத்தியமும் பயின்றவர். ஹோமியோ பதிவிலும், ஆயுர்வேதத்திலும் அரசாங்கத்தாரால் பதிவு பெற்றவர். முதன் முதலாக டெல்லி, பூனா, பம்பாய், பெங்களூர் மற்றும் தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் செய்து, பல்லாயிரக்கணக்கான வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தி, நற்சாட்சிகளும் பெற்றவர். உலகப் புகழ்பெற்ற சிட்டுக் குருவி லேகியம், தங்க பஸ்பம் போன்ற ஏராளமான மருந்துகள் தயாரித்து தனிப் பெயர் பெற்றவர் இவரே.

தளர்ச்சி, குழந்தை பாக்கியம் இல்லாத பிரச்சினை, உடல் பலகீனம், இல்வாழ்க்கையில் மகிழ்ச்சிக் குறைவு, உடனே பலகீனம், ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, தேகவலி, நித்திரைக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, உறுப்புகள் தளர்வு, அடிக்கடி சிறுநீர், சரும நோய்கள், வயிற்று வலி, ஆ. இருமல், இளைப்பு, தும்மல், நவமூல வியாதிகள், வாய்வு மற்றும் இதில் குறிப்பிடாத வியாதியஸ்தர்களுக்கு எமது 86 வருட அநுபவ மருந்துகளால் சுகவாழ்வு வாழலாம். ஆர்டருடன் மருந்து விபரங்களைக் குறிப்பிட்டு வி.பி.பி. தபால் பார்சலில் பெறலாம். வி.பி.பி தபால் செலவு இலவசம். கேம்பிலும், நேரிலும் டாக்டரிடம் மருந்துகள் பெறலாம்.

(பழனி, சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே.)

ஒரு மாதச் சிகிச்சை மருந்துகள் சூபர் செட் Hd ரூ. 900 சூபர் செட் ரூ 600

தங்கபஸ்பம், ஸ்பெஷல் செட் ரூ. 330. தங்கபஸ்பம், சிட்டுக்குருவி லேகியம்,
30 வேளை ரூ. 60, 60 வேளை ரூ. 120, 90 வேளை ரூ. 180,
ஸ்பெஷல் லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் (மிக உயர் தரம்) ரூ. 90,
ஆ. இருமல் செட் ரூ. 124, 226, சரும நோய் செட். ரூ. 140, 260, வயிற்று வலி செட் ரூ. 165.

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயணத் தேதி, விலாசங்கள் கவனிக்கவும்:—

1-ந் தேதி திருநெல்வேலி, நெல்லை லாட்ஜ், ஜங்ஷன் ரோடு, போன். 147 காலை 8 மணி முதல் 12 மணிவரை.
1-ந் தேதி நாகர்கோயில், பகல் 2 மணி முதல் 4 மணி வரை, ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், தபாலாபீஸ் சந்திப்பு,
2-ந் தேதி மதுரை, மணிஸ் கபே, டவுன் ஹால்ரோடு, போன் 22019, காலை 10 மணி முதல் பகல் 12 மணிவரை மாலை 2 to 4
3-ந் தேதி புதுக்கோட்டை, காலை 11 மணி முதல் 12 மணி வரை, சாந்தி லாட்ஜ் (வஸந்தா லாட்ஜ்) போன் : 46.
3-ந் தேதி காரைக்குடி, காலை 8 மணி முதல் 10 மணி வரை, A.V.M.P.L, ரேஸ்ட் ஹவுஸ், போன்: 309.
3-ந் தேதி பட்டுக்கோட்டை, பகல் 1 மணி முதல் 2-00 மணி வரை, ஹோட்டல் அலங்கார், மணிக்கூண்டு சமீபம்.
3-ந் தேதி மன்னார்குடி, மாலை 3 மணி முதல் 4 மணி வரை, மன்னை லாட்ஜ், இந்தியன் பாங்க் அருகில்,
4-ந் தேதி திருச்சி, ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை போன்: 4501.
4-ந் தேதி கரூர், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை, பெரியார் லாட்ஜ், ஜவஹர் பஜார்.
5-ந் தேதி தஞ்சாவூர், காலை 10 மணி முதல் 12 மணி வரை, ராஜா ரெஸ்ட் ஹவுஸ்; போன். 57.
5-ந் தேதி திருவாரூர், மாலை 2 மணி முதல் 4 மணி வரை, அபூபக்கர் பில்டிங், நாகை ரோடு, விஜயபுரம்.
5-ந் தேதி நாகப்பட்டினம், தினகர் விலாஸ், ரயில்வே ஸ்டேஷன் எதிர், மாலை 5 மணி முதல் 6 மணி வரை.
5-ந் தேதி காரைக்கால் அசோக் லாட்ஜ், பஸ் ஸ்டான்டு எதிர், மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை.
6-ந் தேதி கும்பகோணம், காலை 12 முதல் 2 மணி வரை, தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம், போன்: 1427.
6-ந் தேதி மாயவரம், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை, காளியாகுடி லாட்ஜ், பெரியகடை வீதி, போன்: 460.
6-ந் தேதி சிதம்பரம் மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை, ஜெயராம் லாட்ஜ்.
7,27ந் தேதி பாண்டிச்சேரி, காலை 8 மணி முதல் 9-30 மணி வரை, (அருணா லாட்ஜ்) பாரீஸ் லாட்ஜ், ஜவஹர்லால்
7-ந் தேதி திருவண்ணாமலை, காலை 10 மணி முதல் 12 மணி வரை, மாடர்ன் கபே. [நேரு வீதி, போன் : 352.
7-ந் தேதி செங்கல்பட்டு, மாலை 4 மணி முதல் 6 மணி வரை, கணேஷ் லாட்ஜ்.
7,27ந் தேதி கடலூர் N.T. காலை 10-30 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் பிருந்தாவனம்.
1, 2, &10, 11, 17, 18, 19-ந் தேதி சென்னை காலை 10 மணி முதல் 12 மணி வரை, 3 முதல் 5 மணி வரை,
நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல், போன்: 83111.
12-ந் தேதி காஞ்சிபுரம், ஸ்ரீராமா லாட்ஜ், நெல்லுக்காரத் தெரு, காலை 10 மணி முதல் 12 மணி வரை.
1, 12, & 20-ந் தேதி: பெங்களூர், ஹோட்டல், பிராட்வே, காலை 10 மணி முதல் பகல் 2 மணி.
12-ந் தேதி ஆரணி. பகல் 3 மணி முதல் 5 மணி வரை, பாலாஜி லாட்ஜ், காந்தி சிலை எதிரில்.
13-ந் தேதி வேலூர், என். ஏ. காலை 10 மணி முதல் 12 மணி வரை, அஜீஸ் மேன்ஷன்ஸ், போன்: 123.
13-ந் தேதி குடியாத்தம், பகல் 3 மணி முதல் 5 மணி வரை, அலங்கார் லாட்ஜ்.
13-ந் தேதி கிருஷ்ணகிரி, காலை 9 மணி முதல் 10 மணி வரை, ஸ்ரீராம் லாட்ஜ். போன்: 129.
13-ந் தேதி தர்மபுரி, பகல் 12 மணி முதல் 1 மணி வரை, சீனிவாசா லாட்ஜ்,
13-ந் தேதி சேலம், பகல் 2 மணி முதல் 4 மணி வரை, லட்சுமி ராஜ் பவன், போன் : 2301.
14-ந் தேதி மதுரை, காலை 8 மணி முதல் 12 மணி வரை, மாலை 2 மணி முதல் 4 மணி வரை, சந்தானம் லாட்ஜ்;
14-ந் தேதி மைசூர், இந்திரா பவன், தன்வந்திரி ரோடு, காலை 9 மணி முதல் 4 மணி வரை,
15-ந் தேதி சிமோகா, ஹோட்டல் உட்லண்ட், நேரு ரோடு, காலை 9 மணி முதல் 2 மணி வரை.
15-ந் தேதி பத்திராவதி, ரகு லாட்ஜ், B. H. ரோடு, மாலை 4 மணி முதல் 7 மணி வரை.
15, 21-ந் தேதி ஈரோடு, காலை 10 மணி முதல் 12 மணி வரை, நவபவனம் லாட்ஜ், போன்: 907.
15-ந் தேதி திருப்பூர். பகல் 2 மணி முதல் 4 மணி வரை, ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ், போன்: 186.
16-ந் தேதி கோவை, காலை 9 மணி முதல் மாலை 12 மணி வரை, விஜயா லாட்ஜ், போன்: 22669.
22-ந் தேதி கோவை, காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை, ஹோட்டல் குரு,
21-ந் தேதி கோபி, வெற்றிவேல் லாட்ஜ், பகல் 2 மணி முதல் 3 மணி வரை,
21-ந் தேதி சத்தி, அசோக் லாட்ஜ், பகல் 3-30 மணி 5 மணி.
22-ந் தேதி பொள்ளாச்சி, மாலை 2 மணி முதல் 3 மணி வரை, ஹோட்டல் கீதாஞ்சலி.
24-ந் தேதி மதுரை, சந்தானம் லாட்ஜ், காலை 8 முதல் 12 மணி.
24-ந் தேதி ஒசூர். ஹோட்டல் செலக்ட், J.P.T. காம்ப்ளெக்ஸ், பழைய பஸ் ஸ்டாண்டு, காலை 10 முதல் 4 மணி வரை.
23-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை பழனி, தலைமை வைத்தியசாலை. (குழு வைத்தியமும் உண்டு)

GOVT. REGD. T. M. NO. 204341 REGD. 15443 MFG. LIC. NO. 5.

பழனி சித்தர் வைத்தியசாலை, (REGD) பழனி 624601

போன் : 316, 316-A, 420/630-பிரஸ் 361 **(இந்தியாவின் மாபெரும் ஸ்தாபனம்)** **தந்தி: சித்தர்**

இன்ஜினியரிங் கம்ப்யூட்டர் மேனேஜ்மெண்ட் டிப்ளமாக்கள்

இன்ஜினியரிங் டிப்ளமா

1. ஆட்டோமொபைல்
2. ரெப்ரிஜிரேஷன் & ஏர்கண்டிஷனிங்
3. ரேடியோ டிரான்சிஸ்டர் & டெலிவிஷன்
4. எலக்ட்ரீஷியன்
5. டெலிபோன் ஆபரேடிங் கம் ரிசப்ஷனிஸ்ட்
6. டெலக்ஸ் ஆபரேடிங்
7. மெக்கானிகல் இன்ஜினியரிங்
8. சிவில் இன்ஜினியரிங்
9. எலக்ட்ரிகல் இன்ஜினியரிங்
10. டர்னர்
11. வெல்டிங்
12. பிட்டர்
13. A.M.I.E. and A.M.I.M.E. (EQUIVALENT To B.E.)

Computer Diplomas

1. Cobal Programming
2. Basic Programming
3. Fortran Programming
4. Autocoder Programming
5. Advanced Computer Programming
6. Systems Analysis
7. ICL (Manual) Key Punching
8. IBM 024 (Automatic) Key Punching
9. IBM 056 (Automatic) Key Verifying
10. Console (Computer) Operating

Management Diplomas

1. Business Management
2. Marketing Management
3. Office Management
4. Personal Management
5. Labour Management
6. Hotel & Catering Technology
7. Secretarial Practice
8. Interior Decoration

எமது நிறுவனத்தின் தனிச் சிறப்புகள்:

1. இந்தியன் டெக்னிகல் எஜுகேஷன் சொசைட்டியைச் சார்ந்துள்ளது.
2. பாம்பே மேனேஜ்மெண்ட் அசோசியேஷனின் அங்கத்தினர்.
3. கம்ப்யூட்டர் சொசைட்டி ஆப் இந்தியா லிமிடெட்டின் அங்கத்தினர்.
4. மாநில அரசின் கீழ்: பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. மத்திய அரசின், மினிஸ்ட்ரி ஆப் லேபரில் ஓவர்சீஸ் ரெக்ரூட்மெண்டிற்காக விசேஷித்த பதிவு பெற்றுள்ளது
6. அகில இந்திய ரீதியில் முப்பதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது.

Indian Technical Institute

Bureau of Data Processing System

1. 7, பட்டாபிராமபிள்ளை தெரு, தென்னூர், திருச்சி-620017.
2. 157, காமாட்சி அம்மன் கோயில் தெரு, கந்தன் தியேட்டர் எதிரில், பாண்டிச்சேரி-605 001.
3. 246, நாயக்கர் புதுத்தெரு, சக்தி தியேட்டர் எதிரில், மதுரை-625 001.
4. 81-B, செரி ரோடு, குமாரசாமிப்பட்டி, P.W.D. ஆபீஸ் எதிரில், சேலம்.
5. 141, ரெங்கை கவுடர் தெரு சுக்கிரவார் பேட்டை கார்னர், கோயமுத்தூர்-641 001.
6. 12, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன், திருநெல்வேலி-627 006.
7. 8, விக்டோரியா தெரு, தலைமை அஞ்சலகம் அருகில், தூத்துக்குடி.
8. 1-A, பெருந்துறை ரோடு, டாக்டர் சத்தியமூர்த்தி ஆஸ்பத்திரி எதிரில் ரவி தியேட்டர் அருகில், ஈரோடு-638 009.
9. 24, வுட்ஸ் சாலை, மௌண்ட் ரோடு, சென்னை-2.

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 87, Munda kakanni Amman Koil Street, Madras-600 004.

Managing Editor: K. V. Jagannathan.

S.Kumars bring you the best of both worlds.

S. Kumars fabrics are the result of combined effort—the co-operation of men with machines. So that every metre of fabric produced reflects a thorough knowledge of trends and processes, along with technical brilliance. So that, when you buy S. Kumars fabrics, you get the best of both worlds.

S. Kumars®

TERENE Suitings, Shirtings, Sarees and 'Terene' worsted Suitings.

"Niranjan", 99, Marine Drive, Bombay 400 002.

The highest possible quality. At the lowest possible price.



இனிமையான, நெஞ்சை விட்டு
நீங்காத நினைவுகளோடு
பின்னப்பட்டவை

கடாவ்
வ் வாயில்கள்